நோய்களுக்குச் சித்த பரிகாரம்

பாகம் - 1

பாகம் - 1

வெளியீடு :
இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

பாகம்-1

டாக்டர் ம. சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் பேராசிரியர்
அரசினர் இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி
சென்னை-10

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை
சென்னை - 600 106

நூலடைவு

நூலின் பெயர்	:	நோய்களுக்குச் சித்த பரிகாரம் பாகம் - 1
ஆசிரியர்	:	டாக்டர் ம. சண்முகவேலு
வெளியிட்டோர்	:	இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை, சென்னை- 600 106.
பதிப்பு ஆண்டு	;	முதல் பதிப்பு : 1972 மறு அச்சு : 2012
பதிப்புரிமை	:	© தமிழ்நாடு அரசு
நூல் வடிவம்	:	RA 1/8
அச்சுத்தாள்	:	TNPL 60gsm கிரீம் ஓவ் தாள்
அட்டைக் கட்டுமானம்	:	கடின அட்டை
எழுத்துகள்	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	582
பிரதிகள்	:	1000
நூலின் விலை	:	
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வெங்கடேஸ்வரா எண்டர்பிரைசஸ் அண்ணா சாலை, சென்னை-2. தொலைபேசி : 28514748

இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை

சென்னை - 600 106.

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு

நூலாக்கப் பணிக்குழு

ஆய்வு மருத்துவ அலுவலர்

மரு.ச.கௌரி, பி.ஐ.எம்

பதிப்பாசிரியர் :

திரு. **த.அழகப்பராசு,** M.A., M.A., M.L.I.S. M.Phil., B.Ed.,

சிறப்பு அலுவலர் - மொழிபெயர்ப்பு (பொ)

திருமதி. **செ. இரா. பிரசன்னா,** M.A., M.Phil., B.Ed.,

தமிழ்ப்புலவர்

சுவடி நகலெடுப்போர் :

திரு. **தி. சுபாஷ் சந்திரபோஸ்,**

திரு. **வெ. சாரங்கபாணி**

திருமதி. **த. லெட்சுமி**

திருமதி. **நா. பாக்கியசுந்தரி** B.A.,

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

முகவுரை

கடவுள் சிருட்டியில் மானிடர் சென்மம் மிகச் சிறந்தது. இச்சென்மம் எடுத்தது முதல் மரணம் வரை நாம் அனுபவிக்கிற சுக துக்கங்களில் நோய் என்பது மிகவும் கொடியது. இத்தேகத்தை அழிப்பதற்கும் நோய்தான் முதற் காரணமாக நிற்கின்றது. இப்பெருங் குறையைத் தீர்ப்பான் வேண்டி ஆதியில் மேதாவிகளாக இருந்த இருடிகள், சித்தர்கள், முனிவர்கள் முதலானோர் பெரு முயற்சியால் தேவர்களின் மூலமாக தேகத்திற் காணும் நோய்களை நிவர்த்தி செய்து கொள்ளவும், தங்கள் தங்களுக்கு வேண்டுமான காலம் வரை தேகம் பழுதுபடாமல் வைத்திருக்கவும் வேண்டி யோக சாதனைகள், காய கற்பங்கள் முதலிய உபாயங்களை நன்குணர்ந்து ஆண்டு அனுபவித்து வந்தார்கள். பிற உயிர்களையும் காப்பாற்றும் காருண்ணியத்தை முன்னிட்டு அக்காலத்திய அறிவாளர்களை அழைத்துப் போதித்து ஏனையோர்க்கும் பயன்படுமாறு செய்து வந்தனர்.

இங்ஙனம் புராதன நூல்களை ஆராயுங்கால் இமயகிரி மலையைப் பீடமாகக் கொண்டு, வட நாட்டில் சமஸ்கிருத மொழியில், அந்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் ஆகாரம், நடை உடை பாவனைகளுக்கு ஏற்றார் போல் நாலு இலட்சம் கிரந்தங்களையும், அதே போல் தெற்கே பொதிகை மலையைப் பீடமாகக் கொண்டு தென்னாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் ஆகாரம், நடையுடை பாவனைகளுக்கு ஏற்றதாக நான்கு இலட்சம் பாடல்கள் சித்த மருத்துவம் சம்பந்தமாக தமிழில் செய்திருப்பதாகவும் அறிகிறோம்.

இந்நூல்களெல்லாம் இப்பரத கண்டத்தில் ஆங்கிலேய, முகம்மதிய அரசாட்சிக்கு முன்னதாயிருந்த அரசர்கள் யாவரும் ஆமோதித்து பல மடங்களையும் மருத்துவ மனைகளையும் ஏற்படுத்தி அவ்வவ் வித்தைகளிற் சிறந்த கல்வியாளர்களை அமர்த்தி சன்மானம் கொடுத்து ஆதரித்து வந்தார்களெனவும் அறிகிறோம்.

இவ்வாறு ஒரு காலத்தில் மேன்மையுற்றிருந்த நூல்கள் எல்லாம் அரசாங்க மாறுதல்களால் நாளுக்கு நாள் ஆதரவற்று, ஆராய்ச்சி குறைந்து, பாதுகாப்பின்றி அரிய பெரிய விடயங்களெல்லாம் சீர் குலையலாயின. பல நூல்கள் அச்சுக்கு வராமலே போயின. அரிய பெரிய நுட்பங்கள் யாவும் இன்றும் மறைந்து கிடக்கின்றன. தமிழ் நாட்டில் நாட்டு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்திய நிமித்தமாக பற்பல சித்த மருத்துவ நூல்கள் வெளியாகி இருப்பது சித்த மாணாக்கர், சித்த மருத்துவர்களது அதிர்ஷ்டமேயாகும்.

நாட்டு வைத்தியம் தொன்று தொட்டு, குரு சிஷ்யக் கிரமத்திலேயே நடைபெற்று வந்திருக்கிறது. அனுபவம் முதிர்ந்த மருத்துவரையடுத்துப் பலகால் அவர்களோடு பழகி, மருத்துவத் தொழிலைக் கற்று தேர்ச்சி பெற்ற பிறகே இத்தொழிலில் ஈடுபடுவது வழக்கம்.

இக்காலத்தில் சித்த மருத்துவ மாணாக்கர்களுக்குப் போதிய வசதிகளுடன் கல்லூரி ஏற்பட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கதே!

இதற்கு முன் சித்தமருத்துவ மாணாக்கர்களின் (B S.M.&S Course) உபயோகத்திற்காக, "சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு" என்னும் நூலை இரு பாகங்களாக எழுதி தமிழ்நாடு அரசாங்கத்தால் பதிப்பித்து கல்லூரியில் பாடப் புத்தமாக இருந்து வருகிறது. இந்நூல் என்னால் எழுதப்பட்டது. இந்நூலில் நோய்களைப் பற்றிய எல்லா விவரங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக நோயின் வேறு பெயர்கள், இயல், நோய் வரும் வழி, முற்குறி குணங்கள், பொதுக்குறி குணங்கள், நோய்ப் பிரிவு, ஒவ்வொரு பிரிவின் குறி குணங்கள், முக்குற்ற வேறுபாடுகள், தீரும். தீராதவை ஆகியவை குறிக்கப்பட்டிருக்கின்றன. நோய்களுக்குப் பரிகாரம் மட்டிலும் அந்நூலில் இல்லை. நோய்களுக்குப் பரிகார முறைகளை ஒரு தனி நூலாக எழுதினால் சித்த மாணவர்களின் உயர்தர படிப்பிற்கும் (M.I.M. Siddha), மற்றும் சித்த வைத்தியர்களுக்கும் மிக்க பேருதவியாக இருக்குமென மாணவர்களும், மற்றும் பெரியோர்களும் என்னைக் கேட்டுக் கொண்டபடியால் முன் எழுதிய நூலுக்குத் தொடர்பாக இந்நூலைத் தமிழ்நாடு அரசாங்க ஆலோசனைக் குழுவின் தீர்மானத்திற்கிணங்க எழுதியிருக்கிறேன். இந்நூலிற் கண்ட பரிகார முறைகளை எழுதுவதற்கு பலான சித்த மருத்துவ நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும, 40 வருடங்களுக்கு மேலான என் சொந்த அனுபவங்களையும், சித்த ஆராய்ச்சி நிலையத்தில் தயாரித்து அனுபவித்து வந்த பல நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி மருந்துகளைக் கொண்டும், எழுதி முடித்திருக்கிறேன். இந்நூல் மாணவர்களுக்கும் மற்றும் எல்லா நாட்டு மருத்துவர்களுக்கும், நற்பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அரசினரால் இந்நூலைப் பதிப்பிக்க எண்ணியபோது டாக்டர் திரு.ஜி.டி.நாயுடு அவர்கள் தானே இந்நூலை I.L.W.A. Ltd , அச்சகத்தில் பதிப்பித்து வெளியிடுவதாக முன் வந்தார்கள். அன்னவர்க்கு நாமெல்லோரும் நன்றி பாராட்டுவோமாக. இந்நூலை வெகு விரைவில் இயற்றும்படியாக முன்னாள் நல்வாழ்வுத்துறை (Deputry Secretary, Public Health, Government of TamilNadu) திரு.கே. சிதம்பரம், B.Sc., அவர்கள் தூண்டுகோலாக இருந்தார்கள். காலஞ்சென்ற திருவாளர் நவீன மருத்துவப் பேராசிரியர், டாக்டர் ராவ் பகதூர் ம.ரா. குருசாமி முதலியார், B A ,M D. அவர்களின் (முன்னாள் இந்திய மருத்துவ இலாக்காவின் கௌரவ டைரக்டர் (1949-1955) ஆலோசனைக்கிணங்க சித்த மருத்துவ நூல்களை மாணவர்கள் பயிற்சிக்கேற்ற முறையில் தற்கால சித்த மருத்துவ மேதாவிகள் எழுதினால் அவை யாவும் பின்வரும் சந்ததிகளுக்கு உபயோகமாயிருப்பதுமன்றி அவர்களில் சிலர் இந்நூல்களை ஆதாரமாகக் கொண்டு மேன்மேலும் சித்த மருத்துவ நூல்களைப் பெரிதாக்க முயலவும் கூடும் எனக் கூறிய அறிவுரையின்படி நான் எழுதத் துணிந்தேன். இறைவனருளால் எல்லோருக்கும் பயன்படுமாறு வேண்டுகிறேன்.

டாக்டர் ம. சண்முகவேலு, எச்.பி.ஐ.எம்.,
முன்னாள் பேராசிரியர்
இந்திய இணைப்பு மருத்துவக் கல்லூரி,
சென்னை.

மெட்ரிக் எடை - மாற்றுப் பட்டியல்

பலம்	கிராம்	பலம்	கிராம்	வீசை (1 வீசை = 40 பலம்)	கிலோ கிராம்	கிராம்	மணங்கு (1 மணங்கு = 8 வீசை)	கிலோ கிராம்	கிராம்	கண்டி (1 கண்டி = 20 மணங்கு)	கிலோ கிராம் (கிலோ 1000 கி.)
1.	35	21	735	1	1	400	1	11 -	200		
2.	70	22	770	2	2	800	2	22 -	400		
3.	105	23	805	3	4	200	3	33 -	600	1	224
4.	140	24	840	4	5	600	4	44 -	800	2	448
5.	175	25	875	5	7	-	5	56 -	--	3	672
6.	210	26	910	6	8	400	6	67 -	200	4	896
7.	245	27	945	7	9	800	7	78 -	400	5	1120
8.	280	28	980	8 (or) 1 மணங்கு	11	200	8	89 -	600		
9.	315	29	980				9	100 -	800		
10.	350	30	1050				10	112 -	-		
11.	385	31	1085				11	123 -	200		
12.	420	32	1120				12	134 -	400		
13	455	33	1155				13	145 -	600		
14	490	34	1190				14	156 -	800		
15.	525	35	1225				15	168 -	-		
16.	560	36	1260				16	179 -	200		
17.	595	37	1295				17	190 -	400		
18	630	38	1330				18	201 -	600		
19.	665	39	1365				19	212 -	800		
20.	700	40 or வீசை	1400				20 அல்லது 1 கண்டி.	224 -	-		

எடைக்கல் வகைகள்:

கீழே கண்ட அளவுள்ள எடைக் கற்கள் வியாபாரத்தில். புழங்கும்.

எடைக்கற்கள் இரும்பு (பித்தளை) கி. கி	கிராம்	எடைக்கற்கள் (வெண்கலம்) கி. கி.	கிராம்
50	500	20	500
20	200	10	200
10	100	5	100
5		2	50
2		1	20
1			10
			5
			2
			1

1 Tolal = *10 grams for* practical purpose

1 gram = 152/3 gs.

1 tea spoonful= 3 ml

1 Fluid draw= 3ml

1 oz = 25 ml

1 Lb = 450 grams

1 kilogram = 2¼ lbs

WEIGHTS AND MEASURES.

DOMESTIC MEASURES.

Measure	Equivalents	
1 drop	1/20 ml.(cc.)	1 m (minimum)
1 teaspoonful	5 ml.	1 fl.drachm.
1 dessertspoonful	8 ml.	2 fl.drachm.
1 tablespoonful	15 ml	4 fl.drachm. (½ ounce)
1 teacupful		7 fl.ounces
1 tumblerful		11 fl.ounces

Standard Abbreviations for Weights & Measures.

1.	Milligrammes	mg.
2.	Microgrammes	mcg.
3.	Grammes	gm.
4.	Cubic centimetres	c.c. or ml.
5.	Grains	gr.

CONVERSION TABLES.

FACTORS FOR CONVERTING ONE SCALE TO THE OTHER.

To convert grammes into grains ...	x 15.432
To convert grammes into ounces, avoirdupois ...	x 0.03527
To convert Kilogrammes into pounds	x 2,2046
To convert grains into grammes ...	x 0.0648
To convert avoirdupois ounces into grammes ...	x 28.35
To convert troy ounces into grammes ...	x 31.104
To convert cubic centimetres into fluid ounces, Imperial	x 0.0352
To convert litres into fluid ounces, Imperial ...	x 35.2
To convert fluid ounces into cubic c. metres ...	x 28.41
To convert pints (Imperial) into litres ...	x 0 568
To convert gallons (Imperial) into litres ...	x 4 5436
To convert metres into inches	x 39 37
To convert inches into metres ...	x 0.0254

THE FOLLOWING TABLES GIVE METRIC EQUIVALENTS OF IMPERIAL MEASURES OF MASS AND CAPACITY

FRACTIONS OF A GRAIN.

FROM 1 GRAIN TO 1/100 OF A GRAIN.

Imperial		Metric.	Imperial.		Metric.
gr. 1	...	0.065 gm.	gr. 1/60	...	0 00108 gm
gr. ¾	...	0.049 gm.	gr. 1/64	...	0.001 gm.
gr. 2/3	. .	0.043 gm .	gr. 1/70	...	0.00093 gm.
gr. ½	...	0.032 gm.	gr. 1/75	..	0.00086 gm.
gr. 1/3	...	0.022 gm.	gr. 1/80	..	0.00081 gm.
gr. ¼	...	0.016 gm.	gr 1/96	...	0.00067 gm
gr. 1/5	...	0.013 gm.	gr. 1/100	...	0.00065 gm
gr. 1/6	...	0 011 gm.	gr 1/120	...	0 00054 gm.
gr. 1/7	. .	0.009 gm.	gr 1/130	...	0 0005 gm.
gr. 1/8	...	0.008 gm.	gr 1/150	...	0.00043 gm.
gr. 1/10	..	0.0065 gm.	gr. 1/180	..	0.00036 gm.
gr. 1/12	...	0 0054 gm.	gr. 1/200	...	0 00032 gm.
gr. 1/15	...	0.0043 gm.	gr. 1/240	...	0 00027 gm.
gr. 1/16	...	0.004 gm.	gr. 1/250	.	0.00026 gm.
gr. 1/20	..	0.0032 gm.	gr. 1/300	...	0.00022 gm.
gr. 1/24	..	0.0027 gm.	gr. 1/400	...	0 00016 gm.
gr. 1/25	..	0.0026 gm.	gr 1/500	. .	0.00013 gm.
gr. 1/30	..	0 0022 gm.	gr. 1/600	..	0.00011 gm.
gr. 1/32	. .	0.002 gm.	gr 1/640	...	0.0001 gm.
gr 1/40	...	0.0016 gm.	gr 1/750	...	0.00009 gm
gr. 1/50	...	0.0013 gm.	gr. 1/1000	...	0.00006 gm.

MULTIPLES OF A GRAIN

FROM 1 GRAIN TO 1 OUNCE.

Imperial.		Metric.		Imperial		Metric	
gr 1	...	0 065	gm.	gr.12	...	0.778	gm.
gr. 1 ¼	..	0.081	gm.	gr.15	..	0.972	gm.
gr. 11/3	..	0.086	gm.	gr.18	...	1.166	gm.
gr 1 ½	...	0.097	gm	gr.20	..	1.296	gm.
gr. 1 ¾	...	0.113	gm.	gr.25	...	1.62	gm.
gr. 2	..	0.13	gm.	gr.30	...	1.944	gm.
gr. 2¼	...	0.162	gm.	gr.35	.	2.268	gm.
gr. 3	..	0.194	gm.	gr.40	...	2.592	gm.
gr. 3¼	...	0.227	gm.	gr.50	...	3.24	gm.
gr. 4	...	0 259	gm.	gr.60	...	3.89	gm.
gr. 4¼	...	0.292	gm.	gr.80	..	5.184	gm.
gr 5	..	0 324	gm.	gr.120	...	7.78	gm.
gr. 6	...	0.389	gm.	oz.1/8	...	3.54	gm.
gr. 7	...	0.454	gm.	oz.1/4	...	7.08	gm.
gr. 8	...	0.518	gm.	gr.1/2	...	14.17	gm.
gr. 8 ¾	...	0.567	gm.	dr.4	...	15.55	gm.
gr. 9	...	0.583	gm	oz.1	...	28.35	gm.
gr. 10	...	0.648	gm.	dr.8	...	31.1	gm.

FRACTIONS OF A FLUID OUNCE

FROM ONE-EIGHTH MINIM TO 1 FLUID OUNCE

Imperial.		Metric.	Imperial.	Metric.	
min. 7/8	..	0.007 c.c	min.15	...	0.888c.c.
min ¼	...	0.015 c.c	min.20	...	1.184c.c.
min. ½	...	0.03 c c	min 25	...	1.479c.c.
min. ¾	..	0.044 c.c	min.30	...	1.776c.c.
min. 1	...	0.059 c.c	min.35	...	2.072c.c.
min. 2	...	0.118 c.c	min.40	...	2.368c.c
min. 3	...	0.178 c.c	min.50	...	2.96c.c.
min. 4	...	0.237 c c	min.60	...	3.55c.c.
min. 5	...	0.296 c.c	min.90	...	5.33c.c.
min. 6	...	0 355 c.c	min.120	...	10.65c.c.
min. 8	.	0.474 c c	min.240	...	14.21c.c.
min. 9	...	0.533 c.c	min.300	...	17.76c.c.
min. 10	...	0.592 c.c	min.360	.	21 31c.c.
min. 12	...	0 71 c c	min.480	...	28.42c.c.

In Continental prescribing a smaller quantity than half a cubic centimetre is usually expressed in drops.

CONVERSION OF EXISTING WEIGHTS AND MEASURES INTO STANDARD MASS AND MEASURES.

STANDARDS OF WEIGHT

1 grain	=	0.000064799	kilogram.
1 ounce	=	0.0283495	kilogram.
1 pound	=	0.4535924	kilogram.
1 cwt.	=	50.802	kilograms.
1 ton	=	1016.05	kilograms.
1 tola	=	0.0116638	kilogram.
1 seer	=	0.93310	kilogram.
1 maund	=	37.3242	kilograms.

STANDARDS OF LENGTH AND CAPACITY

1 inch	=	0.0254 metre (exact)
1 foot	=	0.3048 metre (exact)
1 yard	=	0.9144 metre (exact)
1 mile	=	1609.344 metres (exact)
1 imperial gallon	=	4.54596 litre.

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

பொருளடக்கம்.

இயல் எண்	தலைப்பு	பக்க .எண்
1.	சுரம்	1 - 47
2.	முக்குற்ற நோய்	48 - 75
3.	அம்மை நோய்	76 - 105
4.	குரற் கம்மல்	106 - 113
5.	மூக்கடைப்பு நோய்	114 - 121
6.	குருதி அழல்	122 - 150
7.	இருமல் நோய்	151 - 165
8.	இரைப்பு நோய்	166 - 182
9.	இளைப்பு நோய்	183 - 214
10.	உள மாந்தை	215
11.	தமரக நோய்	216 - 229
12.	சுவையின்மை	230 - 235
13.	நீர் வேட்கை நோய்	236 - 241
14.	செரியாமை	242 - 250
15.	விக்கல் நோய்	251 - 262
16.	வாந்தி நோய்	263 - 270

இயல் எண்	தலைப்பு	பக்க .எண்
17.	மாந்த நோய்	271 - 274
18.	குன்ம நோய்	275 - 306
19.	சூலை நோய்	307 - 326
20 - 21.	மண்ணீரல், கல்லீரல் நோய்	327 - 336
22.	வெளுப்பு நோய்	337 - 354
23.	ஊதல் நோய்	355 - 374
24.	மஞ்சள் நோய்	375 - 401
25.	பெருவயிறு	402 - 426
26.	குடற்பிடிப்பு நோய்	427 - 430
27.	பெருங்கழிச்சல்	431 - 462
28.	நிணக்கழிச்சல்	463 - 492
29.	கடுப்புக்கழிச்சல்	493 - 508
30.	ஊழி நோய்	509 - 527
31.	எருவாய் முளை நோய்	528 - 562-

நோய்களுக்குச் சித்த பரிகார நூலைத் தொகுப்பதற்கு ஆதாரமாகயிருந்த இதர நூல்களாவன.

1. சித்த மருத்துவம் (முதற் பாகம்)
2. தேரர் மருத்துப் பாரதம்
3. தேரர் யமகம்
4. குண பாடம் (பாகம் 1, 2 ,3,)
5. கண்ணுசாமியம்
6. சிகிச்சா ரத்ன தீபம்
7. வைத்திய சிந்தாமணி
8. பரம்பரை வைத்தியம்
9. பதார்த்த குண விளக்கம்
10. ஆயுர்வேத மஞ்சரி
11. வைத்திய சதகம்
12. செய் முறை கைமுறை பாக்கட் வைத்தியம்
13. அனுபவ வைத்திய பிரம ரகசியம்
14. அகத்தியர் வைசூரி நூல்
15. சித்த ஆராய்ச்சி நிலையம் செய்மருந்து நூல்
16. சித்த வைத்தியத் திரட்டு
17. சித்த ஆரூடம்
18. ஏராளமான ஏட்டுப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள்
19. பதினெண் சித்தர் சில்லரைக் கோவை
20. அகத்தியர் நூல்கள்
21. யாகோபு நூல்கள்
22. யூகிமுனி வாதக் கோவை முதலியன.

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

பாகம்-1

நோய்களுக்குச் சித்த பரிகாரம்

1. சுரம்

பரிகாரம்

பொதுவாக எந்த வகைப்பிணியாக இருப்பினும் சுரம் உட்பட நோய் உண்டாவதற்குரிய அகக் காரணம், புறக்காரணம் இவற்றை அறிந்து மருத்துவம் புரிதல் வேண்டும். முக்குற்றங்கள் தனித்து அல்லது கலப்புற்று நோயை உண்டாக்கியிருப்பின் அவற்றிற்கேற்ப மருந்துகள் கொடுத்தல் வேண்டும். முதலில் மிகுதியடைந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்துதல் அவசியம். மலச்சிக்கல் இருப்பின் அதனை நீக்குதல் வேண்டும். பேதி, வாந்தி இவையிருப்பின் அவற்றை முதலில் கட்டுப்படுத்துதல் வேண்டும். அவசரமும், அவசியமுமான குறி குணங்களை வளர விடாது உடனே தடுத்தல் வேண்டும். தேசம், காலம், பலம் யாவும் கவனிக்க வேண்டும்.

சுர நோயில் மந்தமே காரணமாயிருப்பின் அதனை நீக்குவதற்கும், தன்னிலை திரிந்த முக்குற்றங்கள், ஐங்கால்கள் இவற்றைத் தன்னிலைப் படுத்துவதற்கும் பட்டினி, கழிச்சல், வாந்தி முதலிய முறைகளை அனுசரித்தல் நலம். இவற்றால் பயனில்லையானால் சுரத்திற்கேற்ற நேர் மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும். அவையாவன:- குடிநீர், பொடி, மாத்திரை, மெழுகு, பற்ப செந்தூரங்கள், சுண்ணம், களங்கு, கட்டுகள் ஆகியவற்றைத் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் கொடுத்து வர வேண்டும்.

துணை நோய்களைப் போக்குவதற்கும், ஐயமிகுதியைக் குறைப்பதற்கும் வெளிப் பிரயோகங்களாகிய மூக்குப் பொடி, மூக்குத்திரி, மூக்குத்துளி (நசியம்), கண் மருந்து (கலிக்கம்), மேல் பூச்சுத் தைலம் ஒற்றடம், வேது பிடித்தல் ஆகிய பரிகாரங்களையும் செய்து முடிக்க வேண்டும்.

சன்னி பாதகமாயிருப்பின் (முப்பிணி நோய்) :

இதில் முக்குற்றங்களும், உயிர்க்கால் தவிர மற்ற நான்கு கால்களும் ஏக காலத்தில் கேடடைந்து வரும் நோயாதலாலும் உடல் வன்மை எளிதில்

கெடுமாதலாலும் இந்நோயில் கேடடைந்த குற்றங்களையும், கால்களையும் முதலில் தன்னிலைப்படுத்துவதற்கு உயர்தர பெரு மருந்துகளை உட்பிரயோகம் செய்தும் இந்நோயிலுண்டாம் ஐய மிகுதியை அடக்குவதற்கு கண், மூக்கு, உச்சி இவைகளுக்கான மருந்துகளையும், ஒற்றடம், பற்று, வியர்வை பிடித்தல் துவாலை, எண்ணெய் முதலிய புற மருந்துகளையும் பிரயோகித்தல் அவசியம். தேவையாயின் சுரத்தில் வழங்கக் கூடிய கழிச்சல், வாந்தி மருந்துகளையும் இதில் உபயோகிக்கலாம்.

பட்டினி :

சுரம் தணிவதற்கு வளி சுரத்தில் 7 நாள், அழல் சுரத்தில் 6 நாள், ஐய சுரத்தில் 9 நாள், முக்குற்ற சுரத்தில் 10 நாட்களும் பட்டினி வைக்கும்படி நூல்கள் கூறியிருப்பினும் நோயின் வன்மையையும், நோயினது நிலைமையையும் அறிந்து பட்டினிவைத்தல் நலம்.

பொதுவாக வளி சுரத்தில் 3 நாட்கள் உணவு கொடாமல் வைத்திருந்தும், அழல் சுரத்தில் குடி நீரும் சிறிது கஞ்சி உணவு கொடுத்தும், ஐய சுரத்தில் சிறிதளவு கஞ்சியும், மருந்தும் கொடுத்து வரச் சுரம் தணியும்.

மேற்கோள்கள் :

1. “இலங்கணம் பரம ஔடதம்”
2. “பட்டினி பெருமருந்து”
3. “உற்ற சுரத்திற்கும் உறுதியாம் வாயுவிற்கும்

   அற்றே வருமட்டும் அன்னத்தைக் காட்டாதே”
4. சிறு உணவு பெரு மருந்து

என்பன போன்ற பழமொழிகள் கூறியிருப்பதால் நோயினது நிலைமையறிந்து எளிதில் செரிக்கக்கூடிய சிறிய இலகுவான உணவுகளைக்கொடுத்து நோயைப் போக்குவது மருத்துவரின் கடமையாகும். உணவு முழுதுமில்லாதிருப்பினும், அல்லது அளவிற்கு அதிகமானாலும் நோயைப் பெருக்கி உடலுக்குக் கெடுதியை விளைவிக்கு மென்பதையும் அறியவும்.

சுரம் தீரும் வரை சோறு போன்ற பெரும் தீனியைக் கொடுக்காமல் புனற்பாகம் போன்ற கஞ்சியைக் கொடுத்து வருவது மிகவும் நல்லது.

அளவு கடந்த பட்டினியின் செயல் என்ன?

அளவு கடந்த பட்டினியால் உடல் வன்மை குன்றும், உடல் வறளும், சோம்பல், வாய் குமட்டல், களைப்பு, தூக்கம், மயக்கம், தாகம், வாந்தி இருமல், கடின மூச்சுவாங்கல், விக்கல், மிகு சுரம் இவைகளுமுண்டாகும்.

ஆதலால் உடலை இளைக்கச் செய்யும் சுரங்களிலும், சுரத்திற்கு முன் வேறு காரணமில்லாமல் மெலிந்த நிலையிலும், காதல், சினம், வருத்தம், பயம் இவை போன்ற காரணங்களினால் உண்டாகும் சுரங்களிலும் பட்டினி அறவே நீக்குதல் வேண்டும்.

1. மூன்று நாட்கள் பட்டினி முறை :-

சுரம் தோன்றிய நாள் முழுவதும் பட்டினி, இரண்டாம் நாள் காலையில் பல்விளக்கி, நாவழித்து, வெந்நீரால் வாய் கொப்பளித்து, முகத்தைக் குளிரக்கழுவி, உடலையும் தலையையும் சோமனால் சுற்றி இடக்கை கீழாகப் படுக்கும்படி செய்யவும். மூன்று நாட்கள் கழித்து நான்காம் நாள் காலையில் காய்ந்தாறிய வெந்நீரைப் பருகச் செய்து, ஒரு தேற்றான் கொட்டையை மென்று சுவைத்துத் தின்னும்படி செய்ய சுரம் நீங்குமென நூல்கள் கூறுகின்றன.

2. கழிச்சலுண்டாக்க சில மருந்துகளாவன :-

சஞ்சீவி மாத்திரை, (பாலர்களுக்கு) அட்ட பைரவம், வச்சிரகண்டி மாத்திரை (Night Pills), சுகவிரேசனக்குளிகை (Healthy Laxative pills) சீவரத்தினக் குளிகை, இலவங்காதி மாத்திரை, மேகனாதக் குளிகை, தாழம்பூ மாத்திரை, கோடாசூரிக் குளிகை, காண்டீபன் மாத்திரை இவற்றில் ஏதேனுமொன்றை வயதுக்குத் தகுந்தவாறு 1 முதல் 2 மாத்திரைகளைக் கொடுக்கவும். மலம் கழியும். வளிச் சுரத்திலும், ஐயசுரத்திலும் மலச்சிக்கல் இருக்கக்கூடும். அப்போது மலத்தை வெளியாக்கவேண்டும். அழல் சுரத்தில் ஏற்கனவே பேதியாகிக் கொண்டிருக்கக்கூடும். அப்போது பேதி மாத்திரைகள் கொடுக்கக்கூடாது, பேதி மருந்து கொடுக்க இயலாதபோது வஸ்தி (Enema)செய்யலாம்.

3.வாந்தி செய்விக்க சில மருந்துகளாவன :-

வளி சுரம், அழல் இவற்றில் வாந்தி செய்வித்தல் கூடா. ஐய சுரத்தில்

கோழை கட்டியிருப்பின் நோயாளியின் வன்மையறிந்து வாந்தி செய்விக்கலாம்.

1. சஞ்சீவி மாத்திரை ஒன்றை இலைக் கள்ளிச் சாறு அல்லது உத்தாமணியிலைச்சாறு இதில் இழைத்துக் கொடுக்க வாந்தியும், பேதியும் உண்டாகுமெனவும், சளி வெளியாகுமெனவும் சித்த மருத்துவம் கூறுகிறது

2. கௌரி பாடாண பற்பம்.

3. காடிக்கார ரச பற்பம் இவற்றிலொன்றை அரிசி எடை தேனில் கொடுக்க ஒரு முறை வாந்தியும் பேதியுமாகும். சளியும் வெளியாகும். சுரமும் தணியும்,

4 முருங்கை இலைச்சாறு பத்துத்துளியில் சிறிது உப்பு கலந்து ஒரே வேளை, நாவில் தடவ வாந்தியாகி கோழை வெளிப்படும்.

5. வெள்ளைக்காக்கட்டான் மாத்திரை, கோரோசனத்துகள் இவற்றிலொன்றைத் தக்க அளவில் ஒரே வேளை கொடுக்க பேதியும் வாந்தியுமுண்டாகும்.

4. வியர்வை பிடித்தல் அல்லது ஆவி பிடித்தல் :-

குளிர் சுரம், நச்சு சுரம், ஐயசுரம், தலை நீரேற்றத்துடன் தலைவலி, தலை குத்தல், உடல் கனத்தல் இவற்றில் வியர்வை பிடித்தல் நன்மைதரும்.

1. நொச்சித்தழை 4 கைப்பிடி, மஞ்சள் ¼ பலம் (7 ½ கிராம்) இடித்துப் பானையிலிட்டு முறைப்படி தண்ணீர் சேர்த்துக் குடிநீரிட்டு வடித்து, மீண்டும் மூடிவைத்துக் காய்ச்சி, இறக்கி செங்கல் துண்டுகளை நன்றாய்ச் சூடாக்கி மேற்படி குடிநீரிலிட்டு (ஒவ்வொன்றாயிட்டு) போர்வையால் உடம்பைப் போர்த்திக்கொண்டு ஆவிபிடிக்க வியர்த்துச் சிரமம் நீங்கும். காற்றுப்படாமல் வியர்வையை உலர்ந்த சோமனால் துடைக்கவும்.

2. துணிப்புகையை மூக்குத் துளைக்குள் உறிஞ்ச நீர் வடிந்து நெஞ்சுவலி தீரும்.

5. கண்மருந்து (கலிக்கம்)

ஐயக்குற்றம், முப்பிணி, சன்னி இவற்றில் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமும் வழங்க தன்னிலை திரிந்த குற்றங்கள் தன்னிலைப்படும்.

1. இலவங்கத்தை ஒரு சிறு துணியில் முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் பிழிவதுண்டு.

2. அகத்தீசர் கலிக்க மாத்திரையைத் தேன் அல்லது முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடலாம்.

3. சுத்தமான வேப்பெண்ணெய்த்துளி விடலாம்

4. சுக்குத் துண்டைத் தட்டி முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் பிழியலாம்.

5. கடுக்காய், தான்றி இவற்றின் பருப்பு, இந்துப்பு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, சம எடை எடுத்து பசுநீர் விட்டரைத்து மாத்திரையாக்கி உலர்த்தி முலைப்பாலிலுரைத்து அஞ்சனமிடக் குணம் ஆகும்.

6. மூக்குத்துளி மருந்துகள் (நசியம்)

அ. தும்பையிலைச் சாறு மூக்கில் துளியிட குளிர்சுரம், நடுக்குவாதம் இவை போம்.

ஆ. தாமரைப் பூவிதழ், துளசித்துளிரிலை, உப்பு, மிளகு சமஎடை சேர்த்து அரைத்து மாத்திரையாக்கி உலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பாலில் ஊறவைத்து உரைத்து மூக்கில் பிழிய சகல சுரங்களும், உன்மாதம், சன்னி, தனுர்வாதம், தலை கிறு கிறுப்பு இவைபோம்.

இ. மேற்படி மாத்திரையைக் கோங்கிலவம் பூச்சாற்றில் அல்லது பனங்கள்ளில் ஊறவைத்து நசியமிட நரம்பு நோய்கள், சன்னி, குரற்கம்மல் முதலிய சைத்திய நோய்கள் குணமாம்.

7. மூக்குத்திரி :-

1. திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு வகைக்குச் சமஎடை எடுத்துப் பொடித்து சீலையில் தூவித் திரியாகச் சுருட்டி வேப்பெண்ணெயில் ஊறவைத்துக் கொளுத்தி மூக்கில் புகைபிடிக்க மூக்குநீர் வடிந்து சுரம் போம். தலைபாரம் நீங்கும்.

8. மூக்குப்பொடி:-

1. பாலைவேர், சுண்டைவேர், நாரத்தைவேர், இலுப்பைப்பட்டை வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து நாகமல்லிகைப் பூச்சாறு, மிளகுக் குடிநீர், நாரத்தையிலைச் சாறு இவற்றில் வகைக்குச் 8 நாட்கள் அரைத்து உலர்த்திப் பொடித்து ஆக்கிராணிக்க சன்னி விடபாகம், நாசிநோய் இவைபோம்.

2. சோகி, மிளகு, சாமுத்திராப்பச்சை வகைக்குச் சமன் பொடித்துக் கலந்து வைத்துக் கொண்டு நாசியில் உறிஞ்ச சன்னி, ஐவகை வலிநோய், தலைவலி, தேள்கடி, மயக்கம் இவைபோம்.

3. அறுகம்புல், நாய்க்கடுகிலை, இலவங்கம், எரு முட்டை இவை சமன் பொடித்து ஆக்கிராணிக்க சகல சேத்தும சன்னிபோம்.

9. பற்று :-

1. வேலிப்பருத்தியிலைச்சாறு, வெள்ளுள்ளி, மூங்கிலரிசி, மூங்கிலுப்பு, வெடியுப்பு வகைக்குச் சம எடை எடுத்து நீர் விட்டரைத்துக் கொதிக்கவைத்து மேலுக்குப் பற்றிட சுரம், உடம் புகுத்தல், குடைச்சல் இவைபோம்.

2. நீர்க்கோவை மாத்திரையை முலைப்பாலில் உரைத்து நெற்றியில் பற்றிட்டு சாம்பிராணிப் புகையைக் காட்டி உலர்த்தவும். தடுமன், மூக்கு, நீர்ப்பாய்தல், காய்ச்சல், தலைப்பாரம், தலைவலி, நாசியடைப்பு யாவும் குணமாம்.

3. பச்சைக்கற்பூரக் கலவைச் சூரணம் முலைப்பால் விட்டரைத்து சிறிது சூடு பண்ணி முன்போல் நெற்றியில் பற்றிட்டு சாம்பிராணிப் புகைகாட்ட முன் கூறிய நோய்கள் குணமாம்.

10. படுக்கை :-

1. நாள்பட்ட சுரங்களில் படுக்கையிலிருப்பதின் காரணமாக புண் உண்டாகாமல் (Bed sores)பாதுகாக்க வேண்டும்.

2. இலவம் பஞ்சுப்(Silk Cotton) படுக்கை மிகவும் நல்லது.

3. சிற்றீச்சம் பாயும் நல்லதுதான்.

11. விசிறி:-

1. மயில் தோகை விசிறி.

2. பனை யோலை விசிறி.

3. வெட்டி வேர் விசிறி

இவை நயமென்பர்.

12. போர்வை:-

கம்பளிப் போர்வை நல்லது.

குறிப்பு- மேற்கண்ட சில கலிக்கம், ஆக்கிராணம், பற்று முதலியன கீழே குறிக்கப்பட்டுள்ளன.

1. கண் கலிக்கம்:- (சி. வை. திரட்டு பக்கம் 298.)

மிளகு, திப்பிலி, துவரம்பருப்பு, அக்கராகாரம், ஏலரிசி இவை சம எடை சேர்த்து வெற்றிலைச் சாறு, தேன் இவற்றைத் தனித்தனி விட்டரைத்து நீள குளிகைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு முலைப்பாலிலிழைத்துக் கண்ணிலிடத் தலைவலி, மண்டைக் குத்து, கபால சன்னி, உடற்காங்கை இவை ஒழியும்.

2. ஆக்கிராணம்:-

சுண்டைவேர், தும்பை வேர், இலுப்பைப்பிண்ணாக்கு இவை சமன் எடுத்து-முதலிரண்டையும் உலர்த்திப் பொடித்தும், இலுப்பைப் பிண்ணாக்கைச் சுட்டுப் பொடித்தும் துணியில் வடிகட்டி குழலில் அடைக்கவும். அளவுப்படி ஆக்கிராணம் செய்ய தலையிலுள்ள தோடமெல்லாம் போம்.

3. சுரத்தின் பேரில் தலைவலியிருப்பின் மேல்பூச்சு:-

சாம்பிராணி, கஸ்தூரி மஞ்சள், சுக்கு, பெருங்காயம், உளுந்து இவை வகைக்கு ½ வராகனெடை, அபினி ¼ வராகனெடை வீதம் சேர்த்து

முலைப்பால் விட்டரைத்து நெற்றி, கன்னம், கழுத்து முதலிய நோயுள்ள இடங்களில் தடவி நெருப்பனலில் உலரும்படி வாட்ட காய்ச்சல், தலைவலி, தலை பாரம் இவை குணமாகும்.

4. சுரம், தலைவலி, தலைப்பாரம், சலதோடம், சன்னி இவையிருப்பின் தலை, நெற்றி இவற்றில் பற்றிட:-

சதகுப்பை, சாம்பிராணி. கறிமஞ்சள், கருஞ்சீரகம் வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து நொச்சியிலைச் சாறு விட்டு அரைத்து குழம்பு பதத்தில் கரண்டியிலிட்டு சற்று சூடுபண்ணி தலையிலும், நெற்றியிலும் பற்றிட மேற்கண்ட நோய்கள் தீரும்.

தாபசுரம் போக்கும் சில தனி மருந்துகளாவன:-

"முத்தமும் பற்பாடக முந்திரிகை
பேரீந்து மூங்கிலிலை பூநாகமும்
முலைப்பாலு மிளநீரு ம ஞ்சிட்டி ரோகணியு
முயர்சந்தனந் தாரமுங் கொத்தமல்லிகை

சுக்கு காஞ்சொறி நிலவேம்பு
கொன்றை புடல் தசமூலமுங்
கோஷ்டம் வெட்பாலைக் கருநெய் தலர
சம்பட்டை கோரோசனம் மதுரமும்

சித்தமுட் டியிலுப்பை நெய்ச் சிட்டி
புளியாரை, சிறு மூல நன்னாரியுஞ்
செவியந்திப் பிலிதோடை பூசனிக்
கொடிசீனி சிறுதேக்கு வேம்புமருளுந்

சித்தரத்தையு வெட்டிவே ருடனிலா
மிச்சு, தான்றிகடு நெல்லிசீந்திற்
சதாவரிருத்தி ராட்சம்வட்டத்திருப்பியுஞ்
சகலசுரஹ ரமாகுமே." (சத சுலோகம்)

நன்முத்து, கோரைக்கிழங்கு, பற்பாடகம், முந்திரிகை, பேரீந்து, மூங்கிலிலை, பூநாகம், முலைப்பால், இளநீர், மஞ்சிட்டிவேர், கடுகுரோகணி,

சந்தனம், அரிதாரம், வெள்ளி, கொத்தமல்லி, சுக்கு, சிறுகாஞ்சொறி, நிலவேம்பு, சரக்கொன்றைப்புளி, பேய்ப்புடல், தசமூலம், சாதிக்கோட்டம், வெட்பாலை, நெய்தற்கிழங்கு, அரசம் பட்டை, கோரோசனம்,அதிமதுரம், சிற்றாமுட்டிவேர், இலுப்பைப் பூ, நெய்ச்சிட்டிக் கீரை, புளியாரை, சிறுமூலம், நன்னாரி, செவ்வியம், திப்பிலி, ஆடாதோடை, பூசனிக் கொடி, சீனி, சிறு தேக்கு, வேம்பு, மருள், சிற்றரத்தை, வெட்டிவேர், விலாமிச்சுவேர், தான்றி, கடுக்காய், நெல்லி வற்றல், சீந்தில்கொடி, சதாவரி, ருத்திராட்சம், வட்டத்திருப்பி ஆகிய இச்சரக்குகள் யாவும் தாப சுரத்திற்குப் பரிகாரம் ஆகும்.

சீத சுரம் போக்கும் சில தனி மருந்துகளாவன:- (சதசு லோகம்):

"வட்டத்திருப்பிவே ரோடுபெரு முட்டி
மரமஞ்சள் திரிகடுகுள்ளி யதும்
விஷ்ணுகிரந்தி நாரத்தம் வேருமேவும்,
பத்திரிபிஞ்சொடு நொச்சிலியும்,
ஒட்டறையோ டிருதுளசியு மூக்குரட்டை,
உயரும்லவங்கத் தோலிலை சீரகமும்
திட்டப்பெரு மரஞ்சிறு தேக்காலம்
பழுப்புஞ், சீதச்சுர ஹரமாகிடுமென்றனரே."

வட்டத்திருப்பிவேர், பேராமுட்டி, மரமஞ்சள், திரிகடுகு, உள்ளி, விஷ்ணுகிரந்தி, நாரத்தம் வேர், தாளி சபத்திரி, கடுக்காய்ப் பிஞ்சு, நொச்சி இலை, ஒட்டறை, இருதுளசி, மூக்கிரட்டை, இலவங்கத் தோல், இலவங்கப்பத்திரி, சீரகம், பெருமரத்துப் பட்டை, சிறுதேக்கு, ஆலம்பழுப்பு ஆகிய இவை சீதசுரம் போக்கக் கூடிய சரக்குகளாகும்.

1. குடிநீர் வகை.

1. வாத சுரக் குடிநீர்:-

பெருங்காஞ்சொறி வேர், திப்பிலிமூலம், சித்திர மூலம், சங்கன்வேர், வெள்ளறுகு, நிலவேம்பு, முருக்கம்வித்து, கழற்சிவேர், கண்டங்கத்திரி, பேராமுட்டி, சிற்றரத்தை, மாவிலிங்கவேர், பேரரத்தை, சிறுகாஞ்சொறி, சதகுப்பை, விஷ்ணுகிரந்தி, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, செவ்வியம், கோஷ்டம் இவை வகைக்கு ஒரு பலம் (30 கிராம்) வீதம் எடுத்து இடித்துச் சேர்த்து 21

பாகங்களாக்கி ஒரு பாகத்திற்கு 4 லிட்டர் தண்ணீர் விட்டு ஒரு நாள் ஊறவைத்துக் காய்ச்சி எட்டிலொருபாகமாக வற்றவைத்து இறக்கிக் கொள்ளவும். வேளைக்கு 1/8 லிட்டர் குடிநீரில் வாத ராக்கதன் மாத்திரை ஒன்றைப் பொடித்துச் சேர்த்து, நயம் தேன் ஒரு தேக்கரண்டியளவு சேர்த்து பனைவெல்லம் அல்லது கற்கண்டு பொடித்துச் சேர்த்துக் காலை மாலை கொடுத்துவர வலிசுரம், நடுக்கு வாதம், குளிர் சுரம் இவை குணமாம். மீதியுள்ள 20 பங்குப் பொடியை முன்போல் குடிநீரிட்டுக் கொடுக்கவும். வேறு வகைப் பற்ப செந்தூரம், கட்டு வகைகளுக்கும் இதனை அனுபானமாக உபயோகிக்கலாம்.

2. பித்த சுரக் குடிநீர்:-

விலாமிச்சு வேர், சிறுகாஞ்சொறி, வில்வவேர், பாதிரிவேர், அதிமதுரம், கோஷ்டம், நன்னாரி, நிலவாரை, சீரகம், கொத்துமல்லி, தும்பைவேர், பேரீச்சங்காய், யானைத்திப்பிலி, நெல்லிமுள்ளி, சுக்கு, இவை வகைக்கு ஒரு பலம் (30 கிராம்) வீதம் எடுத்து இடித்துச் சேர்த்து, 16 பங்கு செய்து ஒரு பங்கைச் சட்டியிலிட்டு முன்போல் 4 லிட்டர் தண்ணீர் விட்டு ஒரு நாள் ஊறவைத்து அப்பால் அடுப்பேற்றி காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து இறக்கி வைத்துக் கொண்டு வேளைக்கு 1/8 லிட்டர் குடிநீரில் கோரோசனை மாத்திரைகளை உரைத்து அல்லது பற்பச் செந்தூரம், கட்டுவகைகளை உரைத்து முன்போல் தேன், கற்கண்டு இவை கலந்து காலை-மாலை கொடுத்துவர பித்த சுரம் நீங்கும். மீதியுள்ள பங்கு குடிநீர்ப் பொடியை முன்போல் உபயோகப்படுத்தி வரவும்.

3. கப சுரக்குடிநீர்:-

சுக்கு, திப்பிலி, கிராம்பு, சிறுகாஞ்சொறி வேர், அக்கிராகாரம், முள்ளிவேர், கடுக்காய்த் தோல், ஆடாதோடை, கற்பூரவள்ளி, கோட்டம், சீந்தில், சிறுதேக்கு, நிலவேம்பு, வட்டத்திருப்பி, முத்தக்காசு இவை வகைக்கு ஒரு பலம் (30 கிராம்) வீதம் எடுத்து இடித்துச் சேர்த்து 15 பங்கு செய்து ஒரு பங்கைச் சட்டியிலிட்டு 4 லிட்டர் தண்ணீர் விட்டு ஒரு நாள் ஊறவைத்து அப்பால் அடுப்பேற்றிக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து இறக்கிக் கொள்ளவும். வேளைக்கு 1/8 லிட்டர் குடிநீர் வடிகட்டி அதில் கஸ்தூரி மாத்திரை, கோரோசனை மாத்திரை, சந்திரோதய மாத்திரை, எமதண்டக் குளிகை இவற்றில் ஏதேனுமொன்றை அரைத்து அல்லது வேறுவகை பற்பச்

செந்தூரம், கட்டுவகைகள் சேர்த்து அத்துடன் தேனும் கற்கண்டும் முன்போல் சேர்த்துக் காலை, மாலை கொடுத்துவர ஐயவெப்பு நீங்கும். மீதியுள்ள பங்கு குடிநீர்ப் பொடியை முன்போல் உபயோகப்படுத்தி வரவும்.

4. நிலவேம்புக் குடிநீர்:-

நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சவேர், சந்தனத்தூள், பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, பற்பாடகம் இவை வகைக்கு ¼ பலம் (7 ½ கிராம்) எடுத்து முறைப்படி குடிநீரிட்டு ¼ முதல் ½ ஆழாக்கு (2முதல் 4 அவுன்சு) வீதம் வடிகட்டி பனைவெல்லம் அல்லது கற்கண்டு சேர்த்து தேன் சிறிது கலந்து காலை, மாலை கொடுத்துவர எல்லா வகைச் சுரமும் நீங்கும். குறிப்பாக விஷசுரம், முறைக்காய்ச்சல் தீரும். அதற்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுவகை இவைகளுக்கு அனுபானமாகவும் இந்தக் குடிநீரை உபயோகப்படுத்த சுரம் விரைவில் குணமாகும்.

5. நொச்சிக் குடிநீர்:-

நொச்சிக் கொழுந்து ஒரு பிடி, மிளகு ¼ பலம் (7 ½ கிராம்) பூண்டு (3¾ கிராம்), கம்மாறு வெற்றிலை பத்து முறைப்படி குடிநீரிலிட்டு ¼ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்க குளிர்சுரம், விஷசுரம், மாறல் சுரம், தலைவலி இவை குணமாகும்.

6. ஆடாதோடைக் குடிநீர்:- (1)

ஆடாதோடையிலை நாலு அல்லது ஐந்து எடுத்து குறுக அரிந்து தேன் விட்டு வதக்கி அதிமதுரம், தாளிசபத்திரி, அரிசித்திப்பிலி, சிற்றரத்தை இவை வகைக்கு ½ வராகனெடை வீதம் தட்டிச் சேர்த்து விதிப்படி குடிநீரிட்டு ¼ முதல் ½ ஆழாக்கு (2 முதல் 4 அவுன்சு) வீதம் காலை-மாலை கொடுத்துவர சுரம், இருமல், சலதோடம், தலை வலி, காசம், பசியின்மை முதலியன தீரும். சிறிது தேனும், கற்கண்டும் சேர்த்துக் கொடுக்க மிகவும் நல்லது. அந்நோய்க்குரிய மாத்திரைகள், பற்பச் செந்தூரம், கட்டுவகைகளுக்கு இக்குடிநீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

7.ஆடாதோடைக் குடிநீர்:- (2)

ஆடாதோடையிலை நான்கு அல்லது ஐந்து எடுத்து குறுக அரிந்து தேன்விட்டு வதக்கி ஏலக்காய், வால்மிளகு வகைக்கு ¼ வராகனெடை கடுக்காய்த் தோல், கடுகுரோகிணி, தாளிசபத்திரி வகைக்கு ¼ பலம் (7 ½ கிராம்) எடுத்து ஒன்றிரண்டாகத் தட்டிச் சேர்த்து விதிப்படி குடிநீர் செய்து வடிகட்டி காலை-மாலை இரு வேளையும் ¼ முதல் ½ ஆழாக்கு (2 முதல் 4 அவுன்சு) வீதம் கொடுத்துவர முன் கூறிய நோய்களோடு நீர்க்கட்டு, மலச்சிக்கல், சுரம் இவைகளும் குணமாகும். சிறிது தேனும், கற்கண்டும் சேர்த்துக் கொடுக்கலாம். அந்நோய்களுக்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுவகைகளுக்கு இக்குடிநீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

8. சுரக்கட்டிக்கு பிடங்கநாறிக் குடிநீர்:-

புறங்கைநாறியிலை (அல்லது கிருஷ்ண பாலையிலை) நான்கு அல்லது ஐந்து எடுத்து ஒரு மஞ்சள் கடுக்காயின் தோல், கறிமஞ்சள் ½ வராகனெடை சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு ¼ முதல் ½ ஆழாக்கு (2 முதல் 4 அவுன்சு) வீதம் காலை-மாலை சிறிது தேனும் கற்கண்டும் கலந்து கொடுத்துவர சுரக்கட்டி (பிலீகவிருத்தி) போகும். (சி. வை. திரட்டு)

9. சர்வசுரக் குடிநீர்:-(கண்ணுசாமியம்)

1. "பாரேசிறுதேக்குப்பற்பாடகந்தேவ
தாரே நன்னாரிச்சீந்தில் கோஷ்டம்-பேராய
சுக்குப்புடல் பேயும் சுத்த சுணைக்காஞ்சொறியும்
பக்குவமுத்தக்காசும் பண்பு."

2. "பண்பாய் வகைக்குக்கால் பத்தியுடன் பார்த்திடித்து
நண்பாய்ப்படி நீரில்நான்கிலொன்றாய்ப்-பெண்மணியே
காய்ச்சி வடித்திரு வேளை கொள்ளக் கன்ம சுரம்
போய்ச்சு தெனவே புகல்."

சிறுதேக்கு, பற்பாடகம், தேவதாரு, நன்னாரி, சீந்தில், கோஷ்டம், சுக்கு, பேய்ப்புடல், காஞ்சொறி, கோரைக்கிழங்கு இவை வகைக்குப் பலம் ¼ (7 ½ கிராம்) வீதம் எடுத்து இடித்து ஒரு புது மட்கலத்திலிட்டு இரண்டு லிட்டர்

தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து தினம் இருவேளை ¼ முதல் ½ ஆழாக்கு (2 முதல் 4 அவுன்சு) வீதம் சாப்பிட்டுவர மூன்று நாளில் எவ்விதச் சுரங்களும் குணமாகும். சுரத்திற்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் இவற்றிற்கு இக்குடிநீரை அனுபானமாக உபயோகிக்க மிக்க நலம் தரும்.

10. சுரக்குடி நீர்:- (கண்ணுசாமியம்)

"தக்க மிளகோடு தானாங் கறிமஞ்சள்
மிக்க நிலவேம்பு மேவுமெடை-முக்கழஞ்சு
இங்கு மிகக்காய்ச்சி யேற்குங் குடிநீரில்
தங்கா தினிசுரமே தான்"

மிளகு, நிலவேம்பு, கறிமஞ்சள், வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து இடித்து அரை லிட்டர் தண்ணீரில் போட்டு பாதியளவாக வற்றக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு நான்கு அவுன்சு வீதம் காலை-மாலை மூன்று நாட்கள் கொடுக்க எவ்விதச் சுரமும் குணமாகும். இத்துடன் மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் உரைத்துக் கொடுக்கலாம்.

11. சுரம்குடி நீர்:- (கண்ணுசாமியம்)

1. "கொள்ளே ழிலைப்பாலை கூறுமா டாதோடை
   மெள்ளக் காய்ச்சுக்கட்டி வெட்பாலை-விள்ளக்
   கொடிசீந்தில் தேர்வசம்பு கொண்டமுத்தக் காசும்
   கடியபுடல் பேயாம் காண்.

2. காணுஞ் சரக்கெட்டும் காணவொவ் வோர்பலமாப்
   பூணுநீர் நாழிதனிற் போட்டுநீ-காணுமுறை
   யொக்கக் கியாழமிட்டே யுட்கொள்ள மூவேளை
   கக்குஞ்சுர மூலங் காண்."

ஏழிலைப்பாலை, ஆடாதோடை, காய்ச்சுக்கட்டி, வெட்பாலையரிசி, சீந்தில்கொடி, வசம்பு, கோரைக்கிழங்கு, பேய்ப்புடல் முதலிய எட்டுச் சரக்கினையும் பலம் ஒன்று (30 கிராம்) வீதம் எடுத்து பஞ்சு போல் நறுக்கி இரண்டு லிட்டர் தண்ணீரில் போட்டு பாதியளவாக வற்றக்காய்ச்சி வடித்து 2 முதல் 4 அவுன்சு வீதம், காலை, மதியம், இரவு தினம் மூன்று வேளையாக

4 அல்லது 5 நாள்கள் கொடுத்து வர வாத, பித்த கப, தொந்த சுரங்கள் யாவும் குணமாம். இதனையே மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டு வகைகளுக்கு அனுபானமாக உபயோகிக்கலாம்.

12. நாவறட்சிக் குடிநீர் (சுரம், முப்பிணி இவற்றில் நாவறட்சி ஏற்பட்டால் குடிநீர் - கண்ணுசாமியம்)

1. "சென்னா யுருவியுடன் சேர்வாழை பூநாகம்
நன்றாய்க் கரியாக்கி நாடுபல - மொன்றாய்ப்
படிநீரிற் கூட்டிப் பதமுறவே காய்ச்சில்
குடிநீர்வகை போலாங்கொள்"

2. "கொள்ளக் குடிநீரைக் கோதுபெறும் நாவறட்சி
விள்ளவிக்கல் தாகம் விளையாதே - மெள்ள
வடுத்துக் குடிக்கவரும் நாவின் முள்ளுந்
தொடுத்திரா தென்றேநீ சொல்"

நாயுருவிச்சாம்பல், வாழைச் சருகு சுட்ட சாம்பல், கரியாக வறுத்தெடுத்த பூநாகம் வகைக்குப் பலம் வீதம், இரண்டு லிட்டர் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி பாதியளவாகச் சுண்டவைத்து வடித்துச் சிறிது சிறிதாக (ஒரு அவுன்சு வீதம்) சீதளத்தினால் நாவறட்சி கண்டவர்களுக்குக் கொடுத்து வரத் தாகம், விக்கல், நாவறட்சி, நாவின் சுரசுரப்பு, நாகறுப்பு முதலியன குணமாம். இக்குடிநீரில் கட்டுகள், மாத்திரைகள் உரைத்தும் பற்பச் செந்தூரங்கள் கலந்தும் கொடுக்கலாம்.

13. சுரத்துடன் கூடிய சுரக்கட்டிக்கு பஞ்சமூலிக் குடிநீர்: (கண்ணுசாமியம்)

"பத்திநில வேம்போடு ரோகிணிபற் பாடகமும்
முத்தக்காசுச் சீந்தில் மொய்தழலே - நித்த நித்தங்
காற்பலமே தட்டிக் கதிக்கபடி நீரிலிட்டுக்
காற்படியாய்க் காய்சிடவே காண்."

2. "காணுங் குடிநீரைக் கட்டா யிருவேளை
தோணும்படி யருந்த தோடசுரம் - வானுலகில்
சத்தியம் விட்டகலும் சாத்தியம்பொய் போகாதே
பத்தியம் பாற்கஞ்சே பார்"

நிலவேம்பு, கடுகுரோகிணி, பற்பாடகம், கோரைக் கிழங்கு, சீந்தில்கொடி, இவ்வைந்து மூலிகைகளையும் வகைக்குக் கால் பலம் (7½கிராம்) வீதம் நறுக்கி நான்கு லிட்டர் தண்ணீரில் போட்டு நான்கிலொரு பாகமாக வற்றக் காய்ச்சி வடித்து வேளைக்கு 2 முதல் 4 அவுன்சு வரை காலை, மாலை இரு வேளையாக கால், அரைமண்டலம் சாப்பிட்டுவர எத்தகைய நாள்பட்ட சுரமாகயிருப்பினும் குணமாகும். சுரமிருக்குங் காலத்தில் பாற்கஞ்சி மட்டிலும் கொடுக்கவும். அன்னம் கூடாது. சுரமில்லாதபோது குடிநீர் சாப்பிட்டு, எளிதில் செரிக்க கூடிய ஆகாரங்களை உட்கொள்ளவும். இன்னும் சுரத்தின் வேகத்தால் ஈரல்கள் பெருத்து (இதுவே சுரக்கட்டி) அதனால் அடிக்கடி சுரம் வந்து கொண்டிருப்பின், இக்குடிநீருடன் 5 முதல் 7 துளி சங்கத் திராவகம் சிறிது தண்ணீர் கலந்து சேர்த்துக் காலை மாலை கொடுத்து வர சுரமும் சுரக்கட்டியும் குணமாகும். இக்குடிநீரில் கட்டுகள், மாத்திரைகள் உரைத்தும் பற்பச் செந்தூரங்கள் கலந்தும் கொடுக்கலாம்.

14. பித்த சுரக்குடி நீர்:- (கண்ணுசாமியம்)

1. "சுக்கோ டதிமதுரம் சோம்புநன் னாரிவில்வம்
புக்குமுள் சேர்நெருஞ்சி பூவிலுப்பை - பக்குவமாய்
ஆற்றுமணல் நெல்லி யருவிலா மேலோடும்
ஏற்றப் பொரியுடனே எண்."

2. "எண்ணும் விலாமிச்சம் ஏற்றகொடி முந்திரியும்
கண்ணே பலமரையாம் காணிடித்து உண்ணுங்
குடிநீரைப் பாண்டத்தில் கூட்டி யிரண்டு
படியா ரையாய்க் காய்ச்சிடவே பார்"

3. "பார்வடித்து நாள்மூன்று பற்றியிருவேளை
ஆர்த்தக் குடிநீ ரடுத்தருந்த - கூர்த்தசுரம்
கண்டுமதி மயங்கிக் காயுமனல் விட்டினிது
தெண்டனிட் டோடுமெனச் செப்பு"

சுக்கு, அதிமதுரம், சோம்பு, நன்னாரி, வில்வவேர், நெருஞ்சி முள், இலுப்பைப்பூ, ஆற்றுமணல், நெல்விவற்றல், விளாம்பழத்து ஓடு, நெற்பொரி, விலாமிச்சம் வேர், திராட்சைப்பழம் இவற்றை வகைக்குப் பலம் அரையாக (15 கிராம்) இடித்து நான்கு லிட்டர் தண்ணீரில் போட்டு நான்கிலொரு பாகமாக வற்றக் காய்ச்சி வடித்துக் காலை-மாலை மூன்று நாட்கள் வேளைக்கு 2 முதல் 4 அவுன்சு வரை சாப்பிட்டு வர எவ்வகைப் பித்த சுரமும் குணமாகும். இந்நோய்க்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் யாவுக்கும் இக்குடிநீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

15. சன்னி சுரக்குடி நீர் : (கண்ணுசாமியம்)

1. திப்பிலி முத்தக்காசு செங்கழுநீர் மூலஞ்சுக்
கொப்பில் சிறுதேக்குயர் கோஷ்டம் - அப்பீர்க்கம்
சீந்திற்றண்டானாச்சிறுகாஞ்சொறிப்பூவேம்
பேந்தாடாதோடைஎடு"

2. "எடுக்கவகைகாற்பலமே ஏற்க இடித்துப்
படியிரண்டு நீரில்பதிய - விட எரித்தே
காற்படியில் வற்றக்களிப்பாக மூன்றுபோ
தேற்றிடவேசந்நிசுரமேது"

திப்பிலி, முத்தக்காசு, செங்கழுநீர்க்கிழங்கு, சுக்கு, சிறுதேக்கு, கோஷ்டம், பேய்ப்பீர்க்கு, சீந்தில்தண்டு, சிறுகாஞ்சொறி, நிலவேம்பு, ஆடாதோடை வகைக்குக் காற் பலம் (7 ½ கிராம்) எடுத்து நறுக்கி நான்கு லிட்டர் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து வேளைக்கு 2 முதல் 4 அவுன்சு வீதம் தினம் காலை, மதியம், மாலை மூன்று வேளை உட்கொள்ள எவ்வகையான சன்னிசுரங்களும் குணமாம். மூன்று நாள்கள் கொடுக்கவும். இந்நோய்க்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டு வகைகளுக்கு இக்குடி நீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

16. சுரக்குடி நீர்:- (வேறு - சி. ரத்ன தீபம்)

நிலவேம்பு, கோரைக்கிழங்கு, கடுகுரோகணி, பற்பாடகம், சீந்திற்கொடி, வேப்பம்பட்டை வகைக்கு ஒரு தோலா வீதம் எடுத்து இடித்து ஒரு லிட்டர்

தண்ணீரில் போட்டு, 2 மணி நேரம் ஊறிய பின்பு நான்கிலொரு பாகமாக வற்றக்காய்ச்சி இதனை மூன்றுபங்காக்கி நான்கு மணிக்கொரு தடவை கொடுக்கக் குளிர் சுரம், விஷசுரம் மற்றெல்லா வகைச் சுரங்களும், 2அல்லது 3 தினங்களில் குணமாகும். சுரத்திற்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் இவற்றிற்கு அனுபானமாகவும் இக்குடிநீரை உபயோகிக்கலாம்.

17. சுரக்குடிநீர்:- (சி. ரத்ன தீபம்)

தூதுவளை ஈர்க்கு, பூனைக்காஞ்சொறிவேர், சீந்தில் கொடி, பற்பாடகம், நொச்சி ஈர்க்கு, பேராமுட்டிவேர், சிற்றாமுட்டிவேர், கடுக்காய்த் தோல் வகைக்குப் பலம் ¼ (7½ கிராம்) வீதம் எடுத்து ஒன்றிரண்டாயிடித்து இரண்டு லிட்டர் தண்ணீரில் போட்டு, 2 மணி நேரம் ஊறவைத்து, நான்கிலொரு பாகமாகக் காய்ச்சி, தினம் இரு வேளையாகப் பகுத்துச் சாப்பிடவும். மூன்று நாளில் எத்தகைய நாட்பட்ட சுரமும் போம்.

குறிப்பு:- சுரத்துடன் பேதியிருப்பின் கடுக்காய்த்தோலை நீக்கி விடவும். சுரத்திற்குரிய வேறுவகை மாத்திரை, பற்பச் செந்தூரங்கள், கட்டு முதலியவற்றிற்கு இக்குடிநீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

18. சுரக் குடிநீர்:- (சி.-ரத்ன தீபம்)

பூனைக்காஞ்சொறி வேர், வில்வ வேர், விலாமிச்ச வேர், நெருஞ்சி வேர், நன்னாரி வேர், அதிமதுரம், சோம்பு, நெற்பொரி, திராட்சை, இலுப்பைப்பூ, சுக்கு வராகனெடை வகைக்கு இரண்டு வீதம் எடுத்து ஒன்றிரண்டாய்த் தட்டி 2 லிட்டர் தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறியபிறகு நான்கிலொரு பாகமாக வற்றக் காய்ச்சி வடிகட்டி இதனை காலை-மாலை இரு வேளையாக மூன்று நாட்கள் பருக குளிர்சுரம், நாவறட்சி, பித்த சீதள மிகுதி முதலியவை குணமாகும்.

19. வாத, சுரக்குடி நீர்:- (சி.ரத்ன தீபம்)

கொட்டைக் கரந்தைப் பூ, கழற்சிப் பருப்பு, துளசி வேர், வகைக்கு ¼ பலம், சுக்கு வராகனெடை 4. இவைகளை நறுக்கி அரை லிட்டர் தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறவைத்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துச்

சாப்பிடவும். இங்ஙனம் தினம் இரு வேளை மூன்று நாட்கள் சாப்பிட்டுவர சுரம், தேகக்கடுப்பு, குடைச்சல், குளிர், கால்களில் வலி, கால் பிடிப்பு முதலியன நீங்கும்.

20. சுரக்குடி நீர் (சி.ரத்ன தீபம்)

சுக்கு, மிளகு, பிரப்பங்கிழங்கு, பறங்கிச்சக்கை, வாய்விடங்கம், கடுகுரோகணி வகைக்குத் தோலா - 1 வீதம் நறுக்கி ஒரு லிட்டர் தண்ணீரிலிட்டு 2 மணி நேரம் ஊறவைத்து எட்டிலொரு பாகமாக வற்றக் காய்ச்சி வடிகட்டி இரு வேளையாகப் பகிர்ந்து காலை-மாலை மூன்று நாட்கள் சாப்பிட்டுவர மேலே குறிப்பிட்ட உபத்திரவங்களோடு கூடிய சுரம் குணமாகும்.

21. பித்த சுரக் கியாழம்:- (சி.ரத்ன தீபம்)

பேய்ப்புடல், கிராம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்துமல்லி வகைக்குத் தோலா - 1 வீதம் எடுத்து நறுக்கி ஒருலிட்டர் தண்ணீரில் ஊறவைத்து முன்போல் குடிநீரிலிட்டு மூன்று நாள் காலை-மாலை கொடுத்துவரப் பித்தசுரம் போம்.

22. உஷ்ண சுரக்குடி நீர்:- (சி.ரத்ன தீபம்)

நன்னாரிவேர், பறங்கிச்சக்கை, சுக்கு, தாமரைப்பூ, சீரகம், சோம்பு வகைக்குத் தோலா - 1 வீதம் எடுத்து, இவற்றுள் கடைச்சரக்குகள் மூன்றையும் பொன்மேனியாக வறுத்துச் சேர்த்தும் மற்றவைகளை ஒன்றிரண்டாய்த் தட்டியும் ஒரு லிட்டர் தண்ணீரிலிட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து தினம் இதனை இருவேளையாக மூன்று முதல் ஏழு நாட்கள் சாப்பிட்டுவர உஷ்ணசுரம் குணமாகும்.

23. சர்வ சுரக்குடி நீர்:- (சி.ரத்ன தீபம்)

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், அதிமதுரம், வெட்பாலையரிசி, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், சந்தனத்தூள் உஸ்தக்கோஷ், பனப்ஷா (இவ்விரண்டும் யூனானி மருந்துகள்) சீமைசாமந்திப்பூ, சிற்றரத்தை, பேரரத்தை,

பூனைக்காஞ்சொறி வேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு வராகனெடை 1 இவற்றை நறுக்கி ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறிய பின்பு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி அதனை இருவேளையாகப் பகுத்து மூன்று நாட்கள் பருகத் தருணசுரம், குளிர்சுரம், முறைச் சுரம் யாவும் குணமாம்.

24. சுரக்குடி நீர்:- (மலபந்தமிருப்பின்- சி. ரத்ன தீபம்)

மேலே குறிப்பிட்ட சரக்குகளுடன் சிவதைவேர், வாய்விடங்கம், கடுகுரோகணி வகைக்கு ½ முதல் 1 வராகனெடை சேர்த்து முன்போல் குடிநீரிட்டு மலம் கழியும் வரைக்கும் இதனைக் காலை, மாலை கொடுத்துவர நன்மை பயக்கும். பின்னர் இச்சரக்குகளை நீக்கி முன் கூறிய தனிச்சுரக்குடி நீரை மட்டும் கொடுத்து வரவும். இது சீதள மிகுந்த சுரத்திற்குச் சிறந்தது.

25. சுரக்குடி நீர்:- (மலபந்தமிருப்பின் - சி. ரத்ன தீபம்)

மேலே 22ல் கூறிய சர்வ சுரக் குடிநீர்ச் சரக்குகளுடன் ரோஜா மொக்கு, நிலஆவாரை வகைக்கு ஒரு வராகனெடை அல்லது சற்று அதிகம் சேர்த்து முன்போல் குடிநீரிட்டு மலம் கழியும் வரைக்கும் காலை-மாலை கொடுக்க மிகவும் நல்லது. அதன் பிறகு இச்சரக்குகளை நீக்கித் தனி சுரக் குடிநீரையே கொடுத்து வரலாம். சுரம் நீங்கும். இது குளிர்சம்பந்தமில்லா சுரங்களுக்கே சிறந்தது.

26. கப சுரக்குடி நீர்:- (சி. ரத்ன தீபம்)

செம்மரத்துத்தூள், பற்படாகம், கோரைக்கிழங்கு, குருவிவேர், வெட்டிவேர், சுக்கு வகைக்கு ஒரு தோலா வீதம் நறுக்கி ஒரு லிட்டர் தண்ணீரிலிட்டு இரண்டுமணி நேரம் ஊறவைத்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி அதனைத் தினம் இருவேளைப் பகிர்ந்து சாப்பிடவும். மூன்று நாட்கள் இதுபோல் சாப்பிட்டுவர கபசுரம் தீரும். இந்நோய்க்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் முதலியவைக்கு இக்குடிநீரை அனுபானமாக உபயோகிக்கலாம்.

27. சுரக்குடிநீர்:- (கை கால் வீங்கி மலசலங் கட்டியிருப்பின் - சி . ரத்ன தீபம்)

பொன்மேனியாக வறுத்த கருஞ்சீரகம், மிளகு, கரிசலாங்கண்ணி வகைக்குப் பலம் ¼ (7 ½ கிராம்) எடுத்து ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்து அதில் சுக்கு, சிற்றரத்தை, கடுக்காய்த்தோல் வகைக்குப் பலம் ½ (15 கிராம்) நறுக்கிச் சேர்த்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி தினம் இருவேளையாகப் பகுத்து உட்கொள்ள மலங்கழியும். இல்லையேல், மறுமுறை காய்ச்சுங் குடிநீரில் ஒரு வராகனெடை இலவங்கப் பொடியும், இரண்டு சிட்டிகை பொரித்த வெண்காரமும் சேர்த்துக் கொடுக்கச் சிறுநீர் கழியும், வீக்கமும் வாடும்.

குறிப்பு:- பொரித்த வெண்காரத்திற்குப் பதிலாக வெண்காரச் சுண்ணம் ஒரு சிட்டிகை சேர்க்க மிக்க நலமாயிருக்கும். (Venkara chunnam process refer to our Siddha Research Pharmacopoeia.)

28. தொந்த சுரக்குடிநீர்:- (சி. ரத்ன தீபம்)

ஆடாதோடைவேர், நிலவேம்பு, சீந்தில்கொடி, பற்பாடகம், கண்டங்கத்திரிவேர், சுக்கு, பேய்ப்புடல், ஏலக்காய், முட்காவேளை வேர் வகைக்குப் பலம் ¼, திராட்சைப்பழம் பத்து இவற்றை இடித்து ஒரு லிட்டர் தண்ணீரிலிட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி அதனை இருவேளை உட்கொள்ளச் சுரம், இருமல், வீக்கம், விக்கல் முதலியவை குணமாகும், வீக்கம் அதிகமிருப்பினும், சுரம் நாட்பட்டதாக யிருப்பினும் இதனோடு கண்டுபாரங்கியையும் சேர்த்துக் கொள்ளவும். மலச்சிக் கலிருப்பின் நெற்பொரியைச் சேர்த்துக் கொள்ளவும்.

29. சுரக்குடி நீர்:- (சி . ரத்ன தீபம்)

நிலவேம்பு பலம் ½ , சிற்றரத்தை பலம், இவை இரண்டையும் இடித்து ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறவைத்து நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி அதனை ஆறு வேளையாகப் பங்கிட்டு நான்கு மணிக்கொரு தடவை கொடுத்துவர மூன்று நாளில் தருணசுரம், குளிர்ச்சுரம் முதலியவை நீங்கும். இக்குடிநீர் பாலகர் முதல் விருத்தர் - கருப்பிணிகளுக்கும் கொடுக்க உபயோகமானது.

சீமை நிலவேம்பு, அதிமதுரம், சந்தனத்தூள், கோரைக்கிழங்கு, ஆடாதோடை, சீந்தில்கொடி, விஷ்ணுகிரந்தி, உஷ்தக்கோஷ் (யூனானி மருந்து), சீமை சாமந்திப்பூ வகைக்குப் பலம் இவற்றை ஒன்றிரண்டாயிடித்து ஒரு லிட்டர் தண்ணீரில் போட்டு 2 மணி நேரம் ஊறிய பிறகு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சித் தினம் இரு வேளை, மூன்று நாள் கொள்ளச் சுரம் குணமாகும்.

31. சுரக்குடி நீர்:- (அதிக தாகமிருப்பின் சி. ரத்ன தீபம்)

கோரைக்கிழங்கு, அக்கிராகாரம், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், கிராம்பு, சித்திரமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த் தோல், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை 2 ½ (பலம் 1 ¼) மிளகைப் புதுச்சட்டியிலிட்டு வறுத்துச் சாம்பலாக்கி, இருவகை சீரகங்களைப் போட்டு; வெடிக்கவிட்டு இரண்டு லிட்டர் தண்ணீர் விட்டு, மற்ற சரக்குகளை ஒன்றிரண்டாய் நறுக்கிப் போட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டித் தினம் 3 வேளையாக மூன்று நாள் கொள்ள சுரம் - 64, தோடம் 7, தாகம் முதலியவை நீங்கும்.

32. குளிர் காய்ச்சலில் கண்ட நாவறட்சிக் குடிநீர்:-Part 2 (பிரம ரகசியம்)

வட்டத்திருப்பி, வசம்பு, நிலவேம்பு, நிலப்பூச்சி, மிளகு சம எடை வகைக்குப் பலம் கால் வீதம் சட்டியிலிட்டு சாம்பலாகக் கறுக்கி கருஞ்சீரகம், ஓமம் வகைக்குப் பலம் கால் பொரியவிட்டு, ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி இருபங்காக்கிக் காலை, மாலை கொடுக்கத் தீரும்.

33. வாத சுரக்குடி நீர்:- Part 2 - (பிரமரகசியம்)

வட்டத்திருப்பிவேர், மரமஞ்சள், பேராமுட்டிவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், வெள்ளைப் பூண்டு, விஷ்ணுகிரந்தி, முக்குரட்டைவேர், நொச்சியிலை, கஞ்சாங்கோரை, துளசி, நாரத்தம் வேர், நாரத்தையிலை, சிறு தேக்கு - இவை வகைக்குப் பலம் ஒன்று (30 கிராம்)

இடித்துத் தூணி நீரில் போட்டு (பக்காப்படி பத்து) - இரண்டு மணி நேரம் ஊறவைத்து நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துத் தக்க அளவில் தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்துவர வாத சுரம் குணமாம். இதனை வாத சுரத்திற்குரிய மற்ற மருந்துகளுக்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

34. வாத சுரக்குடி நீர்:- (Part 4 – (பிரம ரகசியம்)

பாவட்டை வேர், சிற்றாமுட்டி வேர், ஓமம், உத்தாமணி வேர், வகைக்குப் பலம் 1- பஞ்சுபோலிடித்து 2 லிட்டர் தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி 4 அவுன்சு வீதம் காலை, மாலை மூன்று முதல் ஐந்து நாட்கள் சிறிது தேனும் கலந்து சாப்பிட்டுவர வாத சுரம் குணமாம்.

35. பித்த சுரக்குடி நீர்:- (Part 4- பிரம ரகசியம்)

பேய்ப்புடல், கோஷ்டம், கொத்துமல்லி, சுக்கு, வில்வவேர், இவை வகைக்குப் பலம் 1, பற்பாடகம் பலம் 2 ½ இவைகளைப் பஞ்சுபோலிடித்து 3 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி 4 அவுன்சு வீதம் காலை, மாலை மூன்று முதல் 5 நாட்கள் கொடுத்துவர பித்த சுரம் குணமாம். சிறிது தேன் விட்டுக் கொடுக்கவும்.

36. கப சுரக்குடி நீர் (Part 4- பிரம ரகசியம்)

இஞ்சி 2 ½ பலம், பிரண்டை 1 பலம், கண்டங்கத்திரி வேர் ½ பலம், சிற்றரத்தை, சுக்கு, பூனைக்காலிவேர், பூலாவேர், பொன்முசுட்டை, பூண்டு வகைக்குப் பலம் ½, வில்வவேர் பலம் 2 இவ்வைகளைப் பஞ்சுபோலிடித்து மூன்று லிட்டர் தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி 4 அவுன்சு வீதம் சிறிது தேனும் கலந்து காலை - மாலை மூன்று, ஐந்து நாட்கள் கொடுத்துவர தாகம், வாந்தி, மயக்கம், சுரம் யாவும் குணமாம்.

37. சாதாரணமாக வாயுவினாலும், பித்தத்தினாலும் சுரம் கண்டால் அதற்குப் பரிகாரம் :- (ஆயுர்வேத மஞ்சரி)

1.சுக்கு, மிளகு, சிற்றரத்தை இம்மூன்றையும் நையத்தட்டி முறைப்படி குடிநீரிட்டு சிறிது வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்.

2.வெந்நீரைப் பொங்க விட்டு அதில் சிறிது மிளகுத்தூள் போட்டு 5 நிமிடம் மூடி வைத்திருந்து வடிகட்டி சிறிது வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம்.

3.இஞ்சி, துளசி, இரண்டையும் மெழுகு பதமாயரைத்து, கால் லிட்டர் தண்ணீரில் கலக்கி ஒரு மண்பாண்டத்தை அடுப்பேற்றிக் காய வைத்து அதில் விட்டுச் சுண்டக் காய்ச்சி, அதில் ½ பலம் தேன் விட்டுக் காலை - மாலை சாப்பிடலாம்.

குறிப்பு :

“தொல்லையாம் சுரத்தினாலும்,
சூழ்கண்ட வாய்வினாலும்,
அல்லையே செய்யுமாகில்
அன்னத்தைக் காட்டிடாதே”

என்கிற வைத்திய முறைப்படி லங்கணம் பரம ஔடதமாகும். வேண்டுமானால் பார்லி அரிசிக் கஞ்சி, கோதுமை ரவைக் கஞ்சி, அரிசிக் கஞ்சி (புனற்பாகம்) இவற்றை உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

மேல் நாட்டார் கூறும் - பிராங்கோ நிமோனியா, இன்புளுயென்ஸா மலேரியா முதலிய சுரங்களுக்குக் கபவாத சுரக்குடி நீர் சாப்பிட வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

4. கபவாத சுரக்குடி நீர் :- சீமை நிலவேம்பு, பற்பாடகம், சிறுதேக்கு, தேசாவரம், அதிமதுரம், அக்கிராகாரம், மரமஞ்சள், வெட்டிவேர், சிற்றரத்தை, பேய்ப்புடல், திராட்சை, தூதுவளை வேர், கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், சீமை சாமந்திப்பூ, இவை வகைக்குப் பலம் ½ (15 கிராம்) வீதம் நையத் தட்டி வைத்துக்கொள்ளவும். சூரியகாந்தி, விஷ்ணுகிரந்தி, நிலத்துளசி, கருந்துளசி, கற்பூரவல்லி, கஞ்சாங்கோரை, ஆடாதோடை இலை, மஞ்சள் கரிசலாங்கண்ணி, முசு முசுக்கை, சீந்தில் கொடி இவை வகைக்கு ஒரு பிடி எடுத்துச் சுத்தஞ் செய்து மர உரலில் இடித்துக் கொள்ளவும். ஏலரிசி, மயிலிறகு, கறுப்புப் பட்டு, சுத்தித்த பூநாகம் இவற்றைச் சாம்பலாக்கிக் கொள்ளவும், இவற்றையெல்லாம் ஒரு பெரிய மண் பாத்திரத்தில் போட்டு எட்டுப்படி (பட்டணம் படி) தண்ணீர் விட்டு, மேற்கூறிய சரக்குகள் எல்லாவற்றையும் போட்டு சிறு தீயாக அடுப்பெரித்து எட்டிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தினம் காலை, பகல், மாலை, மூன்று வேளையும் ஒரு அவுன்சு வீதம் சாப்பிட வேண்டும். சிறிது வெல்லம் கலந்து சாப்பிடலாம்.

இச்சுரத்திற்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டு வகைகளுக்கு இக்குடிநீரை அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

குறிப்பு:- குடிநீர் அடுப்பிலேயே இருத்தல் அவசியம். இதை அடைக்குடிநீர் என்பர். மலபந்தமிருந்தால் சிவதைவேர் அல்லது ரோஜா மொக்கு சேர்க்கவும்.

5.சீரகத்தை மண் சட்டியிலிட்டு வறுத்து ஆடாதோடையிலையைச் சிறுக அரிந்து அதில் போட்டு ஒரு லிட்டர் தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றக்காய்ச்சி, இதனைப் பகிர்ந்து காலை, மாலை இரு வேளை சாப்பிடலாம். வாயுவுடன் கூடிய பித்த சுரம் போம்.

6.வில்வயிலை, வேப்பங் கொழுந்து, துளசியிலை, 4 அல்லது 5 மிளகு இவற்றை அரைத்து உருண்டை செய்து குளிர் சுரம் காணும்போது ஒரு உருண்டையை உள்ளுக்குக் கொடுக்கவும். குளிர்சுரம் உடனே நிற்கும்.

எ38. சர்வ சுரக் குடிநீர்:-(வேறு - சித்த ஆராய்ச்சி நிலையம் அனுபவம் Dr. M.S. Velus)

விஷ்ணுகிரந்தி சமூலம் 5 அல்லது 6, கீழ்காய்நெல்லி சமூலம் 4 அல்லது 5, ஆடாதோடையிலை 7 அல்லது 8 சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சிற்றரத்தை, தாளிசம், கோட்டம், அதிமதுரம், அக்கிராகாரம், பறங்கிச் சக்கை, கோரைக்கிழங்கு. பற்பாடகம், சீந்தில்கொடி, நிலவேம்பு, பேய்ப்புடல் இவை வகைக்கு ½ தோலா, அங்கூர் திராட்சை பலம் ½ (15 கிராம் விதை, காம்பு நீக்கி) இவைகளை நையத்தட்டியும், பச்சிலைகளைக் குறுகஅரிந்து சேர்த்தும், தண்ணீர் 4 லிட்டர் சேர்த்து இரண்டு மணிநேரம் ஊறவைத்து நாலிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 முதல் 4 அவுன்சு வீதம் சிறிது பனங்கற்கண்டு அல்லது சீனாக்கற்கண்டு சேர்த்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்துவர சகல சுரங்களும் குணமாகும். வளி, அழல், ஐய சுரங்கள் தொந்தசுரங்கள், முப்பிணி சுரங்கள், மாறல்சுரம், விட சுரம், விடாச் சுரங்கள் யாவும் எளிதில் குணமாகும். கைகண்ட மருந்து அனுபவமானது. இதனை அந்தந்த சுரங்களுக்குக் கொடுக்கக்கூடிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் யாவற்றுக்கும் அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

Typhoid fever, Lobar Bronco- Pneumonia and influenza etc. are readily cured in a very short time or earlier than expected.

39. தடுமன் காய்ச்சல், சள்ளைக் கடுப்பு (உடம்பு வலி) தலைப் பாரம் தலைவலி இவற்றிற்கு குடிநீர்:- (அனுபவமுறை)-

கொத்துமல்லி பலம் ½ (15 கிராம்பு), சுக்கு, மிளகு, திப்பிலி, தேசாவரம், சிற்றரத்தை, தாளிசம், சாதிக் கோட்டம், அதிமதுரம், அக்கிராகாரம் இவை வகைக்கு ஒரு வீராகனிடை நறுக்கிச் சேர்த்து தண்ணீர் 4 லிட்டர் சேர்த்து இரண்டு மணி நேரம் ஊறவைத்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி 2 முதல் 4 அவுன்சு வீதம் தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர மேற்கூறிய நோய்கள் குணமாகும். சிறிது பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம்.

40. விடாச்சுரம், சன்னிபாதசுரம், இவற்றிற்குக் குடிநீர்:- அனுபவ முறை)

விஷ்ணுகிரந்தி சமூலம் 5 அல்லது 6, சிற்றரத்தை, தாளிசம், தேசாவரம், மிளகு, கோரைக்கிழங்கு, சாதிக்கோட்டம், பறங்கிச் சக்கை வகைக்கு ஒரு வராகனெடை வீதம் நறுக்கிச் சேர்த்து தண்ணீர் இரண்டு லிட்டர் சேர்த்து இரண்டு மணி நேரம் ஊறவைத்து நான்கிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடிகட்டி 2 முதல் 4 அவுன்சு சிறிது பனங்கற்கண்டும் சேர்த்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்க மேற்கூறிய சுரங்கள் குணமாகும்.

41. முப்பிணி சுரத்திற்குக் குடிநீர்:- (தேரையர் வயித்தியம் 1500. பக்கம்.135)

1. தேரன் வாக்குத்திசை நான்கும் பொய்யாது
கூறக் கியாழங் குறிக்குந் திரிதோடம்
ஆற மருந்து யறையிறேன் மாந்தர்க்கு
நாய பற்படந் தோன்றுஞ் சிறுதேக்கே.

2 தேக்குப் பத்திரி சிறந்த சீந்திலொடு
தாக்கு காஞ்சொறி தக்க மதுரமாம்
நோக்கும் நன்னாரி நுவலுந் தாளீசமாம்
பாக்குஞ் சரக்கு பகருமுத்தக் காசே.

3. பாக்கு சுக்கு பகர்ந்திடும் பேய்ப்புடல்
தாக்கு பத்திரி தனிநாகப் பட்டையாம்
போக்கு மரத்தை புகலுந் தேவதாரம்
நோக்கு மிளகு நுவலச் சரிகூட்டே!

4. கூட்டி யொன்றாய்க் குமுற யிடித்துமே
மாட்டியே சலமதிப்பாய்ப் படியிடு
நீட்டி யெட்டிலொன் றாகவே காய்ச்சிடு
பூட்டி மூவாறு வேளை கொடுத்திடே!

5. கொடுத்திடச் சுரங்கு முறப்பறந்திடும்
அடுத்த சேத்தும மறையும் வாதசுரம்
தொடித்த பித்தமுந் தொடர்ந்த சுரமறும்
விடுத்த பத்திய மேவும் புளிதள்ளே!

தலை முழுகத் தைலமும் கூறுகிறார்:-

6. தள்ளடாதிரி தோட முந்தானறும்
வில்ளடா சிரோ தயிலமுரைக்கிறேன்
கொள்ளடா மதுரங் கருஞ்சீரகம்
உள்ளடா கத்தூரி மஞ்சள் சேர்த்திடே

7. சேர்த்திடு இருவேலி தேவ தாரம்
ஆர்த்திடும் லவங்கம் லவங்கப் பட்டை
கோர்த்திடு மரக்கு மகிற்பட்டையாம்
தூர்த்து மறுகன்றோன்றச் சமன் தூக்கே.

8. தூக்கி யேபசும் பாலா லரைத்திடு
தாக்கு மெள்ளெண்ணெய் தனியே யிருநாழி
போக்கில் லாமற் புகழ்பதங் காய்ச்சிடு
வாக்கு தப்பாமல் மண்டல முழுகிடே.

9 மண்டலமுறை மதிப்பாய் முழுகிடில்
கண்டதே சுரங்கதறி யலறிடும்
அண்ட நோயு மகலப் பறந்திடும்
விண்டு தேரன் விரும்பி யுரைத்ததே

பற்பாடகம், சிறுதேக்கு, மாசிப் பத்திரி, சீந்தில்கொடி, சிறுகாஞ்சொறி, அதிமதுரம், நன்னாரி வேர், தாளிசம், முத்தக்காசு, சுக்கு, பேய்ப்புடல், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை சிற்றரத்தை, தேவதாரம், மிளகு இவை வகைக்குச் சரி எடை (¼ பலம்) இவற்றை ஒன்றாய்ச் சேர்த்து இடித்து மண் பாண்டத்திலிட்டு, 2 லிட்டர் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி காலை, மாலை 4 அவுன்சு வீதம் மூன்று நாட்கள் கொடுக்க சகல சுரங்களும் போகும். குறிப்பாகத் தொந்த சுரங்களும், சன்னி பாதசுரமும் குணமாகும் என்கிறார். சிறிது பனைவெல்லம் அல்லது பனங்கற்கண்டு கலந்து கொடுக்கலாம். இச்சுரங்களுக்குரிய மாத்திரை, பற்பச் செந்தூரம், கட்டுகள் கொடுப்பதற்கு இக் குடிநீரை அனுபானமாக உபயோகிக்கலாம். திரிதோடசுரம் பூரண குணமாகும். சந்தேகமேயில்லை.

தொந்தசுரங்கள், முப்பிணிசுரம் குணமாகிய பிறகு நோயாளிக்கு தலை முழுகத் தைலமும் கூறுகிறார்-

அதிமதுரம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், இருவேலி, தேவதாரம், இலவங்கம், இலவங்கப்பட்டை, கொம்பரக்கு, அகிற்பட்டை, அருகன்வேர், இவை சமனெடை (வகைக்கு பலம் ½)எடுத்து இடித்து பசுவின் பால் விட்டரைத்து நல்லெண்ணெய் நான்கு லிட்டரில் போட்டு மெழுகு பதமாய்க்காய்ச்சி ஒரு மண்டலம் தலைக்குத் தேய்த்து வெந்நீரில் முழுகிவர சகல சுரங்களும் உடலை விட்டொழியும், உடற் காங்கை தணியும். சுரம் மீண்டும் வராது. தேகப் பிணிகள் யாவும் போம் என்கிறார்.

42. அத்திக்கள்ளு குளிர் சுரத்தைப் போக்கும்:-

அத்தி மரத்தின் வேரில் சிறிது வெட்டி ஒரு கலயம் வைக்க நீர் சொட்டும். இதுவே அத்தி மரத்துக் கள் எனப்படும். இத்துடன் கற்கண்டும் பேயன் வாழைப்பழமும் சேர்த்துப் பிசைந்து வைத்துக் கொண்டு மறுநாள் பிழிந்த சாற்றைக் கொடுத்துவரக் குளிர்சுரம் போம்.

43.மூக்குநீர் பாய்தல் (சலதோடம்) தலைப்பாரம் சுரம், இவற்றில் சண்டமாருதக் குடிநீர்:- (பக்கம் 154 தே. வயி. 1500)

“தாங்காத தாமரையின் கிழங்குச் சாறு
சம்மட்டி மதுரமுடன் ஓமங்காயம்

புங்கமில்லா நன்னாரி வேரு மிந்து
பகரிலுப்பைப் பூவுடனே சமன தாக
சிங்கார மானதொன் றிருக ழஞ்சு
சேரவே காய்ச்சிநீ யெட்டொன் றாக்கி
பங்கமில்லாத் திப்பிலிமேற் பொடியைத் தாக்கி
பாவனையாய்க் கொள்ளசுரம் பாழ தாமே."

இதுவுமே-வேறு:

பாழாச் சுரமும் பாழுடலை
பகருவெளி விட்டே தற்கு
நீழாய்க் கிராம்பு மதுரமுடன்
நெருங்குங் கோட்டம் பேய்ப்புடலை
தாழாய்ச் சுக்கு சிற்றரத்தை
சாற்றுந் தேவ தாரமுடன்
மீழாய்க் கியாழும் விரும்பியிடில்
மீழாச் சுரமுந் தான் போமே.

2. "போமே சுரமுந் திரிதோடம்
பொல்லாச் சன்னி பதின்மூன்றும்
ஆமே பித்தம் நாற்பதுவும்
அறையும் வாத மெண்பதுவும்
வாமே சேத்துமந் தொண்ணூறும்
வரையுஞ் சாத்திய பிணியாகும்
போமே முனிவர் சித்தர்களும்
புகன்றார் புகன்றார் புகன்றாரே."

தாமரைக் கிழங்கு, சம்மட்டிக் கிழங்கு, அதிமதுரம், ஓமம், பெருங்காயம், நன்னாரி வேர், இண்டு, இலுப்பைப்பூ இவை வகைக்கு இருகழஞ்சு வீதம் முறைப்படி நீர் இருநாழி, சேர்த்துக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் சிறிது திப்பிலிப் பொடியும் கலந்து காலை, மாலை கொடுக்க எல்லா வகைச் சுரங்களும் போம் என்றார்.

கிராம்பு, அதிமதுரம், கோட்டம், பேய்ப்புடல், சுக்கு, சிற்றரத்தை, தேவதாரம் இவை முன்போல் குடிநீரிட்டுச் காலை மாலை கொடுக்க விடாச்சுரம், தோடசுரம், சன்னி பதிமூன்றும் போம். பித்தம் 40, வாதம் 80 சேத்துமம் 96 இவையாவும் தீரும் என்பர்..

44. முகர்ந்து பார்க்கவும் தலையில் தேய்க்கவும் சூரணம்:-

ஓமம் பலம் ¼ , மிளகு பலம் ¼, திப்பிலி பலம் 1/16 ,சிற்றரத்தை பலம் 1/8 இவைகளைத் தூள் செய்து வத்திரகாயம் செய்து வைத்துக் கொண்டு ஒரு துணியில் முடித்து நாசியில் முகர்ந்து பார்க்கவும். தலையில் தேய்க்கவும் உபயோகிக்கலாம். (இத்துடன் சாம்பிராணிப் பதங்கம், மென்தால்(Menthol crystal) நாட்டுகூடன் வகைக்கு வராகனெடை ½ சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டும் உபயோகிக்கலாம். மேலே குறிப்பிட்ட நோய்கள் போம்.

45. அறுபத்துநான்கு சுரங்களுக்கும் பொதுவான குடிநீர்:-

அவுரி வேர், துளசி வேர், திருநீற்றுப் பச்சைவேர், கண்டங்கத்திரி மூலம், விஷ்ணுகிரந்தி சமூலம், சிற்றரத்தை, மிளகு இவற்றை நிதானமாக எடுத்து முறைப்படி குடிநீரிட்டு தினம் 2 அல்லது 3 வேளை 2 அவுன்சு முதல் 4 அவுன்சு அளவில் கொடுத்து வரக் குணமாம். சுரத்திற்குரிய மாத்திரை, பற்பச்செந்தூரம், கட்டுகள் இவற்றிற்கு அனுபானமாகவும் உப யோகிக்கலாம்.

46. சன்னி சுரம், சப்த தோடம் இவற்றில் கண்டாவுழ்தம் கூறுகிறார்.

(ஏட்டுப்பிரதி- அனுபவமானது)

1. "போமப்பா கண்டாவுழ்தம் சொல்லக் கேளு
புதுமையாந் தங்கமொடு வெள்ளி முத்து
நாமப்பா மதுரமொடு கிராம்பு திப்பிலி
நலமான பவளமொடு ருத்தி ராட்சம்
தாமப்பா கோட்டமொடு அக்கிரா காரம்
தளமாற காமப்பூ கூவிளத்தின் மூலம்
ஆமப்பா கலைக்கோடு செந்தூ ரந்தான்
அப்பனே ஆடாதோடை மூலந் தானே."

2. தானென்ற முலைப்பாலா லரைத்துக் கொண்டு
தப்பாமல் தேன்குத்தி நாவில் போட

நாவென்ற தோடமொடு சன்னி எல்லாம்
நாடாது நாவழுத்தல் நாவ றட்சி
தேனென்ற ஸ்திரிசங்க தோடம் வாந்தி
திறமான விக்கல்முதல் தீரும் தீரும்
வானென்ற வாதமெல்லாம் வாங்கிப் போகும்
வளமான நாக்கின்முள்ளும் வாங்குந் தானே.

தங்கம், வெள்ளி, முத்து, மதுரம், இலவங்கம், திப்பிலி, பவளம், உருத்திராட்சம், கோட்டம், அக்கிராகாரம், காமப்பூ, வில்வவேர், இரச செந்தூரம், ஆடாதோடைவேர் (இம்மட்டும் இச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது) மற்றும் இஞ்சி, யானைத்தந்தம், வங்கம், நாகம், அரத்தை, காண்டா மிருகக்கொம்பு இவற்றையும் சமஎடையாகச் சேர்த்து முலைப்பாலி லுரைத்துத் தேன் கலந்து வைத்துக் கொண்டு நாவில் தடவி வரச் சன்னியாலேற்படும் தோடங்கள்யாவும் போம். சன்னி சுரம், சப்த தோடம் குணமாகும். நாமுள், நாவறட்சி, நாவழுவழுத்தல், சுகசன்னி, வாந்தி, விக்கல், வாத நோய் யாவும் குணமாம்.

குறிப்பு:- இம்முறையில் கூறப்பட்டுள்ள தங்கம், வெள்ளி, முத்து பவளம், இரசசெந்தூரம், யானைத்தந்தம், வங்கம், நாகம், காண்டாமிருகக் கொம்பு இவற்றைப் பற்பமாக்கிச் சேர்த்தல் நலம். இரச செந்தூரம் கடையில் வாங்குவது உதவாது. சுவர்ணவாலை இரசச் செந்தூரம் தயாரித்துச் சேர்த்தல் நலம், மற்ற சரக்குகளை அந்தந்தப்படியே உரைக்கலாம். இது என் சொந்த அனுபவம்.

சுரத்தில் கொடுக்கக்கூடிய ஆகாரம்:-

1. சுக்கு, பாசிப்பயறு. நெற்பொரி இவை சேர்த்துக் குடி நீராக்கிச் சுரம் கண்டது முதல் மூன்று நாட்கள் கொடுத்துவர தொந்த சுரம் முதல் எல்லாச் சுரங்களும் குணமாம்.

2. அரிசியை வறுத்துத் தண்ணீர் சேர்த்து சுக்கு ஒரு துண்டு தட்டி முடிச்சுக்கட்டிப் போட்டுக் கஞ்சி காய்ச்சி ஏழு நாட்கள் கொடுத்துவர வளிச்சுரம், முப்பிணி சுரம் போம்.

3. புனற்பாகக் கஞ்சியின் தெளிவை, சுரத்தின் ஆரம்ப காலத்தில் கொடுக்கலாம்.

4. பார்லியரிசி, சவ்வரிசி, கோதுமை ரவை இவற்றைக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கலாம்.

செய்மருந்துகள்:-(Prepared Medicines for internal use)

வெளிமருந்துகளாலும், பட்டினியாலும், குடிநீர்களாலும் சுரம் குணமடையாவிடில் அடியிற்கண்ட பெருமருந்துகளாகிய மாத்திரை, பற்பம், செந்தூரம், சுண்ணம், கட்டுகள் முதலியவற்றைத் தக்க அனுபானங்களுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

கழிச்சலுண்டாக்க முன் கூறியபடி:

1. சஞ்சீவி மாத்திரை 1 முதல் 2 (for children according to the age) சிறிது வெந்நீரிலுரைத்துக் கொடுக்கலாம்.

2. அட்ட பைரவம் 1 முதல் 2 மாத்திரை.

3. வச்சிரகண்டி மாத்திரை(or Night Pills) 2 மாத்திரை.

4. சுகவிரேசனக் குளிகை 2 மாத்திரை

5. சீவரத்தினக்குளிகை 2 மாத்திரை

6. காண்டீபன் மாத்திரை- 2 மாத்திரை.

இவற்றில் ஏதேனுமொன்றை வெந்நீருடன் ஒரே வேளை விழுங்கச் செய்ய 2 அல்லது 3 தடவை பேதியாகும். இவற்றின் செய்முறையை எங்களது சித்த ஆராய்ச்சி மருந்து செய்முறைப் புத்தகத்தில் (S.R. Pharma) கண்டபடி செய்து வைத்துக்கொள்ளவும்.

7. மேகனாதக் குளிகை 1 முதல் 2 மாத்திரை

8. தாழம்பூ மாத்திரை 1 முதல் 2

9. கோடாசூரிக் குளிகை 1 முதல் 2 மாத்திரை,

வீதமும் ஏதேனும் ஒருவகை மாத்திரையை ஒரே வேளை கொடுக்கக் கழிச்சலாகும். இவையாவும் வளி சுரம், ஐய சுரம் இவற்றில் தேவைக்குத் தகுந்தவாறு நோயாளியின் பலாபலனறிந்து கொடுக்க வேண்டும். அழல் சுரத்தில் கழிச்சலுக்கு மருந்து கொடுக்கத் தேவையிராது.

குறிப்பு:- கழிச்சல் மருந்து வேலை செய்யாது போனாலும், வாய் மூலம் மருந்து கொடுக்க இயலாது போனாலும் வஸ்தி செய்தல் நலம்.

பெரு மருந்துகளாவன:

1. **ஆனந்த பைரவ மாத்திரை:-** ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தக்க அனுபானங்களில் கொடுக்க சீதாங்க சன்னி போம்.

2. **இரச பூபதி:-** ஒரு மாத்திரை வீதம் காலை-மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சன்னி, குளிர் சுரம் போம்.

3. **இராம பாணம்:-** ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தாய்ப் பாலிலும், சர்க்கரையிலும் அனுபானித்துக் கொடுக்கப் பலான சுரங்கள் போம். பாற்கஞ்சி கொடுக்க வேண்டும்.

4. **இராஜராஜேஸ்வரம்:-** ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை திரிகடுகுக் குடிநீரில் கொடுக்க 13 வகை சன்னிகளும் போம்.

5. **எமதண்டக் குளிகை:-** ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தேன் அல்லது வேறு குடிநீர்களில் அனுபானித்துக் கொடுக்கக் கோழையுடன் கூடிய கபசுரம், கபவாதசுரம், சன்னி பாதசுரம், 13 சன்னிகள் இவை குணமாம். சிறப்பாக (Broncho and Lobar Penumonia) அதாவது கபவாத சுரத்தில் வழங்குவதுண்டு.

இதற்கனுபானம்:- ஆடாதோடையிலை, கண்டங்கத்திரி, துளசி, தூதுவளை, கஞ்சாங்கோரை, முசுமுசுக்கை இவற்றைச்சமம் எடுத்து குறுக அரிந்து முறைப்படி பிட்டவியல் செய்து பிழிந்து சுரசமெடுத்து அதில் சிறிது தேனும் பனங்கற்கண்டும் கலந்து மாத்திரை உரைத்து 3 முதல் 5 நாட்கள் காலை, மாலை கொடுக்க குணமாகும்.

6. **கணேசகுளிகை:-** ஒரு மாத்திரையை காலை, மாலை திப்பிலிச் சூரணத்துடன் தேன் கூட்டி அதில் அனுபானித்துக் கொடுக்க சகல சுரங்களும் போம். பாற்சோறு, பாற்கஞ்சி உணவு ஆகும்.

குறிப்பு: இம்மாத்திரை வெறி நாய்க் கடிக்கு வழங்கப்படுகிறது.

7. கரவால வயிரவம்:- ஒரு மாத்திரையை காலை, மாலை இளநீரில் அனுபானித்துக் கொடுக்க அபினியாச சன்னி தீரும்.

8. கலியாண வயிரவம்:- இதனைக்காலை, மாலை இளநீர், சர்க்கரை, பால் சேர்த்துக் கொடுக்கக் கர்ணிக சன்னி தீரும்.

9. கத்தூரி மாத்திரை(S.V. Thirattu and S.R. Pharma) இதனைக்காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சன்னி வாததோடம், பித்தம், கபம், வாயு தீரும், இருவகைக் கத்தூரி மாத்திரை கூறியுள்ளோம். குறிப்பாகக் கபசுரம், கபவாத சுரம், சன்னி பாதசுரம், குழந்தைகளின் சளிக்கட்டு சுரம், நீர்க்கணை இவற்றில் நல்ல பலனையளிக்கும். குழந்தைகளுக்குத் தாய்ப்பாலில் உரைத்துக் கொடுக்கலாம். (very useful in heart and Lung diseases with or without fever)

10. காருண்ய வயிரவம்:- இதனைத் தக்க அனுபானத்தில் கலந்து காலை, மாலை கொடுக்க பிரலாப சன்னி தீரும்.

11. கோரோசனை மாத்திரை:- (S.V. Thirattu and S.R. Pharma) இதனை முலைப்பாலில் அனுபானித்து காலை, மாலை கொடுக்க சிறுவர்கட்குண்டாகும் சுரம், நீர்க்கோவை, சன்னி, வாயு மயக்கம், இவை தீரும். அண்டத் தைலத்துடன் கொடுக்க சுரத்துடன் இசிவு வாதமும் (வலிப்பு) மாந்தக்குடிநீருடன் கொடுக்க சுரத்துடன் கூடிய அள்ளு மாந்தம், முக்கு மாந்தமும் தீரும். 3 முதல் 5 நாட்கள் கொடுக்கவும். பெரியவர்களுக்கும் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுக்க மேற்கண்ட நோய்களும், மண்டைச்சூலையும் தீரும். இரண்டு நூல்களிலுள்ள இரண்டு முறைகளையும் கவனிக்கவும்.

12. கோரோசன கத்தூரி மாத்திரை (S.R. Pharma) இதனை 1 முதல் 2 மாத்திரைகளைத் தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுத்துவர மேற்கூறிய எல்லா நோய்களும், சன்னிபாத சுரமும் குணமாகும். (very useful in heart and Lung diseases) எங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் அனுபவமாகக் கையாண்ட முறை.

13. சங்கர வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை தேனில் கொடுக்க உருத்தாக சன்னி தீரும்.

14. சன்னிபாத வயிரவம்:- இதில் ஒன்று திப்பிலிக் குடிநீரில் காலை மாலை கொடுக்க இரக்திட்டிவி சன்னி தீரும்.

15. சாந்த சந்திரோதயம்:- இதில் ஒன்று முதல் இரண்டு மாத்திரைகளைத் தேனில் காலை, மாலை கொடுக்க பித்தசுரம் போம்.

16. சாம்பிராணிப் பூக்குளிகை :- இதில் ஒன்று, காலை, மாலை மூன்று நாள் தேனில் கொடுக்க சூதக சுரம் தீரும். வெற்றிலையில் மென்று தின்ன சுக சன்னி தீரும்.)

சூதக சுரம் என்பது மகப்பேற்றிற்குப்பின் உண்டாகும் சுரம் Puerperal sepsis எனப்படும். Fever occuring just after child - birth or abortion or miscarring.

17. சித்த வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை, தேன், திப்பிலிப்பொடி, கூட்டியதில் கொடுக்க சிம்மகசன்னி தீரும்.

18. சுவச்சந்த வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை, இஞ்சிச் சாற்றில் கொடுக்க கண்ட குப்ச சன்னி போம். தயிர்ச் சோறு, தண்ணீர் உண்ணலாம்.

19. தாழம்பூ- மாத்திரை :-இதில் ஒன்று தினம் காலையில் மட்டும் மூன்று நாட்கள் நோயின் நிலைமை, நோயாளியின் நிலைமையறிந்து கொடுக்க நெரிக்கட்டு சுரம், அது சம்மந்தமான தசை அண்ட வீக்கமும் குணமாகும். கழிச்சலுண்டாக்கும்.

20. நவலோகாக்கினிகுமாரன்:- இதில் ஒரு மாத்திரையைக் காலை, மாலை தக்க அனுபானத்திலிட சுரங்கள், சன்னி, நடுக்கல், குளிர், நாவறட்சி யாவும் தீரும்.

21. பச்சைக் கற்பூர மாத்திரை:-இதில் ஒன்று காலை, மாலை இஞ்சிச்சாறு, தேன் இவற்றில் கொடுக்க வெப்பு சுரம், தாபசுரம், வாதம் 80, பித்தம் 40, சேத்துமம் 96-ம் தீரும்.

22. பாலசஞ்சீவி மாத்திரை :- (S.V. Thirattu and S.R. Pharma) இதில் ஒன்று முதல் இரண்டு மாத்திரை வீதம் தக்க அனுபானங்களில் காலை, மாலை, கொடுக்க பாலர்களுக்குண்டாம், மாந்தம், மாந்தசுரம், கணைச்சுரம், சளிக்கட்டு சுரம், சுவாசசுரம் முதலியன தீரும். இருநூல்களிலும் கூறியுள்ள முறைகளையும் அனுபானங்களையும் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

23. பாடாண மாத்திரை :- (S.V. Thirattu and S.R. Pharma) இதில் ஒன்று காலை, மாலை தண்ணீரில் கொடுக்க சீதபித்த சுரம் போம், அருகம் புல் சாற்றில் கொடுக்க பழைய சுரங்கள், சன்னிகள், வலி நோய்கள்தீரும். (This is useful in Malaria மாறல் சுரம்).

24. பிரதாபாக்னி குமாரன்:- இதில் ஒன்று காலை, மாலை, மூன்று நாட்கள் இஞ்சிச் சாற்றில் கொடுக்க எல்லாவகைச் சன்னியும் சுரமும் தீரும்.

25. பிரமானந்த வயிரவம்:- இதில் ஒன்று, காலை, மாலை, தேன் இஞ்சிச் சாற்றுடன் கொடுக்க சன்னி சுரங்கள் போம்.

26. பூதவயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை, தேனில் கொடுக்க தாந்திரிகசன்னி தீரும்.

27. மதன வயிரவம்:- இதில் ஒன்று திரிகடுகுக் குடிநீரில் காலை, மாலை கொடுக்கச் சித்தப்பிரமை சன்னி தீரும்.

28. மனோகர வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை, தேனில் கொடுக்க சந்திக சன்னி தீரும்.

29. வசந்தகுசுமாகரம்:- இதில் 1 முதல் 2 மாத்திரை தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க சுரங்கள், கபகாசம், தாகம், சிறுநீர் நோய், தும்மல், ஏப்பமிவை தீரும். இஞ்சிச்சுரசம், தேன், கற்கண்டு சேர்த்ததில் அனுபானித்துக் கொடுக்க நலம்.

30. விதாரண வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை திரிகடுகுக் குடிநீரில் கொடுக்க புக்ன நேத்திர சன்னி தீரும்.

31. விஜய வயிரவம்:- இதில் ஒன்று காலை, மாலை காய்ச்சிய இளநீரில் கொடுக்க அந்தகசன்னி தீரும்.

32. விட்டுணுசக்கர மாத்திரை:- இதில் ஒன்று காலை, மாலை திரிகடுகுத்தூள், இஞ்சி நீர், தேன் இவற்றில் கொடுக்க 13 சன்னி, பக்கவாயு, விக்கல், சோபை, ஏப்பம், மூர்ச்சை, வாயு இவை தீரும்.

33. இரதசிந்தாமணி மாத்திரை:- இதில் ஒன்று தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க சுரம், சன்னி தோடம் 21-ம் தீரும்.

34. அர்த்தநாரீஸ்வரம்:- இதில் ஒன்று நொச்சிச் சாற்றில் கொடுக்கச் சுரங்கள் தீரும். இத்துடன் இதனை மேற்படி சாற்றில் உரைத்து நசியமிட உடலின் ஒரு பக்க மேற்படுகிற காய்ச்சலை நீக்கும். இதற்குப் பத்தியம் ஆட்டுப்பால் சேர்ந்த கஞ்சி.

35. நவக்கிரக பூபதி:- இதில் ஒன்று காலை, மாலை இஞ்சிச்சாற்றில் கொடுக்க தீராத காய்ச்சல், தோடம், முறைக்காய்ச்சல், சன்னி, விடாவியர்வை இவை தீரும். அன்றியும் நீராம்பல், வல்லை, நாட்பட்ட வயிற்று நோயும் தீரும்.

36. பிரதாபாக்கினி பூபதி:- இதில் ஒன்று காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க-9 வகை சுரம், வாதம் 80, சுவாசம், காமாலை, பாண்டு, சயநோய் இவை தீரும்.

37. பூமணி மாத்திரை:- இதில் ஒன்று தேன் இஞ்சிச் சாற்றுடன் காலையில் மட்டும் கொடுக்க மலம் கழியும், சுரம், சன்னி, விடாச்சுரம் இவை தீரும்.

38. திரிதோட மாத்திரை:- இதில் ஒன்று காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சன்னி, குளிர்சுரம், கபசுரம் இவை தீரும்.

39. நீர்க்கோவை மாத்திரை:- இதில் ஒன்றை முலைப்பாலில் உரைத்து நெற்றியில் பற்றிட்டு சாம்பிராணிப் புகை காட்டி உலர்த்த தலைவலி, சலதோடமிவை தீரும். (for external application only)

40. கந்தி மாத்திரை:- இதில் ஒன்று காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க பழஞ்சுரங்கள் போம்.

41. மகாவசந்தகுசுமாகரம்:- இதில் ஒன்று காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சுரம், சன்னி மற்றும் பல கொடிய நோய்களும் தீரும்.

42. வாலை சிந்தாமணி:- இதில் ஒன்று தேன் அல்லது இஞ்சிச்சாற்றில் காலை, மாலை கொடுக்க சுரம் தீரும்.

பற்பங்கள்.

1. அயபற்பம்:-

நன்றாய் முடிவுபெற்ற அயபற்பம் அரிசி எடை, காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க நளிர்சுரம், அத்திசுரம், நாட்பட்ட பழைய சுரங்கள் தீரும். பலவீனம் விரைவில் நீங்கும். தேன், சர்க்கரை, திப்பிலி, மிளகு இவை அனுபானத்திற்கேற்றவையாகும்.

பத்தியம்:- நோய் தணிந்து ஒரு வாரம் வரையில் பெண் போகம், எள், கடுகு, கொள், புளிப்பு இவை ஆகாது.

2. கற்பூர சிலாசத்து பற்பம்:-

(கோவையிலை அரைத்த விழுதைக் கவசித்துப் புடமிட்டெடுத்த பற்பம்-(Vide S.R. Pharma) 1 முதல் 2 சிட்டிகையளவு பற்பம் தக்க அனுபானத்தில் காலை, மாலை கொள்ள சுரங்கள் தீரும்.

3. முத்து பற்பம்:-

இதனை, அரிசி எடை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க காய்ச்சல், விடாக்காய்ச்சல் போம், கபசுரம், சன்னி சுரமும் தீரும்.

4. சாதிலிங்க பற்பம்:-

இதில் கடுகளவு காலை, மாலை மூன்று நாள் பனைவெல்லத்தில் பொதிந்து விழுங்க பெருங் காய்ச்சல், காய்ச்சலுடன் கூடிய நடுக்கல், தோட சன்னி, சன்னி தோடம் இவை தீரும். இதனை அநேக கொடிய நோய்களுக்கு உபயோகிக்க நல்ல பயன் தரும். நோயின் தன்மை நோயாளியின் நிலைமையறிந்து இம்மருந்தைக் கொடுக்க வேண்டும். பால், கஞ்சி உணவு கொள்ளல் வேண்டும்.(This is more or less mercurial universal remedy is very big end serious disease) புற்று நோய்க்கு மிகவும் சிறந்தது.

5. சண்டரச பற்பம்:

இதில் ¼ முதல் ½ அரிசி எடை தக்க அனுபானத்தில் மூன்று முதல் ஐந்து நாட்கள் நோயின் வன்மை, நோயாளியின் நிலைமையறிந்து கொடுக்க சன்னிபாத சுரங்கள் தீரும். அன்றியும் மேகம், மேகவிரணம், குன்மம், சூலை, குட்டம், கபநோய்கள், வாதரோகங்கள் மற்றும் பல பெரிய நோய்களுக்கும் கொடுக்கலாம். கடும் பத்தியம் வைக்கவும். பால் கஞ்சி கொடுக்கலாம். (This is one of the mercurial remedies for almost all serious and very big disease) புற்று நோய்க்கு மிகவும் சிறந்தது

6. நவநீத பற்பம்:-

இதில் ஒன்று முதல் எட்டு கடுகளவு காலை; மாலை குளிர்ந்த நீரில் கொடுக்க வாத சுரமும், பித்த சுரத்திற்கு கள்ளிலும், சேத்தும சுரத்திற்கு சீந்திலிலைச் சாற்றிலும் அனுபானித்துக் கொடுக்கத் தீரும்.(S.V. Thirattu)

7. நவநீத பற்பம்:-வேறு (S.R. Pharma)

இதில் ஒன்று முதல் இரண்டு சிட்டிகை காலை, மாலை தேனில் கொள்ள உஷ்ணத்தால், மருந்து வேகத்தாலேற்பட்ட சுரங்கள் தீரும்.

8. தாளக பற்பம்:-

இதில் ¼ முதல் ½ குன்றியளவு பனை வெல்லத்தில் காலை, மாலை

கொடுக்க பித்தசுரம் போம். அன்றியும் பித்தகயம், பித்தகாசம், மந்தாரகாசம், ஈளை, வலிநோய், மேக ரோகங்கள் முதலியன பத்து நாள் மருந்து கொள்ள தீரும். உப்பில்லாப் பத்தியம் வைக்கவும்.

9. சங்கு பற்பம்:-

இதில் ½ முதல் ஒரு குன்றியளவு காலை மாலை துளசிச் சாற்றில் கொடுக்க நெருப்புபோல் காய்கின்ற சுரம், சன்னி, கபமிகுதி இவை குணமாகும்.

10. சிருங்கி பற்பம் பவள, பற்பம், சிலாசத்து பற்பம்:- No.1 **கலவை** **(P.S.S Parpam S.R. Pharma)**

இதில் ஒன்று முதல் இரண்டு குன்றியளவு காலை, மாலை தேன், பால், சுரக்குடிநீர் இவற்றில் அனுபானித்துக் கொடுக்க பித்தசுரம், கபசுரம், ஈளை, கோழைக்கட்டு சுரம், விக்கல், சுவாசம் முதலியன தீரும். (This may be used in heart and lung diseases in combination with Kasthuri Chenduram, Muthuparpam Pavalam and Sringi Parpams with honey, ghee or butter.)

11. தங்கபற்பம்:-

இதில் ½ முதல் ஒரு அரிசி எடை பற்பம் காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க கப சுரம், சன்னி சுரம், காசம், சுவாசம் முதலியன தீரும்.

12. அன்னபேதிச் செந்தூரம்:- No.1

இதில் ½ முதல் ஒரு குன்றிமணியளவு காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சுரம் போம். சீதபேதி, பாண்டும் போம்.

13. இலிங்கச் செந்தூரம் No.1 S.V. Thirattu) இதில் அரிசி எடை காலை, மாலை தேனில் கொள்ள குளிர் சுரம் முதல் எல்லாச் சுரங்களும், வாத கபதோடங்களும், மேக நோய்களும் தீரும்.

14. இலிங்கச் செந்தூரம் (S.V. Thirattu):-No.2

இதனை முன்போல் காலை, மாலை கொடுக்க மேற்கூறிய நோய்களும் சுரம், சன்னிபாத நோய்களும் குணமாம்.

15. உலாந்தாலிங்கக் கட்டுச் செந்தூரம், சாதிலிங்கக் கட்டுக் செந்தூரம்(S.R. Pharma):-

இவ்விரண்டும் செய்முறை ஒன்றே. ஒவ்வொன்றும் தனித்தனியே உபயோகிக்க வேண்டியது. இதில் ஒன்று முதல் இரண்டு அரிசி எடை செந்தூரத்தைக் காலை, மாலை, தேன், இஞ்சிச் சாறு இவற்றுடன் கொடுக்க எல்லாவகைச் சுரங்களும், சன்னி பாத சுரங்களும் குணமாகும். அன்றியும், இத்துடன் (P.S.S. Parpam Kasthuri Karuppu or Kasthuri Chenduram and Thalisathi churnam S.R. Pharma - Preparation) சேர்த்துக் கொடுக்க எப்பேர்ப்பட்ட சுரங்களும் விரைவில் குணமாகும். எங்கள் ஆராய்ச்சி நிலையத்தில் கைகண்ட மருந்தாகும்.

16. கவுரி சிந்தாமணிச் செந்தூரம்:-

இதில் குன்றியளவு காலை, மாலை திரிகடுகுத்தூள், தேன் இவை கலந்து கொடுக்கத் தீராச் சுரங்கள்,. தலைவலி இவை தீரும்.

17. சண்ட மாருதச் செந்தூரம்:-

இதில் ½ முதல் ஒரு குன்றி எடை திரிகடுகுத்தூள், தேன் இவற்றில் கலந்தேனும் அல்லது தக்க அனுபானத்திலேனும், காலை, மாலை நோயின் வன்மை, நோயாளியின் நிலைமையறிந்து கொடுக்க முக்குற்றங்களா லுண்டாகும் சிறு பெரும் பிணிகள் தீரும். சகல சுரங்களும், சன்னிபாதங்களும் குணமாகும்.

குறிப்பு:- இச்செந்தூரம் முறை (S.V. Thirattu and S.R.Pharma):- இவ்விரண்டு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தயாரிக்கவும். நாங்கள் கையாண்டு அனுபவம் பெற்ற **"சண்ட மாருதம்"** பலவற்றை எங்கள் நூலில் காணலாம்.

18. தங்கச் செந்தூரம்:-

இதனைத் தங்கபற்பம் போலவே உபயோகித்து அதற்குரிய பலன்களைப் பெறலாம்.

19. பூரண சந்திரோதயம்:-

இதனை ½ முதல் ஒரு குன்றியளவு காலை, மாலை, கற்பூராதிச் சூரணத்தில் கலந்து வெற்றிலைச் சாற்றில் கொள்ளச் சுரம், கயநோய், பித்தகபம் முதலிய அனேக நோய்கள் தீரும்.

குறிப்பு :- இதன் செய்முறை (S.R. Pharma) நூலில் பார்க்கவும்.(S.V. Thirattu and

20. க்ஷய குலாந்தகச் செந்தூரம்:-

இதனைத் தக்க அளவில் திரிகடுகுத்தூள், தேன் இவற்றின் கொடுக்க கயம், காசம், சுவாசம், கப நோய்களிலுமேற்படும் சுரத்தைப் போக்கி நோய்களைக் குணமாக்கும். வெள்ளாட்டுப் பால்ஆகாரமாகக் கொடுப்பது நல்லது.

குறிப்பு:- இதன் செய்முறையை (S.R. Pharma) நூலில் பார்க்கவும்.
(S.V. Thirattu and (S.R. Pharma).

21. இதில் ½- 1 அரிசி எடை தேன், இஞ்சிச் சாறு, துளசிச்சாறு இவற்றில் அனுபானித்து காலை, மாலை கொடுக்க ஊழி நோய், வாத நோய், பாரிச வாதம் இவற்றிலுண்டாகும் சுரம், சன்னி இவற்றைப் போக்கி நோயையும் பரிகரிக்கும்.

22. வெள்ளிச் செந்தூரம்:-

இதில் ஒரு அரிசி எடை முதல் நெல் எடை வரை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சுரம், சன்னிபாதம், முதலிய அநேகம் நோய்கள் தீரும் என சித்த வைத்தியத் திரட்டு கூறுகிறது. அதில் கூறியுள்ள முறையைச் செய்து பார்த்தால் தான் தெரியும்.

23. கத்தூரிக் கறுப்பு (S.V. Thirattu)
கத்தூரிச் செந்தூரம் :- (S.R. Pharma)

இவ்விரண்டிலும் செய்முறையில் வித்தியாசம் உண்டு. அவரவர்கள்அனுபவித்து ஒவ்வொன்றின் சிறப்பு குணத்தைச் தெரிந்து கொள்ள வேண்டியது. இதில் ½ முதல் 1 குன்றி எடை காலை, மாலை, தேன், முலைப்பால், இஞ்சி நீர் இவற்றில் கலந்து கொடுக்க சளி, சுரம், இருமல், இரைப்பு, உடல் சில்லிடல், தகை, சன்னி இவை குணமாகும். (This is very useful in heart and lung diseases.)

24. தாளகக் கறுப்பு:-

இதன் செய்முறையை (S.V. Thirattu and S.R. Pharma) இரு நூல்களிலும் கண்டறிந்து செய்யவும், செய்முறை வித்தியாசம் நன்றாய் தெரியவரும். அதற்குத் தகுந்தவாறு மருந்தின் குணமும் தெரியும். இதில் ½ முதல் 1 குன்றி எடை காலை, மாலை தேனில் கொடுக்க காசம், சுவாசம் போம். அத்துடன் சுரமும் தீரும்.

25. கோரோசனத்துகள்:-

இதில் ½ முதல் 1 குன்றி எடை காலை, மாலை சளியுடன் கூடிய சுரத்திற்குத் தக்க அனுபானத்தில் கொடுக்கக் குணமாகும். மலமுங் கழியும்

26. சிவனாரமிர்தம்:-

இதனைத் தக்க அனுபானத்தில் ½ முதல் 1 குன்றி எடை காலை மாலை கொடுக்க முக்குற்றங்களால் ஏற்படும் சுரம், சன்னி தீரும்.

27. பட்டுக் கறுப்பு:-

இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தேனில் கொடுக்கப் பிரசவ அழுக்குச் சரியாக வெளிப்படாததாலேற்படும் சுரம், சன்னி இவற்றைக் குணமாக்கும்

28. இலிங்கப் பதங்கம், திருமூர்த்திப் பதங்கம், இரசபற்பம் இவை தனித் தனியே ஒரே குணத்தையுடையவை. ¼ முதல் அரிசி எடை பனைவெல்லத்தில் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க அநேக கொடிய நோய்களை நீக்குவதுமன்றி சுரம், சன்னி இவற்றை நிச்சயம் குணப்படுத்தும் இம் மூன்றையும் எல்லா நோய்களுக்கும் ஏக மருந்தாக உபயோகிப்பர்.

29. சாம்பிராணிப் (பூ) பதங்கம்:-

இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை இஞ்சிச்சாறு, துளசிச்சாறு, தேன் இவற்றில் அனுபானித்துக் கொடுக்க எல்லாச் சுரங்களும் தீரும்.

மெழுகு, குழம்பு

1. அகத்தியர் குழம்பு:-

இதில் ஒரு குண்டுமணியளவு ஒரே வேளை காலையில் ஐய சுரம், ஐயவளிசுரம் இவற்றில் மலச்சிக்கலும் இருப்பின் சுக்குக் கற்கத்தில் பொதிந்து கொடுக்க மலத்தையும் வெளியாக்கி சுரத்தையும் போக்கும். குளிர் சுரத்திற்கு சுக்கும், மிளகுப் பொடியும் அனுபானித்துக் கொடுக்கலாம். சன்னிவாதத்திற்கு இஞ்சிச்சாறு, தேன் அனுபானமும், 13 வகை சன்னிகளுக்கு கொடிவேலி வேர்ப்பட்டை, கழற்கொடி வேர்ப்பட்டை, முசுமுசுக்கை, நொச்சி இவை சேர்ந்த குடிநீரிலும் அனுபானித்துக் கொடுக்கத் தீரும். மூன்று நாட்கள் காலையில் மட்டும் தேவையிருப்பின் இம் மெழுகைக் கொடுக்கலாம்.

குறிப்பு:-அதிகம் பேதியானால் சீரகம், புளி அல்லது எலுமிச்சம் பழம் இவைகளின் குடிநீர், மோர் சாதம், வசம்பு சுட்டகரி தேனில் கொடுக்கப் பேதி நிற்கும்.

2. சாதி சம்பீரக் குழம்பு:-

சுரங்களிலுண்டாம் வாந்தி, விக்கல், தாகம், வெப்பு இவற்றிற்கு ஒரு குன்றியளவு ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வேளை கொடுத்து வர இக்குறி குணங்கள் தீரும்.

3. நவரசத் துவையல்:-

சுரங்களிலேற்படும் வாந்திக்கு இலந்தை விரைப்பிரமாணம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்க வாந்தி நிற்கும்.

4.பஞ்சசூத மெழுகு:-

இதனை உளுந்தளவு தாய்ப் பாலில் கொடுக்க (காலை, மாலை மூன்று நாட்கள்) சன்னி 13, தோடம் 7, பல்வகைச் சுரம் தீரும்.

5. வான் மெழுகு:

இதில் உளுந்தளவு காலை, மாலை பனை வெல்லத்தில் 3 முதல் 5நாள் அனுபானித்துக் கொடுக்க கபவாத சன்னி, எண்வகை சுரம் இவை தீரும். அன்றியும் இதனை எல்லா வியாதிகளுக்கும் நேர் மருந்தாக உபயோகிக்கலாம். (As an universal remedy for almost all diseases)

6. கௌசிகர் குழம்பு:-

இதில் குன்றிமணி எடை சன்னி, தோடம், சுரம் இவைகளில் மலச்சிக்கலுமிருந்தால், வெந்நீரிலும், நடுக்கல், சுரம், குளிர் சுரம் இவற்றுடன் மலச்சிக்கலுமிருந்தால் சுக்குக் குடிநீரிலும், சீதேவி செங்கழுநீர், சீரகம் இவை சேர்ந்த குடிநீரில் கொடுக்க உட்சுரமும், எண் வகை சுரங்களுக்கு ஏலம், மிளகு சேர்ந்த பொடியுடனும், அத்தி சுரத்திற்குக் கொன்றைக் கொழுந்திலும் அனுபானித்துக் கொடுக்க மலமும் கழிந்து சுரங்களும் தீரும். மூன்று நாள் காலையில் மட்டிலும் தேவையிருப்பின் இதனைக் கொடுக்கலாம்.

சூரணம்

1. தாளி சாதிச் சூரணம்:

இதில் ஒன்று முதல் 2 கிராம் அளவு காலை, மாலை தேனில் கொள்ள சுரம், வாய் நீரூறல், இருமல் இவை தீரும். சுரங்களில் கொடுக்கும் செந்தூரம் பற்பங்களுக்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

குறிப்பு:- சித்த ஆராய்ச்சி செய்மருந்துப் புத்தகத்தில் கூறிய தாளி சாதிச் சூரணமும் நல்ல பயனளிக்கும். க்வனிக்கவும்.

இலேகியம்.

1. பஞ்ச தீபாக்கினி இலகியம்:-

பாக்களவு காலை, மாலை, ஒரு மண்டலம் கொடுத்துவர அத்தி சுரம் போம்.

2. வெண் பூசணி இலேகியம்:

புன்னைக்காயளவு காலை, மாலை ஒரு மண்டலம் கொடுத்து வர அத்தி சுரம் போம்.

நெய்

1. ஆடோதோடை நெய்:

காசு எடை உள்ளுக்குக் காலை, மாலை கொடுத்தும், மேலுக்குந்துவாலை போட நாட்பட்ட சுரம் தீரும்.

2. வல்லாரை நெய்:

ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை, கொடுத்துவர உட்சுரம் சுவாச சுரமும் தீரும்.

மணப்பாகு

1. ஆடாதோடை மணப்பாகு:-

இதில் ¼ முதல் ½ பலமெடுத்து காய்ந்தாறிய நீர் இரண்டு பங்கு சேர்த்துக் கலக்கி காலை, மாலை உட்கொண்டுவர பற்பல சுரம் போம்.

தைலங்கள்

1. அரக்குத் தைலம்:-

இத்தைலத்தைத் தேய்த்து வாரமொரு முறை, இருமுறை முழுகிவர குளிர்ச்சுரம், நாட்பட்ட சுரம் இவை குணமாம்.

2. சக தேவித் தைலம்:-

இதில் ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை உள்ளுக்குச் சாப்பிட்டும், வாரம் இருமுறை தலை முழுகியும்வர உடல் எரிவு, தீராச்சீரணச்சுரம் இவை நீங்கும்.

3. மெருகுத் தைலம்:

இதில் துட்டெடை காலை, மாலை உள்ளுக்குச் சாப்பிட்டு வந்தாலும், வாரம் இருமுறை தலை முழுகி வந்தாலும் வாத வெப்பு முதலிய சகல காய்ச்சலும் தீரும்.

சுரத்திற்கும் முப்பிணி நோய்க்கும் சில கூட்டு மருந்துகளாவன:

1. இலிங்கக்கட்டு செந்தூரம், (P.S.S. Parpam) கஸ்தூரி செந்தூரம் - வகைக்கு 2 கிரெயின், தாளிசாதிச் சூரணம் - 5 கிரெயின் இவற்றைக் கலந்து காலை, மாலை இரு நேரம் தேனில் குழப்பிக் கொடுக்க 2, 3 நாட்களில் சுரம், சன்னி இவை தீரும்.

2.சிவனாரமிர்தம், இலிங்கக்கட்டு செந்தூரம், (P.S.S Parpam) கஸ்தூரி செந்தூரம் - வகைக்கு 2 கிரெயின், தாளிசாதிச் சூரணம் அல்லது அமுக்கிராச் சூரணம் - 5 கிரெயின் இவற்றைக் கலந்து காலை, மாலை தேனில் குழப்பிக் கொடுக்க சுரம், சன்னி தீரும்.

3.சண்டமாருதச் செந்தூரம், கஸ்தூரி செந்தூரம், (P.S.S Parpam) வகைக்கு 2 கிரெயின், அமுக்கராச் சூரணம் அல்லது தாளி சாதிச் சூரணம் - 5 கிரெயின் இவற்றைக் கலந்து தேனில் காலை, மாலை குழப்பிக் கொடுக்க சுரம், சன்னி யாவும் குணமாம்.

4. இலிங்கக்கட்டு செந்தூரம், கஸ்தூரி செந்தூரம், (P.S.S Parpam) தாளகக்கறுப்பு, தாளிசாதிச் சூரணம் அல்லது அமுக்கிராச் சூரணம் இவற்றை முன் போல கலந்து காலை, மாலை கொடுக்க கபத்துடன் கூடிய சுரம், சன்னி யாவும் குணமாம்.

5.சாதிலிங்கப் பற்பம் 1 கிரெயின், கஸ்தூரி செந்தூரம் 2 கிரெயின் (P.S.S Parpam) 2 கிரெயின், தாளிசாதிச் சூரணம் 5 கிரெயின் இவற்றைக் கலந்து இஞ்சிச்சாறு, தேன், சர்க்கரை இவை கலந்ததில் அனுபானித்து காலை, மாலை கொடுக்க மூன்று வேளையில் சன்னி தோடங்களும், குளிர் சுரங்களும் குணமாகும்.

6.சன்னி பாத சுரங்களிலும், தொந்த தோட சுரங்களிலும், விடாச் சுரத்திலும் இலிங்கக்கட்டு, இரசக் கட்டு, தாளகக் கட்டு, நவபாடாணக் கட்டு இவற்றிலொன்றைத் தக்க அனுபானத்தில் உரைத்து ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்கக் குணமாகும்.

குறிப்பு:- விஷ சுரங்களிலும், சன்னிபாத சுரங்களிலும் தொந்ததோட சுரங்களிலும் உடம்பில் மேல் பூச்சாக **"தை வேளை எண்ணெய் "** துவாலையாகத் தடவிப் போட விரைவில் குணமாகும்.

2. முக்குற்ற நோய்

(Vide S.R. Pharma)

பரிகாரம்

பதின்மூன்று சன்னி சுரங்களுக்கும், பதின்மூன்று பைரவ மாத்திரைகளும், குடிநீர்களும் கூறுகிறார்:

"குறித்திடுபூத பைரவம் விசயம்
கூறுறு சங்கர மதனம்
பிரித்திடா னந்தம் மனோகர சந்தம்
பேர்பெறு கல்யாண மென்ப
செரித்திடு சன்னி பாதமே கருணி
சிறந்திடு சித்தமு மாகும்
மறித்திடா விதாரண மதிசுர வால
மகாபை ரவங்க ளெண்ணே"

தாந்திரீக சன்னிக்குப் பூதபைரவம்:

அ. எண்ணிடு பைரவம் பதிமூன்றா
மிதனிற் பூத பைரவந்தான்
பண்ணிடி லிரதங் கெந்தகந் தாம்பிர
பற்பமுஞ் சமனுறக் கூட்டி
நண்ணிடு கொடிவேலிக் குடிநீரால்
நன்றுறவரைத்த பின்னெடுத்தே
மண்ணிடு குகையி லடைத்துமண் பூசி
வாலு காயந்திரத் தொருநாளே."

ஆ. "ஒழிந்திடா தெரித்துத் தணிந்தபின் வாங்கி
வோங்கிய வெறுகு றுபிச்சின்
வழித்திடா திரண்டு யாமமே யரைத்து
வளம்பெறக் குன்றி யினளவே

அழித்திடா தினிய பானமாம் விசேடத்
தமைத்திடிற் றாந்தி ரீகன்கண்
விழித்திடா னின்பம் விளைத்தகங் களிக்க
முனிவர் வேண்டிய தளிப்பார்."

இரசம், கெந்தகம், தாம்பிரம் இவற்றின் பற்பம் சமஎடை எடுத்துக் கொடிவேலிக் குடிநீர் விட்டு நன்றாயரைத்துப் பிறகு எடுத்து ஒரு மண் குகையிலடைத்து மூடியிட்டு சீலை மண் செய்து வாலுகையிலிட்டு (மணல் மறைவில்) ஒரு நாள் எரிப்பு செய்து ஆறியபின் எடுத்து வெறுகுப் பூனையின் பிச்சுநீர் கொண்டு இரண்டு சாமம் கல்வத்திலிட்டு அரைத்து அரைக்குன்றியினளவாக மாத்திரை உருட்டி (ஒரு குன்றி எனக்கூறியிருப்பது அளவு அதிகமெனக் கருதப்படுகிறது) நிழலிலுலர்த்திப் புட்டியிலடைக்கவும். தக்க அனுபானத்துடன் காலை, மாலை கொடுக்கத் தாந்திரீக சன்னி குணமாகி நோயினனுக்குக் களிப்பைத் தருமென்பர்.

தாந்திரீக சன்னிக்குக் குடிநீர் :

"சீந்தில்பற் படகமொடு வெட்டிவேர் பேய்ப்புடல்
செப்பு சுக்குடன் வசம்பு
வாய்ந்தநீ ரிருநாழி தண்ணீரில் கழஞ்சிட்டு
வள்ளி தாகக் காய்ச்சியே
சேர்ந்தவுடனே யுழக்காக விறுத்துத் தேனும்
சேர்த்துமுட் கொண்ட போதே
ஆய்ந்துபார்த் தாந்திரீக சன்னிவித மானவகை
யத்தனையு மகலு மாதோ."

சீந்தில் கொடி, பற்பாடகம், வெட்டிவேர், பேய்ப்புடல், சுக்கு, வசம்பு, இவை வகைக்கு ஒரு கழஞ்சு எடை எடுத்து இரு நாழி தண்ணீர் (16 ஆழாக்கு) சேர்த்துக் காய்ச்சி இரு ஆழாக்காக வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் தேன் கலந்து சாப்பிட்டு வர தாந்திரீக சன்னி வகை யாவும் தீரும் என்பர்.

2. அந்தகச் சன்னிக்கு - விசய பைரவம்:

அ. "அளிதரு விசய பைரவ முரைக்கில்
யரன் விந்துநாபியப் பிரகம்

ஒளிதரு வங்கம் காரீய பற்பம்
ஓர்சம பாகமாய்க் கூட்டித்
தெளிதரு சுக்கு திப்பிலி மிளகு
சேர்த் திடுகுடி நீரதனால்
குளிதரு மிரண்டு யாமமேயரைத்துக்
குறுகிய குப்பியில டைத்தே."

ஆ. "அடைத்திடுங் குப்பிச் சீலைமண்செய்து
வாலு காயந்திரத்த மைத்து
படைத்திடு மிரண்டு சாமமே எரித்துப்
பண்பெறக் குளிர்ந்த பின்னெடுத்துக்
கிடைத்திடு சுணங்கன் பிச்சினி லரைத்துக்
கிளர்சணல் விதைப் பிரமாணம்
உடைத்திடுமிள நீர்காய்ச்சி யந்தகர்க்கிட்
டுண்பதற் கிச்சையே கொடுப்பார்."

இரசம், அப்பிரகம், வெள்வங்கம், காரீயம் இவற்றின் பற்பம், சுத்தி செய்த கருநாபி இவை யாவும் சமஎடை எடுத்து, நாபி நீங்கலாக மற்ற நான்கு பற்பங்களை ஒன்று சேர்த்துக் கல்வத்திலிட்டு திரிகடுகுக் குடிநீரில் இரண்டு சாமம் நன்றாயரைத்து ஏழு சீலைமண் செய்துலர்த்தி குப்பியிலடைத்து வாய்க்குச் சில்லுமூடிச் சீலைமண் செய்துலர்த்தி வாலுகையில் வைத்து இரண்டு சாமமெரித்து ஆறவிட்டெடுத்து நாபியும் சேர்த்து சுணங்கன் பிச்சுநீர்கொண்டு (நாய்ப்பிச்சு) கல்வத்திலரைத்துக் கடலைப்பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்திப் புட்டியிலடைக்கவும். இதில் ஒரு மாத்திரை வீதம் காய்ச்சிய இளநீரி லனுபானித்து காலை, மாலை கொடுக்க அந்தக சன்னி குணமாகும்.

குறிப்பு:- இத்தகைய முறைகளில் வரக்கூடிய நாபியும். இது போன்ற தாவர சரக்குகளை மற்ற இரசம், தாம்பிரம், வங்கம் போன்ற பற்பங்கள், குடிநீரால் அரைத்துக் குப்பி எரிப்புக்குப் போகும் போது, அவற்றுடன் (இரசம், உபரசம்,லோகம்) சேர்த்தல் கூடாது. நாபியையும் அது போன்ற சரக்குகளையும் குப்பி எரிப்பு முடிந்த பிறகு பிச்சுநீர்கொண்டு கல்வத்திலரைக்கும்போது சேர்த்தரைத்து மாத்திரை உருட்ட வேண்டியது. இச் செய்தியை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

அந்தக சன்னிக்குக் குடிநீர்:-

"நொச்சியிலை பற்படகம் பேராமுட்டி
நொய்தாக வுலர்ந்த பூசுணியின் தண்டும்
பச்சைநிற சுக்குதிப்பிலி யிடித்துப்
பாங்குபெறக் குடித்திட மானிலத்தோரெல்லாம்"
.. ..
.. ..
மெச்சிட யந்தக சன்னி சுரந்தானாலும்
மெய்விட்டேயகலுமென விளம்பினோமே.

நொச்சியிலை, பற்பாடகம், பேராமுட்டி, உலர்ந்த சர்க்கரைப் பூசணியின் தண்டு, சுக்கு, திப்பிலி இவை வகைக்கு ஒரு கழஞ்சு எடை எடுத்து தண்ணீர் இருநாழி சேர்த்துக் காய்ச்சி எட்டிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் தேன் கலந்து காலை, மாலை சாப்பிட்டுவர அந்தக சன்னி சுரம் தீரும் என்பர்.

3. ருத்தாங்க சன்னிக்கு-சங்கர பைரவம்:-

அ. கொடுத்திடு சங்கர பைரவ முரைக்கில்
கூரிய தாம்பிர பற்பம்
அடுத்திடு மிரதம்யிரும்புய வாச்சாரம்
அரியதாம் சத்தியின் சாரம்
எடுத்திடு படிகாரத்து டனாறும்
யிவைசம பாகமாய்க் கூட்டித்
தடுத்திடு பஞ்ச கோலமாம் குடிநீர்
தன்னி லோர்நாளுற வரைத்தே.

ஆ. அரைத்தபின் கேளா யந்திரத் ததனை
யமைத்தொரு சாமமே யெரித்து
நிரைத்தது வாங்கிக் கபப்பிசி னென்ன
நெகிழ்ந்திட வரைத்திரு மாடம்
கரைத்திடுமனு பானங்கண் மதுவில்
கலந்திடக் கணத்தி னிற்றானே

யுரைத்திடுங் கொடிய குணவுருத் தாகன்
உடம்புகுந் தொழித்திடா தகல்வன்

தாம்பிரம், இரசம், இரும்பு இவற்றின் பற்பம், யவாச்சாரம், சத்திச்சாரம், படிகாரம் இவ்வாறும் சம எடை எடுத்து பஞ்சகோலக் குடிநீர் விட்டு ஒரு நாளரைத்து குப்பியிலிட்டு மூடி சீலைமண் செய்து உலர்த்தி முறைப்படி வாலுகையிலடக்கி ஒரு சாமம் எரித்து ஆறியபின் எடுத்துக் கல்வத்திட்டு கபப்பிசின் போன்ற தன்மை வரும்வரை நன்றாய் அரைத்து இரண்டு உளுந்தெடை மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தி புட்டியிலடைக்கவும். இதில் ஒரு மாத்திரை வீதம் தேனிலனு பானித்துக் காலை, மாலை கொடுக்க ருத்தாங்க சன்னி குணமாகும்.

ருத்தாங்க சன்னிக்குக் குடிநீர்

ஏராறுரு வேலிசவேரோடு விலாமிச்
னினிய பற்படக மதுரம்
சீரான சுக்குடன் சிறுதேக் குமேசமன்
சேர்த்து மிகவே கூட்டிடி
பாராறு மிருநாழி நீரினிற் காய்ச்சியே
பசுமுழக் காக யிறுத்துக்
கோரோசன முலைப்பா லினால் மாறிடுங்
கூறுருத் தாக நாமால்.

இருவேலி என்ற வெட்டிவேர், விலாமிச்சுவேர், சுக்கு, பற்பாடகம், அதிமதுரம், சிறுதேக்கு இவ்வாறு சரக்குகளும் வகைக்கு கழஞ்சு எடை எடுத்து இடித்து இருநாழி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் கோரோசனமும், முலைப்பாலும் கலந்து காலை, மாலை கொடுக்க ருத்தாங்க சன்னி தீருமென்பர்.

4. சித்தவிப்பிரம சன்னிக்கு-மதன பைரவம்:-

அ. அணிதரு மதன பைரவ முரைக்கில்
அரன் விந்து கந்தகத் துடனே

மணிதரு மணியசைந்த லவணம்
மனோசிலை தாம்பிர பற்பம்
கணிதரு சமனாய்க் கூட்டியே
கண்டங்கத்திரி சிறுவழு தலைதான்
பணிதரு பழத்தின் சாற்றினா லரைத்துப்
பதம்பெறுந் தகையனில் வைத்தே

ஆ. வைத்தபின் கலந்திடு மணல்நடு வாக
மருவுறச் சிறுபுடங் குழியில்
வைத்தபின் குளிர வாறியே எடுத்து
வழுத்திடாப் பிச்சினி லரைத்து
வைத்தபின் சணற் பிரமாணமாங் குளிகை
வைத்திடு திரிகடுகுக் குடிநீர்
வைத்ததிற் கோதனீரினி லொன்றிட
வளர்சித்தப் பிரமனை மாற்றும்.

இரசம், கெந்தகம், தாம்பிரம் இவற்றின் பற்பம், சைந்தலவணம், மனோசிலை இவை சமன் கூட்டி, கண்டங்கத்திரி பழச்சாறு, சிறுவழுதலைப் பழச்சாறு இவற்றால் அரைத்து மண் குடுவையிலிட்டு மூடி சீலைமண் செய்து மணல் மறைவில் (ஒரு குழியில்) சிறு புடமிட்டு ஆறியபின் எடுத்து பசுவின் பிச்சுநீர் கொண்டு கல்வத்திலரைத்து கடலைப் பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்திப் புட்டியில் அடைக்கவும். ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை திரிகடுகுக் குடிநீரில் அனுபானித்துக் கொடுக்க சித்தவிப்பிரமசன்னி சுரம் குணமாகும்.

சித்தவிப்பிரம சன்னிக்குக் குடிநீர்:

செங்கழுநீர்க் கிழங்குயதி மதுரமொடு
சீந்தில் தாமரை வளையமும்
துங்கமிகு பேய்ப்புடல் வேர் இலுப்பைப்பூ
துலங்கு வழுதலை தேக்குடன்
தங்குமிரு நாழிநீர் சுக்குடனே எட்டொன்று
தானாகவே காய்ச்சியே
அங்குல முலைப்பாலுந் திப் பிலியுடன் கொள்ள
யகலும் சித்த பிரமனே.

சீரார் செங்கழுநீர்க் கிழங்கு, அதிமதுரம் சீந்தில் கொடி, தாமரை வளையம், பேய்ப்புடல்வேர், இலுப்பைப்பூ, சிறு வழுதலை, சிறுதேக்கு, சுக்கு இவை வகைக்கு கழஞ்சு வீதம் எடுத்துச் சேர்த்து இருநாழி தண்ணீர் விட்டு எட்டொன்றாக வற்றக்காய்ச்சி வடிகட்டி தக்கஅளவில் சிறிது முலைப்பாலும் திப்பிலிப் பொடியும் சேர்த்து காலை, மாலை, கொடுத்துவர சித்த விப்பிரம சன்னி தீரும்.

5. சீதாங்க சன்னிக்கு-ஆனந்த பைரவம்:

அ. மாறிலா னந்த பைரவ முரைக்கில்
வங்கங்கா ரீயம்வெண் காரம்
வீறிலா லிங்கங் கெந்த கமிரதம்
மிக்கதாம் பிரமரி தாரம்
பூரிலாச் சத்தலாகமோர் சமனாய்
பூட்டியேதி ரிபலைக் குடிநீர்
தீரிலாவி ன்பம்பெறவ ரைத்துயப்பாற்
தீயினில் பட்ச மேகாய்ந்தால்

ஆ. காய்ந்தி டுங்கஷாயத் தோர்தினந்
தோலாயந் திரமாயுறக் கூட்டித்
தோய்ந்தி டவெரித்துத் துகளற வாங்கித்
தொடர்ப ணிப்பிச்சி னாலரைத்து
வாய்ந்திடக் குன்றிய ளவுறக்குளிகை
மருவியநி முலினிலுலர்த்தி
ஆய்ந்தி டுமனுபானங் களிற்கொடுக்க
யகற்றி டுஞ்சீதாங்க னைத்தானே.

வெள்வங்கம், காரீயம், இரசம், தாம்பிரம் இவற்றின் பற்பம், அயச் செந்தூரம், வெண்காரம், இலிங்கம், கெந்தகம், தாளகம் இந்த ஒன்பது சரக்குகளும் சம எடை எடுத்து திரிபலைக் கியாழம் விட்டு நன்றாய் அரைத்து, பிறகு திரிபலைக் கியாழத்திலேயே தோலாயந்திரமாகக் கட்டி பதினைந்து நாட்கள் எரித்தெடுத்து பாம்பின் பிச்சுநீர் கொண்டு ஒரு சாமம் கல்வத்தில் அரைத்துக் குன்றியளவாக மாத்திரை உருட்டி உலர்த்திப் புட்டியிலடைக்கவும். பயறளவு மாத்திரை போதுமென்பது சிலரது கருத்து. தக்க அனுபானத்தில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுக்க சீதாங்க சன்னி குணமாகும்.

சீதாங்கச் சன்னிக்குக் குடிநீர்:

ஏல மிலவங்கநற் சந்தனம் பயறோ
டிடும்பூச ணிற்றண்டுடன்
தோலும் சுரைத்தண்டு தூதுவளை வேருடன்
சுக்கு மொக்கக் கூட்டியே
சாலவிரு நாழினீர் தானுழக்காகவே
தான்காய்ச் சியேகுடித்தால்
சீலமிகுஞ் சீதாங்க சன்னிசுர மோடிடும்
செப்பினோம்ப லகாலுமே.

ஏலம், இலவங்கம், சந்தனம், பூசனித்தண்டு, சுரைத்தண்டு, தூதுவளைவேர், சுக்கு இவை வகைக்குக் கழஞ்சு எடை சேர்த்து தண்ணீர் இருநாழி விட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி, வடிகட்டி தக்க அளவில் சிறிது தேன் கலந்து காலை, மாலை குடித்துவர சீதாங்க சன்னி சுரம் குணமாம்.

6. சந்திக சன்னிக்கு-மனோகர பைரவம் :

அ. தாக்கிய மனோகர பைரவமு ரைக்கில்
தாமமாஞ் சத்தியி டசாரம்
தேக்கிய விரதம்திகழ் படிகாரம்
செப்புமை விதமுறு லவணம்
ஆக்கியவாச் சாரஞ்ச மபாகம்
ஆருறக் கூட்டியே பொடித்து
தூக்கியே எருக்கம்வேர்க் குடிநீரில்
துவண்டிட மூன்றுநா ளரைத்தே.

ஆ. அரைத்திடு மினியவச் சிரக்குகையி
லடைத்து வாய்ச்சீலை மண்செய்து
எடுத்திடு மதனை வாலுகா யந்திரம்பண்
ணிருத்தி யோர்நாளுற வெரித்து
விடுத்திடு மருந்தைக் கரத்து ருபிச்சின்
மேவவே யரைத்துளுந் தளவாய்
கொடுத்திடுகுளி கைமதுப்பெற வழிக்கின்
குலவுசந் திகனைத் தீர்க்கும்.

சத்திச்சாரம், இரசபற்பம், படிகாரம், பஞ்சலவணம், யவாச்சாரம் இவை சம எடை எடுத்துப் பொடித்து எருக்கம்வேர்க் குடிநீரில் மூன்று நாட்கள் அரைத்துப் பிறகு வச்சிர மூசையிலடைத்துச் சில்மூடி சீலைமண் செய்து வாலுகையில் வைத்து ஒருநாள் எரித்து ஆறவிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு, கழுதைப் பிச்சுநீர் கொண்டு அரைத்து உளுந்தளவாய் மாத்திரை உருட்டி உலர்த்திக் குப்பியில் அடைக்கவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுக்க சந்திக சன்னியைக் குணப்படுத்தும்.

சந்திக சன்னிக்குக் குடிநீர்:-

"சொற்பெரிய தோராடா தோடையிலைசிறு வழுதலை
தூதுவளை நன்னாரி வேர்
கற்கவ கையான சிற்றாமுட்டி வேர்சுக்கு
கலந்து முத்தக் காசுடன்
பற்படகஞ் சந்தனமி லுப்பையின் பூவுமிவை
பன்னிரு கழஞ்சு கொண்டே
பிற்படையநீரு மிருநாழிஎட் டொன்றதாய்
பேணிக்கொள் சந்திகட்கே."

ஆடாதோடையிலை, சிறுவழுதலை, தூதுவளை, நன்னாரி வேர், சிற்றாமுட்டிவேர், சுக்கு, முத்தக்காசு, பற்பாடகம், சந்தனம், இலுப்பைப்பூ-வகைக்கு இரு கழஞ்சு எடை சேர்த்து இருநாழி தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி வடிகட்டி தக்க அளவில் காலை,மாலை கொடுக்க சந்திக சன்னி குணமாகும்.

7. கண்டகுப்ச சன்னிக்கு-சுவச்சந்த பைரவம்:-

அஃதீதில்சுவச் சந்தபைர வமுரைக்கில்
திகழ்வங்க பற்பம் வெண்காரம்
கோதில்நற் கந்தகம் வத்சநாபங்
குலவிரத மிவை

ஓதில்மிக் குறவே சமன்பெறக்கூட்டி
உதகமாந் திரிபலைக் குடிநீர்
போதிலங் கதனாலிரண்டுநா ளரைத்துப்
பொற்புறத் திரட்டியந் நீர்க்கே

ஆ. நீடியதோ லாயந் திரமாகத்
தூக்கியே-நிகரிரு யாமம்
கூடியவ்வ ளவுமெரித்த பின்வாங்கிக்
கோலத்தின் பிச்சினா லரைத்துத்
தேடிய குன்றியளவுற வுலர்த்தித்
திகழிஞ்சிச் சாற்றினி லிடவே
ஓடியகண்ட குப்சன்விட் டகலும்
ஓதனைந்ததி தண்ணீ ருண்ணே.

வங்கபற்பம், வெண்காரம், கெந்தகம், வச்சநாபி, இரசபற்பம் சமஎடை எடுத்து இவற்றுள் நாபி நீங்கலாக மற்றவற்றை திரிபலைக் குடிநீர் விட்டு இரண்டு நாளரைத்துக் குகையிலிட்டு மூடி சீலைமண் செய்து மணல் மறைவில் புடமிட்டு, ஆறியபின் எடுத்து, திரிபலைக் கியாழத்திலேயே தோலாயந்திரமாக இரண்டு சாமம் எரித்துப் பிறகு எடுத்து நிறுத்து அதன் எடைக்கு நான்கிலொருபாகம் வச்சநாபி சேர்த்து பன்றிப் பிச்சு நீர் கொண்டு அரைத்து குன்றியளவு மாத்திரை உருட்டி உலர்த்திப் புட்டியிலடைக்கவும். ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை இஞ்சிச்சாறுடன் தேன் கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க கண்ட குப்ச சன்னி சுரம் குணமாம். தயிர் சாதமும், தண்ணீரும் கொடுக்கவும்.

கண்டகுப்ச சன்னிக்கு - குடிநீர்:

கடுகு ரோகணி தேவதாரம் வெண்காரம் உள்ளி
கார்சுக்கு நொச்சியிலையும்
இடுகு பேராமுட்டி கண்டங் காரி
இசைந்த பூசனித் தண்டுடனே
பொடியாக்கி யிருநாழி நீரும்விட்டு
பொருந்த வுழக்காய்க் கரிதூவி
அடவா மிஞ்சிச் சாறுழக்காம்
அருந்த குப்ச னகன்றிடுமே.

கடுகுரோகணி, தேவதாரம், வெண்காரம், உள்ளி, சுக்கு, நொச்சியிலை, பேராமுட்டி, கண்டங்காரி, பூசணித்தண்டு இவை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்து இருநாழி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் சிறிது மிளகுத்தூள் இஞ்சிச்சாறு இவை சேர்த்துக் காலை, மாலை கொடுத்துவர கண்ட குப்ச சன்னி சுரங் குணமாம்.

8. கர்ணிக சன்னிக்கு- கல்யாண பைரவம்:

அ. உற்றகல் யாணபைரவ முரைக்கில்
உருத்திரன் விந்து கந்தகஞ்சீர்த்
துத்தகா ரீயம்திப்பிலி லவங்கம்
சுவேதபா டாணமை நாபி
பெற்றதோர் சமனாய்க் கூட்டியே பொடித்துப்
பின்கொடி வேலியின் தண்ணீர்
வற்றநா லொன்றாய்ச் செய்தயிக் கியாழத்தை
வார்த்தொரு நாளரைத் துருட்டி.

ஆ. உடைபடாக் குகையில் வைத்துமண் பூசி
உயர்வாலு காயந்திரத் தொருநாள்
தொடர்க மலம்போல வெரித்து பின் வாங்கித்
துய்யசேர்ப் பிச்சினா லரைத்துக்
கடைபெருங் கிரிப்பிற்குண விதையளவே
களரனு பானத்தி லூட்டித்
தடையுற விளநீர் சர்க்கரை பால்சேர்த்
தளித்திடக் கர்ணிகனாடான்.

இரசபற்பம், கந்தகம், பால்துத்தம், காரீயம், திப்பிலி, இலவங்கம், வெள்ளைப்பாடாணம், கருநாபி இவற்றுள் திப்பிலி, இலவங்கம், நாபி நீங்கலாக மற்றவைகளைச் சம எடை கூட்டிப் பொடித்துக் கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் ஒரு நாளரைத்து மாத்திரைகளாக உருட்டியுலர்த்தி ஒரு குகையிலிட்டு மூடி சீலைமண் செய்து வாலுகையில் வைத்து ஒரு நாள் கமலம் போல் எரித்து ஆறவிட்டு எடுத்து நிறுத்து, இவ்வெடையில் ஐந்திலொரு பாகம் வகைக்கு திப்பிலி, இலவங்கம், நாபி இம்மூன்றும் சேர்த்து சேல்மீன் பிச்சுநீரினால்

அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை இளநீர், பால், சர்க்கரை கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க கர்ணிக சன்னி சுரம் குணமாம்.

கர்ணிக சன்னிக்குக் குடிநீர்

"அரத்தை தேவ தாரமுட
னான கடுகு ரோகணியும்
தெரித்த சிறுதேக்கு வழுதலைவேர்
சீரா விளங்கஞ் சுக்குடனே
உரைத்தவிவை பன்னிரு கழஞ்சு
முகந்திரு நாழி நீர்விட்டு
கரைத்து முழக்காக்கிக் குடித்தால்
கர்ணிக னோடிப் போய்விடுமே."

சிற்றரத்தை, தேவதாரம், கடுகுரோகணி, சிறுதேக்கு, சிறு வழுதலை வேர், வாய்விடங்கம், சுக்கு வகைக்கு ஒரு கழஞ்சு எடை எடுத்துப் பொடித்து இரு நாழி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் காலை, மாலை கொடுத்துவர கர்ணிக சன்னி சுரம் தீரும்.

9. இரக்திட்டீவி சன்னிக்கு- சன்னி பாத பைரவம்

அ. நாட்டிய சன்னிபாத பைரவந்தான்
நவின்றி டிலிரத மப்பிரகம்
காட்டிய கந்தகங் கருநாபி
கருது காரீயம் வெண்காரம்
கூட்டியதிற் சமமாய்ப் பெறப் பொடித்துக்
குலவிட எருக்கமார் பாலில்
ஊட்டியதினந் தானேழு நாளரைத்தே
யுற்றதோ லாந்திரத் தோர்நாள்.

ஆ. ஓங்குறமுட்டி யெரித்தபின் வாங்கி
உயர்கடா மஞ்ஞைமீன் பிச்சில்
தேங்குற மூன்றுதினமு மேயரைத்துச்
செப்பிய வேணு விலடைத்துப்

பாங்குற வுளுந்துமாத் திரமெடுத்துப்
பரவிய குணங்க ளைநாடி
தாங்குறகணைத் திற்கஷாய மேலிட்டால்
தனிரக் திட்டி வியைச்செ யிக்குமே.

இரசபற்பம், அப்பிரக பற்பம், கெந்தகம், கருநாபி, காரீய பற்பம், வெண்காரம் ஆகிய இவற்றைச் சமஎடை எடுத்து, எருக்கம்பால் கொண்டு ஏழு நாட்கள் அரைத்து அதனைத் தோலாயந்திரமாக எருக்கம் பாலிலேயே ஒரு நாள் எரித்துப் பிறகு அதனை மயில்பிச்சு, மீன்பிச்சு, இவற்றினீரில் மூன்று நாட்களரைத்து மூங்கில் குழாயில் மருந்தைப் பதனஞ் செய்து வைத்துக் கொண்டு உளுந்தளவு மாத்திரையாக்கித் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்து வர இரத்திட்டிவி சன்னி சுரம் குணமாம்.

இரக்திட்டிவி சன்னிக்குக் குடிநீர்.

பூசனித் தண்டு முத்தக்காசு தன்னுடன்
பொரிப்பா னும்பம் பந்திராய்
மாசறுக்குஞ் சிறியவழு தலையின்வேர்
கொத்துமல்லி யொடுபற் படகம்
தேசுமிகுசுக் குடன்நன் னாரியிருநாழி
தெண்ணீரிலே காய்ச்சியே
நேசமுடனே கொள்ளநின் றிடிரக்திட்டிவி
நிரைசன்னி மாறி விடுமே.

பூசனித்தண்டு, முத்தக்காசு, வெண்காரம், தராயிலை, சிறு வழுதலைவேர், கொத்துமல்லி, பற்பாடகம், சுக்கு, நன்னாரி வேர் இவை வகைக்குக் கழஞ்சு எடை வீதம் சேர்த்து இருநாழி தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து தக்க அளவில் காலை, மாலை கொடுத்து வர இரக்திட்டிவி சன்னி சுரம் நீங்கும்.

10. சிம்மக சன்னிக்கு-சித்த பைரவம்:

அ. இனிதரு சித்தபைரவ மிசைக்கில்
இரதங் கெந்தக மரிதாரம்

தனிதரு சமனாய்க் கூட்டி யேபொடித்து
தளருறுக் குமரிநீர் விடுத்து
நனிதரு யாம மரைத் தவ்வளவே
நண்ணு தோலா யந்திரத் தெரித்து
முனிதரு முத்திதிமி பெறு பிச்சின்
முதிர்ந்திட வரைத்தபி னெண்ணே.

ஆ. எண்ணிய கழையி லடைத்து வைத்ததனை
இருசணவிதைப் பிரமாணம்
நண்ணிய கால பலமறிந் தெடுத்து
நரைமது திப்பிலி கூட்டிப்
பண்ணிய வனுப்பானம் பெறக்க ரைத்துப்
பரவிய குணந்தரக் கொடுக்கில்
திண்ணிய சிம்மகன் றன்னையே
தீர்க்குந்திக் கெலாமிக்க தாய்ப்புகழ்

இரசபற்பம், கெந்தகம், அரிதாரம் இம்மூன்றும் சமஎடை எடுத்துப் பொடித்துக் குமரி வேர்ச்சாறு விட்டு ஒரு சாமமரைத்து அதே குமரிவேர்ச் சாற்றில் தோலாயந்திரமாக்கட்டி, எரித்துப் பிறகு அதனைக் கல்வத்திலிட்டுத் திமிங்கலப் பிச்சுநீர் கொண்டு அரைத்து மூங்கில் குழலில் வழித்து வைத்துக் கொண்டு இரண்டு சணல் விதைப் பிரமாணம் தேகபலம், நோயின் கடுமையறிந்து காலை, மாலை தேனும், திப்பிலியுங்கலந்ததில் அனுபானித்துக் கொடுக்கச் சிம்மகச் சன்னி சுரம் தீருமென்பர்.

சிம்மக சன்னிக்குக் குடிநீர்.

இந்துப்பு வெண் காரம்பூண்டுடன் சுக்குமே
இடுபேரா முட்டியதன் வேர்
பந்தித்த சீந்தி னாரத்தையிலை நொச்சியும்
பலவுமொன்றா யிடித்தே
உந்தவகை பன்னிருக ழஞ்சுடன் திப்பிலியு
மொன்றரைக்கா செடையதாய்க்
கொந்துற்ற விருநாழி நீருழக்காக்கு
கொள்கூறு சிம்மக னோடுமே.

இந்துப்பு, வெண்காரம், பூண்டு, சுக்கு, பேராமுட்டிவேர், சீந்தில்கொடி,

நாரத்தையிலை, நொச்சியிலை இவை வகைக்கு இரு கழஞ்சு எடை எடுத்து இடித்து, திப்பிலி 1½ காசு எடை சேர்த்து இருநாழி தண்ணீர் விட்டுக் காய்ச்சி உழக்காக வற்ற வைத்து வடிகட்டி தக்கஅளவில் காலை, மாலை கொடுத்து வரச் சிம்மக சன்னி சுரம் போம்.

11. பிரலாப சன்னிக்கு-காருண்ய பைரவம்

அ. செய்யதாங் காருண்ய பைரவ முரைக்கில்
திகழுறு மிரதமப் பிரகம்
துய்யதற் சமனாய்க் கூட்டியே பொடித்துத்
துதிகையாந் தகரையின் சாற்றால்
உய்யதா யரைத்துத் திரட்டியே குளிகை
உற்றதைவாலு கேந்திரத்தில்
பையவே யாமம்வைத் தெரித்தெ டுத்து
பண்ணிமா யூரமார்பிச்சில்

ஆ. பிரித்திடு மிரண்டுதின முறவ ரைத்துப்
பெரிதுற வேணுவி லடைத்துக்
குறித்திடு நலங்கள் தேசகா லங்கள்
கோலிய குணங்களை நோக்கி
மறித்திடு மதற்குமாட மாத்திரமே
வகுத்த னுபானத்தி லூட்ட
வெறுத்திடு பிரலாபம றும்பத்தியம்
மிக்கதக் கிரோதன மிடுவார்.

இரசபற்பம், அப்பிரக பற்பம் சமனெடை எடுத்துப் பொடித்து கையாந்த கரைச்சாறு விட்டரைத்து வழித்து தோலாயந்திரமாக அதே கையான் சாற்றில் ஒரு சாமம் எரித்துப் பிறகு கல்வத்திலிட்டு மயில் பிச்சுநீர் கொண்டு இரண்டு நாட்கள் அரைத்து மூங்கில் குழலில் அடைத்து வைத்துக்கொண்டு உளுந்தளவு காலை, மாலை கொடுத்து வர பிரலாப சன்னி சுரம் போம்.

பிரலாப சன்னிக்குக் குடிநீர்

சிறுகாஞ் சொறி சிறு தேக்குச்
சிறந்த வ்ட் டத் திருப்பியுடன்

உறவாஞ் சுக்கு நிலவேம்பு
முகந்த சிறிய வழுதலையும்
அறிவார் முத்தக் கா சுடனே
அளந்திரு நாழி நீர்விட்டுக்
குறையா வு ழக்காக் கொள்வீரேல்
கூவும் பிரலாப சன்னியதே.

சிறுகாஞ்சொறி, சிறுதேக்கு, வட்டத்திருப்பி, சுக்கு, நிலவேம்பு, சிறுவழுதலை வேர், முத்தக்காசு இவை வகைக்கு இருகழஞ்சு சேர்த்து இடித்து இருநாழி தண்ணீர் விட்டுக் காய்ச்சி உழக்காக வற்ற வைத்து வடிகட்டி தக்கஅளவில் காலை, மாலை கொடுக்க பிரலாப சன்னி சுரம் போம்.

12. புக்னனேத்திர சன்னிக்கு விதாரண பைரவம்-

அ. புவிபெறு மினிய பிராணனை யளிக்கும்
விதாரண பைரவ முரைக்கில்
குவிபெரு மிரதந் தாம்பிரம் வங்கம்
குருலிங்கந் தானுங் கூட்டித்
துவிபெறு மெருக்க பால்விட் டரைத்துத்
துய்ய தோலா யந்திர மதனில்
அவிபெறுங் கடிகை யாமமே எரிப்ப
தாக்கியே யெடுத்து மான்பிச்சில்

ஆ. பிலப்படு கல்வத் தரைத்துமே வெயிலில்
பெரிதுற வைத்த பின்னெடுத்துக்
குலப்படு சுக்கு மிளகு திப்பிலிகள்
கூட்டிய கஷாய மேற்குன்றி
நலப்படு மளவாய் வகுத்ததிற் கரைத்து
நண்ணிய குணம றிந்திடவே
பலப்படு மெய்யி லிதப்பட நடுங்கிப்
புக்னனேத் திரன கல்வானே

இரச பற்பம், தாம்பிர பற்பம், வங்கப் பற்பம், இலிங்கச் செந்தூரம், இவை நான்கும் சம எடை எடுத்து வெள்ளெருக்கம் பால்விட்டரைத்து வழித்து அதே

வெள்ளெருக்கம் பாலில் தோலாயந்திரமாக ஒரு சாமமெரித்துப் பிறகு அதனை மான்பிச்சு நீர் கொண்டு அரைத்து வைத்துக் கொண்டு திரிகடுகுக் குடிநீரில் அனுபானித்துக் குன்றியளவு காலை, மாலை கொடுக்க புக்னனேத்திர சன்னி சுரம் போம்.

புக்னனேத்திர சன்னிக்குக் குடிநீர்

பாதிரி குவளை முன்னைபெரிய வாகை
பார்மிளகு சுக்குடன் சிற்றாமல்லி
பேதமிலா நன்னாரி பேரா மல்லி
பேருலகிற் சிற்றாமுட்டி பேராமுட்டி
ஏதமிலாக் கண்டங் கத்திரி நெருஞ்சில்
ஏற்றமிகு விருநாழிநீர் யுழக்காய்க்காய்ச்சி
ஓதுகிற விஞ்சிச்சா றுழக்கு கூட்டி
உகந்துகொள் புக்னேத்திரன் தனக்கே.

பாதிரிவேர், குவளைவேர், முன்னைவேர், பெருவாகைவேர், மிளகு, சுக்கு, சிற்றாமல்லி, நன்னாரிவேர், பேராமல்லி, சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், கண்டங்கத்திரி, நெருஞ்சில் இவை வகைக்கு இரு கழஞ்சு எடை எடுத்து இடித்து இருநாழி நீரிற்போட்டுக் காய்ச்சி உழக்காக வற்றவைத்து வடிகட்டி தக்க அளவில் சமன் இஞ்சிச்சாறு கலந்து காலை மாலை கொடுக்கப் புக்னனேத்திர சன்னிசுரம் போம்.

13. அபின்னியாச சன்னிக்கு கரவால பைரவம்

அ. அதி கரவால பைரவ முரைக்கில்
அரன் விந்துசத்தி நவாச்சாரம்
கொதி படிகாரந் திரிகடு திரிபலை
கொடிவேலி பஞ்சமார் லவணம்
துதி யெவாச்சாரங் கந்தக நாபி
சுடர்ப் பெருங்காயமும் பிரண்டை
கதி வனக்கருணை மாவெருக் கிவ்வேர்
கருதியே சமனுறக் கூட்டி

ஆ. கூட்டிய வெருக்கம் வேர்க்கஷாயத்தில்
குழைத்திரு தினமுற வரைத்தே
வாட்டியதெடுத்துவாலுகா யந்திரத்தில்
வைத்திரு யாமமே யெரித்துக்
கூட்டிய சுணங்கன் பிச்சினிலரைத்துக்
காய்ந்திடு நாரிகேளத்தில்
சுட்டிய குன்றி யளவிடில் பின்னியாசனைத்
துரத்திடுமது காண்க.

இரச பற்பம், சத்திச்சாரம், நவாச்சாரம், படிகாரம், திரிகடுகு, திரிபலை, கொடிவேலி, பஞ்சலவணம், யவாச்சாரம், கெந்தகம், கருநாபி, பெருங்காயம், பிரண்டை, கருணை, மா, எருக்கு இவற்றின் வேர் சம எடை எடுத்துப் பொடித்து எருக்கம்வேர்க் கியாழம் விட்டு இரண்டு நாட்களரைத்துப் பிறகு அதே எருக்கம் வேர்க் கியாழத்தில் தோலா யந்திரமாக இரண்டு சாமம் எரித்தெடுத்து நாயின் பிச்சுநீர் கொண்டு அரைத்து உலர்ந்த தென்னங்குடுவையில் வைத்துக் கொண்டு குன்றியளவு ,தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க அபின்னியாச சன்னிசுரம் போம்.

அபின்னியாச சன்னிக்குக் குடிநீர்

செண்பகங் கொத்துமல்லி கடுகு ரோகணி
சீரான மாஞ்சில் செங்கழுநீர் கோட்டம்
மென்பரவு சீதேவி செம்மைக் கழுநீர்
வேர்க்கொம்பு மேலான பற்படகம்
தன்பரவு யிருநாழி நீருழக்கா யிஞ்சி
தன்சாறுழக்கு விட்டுப்பரவு திப்பிலி
மென்பொடியதாகவே படர் நீரையுண்
ணபினியாசனிப் புவியினில்லா தோடுமே.

செண்பகப்பூ, கொத்துமல்லி, கடுகுரோகணி, சடாமாஞ்சில், செங்கழுநீர்கோட்டம், செங்கழுநீர்க் கிழங்கு, சுக்கு பற்பாடகம், இவை வகைக்கு இருகழஞ்சு எடுத்துப் பொடித்து இருநாழி நீர் விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி தக்கஅளவில் காலை, மாலை இஞ்சிச்சாறு சமனளவும் திப்பிலிப்பொடியும் சிறிது கலந்து கொடுக்க அபின்னியாச சன்னி சுரம் தீரும்.

எல்லா வகைச் சன்னிகளுக்கும் பொதுவாக உபயோகிக்கக்கூடியது. "அக்கினி சஞ்சீவி குமாரன்" என்ற மாத்திரை (போகர் எழுநூறு பக்கம் 55) செய்பாகம் கூறுகிறார்.

சுத்தித்த தாம்பிரம், உருக்கு, வெண்கலம், அயம், மனோசிலை, தாளகம், திரிபலை, கருநாபி, சூதம், வெண்காரம், திரிகடுகு இவை சமனாய்க்கொண்டு-சுத்தி செய்த திப்பிலியும், கருநாபியும் நீங்கலாக மற்ற சரக்குகளைக் கல்வத்திலிட்டு முறைப்படி சேர்த்தரைத்துக் கொள்ளவும். அப்பால் குமரிச்சாற்றால் நான்கு சாமமரைத்துக் குப்பிக்கேற்றி சில்லிட்டு சீலை மண் செய்து வாலுகையில் வைத்து சட்டிகொண்டு மூடிப் பொருத்து வாய்க்குச் சீலை மண் செய்து கொள்ளவும். பின்னர் வட்டடுப்பில் வைத்து பனிரெண்டு சாமம் தீயைக் கமலம் போல் எரித்து, ஆறவிட்டுக் குப்பியை உடைத்து அதனுள்ளிருக்கும் செந்தூரத்தை எடுத்து நிறுவை செய்து அந்த எடையில் 1/15 -ல் பாகம் கருநாபியும் திப்பிலியும் சேர்த்து கல்வத்திலிட்டு வெள்ளுள்ளித் தைலம் விட்டு இரண்டு சாமமரைத்துக் குன்றியளவு மாத்திரைகளாகச் செய்து நிழலுலர்த்தி ஒரு செப்பிலிட்டு 40 நாட்கள் நெற்புடத்தில் வைத்திருந்து எடுத்து அப்பால் உபயோகிக்க பதினெட்டு வகை சன்னிசுரங்களும் குணமாகுமென்பர். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை இஞ்சிச்சாறு தேன் கலந்ததில் அனுபானித்துக் கொடுக்கவும் எல்லா வகை தீராத சன்னிகளும் தீருமென்கிறார்.

ஏய்ந்துமே யிஞ்சிச்சார் தேனுங்கூட்டு
ஏகாத பதினெட்டு சன்னி யேகும்
தீய்ந்துபோ மக்கினிசஞ் சீவியென்றால்
செத்தபே ருலகத்தி லுண்டோ சொல்லே.

என்பதினால் இம்மாத்திரையின் சிறந்த குணம் நன்கு புரியும்.

எல்லாவகை முப்பிணி நோய்களுக்கும் உபயோகிக்கக் கூடிய அஞ்சனம் (கலிக்கம்)

1. வாகைவித்து, சுக்கு, திப்பிலி, மிளகு, சைந்தலவணம் இவை சம எடை சேர்த்து கோமூத்திரத்திலரைத்து மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு தேவையானபோது கோமூத்திரத்திலாவது, எலுமிச்சம் பழச்சாற்றிலாவது, முலைப்பாலிலாவது உரைத்துக் கண்ணுக்கு மையிடவும்.

2. சைந்தலவணம், மகிழம் வித்து, மிளகு சமஎடை எடுத்து மேற்கூறிய முறைப்படி மாத்திரை செய்து கலிக்கமாக உபயோகிக்க சன்னி யாவும் போம்.

3. சைந்தலவணம், பெருங்காயம், திப்பிலி இவை சம எடை எடுத்து பசுவின் நெய் விட்டு மை போலரைத்து சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணிலிடவும்.

4. சைந்தலவணம், ஆமணக்கு வித்துப் பருப்பு, மிளகு இவை சமன் கொண்டு பழரசம் விட்டரைத்து மாத்திரை உருட்டிப் பழரசத்திலுரைத்துக் கண்ணிலிடலாம்.

5. பெருங்காயம், சைந்தலவணம், திப்பிலி, பருந்துக்கண் இவை சம எடை எடுத்து பழரசம் விட்டரைத்து மாத்திரை செய்து உலர்த்தி பழச்சாற்றிலுரைத்துக் கண்ணிலிடவும்.

6. கடுக்காய் விதைப் பருப்பு, தான்றிவிதைப்பருப்பு, சைந்தலவணம், பெருங்காயம், சுக்கு, திப்பிலி, மிளகு இவை சம எடை எடுத்து கோமூத்திரத்திலரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொண்டு முலைப்பால், என்நெய், பழரசம் ஏதேனுமொன்றில் உரைத்துக் கண்ணிலிட சன்னி போம்.

எல்லா வகை முப்பிணி நோய்களுக்கு ஆக்கிராணம் நசியம் கூறுகிறார்:

1. ஆமணக்கு விதைப் பருப்பை உலர்த்திப் பொடித்து வைத்துக்கொண்டு நாசியில் உறிஞ்ச முப்பிணிநோய் போம்.

2. சிற்றாமணக்கெண்ணெயில் மிளகுப்பொடி கலந்து நசியமிடவும்.

3. தேனும் விளக்கெண்ணெயும் கலந்து நசியமிடவும்.

4. அகத்தியிலைச் சாற்றில் சுக்கு, மிளகு, திப்பிலிச் சூரணங்கள் கலந்து நசியமிடலாம்.

5. உத்தாமணிப்பாலில் திப்பிலிப்பொடி சேர்த்து நசியம் செய்யவும்.

6. பாகலிலைரசம், பூண்டு, மிளகுப்பொடி, சைந்தலவணம் இவற்றைப்பாவனையாகச் செய்து நசியம் செய்யவும்.

7. ஈசுவரமூலிவேர், அதனுடைய விதை சமஎடை கொண்டு பொடித்துக்கொண்டு அதற்குப்பாதி எடை மிளகுப்பொடி சேர்த்து ஆக்கிராணிக்க (உறிஞ்ச) சன்னிநோய்கள் போம்.

முப்பிணி நோய்களுக்குப் புகைப் பிரயோகம் :

1. மைசாட்சி (எருமைக்கண் குங்கிலியம்) கடுகு, திப்பிலி, கருஞ்சீரகம், கழற்சியிலை, எருக்கம்பூ, தர்ப்பைப்புல், பெருங்காயம், கடுக்காய் இவைகளை ஆமணக்கெண்ணெயில் நனைத்துத் தூபமிட சன்னி நோய்கள் போம்.

2. மான் புட்டை(விட்டை), பூண்டுத் தோல், காட்டுப்பன்றியின் விட்டை, ஓமம், அரக்கு, காயம், சைந்தலவணம், மயிலிறகு, கழற்சியிலை, பாம்புத்தோல், பச்சை ஓணான் தோல், தேள் கொடுக்கு, கருங்குளவி இறகு இவை சம எடை எடுத்துப் பொடித்து வைத்துக்கொண்டு தூபம்போட, அதிகக் கொடூரமான சன்னிநோய்களில் இதனை உபயோகிக்கக் குணமாகும்.

எல்லா வகைச் சுரங்களிலும் பொதுவாக உபயோகிக்கக் கூடிய எங்கள் அனுபவ முறைகளாவன:-

1. சுர நிவாரணி -1

1. உலாந்தாலிங்கங்கட்டு செந்தூரம் அல்லது சாதிலிங்கக்கட்டு செந்தூரம்	1 பங்கு
2. கஸ்தூரி செந்தூரம்	1 பங்கு
3. வசந்தா மாத்திரைப் பொடி	1 பங்கு
4. P.S. M.M. பற்பம்	2 பங்கு

இந்த நான்கு மருந்துகளையும் ஒன்றாய்க் கலந்து புட்டியில் வைத்துக் கொண்டு வேளைக்கு 2 முதல் 3 சிட்டிகையளவு இக்கலவை மருந்தும், சமம் தாளிசாதிச் சூரணம் B.P.Stabilizer (பித்தாதிக்க நிவாரணி), அமுக்கிராச் சூரணம் ஏதேனுமொன்றைச் சேர்த்துத் தேன் விட்டுக் குழப்பி காலை, மாலை கொடுக்கவும். முதல் தடவை இம்மருந்தைக் கொடுத்தவுடன் இஞ்சிச்சாறும், தேனும் கலந்து ஒரு முறை கொடுப்பது நல்லதோர் அனுபானமாகும். 2,3 தினங்களில் சுரங்கள் யாவும் குணமாகும். கஞ்சி ஆகாரம் கொடுக்கவும். (Liquid diet) மலச்சிக்கலிருப்பின் அதற்குரிய பரிகாரம் செய்யவும், நொச்சிக் குடிநீர், நிலவேம்புக் குடிநீர், பேய்ப்புடல் குடிநீர் இவற்றிலொன்றை அனுபானமாகவும் கொடுக்கலாம்.

சுர நிவாரணி - 2

1. உலாந்தாலிங்கம் அல்லது சாதிலிங்கக் கட்டுச் செந்தூரம் 1 பங்கு

2. P.S.M.M பற்பம் 3 பங்கு

3. கஸ்தூரி செந்தூரம் ½ பங்கு

4. சிவனாரமிர்தம் 1 பங்கு

இந்நான்கு மருந்துகளையும் ஒன்றாய்க் கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு வேளைக்கு 2 முதல் 3 சிட்டிகையளவு இக் கலவை மருந்தும், சமன் தாளிசாதிச் சூரணம், பித்தாதிக்க நிவாரணி, அமுக்கிராச் சூரணம், ஏலாதிச் சூரணம் ஏதேனுமொன்றைச் சேர்த்துத் தேன் கலந்து காலை, மாலை சாப்பிடவும். முதல் வேளை மருந்து சாப்பிட்டவுடன் இஞ்சிச் சாறும் தேனும் கலந்த அனுபானமும் கொடுக்கவும். விரைவில் முக்குற்ற சுரங்கள் யாவும் குணமாகும். கஞ்சி ஆகாரம் கொடுக்கவும். நொச்சிக் குடிநீர், சீந்தில் பேய்ப்புடல் குடிநீர், நிலவேம்புக் குடிநீர் இவற்றில் ஏதேனுமொன்றை அனுபானமாகவும் கொடுக்கலாம்.

சுர நிவாரணி - 3

1. உலாந்தாலிங்கம் அல்லது சாதிலிங்கக் கட்டுச் செந்தூரம் 1 பங்கு

2. கோரோசனை மாத்திரை சூரணம் அல்லது கோரோசனை கஸ்தூரி மாத்திரை சூரணம் 1 பங்கு

3. சர்ப்பராசக் குடிகை சூரணம் அல்லது சிவனாரமிர்தம் 1 பங்கு

4. P.S.M.M.பற்பம் 3 பங்கு

இந்நான்கு மருந்துகளையும் ஒன்றாய்க் கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு 1 முதல் 2 சிட்டிகை, மருந்துடன் சமன் தாளிசாதிச் சூரணம், அமுக்கிராச் சூரணம், பித்தாதிக்க நிவாரணி, ஏலாதிச் சூரணம் இவற்றை ஏதேனுமொன்றைச் சேர்த்து தேனும் கூட்டி, காலை, மாலை கொடுக்கவும். முதல் வேளை மருந்து கொடுத்தவுடன் இஞ்சிச்சாறும் தேனும் கலந்ததோர் அனுபானமும் கொடுத்தல் நலமாயிருக்கும். எல்லாவகைச் சுரங்களும் விரைவில் குணமாகும். கஞ்சி ஆகாரம் கொடுக்கவும்.

குறிப்பு:- இத்துடன் கஸ்தூரி செந்தூரமும் சேர்த்துக் கொடுக்க தொந்ததோட சுரங்கள் குணமாகும்.

சுர நிவாரணி - 4

1.காளமேக நாராயணச் செந்தூரம்	1 பங்கு
2.உலாந்தாலிங்கம் அல்லது சாதிலிங்கக் கட்டு செந்தூரம்	1 பங்கு
3.கஸ்தூரி செந்தூரம்	1 பங்கு
4.தாளகக் கறுப்பு	1 பங்கு
5.P.S.M.M பற்பம்	4 பங்கு

இவ்வைந்து மருந்துகளையும் ஒன்றாய்க் கலந்து புட்டியில் வைத்துக்கொண்டு வேளைக்கு 1 முதல் 2 சிட்டிகை மருந்துடன், சமன் தாளிசாதிச் சூரணம், அமுக்கிராச் சூரணம் இவற்றில் ஏதேனுமொன்றைச் சேர்த்துத் தேன் கூட்டி காலை, மாலை கொடுக்கவும். உடன் கையில் இஞ்சிச் சாறும் தேனுங் கலந்த அனுபானம் கொடுக்கலாம். அல்லது ஆடாதோடைக் குடிநீர் அல்லது சருவ சுரக் குடிநீர் கொடுக்கலாம். இதனால் கபசுரம், கபவாதசுரம், கோழைக்கட்டு, கஷ்ட சுவாசம், சன்னி சுரம் முதலியன குணமாகும். கஞ்சி ஆகாரம் கொடுக்கவும்.

DENGUE AND INFLUENZA FEVER REMEDY (SPECIAL)

(S.R. Pharma)

1. Linga Kattu Chenduram	10 grams.
2. Kasthuri Chenduram	20 grams.
3. P.S.M.M. Baspam	20 grams.
4. Vasantham Pills Powdered	20 grams.
5. Amukara Churanam Co.No.1 or Thalisathi Churanam	140 grams.

These are well mixed and bottled up.

Dose: 5 to 10 grams twice a day may be given mixed with honey followed on the first day by one dose of Ginger juice, honey and sugar.

Uses: Dengue, Influenza and all other infectious fevers are cured in 3 or 4 days or even earlier. If necessary Nochi kudineer or Nilavembu Kudineer may be given in addition in the morning and evening.

நசிய இனம் (தேரையர் கரிசல்)

நசியந் தலைவலி மற்றது
    நசியந் தகனாமே
நையத்தெறு மையப் பிணி
    நவ்விக்கிது புலியே
நமனுக்கொரு நமன் வெற்றியை
    நறுக்கிப் பிழி மூக்கில்
நளிருஞ் சுரங் குளிருந்தலை
    நடுக்கும் பிணி விடுக்கும்
நளினத் தளிர் துளவத்துளிர்
    நரையுப் பொடு மிளகு
நசை மத்தன மிசை வித்ததை
    நன் மாத்திரை யாக்கி
நண்பன் கதிர்முன் போன்றவை
    நசியக் குளிகையை

நகிலச்சுதையொடு பஞ்சினில்
நனைத்துப் பிழி மூக்கில்
நளிர் வெஞ்சுரமருளின் சுரம்
நலி வெஞ்சுர மறுமே
நஞ்சிற் படர்விட சன்னிகள்
நஞ்சுப் புற மகலும்
நட்டத்தொடு முட்டப்பொரு
நட்டத் தனுர் வாதம்
நடை தத்திடு விடமித்ததோர்
நக்கப் படு சன்னி
நடுக் காட்டொரு புலிபோத்தெதிர்
நரிக்கூட் டமதாமே
நறைக்கோங் கொடு முடப்போந்தைகள்
நனை நீரது பஞ்சில்
நனைத் தேயிலை முனை பச்சினில்
நசியத்தினை யிடுதி
நவியத்தினில் வயிரத்தரு
நறுக்குண்டது போல
நரம்பிற் படர் குரம்புப் பிணி
நவிரச் சனி வாதம்
நையத்தொனி மையத் தடர்
நலக்கப் பிணி யெல்லாம்
நள்ளாறென வுள்ளாற்றி
நறைப் பந்தமதாமே
நசியத்திற லி.ஃ.திப்படி
நவிலப் படுநெறியே.

நசியமானது:

1. தலைவலி முதலிய நோய்களுக்கு அந்தகனாகும்
2. உடலை வருத்துகின்ற ஐயமாகிய மானுக்கு புலிபோலவுமாகும்
3. தும்பையிலையைக் கசக்கி மூக்கில் பிழிய நளிர், குளிரோடுங் கூடிய சுரம், தலை நடுக்குவாதம் இவை விலகும்.
4. தாமரைப் பூவிதழ், துளசித் துளிரிலை, வெள்ளையுப்பு, மிளகு

இவை சமனெடை சேர்த்து அரைத்து உருட்டி வெய்யிலில் உலர்த்திவைத்துக் கொண்டு முலைப்பாலில் மாத்திரையை உரைத்து பஞ்சில் நனைத்து மூக்கில் பிழிய நளிருடன் கூடிய வெண்சுரம், மயக்க சுரம் (உன் மாதம் உள்பட), நலியும்படியாகவுள்ள (இளைத்துப் போகக் கூடியதாகவுள்ள) வெண்சுரம், நஞ்சைப் போலப் படர்கின்றவிட சன்னி பாதசுரங்களும் நீங்கும். குருதியாதிகளின் கேட்டால் உடலிலுள்ள கீல்களை ஒன்றொடொன்று மோதும்படி செய்து வருத்தம் விளைவிக்கின்ற உடலை முற்பக்கமாவது பிற்பக்கமாவது, பக்கமாகவாவது வளைக்கின்ற தனுர்வாதமும், விட சன்னியும் போம். தத்தித் தத்தி நடக்கச் செய்கின்ற நஞ்சுத் தன்மையடைந்த மிகுந்த அளவாய்த் தலையிற் சேர்ந்த சன்னியும் தலைகிறுகிறுப்பும் புலியைக் கண்ட நரிக் கூட்டத்தையொக்கும்.

5. மணமுள்ள கோங்கிலவம் பூச்சாற்றிலாவது பனங்கள்ளிலாவது நசிய மாத்திரையை ஊறவைத்து ஊறினபின் அந்தச் சாற்றைப் பஞ்சில் நனைத்து மூக்கில் பிழிய ஒரு இரும்புக் கோடரியால் வயிரம் பற்றிய மரங்கள் வெட்டுப் படுவனபோல் உடம்பிலுள்ள நரம்புகளிலெல்லாம் விரவியிருக்கின்ற நரம்பு வலி நோய்களும், உச்சியிற்றங்கும் சன்னிபாத நோய்களும் நோயாளிவருந்தும்படி குரலில் பற்றிய சயித்திய நோய்களும் ஆறு (நதி) என்று நினையாமல் அதில் எரிந்து விழுகின்ற தீவர்த்திகள் அவிந்து விடுவனபோல் குணமாகி விடும். நசியத்தினுடைய வன்மையானது இந்தவிதம் என்பதை அறியக் கடவீர்.

சன்னிக்கு நசியம்

மாரடைத்திருந்து கபமேலிடப் பொசிந்து தலை
நோவெடுத்தழுந்து சன்னிபோவதற் கருந்துளசி
மலருப்பை முகிழ் வெற்றி மலர் நொச்சியிலையுற்ற
நசியத்தை விடிலுட்கு மனுகுற்ற நோய்த் தொடர்

கருந்துளசி, இலவங்கம், உப்பிலாங் கொடி,வெற்றிலைக் காம்பு, தும்பைப்பூ, நொச்சியிலை ஆகிய இவற்றில் ஏதேனுமொன்றின் சாற்றை மூக்கில் பிழியி சன்னி பாதங்கள் யாவும் குணமாகும். இலவங்கத்தை முலைப்பாலில் ஊற வைத்து அந்தப் பாலை மூக்கில் பிழியலாம்.

நாசிகாபரணம்

நாசிகா பரணநோய் நாந்தகப் படையதாமே
நாரமேலிட்ட மூர்த்த நாதனாமிறையை முன்னி
நாடோறு மமைச்சை மீளி நாணவோர் கனலை மூட்டி
நாமுனைவாட்சி நீண்ட நாசியானனத்த ராக்கும்
நானிலமருட்டும் வேப்பநாகமா நாக நோய்க்கே
நால்வகைப் பாலை சுண்டை நாரத்தையிருப் பையிவ்வேர்
நாக மல்லிகை நீராட்டி நாலிரு நாளுலர்த்தி
நாட்டழற்காயின் பன்ன நாரத்து மவ்வாறாற்றி
நாலிரு நாளவ்வாறு நாதனா மத்துலர்த்தி
நாணயப் பொடியதாக்கி நாப்பனோர் பரணி சேர்த்து
நாதனா மத்தையுண்ணி நாசித்து வாரமாற்றி
நாற்ற மோர்விசையிற் போடநாக பரணத்திற்றாக்கும்
நாவினிலற்றுண்டான நாச ரோகத்தைப் போக்கும்
நாட்டிய சன்னிரோக நாட்டிய விடத்தை மாற்றும்
நாபியிற் சனித்த பச்சை நாபிநேர் பிணியைவாட்டும்
நாலுமுக்கத்தை நேர்வாய் நாலு முக்கத்தைப் போக்கும்
நாவி போற்பாயுஞ் சேத்ம நாம சன்னிகளைப் போக்கும்
நாளினமு பாயத் தீட்டு நாசிகா பரணங் கேண்மோ
நான்முகப்பத்ர மொன்று நாய்க்கடுகில் தானொன்று
நாரணன லவங்கமொன்று நாடெரு முட்டையொன்று
நாரறவெயிலுலர்த்தி நாணயப் பொடிகள் செய்து
நாணவெவ்வேறு தான் பெய்நாசி
காபரணன் சேதி நாரதருரைத்தவாறே.

பாலைவேர், சுண்டை வேர், நாரத்தை வேர், இலுப்பை வேர் இவை வகைக்குச் சம எடை (உள் நரம்பு நீக்கிப் பட்டையை மட்டும் எடுத்துக் கொள்க) எடுத்து நாக மல்லிகைப் பூச்சாறு விட்டரைத்துப் (எட்டு

நாட்களரைத்து நாரத்த இலைச் சாற்றிலும் எட்டு நாட்களரைத்து உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு ஆக்கிராணஞ் செய்ய சன்னி, விட பாகம், நாசி ரோகம், தலைவலி, தலைப்பாரம் இவைகளைப் போக்கும்.

அருகம்புல் (நான்முகப் பத்ரம்), நாய்க்கடுகு இலை, இலவங்கம், எருமுட்டை இவை சம எடை எடுத்து உலர்த்திப் பொடித்துக் கலந்து வைத்துக் கொண்டு ஆக்கிராணிக்க சகல சேத்தும சன்னிகள் போம்.

3. அம்மை நோய்

பரிகாரம்

பொது மருத்துவம் (General Principles)

அம்மை நோயில் பொதுவாக அழல் ஐயத்தொந்தக் குற்றங்கள் காரணமாக இருப்பதால் அவற்றைத் தன்னிலைப் படுத்தக் கூடிய சாந்தமான மருந்துகளையும் உணவுப் பொருள்களையும் மிகச் சாக்கிரதையோடு கையாள வேண்டும். வெப்பமுள்ள மருந்துகளை அம்மை நோயினர்களுக்குக் கொடுக்கக் கூடாதென்பதற்காகவே நம் நாட்டில் அம்மைக் குறி (கொப்புளங்கள்) தோன்றியவுடன் மருந்து கொடுக்கும் வழக்கமில்லை, சிலர் அம்மையை ஒரு தெய்வமாகக் கருதி மருந்து கொடுப்பது வழக்கமில்லை, உணவு, உடை, படுக்கை, இருப்பிடம் இவற்றைத் தக்க முறையில் வைத்துக் கொள்வதன் மூலம் நோயைப் போக்க முயன்றனர். (i.e Nature Cure)

அழலையக் குற்றத்தைத் தன்னிலைப் படுத்த:

முத்து பற்பம், பவள பற்பம், முத்துச் சிப்பி,பலகரை, கற்பூரசிலாசத்து, மான் கொம்பு இவற்றின் பற்பம், மாணிக்க பற்பம், அன்ன பேதிச் செந்தூரம், பொன்னிமிளைச் செந்தூரம், தங்க பற்பம் ஏதேனுமொன்று அல்லது பல சேர்த்து தக்க அளவில் பால், வெண்ணெய், நெய், தேன், முலைப்பால் போன்ற அனுபானங்களில் கொடுக்க நன்மை பயக்கும். ஐயமிகுதியால் கோழை கட்டியிருப்பின் கோரோனை மாத்திரைப் பொடி, கஸ்தூரி செந்தூரம், கஸ்தூரி மாத்திரைப் பொடி, கோரோசனை கஸ்தூரி மாத்திரைப் பொடி இவற்றிலொன்றை முன் பற்பங்களுடன் கலந்து கொடுக்கலாம். அல்லது ஆடாதோடைக் குடிநீர், துளசிச் சாறு, பற்பாடகக் குடிநீர், நிலவேம்புக் குடிநீர் இவற்றை அனுபானமாகவும் கொடுக்கலாம்.

உணவு:

சுரமுள்ள போது கருங்குருவை அரிசிமாவுக் கஞ்சி, பார்லிமாவுக் கஞ்சி, கூவை மாவுக் கஞ்சி இவற்றைக் கொடுக்கலாம். சுரம் தணிந்த பின் குளிர்ச்சியான உணவுகளைக் கொடுத்தல் வேண்டும். கேழ்வரகு மாவும், அரிசி நொய்யும் கலந்து தண்ணீர் விட்டுப் புளிக்க வைத்துக் கூழ் காய்ச்சி வெங்காயம் அரிந்து போட்டு உணவாகக் கொடுப்பது நல்லது, இக்கூழும் ஈருள்ளியும் வெப்பத்தைத் தணிக்கக் கூடியவை.

அன்றியும் நோயுள்ள போதும் ஆறின சோறு, மிளகு நீர் கூட்டி அருந்துவதுமுண்டு. அம்மை இறங்கி விட்டால் நீர் மோரும் சோறும் உண்ணலாம். காரமான உணவு கூடா, சாந்தமான பழங்கள், எலுமிச்சம் பழச்சாறு, பழம் புளி, நெல்லிக்காய், பனங் கற்கண்டு, கறிவேப்பிலை, கெளித்திக் கருவாடு, குரதைக் கருவாடு, பச்சைப் பயறு, காராமணி, வெள்ளாட்டு வற்றல், காடை, கதுவாலி, வெள்ளெலி, உடும்பு, ஊர்க்குருவி, வாழைக் கச்சல், அத்திப் பிஞ்சு, சீனி, கற்கண்டு இவற்றை உணவில் சமயமறிந்து உடல் நிலையறிந்து சேர்க்கலாம்.

வைசூரிக்குப் பத்தியம். (வைசூரி நூல் , பக்கம் 29 -30)

1. சேரும்பத் தியத்தைக் கேளு
   திறமதாய்ச் சாதஞ் செய்து
   ஆருமே யாற வைத்து
   அழகுடன் மிளகு நீரும்
   காருமே வகையாய்ச் செய்துக்
   கனம்பெறக் கொள்ள நன்றாம்
   பாருமே வைசூரி தானும்
   பரிவுட னிறக்க மாமே,"

2. பரிவுட னிதந்தப் பாமல்
   பண்பதாய்ச் செய்து கொண்டு
   நெறியுடன் சரிந்த பின்பு
   நீர்மோருஞ் சாதங் கொள்ளு

தறி யதி கார மாகாச்
சார்ந்தமாம் பழமு மாகா
சரிபட எலுமிச் சங்காய்ச்
சலம் பழம் புளி யுமாமே."

பத்தியத்திற்காகும் பாதார்த்தங்களாவன.

3. "ஆமென்ற நெல்லிக் காயா
மறு பனை கற்கண்டாகும்
காமென்ற கருவேம் பாகுங்
களங்குளங் கெளிற்று வற்றல்
தாமென்ற குரவை வற்றல்
தளர்பாசிப் பயறு மாகும்
வேமென்ற வெள்ளாட்டின் வற்றல்
விபரமாய்க் கூட்ட லாமே."

4. "கூட்டலாங் காடை கதுவாலி யாகுங்
குலாவுவெள் ளெலியு மாகும்,
நாட்டினி லுடும்பு மாகும்
நல்லவூர்க் குருவியு மாகும்,
வாட்டமாய் வாழைக் கச்சல்
வளரத்திப் பிஞ்சு மாகும்
தேட்டமாஞ் சீனி யான
தெளிந்த கற் கண்டு மாமே."

ஆகாத பதார்த்தங்களாவன:-

தேங்காய், மாங்காய், நல்லெண்ணெய், இலுப்பை நெய், சோற்றாவி, நெல்லாவி, கொட்டை முத்தாவி, கறிகள் அவித்த வாடை, புண்ணாக்கு இவைகள் ஆகா, பெண்ணாசை, பெண்வாடை பட்டால் குருவில் குத்திலுண்டாய்க் கடுப்பெடுத்துக் கரடு கட்டிக் கைகால் முடக்கும்.

5. "ஆமென்ற யிவை யெல்லாங் கூட்டி யுண்ணு
அழகான மற்றொன்று மாகா தப்பா,

வேமென்ற வாகாத வஸ்து வெல்லாம்
விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளு நன்றாய்
தாமென்ற தேங்காயு மாங்கா யாகா
தருவான நல்லெண்ணெ யிலுப்பெண்ணெ யாகா,
வாமென்ற சோற்றாவி நெல்லாவி யாகா
வளமான கொட்டைமுத் தாவி யாகா,"

6. "ஆகாது கறிகள்தா னவித்த வாடை
அழகான பிண்ணாக்கு மாகா தப்பா,
தோகையர்க ளாசையுட வாடை பட்டால்,
தொடுகுறியாய்க் குருசூலை தோன்றும் பாரு,
வேகமாய்க் கடுப்பெடுத்துக் கரடு கட்டி
விபரமாய்க் கைகாலை முடக்கும் பாரு,
தாகமாய்க் குணங்கண் டவிழ்தஞ் செய்தால்
தப்பாது நோயதுவுஞ் சாந்த மாமே."

படுக்கை:

படுக்கை மென்மையுடையதாயும், கொப்புளத்தின் சீழ் வெளியாக்காததாயும், எறும்பும், ஈயும் அணுகாததாயும் இருத்தல் வேண்டும். வேப்பிலையில் படுக்கை தயாரித்துப் படுக்க வைப்பது நம் முன்னோர்கள் அனுசரித்த பழக்கம். இதுவே சாலச் சிறந்தது.

சிறப்பு மருத்துவம்.

1. பெரியம்மைக்கு:

எல்லா வகை அம்மைகளுக்கும் ஆள்காட்டி குருவி முட்டை அவிழ்தம்: இதனைத் தடை மருத்துவமாகக் கொள்வர்.

ஆள் காட்டிக் குருவி முட்டையை உடைத்துச் சட்டியிலிட்டு சம்பா புழுங்கலரிசியை மேற்படி கருவில் சுவறிப் போமட்டும் போட்டு அடுப்பேற்றிக்

கருகாமல் பொரியரிசியாக வறுத்து சுரம் கண்டவுடன் இடது கை நிறையக் கொட்டி வலது கையில் மாற்றி ஒரு பிடி அரிசி சாப்பிடவும். அரிசியின் எண்ணிக்கையளவு கொப்புளங்களுண்டாகா; தேகத்திற்கு அழிவேயில்லை. இதனை ஒரு நேரங் கொண்டால் போதுமானது. இதனை, இருமுறை செய்த பேர்க்கு வைசூரி அதிகமாகாது. சுலபத்தில் குணமாகி விடும். மரணம் பயம் இருக்கவே மாட்டாது. பிழைத்துக் கொள்வது நிச்சயமென்கிறார்.

1. கேளடா ஆள் காட்டிக் குருவி முட்டை
   கிருபையுடன் பார்த்தெடுத்துக் கொண்டு வந்து
   ஆளடா சட்டியிலே வுடைத்து ஊற்றி
   அழகான புழுங்கலரிசி சம்பா வப்பா
   வாளடா முட்டைகரு நனையு மட்டும்
   வளமான யரிசியதை மிதமாய்ப் போட்டு
   தாளடா வடுப்பேற்றிப் பதமே பார்த்துத்
   தவிராமல் கருகாமல் பொரித்து வாங்கே."

2. "வாங்கியே செப்பதனி லடைத்துக் கொண்டு
   வரிசையாய்க் காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
   தாங்கியே இடதுகையி லரிசி கொட்டி
   தயவாக வலதுகையால் பிடியே யள்ளி
   ஏங்கியே திரியாம லுள்ளே கொள்ள
   இதமாக யரிசிதொகையான மட்டும்
   பாங்கியே வைசூரியது அதிகம் வாராப்
   பரிவான தேகத்துக் கழிவோ யில்லை".

3. "இல்லையென்று வொருநேரங் கொண்டால் போதும்
   இதமாக மருந்துவகை வேறே சொல்வேன்
   வல்லமையா யிம்முறையைச் செய்த பேர்க்கு
   வைசூரியது அதிகமுமே வாரா தப்பா
   பல்லவமா யுலகினுள்ளோர் பிழைக்க வென்றுப்
   பரிவாகப் பெரியோர்கள் செய்த மார்க்கம்
   நல்லதென்று உலகத்தோர் செய்தால் தானே
   நமனுமே வாராது நவிலு வோமே."

என்பதினாலறிக

அம்மைக்குரு மிகுதியாகாதிருக்க - பாதரட்சை குருபற்பம்:-

1. நவிலுவோ மிவர்களுக்கு மருந்து கேளு
நலமாகக் காய்ச்சல்கண்ட வுடனே நீதான்
புவிதனிலே பழசான பாத ரட்சைப்
புகழாகச் சுட்டதனைப் பற்ப மாக்கி
பவிலாக வெருகடிதான் வெந்நீர் தன்னில்
பாகமாய்க் கொண்டுவிடு மூன்று நேரம்
தவிராமல் செய்தபின்பு சொல்லக் கேளு
சாதகமாய்ப் பின்மருந்து மொழியக் கேளே."

2. "மொழிந்ததொரு மருந்ததுவும் பாகத் தோடே
முறைமையாய்ச் செய்துகொண்டால் கர்மம் நன்றாய்
அழிந்ததொரு வைசூரியெலாங் குணமே யாகும்
அழகான மருந்ததனை அன்பாய்க் கொள்ளு
சழிந்ததொரு கர்மங்கள் தீர்ந்த பின்பு
சாதகமாய் ரோகமது நன்றாய்த் தீரும்
தெளிந்ததொரு வாந்திபண்ணி பேதி காணில்
திறமாக நஞ்சினிலை பறித்தான் வேரே."

வைசூரியில் வாந்தி பேதி உண்டாக்க மருந்து கூறுகிறார்:-

3. "வேராகக் கொண்டு வந்து
விதமுடன் நரம்பு போக்கி
சீராக வெந்நீர் விட்டுத்
திறமுட னரைத்துக் கொண்டு
வாராக வைசூரிக் காய்ச்சல்
வகையுடன் வந்த போது
நேராகப் புன்னைக் காயளவு
வெந்நீரினிற் கொள்ள நன்றே".

4. "கொள்ளு வாய்க் காலமே தான்
குணமுடன் வாந்தி பேதி
மெள்ளவே காணுங் கண்டீர்
விபரமாய் மத்தி யானம்

தெள்ளவே கஞ்சி காய்ச்சித்
திறமுடன் கொண்ட பின்பு
அள்ளவே மருந்து தானு
மடவுடன் சொல்லக் கேளே."

5. "சொல்லக்கேள் மறுநாள் தன்னில் துவக்கமாய்க் காலமேதான்
புல்லக்கேள் புளியன்பத்திரி புகழ்கோழி யவரைக்கூட
மெல்லப்பா ருள்ளிசேர்த்து விபரமாய் வைத்துக் கொண்டு
அல்லநீ ராகாரத்தில் யடவுடன் பிசைந்து வாங்கே."
"வாங் கியே படிகாலாக வகைபடக் குடிக்க நன்றாம்
ஏங்கியே திரியவேண்டா மிம்முறை மூன்று நேரம்
பாங்குடன் சாப்பிட்டேதான் பரிவுடன் சென்ற பின்பு
தாங்கியே மருந்துதானுந் தயவுட னின்னங்கேளே."

6. "கேளப்பா பின்பு நீதான்
கிளர் பிரா யிலையுங் கூட
நர்ளப்பா மூக்கி ரட்டை
நலமுள்ள வேருங் கூட்டி
தாளப்பா தவசி யான
முருங்கைதான் சமூலஞ் சேர்த்து
ஆளப்பா நீரா காரத்
தடவுட னிறுத்து வாங்கே."

7. "வாங்கியே படிகா லாக
வளருஞ்சீ ரகமுஞ் சேர்த்து
ஓங்கிபா ருள்ளி கூட்டி
உண்மை யாய்க் குடிக்க நன்றாம்
நீங்கியே மூன்று நேரம்
நேர்மையாய்க் கொண்ட பின்பு
தாங்கியே மருந்து தானுந்
தயவுட னின்னங் கேளே."

பாதரட்சை குரு பற்பம் என்பது மிகப் பழைய செருப்பின் தோலைச் சுட்டுச் சாம்பலாக்கியதே யாகும். இதனை வெருகடியளவு ஆறிய வெந்நீரில் அனுபானித்து மூன்றுவேளை அம்மை சுரம் கண்டவுடனேயே கொடுக்க

அம்மைக்குரு அதிகமாகாது. நோயின் கடுமையிராது. நிச்சயம் பிழைப்பான் என்கிறார்.

வைசூரியில் வாந்தி பேதி உண்டாக்க வேண்டியிருந்தால்:-

நஞ்சு முறித்தான் பாலை வேரை உள்நரம்பு நீக்கி (இது கொடி இனத்தைச் சேர்ந்தது) ஆறிய வெந்நீர் விட்டு அரைத்து வைத்துக் கொண்டு அம்மை சுரங்கண்டவுடன் புன்னைக்காயளவு வெந்நீரில் காலையில் கொடுக்க வாந்திபேதி காணும். மத்தியானம் அரிசிக்கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். வாந்தி பேதியான களைப்பு நீங்கும். தன்னிலை மிகுந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தும். அம்மையின் கொடுமை இராது.

இம்மருந்து கொடுத்த மறுநாள் காலையில், புளியிலை, கோழியவரையிலை, ஈருள்ளி இம்மூன்றும், சமஎடை கொண்டு நன்றாயரைத்து நிசி நீரில் கரைத்துப் பிழிந்து சாற்றை, கால் படியளவு மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுக்க முதல் நாள் வாந்தி பேதிக்குக் கொடுத்த மருந்தின் கெடுதிகளைப் போக்கும் என்பர். (This is an antidote to Nanju Murithan Palai Ver (Root))

வேறு பிரயோகம்.

பிராயனிலை, மூக்கிரட்டை வேர், தவசி முருங்கை சமூலம் இம்மூன்று சரக்குகளையும் சமஎடை எடுத்து அரைத்து நீராகாரம் விட்டு நன்றாய்ப் பிசைந்து, பிழிந்த சாறு கால்படியில் சீரகமும், ஈருள்ளியும் சேர்த்தரைத்து அதில் கலந்து காலையில் மட்டும் மறு மூன்று நாட்கள் கொடுக்க நன்றாம்.

வைசூரியால் வந்த உட்கிரந்திக்கு மருந்து:(அதாவது உள்வெப்பத்தினால் உடல் இளைத்துப் போதல்)

1. தயவுடன் வைசூரி தானுந் தாக்கி
 யுட் கிராந்தி நின்றால்
 நயமுட னிளநீர் தன்னை
 நலம்பெறச் சீவிப் போட்டு

தியமுடன் வெந்நீர் தன்னில்
செயமுட னவித்து வாங்கி
பயமுடன் கண்திறந்து
பரிவுட னூற்றிக் கொள்ளே."

2. "கொள்ளவே யிளநீர்க் குள்ளே
கொடுத்திட மருந்து கேளாய்
நள்ளவே தேற்றான் வித்து
நவில்முத்தக் காசுங் கூட்டி
அள்ளவே கோரோ சனையு
மடைவுட னரைகா லாகத்
தெள்ளுசீ ரகந்தேன் சேர்த்துத்
திறமதா யரைத்துக் கொள்ளே

3. "கொள்ளவே வைசூரி தானுங்
குணமுடன் கிராந்தல் தீரும்
வள்ளவே இதுவுஞ் செய்து
வளர்கிடேரிச் சாணிப் பாலில்
நள்ளவே பூநா கந்தான்
நவின்றதோர் விராக னைந்தும்
தெள்ளுசீ ரகமுஞ் சேர்த்துத்
திறமதா யரைத்துக் கொண்டு
விள்ளவே யுள்ளே கொள்ள
வெட்கையுட் காந்தல் தீரும்."

4. தீரவே கற்பக் கல்லைத்
திறமதாய்ப் பலங்கால் வாங்கி
ஆரவே யடைத்துக் கொண்டு
அழகுமான் கொம்புஞ் சேர்த்து
ஊரவே காண்டா மிருக
முற்றதோர் மூன்றுக் கொன்றாய்ச்
சாரவே யரைத்துக் கொண்டு
சாப்பிடக் கிராந்தல் போமே."

இளநீர்க் காயைச் சீவி வெந்நீரில் நன்றாய் அவித்தெடுத்துக் கண் திறந்து அந்த நீரை எடுத்துக் கொள்ளவும். சீரகம், தேற்றான் வித்து, முத்தக் காசு, கோரோசனை இந்நான்கும் சிறிதளவு எடுத்து அந்தநீர் கொண்டு அரைத்துத் தேன் கூட்டியுண்ண வைசூரியால் வந்த கிராந்தல் போம்.

கிடேரிச் சாணிப் பாலில், பூநாகம் சுட்டசாம்பல் 5 வராகனெடையுடன் சிறிது சீரகமும் சேர்த்து அரைத்துக் கலக்கியுண்ண வெக்கையாலுண்டான உட்காந்தல் (கிராந்தல்) போம்.

சுக்கான் கல் ¼ பலம், மான்கொம்பு சீவல் ¼ பலம், காண்டா மிருகக் கொம்பு சீவல் பலம் ¼ இம்மூன்று மொன்றாய்ச் சேர்த்து வெந்நீர் அல்லது வேகவைத்த இளநீரிலரைத்து உண்ணக் கிராந்தல் போம் என்றறிக.

பிராயிலையை நிசித் தண்ணீரிலூற வைத்துப் பிசைந்து பிழிந்த நீரைக் கால்படி கொடுக்கக் கிராந்தல் தீருமென்பர்.

5. "போமென்ற மருந்ததுவுஞ் சொல்லக் கேளாய்ப்
புகழான பிராயிலையைப் பறித்துவந்து
ஓமென்ற புதுச்சட்டி தன்னிற் போடு
உற்றநீ ராகாரத்தாற் பிசறி வாங்கி
பாமென்ற கால்படிதா னுள்ளே கொள்ள
பண்பாகக்கி ராயந்தியது நீரே கொள்ளும்
தேமென்று மிறங்கியது லகுவே யாகுந்
திறமான நோயதுவுந் தீருந் தானே."

என்பதினாலறிக.

வைசூரி கண்டவர்களுக்குப் பேதியானால் மருந்து:-

1. தானென்ற வைசூரியது சரியு முன்னே
தருகாமல் பேதியதுதான்கண் டாக்கால்
ஊனென்ற இச்சியுட இலை பறித்து
உரமாகச் சட்டியிலே உராய்ச்சிக் கொண்டு

நானென்ற நீராகாரம் விட்டு வாங்கி
நனைவாக மூன்றுதினங் கொண்டால் தீரும்
கானென்ற சுக்கும்வேப் பீர்க்குங் கூட்டி
கனமான விலாமிச்சு வேருங் கூட்டே."

2. "கூட்டியே முத்தமிட ளிளவ றுப்பாய்க்
குணமாக வறுத்ததனை கியாழஞ் செய்து
நாட்டியே கொடுக்கவதி சாரந் தீரும்
நலமாக இன்னுமொரு கியாழஞ் சொல்வேன்
ஆட்டியதோர் பொன்முசுட்டைக் கிராம்பு தானும்
அழகான வேப்பீர்க்குங் கியர்ழங் கொள்ளத்
தாட்டிகமாய்ப் பேதியது தீருங் கண்டாய்ச்
சாதகமா யிம்மருந்தைச் சார்ந்து கொள்ளே."

பலசரக்குக் குடிநீர்:-

3. "கொள்ளவே பலசரக்குக் குடிநீர் தானுங்
குணமாகச் சொல்லுகிறோங் கேளுநன்றாய்
விள்ளவே ஆல் அத்தி வித்துதானும்
விதமான அரசுடனே ஒதியுங் கூட்டி
மெள்ளவே இச்சிதுத்தி காசான்கூட
மேலான சருகுடனே சுக்குமொன்றாய்
அள்ளவே குடிநீராய்ச் செய்து கொண்டால்
அதிசார முள்ளதெல்லா மகன்று போமே."

வைசூரி நோய் தணியுமுன்பு பேதி கண்டால்

இச்சி மரத்தின் இலை (இச்சியிலை) பறித்துவந்து இடித்துச் சட்டியிலிட்டு நீராகாரம் விட்டுப் பிசைந்து பிழிந்த சாற்றை மூன்று நாட்கள் உட்கொள்ளப் பேதி நிற்கும்.

சுக்கு, வேப்பை ஈர்க்கு, விலாமிச்சுவேர், கோரைக் கிழங்கு இவற்றைச் சமனெடை இளவறுப்பு செய்து தண்ணீர் சேர்த்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க அதிசாரந்தீரும்.

பொன்முசுட்டைவேர் , கிராம்பு, வேப்பீர்க்கு சமனெடை கொண்டு முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க பேதி தீரும்.

(பலசரக்குக் குடிநீர்) ஆலம்வித்து, அத்திவித்து, அரசு, ஓதி, இச்சி, துத்தி காயான் (காசான்) இவற்றின் சருகு, சுக்கு இவை சமன் கொண்டு முறைப்படி குடிநீர் செய்து உட்கொள்ள அதிசாரமெல்லாம் தீரும் என அறிக.

கழிச்சலுடன் கடுப்புக் காணில்:- வெங்காயத்தைப் பசுநெய்யில் வேக வைத்துக் கொடுக்கக் கடுப்புடன் கூடிய கழிச்சல்போம்.

குறிப்பு:- அன்றியும் வெங்காயத்தைக் குறுக அரிந்து நெய், ஆமணக்கெண்ணெய், தேங்காயெண்ணெய் ஏதேனுமொன்றை விட்டு நன்றாய் வதக்கி இளம் துணியில் பொட்டலம் கட்டிக் கொண்டு கடுப்புள்ள ஆசனத்தைச் சுற்றிலும் ஒற்றட மிட்டு அங்ஙனே வதக்கிய வெங்காயத்தை வைத்துக் கட்டி வைக்க விரைவில் கடுப்பு குணமாகிவிடும். இதே பக்குவத்தைக் கடுப்புள்ள மூல நோயிலும் ஒற்றடமிட்டுக் கட்டலாம்.

சீந்தில், கோரைக்கிழங்கு, சுக்கு மேல்தோல் போக்கி சமம் சேர்த்து வறுத்து முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்கக் கழிச்சல்போம், மூன்று நேரம் இக்குடிநீர் கொடுக்கவும்.

பருத்திப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், சீரகம் இவை சமன் கொண்டு மோரில் அரைத்துக் கொடுக்கக் கழிச்சல் தீரும்.

அதிசாரத்திற்கு மருந்து:-

தானென்றவை சூரியிலே யதிசாரங் கண்டால்
தயவாகச் சீந்தில் முத்தக்காசு சுக்கு
தேனென்ற மேல்தோலைத் தள்ளிப் போட்டு
திறமாக வேவறுத்துக் கியாழங் கொள்ள
மானென்ற வதிசாரம் நிற்கும் பாரு
மகிமையாய் மருந்துதான் மூன்று நேரம்
கானென்ற கியாழமது கொண்டால் தானே
கலங்கியதி சாரமெல்லலாங் கடலிற் போமே"

(விளக்கம் மேலே குறிக்கப்பட்டிருக்கிறது.)

(இதுவுமது)

"போமென்ற சிங்கிபற்பம் விராக னொன்று
புகழான மான்கொம்புத் தண்ணீர் வாங்கிக்
கானென்ற தண்ணீரிற் கலக்கிக் கொள்ளக்
கழிச்சலதி சாரமுடன் கடுப்பும் போகும்
வேமேன்ற ஈருள்ளிச் சாறுங் கூட்டி
விளங்கவே ஆவிநெய்யில் விரவிக் கொள்ளத்
தானென்ற கடுப்புடனே சீத ரத்தந்
தருகாமல் தீருமது தண்மை தானே".

மான் கொம்பு பற்பம் வராகனெடை ஒன்று எடுத்து, மான் கொம்பு சீவல் தண்ணீரில் ஊறவைத்துப் பிசைந்து நீரில் அனுபானித்துக் கொடுக்க கழிச்சல், அதிசாரம், கடுப்பும் போம் என்பர்.

அன்றியும் ஈருள்ளிச் சாறும் பசு நெய்யும் கலந்து கொள்ளக் கடுப்புடனே சீதரத்தம் போம் என அறிக.

இரத்தக் கடுப்பு மருந்து:-

1. போமென்ற வைசூரியிலே ரத்தக்கடுப்பு கண்டால்
புகழான நாவலுட முற்றப் பட்டை
ஆமென்றுது வைத்தாவின் பாலிற் சேர்த்து
அழகாகப் பிழிந்துடனே வடியே கட்டி
காமென்ற கால்படிதா னுள்ளே கொள்ளக்
கடுப்பெடுத்த ரத்தமது கலங்கிப் போகும்
தேமென்ற விம்மருந்து கொண்ட போதே
திறமாகத் தீருமிது தெரிந்து செய்யே."

(இதுவுமது)

2. " செய்யவே வெண்ணத்தி வேரின் பட்டைத்
திறமான ஈருள்ளிச் சீரகமுஞ் சேர்த்து
பையவே வெள்ளாட்டின் பாலில் தானே
பண்பாக வரைத்தருந்தக் கடுப்புத் தீரும்

மெய்யவே ஈருள்ளி ஆவி நெய்யில்
விளங்கவே வேகவைத்துக் கொள்ளப் போகும்
கையாரக் கண்டதிந்த மருந்தைக் கண்டால்
கடல்கடந்து போகுமடா கடுப்புத்தானே."

வைசூரியில் இரத்தக் கடுப்பு கண்டால் முற்றின நாவல் மரத்தின் பட்டை கொண்டு வந்து இடித்து ஆவின் பாலில் கலந்து நன்றாய்ப் பிசைந்து பிழிந்த சாற்றை வடிகட்டி கால்படி அளவு சாறு உள்ளே கொடுக்க இரத்தக் கடுப்பு நீங்கும். இரத்தக் கழிச்சலும்போம்.

அன்றியும் வெண்ணத்தி வேரின் பட்டை, ஈருள்ளி, சீரகம் சேர்த்து வெள்ளாட்டின் பால் விட்டரைத்து பாலில் கலக்கிக் கொள்ள கடுப்புத் தீரும்.

மேலும் முன் கூறியது போல் ஈருள்ளியை ஆவின் நெய்யில் வேகவைத்து உண்ணக் கடுப்பு தீரும். இவையாவும் கைகண்ட மருந்துகளாகும் என்பர்.

தாழை விழுதுக் குடிநீர் அல்லது தண்ணீர் விட்டான் கிழங்குக் குடிநீர் முறைப்படி தயாரித்துக் கொடுக்க இரத்தக் கழிச்சல் போம்.

அம்மை நோயில் மலச்சிக்கல் இருப்பின் மருந்து:-

1. "காணுமே வைசூரியிலே மலமே சிக்கில்
கனமான தேகமுப் பிசமே காணும்
தோணுமடா கியாழங்கள் கண்ட போது
தொல்லுலகில் மருந்தொன்று சொல்லக் கேளு
ஆணுமடா ஈருள்ளி விராக னைந்து
அழகான கற்கண்டு விராக னைந்து
பூணுமடா ஏரண்டத் தெண்ணெய் தானும்
புகழாகப் படிகாலி லரைத்துக் கொள்ளே.

(இதுவுமது)

2. "கொள்ளவே மலச லங்கள் கட்டு விட்டுக்
குறிப்பாக உப்பிசமுங் குணமாய்ப் போகும்

கள்ளமில்லா தேகமதுக் குறுதி யாகுங்
கனமான மலசலங்க ளிறங்கு மப்பா
மெள்ளவே யிம்மருந்தை விரும்பிச் செய்து
மேலான பராபரத்தைத் தொழுது போற்றி
அள்ளவே உமையாள்தன் பாதம் போற்றி
அழகாக யிம்மருந்தை யருள் செய்வீரே."

3. அருளான கலைக்கொம்பை ஊறப் போட்டு
அழகாகக் கழுவியதை உலரப் போட்டுத்
திரளான வரத்தாலே ராவி யேதான்
தேர்ந்தபொடி பலமிரண்டு யெடுத்துக் கொண்டு
வருளான வெந்நீரைக் காய்ச்சி நன்றாய்
மகிழ்வாகத் தாளியிலே ஊற்றிக் கொண்டு
பொருளான மான்கொம்பின் பொடியைத் தானே
புகழாகத் தண்ணீரி லூறப் போடே."

4. "போட்டதண்ணீர் தனையிறுத்துத் தாகத் துக்குப்
புகழாகக் கொடுத்துவர சொல்லக் கேளு
ஆட்டமிட்ட வைசூரியது லகுவாங் கண்டாய்
அழகாக மூன்றாம்நாள் மறுதண் ணீர்செய்
தேட்டமுடன் நோய் தீரும் பருவ மட்டுந்
திறமாக இந்தமுறை செய்து தீரு
வாட்டமில்லா நோய்தீருந் தப்பா தப்பா
வாகாக விம்முறையை வணங்கிச் செய்யே."

வைசூரியில் மலச்சிக்க லேற்பட்டால் தேகங் கனக்கும், உப்பிசமுமாகும். இதற்கு மருந்து கூறுகிறார். ஈருள்ளி வராகனெடை 5, கற்கண்டு வராகனெடை 5, இவற்றை அரைத்து சிற்றாமணக்கெண்ணெய் கால் படியில் கலந்து வைத்துக் கொண்டு தக்க அளவில் ஒரு வேளை கொடுக்க மலம் கழியும்; உப்பிசமுங் குணமாகும்; தேகம் உறுதிப்படும்.

வைசூரியில் தண்ணீர் தாகமிருப்பின் மருந்து கூறுகிறார்:-

கலைக் கொம்பைத் தண்ணீரில் ஊறவைத்துக் கழுவி உலர்த்தி அரத்தால் ராவி எடுத்தபொடி இரண்டு பலம், ஆறிய வெந்நீரில் ஊறவைத்து

அதனை அடிக்கடி வடிகட்டித் தாகத்திற்குக் குடித்துவர நீர் வேட்கை தாகம் தீரும். மூன்று நாள்களுக்கொரு முறை நோய் தீருமட்டும் இந்த நீரைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

அம்மை நோயில் காணும் சுரத்திற்குக் குடிநீர்கள் கூறுகிறார்:-

எலுமிச்சம் வேர்ப்பட்டை, சீந்தில் கொடி, ஏலம், பற்பாடகம், சந்தனம், கோரைக் கிழங்கு, விலாமிச்சு வேர் இவை வகைக்கு ½ பலம் வீதம் எடுத்து முறைப்படி குடிநீர் செய்து தக்கஅளவில் காலை, மாலை கொடுக்க சுரம் குணமாகும்.

மகரப்பூ (காமப்பூ) 5 வராகனெடை எடுத்து முறைப்படி குடிநீர் செய்து தக்க அளவில் காலை, மாலை கொடுக்கச் சுரம் தணியும்; நயம் கோரோசனை ¼ வராகனெடை அந்தக் குடிநீரில் உரைத்துக் கொடுக்க விரைவில் சுரம் தணியும்.

தொண்டைக் கம்மலுக்கு மருந்து கூறுகிறார்:-

" தண்மையென்ற வைசூரியது மென்னிக் கட்டி
 தருகாமல் சேத்துமந்தான் நெஞ்சில் நின்றால்
வண்மையென்ற கற்பூர வள்ளிச் சாற்றில்
 வளமான கோரோசனையுங் கூட்டி யுண்ண
வெண்மையென்ற மொழியுண்டாங் கம்மல் தீரும்
 மெல்லியரே நீயிதனை விரும்பிச் செய்தால்
கண்மையென்ற மாதுளம்பூக் கியாழஞ் செய்து
 கருத்தேனுஞ் சம்பழச்சாறு மூன்று மொன்றே."

(இதுவுமது)

"ஒன்றாக மத்தித்துக் கொப்ப ளித்தால்
 ஓகோகோ மென்னிக்கட்டு உடனே தீரும்
நன்றாகக் கம்மலது வாங்கிப் போகும்
 நலமாக உட்கொள்ள வாகா தப்பா

செண்டுமலர்க் கொங்கையரே இந்தப் போக்கு
செகத்திலிது உசிதமாஞ் செய்து பாரு
மன்றாடி தேவியர்க்கு ஈசன் றானு
மகிமையுட னுரைத்ததிது வாசி யாமே,"

வைசூரியில் தொண்டை கம்மலிருப்பின்:-

கற்பூரவள்ளி இலைச்சாற்றில் கோரோசனையை உரைத்துக் கொடுக்கக் கம்மல் தீரும்.

அத்துடன் மாதுளம்பூக்கியாழம், எலுமிச்சம் பழச்சாறு, தேன் இம்மூன்றும் சமன்கூட்டி வாய் கொப்பளித்தும், தொண்டையில் தடவியும் வரக் குரற்கம்மல் நோய் விரைவில் குணமாகும்; இதனை உள்ளே சாப்பிடக்கூடாது.

மேலே கூறிய சுரக்கியாழங்களுக்கு மேற்கோள்:-

1. ஆமென்ற வைசூரியது சுரமே கண்டால்
அழகான வெலுமிச்சின் வேரின் பட்டை
சேமென்ற வேலமுடன் சீந்திலா மிச்சுந்
திறமான பற்படகஞ் சந்தனமு முத்தம்
பாமென்ற வகையைந்தும் விராகன் வீதம்
பண்பாகக் கியாழஞ்செய் மூன்று நேரம்
வாமென்று குடித்திடவே சுரமுந் தீரும்
வளமாக விம்மருந்தை வளமாய்ச் செய்யே."

2. "செய்யடா வைசூரியதில் சுரமே கண்டால்
திறமாகச் சொல்லுகிறேன் காமப் பூதான்
பையவே விராகனுமோ வைந்தெ டுத்து
பாங்காகக் கியாழஞ்செய் தீரு மெய்தான்
மெய்யடா ஆவின்கோ ரோசனைக்கா லாக
விளங்கவே அதில்கலந் துள்ளே கொள்ளு
நையடா சுரங்களெல்லாந் தீரும் பாரு
நலமாகக் கிராந்தியது வெளியிற் காணும்."

(இதன் விளக்கம் மேலே குறிப்பிட்டுள்ளது)

வைசூரியில் கண்ணிலுண்டாம் நோய்களுக்குப் பரிகாரம் கூறுகிறார்:-

விழி விதனம் தீர ஒற்றடம்:

1. " செய்யப்பா நேத்திரத்திற் கொத்திடமே கேளு
திறமான சீரகம்பொட் டணமே கட்டி
ஐயப்பா முலைப்பாலில் துவைத்துக் கொண்டு
அழகான விழிதனி லொத்திடநன் றாகும்
நய்யப்பா சுடுசோற்றில் வெண்ணெய் சேர்த்து
நலமான பொட்டணமாய்க் கட்டிக் கொண்டு
வையப்பா நீராகா ரத்தில் தோய்த்து
வகையாக வொத்தவிழி விதனம் தீரும்."

நற்சீரகம் பொட்டணம் கட்டி முலைப்பாலில் தோய்த்து கண்ணிற்கு ஒற்றிடமிட விழியிலுண்டாம் வலி போம்.

சுடு சோற்றில் வெண்ணெய் சேர்த்துப் பிசைந்து பொட்டணம் கட்டி நீராகாரத்தில் தோய்த்து கண்ணிற்கு ஒற்றடமிட விழி விதனந் தீரும். கண்ணில் நீர்வடிதல் நிற்கும்.

கண் பூவிற்கு மருந்து:-

1. ஆமென்ற விழியதனில் பூவே வந்தால்
அதற்குமொரு மருந்துதா னரையக் கேளு
ஏமென்ற பனங்குருத்தை நறுக்கி யேதா
னிதமாக நயனமதிற் பிழியத் தீரும்.
பாமென்ற முருங்கைப்பூ நெருஞ்சிப் பூவும்
பரிவான நந்தியா வட்டைப் பூவுங் கூட்டி
சேமென்ற சீரகமுங் கூட்டிக் குத்தித்
திறமாகப் பிழிந்திடப்பூத் தீருந் தானே."

இளம்பனங் குருத்தை நறுக்கிக் கண்களில் பிழியக் கண்பூ நீங்கும்.

முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நந்தியாவட்டைப்பூ, சீரகம் இவை கூட்டி இடித்து அல்லது கசக்கிக் கண்ணில் சாற்றைப் பிழிந்திடக் கண்ணில் பூ நிவர்த்தியாம்.

நெல்லியிலையை முறைப்படி குடிநீராக்கிக் கண்களைக் கழுவி வரக் கண்ளிலுண்டாம் அம்மைக் கொப்புளங்கள் போம். கண்களில் பூ வராமற்றடுக்கும்.

கம்பு என்னும் தானியத்தைக் கூழாக்கி நீர்விட்டுக் கரைத்துத் தெளிந்த நீரைக் கொண்டு கண்களைக் கழுவிவர, அதனையே உள்ளே சாப்பிட்டு வரக் கண்களிலுண்டாம் கொப்புளங்கள் குணமாகும்.

கண்களில் குரு வராமற்றடுக்க மருந்து:-

"தீருமடா விழியதனில் குருவ ராமல்
செப்புகிறேன் மருந்தொன்று திறமாய்க் கேளு
ஆருமடா வைசூரி சுரங்காயும் போது
அழகான உள்ளிப்பூ ஒன்று வாங்கி
பாருமடா மறுமனுடன் வாயால் மென்று
பதராம லிருகண்ணி லூதத் தானே
காருமடா கண்தனிலே குருவ ராது
கருத்தாக விம்முறையைக் கருதிக் கொள்ளே."

மற்றொரு மனிதன் வெங்காயப் பூவை (காம்போடு) வாயிலிட்டு மென்று நோயினனின் கண்களில் ஊதக் கண்களில் குருவராமற்றடுக்கும். குரு ஏற்கெனவே கண்களில் உண்டாயிருந்தால் அதனை வற்றவைக்கும் என்பர்.

வாயிலும் நீர்த் தாரையிலும் (சிறு நீரிலும்) காணுகிற ரத்தத்திற்கு மருந்து:-

1. "கொள்ளென்ற வைசூரியது கண்ட பேர்க்குக்
கொடியதொரு வாயாலே ரத்தங் கக்கும்
அள்ளென்ற நீருடனே கூட
அழகாக ரத்தமது காணுங் கண்டாய்

விள்ளென்ற யிம்முறைக்கு மருந்து தானே
விபரமாய்ச் சொல்லுகிறேன் கேளு கேளு
தள்ளென்ற பூநாக மைந்தெ டுத்துத்
தவிராமற் கழுவிநன்றாய் எடுத்துக் கொண்டே."

2. கொண்டதொரு நன்னாரி வேருங்கூட்டிக்
குறிப்பாக நரம்புதள்ளி மேல்தோல் போக்கி
அண்ட தொரு விராகனிடை யிரண்டெ டுத்து
அழகான முன்மருந்தோ டொக்கச் சேர்த்து
முண்டதொரு மான்கொம்பு சாந்து சேர்த்து
முறைமையாய்க் கொம்பூறுந் தண்ணீர் தன்னில்
விண்டதொரு மருந்தெல்லாஞ் சேர்த்துத் தானே
விபரமாய்க் கொண்டிடவே யுதிரம் போமே."

3. போமென்ற உதிரமது போகும் நன்றாய்
புகழாக மூன்றுதினங் கொண்டா யானால்
காமென்ற சன்னியது கடலிற் பூக்குங்
கைக்கடங்காத் தோடமது கலங்கிப் போகும்
தாமென்ற கிராந்தியது தீருங் கண்டீர்
தளதளென மேலெழும்பி இறங்கும் பாரு
ஆலென்ற இம்மருந்தை யாருக்குச் சொன்னோ
மழகான சித்தருக்குச் சொன்னோங் கண்டீர்."

வைசூரி நோயில் வாயால் இரத்தம் கக்கியும், நீர்த்தாரையில் இரத்தம் வெளிப்படுவதாகவு மிருந்தால் ஐந்து மண்புழுவைக் (பூ நாகம்) கொண்டுவந்து நன்றாய்க் கழுவி உலர்த்தி வறுத்துச் சாம்பலாக்கி எடுத்துக் கொண்டு, நன்னாரி வேர்ச் சூரணம் (வேரின் நரம்பும் மேல் தோலும் போக்கி) வராகனெடை இரண்டு, மான்கொம்பு இழைத்த சாந்து இரண்டு வராகனெடை இம்மூன்றையும் மான்கொம்பு ராவிய பொடி ஊறிய தண்ணீர் விட்டரைத்து மூன்று நாட்கள் கொடுக்க இரத்தம் நின்று போம். சன்னி தோடங்கள் யாவும் குணமாகி விடும். உட்காந்தல் நோயும் (கிராந்தல்) தீரும்.

வைசூரி சூலை நோய்க்குப் பரிகாரம்:-

"கண்டீரே வைசூரியதில் சூலை கட்டில்
கனமான வவிழ்தமொன்று கழறக் கேளு
தெண்டிரையில் பழங்கூரை வைக்கோல் சேர்த்து
திறமான வேம்பினிலை கூடக் கட்டி
மண்டியவித் தொத்திட்டு வைத்துக் கட்ட
மகிழ்வான சூலையது வாங்கிப் போகும்
பண்டிதரே யிம்முறையை வைத்து மூட்டு
பரிவான வறுதினத்தில் தீருந் தானே."

(சூலைக்கு வேது)

"தானென்ற வேதுவொன்று சொல்லக் கேளு
தயவாகச் சொல்லுகிறேன் மனித ருக்காய்
வானென்ற வட்டமிட்ட துத்தி தானும்
மகிழ்வாகச் சமூலமது வேக வைத்து
நானென்ற ஒத்திட்டு வேது வார்க்க
நாளுமொரு பதிமூன்றில் சூலை வாங்கும்
மானென்ற விழியணங்கே இந்தப்போக்கை
மகிமையில்லாப் பேர்களுக்கு உரைசெய் யாதே".

வைசூரி சூலை என்னும் கைகால்களின் கீல்களில் வீக்கம், முடக்கு ஏற்படின்: பழங்கூரை வைக்கோலும் வேப்பிலையும் சமம் சேர்த்துத் தண்ணீர் விட்டு வேகவைத்து, அந்தக்கியாழத்தை வேது விட்டும், சக்கையை பொட்டலங்கட்டி ஒற்றடமிட்டு நோயுள்ள இடத்தில் வைத்துக் கட்டி வர - இங்ஙனம் ஆறுநாட்கள் செய்யக் குணமாகும். வேகவைத்தெடுத்த சரக்கைச் சூட்டுடன் ஒற்றடமிட்டு வைத்துக் கட்டினாலே போதுமானது.

வட்டத் துத்தி சமூலம் கொண்டு வந்து தண்ணீர் விட்டு வேகவைத்து ஒற்றடமிட்டும் வேதுவார்க்க இங்ஙனம் பதிமூன்று நாட்கள் செய்துவர வைசூரி சூலை குணமாகும்.

ஆறாத புண்ணுக்கு மருந்து:-

"செய்யாத வைசூரியது புண்ணாறா விட்டால்
திறமாக மருந்தொன்று செப்பக் கேளு
கையார மருந்துதான் முத்தத் தேங்காய்க்
கனமாகத் திருகியந்தப் பூவை வாங்கி
ஐயாரப் புளியன்விரை மேல்தோல் தன்னை
அழகாகப் பொடிசெய்து பூவிற் சேர்த்து
மெய்யாகப் பிசைந்து பிழிதைலம்
விபரமாய்த் தைலமதைப் புண்ணிற் பூசே."

புதிய புளியங்கொட்டைகளைக் கழுவியுலர்த்தி மேற்றோலை மட்டும் சேகரித்துப் பொடித்து முற்றின தேங்காய்த் துருவலுடன் சேர்த்துப் பிசைந்து பிழிந்தால் எண்ணெய் கசியும். இந்த எண்ணெயை அம்மைக் கொப்புளங்கள், ஆறாத புண்கள் இவற்றில் பூசிவர எளிதில் உலர்ந்து போம், தோல் உரிந்த (உதிர்ந்த) பின்னும் பூசிவர அம்மைக் கொப்புளங்களின் வடு தெரியாமற்போம்.

ஆறாத புண்ணுக்கு உள்மருந்து:-

"பூசவே புண்ணாறு மிதனை நன்றாய்ப்
புகழாகச் செய்துவர வீக்கம் போகும்
நேசமாய் வைசூரியது சரிந்தே ழாம்நாள்
நினைவாக வாரோக்கிய ஸ்நானஞ் செய்ய
வாசமாய்ச் சொல்லுகிறேன் கேளு நன்றாய்
வகையான பருத்திப்பிஞ் சத்திப் பிஞ்சும்
பாசமாய் சாதிக்காய் சீரகமுங் கூட்டிப்
பரிவாக மோரிலரைத் துள்ளே கொள்ளே."

நலங்கிட்டு மூழ்க:-

2. கொள்ளடா வேப்பிலையு மஞ்சள் தானுங்
குணமான மூதண்டங் கூடச் சேர்த்து
விள்ளடா மோர்விட் டரைத்து நன்றாய்
மேலாக சிரசுக்குத் தேய்த்து தானே

கிள்ளடா வுடம்பெல்லாம் நலங்கே யிட்டுக்
கிருபையாய்க் குளிர்ந்தசலந் தன்னை வார்ப்பாய்
தள்ளடா யிப்படியே மூன்று நாள் தான்
தயவாக வொன்றைவிட் டொருநாள் மூழ்கே."

2. "மூழ்கியபின் வேப்பிலையு மஞ்சள் தானு
முசியாமல் தானரைத்துப் புண்ணிற் பூசு
ஆழ்கியபின் தயிர்தேய்த்துத் தண்ணீர் வாரு
அடவாக வொன்றைவிட் டொருநாள் மூழ்க
தேழ்கியபின் தேகமதின் றணல்கள் போகுஞ்
சிவசிவா இன்னமொன்று திறமாய்க் கேளு
பாழ்கியதோர் விளக்கெண்ணெய் தேய்த்து நன்றாய்
பரிவாக உசிலையரப் பிட்டு மூழ்கே."

"மூழ்கியபின் மோருஞ் சாதமுமே கொள்ளு
முசியாம லீருள்ளிகூட்டி யுண்ணு
ஆழ்கியபின் ஸ்நானஞ்செய் நாளைத் தொட்டு
அடராக விப்படியே அசனங் கொள்ளு
தாழ்கியபின் தேகமது பிலக்கும் நன்றாய்
தயவாக அசனமது நன்றாய்க் கொள்ளும்
ஆழ்கியபின் தேகமது பிலமே யாகும்.
மன்மதன்போல் தேகமெல்லாங் குளிர்ச்சி யாமே.

வைசூரி இறங்கிய ஏழாம் நாள் ஆரோக்கிய ஸ்நானம் செய்ய வேண்டும். அன்றைய தினம் காலையில் உள்மருந்து கொள்ளல் வேண்டும். அதற்குப் பருத்திப் பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், சீரகம் இவை கூட்டி மோரில் அரைத்து உள்ளே சாப்பிட வேண்டும், அதன்பின் வேப்பிலையும் மஞ்சளும் அறுகம்வேரும் சேர்த்து மோர்விட்டரைத்து சிரசிலும் உடம்பிலும் இலேசாய்த் தேய்த்துக் குளிர ஆறிய வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவும். இப்படியே ஒன்றை விட்டொரு நாள் மூன்று முறை முழுகி வரவும்.

முழுகியபின் புண்ணில் பூசுவதற்கு வேப்பிலையும், மஞ்சளும் சேர்த்தரைத்துப் பூசவும், அதன்பின் ஒன்றை விட்டொருநாள் தயிர் தேய்த்துத் தண்ணீர் வார்க்கவும். இவ்விதம் முழுகி வர தேகத்தின் காந்தல்

தணியும். அதற்குப் பிறகு சிற்றாமணக்கெண்ணெய் தேய்த்து உசிலையரப்பிட்டுத் தலைமுழுகி வரவும். தலைமுழுகிய அன்று மோருஞ்சாதமும் உண்ணவும். இதே விதமாகச் செய்து வந்தால் தேகம் பலம் பெறும். பசி தீபனம் உண்டாகும். ஆகாரத்தை நன்றாய் வாங்கும். தேகங்குளிர்ச்சி அடையும் என அறிக. தண்ணீரில் வேப்பிலை போட்டுக்கொதிக்க வைத்துக் குளிர ஆறியபின் அந்நீரில் ஸ்நானம் செய்யவும்.

வைசூரி கண்ட ஆறு மாதத்துக்குள் வியாதி வந்தால் பரிகாரம்:

" ஆமென்ற வைசூரியது வந்த பேர்க்கு
அழகாகச் சொல்லுகிறேன் விபரங் கேளு
தாமென்ற ஆறுதிங்கள் செல்லு மட்டுஞ்
சரீரத்தில் பிலனுமோ நன்றா யில்லை
வாமென்றி தற்குள்ளே ரோகம் வந்தால்
மகத்தான மருந்துதான் லகுவாய்ச் சொல்வாய்
தேமென்ற கடுங்கார வவிழ்தஞ் செய்தால்
தேகத்தில் பொல்லாப்புச் சேருங் காணே."

வைசூரி கண்ட பேர்களுக்கு ஆறுமாத காலத்திற்குள் வேறு எந்தவித நோய்கள் வந்திட்டாலும் கடுங்காரமான மருந்துகளைக் கொடுக்கக்கூடாது. மிகவும் சாந்தமானதும் குளிர்ச்சியானதுமான மருந்துகளைக் கொடுத்துக் குணப்படுத்த வேண்டுமென்கிறார்.

மறுமுள்ளு விபரம்.

1."காணப்பா வைசூரிவந்து தண்ணீர் விட்டால்
கனமான மறுமுள்ளு வருவ தேது
தோணப்பா வைசூரி கண்டநாளைத் தொட்டு
துடங்கியநா ளொன்பதுக்குங் குருவே காணும்
ஆணப்பா குருகண்ட நவதி னத்தில்
அடவாக நீர்கொண்டு இறங்குங் கண்டாய்
நாளப்பா யிளங்குருவில் தண்ணீர் விட்டால்
நலமான மறுமுள்ளு காணுந் தானே"

பெரியம்மையின் சுரங்காய்ந்துவிட்டபின் உண்டாம் கொப்புளங்கள் தோன்றுவதும் அடங்குவதுமாயிருக்கும். சுரம் விட்ட 9 அல்லது 10 தினங்களுக்குள் அக்கொப்புளங்கள் யாவும் வாடியுலர்ந்து தோல் உரியும். சில வேளையில் தலை முழுகலாமென்று நினைத்த சமயம் வியர்க்குரு போல் சிறு குருக்கள் காணும். இதனைக் கவனியாது தலைமுழுகின் அம்மை கொப்புளங்கள் போலவே பிறந்து அவ்வடுவிலேயே கிளைத்து முட்கள் போல் காணப்படுவது மறுமுள் எனப்படும். மறுமுள் கண்டவுடனேயே சுரமும் தொடரும்.

2. "தானென்ற மறுமுள்ளு காணும் போது
   தணலாகச் சரீரத்திற் சுரமே காணும்
மானென்ற உடலதிலே மறுமுள் ளுந்தான்
   வளமாக வேபுடைத்து ரணமுங் காணும்
பானென்ற பலவகையாய்ப் புண்ணே காணும்
   பரிவான சுரமதுவுந் தீரத் தானே
கானென்ற மருந்ததுவுஞ் சொல்லக் கேளு
   கடவுள்பாதம் போற்றியே கேளு கேளே.

என்பதினால் மறுமுள்ளு தோன்றும் போது காணும் சுரம் தணலாகக் காயும், மறுமுள்ளில் இரணமுண்டாகும்; பலவகைப் புண்ணாக இருக்கும் என்கிறார். இதற்குப் பரிகாரமும் கூறுகிறார்.

மறுமுள்ளுக் குடிநீர்.

1. கேளப்பா சுரமுந் தீரக்
   கிருபையாய்க் கியாழஞ் சொல்வேன்
வாளப்பா சாதிக் காயும்
   வளமான நறுக்கு மூலம்
தேளப்பா கிராம்பு கூடச்
   சீரகங் கூட்டிக் கொண்டு
நாளப்பா கியாழஞ் செய்து
   நலம்பெற இறுத்து வாங்கே".

2. "வாங்கிய கியாழந் தன்னில்
வளர்நிம்பச் சாறுங் கூட்டி
ஓங்கிஈ ருள்ளிச் சாறு
முகந்துடன் கூடக் கூட்டி
பாங்குள்ள சட்டி காய்ந்து
பரிவுடன் முறித்து வாங்கி
தீங்கில்லாத் தேனுஞ் சேர்த்துத்
திறமுட னுள்ளுக் கீயே,"

மறுமுள் சுரந்தீருவதற்குக் கியாழம் கூறுகிறார். சாதிக்காய், திப்பிலி மூலம், கிராம்பு, சீரகம் இவை சமனெடை சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு வடிகட்டி அத்துடன் எலுமிச்சம்பழச்சாறும், ஈருள்ளிச் சாறும் சமன் கூட்டி சட்டியைக் காயவைத்து முறித்து வாங்கித் தேனும் சேர்த்து உள்ளுக்குக் காலை, மாலை கொடுக்கச் சுரம் போம், இரணமுமாறும்.

மறுமுள் இரணத்திற்கு மேற்பூச்சு மருந்து.

1. "ஈய்ந்திட சுரமுந் தீரும்
இயல்புடன் ரணமு மாறும்
வாய்ந்திடு மருந்து தானும்
வகையுட னின்னங் கேளாய்
பாய்ந்திட சூடன் றானும்
பகர்வட்டத் துத்திச் சாற்றில்
தேய்ந்திட மத்தித் தேதான்
திருவிளக் கெண்ணெய் சேர்த்து
சாய்ந்திட ரணத்திற் பூச
சகலபுண் ணாறுந் தானே."

2. "ஆறிய வைசூரி வந்து
வடுத்திடு மன்றே நீதான்
கூறிய குதிரை லத்திப்
புதிதாய்ப் பதினொன் றாக
தேறியே எடுத்து வந்து
திறமதாய்ச் சட்டி தன்னில்
பாறிய தண்ணீர் விட்டுப்
பாகமாய்க் கரைத்து வையே.'

3. "வைத்ததோர் தண்ணீர் தன்னை
வகைபட சாமஞ் சென்றால்
கைத்ததோர் தெளிவி றுத்துக்
கனம்பெற உள்ளே கொள்ளு
மைத்ததோர் மருந்துக் கெல்லாம்
வகைபட இந்நீர் சேர்த்து
பைத்ததோர் மருந்தைச் செய்தால்
பலபல வைசூர் யாமே."

4. " ஆமென்ற லெத்தித் தானு
மழகதா யன்றன் றைக்கு
தாமென்ற புதிதாய்ச் சேர்த்து
தயவாக வருந்து வீரால்
வாமென்ற வைசூரி வந்து
வளர்ஸ்நானஞ் செய்யு மட்டும்
போமென்ற தாகத் திற்குப்
பொருந்திய மருந்து கேளே."

மேற்பூச்சு- நாட்டுச்சூடன் வாங்கித் துத்தியிலைச் சாற்றிலரைத்து அத்துடன் விளக்கெண்ணெய் கூட்டி இரணத்தில் பூசிவரப் புண்ணாறிவிடும்.

வைசூரி தோன்றிய அன்று முதல் புதிதான குதிரைலத்தி பதினொன்று கொண்டுவந்து சட்டியில் போட்டு தண்ணீர் விட்டுக் கரைத்து வைக்கவும். ஒரு சாமம் சென்றபின் தெளிவிறுத்துத் தக்க அளவில் உள்ளே கொடுப்பதோடு மற்ற மருந்துகளுக்கெல்லாம் இந்நீரையே அனுபானமாகச் சேர்த்தும் கொடுக்கலாம். பலவகைப்பட்ட வைசூரியிலும் கொடுத்துவர நன்று. அன்றன்றைக்குப் புதிது புதிதாகத் தயாரிக்க வேணும். ஆரம்ப முதல் ஸ்நானம் முடியுமட்டும் இம்மருந்தை உள்ளுக்குச் சாப்பிட்டுவரச் சுரம், கொப்புளங்கள், இரணம் யாவும் குணமாகும். (வைசூரி நூல்)

அம்மை மிகாதிருக்க மற்றொரு பரிகாரம்:-

புலிக்கொழுப்பு ½ முதல் 1 குன்றி எடை பேயன் வாழைப்பழத்தில் பொதிந்து ஒரே வேளை கொடுக்க அம்மை மிகாது எனவும் பனைமுகரி முதலிய கொடிய அம்மையும் குணமாகும் எனக் கூறுவர்.

பயற்றம்மையின் மருத்துவம்:

ஒருகால் சுரம் அதிகமாயிருந்தால் பெரியம்மையில் கூறிய குடிநீர்களையும் பற்பங்களையும் கொடுத்தால் போதுமானது.

தட்டம்மையின் மருத்துவம்:

ஐயழல் குற்றத்தாலுண்டாகும் இந்த அம்மை நோயைக் குணப்படுத்த காரமான மருந்துகளைக் கொடுக்காமல் பெரியம்மையில் கூறிய குடிநீர்களையும் பற்பங்களையும் கொடுக்கலாம். அன்றியும் சில நூல்களில் கீழ்கண்ட பரிகாரங்கள் இந்நோய்க்குக் கூறப்பட்டுள்ளன.

1. துளசி, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவற்றின் இலை ஒரு பிடிவீதம் சேகரித்து தேன் விட்டு வறுத்து ஒரு படி நீர் விட்டு, அத்துடன் கண்டுபாரங்கி, அரத்தை, தாளிசம், சாதிப்பத்திரி, அதிமதுரம் வகைக்கு 2 வராகனெடை வீதம் கூட்டி எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி தக்கஅளவில் காலை, மாலை கொடுக்க சுரம் தணியும். ஐயழல் குறி குணங்களும் போம்.

2. வேப்பீர்க்கு, கறிவேப்பிலை ஈர்க்கு, மாந்தளிர், எலுமிச்சு வேர் வகைக்கு ஒரு பலம், வெள்ளைப் பூண்டு, திரி 4, தண்ணீர் ஒரு படி விட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி தக்கஅளவில் காலை, மாலை, கொடுக்கத் தொண்டைப் புண், நாப்புண், பேதி இவை போம்.

3. கடுக்காய்ப் பூ, வாழைப்பூக்குருத்து, வெள்ளுள்ளி, நுணாயிலை, பொடுதலையிலை, கோவையிலை, மாந்துளிர் இவைகளையிடித்துப் பிழிந்த சாற்றை ஒரு உச்சிக்கரண்டி வீதம் (Tea spoon full) காலை, மாலை கொடுக்க மேல் கண்ட நோய்கள் போம்.

4. அன்றியும், இலிங்கத்துவர், பவள பற்பம், பூங்காவிச் செந்தூரம், கட்டுவாதி மாத்திரை, ஊழி மெழுகு இவைகளிலொன்றை குறி குணங்களுக்கேற்றவாறு உபயோகிக்கலாம்.

உணவில் பேயன் வாழைப்பழம் தினம் 3,4 சாப்பிடக் கொடுத்தலும், கஞ்சி வகைகள் கொடுத்தலும் நல்லது. (சி.ம.)

பூட்டுத்தாளம்மை (Mumps) மருத்துவம்:

சுரமுள்ள போது பித்த சுரத்திற்கான குடிநீர்கள், பற்பச் செந்தூரங்கள், மாத்திரைகள் கொடுக்கலாம்.

பூட்டுத்தாள் வீக்கத்திற்கு:

வேப்பிலையுடன் மஞ்சள் கூட்டியரைத்துப் பற்றிடக் குணமாம்.

1. இந்நோயில் கழுத்தில் பொன் சங்கிலி போடுவதால் சங்கிலியின் பருமனோடு கனமும் சேர்ந்து வீக்கத்தில் தாக்கக் குணம் அடையும். ஆனதுபற்றியே இந்நோயைப் 'பொன்னுக்கு வீங்கி' என்பர். இதன்றியும் தங்கம் கபத்தைப் போக்குமாதலால் தங்கச் சங்கிலியைக் கழுத்தில் அணிவதைக் காட்டிலும் தங்க பற்பம், செந்தூரம் கொடுக்கலாமென சித்த மருத்துவம் கூறுகிறது.

சில வேளை தாள்பூட்டு வீக்கம் வாடாமல் சீழ் கோர்த்துச்சுரம் அதிகமுண்டாக்கிக் குத்தல், வலி முதலான துன்பங்களுக்காளாவது முண்டு. அதனால் சீழை வெளியேற்ற அறுவை மருத்துவம் செய்யப்படுவதுமுண்டு.

சிலசமயம் இந்நோய் கண்டவர்களுக்கு அக்காலக் கெடு பிரகாரம் குணமாகாது போனால் ஆண்களுக்கு விரை வீக்கமும், பெண்களுக்குக் கொங்கை வீக்கமும் உண்டாவதுண்டு.

விரை வீக்கம் ஏற்படின் சுக்குத்தூள், கழற்சிப் பருப்பு சமன்கொண்டு முட்டை வெண்கரு விட்டரைத்து வீக்கத்தில் பற்றிடவும், அல்லது வேப்பிலையும், மஞ்சளும் அரைத்து வீக்கத்தில் பற்றிடலாம். அல்லது மயனத் தைலம் பூசி வர வீக்கமும் வேதனையும் ஒடுங்கும். குக்கில் தைலமும் பூசலாம்.

இதே மாதிரி கொங்கை வீக்கத்திற்கும் மேற் பூச்சுக்களை, உபயோகிக்கலாம்.

மேற் பூச்சுக்களால் விரை வீக்கம், கொங்கை வீக்கம் குணம் ஆகாவிடில் தங்க பற்பம், செந்தூரம் சேர்த்து வான் மெழுகு, சிற்றண்ட மெழுகு இவை ஏதேனுமொன்றை உள்ளுக்குக் கொடுக்க குணமாகும்.

குறிப்பு- பொரியரிசி, வேப்பிலை, பனைவெல்லம் இவை சேர்த்திடித்து நோய் கொண்டவனைச் சுற்றிக் குழந்தைகளுக்கு இதனை வினியோகம் செய்வதுமுண்டு, பூட்டுத் தாளம்மை உண்டான ஏழாம் நாளில் இவ்விதம் செய்வது நாட்டு வழக்கம்.

வைசூரி ஹரம்:- (பக்கம் 23 சத சுலோகம்)

" நல்லாடா தோடையொடு பேய்ப்பு டலோடும்
நறுநெய்யும் வேப்பம்வே ரிலையும் நெல்லி
சொல்லாநீர் முட்டானுங் கொள்ளு மஞ்சள்
துராயுடனே மணிப்புங்கும் விபூதி முத்தம்
புல்லாகு மருகுடனே பெருஞ்செங் குன்றி
பூநிம்பஞ் செருப்படை கற்பூர வள்ளி
வல்லாரை யிலையதுவுங் கொப்பை மையான்
வசூரிகளுக் கரமாக வகுத்த தாமே.

ஆடாதோடை, பேய்ப்புடல், பசுநெய், வேம்பு வேர், வேம்புயிலை, நெல்லிக்காய், தண்ணீர் விட்டான், கொள்ளு, மஞ்சள், துராயிலை, மணிப்புங்கு, விபூதி, கோரைக் கிழங்கு, அருகம்புல், செங்குன்றி, பூநிம்பம், சிறு செருப்படை, கற்பூரவள்ளி, வல்லாரையிலை ஆகிய இவைகள் அம்மை நோயைக் குணப்படுத்தக் கூடியவையாம்.

4. குரற் கம்மல்

மருத்துவம்

இந்நோயில் ஐயக் குற்றமும் உதான வாயுவும் தன்னளவில் மிகுந்திருப்பதால் அவற்றைத் தன்னிலைப்படுத்தும் பொருட்டுக் கழிச்சல் தேவையிருப்பின் அதற்குரிய அஷ்ட பைரவம், சஞ்சீவி மாத்திரை, இலவங்காதி மாத்திரை, வச்சிரகண்டி மாத்திரை, சீவரத்தினக் குளிகை இவற்றில் ஏதேனுமொன்றை ஒரு முறை கொடுத்துக் கழிச்சலாகியபின் கீழ்க்கண்ட பரிகாரங்களைச் செய்யலாம்.

1. ஆடாதோடையிலை இரண்டு, மிளகு எட்டு சேர்த்தரைத்து உருண்டை செய்து காலை, மாலை கொடுக்கக் குரற்கம்மல் குணமாகும்.

"ஆடாதோடை ஐந்து மிளகுகிருந்தால்
பாடாத நாவெல்லாம் பாடும்"

என்பர்.

தொண்டையில் பூசும் மருந்து:-

2. திப்பிலி, கோட்டம், அதிமதுரம், அக்கிராகாரம் வகைக்குப் பலம் ½ பொடித்துத் தேன் கூட்டிக் குழப்பித் தொண்டைக்குள் பூசவும்.

3. தும்பைப்பூ ஒன்று, ஏலம் கால், அக்கிராகாரம் கால்விராகனிடை வீதம் எடுத்துச் சிறிது தேன்விட்டு அரைத்து வைத்துக் கொண்டு, சிறிது சிறிதாக அடிக்கடி வாயிலிட்டுச் சுவைத்துவர குணமாகும். அல்லது மேற்கூறிய சரக்குகளைக் குடிநீரிட்டு தக்க அளவில் வாயிலிட்டு தொண்டை வரைக்கும் செலுத்தி வாய் கொப்புளித்து அப்பால் விழுங்கவும். தினம் 3, 4 முறை செய்யக் குரற்கம்மல் குணமாகும்.

4. தாளிசபத்திரி வடகத்திலொன்றைச் சிறிது பனங்கற்கண்டுடன் வாயிலிட்டுச் சுவைத்துத் தினம் 2,3 முறை சாப்பிடலாம்.

5. கத்தூரிக் கருப்பு அல்லது கத்தூரிச் செந்தூரம் ஒரு குன்றியை அல்லது கத்தூரி மாத்திரை ஒன்றிரண்டை வெற்றிலையிலிட்டு மென்று விழுங்கக் குணமாகும்.

6. வசந்த குசுமாகரம் அல்லது கோரோசனை கத்தூரி மாத்திரை ஏதேனும் ஒன்று- இரண்டு மாத்திரை, இலவங்கம் 2 இவற்றைக் கம்மாறு வெற்றிலையில் பொதிந்து வாயிலிட்டு சுவைத்துச் சாப்பிடவும். காலை மாலை சாப்பிடக் குணமாகும்.

7. உடல் வன்மையைத் தரத்தக்க பவளம், முத்து, தங்கம், வெள்ளி இவற்றின் பற்பச் செந்தூரங்களைத் தனித்து அல்லது வேறு சிலவற்றைக் கூட்டி, தக்க துணை மருந்துகளுடன் கொடுக்க நன்மை பயக்கும். (சித்த மருத்துவம்)

8. ஆழாக்குப் பசுவின் பாலில் சமம் தண்ணீர் சேர்த்து கறி மஞ்சள் ஒரு துண்டு, மிளகு 20 தட்டிப் போட்டு காய்ச்சி வற்றவைத்து, வடிகட்டி சிறிது பனங்கற்கண்டு சேர்த்துப் பொறுக்கக்கூடிய சூட்டில் சிறிது சிறிதாகச் சுவைத்துச் சாப்பிடத் தொண்டைப் புண் ஆறி விடும். குரற் கம்மலும், இருமலும் போம். (To be taken at bed time for 3 days)

9. ஆழாக்கு பசுவின் பாலில் சமம் தண்ணீர் சேர்த்து சிறு இஞ்சித் துண்டும், அதிமதுரம், அக்கிராகாரம், சாதிக் கோட்டம் வகைக்கு ஒரு துண்டும் தட்டிப் போட்டுக் காய்ச்சித் தண்ணீர் முற்றும் வற்றிய பிறகு இறக்கி வடிகட்டி பனங்கற்கண்டு சிறிது சேர்த்து பொறுக்கக்கூடிய சூட்டில் சிறிது சிறிதாக வாயிலிட்டுச் சுவைத்துச் சாப்பிடவும். இரவு படுக்கைக்குப் போகும்போது தினமும் ஒரு நேரம் இதன் பிரகாரம் சாப்பிடவும். மூன்று நாட்கள் சாப்பிட்டால் போதுமானது. குரற் கம்மல் குணமாகும்.

10. அகத்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கத்தில் கூறிய "கண்டாவிழ்தம்" தேன் கூட்டி அடிக்கடி நாவில் தடவி வர ஏழு தோடங்கள், சன்னி, நாவறட்சி, நாவழுத்தல், தாகம், விக்கல், வாந்தி, நாக்கறுப்பு, தொண்டைக் கம்மல், முக்குற்ற நோயில் காணும் அசாத்திய குறி குணங்கள் யாவும் வாத நோயும் குணமாகும். சுகசன்னி போம்.

கண்டாவிழ்தம் செய்முறை:

1. போமப்பா கண்டாவிழ்தஞ் சொல்லக்கேளு
புதுமையாந் தங்கமொடு வெள்ளி முத்து
நாமப்பா மதுரமொடு கிராம்பு திப்பிலி
நலமான பவளமொடு ருத்தி ராட்சம்
தாமப்பா கோட்ட மோடக் கிரா காரம்
தளமான காமப்பூ கூவிளத்தின் மூலம்
ஆமப்பா கலைக் கொம்பு செந்தூரம்
அப்பனே ஆடாதோடை மூலந் தானே"

2. "தானென்ற முலைப்பாலா லரைத்துக் கொண்டு
தப்பாமல் தேன்குத்தி நாவிற் போட
நானென்ற தோடமொடு சன்னி யெல்லாம்
நாடாது நாவறட்சி நாவ ழத்தல்
தேனென்ற ஸ்திரிசங் கோத தோடம்
வாந்திதிற மானவிக்கல் முதல்கம்மல் தீரும்
வானென்ற வாதமெல்லாம் வாங்கிப் போகும்
வளமான நாக்கின்முள்ளும் வாங்குந் தானே."

என்பதனால் தங்கம், வெள்ளி, முத்து, பவளம், கலைக்கோடு இவற்றின் பற்பம், சொர்ணவாலை, இரசசெந்தூரம், அதிமதுரம், கிராம்பு, திப்பிலி, ருத்திராட்சம், சாதிக்கோட்டம், அக்கிராகாரம், காமப்பூ, வில்வ வேர், ஆடாதோடை வேர் ஆகிய இவை யாவும் சம எடை முலைப்பாலில் இழைத்துக்கொண்டு தேன் சேர்த்துக் குழப்பி நாவில் அடிக்கடி தடவி வர மேற்கூறிய நோய்கள் யாவும் குணமாம்.

11. கத்தூரி மெழுகு ஒரு குன்றி எடை தேனில் காலை, மாலை கொடுக்கக் குணமாம். (விஷ வைத்திய சிந்தாமணி)

செய்முறை:

கத்தூரி	வராகனெடை	1
பச்சைக் கற்பூரம்	"	2
கோரோசனை	"	3

குங்குமப்பூ	வராகனெடை	4
புனுகு	"	¼
சவ்வாது	"	¼
பூநீக்கிய இலவங்கம்	"	4
வால்மிளகு	"	4
ஏலக்காய் அரிசி	"	8
சிறுலவங்கப் பட்டை	"	8

இவையாவும் கிரமப்படி சூரணித்துக் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து கம்மாறு வெற்றிலைச் சாற்றில் ஒரு சாமம், கற்பூரவல்லிச் சாற்றில் ஒரு சாமம், தூதுவளைச் சாற்றில் ஒரு சாமம், இஞ்சிச் சாற்றில் ஒரு சாமம், மிளகுக் கியாழத்தில் ஒரு சாமம், மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஒரு சாமம், இப்படித் தனித்தனியே ஒவ்வொரு சாமம் அரைத்துக் கல்வத்துடன் நிழலில் உலர்த்திப் பிறகு நயம் தேன் விட்டு அரைத்து மெழுகுப் பதத்தில் வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு பயறு முதல் குன்றி எடை தேனில் குழப்பி காலை, மாலை 3 முதல் 5 நாட்கள் உள்ளுக்குக் கொடுத்து வர சன்னி, சீதளம், சுரம், கப ரோகம், உப்பிசம், மாந்தம், முகவாத சன்னி, சூதக சன்னி, இருமல், மாரடைப்பு, நடுக்கு வாதம், குரற் கம்மல், தும்மல், மூக்கில் நீர் வடிதல் இவை குணமாகும். மருத்துவருக்கு வேண்டிய குறிப்பிட்ட மருந்துகளில் இதுவும் ஒன்று. நோயினனின் தேக பலம், நோயின் கடுமையறிந்து நாள் அதிகரித்தும் குறைத்தும் கொடுக்கலாம். நோய்க்குத் தகுந்த பத்தியம் வைக்க வேண்டும்.

12. தனிக் கோரோசனையை முலைப்பாலில் உரைத்துக் கொடுக்க குழந்தைகளுக்குண்டாம் குரற் கம்மல் போம்.

13. கறையான் புற்று அல்லது வைக்கோல் போர்களிலுள்ள மண்டைக் கறையான் 4, 5 சேகரித்து ஒரு துணியில் முடிந்து இலேசாய் நசுக்கி ஒரு பாலாடை வெந்நீரில் முடிச்சுடன் கலக்கி அந்தத் தண்ணீரை உள்ளுக்குப் புகட்டவும். குழந்தைகளுக்குண்டாம் குரற் கம்மல் போம். காலை, மாலை மறுநாள் காலை மூன்று வேளை மட்டும் புகட்டக் குணமாகி விடும். அனுபவமானது. அறை வீட்டுக் குழந்தை முதல் 6 மாதக் குழந்தை வரைக்கும் இதனை உபயோகிக்கலாம்.

14. ஆழாக்கு பசுவின் பாலில் சமன் தண்ணீர் சேர்த்து சிற்றரத்தை, செந்தொட்டி வேர்ப்பட்டை, மிளகு வகைக்கு சிறிது போட்டுக் காய்ச்சி வற்றவைத்து வடிகட்டி சிறிது பனங்கற்கண்டு சேர்த்து சுடச்சுட சுவைத்துச் சிறிது சிறிதாக இரவு படுக்கைக்குப் போகும் போது மூன்று நாட்கள் தினம் ஒரே வேளை சாப்பிட்டு வரவும்.

15. கற்பூரவல்லியிலை 5,6 எடுத்து சிறிது ஓமத்தை ஒரு மண் சட்டியில் போட்டு அடுப்பேற்றி எரித்துப் பொரிய விட்டுப் பொரிந்து வரும் சமயம் மேற்கண்ட இலையைப் போட்டு வதக்கி எடுத்துச் சாறுபிழிந்து காலை, மாலை புகட்ட குழந்தைகளுக்குண்டாம் குரற் கம்மல் நோய் குணமாகும்.

குறிப்பு:- கற்பூரவல்லியிலையை 4, 5 வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர இருமல் குணமாகும் (தொண்டையில் வளரும் சதை).

சுரசாதங் குரற்கம்மல் ஹரம்:-

(ஈனத் தொனி நிவாரணி - பக்கம் 8 சதசுலோகம்)

“கண்டுபா ரங்கியுந் திப்பிலியின் மூலமுங்
கருவேம்பு முள்ளங்கியுங்
கரிசாலை பண்ணையும்வ சம்பிலையு ருத்திராட்
சங்கன் சிரமேல மதுவும்
மண்டுதேன் செவ்வியமு முந்திரிகை கொடிவேலி
வனமணித் தக்காளியும்
வளருமா டாதோடை மிளகுதிப் பிலிசிறிய
வழுதலையின் வேரானதுந்

துண்டமா மிலவங்கப் பட்டையொடு பத்திரி
சுக்குகடன ரத்தை யகிலுந்
துய்யகண் டங்காலி யானையின் திப்பிலி
சுகந்தமா மிலவங்கமுங்
கண்டுமுன் சொன்னதொரு காசசு வாசமாங்
கபங்களி னரங்க ளெல்லாங்
காணுங் குரற்கம்ம லானசுர சாதமாங்
கருதிய வரங்க ளிதுவே.”

சுவாசகாச ஹரம் கூறுகிறார்:-

கண்டுபா ரங்கியிரு சங்குமா டாதோடை
காயமோ டிரு சீரமும்
கடுகுமோ தகனொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தி யிலையுங்
காததூ துளையிந்து சாரணை விளாவிலை
கனியொடு வசம்பு குக்கில்
கரிக்கணா வெண்கருங் காலி சாதிக்காயுங்
கருங்காலி யவாச் சாரமும்
மண்டகற் கடகசிங்கி தேவதார முள்ளி
மாஞ்சில தாளீ சேலமும்
வள்ளைவெந்தயங் கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வனமுருக்கொடு பண்ணையும்
வாலுளுவை நாகேசமில வங்கப் பத்திரியும்
மஞ்சள் தேள் சடையாயிலும்
மயிலிறகு சாம்பலும் பல் சிற்றாமுட்டி
மருதணி யிலந்தை வித்துங்
கொண்டதிப்பிலி மூலந்தான்றி கருநெல் லியுங்
கொன்றை யோடரத்தை யகிலுங்
கோட்டமொடு சீதளைதும்பை கீழ்காய் நல்லி
கொடி வேலியுந்தி ராயுங்
கூகை நீராவின் பால் செம்பை மூக்கத்தாரி
கோல வித்தொடு பட்டையுங்
குப்பைமேனி யுமுன்னை துளசி பொன்னாவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்
துண்டமாமி லவங்கப் பட்டை சிறு கொம்மட்டி
சுக்க பெருவாகை தேற்றான்
துய்யமுள்ளங்கி யுதழுதாளை பெருமல்லி
சொற்பொடு தலைக் காயதுந்
தொடர்கண்டங் காலியும் வில்லைவழுதளைவேருஞ்
சொற்கனா சிறுமல்லியுந்
தூயபாதிரி வேருமிளகுதேன் செவ்வியஞ்
சுவாச விக்கலுந் தீருமே".

சயரோக ஹரம் கூறுகிறார்:-

" உற்ற கறிபாலையும் வெள்ளாடதின் பாலு
மோங்க மயிர்மாணிக்கமும்
உடும்ப தினிறைச்சியும் பூசுணிக் காயதும்
உயர்நிலக் குமிழ் வேரதுங்
கொத்துமலி பேரீந்து முந்திரி கையின்கனி
கோவி னெய்யொடு வெண்ணெயுங்
குலவுநீர் முட்டானு மட்டவர்க் கத்துடன்
கூறுநல்லமுக்கி ராவுந்
தொற்றி வளர்சீந்திலும் நாகமல்லிகை வேருந்
துய்யமுத்தக் காசதுஞ்
சொற் சடாமாஞ்சிலோ டிலுப்பையின் பூவதுந்
துதிபெற்ற செந்தேனி
சித்தமொடு ரைத்த முன்காச சுவாசமாந்
திரவியவர்க்கங் களெல்லாஞ்
செயரோக மானதொரு கபத்துக் கரங்களாய்ச்
செப்பினன் கும்ப முனியே."

கண்டு பாரங்கி (சிறு தேக்கு) திப்பிலி மூலம், கறிவேப்பிலை, முள்ளங்கி, கரிசாலை, பண்ணைக்கீரை, வசம்பிலை, ருத்திராட்சம், சங்கு, சீரகம், ஏலம், தேன், செவ்வியம், முந்திரிகை. கொடிவேலி, மணத்தக்காளி, ஆடாதோடை, மிளகு, திப்பிலி, சிறுவழுதலை வேர், இலவங்கப் பட்டை, இலவங்கப்பத்திரி, சுக்கு, அரத்தை, அகில், கண்டங்காரி, யானைத் திப்பிலி, இலவங்கம் ஆகிய இவைகளோடு, சுவாசகாசம், கபரோகம் இவற்றிற் கூறியுள்ள நிவாரணச் சரக்குகளும் குரற் கம்மல் நோய் ஹரங்களாக (நிவாரணச் சரக்குகளாக) வகுத்துள்ளார்.

காச சுவாச ஹரங்களாவன:-

கண்டு பாரங்கி, இரு சங்கு, ஆடாதோடை, பெருங்காயம், இரு சீரகம், கடுக்காய், ஓமம், நொச்சி, தாளகம், மனோசிலை, கரிசாலை, பருத்தியிலை, தூதுவளை, இண்டு, சத்திச்சாரணை, விளாயிலை, விளாம்பழம், வசம்பு, குக்கில், வெண்கருங்காலி, சாதிக்காய், கருங்காலி, யவாச்சாரம், கற்கடக சிங்சி, தேவதாரம், உள்ளி, சடாமாஞ்சில், தாளீசம், ஏலம், வெந்தயம்,

கொள்ளு, வெட்பாலை, சர்க்கரை, வனமுருக்கு, பண்ணை, வாலுளுவை, சிறுநாகப்பூ, இலவங்கப்பத்திரி, மஞ்சள், தேள்கொடுக்கிலை, சடைக்கஞ்சா, மயிலிறகு சுட்ட சாம்பல், ஆம்பல், சிற்றாமுட்டி, மருதாணிவிதை, இலந்தை விதை, திப்பிலிமூலம், தான்றி, கடுக்காய், நெல்லிவற்றல், சரக்கொன்றை, அரத்தை, அகில், கோட்டம், சீதளை, தும்பை, கீழ்க்காய் நெல்லி, கொடிவேலி, திராய், கூகை நீர், ஆவின்பால், செம்பை, மூக்கத்தாரி, கோலவித்து, அதன் பட்டை, குப்பைமேனி, முன்னை, துளசி, பொன்னாவரை, குமிழி, நெருஞ்சி வேர், இலவங்கப்பட்டை, சிறுதும்மட்டி, சுக்கு, பெருவாகை, தேற்றான், முள்ளங்கி, தழுதாழை, பெருமல்லி, பொடுதலைக்காய், கண்டங்காரி, வில்வவேர், வழுதளைவேர், சிறுமல்லி, பாதிரி வேர், மிளகு, தேன், செவ்வியம், இவையாவும் சுவாசகாசம், விக்கல் இவற்றைக் குணப்படுத்தக் கூடியவையாம்.

சயரோக ஹரங்களாவன:-

மிளகு, பாலை, வெள்ளாட்டுப்பால், மயிர்மாணிக்கம், உடும்பிறைச்சி, பூசனிக்காய், நிலக்குமிழ்வேர், கொத்துமல்லி, பேரீந்து, முந்திரிகை, பசு நெய், வெண்ணெய்,தண்ணீர் விட்டான், அட்டவர்க்கம், அமுக்கிரா, சீந்தில், நாகமல்லி வேர், முத்தக்காசு, சடாமாஞ்சில், இலுப்பைப்பூ, செந்தேன் இவற்றோடு முன் காச சுவாச மருந்துகளும் சேர்ந்து சயரோகம் என்னும் கப ரோகத்தைக் குணமாக்குமென்பர்.

5. மூக்கடைப்பு நோய்

மருத்துவம்

மிகுந்த கனலையும் ஐயப் பெருக்கையும் தன்னிலைப்படுத்த வேண்டும். அன்றியும், மூக்கிலுள்ள புண்ணிற்கும் பரிகாரம் செய்ய வேண்டும்.

அவைகளாவன:

1. மூக்குப்பொடி
2. துளி மருந்துகள்
3. புகை
4. தலைமுழுக்குத் தைலம்
5. உள் மருந்து.

(கனலையும் ஐயப் பெருக்கையும் தணிக்கக் கூடிய தலை முழுக்குத் தைலம், உள்மருந்துகள் உபயோகிக்க வேண்டும்.)

1. மூக்குப்பொடி:

இலுப்பை வேர், சுண்டை வேர், பாலை வேர் இவைகளிலே ஏதேனுமொன்றைப் பொடித்து வஸ்திரகாயம் செய்து குப்பியில் வைத்துக்கொண்டு மூக்கில் உறிஞ்சவும். இவ்வாறே புகையிலைப் பொடி, எருமுட்டையின் பொடி இவைகளையும் மூக்கில் உறிஞ்சலாம்.

2. பற்று:

புனுகு, செம்பருத்தி விதைப் பருப்பு சமம் எடுத்து அகத்திப் பூச்சாறு விட்டு அரைத்து தலை, புருவம், நெற்றி, மூக்குத் தண்டு இவற்றின் மீது பற்றிட நீர், சீழ், குருதி வகையான மூக்கடைப்பு நோய்கள் தீரும்.

நீர்க்கோவை மாத்திரையை முலைப்பால் அல்லது வெந்நீரிலுரைத்து நெற்றியில் பற்றிட்டு சாம்பிராணிப் புகை காட்டி உலர்த்த மூக்கில் நீர் பாய்தல், தலைப்பாரம், தலைவலி முதலியன குணமாகும்.

3. புகை:-

பளிங்கு சாம்பிராணி, செஞ்சந்தனம், கருங்காலிப்பட்டை, தேவதாரு, ஆயில் மரப்பட்டை வகைக்கு ஒரு பலம், தாளகம், மிருதார் சிங்கி, லிங்கம், வெடியுப்பு வகைக்கு ½ வராகனெடை, இலுப்பைப் புண்ணாக்கு 4 பலம் இவற்றைப் பொடித்துச் சேர்த்து, ஊமத்தினிலைச்சாறு, உத்தாமணிச்சாறு, எருக்கின் பழுப்புச் சாறு ¼ ஆழாக்கு வீதம் கூட்டி அதில் வெடியுப்பு 2 வராகனெடை பொடித்துச் சேர்த்துக் கலக்கி இதைக் கொண்டு முன் மருந்துகளைக் கல்வத்திலிட்டு அரைத்து வழித்தெடுத்து மெல்லிய சீலையில் தடவிச் . சிறிய சுருட்டுகளாகச் சுருட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். காலையிலும், மாலையிலும் ஒன்றைக் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க மூன்று நாட்களில் முளை மூக்கடைப்பு நோய் போம். மேகநோயால் வரும் மூக்கடைப்பு நோய்க்கும் இது நற்பயனளிக்கும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், தும்பைப்பூ, சோற்றுப்பு இவை வகைக்கு ஒரு வராகனெடை வீதம் எடுத்துக் கல்வத்திலிட்டுக் கண்டங்கத்திரியிலைச்சாற்றால் மை போலரைத்து, சிறிது மேற்கண்ட சாறு கூட்டிக் குழைத்து ஒரு துணியில் துவட்டிச் சிறிய திரிகளாக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு திரியைக் கொளுத்தியெழும் புகையை முகர மூக்கடைப்பு நோய் போம்.

வெடியுப்பு,மஞ்சள், மிளகு, இவை சமம் பொடித்து ஒரு துணியில் பரப்பிச் சுருட்டித் திரியாக்கிக் கொளுத்தியெழும் புகையை உடல் முழுமையும் படும்படி போர்வையிட்டுக் கொண்டு ஒரு கடிகை அளவு நேரம் அப்புகை படும்படி செய்ய மண்டையிற்றங்கியிருக்கும் நீரெல்லாம் கழன்று போம்.

4. வியர்வை பிடித்தல்:-

திப்பிலி, மஞ்சள், ஓமம், மிளகு இவை வகைக்குச் சமம் பொடித்து ஒரு துணியில் பரப்பித் திரியாக்கி வேம்பின் நெய்யில் தோய்த்துக்

கொளுத்தி உடம்பைப் போர்வையிட்டுக் கொண்டு அப்புகையில் 2 நாழிகை வரை முகத்தைக் காட்டிக்கொண்டு இருக்க இரண்டு மூக்குத் துவாரங்களிலிருந்து மழை நீர்போல் சொட்டுவதன்றி, இரு கண்களிலிருந்தும் பூவின் தேன் போல் நீர் சொட்டும். அதனால், வெப்பம் தணியும், உடலின் பளுவும், தலைநோவும் நீங்கும்.

5. தலை முழுக்கு எண்ணெய்:-

சித்த வைத்தியத் திரட்டிலும், தேரையர் தைலவர்க்கத்திலும் சொல்லப்பட்டிருக்கிற அரக்குத் தைலம், சுக்குத் தைலம், பீனிசத்தைலம், கரிசாலைத் தைலம், நொச்சித் தைலம் இவற்றிலேதேனும் ஒன்றை வாரமொருமுறை அல்லது இருமுறை தலை முழுகிவர மூக்கடைப்பு நோய்கள், தலைவலி, இருமல் முதலியன குணமாகும்.

1. நல்லெண்ணெயில், நொச்சி, ஆடுதீண்டாப்பாளை, தும்பை வேர் வகையறா சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயைத் தலை முழுகுவதால் நீர் மூக்கடைப்பும்,

2. கற்றாழையின் சோறு, செவ்விளநீர், வல்லாரைச்சாறு வகையறா சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயைத் தலை முழுகிவரக் குருதி மூக்கடைப்பும்,

3. தும்பைவேர், கண்டங்கத்திரி வேர், கொடிவேலி வேர்ப்பட்டை வகையறா சேர்த்துக் காய்ச்சிய குடிநீருடன் கலக்கச் சரக்கும் எண்ணெயும் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தை முழுகி வரக் கழுத்து மூக்கடைப்பு, சீழ், நீர், சிராய் மூக்கடைப்பு நோய்கள் குணமாம்,

4 சவுரிப் பழச்சாறு, பொடுதலைச் சாறு, பொன்னாங்கண்ணிச் சாறு வகையறா சேர்த்துக் காய்ச்சிய எண்ணெயை முழுகிவர மூக்கடைப்பு நோயும் தலைவலியும் குணமாகும்.

6. உள் மருந்துகள்:-

1.ஐயக் குற்றத்தை மிகுதியாகக் கொண்ட மூக்கடைப்பு நோயில்-வசந்தகுசுமாகரம், சிவப்பு மாத்திரை, கோராசனை மாத்திரை, கோரோசனை

கத்தூரி மாத்திரை, குங்குமப்பூ மாத்திரை, சாந்த சந்திரோதயம், கத்தூரி மாத்திரை, பாலசஞ்சீவி மாத்திரை, சிவனாரமிர்தம், காளமேக நாராயணச் செந்தூரம், சொர்ணவாலை ரச செந்தூரம், தங்கச் செந்தூரம், தாளகக் கறுப்பு, பறங்கிப் பதங்கம், சண்டரச பற்பம் இவை போன்ற மருந்து களை தக்க அனுபானங்களுடன் காலை-மாலை கொடுத்து வர மூக்கடைப்பு நோய் ஐயமிகுதியால் வந்தவை குணமாகும். நோயின் கடுமைக்குத் தக்கவாறு மருந்து சாப்பிட வேண்டிய கால அளவும், பத்தியமும் நிர்ணயிக்க வேண்டும்.

2.அழல் குற்றத்தை மிகுதியாகக் கொண்ட மூக்கடைப்பு நோயில் பவளம், முத்து, முத்துச்சிப்பி, பலகரை, மான்கொம்பு பற்பம், கற்பூர சிலாசத்து பற்பம், மாணிக்க பற்பம், வெள்ளி பற்பம், அன்னபேதிச் செந்தூரம், அன்ன பவளச் செந்தூரம் இவை போன்ற பற்பச் செந்தூரங்களில் ஏதேனுமொன்று அல்லது பல கலந்தும் வல்லாரை நெய், பிரமி நெய், தண்ணீர் விட்டான் நெய் இவை போன்ற அனுபானங்களுடன் கலந்து காலை, மாலை கொடுக்கலாம்.

3.ஐயழல் குற்றக் கலப்பால் உண்டாகும் மூக்கடைப்பு நோய்களில் மேற்கூறிய இருவகையிலுமுண்டாகும் நோயில் கூறிய மருந்துகளைக் கலந்து தேவைக்குத் தக்கவாறு காலை, மாலை தக்க அனுபானங்களுடன் கொடுத்துவரக் குணமாகும்.

4.மேக நோயால் வரும் மூக்கடைப்பு நோய்க்கு இரசபற்பம், சொர்ணவாலை ரச செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம், கெந்தக பற்பச் செந்தூரம், சண்டரசம், செயரசபற்பம், சாதிலிங்க பற்பம், நீலகண்டவாலை, சண்டமாருதம், அயவீரம், பறங்கிப்பட்டைப்பதங்கம், காலானந்த கௌரி, காடிக்காரச் சுண்ணம், நாகரச பற்பம், வங்கரசகுரு பற்பம் இவை போன்ற மேகநோயைப் போக்கி மூக்கடைப்பு, மூக்கில் இரணம் முதலியவற்றைப் போக்கக் கூடிய மருந்துகளைத் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்துவரக் குணம் ஆகும். சேங்கொட்டை லேகியம், சேங்கொட்டை நெய், இரசகெந்தி மெழுகு. நந்தி மெழுகு, மேக நோய்களுக்குத் தயாரிக்கக்கூடிய எண்ணெய், நெய் மருந்துகளையும், இரசத் தைலம் போன்றவைகளையும் தக்கஅளவில் கொடுக்க மேகநோயால் எழும் மூக்கடைப்பு நோய் குணமாகும். (சித்த மருத்துவ அனுபவ முறை)

அனுபவ முறைகள்

தலை முழுக்குத் தைலங்கள்

1. குறட்டைப் பழத்தைலம் செய்முறை (Traditional)

கத்தூரி மஞ்சள் பலம் 3/8, மிளகு பலம் 3/8, சீரகம் பலம் ½, திப்பிலி பலம் 3/8, பூலாங் கிழங்கு பலம் 3/8, சமுத்திராப் பச்சை பலம் 3/8, பெருஞ்சோம்பு பலம் 3/8, செண்பக மொக்கு பலம் 3/8, இவற்றை இடித்துப் பொடியாக்கி பசுவின் பால் விட்டரைத்து ஒரு படி(Madras Measure) நல்லெண்ணெயில் கலக்கவும். பிறகு கஷாயத்திற்குச் சரக்குகளெடுக்கவும். நயம் சாதிக் கோட்டம் பலம் 3/8 , பால் கோட்டம் பலம் 3/8, வலம்புரிக்காய் பலம் 3/8, தான்றிக்காய் பலம் 3/8, கடுக்காய் பலம் 3/8, சடாமாஞ்சில் பலம் 3/8 இவற்றையெல்லாம் இடித்து ஒருபடி தண்ணீர் சேர்த்துக் காய்ச்சிக் கால்படி கியாழமாக வற்ற வைத்து வடிகட்டி மேற்கண்ட எண்ணெய் கல்க்கத்துடன் சேர்க்கவும். பிறகு பச்சிலைச் சாறு விபரம்:-

குப்பைமேனிச் சாறு படி ½, காத்தொட்டியிலைச்சாறு படி ½, இஞ்சிச்சாறு 2 அவுன்சு, குறட்டைப்பழச்சாறு படி ½, பசுவின் பால் படி ¼ இவைகளையெல்லாம் முன் வைத்திருக்கிற எண்ணெய், கல்க்கம், கியாழம், இவற்றுடன் சேர்த்துக் காய்ச்சி சரியான மெழுகு பதத்தில் வடிக்கும்போது வடிகடத்தில் பால் சாம்பிராணி பலம் ½ நன்றாய்ப் பொடித்துச் சேர்த்து புட்டியிலடைக்கவும். நெற்புடத்தில் 40 நாட்கள் வைத்திருந்து எடுத்து வாரமிருமுறை தலைமுழுகி வர மூக்கடைப்பு நோய் சகலமும் தீரும், தலைநோய், தலைப்பாரம், மூக்கில் நீர்பாய்தல், தும்மல் முதலியன குணமாகும். நம் அனுபவத்தில் கைகண்ட தைலம்.

2. சித்தகத்தித் தைலம் (Traditional)

நல்லெண்ணெய் படி 1, சித்தகத்திப்பூ ஒரு பக்கா (படி), வெட்டிவேர், விலாமிச்சு வேர், சமுத்திராப்பச்சை, பூலாங்கிழங்கு, கத்தூரி மஞ்சள், செண்பகப்பூ, வகைக்கு ½ அவுன்சு, சந்தனத்தூள் 1 அவுன்சு, வெற்றிலை ஒரு பலம், இஞ்சி ஒரு பலம், மிளகு, சீரகம், புழுக்கப்பட்டை வகைக்கு ½ அவுன்சு, ரோஜா மொக்கு 1 அவுன்சு இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

செய்முறை:- வெற்றிலையையும் இஞ்சியையும் சிறிது சிறிதாக அரிந்து வைத்துக்கொண்டு மற்ற கடைச் சரக்குகளை இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு எண்ணெயை அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொதிக்கிற சமயம் முன் இடித்த தூளையும் சித்தகத்திப் பூவையும், வெற்றிலை, இஞ்சி இவைகளையும் போட்டுத் தீயைச் சிறுக எரித்துப் பொங்கி நுரை அடங்கியவுடன் கறுக விடாமல் சித்தகத்திப் பூக்கள், வெற்றிலை இவை நொறுங்கும் பதத்தில் பக்குவமாக இறக்கி உடனே சூட்டுடன் வடிகட்டி ஆறிய பிறகு புட்டியிலிட்டு வைக்கவும். வாரமொருமுறை அல்லது இரு முறை தலைமுழுகிவரத் தலைபாரம், தலைவலி, தும்மல், நீர்க்கோவை, மூக்கடைப்பு யாவும் குணமாம். இம்முறை மிக்க அனுபவமானது.

3. சங்கம் வேர்த்தைலம் (Traditional Process)

சங்கம் வேர்ப்பட்டை ஒரு வீசை, மருதாணி வேர்ப்பட்டை ஒரு வீசை, தண்ணீர் படி 16 (Madras Measure)

செய்முறை- வேர்ப்பட்டைகளை நன்றாய் இடித்துப் பாண்டத்திலிட்டுத் தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி எட்டிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி அந்த கியாழம் 2 படியானால், நல்லெண்ணெய் 2 படி சேர்த்து கலக்கச் சரக்குகளாவன:- வெள்ளை மிளகு பலம் 1, கத்தூரி மஞ்சள் பலம் ½, கருஞ்சீரகம் பலம் ½, ஏலக்காயரிசி பலம் ¾, அக்கிராகாரம் பலம் ½, பூலாங்கிழங்கு பலம், 1, சாதிக்கோட்டம் பலம் ½, வங்காளப் பச்சை பலம் ½, சடாமாஞ்சில் பலம் ½, இவைகளைத் தண்ணீர் விட்டு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வாரமொருமுறை அல்லது இருமுறை தலை முழுகி வர முன் சொன்ன நோய்கள் யாவும் குணமாம். பற்று, படை, சிரங்குகளும், மேற்பூச்சால் குணமாகும்.

(This is a splendid bathing oil in seborrhic dermatitis in the head and leg for children and adults) நல்ல கைகண்ட முழுக்குத் தைலம். குறிப்பாக மூக்கடைப்பு, கபால சூலை குணமாகும். பரம்பரையில் அனுபவமாக இருந்து வந்த தலைமுழுக்குத் தைலம். (கையெழுத்துப்பிரதி)

உணவு:

பெரும்பாலும் இந்நோய் ஐயக்குற்றத்தால் வரும் நோயாதலால் உடலுக்கு வெப்பத்தைத் தரும் ஆகாரங்களைக் கொள்ளல்வேண்டும். மிளகு ரசம், குழம்பு வகைகளும், கரிசாலை, மணத்தக்காளி, கத்திரிப் பிஞ்சு, முருங்கைக்காய், கருணைக் கிழங்கு இவைபோன்ற காய்கறிகளை உபயோகிக்கலாம்.

வரப்பு நண்டு, கச்சற் கருவாடு இவைகளை மிளகு, பூண்டு கூட்டிச் சமைத்து, உண்ணலாமென சித்தமருத்துவம் கூறுகிறது. காறல் மீன், காறல் கருவாடு, சுறாமீன், சுறா கருவாடு, திருக்கை மீன், திருக்கைக் கருவாடு இவைகளையும், மிளகு, பூண்டு சேர்த்து சமைத்து இந்நோயில் உண்ணலாம்.

நாசிரோக ஹரம் (பக்கம் 36- சதசுலோகம்)

"சொன்னதாளீ சபத்திரியுடனே
துளசியுங் கொள்ளொடு செவியந்
துய்ய வல்லாரை யகத்தியும் நொச்சில்
சொற்றழுதாளை முள்ளங்கி
மன்னு சீரகமும் புங்கதின் வித்தும்
வனகரி சாலை வாய்விடங்கம்
வருகொடி வேலிவேர் திப்பிலிமூலம்
மஞ்சளும் குக்கிலுங் கடுகும்
உன்னிய தேவதார மோடுள்ளி
யோங்கியமிள கொடுலவங்கம்
உற்றநாயுரு விகரிய சீரகமு
முரைத்திடுஞ் சுக்கு திப்பிலியும்
நனய தான்றி நெல்லியுங் கடுக்காய்
நற்கரி திப்பியெல்லாம்
நாசியின் நோய்க்குத் திரவியமெனவே
நவின்றனர் கும்பமாமுனியே"

தாளிசபத்திரி, துளசி, கொள்ளு, செவ்வியம், வல்லாரை, அகத்தி, நொச்சி, தழுதாளை, முள்ளங்கி, சீரகம், புங்கம் வித்து, கரிசாலை,

வாய்விடங்கம், கொடிவேலி, திப்பிலி மூலம், மஞ்சள், குக்கில், கடுகு, தேவதாரம், உள்ளி, மிளகு, இலவங்கம், நாயுருவி, கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, தான்றி, நெல்லிவற்றல், கடுக்காய் இவைகளெல்லாம் நாசியிலுண்டாம் நோய்களுக்கு ஏற்ற மருந்துகளெனக் கூறியுள்ளார்.

6. குருதி அழல்

மருத்துவம்.

தன்னிலை மிகுந்த வாயுவைத் தன்னிலைப் படுத்தவேண்டிய குடிநீர் போன்ற மருந்துகளை ஈந்து வயிறு போகுமாறு செய்தும், அதன்பிறகு கேடடைந்த குற்றத்திற்கும், தன்னளவில் மீறிய குருதிக்கும் ஏற்ற மருந்துகளைக் கொடுத்தல் வேண்டுமெனச் சித்த மருத்துவம் கூறுகிறது. ஆனால் பெரும்பாலும் குருதி அழல் நோயில் பேதிக்குக் கொடுக்க வேண்டிய நிலையிருக்கிறதா என்பதை அறிந்து செய்ய வேண்டும். அனேகமாய் பேதி செய்விக்க அவசியம் இராது. ஒருக்கால் மலம் கழியாதிருந்தால் இலகுவிரேசன காரியாக யிருத்தல் நலம்.

குடிநீர்: செம்பருத்திப்பூ, பொடுதலை, மாசிப்பச்சை, நிலவிளாஇலை, நுணாயிலை இவை வகைக்கு ஒரு பிடி எடுத்து சட்டியிலிட்டு வதக்கி அத்துடன் மாசிக்காய்; கடுக்காய்ப்பூ, காவிக்கல் இவை வகைக்கு ஒரு வராகனெடை கூட்டி, தண்ணீர் ஒரு படி விட்டு எட்டிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடித்து வேளைக்கு வீசம் படியளவு காலை, மாலை கொடுக்க மேல் நோக்குங்காலைத் தன்னிலைப்படுத்திக் குருதிவாந்தியை நிறுத்தும்.

2. சீந்திற்றண்டு, ஆடாதோடை, பற்பாடகம், கண்டங்கத்திரிவேர், இம்பூரல்வேர் வகைக்கு ஒரு பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கொம்பரக்கு வகைக்கு ஒரு வராகனிடை வீதம் எடுத்து தண்ணீர் அரைப்படி சேர்த்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துக் காலை, மாலை சாப்பிட்டுவர இருமலையும் குருதி வாந்தியையும் போக்கும்.

3. துளசிவேர், கஞ்சாங்கோரை வேர், தும்பைவேர், வில்வவேர்ப்பட்டை இவை வகைக்கு ஒரு பலம்; அதிமதுரம், சிறு நாகப்பூ, கொத்துமல்லி, சோம்பு இவை வகைக்கு 1/2 பலம் எடுத்துச் சேர்த்து முறைப்படி குடிநீரிட்டுக் காலை, மாலை தக்க அளவில் கொடுக்க அளவிலா நோக்கு நோய்கள் போம்.

4. ஒதியம்பட்டை, அத்திப்பிஞ்சு, மயில் கொன்றைப் பட்டை, நுணாமரப்பட்டை வகைக்கு இரண்டு பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, காவிக்கல், காசுக்கட்டி இவை வகைக்கு 1/8 பலம் இவற்றை முறைப்படி குடிநீரிட்டுத் தக்க அளவில் காலை, மாலை கொடுக்கக் கீழ்நோக்கு நோயில் எருவாய் வழியே வெளியாகும். (Haemorrhage per rectum) குருதிப்போக்கு குணமாகும்.

5. சிறுகீரை, பசலை, நெருஞ்சி முள், காசினி விதை, வெள்ளரிப் பருப்பு, இலவம்பிசின் இவை வகைக்குப் பலம் ஒன்று முறைப்படி குடிநீராக்கித் தக்கஅளவில் சிறிது பனங்கற்கண்டும் வெண் குங்கிலிய பற்பமும் சேர்த்து காலை, மாலை கொடுத்துவர நீர்த்தாரை வழியே வரும் குருதி குணமடையும் (Haematuria).

6. அத்தி, அரசு, ஆல், இத்தி, நாவல் இவற்றின் மரப்பட்டைகளை சமஎடை எடுத்து இடித்துச் சட்டியிலிட்டு முறைப்படி குடிநீராக்கி ஒரு ஆழாக்கில் மூன்று சிட்டிகை காவிக்கல் பொடியும், ஒரு சிட்டிகை படிகாரப் பொடியும் சேர்த்துக் காலை, மாலை கொடுத்து வருவதோடு, எருவாயைக் கழுவியேனும், பீச்சிட்டேனும் (Enema) வர ஆசன வழியே போகும் குருதி நிற்கும்.(Haemorrhage per rectum).

7.- இளநீர் 2 படி, கற்றாழை மடல் சாறு படி 1 ஒன்றாய்க் கலந்து மாந்துளிர், நாவல்துளிர், தாளிக்கீரை, நுணாக்கொழுந்து இவை வகைக்கு 3 பிடி சேர்த்து, தண்ணீர் ஒரு படி விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அரை ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்க கீழ்நோக்குக் குருதி அழல் நோய் போம்.

8. காவிக்கல், செம்மண், காந்தத்தூள், புற்றுச் சோறு,இவை சமன்கூட்டிக் கற்றாழைச் சாற்றில், கலக்கி உடல் முழுமையும் பூசி ஒருநாள் இருந்து மறுநாள் குளிக்கவும். 2, 3 நாட்கள் இவ்வாறு செய்ய அளவிலா நோக்கில் தோல் வழியே கசியும் குருதியும் எரிச்சலும் போம். (For purpura or Haemoephilia per skin)

உள்மருந்து:-

1.கோழி முட்டையின் வெண்கரு, காய்ச்சின பசும்பாலையும் சேர்த்து நன்றாய் ஈர்க்குக் குச்சிகளாலடித்து நுரை நீக்கி சீனாக், கற்கண்டு,

இலவம்பிசின், புளியங்கொட்டைத்தோல், ஏலரிசி, துணி சுட்ட சாம்பல் இவற்றின் பொடி வகைக்கு ஒரு சிட்டிகை கலந்து அதில் முத்து, பவளம், சிலாசத்து இவற்றின் பற்பங்களிலொன்று அல்லது பலம் ½ முதல் ஒரு குன்றி எடை கலந்து காலை, மாலை கொடுக்க இரத்த வாந்தி நீங்கும்.

2. இவற்றால் குணமில்லாவிடில் முத்து, பவளம், மாணிக்கம், நாகம், சங்கு, பலகரை, இவைகளின் பற்பம் அல்லது அயபற்பம், அயச்செந்தூரம் இவைகளிலொன்று அல்லது பலவற்றைக் கையாள வேண்டும்.

இவைகளுக்குத் துணை மருந்துகளாவன:

1. தண்ணீர் விட்டான் நெய், மாதுளைப்பூ நெய், பிரமி நெய்.

2. இம்பூரல் லேகியம், கொடி மாதுளை லேகியம், வில்வாதி லேகியம்

3. சீந்தில் சூரணம், ஏலாதிச் சூரணம், பறங்கிப்பட்டைச் சூரணம்.

4.சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், காவிக்கல், இலவம்பிசின் , மாதுளைப்பூ, செம்பருத்திப்பூ.

இவைகளிலொன்றைத் துணை மருந்தாக உபயோகிக்கலாம்.

குறிப்பு:- மேல் நாட்டினர் கூறும் "பியுர்பியுரா" (Purpura)என்னும் இந்நோயில் அவர்கள் வழங்கும் சில மருந்துகளாவன.

1.நெல்லிக்கனி, எலுமிச்சு இவற்றிலுள்ள "C", "K" வைட்டமின் (Vitamins C and K) சத்துக்கள் உள்ளுக்குக் கொடுத்தும், ஊசி மூலமாகவும் உள்ளுக்குச் செலுத்துவார்கள்.

2. அன்றியும் பவளம், முத்து, நத்தை, சிப்பி இவற்றின் சத்தாகிய (Calcium) கூடிய உப்பினையும் உள்ளுக்குக் கொடுத்தும் ஊசி மூலமாகவும் உடலுக்குச் செலுத்துவார்கள்.

இவையாவும் நமது மருந்துகளுக்கொப்பனவேயாகும்.

இரத்தபித்த ஹரம் -(பக்கம் 4 வைத்திய சதகம்)

"நலமுடனா டாதோடை பற்படகம்
நற்சிறு கீரைமுந் திரிகை
நாட்டுள தென்னம்பாளையு மதுரம்
நல்லிலாமிச் சிருவேலி
தலமுயரா லின்விழுது பேரீந்து
தண்ணீர் முட்டான் கிழங்கறுகுந்
தான்றியுங் கடுக்காய் நெல்லியுங் குருந்துந்
தாதுமா துளங்கனி பாலுங்

குலவிய சீனிகாய்ந் திடுஞ்சாணங்
கோவதின் நெய்யொடு தேனுங்"
கோரையின் கிழங்குமி லுப்பையின் மலரும்
கோதையே சந்தன முடனே
இலவதி நீரு மதினுட பிசினு
மினிய பொன்னாங் கணியிலையும்
இரத்த பித்தத்தின ரங்களென் றறிந்து
இயம்பினர் கும்பமா முனியே.

ஆடாதோடை, பற்பாடகம், சிறுகீரை, முந்திரிகை, தென்னம் பாளை, அதிமதுரம், விலாமிச்சு, வெட்டிவேர், ஆலின் விழுது, பேரீந்து, தண்ணீர் விட்டான் கிழங்கு, அறுகு, தான்றி, கடுக்காய், நெல்லிவற்றல், குருந்து வேர், மாதுளங்கனி, பால், சீனி, காட்டெரு, பசுநெய், தேன், கோரைக்கிழங்கு, இலுப்பைப்பூ, சந்தனம், இலவம்பட்டைச் சாறு, இலவம்பிசின், பொன்னாங்கண்ணியிலை ஆகிய இவைகளெல்லாம் இரத்த பித்த நோய்களைப் போக்கக் கூடிய பொருள்களாகுமென அறிக.

பெரும்பாட்டு ஹரம்:

நாகலும் பாலையத்தி வெட்பாலை
நற்கருங் காலியின் பட்டை
நலந்தருங் கருப்பஞ்சாறு டனரக்கும்
நற்பெரும் பூசனிக் காயும்

தோகையே சிவந்த பருத்தியின் பூவும்
துணியதன் சாம்பல் தாமரைப்பூ
சொன்னவிக் கிழங்கும் வாழையின் பூவுந்
சொற்கருநெய்த லோடிந்து

மோகமாந் தென்னம்பாளை சந்தனமு
முத்தமும் நெல்லியின் காயும்
மூடிய பேய்க்கு மட்டியினிலையு
முழங்கு பச்சிலை நீர்முட்டான்
மாகனலவங் கப்பட்டையி தெல்லாம்
மாதர்கள் யோனியிற் பெருகும்
வன்பெரும் பாடோடிரத்த மாம்பித்தம்
வாங்குமென் றுரைத்தனர் முனியே.

நாவற்பட்டை, பாலைமரப்பட்டை, அத்திமரப்பட்டை, வெட்பாலை யரிசி,கருங்காலியின்பட்டை, கருப்பஞ்சாறு, கொம்பரக்கு, பெரும் பூசனிக்காய், செம்பருத்திப்பூ, துணிசுட்ட சாம்பல், தாமரைப்பூ, தாமரைக்கிழங்கு, வாழைப்பூ, நெய்தல்பூ, இந்துப்பு, தென்னம்பாளை, சந்தனம், கோரைக்கிழங்கு, நெல்லிக்காய், பேய்க்குமட்டியினிலை, பச்சிலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, இலவங்கப்பட்டை இவையாவும் பெண்களுக்குண்டாம் பெரும்பாடென்னும் இரத்த பித்த நோயைத் தீர்க்கக்கூடிய மருந்துகளென அறிக.

விசேடக் குறிப்பு:

1. எல்லாவகை இரத்த பித்த நோய்களுக்கு **மாணிக்க பற்பம்** மிகவும் சிறந்ததென அறிக.

2.**'மன்மத சிந்தாமணி பற்பம்'** இரத்த மூத்திர நோய்க்கு நற்பயனை அளிக்கக்கூடியது.

இவ்விரண்டு மருந்துகளின் செய்முறையை அடியிற் காண்க.

3. ***சித்த வைத்தியத் திரட்டில்*** கூறப்பட்டுள்ள **"வாலைரச மெழுகை"** சிறிய குன்றி எடை பனைவெல்லத்தில் பொதிந்து இளநீர் அனுபானத்துடன் காலை, மாலை கொள்ள ஏழு வேளை (3 ½ நாள்)

மருந்தில் நீர்த்தாரையில் வெளியாகும் குருதி ஆச்சரியமாக நீங்கிவிடும். மற்ற மருந்துகளுக்கு வசப்படாத இந்நோய் ஆச்சரியமாகக் குணமாகும். சந்தேகமில்லை. அனுபவமாகக் கைகண்ட மருந்து. பாலும், சாதமும் அருந்தவும். இளநீர் சாப்பிடவும். வாய்பிடித்தால் அதற்குரிய பரிகாரம் செய்யக் குணமாகிவிடும்.

(Refer to this Valai rasa Melugu in Agastiar Paripuranam 400- But they have not said that this melugu is useful in Heamaturia. However this is our own experience. First experienced by our siddha chief Lecturer of our own student days Vaidyaratna Pandit C.S. Murugesa Mudaliar. Every physician must remember this very useful point.)

4.பெண்களுக்குண்டாம் பெரும்பாடு நோயில் "பட்டு வஸ்திரம்" அல்லது "துணிசுட்ட சாம்பல்" திரிகடியளவு வாழைப்பழத்துடன் பிசைந்து காலை, மாலை கொடுக்க நீங்கும். அனுபவமானது. 2,3 தினங்களில் குணமாகிவிடும். அல்லது பட்டு வஸ்திரமோ துணி சுட்ட சாம்பலையோ குடிநீரிட்டு தினம் 3 வேளை கொடுக்கக் குணமாகும். இத்துடன் நாவற்கொட்டைச் சூரணம் மூவிரல் கொண்ட அளவு சேர்த்துக் கொடுக்க விரைவில் குணமாகும்.

மாணிக்க பற்பம்- செய்முறை (கெம்பு பற்பம் எனவும் கூறுவர்)

வேண்டிய அளவு கெம்பு ஒரு பீங்கானிலிட்டு முழுகும்படி வெள்ளை எருக்கம்பால் விட்டு வெயிலில் வைக்கவும்.இவ்விதம் நாள் தோறும் புதிது புதிதாக எருக்கம்பால் விட்டு 15 முதல் 30 நாள் வரைக்கும் வெயிலில் வைத்துப் பிறகு அப்படியே கழுவாமல் ஒரு குடுவையிலிட்டுச் சில்முடிச் சீலைமண் செய்து கனபுடமிடவும். பிறகு அதனைக் கல்வத்திலிட்டு வெள்ளை எருக்கம்பழுப்பை வாட்டிப் பிழிந்த சாற்றில் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி அகலிலடக்கி மூடியிட்டு சீலைமண் செய்து முன் போல் புடமிடவும். இம்மாதிரியே 7 முதல் 10 புடங்கள் செய்ய பற்பமாகும். எல்லா வகை இரத்த, பித்த நோய்களுக்கும் தக்க அனுபானங்களுடன் உபயோகிக்க நன்மை தரும். குறிப்பாக இதனை இரத்தம் கக்கல் (Heamoptysis) நீர்த்தாரையில் இரத்தம் போதல் இவ்விரண்டு நோய்களுக்கும் சிறந்ததென அறிக, 1 முதல் 2 அரிசி எடை பற்பம் காலை, மாலை கொடுக்கலாம்.

மன்மத சிந்தாமணி பற்பம் (Traditional) இரத்தப் பிரமேக நிவாரணி எனவும் கூறுவர்.

செய்முறை:

1.கொடிப்பவளம் பலம் 2 ஒரு இரவு எலுமிச்சம் பழரசத்தில் ஊறவைத்து உலர்த்தி கல்வத்திலிட்டுக் குமரிச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி முறைப்படி 50 எருவில் புடம் போட்டெடுத்து பற்பம் தயார் செய்து கொள்ளவும். இது கொடிப்பவள பற்பம்.

2.கலைமான் கொம்பு வேண்டிய அளவு எடுத்து உளியால் குச்சி குச்சியாக வெட்டி பசு நெய்யில் ஒரு இரவு ஊறவைத்து எடுத்து சோற்றுக்கற்றாழை மடலுக்குள் பொதிந்து சீலைமண் செய்து உலர்த்தி 50 எருவில் புடம் போட்டெடுத்து வைத்துக் கொள்ளவும். வெண்மை நிறமில்லையானால் மறுபடியும் குமரிச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி முறைப்படி புடம் போட்டெடுத்துக் கொள்ளவும். இது கலைமான் கொம்பு பற்பம்.

3.சீன பூர பற்பம்:- (நீர்ப்பிரமேக நிவாரணி) படிகாரம் 4 பங்கு, இரச கற்பூரம் 1 பங்கு, வெற்றிலைச்சாறு விட்டு ஒருநாள் கல்வத்தில் இவ்விரண்டு மருந்துகளையும் சேர்த்தரைத்து வில்லைதட்டி உலர்த்தி அகலிவிட்டு மூடிச்சீலைமண் செய்து உலர்த்தி 25 விராட்டியில் புடமிட்டெடுக்க வெண்மையாய்ப் பொங்கிப் பற்பித்திருக்கும்.

அளவு:- இதில் பண வெடை வீதம் காலை, மாலை சந்தனம் அரைத்த விழுதும், மருதாணியிலை அரைத்த விழுதும் வகைக்கு ஒரு சுண்டைக்காயளவு எடுத்துச் சமம் பசுவெண்ணெய் சேர்த்து அவற்றுடன் பற்பத்தை மத்தித்து 3 முதல் 6 நாள் சாப்பிட நீர்ப்பிரமேகம் குணமாகும். நோய்க்கேற்ற பத்தியம் வைக்கவும்.

உபயோகம்: நீர்ப் பிரமேகம் குணமாகும். வெகு மூத்திரம், வெள்ளை வெட்டை, வாந்தியும் நிவர்த்தியாம்.

4. கல்நார் சிலாசத்து பற்பம்: (சீழ்பிரமேக நிவாரணி) நாட்டுக் கல்நார் தேவையான அளவு எடுத்து பசு நீரில் பத்து நாட்கள் ஊறவைத்து

அப்பால் சுத்த நீரில் கழுவி உலர்த்தி எடுக்கவும். பிறகு ஆடு தீண்டாப்பாளையிலையை அரைத்து கல்நாருக்குக் கவசம் செய்து உலர்த்தி கன புடமிட்டெடுத்து உரலிலிட்டு மாவாக இடித்துக் கல்வத்திலிட்டு புளித்த மோர் விட்டரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடிச்சீலைமண் செய்து கனபுடம் போட்டு ஆறவிட்டெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனையே உள்ளுக்குக் கொடுக்கலாம். இது ஒரு பாகம்.

வேறுமுறை:- மேற்கூறிய கல்நாருக்கு ஆடு தீண்டாப்பாளையிலையை அரைத்து விழுது கவசமிட்டுப் புடம்போட்டெடுத்த பிறகு அதனை இடித்து மாவாக்கிக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் விட்டு நன்றாயரைத்து வில்லைதட்டி உலர்த்தி, எருக்கம் வேர்ப்பட்டையை எருக்கம் பால் விட்டரைத்து மேற்கண்ட வில்லைக்குக் கவசித்து உலர்த்திக் கனபுடம் போட்டெடுக்கப் பற்பமாம். இந்த முறையில் ஏதேனுமொரு பாகமாகத் தயாரித்தெடுத்த கல்நார் பற்பம் ஒரு பலம், கற்பூர சிலாசத்து ஒரு பலம், கல்மதம் ஒரு பலம், இம்மூன்றையும் கல்வத்திலிட்டு துளசிச்சாறு விட்டு நன்றாயரைத்து வில்லைதட்டி அகலிலிட்டு மூடிச்சீலை மண் செய்து உலர்த்தி முழப்புடமிடவும். பிறகு இதனைக் குமரிச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி முன்போல் புடமிட்டெடுக்க சிறந்ததோர் கல்நார் சிலாசத்து கல்மதம் பற்பமாகும்.

அளவு:- இதில் பணவெடை பற்பம், காலை மாலை, ஓரிதழ்த் தாமரையை அரைத்த விழுது அல்லது சிறுகட்டுக் கொடியை அரைத்த விழுது அல்லது வெள்ளறுகு அரைத்த விழுது, ஏதேனுமொன்று கழற்சிக் காயளவில் அனுபானித்துக் காலை, மாலை 6 முதல் 12 வேளை மருந்து கொடுக்க சீழ்பிரமேகம், விந்து நட்டம் இவை குணமாம்.

குறிப்பு:- சிறு கட்டுக்கொடியை அரைத்துக் காலை, மாலை சாப்பிட்டுவர நீரிழிவு நோய் (மதுப்பிரமேகம்) குணமாகுமென அனுபவமுள்ளவர்கள் கூறுவர்.

5. மேற்கூறிய கொடிப்பவள பற்பம்-ஒரு பங்கு
கலைக்கோடு பற்பம் - ஒரு பங்கு
சீனப் பூர பற்பம்-ஒரு பங்கு
கல்நார் சிலாசத்து கல்மதம் பற்பம்-ஒரு பங்கு.

இந்நான்கு வகைப் பற்பங்களையும் கல்வத்தில் கலந்து-மருதம் பட்டையைக் கல்லுரலில் போட்டுப் பஞ்சு போலிடித்துப் பசுவின் பால் தெளித்துக் கொண்டே நன்றாயிடித்துப் பிழிந்த சாறுவிட்டு ஒரு நாள் அரைத்து வில்லை தட்டியுலர்த்திப் பொடித்துக் கொள்ளவும். இதுவே **மன்மத சிந்தாமணி பற்பமெனப்படும்.**

அளவு:- இதில் 1 முதல் 2 பணவெடை வீதம் காலை, மாலை கீழ்க்கண்ட அனுபானங்களில் கொடுத்து வர வெள்ளை, வெட்டை குறிப்பாக இரத்த வெட்டை (இரத்த மூத்திரம்) குணமாம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் மேற்கண்ட நோய்களில் உறுதியான பலனைக் காணலாம். அனுபவித்துக் கைகண்ட மருந்துகளில் ஒன்றாகும்.

அனுபானம்: மாம்பட்டை, மருதம்பட்டை, இலுப்பைப் பட்டை வகைக்கு ஒரு குத்து எடுத்துப் பஞ்சு போலிடித்துப் பசுவின் பால் தெளித்துக் கொண்டே இடித்துப் பிழிந்தசாறு ஒரு ஆழாக்குடன், சமம் பசுவின் பாலும் சேர்த்து அதில் மன்மத சிந்தாமணி பற்பம் கலந்து காலையில் நோயாளிக்கு ஸ்நானஞ் செய்வித்தஉடனேயும், மாலையில் ஸ்நானமின்றியும் கொடுக்கவும். அவசியம் போல் 3 முதல் 9 நாட்கள் அதே அனுபானத்துடனும் அல்லது நீடித்துப் பசுவெண்ணெய் அல்லது இளநீர் முதலிய அனுபானங்களிலும் கொடுக்கலாம்.

6. மூக்காலும் வாயாலும் வரும் குருதி அழல் நோய்க்கு:-

1. ஆடாதோடை இலைச்சாறும் தேனும் சமம் கலந்து தக்க அளவில் காலை, மாலை உள்ளுக்குக் கொடுக்க 3 முதல் 5 நாட்களில் பூரண குணமாகும்.

2. சிறிது பஞ்சில் நல்லெண்ணெய் அல்லது குங்குமப்பூ எண்ணெயை நனைத்து மூக்கில் வைத்திருக்க மூக்கில் இரத்தம் ஒழுகல் நின்று போம்.

7. பெரும்பாடுக்குப் பரிகாரம்:-

(அனுபவ முறை- ஏட்டுப்பிரதி)

"சிவப்பாக இருக்குமது பெரும் பாட்டுக்குச்
சிறுதேங்காய்ப் பிரமாணம் சீலை சுத்தி
பரப்பாகச் சுட்டரைக் கால்படி யரிசி
பதறாமல் மாத்திரித்து அந்தி சந்தி
உரப்பாக வெருகடிதான் மாவில் போட்டு
உத்தமனே உண்டுபின்பு ஒருசி ரங்கை
விரப்பாக வெந்நீர்தான் உண்ட போது
வேகமுள்ள பெரும்பாடு ஓடிப் போமே."

சிறு தேங்காய்ப் பிரமாணம் சீலைசுற்றி அதைச் சட்டியிலிட்டு எரித்துக் கறுக்கிப் பொடித்த சாம்பலுடன் அரைக்கால் படி அரிசி மாவாகத்திரித்து இந்த மாவைத் துணிச் சாம்பலுடன் கலந்து வைத்துக் கொண்டு வெருகடியளவு (மூவிரல் கொண்ட அளவு) எடுத்துக் கொண்டு சிறிது வாழைப் பழத்துடன் பிசைந்து வாயிலிட்டு விழுங்கவும். அடுத்தாற் போல் சிறிது வெந்நீர் சாப்பிடச் செய்யவும். காலை, மாலை 3 முதல் 5 நாள் அல்லது ஒரு வாரம் சாப்பிட பெரும்பாடு யாவும் நீங்கும். இம்முறையை மீண்டும் சீர்திருத்தம் செய்து அடியிற்கண்டபடி தயாரித்து ஆராய்ச்சி நிலையத்தில் உபயோகித்து வருகிறோம். நல்ல பலனளிக்கிறது. இதற்குப் பெயர் "பெரும்பாடு நிவாரணி" எனப்படும். இதன் செய்முறையைக் கீழே காணவும்.

MENORRHAGIA AND METTERORRHAGIA CURE OR PERUMPADU NIVARANI

(Traditional) (S.R. Pharma)

1. Pattuvastera Chenduram of Silk cloth burnt
2. Poongkavi Chenduram- 2 oz (up char- 2 oz)
3. Navarkottai Churanam 2oz
4. Annabedhi Chenduram 2 oz

Mixed and bottled up

Dose: 10 to 15 grains to be mixed with ripe mountain plantain fruit and taken 2 or 3 times a day for 3 days.

Uses: All sorts of profuse perumbadu (Menorrhagia and Metterorrhagia) are cured marvellously. This is an experienced and tried out remedy. Every physician must have a stock of this remedy always.

9. பெரும்பாடு- தோடக் குறி:- (குணவாகடம்.)

"தேகத்துறு மனலுந்தீதாம திலெரிச்சல்
வேகப் பெரும்பாடு வெண்ணிறமாய்ப்-போகவதில்
நாற்றமேல் மூச்சு நவிலக் கபமயக்கம்
தோற்றவுடன் சாயுஞ் சொல்."

பெரும்பாடு நோயுடன் மிகுசுரம், உடல்எரிச்சல், பெரும்பாட்டின் நிறம் வெண்மையாய் வெளிப்படல், நாற்றம், மேல்மூச்சு, கபம், மயக்கம் இவை உண்டாயின் சாவு நிச்சயம் என்கிறார்.

10. பெரும்பாட்டுக்குப் பல்வேறு சிகிச்சைகள் கூறப்பட்டு இருக்கின்றன.

அவை பின்வருவன:-

1. பாரும் பெரும்பாடு பாரமாய்த் தானெடுத்தால்
ஆருந்தேற்றா விரையரைத்து எடுத்துக்-கூறும்
பதக்கு நீர்விட்டுப் பரிவுடனே லேகியஞ் செய்ய
திதக்கமாய்த் தானருந் தேகும்.

2. பரிந்து முட்காவேளை வேர்ப்பட்டை தனையெடுத்து
கரைந்து பச்சை நெல்லரிசிக் கழுநீரிற்- திருந்த
அரைத்ததனை முக்கழஞ்சு யந்தி சந்தி கொள்ள
உரைத்த பெரும்பாடு விட்டோடும்.

3. நேராகும் நாவற்றோல் நீண்ட ஒதித்தோல்
பேராகவே குடிநீர் பின்போட்டுச்-சீராக
ஆவின்பால் நெய் மதுரம்யரைத்து மேபாகமிட்டுண்
தேவி பெரும் பாடது செல்லும்.

மேற்கண்ட வெண்பாக்களின் கருத்து.

1. தேற்றான் விதையை இடித்து நீரில் ஊறவைத்து உரலில் நன்றாய் கூழ் போலாட்டி பனைவெல்லம், நெய், தேன் சேர்த்து முறைப்படி லேகியம் செய்து காலை, மாலை கொடுக்க பெரும்பாடு நிற்கும்.

2. முட்காவேளை வேர்ப்பட்டையை நன்றாயரைத்து மூன்று கழஞ்சு பச்சை நெல்லரிசிக் கழுநீரில் காலை, மாலை அனுபானித்துக்கொடுக்க பெரும்பாடு தீரும்.

3. நாவற்பட்டை, ஒதியம்பட்டை வகைக்கு ஒரு கைப்பிடி எடுத்து இடித்துச் சட்டியிலிட்டு ஒருபடி நீர்விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து வேளைக்கு வீசம் படி வீதம் குடிநீரில் பசுவின் பால், நெய், அதிமதுரத்தூள் இவை சேர்த்து காலை, மாலை மூன்றுநாள் கொடுக்க தீராப்பெரும்பாடு போம். பாக்கெட் வைத்தியம். குணவாகடம்.)

4. நாவற்பட்டை ஒரு பிடியை எருமை மோர் தெளித்து இடித்துச் சாறு பிழிந்து அதில் அகில்பட்டைத்தூள் 5 வராகனெடை சேர்த்துக் காலை, மாலை மூன்றுநாள் கொடுக்கக் குணமாகும். (பாக்கெட் வைத்தியம்)

5. தென்னம்பாளைப் பூவுடன் பசுவின்பால் விட்டிடித்துப் பிழிந்த சாறு ஆழாக்களவாகக் காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிடக் குணமாம். (பாக்கெட் வைத்தியம்)

6. கௌதும்பையும், குருவையரிசியும் சமஎடை சேர்த்து இடித்து மாவாக்கி பனைவெல்லம் கூட்டிப்பிசைந்து புன்னைக் காயளவு காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிடக் குணமாம். (பாக்கெட் வைத்தியம்)

7.அத்தி மரப்பட்டையை பசுவின் மோர் விட்டு இடித்துப் பிழிந்த சாறு வீசம் படியளவு காலையில் மட்டும் மூன்று நாட்கள் கொடுக்க குணமாம்.

8.மாங்கொட்டை பருப்பையரைத்து ஒரு வராகனெடை வீதம் காலை, மாலை மூன்று நாட்கள் தேன் அல்லது பனைவெல்லம், கூட்டிக்கொடுக்க பெரும்பாடு தீரும்.

9.முருங்கைப் பூவைத் தேங்காய்ப்பால் விட்டரைத்து அதே பாலில் கலக்கி காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க குணமாம்.

10. முருங்கைப்பூ, கற்றாழைச் சோறு, பசுவெண்ணெய் இம் மூன்றையும் சேர்த்தரைத்து எலுமிச்சங்காயளவு காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க குணமாம். (ஆயுர் வேத மஞ்சரி)

11. பொரித்த படிகாரமும் இளநீரில் சுத்தி செய்த பூங்காவியும் வகைக்குச் சம எடை சேர்த்துக் கல்வத்தில் அரைத்து வைத்துக்கொண்டு வேளைக்கு 5முதல் 8 குன்றி எடை காலை, மாலை சோடா நீரில் (soda water) அனுபானித்துக் கொடுக்க பெரும்பாடு நீங்கும் (அனுபோக வைத்திய நவநீதம் பாகம் III)

குறிப்பு:- பூங்காவிச் செந்தூரத்தையும் முன்மாதிரியாக உபயோகிக்கலாம்.

12. மாணிக்க பற்பம்:- குருதி அழல் நோய்க்கு ஏற்ற மருந்தாகும். (செய்முறை ஏற்கனவே இதே அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதுவே எங்களது அனுபவம்.)

அன்றியும் அனுபோக வைத்திய நவநீதம் பாகம் 3 பக்கம் 230-ல் கூறியுள்ள மாணிக்க பற்பம் செய்முறை, உபயோகம் முதலியன பற்றித் தெரிந்து கொள்ளுவது நல்லது.

மாணிக்க பற்பம்:- (செய்முறை) செந்நிறப்பற்றுள்ள சுத்தித்த மாணிக்கம் ஒரு தோலா-பிராந்தி-சாராயம் செல்லத்தக்க அளவு-திராட்சைக்காடி செல்லத்தக்க அளவு-சோற்றுக் கற்றாழை செல்லத்தக்க அளவு.

செய்முறை: மாணிக்கத்தை ஒரு மண் குடுவையிலிட்டு கரிநெருப்பின் மீது வைத்து பிராந்தியைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமம்

சுருக்கிடவேண்டும். மறுநாள் முன் போலவே திராட்சைக் காடியைக் கொண்டு நான்கு சாமம் சுருக்கிட வேண்டும். பிறகு அந்தக் கலயத்திலேயே பத்துப் பலம் சோற்றுக் கற்றாழைச்சாற்றை விட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை மண் செய்து ஐந்து வீசை விராட்டியிற் புடமிட்டு ஆறிய பின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பன்னீர் விட்டு தினம் இரண்டு சாமமாக ஒரு வாரம் வரைக்கும் அரைத்து வெய்யிலில் வைத்து நன்றாயுலர்ந்த பின் பொடித்துச் சீசாவில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

அளவு- ½ குன்றி முதல் ஒரு குன்றி எடை

அனுபானம்: வெண்ணெய், தேன், நெய், மாதுளம்பழ மணப்பாகு, கோராப்பட்டு, ஷர்பத், சீமை அத்திப்பழம், முரப்பா முதலியனவாம்.

உபயோகம்:- தலை, மூளை, இருதயம், ஈரல், இரைப்பை முதலிய கருவிகளின் துர்ப்பலத்தை நீக்கிப் பலமுண்டு பண்ணும். தேகபலம், மனோபலம், தைரியம், உற்சாகம் இவைகளை உண்டாக்கும். இருதய அதிர்ச்சி, இருதயத்துடிப்பு, மனக்கலக்கம், மனத்திடுக்கம் முதலியவை களை நீக்கி இருதயத்தைப் பலப்படுத்தும். தேகம் வச்சிராயுதம் போல் வலுப்படும். அன்றியும், சர்வாங்க எரிச்சல், இரத்தங்கக்கல், இரத்தசயம், இரத்த காசம், எந்த மருந்தினாலும் தீராத வயிற்றுப் போக்கு, இந்திரியவொழுக்கு, மேக நீரொழுக்கு, இரத்தப் போக்கு, இரத்தக் கசிவு முதலிய அனேக நோய்கள் குணமாகும் என்கிறார்.

13. பெரும்பாடு சிகிக்சை:- நாவற் பட்டையைப் புளித்த எருமைமோர் விட்டிடித்துப் பிழிந்து ஆழாக்குச் சாறு எடுத்து அதில் நல்ல சந்தனம் ½ பலம் கலந்து மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுத்து வரக் குணமாகும் (புலிப்பாணி 500, வைத்திய சார சங்கிரகம்.)

14. பெரும்பாடு தீர நெய்:- (புலிப்பாணி 500) வரிக் குமட்டிவேர் பலம் பத்து, கடுக்காய் வேர், நெல்லிவேர், தான்றிவேர், பத்திராட்சி வேர், வெட்டிவேர், வில்வவேர், விலாமிச்சு வேர், தூதுவேளை வேர், நன்னாரி வேர், மாதுளம் வேர், மலை தாங்கி வேர், சிறுகாஞ்சொறி வேர், நெய்தற் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, நாகமல்லி வேர், நிலப்பனங்கிழங்கு, நிலாவாரை, கண்டங்கத்திரி வேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று., இவைகளை இடித்துப் பெரிய மண்பாண்டத்திலிட்டு இரண்டு மரக்கால் தண்ணீர் விட்டு

ஒரு படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி அதில் பசுவின் பால் படி நான்கு விட்டு சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஏலரிசி, வால்மிளகு. சன்ன லவங்கப்பட்டை, மஞ்சிட்டி, கோட்டம், சந்தனம், கருஞ்சீரகம், சதகுப்பை, வாய்விடங்கம், சாத்திர பேதி, தாளிசம், தேவதாரு சக்கை, மிளகு, சிறுநாகப்பூ, அதிமதுரம், மஞ்சள், வாலுளுவை, கண்டுபாரங்கி, கடுக்காய்ப்பூ, கத்தூரிமஞ்சள், திப்பிலி, திப்பிலிக் கட்டை, கடுகுரோகணி, நெருஞ்சிமுள், குரோசாணி ஓமம், கோரைக்கிழங்கு, கடுக்காய்த் தோல், நெல்லிக் காய்த்தோல், குங்குமப்பூ, மாதுளம் பிஞ்சு இவைகளை வகைக்குப் பலம் அரை, எடுத்துப் பசுவின் பாலாலரைத்துக் கியாழத்தில் போட்டு, நெய் படி நான்கு, செவ்விள நீர், எலுமிச்சை பழச்சாறு, வல்லாரைச் சாறு வகைக்குப் படி இரண்டு, சீனாச்சக்கரை பலம் 2, நல்ல வெல்லம் பலம் நான்கு இவைகள் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடிகட்டி கணபதிக்குப் பூசை செய்து ஒரு மாதம் நெற்புடம் வைத்துப் பிறகு எடுத்து காலை, மாலை இருவேளையும் முக்கழஞ்சுநெய் சாப்பிட்டு வந்தால் ஈளை, காசம், தலை நடுக்கம், பித்தம், மேகம், கல்லடைப்பு, வலிப்பு, மூத்திரக் கிரிச்சரம், பெரும்பாடு, மேலெரிவு, காந்தல், நீர்ச்சிறுப்பு, வாயு இவைகள் நீங்கும், மலடிக்குப் பிள்ளையுண்டாகும்.

பத்தியம்:- கைப்பு, புளிப்பு, தயிர் இவைகள் ஆகா, நெய் சாப்பிட்டு முடிந்த பிறகு எல்லாமாகும். தேககாந்தியு முண்டாகும். இந்த நெய்யுடன் பவள பற்பம் சேர்த்துச் சாப்பிட்டால் கைக்கறுப்பு தீர்ந்து விடும்.

15. தேங்காய்ப்பால், ஆவின் பால் வகைக்குப்படி அரை எடுத்து முருங்கைப்பூ அரைத்து தேங்காயளவு எடுத்து, பனை வெல்லம் மூன்று பலம் கூட்டி முறைப்படி லேகியஞ் செய்து வேளையொன்றிற்கு எலுமிச்சங்காயளவு கால் மண்டலங் கொடுக்கப் பெரும்பாடு தீரும்.

16. ஆயில் மரப்பட்டையை நீர் விட்டரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்துப் பச்சரிசி மாவிற் பிசைந்து உருட்டிக் கருகாமல் அடை சுட்டு காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

17. இலந்தை மரப்பட்டை, ஒதியம்பட்டை, அத்திப்பட்டை, அரசம்பட்டை, மாம்பட்டை, வேலம்பட்டை இவை வகைக்குப் பலம் ஒன்று, உலர்த்திச் சூரணித்து சம எடை பச்சரிசி மாவும் கலந்து பனைவெல்லம் சேர்த்துப் பிட்டு செய்து வெண்ணெய் சேர்த்து ஆறு நாட்கள் உண்ண நாட்பட்ட பெரும்பாடு தீரும்.

18. ஒருபடி சுத்த நீரில் பூங்காவி பலம் 5-பொடித்துப் போட்டு மூன்று நாள் ஊறிய பின் தெளிவிறுத்து காலை, மாலை படிகாரம் பொரித்து அதில் கலந்து மூன்று நாட்கள் உண்ண நாட்பட்ட பெரும்பாடு தீரும். (வைத். சார சங்கிரகம்)

19. சிவந்த புதுச் செங்கல்லைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து சமன் சீனி கலந்து வெருகடிஅளவு காலை, மாலை ஐந்து நாட்கள் சாப்பிடக் குணமாகும். புளி, புகை தள்ளவும். (போகர் எழுநூறு)

20. சிறு செருப்படைச்சாறு, ஆவின் பால் சமன் கலந்து காலையில் மட்டும் நான்கு நாட்கள் கொடுக்க குணமாகும்.

21. சுடலையில் வெந்த அஸ்தியைப் பொடித்து வடிகட்டிய தூள் 30-வராகனெடை, அபின் 6 வராகனெடை, சாதிக்காய் 10 வராகனெடை, சாதிப்பத்திரி 9 வராகனெடை இவைகளையும் பொடித்தொன்றாய்க் கலந்து வெள்ளாட்டு நெய்யில் மூவிரல் அளவு அந்தி, சந்தி உண்ணத் தீரும்.
(வைத். சார சங்கிரகம்.)

22. படிகலிங்கச் செந்தூரம் 3 முதல் 5 குன்றிஅளவு காலை, மாலை பசு நெய், அல்லது வெண்ணெயிற் கொள்ளப் பெரும்பாடு குணமாகும்.
(சி.வைத். திரட்டு)

23. படிகாரச் செந்தூரம் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை பசு நெய் அல்லது வெண்ணெயிற் கொடுக்கக் குணமாகும்.
(சி. வை. திரட்டு.)

. 24. பூங்காவிச் செந்தூரம் (படிகாரம் ¼ பலம், பூங்காவி ஒரு பலம் சேர்த்துச் செய்தது) ஒரு பணவெடை வீதம், காலை, மாலை பசு நெய் அல்லது வெண்ணெயிற்கொடுக்க பெரும்பாடு குணமாகும். (கண்ணுசாமியம்).

25. நறு விளாமரப் பட்டை, அத்தி மரப்பட்டை, கருவேலம்பட்டை, நாவற்பட்டை இவற்றை நிழலுலர்த்திப் பொடித்துத் தனித் தனியாகச் சூரணஞ்செய்து சமஅளவாய்க் கலந்து வைத்து கொண்டு வேண்டும் போது வீசம் படி காரரிசியை இரவில் ஊறவைத்து காலையில் நீரை இறுத்து விட்டு ஒரு துணியின் மேல் சிறிது நேரம் உலரப்போட்டு இடித்து மாவாக்கி முன்

சூரணத்தில் ஒரு பலம் கலந்து பிட்டவித்து நெய், சர்க்கரை கூட்டிச் சாப்பிட 2 அல்லது 3 நாட்களில் பெரும்பாடு குணமாகும்.

26. அத்தி மரப்பட்டையை மோர் விட்டிடித்துப் பிழிந்த சாறு 1/8 முதல் ¼ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

27. இளசான தென்னம் பூவை இடித்துப் பிழிந்த சாறு முன் மாதிரியாகக் கொடுக்கக் குணமாகும்.

28. வாழைப் பழத்தை மேல் தோல் உரித்து ஒரு பலம் மாம்பட்டை அல்லது அத்திப் பட்டைச் சூரணத்தைத் தூவிப் பிசைந்து பிழிந்த சாற்றை வடிகட்டி படிகார பற்பம் 1 ½ குன்றி எடை போட்டு சாப்பிட மூன்று வேளையில் குணமாகும்.

29. ஒரு பலம் சீமைக் கல்நாரை நன்றாய்த் தூளாக்கி சமன் படிகாரம் சேர்த்து ஒன்று அல்லது இரண்டு சாமம் அரைத்து வைத்துக் கொண்டு 1 முதல் 1 ½ பணவெடை, நெய்யில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும்.

30. நாவற்பழ மணப்பாகு:-(சிகிச்சா ரத்ன தீபம்)

நன்றாய்ப் பிசைந்து வடிகட்டிய தனி நாவற்பழ ரசம் ½ படியுடன் ஒரு வீசை சீனாக்கற்கண்டு கூட்டித் தேன் பதமாகக் காய்ச்சி ஆறிய பின் ஒரு வராகனெடை குங்குமப் பூவையும், ¼ வராகனெடை பச்சைக் கற்பூரத்தையும் 2 ½ பலம் பன்னீர் விட்டு கல்வத்திலரைத்து சர்பத்தில் கலக்கிச் சீசாவிலிடுக. இதனை வேளைக்கு இரண்டு தோலா வீதம் இரு பங்கு நீரில் கலந்து தினம் இரு நேரம் சாப்பிட இரத்த மூலம், பெரும்பாடு, அதி மூத்திரம், தாகம் முதலியவை குணமாகும்.

31. அசோகாரிஷ்டம்:- (ஆயுர் வேதம்)

1 முதல் 4 தேக்கரண்டி வீதம் தினம் 2 முதல் 4 வேளை சிறிது நீருடன் கலந்து சாப்பிட்டுவர பெரும்பாடு தீரும். அன்றியும் பெண்களுக்குண்டாம் வெள்ளை நோயும் குணமாகும்.

32. நீர்வள்ளிக்கிழங்கு, துத்திவேர்ப்பட்டை, முசுமுசுக்கை,

நன்னாரிவேர், பூமி சருக்கரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு இவற்றைப் பாலில் அரைத்து நெய் விட்டு லேகியமாகக் கிண்டிஅருந்தத் தீரும்.

அளவு:- கொட்டைப் பாக்களவு காலை, மாலை அருந்தலாம்.

33. கஞ்சாயிலை, ஏலம் இவற்றை ஆவின்நெய்யிலரைத்து வாளைமீனிற் பூசி ஆவாரை வேர்ப்பட்டை கியாழஞ் செய்து ஒரு சட்டியிலிட்டு வாயிற் சீலை வேடு கட்டி அதன்மேல் மீனை வைத்து இரண்டு நாழிகை பிட்டவியலாக வெந்தபின் எடுத்துக் கவசமும், சிலாம்பும் முள்ளும் நீக்கி பத்து நாட்கள் சாப்பிட்டு அந்தி, சந்தி ஆவாரைவேர்க்கியாழம் குடித்துவரத் தீராப் பெரும்பாடு தீரும்.

34. நெல்லிக்காய்ச்சாறு, பழச்சாறு, கருப்பஞ்சாறு, ஆவின் நெய் இவை வகைக்கு முக்கால்படி, தாளிசம் முக்கால் பலம், சாதிக்காய், ஏலம், கிராம்பு, அரத்தை, அதிமதுரம், நிலப்பனைக் கிழங்கு வகைக்குப் பலம் ஒன்று, தேங்காய்ப்பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு தேக்கரண்டி வீதம் காலை, மாலை கொள்ளத்தீரும். (வைத். சார சங்கிரகம்.)

35. தேரையர் வைத்தியம் 1001ல் கூறிய செய்யுளின் படி மேற்கண்ட சாறுகளுடன் கருவேலம்பட்டை, நாவற் பட்டை, ஒதியம்பட்டை இவைகளின் சாறு வகைக்குப் படி ¾ சேர்த்துச் செய்து முன்கூறியபடி சாப்பிட்டு வரத் தீராத வெள்ளை, பெரும்பாடு, நீர்க்கடுப்பு, நீர்ச்சிறுப்பு, சதையடைப்பு இவைகள் தீருமென அறிகிறோம்.

36. சாரணைவேர், முட்காவேளை சமூலம் இவைகளை நிழலில் உலர்த்தி இடித்து வடிகட்டிய சூரணம்- கருங்குருவையரிசியைத் தெள்ளுமாவாக இடித்து ஆக இரண்டும் சமம் சேர்த்துக் களிகிண்டி மூன்று நாட்கள் காலையில் ஒரு நேரம் உண்ணப் பெரும்பாடு தீரும்.

அல்லவென்றால் வேறு:- செம்பருத்தியிலையும், பிஞ்சும் சேர்த்திடித்துப் பிழிந்த சாறு ½ படி, சமன் எலுமிச்சம்பழச்சாறு, இலுப்பைப்பட்டைச்சாறு ஒரு படி மூன்றுங்கலந்து 1/8 முதல் ¼ ஆழாக்கு வீதம் காலை, மாலை மூன்று நாட்கள் கொள்ளக் குணமாகும்.

பத்தியம்:- இள வெந்நீரும், சாதமும் உண்ணவும், உப்பு, புளி, புகை, ஆகா, (தேரையர் வைத்தியம் 500)

37. பெரும்பாட்டுக்குச் சாறு பூசல்:- ஆலங்கொழுந்து, எருக்கன் மொக்கு, பிரண்டை, மிளகு, இலுப்பையுடைய கிட்டம் இவைகளைச் சமஅளவாக எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து அடிவயிற்றிற் பூசிப் போடப் பெரும்பாடு நின்று போம். (தே. வைத்தியம் 500)

38. சர்க்கரை பலம் 10- இதனைப்பாகு காய்ச்சி மாம்பருப்பு, பரங்கிச் சக்கை இவைகளின் சூரணம் வகைக்குப்பலம் 5- தூவிக் கிண்டி மெழுகுப் பதமாயெடுத்து காலை, மாலை கொட்டைப் பாக்களவு சாப்பிட்டு வரப் பெரும்பாடு குணமாம். (யாகோபு சிந்தாமணி 500)

39. ஆலங்கொழுந்து, பூனைக்காலிவேர், ஆவாரை வேர்ப்பட்டை இவை சமன் சேர்த்து ஆவின் பால்விட்டரைத்து எலுமிச்சங்காயளவு பசுவின் பாலிற் கலந்து காலை, மாலை மூன்று நாள் கொடுக்கக் குணமாம். (தே. வைத்தியம் 1001)

40. தென்னம்பூவை இடித்துப் பிழிந்தசாறு ஆழாக்குடன் சமன் தயிர்கூட்டி, எலுமிச்சம்பழச்சாறு ஒரு பலம் சேர்த்துத் தினம் இரு வேளை ¼ முதல் ½ ஆழாக்கு வீதம் மூன்று நாட்கள் கொடுக்க பெரும்பாடு நீங்கும். (தே.வை 1001)

41. சமுத்திரத்திலுள்ள சாவாளை மீனைக் கழுவிச் சுத்தம் செய்து சிறிது மிளகு, மஞ்சள் இவை சேர்த்து சமையல் செய்து உண்ணச் செய்வது நாட்டிலுள்ள அனுபவம். புளி, புகை கூடா, இப்படிச் செய்வதால் பெரும்பாடு நீங்குமென்பர்.

42. ஆவாரையின் மலர்ந்த பூவின் சிந்தரிசிக்குச் சமன் பச்சரிசியைச் சேர்த்திடித்து மாவாக்கிக் களிகிண்டி நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடத்தீரும்.

43. துத்தியிலையை எலுமிச்சங்காயளவு அரைத்து செந்தவுட்டில் புரட்டிக் காலை தோறும் மூன்று நாட்கள் கொடுத்தாலும் தீரும்.

44. மருதம் பட்டை, நாவற்பட்டை, ஒதியம்பட்டை, இத்திப்பட்டை இவற்றை உலர்த்திச் சூரணித்து சமஅளவாக எடுத்து அத்துடன் சமன் அரிசிமாவும் சேர்த்துக் களி கிண்டி நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடக் குணமாகும்.

45. மொச்சைப் பயறு ஒரு ஆழாக்கு அரை வேக்காடிட்டு மேற்றோல் போக்கி உள் பருப்பைப் பொடி செய்து நல்லெண்ணெயுடன் பிசறி மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க நீங்கும். உப்பு, புளி, ஆகா.

46. ஒரு பலம் துணியேனும், சீலையேனும் ஒரு சட்டியிலிட்டுக் கருக்கி இரண்டுபடி நீர் விட்டுக்காய்ச்சி எட்டொன்றாக்கி காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கப் பெரும்பாடு போம். (ஏட்டுப் பிரதி.)

47. நிலப்பனை நெய்:- (அகத்தியர் காவியம் 1500)

இதில் வேளைக்கு இரண்டு கழஞ்சு வீதம் காலை, மாலை அதற்குரிய கியாழத்துடன் கொடுத்துவரப் பெரும்பாடு, எலும்புருக்கி, பொருமல், தாகம், சோபம், காசம், பிரமியம், சுவாசகாசம். பாண்டு, இரத்த மேகம் இவையாவும் தீரும். (நெய் செய்முறையையும், கியாழம் செய்முறையையும் புத்தகத்தில் காணவும்.)

48. சிவப்புநிறப் பட்டுத்துணி ஒரு கெசம் சேகரித்துக் கொளுத்தி எரிந்து கருகிய பிறகு அந்தச்சாம்பலை எடுத்து அத்துடன் வாழைப்பழம் சேர்த்துப் பிசைந்து லேகியம் போலாக்கிக் காலை, மாலை ஒரு எலுமிச்சங்காயளவு சாப்பிட்டு வர விரைவில் பெரும்பாடு குணம் ஆகும். இது எங்கள் அனுபவ முறையாகும். எல்லோரும் கையாளலாம். நல்ல உறுதியான பலன் கிடைக்கும்.

49. நாவற்பட்டை, ஒதியம்பட்டை, கல்லத்திப்பட்டை இவை வகைக்கு ஒரு பிடி எடுத்து இடித்துச் சட்டியிலிட்டு அத்துடன் சாதிக்காய் ஒன்று, சாதிப்பத்திரி, சிறுநாகப்பூ வகைக்கு ஒரு வராகனெடை சேர்த்து நீர் இரண்டுபடி விட்டு நான்கிலொன்றாய் வற்ற வைத்து வேளைக்கு ½முதல் ஒரு ஆழாக்கு வீதம் சிறிது பனங் கற்கண்டும் சேர்த்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க நிச்சயம் குணமாகும். (அனுபவ முறை.)

50. பெரும்பாடு ஹரம்:- (வைத்திய சதகம்)

நாகலும் பாலையத்தி வெட்பாலை
நற்கருங் காலியின் பட்டை
நலந்தருங் கருப்பஞ் சாறு ட னரக்கும்
நற்பெரும் பூசனிக் காயும்
தோகையே சிவந்த பருத்தியின் பூவுந்
துணியதன் சாம்பல்தா மரைப்பூ
சொன்னவிக் கிழங்கும் வாழையின் பூவுஞ்
சொற்கரு நெய்தலோ டிந்து

மோகமாந் தென்னம்பாளை சந்தனமு
முத்தமும் நெல்லியின் காயும்
மூடிய பேய்க் கொமட்டி யினிலையு
முழங்கு பச்சிலையு நீர்முட்டான்
மாகனல வங்கப்பட்டையீ தெல்லாம்
மாதர்கள் யோனியிற் பெருகும்
வன்பெரும்பா டோடிரத்த மாம்பித்தம்
வாங்குமென் றுரைத்தனர் முனியே.

நாவல், பாலை, அத்தி, வெட்பாலை, கருங்காலி இவற்றின் மரப்பட்டை, கருப்பஞ்சாறு, கொம்பரக்கு, பெரும்பூசனிக்காய், செம்பருத்திப்பூ, துணிசுட்ட சாம்பல், தாமரைப்பூ தாமரைக்கிழங்கு, வாழையின் பூ, நெய்தல் கிழங்கு, இந்துப்பு, தென்னம்பூ, சந்தனம், முத்து, நெல்லிக்காய், பேய்க்கொமட்டியினிலை, பச்சிலை, தண்ணீர் விட்டான், இலவங்கப்பட்டை இவையாவும் மாதர்கள் யோனியிற் பெருகும் பெரும்பாடென்னும் குருதி அழல் நோய் ஹரங்களென முனிவர் உரைத்தனர்

Some of our Research formulas are noted below for Kuruthi Azhal Noi:-

HYPERTENSION CURE POWDER No: 1 (SPECIAL)
(S.R. Pharma)

1.	Veeram purified -	of each palam or 3tolas.
2.	Patharasam purified -	

These two ingredients are rubbed together with water, made into a bolus- over this round bolus is wound round old silk cloth 4 palams or 12 tolas and lit fire to. The silk cloth is burnt into ash, while veeram and rasam get evaporated,. The silk ash is secured, powdered and bottled up.

Dose:- 2 to 5 grains to be given with honey morning and evening either alone or with B.P. Stabilizer or other anupanams.

Uses:- Hypertension is relieved. This is worth-while trying in all cases of Hypertension and Hypotension.

2. HYPERTENSION AND PARALYSIS CURE (SPECIAL)

(S.R Pharma)

1.	Aya veeram	4 grams.
2.	Sivanar Amirtham	4 grams.
3.	K.M.N. Chenduram	4 grams
4.	P.S.M.M. Baspam	8 grams
5.	Kasthuri Chenduram	4 grams
6.	B.P. Stablizer No. IV or V	60 grams.

Mixed well and bottled up.

Dose:- 5 to 10 grains may be taken morning and evening with honey.

Uses:- Hypertension, Paralysis, Hemiplegia, Cerebral thrombosis or cerebral haemorrhage etc, are cured, Vatha- Kapha diseases are very well acted upon.

2. Alternately Myleragathi Ennai in suitable dose may be given each for 5 to 6 days in severe and serious cases. Myleragathi Ennai Please refer to Chapter VII- internal oils. (S.R. Pharma)

3. HAEMATUREA REMEDY OR RAKTHA MOOTHIRAM NIVARANI No.1 (S.R. Pharma)

1.	Thalisapatri Churnam	6 Parts.
2.	Thirikadugu Churnam	4 Parts.
3.	Elarisi Churnam	4 Parts.
4.	Lavangam Churnam	5 Parts.
5.	White Sugar	12 Parts.

All Churnams and sugar are mixed well and bottled up.

Dose:- 1/2 to 1 teaspoon ful B.D. with Ilaneer or honey or other suitable anupanams.

Uses:- Varatchi, piththam, Neerkaduppu and Rakthapremekam (Heamaturea) are cured.

4.BLOOD PRESSURE STABILIZER NO. 1 OR RAKTHAAZHUTHAM NIVARANI (SPECIAL) (S.R. Pharma)

1.	Nar-Jeerakam fried churnam	1 Part.
2.	Elakkai arisi fried churnam	1/2 part
3.	Pachai Karpuram, powdered	1/4 part.
4.	Cheena Karkandu nicely powdered	1 Part.

All these powders are well mixed and bottled up. This is used for Non-Diabetics.

Dose:- 10 to 20 grams may be taken twice a day either with a pinch

or two of **Anna Bedhi Chenduram** or plain well mixed with Lime Fruit Juice and Honey before food.

Uses:- High or Low Blood Pressure is regulated or the blood Pressure is stabilized. Biliousness, Vanthi, Giddiness. Reeling sensation and salivation, etc, are relieved.

Diet:- Salt, Proteins. Fats and night meal should be avoided or reduce considerably. Liqiud diet may be suggested if the disease is severe.

5. BLOOD PRESSURE STABILIZER No. 2. OR RAKTHAAZHUTHAM NIVARANI CHURNAM No 2 (SPECIAL) (S.R.Pharma).

FOR NON-DIABETICS (HYPERTENSION CURE)

1. Jeerakam fried churnam	1 part or 12 tolas.
2. Elarisi arisi fried churnam	½ part or 6 tolas.
3. Pachai Karpuram nicely powdered	¼ part or 3 tolas.

These three ingredients are well mixed in a Kalvam and then the following ingredients are added one by one or as a whole mixed up powders and mixed them together well.

4. Chukku Churnam	1/10 th part or 1 ¼ tolas.
5. Milaku Churnam	1/10 th part or 1 ¼ tolas.
6. Thippili Churnam	1/10 th part or 1 ¼ tolas.
7. Kothamalli Churnam	1/5 the part or 2 ½ tolas.
8. Seemai Amukara Churnam	1/5 th part or 2 ½ tolas.

9. White Sugar- 30 tolas (or equal to the above 8 drugs). All these ingredients are well mixed together and preserved in a stoppered glass jar.

Dose:- 15 grains may be given twice a day well mixed with Lime Fruit Juice and Honey or other suitable anupanams.

Uses:- Hypertension, Giddiness, Biliousness, Indigestion, Sluggish Liver, Anorexia, vanthi, Nausea, Flatulance, Salivation and Vaitruvali, etc, are cured or relieved. Vadhakudachal is also relieved..

6.ANTI CHOLESTROL REMEDY (SPECIAL) (S.R. Pharma.)

1.	Vembu flowers, dried in the shade and powdered	1 part or 2 oz
2.	Keezhkai Nelli Samoolam churnam	½ part or 1 oz
3.	Thuthuvelai churnam	½ part or 1 oz
4.	Potrilaikaiyan churnam	½ part or 1 oz
5.	Chukku	
6.	Milaku	
7.	Thippili	
8.	Kadukkaithole	
9.	Thandrikaithole	Of each 1/8 th part or 2 grams fine . churnam
10.	Nellivatral	
11.	Lavangam	
12.	Lavangapattai	
13.	Elarisi	
14.	Vettiver	

All these ingredients are mixed in a Kalvam, rubbed with Lime Fruit Juice for 3 days and made into pills of gr. 3 each.

Dose:- 1 to 2 pills to be taken twice a day before food.

Uses:- Fattiness of the body and Kapha-pitha diseases are cured. Blood pressure is also regulated. It is good for Obesity. We are using this Pill in our Laboratory for High content of fat in blood.

7. RASATHICHURNAM (S.R. Pharma)

1.	Chukku churnam		10 p.w
2.	Thippili churnam		10 p.w
3.	Elam churnam		10 p.w
4.	Kothamallee churnam		10 p.w
5.	Athimathuram churnam		10 p.w
6.	Kugaineer churnam		10 p.w
7.	Pereechampazham		10 p.w
8.	Munthirikai pazham or Dhrakshai		10 p.w
9.	Jathikai		5 p.w
10.	Lavangam		5 p.w
11.	Thakkolam		5 p.w
12.	Shannalavangapattai		5 p.w
13.	Kasthuri		5 p.w
14.	Chirunagappu		5 p.w
15.	Lavangappathiri		5 p.w
16.	Chandanakattai Churnam		5 p.w
17.	Vettiver	"	5 p.w
18.	Jeerakam	"	5 p.w
19.	Nelliparuppu	"	5 p.w

20.	Nerpori	"	5 p.w
21.	Vilamicham ver	"	5 p.w
22.	Gorojanam	"	5 p.w
23.	Koraikizhangu	"	5 p.w
24.	Jathi Koshtam	"	5 p.w
25.	Aththipazham	"	5 p.w
26.	Avarampoo arisi	"	5 p.w

27. White sugar-5 Madras palams or 30 tolas.

All are powdered, weighed, mixed together and preserved in a bottle.

Dose:- Verukatipiramanam or about ½ teaspoonful to be taken with honey, milk, ghee, cheese or butter morning and evening.

Uses:- Rakthapitham, Vanthipitham, Amilapitham, Flatulance. Giddiness, Thirst, Valarikkai, Moorchai, Manthagni, Kalkaierivu, (Peripheral Neurities) Chest-burn Raktha Athisaram, Ethiredukkira- rakth - pitham. Aththi Jwaram and Rakthapramiyam etc., are cured.

பெரும்பாடு பரிகாரம்

கெந்தக மெழுகு:-

1. நெல்லிக்காய்க் கெந்தகம் பத்து பலம் வாங்கி ஒரு சட்டியில் தேங்காய்ப் பால் அல்லது பசுவின் பால் 2 படி விட்டு துணியினால் வேடுகட்டி அதன் மேல் கெந்தகத்தைத் தூள் செய்து பரப்பி மேல் சட்டி மூடி சீலை மண் செய்து அடிச்சட்டி வாய் வரைக்கும் பூமிக்குள் வைத்து மேல் மூடியைச் சுற்றிலும் எருவடுக்கிப் புடம் போடவும். பிறகு ஆற விட்டு சட்டியைத் திறந்து பார்க்க அடிச் சட்டியில் பாலுக்குள் கெந்தகம் உருகி விழுந்திருப்பதை

அரித்து வெய்யிலில் காய வைத்து மீண்டும் பொடித்து மீண்டும் இதே மாதிரியாக பாலில் மொத்தம் ஐந்துமுறை செய்து, உலர்த்திப் பொடித்துப் பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். இதுவே கெந்தக சுத்தியாகும்.

இதில் இரண்டு பலம் கெந்தகம் எடுத்து பனை வெல்லம் நான்கு பலம் சேர்த்து நன்றாய் அரைத்துக் கொண்டு- பெரும்பாடு உள்ள பெண்களுக்குச் சுண்டைக்காயளவு காலை, மாலை முட்டை வெண் கருவிலாவது, பசுவின் பச்சைப் பாலிலாவது அனுபானித்துக் கொடுக்கப் பெரும்பாடு குணமாகும்.

குறிப்பு:- இந்தக் கெந்தக மெழுகை சுண்டைக்காயளவு காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க வாய் வேக்காடு, அழலை நோய் குணமாகும்.

2. நாவற் பட்டையின் சிவந்த சதை எடுத்து நெல்லிக்காயளவு அரைத்தெடுத்து பசுவின் பச்சைப் பால் வீசம் படியில் அனுபானித்துக் காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கப் பெரும்பாடு நீங்கும்.

3. ஓரிதழ்த் தாமரை சமூலம் பிடுங்கி சிறு எலுமிச்சங்காயளவு அரைத்தெடுத்து முன்போல் பசுவின் பாலில் கொடுக்க சூதக உலைவு என்னும் பெரும்பாடு நிற்கும்.

4. செம்பட்டு சுட்ட சாம்பலெடுத்து வாழைப்பூவில் உள்ளிருக்கும் இளம்பூ எடுத்து தட்டிச் சாறு இரண்டு அவுன்சு வாங்கி அதில் சிறிது பனங் கற்கண்டு சேர்த்து மேற்கூறிய சாம்பல் 2 முதல் 4 குன்றி எடை சேர்த்துச் சாப்பிட மூன்று நாட்கள் ஆறு வேளையில் குணமாகும்.

குறிப்பு:- முன் கூறியது போல் இந்தப் பட்டு சாம்பல் மூவிரல் கொண்ட அளவும் சமன் நாவற் கொட்டை சூரணம் கலந்து பூங்காவிச் செந்தூரம்இரண்டு சிட்டிகையும் சேர்த்து மலை வாழைப் பழத்துடன் பிசைந்து காலை, மாலை மூன்று நாள் சாப்பிடக் குணமாகும். மிளகாய்க் காரம் கூடாது.

5.மாதுளம் பழச்சாறு வாங்கி அதில் பசுவின் பால் கலந்து மேற் கூறிய பட்டுச் சாம்பல் சேர்த்து அத்துடன் நண்டுக்கல் பற்பம் 2 சிட்டிகையும்

சேர்த்துக் காலை, மாலை கொடுக்க சூதக உடலைவு நிற்கும்.

6.விடத்தலையிலை ஒருகைப்பிடி, உமிநீக்கிய பச்சரிசி கால் படியைத் தண்ணீரில் சற்று ஊறவைத்து அரித்து இந்த அரிசியுடன் முன் கூறிய விடத்தலை யிலையையும் சேர்த்து இடித்து மாவாக்கிப் பசுவின் பாலில் களிகிண்டி 3 முதல் 5 நாட்கள் விளாங்காயளவு காலை, மாலை சாப்பிட்டு வரப் பெரும்பாடு குணமாகும்.

குறிப்பு: இவையாவும் பெரியவர்களுடைய அனுபவ முறைகளாகும்.

FOR HYPERTENSION (S.R. Pharma)

RE,

Sringi	Bm.	1 pinch
Silajath	Bm.	1 pinch
P.S. Bm.		1 pinch
Annabedhi Chenduram		1 pinch
B.P. Stablizer		5 pinches

for one dose B. D. with Honey.

This is good. Some people use Sringi Bm. alone

7. இருமல் நோய்

பரிகாரம்

இந்நோயில் ஐயமிகுதியைத் தன்னிலைப் படுத்தவும், தன்னளவில் மிகுதிப்பட்டெழுந்த மேல் நோக்குங்காலைத் தன்னிலைப் படுத்தவும், கோழையை வெளிப்படுத்தவும் தகுந்த பரிகாரங்கள் புரிதல் வேண்டும்.

முதலில் ஐயத்தின் வன்மையைக் குறைக்க சஞ்சீவி மாத்திரை, அட்டபைரவ மாத்திரை, வச்சிரகண்டி மாத்திரை (Night pills), இலவங்காதி மாத்திரை, மேகனாதக் குளிகை வானமெழுகுடன் சேர்த்து ஒரு வேளை, கோரோசனத்தூள், உத்தாமணித் தைலம் என்னும் மாந்த எண்ணெய் இத்தியாதி பேதி மருந்துகளிலொன்றைத் தக்க அளவில் கொடுத்தல் நலம்.

அதன் மிகுந்த குற்றம், மேலெழுந்த வாயு, சளி இவைகளுக்கான மருந்துகள் கொடுக்க வேண்டும். அவைகளாவன:-

1. தும்பைப் பூ ஒரு வராகனெடை, மிளகு 1 ½ வராகனெடை இவற்றைத் தேன் விட்டரைத்து நான்கு கூறாக்கி, ஒரு கூறு வீதம் காலை, மாலை இரண்டு நாட்கள் கொடுக்கலாம். தேவையானால் மீண்டும் 2,3 நாட்கள் கொடுக்கலாம். இதனால் கபம், மூக்கில் நீர் பாய்தல், தும்மல், தொண்டை கட்டல் இவை நீங்கும்.

2. மூக்கில் நீர் பாய்தல் அதிகமிருப்பின் நெற்றிக்கு நீர்க்கோவை மாத்திரை, பச்சைக் கற்பூரச் சூரணம் இவற்றைப் பால் அல்லது வெந்நீரில் உரைத்துப் பற்றிட்டு சாம்பிராணி புகை காட்டி உலர்த்தலாம்.

3. வசந்த குசுமாகரம், கத்தூரி மாத்திரை, கோரோசனைக் கத்தூரி மாத்திரை, கோரோசனை மாத்திரை, பால சஞ்சீவி மாத்திரை, சிவப்பு மாத்திரை இவைகளிலொன்றைத் தக்க அனுபானக் குடிநீர்களில் காலை, மாலை கொடுத்து வர இருமல், தலைப் பாரம், தும்மல், நீர்க் கோவை, சுரம், தொண்டைக் கட்டு, சளி யாவும் தீரும்.

4. ஒருக்கால் மூக்கு நீரும் தும்மலுமிருப்பின் தும்பையிலைச் சாற்றை ஒரு துணியில் துவட்டி மூக்கிலிடவும் என்பதாகச் சித்த மருத்துவம் கூறுகிறது. என் அனுபவத்தில் இம்முறை இக்குறி குணங்களுக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை.

5. நாட்பட்ட இருமலாயின் கொடிப் பவளமும், முத்துச் சிப்பியும் சம எடை எடுத்து எலுமிச்சம் பழச்சாறு ததும்பவிட்டு ரவியுலர்த்தி ஒரு புடமும் பிறகு பழச்சாறுவிட்டு கல்வத்தில் அரைத்து வில்லை தட்டி முறைப்படி மற்றொரு புடமும் போட்டு எடுத்த பவளம், சிப்பி பற்பம் ஒரு குன்றி எடை, கத்தூரிச் செந்தூரம் ஒரு குன்றி எடை, தாளிச பத்திரிச் சூரணம் 5 குன்றி எடை சேர்த்துக் காலை, மாலை தேனில் குழப்பிச் சாப்பிடலாம். அல்லது கண்டங் கத்திரி லேகியம், கண்டாத்திரி லேகியம், (இஞ்சி லேகியம்) திப்பிலி ரசாயனம், ஈளையிருமல் ரசாயனம் ஏதேனுமொன்றைத் துணை மருந்தாகவும் உபயோகிக்கலாம்.

6. **நாட்பட்ட இருமலோடு கோழை கெட்டிப்பட்டு நாற்றத்துடனும், மிகுதியாயும் வெளியாயின்-** சிவனாரமிர்தம், தாளகக் கறுப்பு, பவள முத்துச் சிப்பி பற்பம், முத்து பற்பம், கத்தூரிச் செந்தூரம், சிருங்கி பற்பம், காளமேக நாராயணச் செந்தூரம், தங்க பற்பச் செந்தூரம் இவைகளைத் தக்கஅளவில் கலந்து தாளிச பத்திரிச் சூரணம் சேர்த்துத் தேனில் குழப்பிக் காலை, மாலை கொடுத்து வரக் குணமாகும்.

7. **நாட்பட்ட இருமலுடன் இழுப்பு (Dyspnoea) இருப்பின்-** சித்த ஆராய்ச்சி நிலையத்தில் தயாரித்து உபயோகித்து வருகிற **இரைப்பு நோய் போக்கிப்பொடி** அல்லது **இரைப்பு நோய்** போக்கி மாத்திரை ஏதேனுமொன்றை காலை, மாலை தக்க அளவில் தேனில் கொடுத்து தாளிச பத்திரிக் குடிநீர் கொடுத்து வரக் குணமாகும். கைகண்ட மருந்து.

8. **கத்தூரி மெழுகு தேனில் கொடுத்து-** ஆடாதோடையிலை, கண்டங்கத்திரியிலை, தூதுவளையிலை, துளசியிலை, முசுமுசுக் கையிலை, கஞ்சாங் கோரையிலை, திப்பிலிக் கொடி இவை வகைக்கு ஒரு குத்து எடுத்து சற்று இடித்து முறைப்படி பிட்டவியல் செய்து சாறு பிழிந்து தக்கஅளவில் சிறிது பனங்கற்கண்டும், தேனும் கலந்து காலை, மாலை கொடுத்துவர விரைவில் குணமாகும்.

செம்பு பற்பம் ஒரு அரிசி எடை, புனுகு ஒரு குன்றி எடை சேர்த்து காலை, மாலை தேனில் கொடுத்து உத்தாமணிச்சாறு இரண்டு தேக்கரண்டியளவு கொடுத்துவரக் குணமாகுமென சித்த மருத்துவம் கூறுகிறது.

9. இருமல் நோயில் உபயோகிக்கக் கூடிய கடை மருந்துகளும் பச்சிலை வகைகளும் கூறுகிறார்:-

1. கடைமருந்துகள்:-திப்பிலி, மிளகு, சுக்கு, அதிமதுரம், தாளிசம், இலவங்கம், சிறு தேக்கு, சிற்றரத்தை, பேரரத்தை, அக்கிரா காரம், கோட்டம், கத்தூரி, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கற்பூரம், கஹரூபா, கோரோசனம் முதலியனவாம்.

2. இலை வகைகள்:- துளசி, கஞ்சாங்கோரை, தும்பை, தும்பைப்பூ ஆடாதோடை, உத்தாமணி, கண்டங்கத்தரி, தூதுவளை, முசுமுசுக்கை, இம்பூரல் முதலியனவாம்.

3.மாத்திரை வகைகளில்:-வசந்தகுசுமாகரம், மகாவசந்த குசுமாகரம், பூரண சந்திரோதய மாத்திரை, பால சஞ்சீவி மாத்திரை, சிவப்பு மாத்திரை, சாந்த சந்திரோதய மாத்திரை, எமதண்டக் குடிகா, குங்குமப்பூ மாத்திரை, கத்தூரி, இவைகளிலேதேனுமொன்றை தக்க அனுபானங் களுடன் கொடுக்க இருமல் நோய் குணமாகும்.

4. பற்பச் செந்தூரங்களில், பவள பற்பம், தாளக பற்பம், பலகரை, முத்துச்சிப்பி, நத்தை ஒடு இவற்றின் பற்பங்கள், கத்தூரிக் கறுப்பு, தாளகக் கறுப்பு, கத்தூரி செந்தூரம், கோரோசனத்துகள், P.S.S. பற்பம் கலவை, செம்பு பற்பம், தங்கச் செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம் ஆகிய இவைகளிலொன்றைத் தக்க துணை மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

5.இரைப்புநோய், காசநோய்களில் உபயோகமாகும் தனிச் சரக்குகளாவன:- (பக்கம் 6- சதகலோகம்.)

“கண்டுபா ரங்கியிரு சங்குமாடா தோடை
காயமோ டிருசீ ரகமும்
கடுகுமோத கனொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தி யிலையுங்
காணதூதுளையிந்து சாரணை விளாவிலை

கனியொடு வசம்பு குக்கில்
கரிக்கணா வெண்கருங் காலிசாதிக் காயுங்
கருங்காலிய வச்சாரமும்
மண்டுகற் கடகசிங்கி தேவதார முள்ளி
மாஞ்சில் தாளீ சேலமும்
வள்ளை வெந்தயமுங் கொள்ளுவெட் பாலை
சர்க்கரை வளமுருக் கொடுபண்ணையும்
வாலுளுவை நாகேசமி லவங்கப் பத்திரியும்
மஞ்சள்தேள் சடையாயிலும்
மயிலிறகு சாம்பலும் ஆம்பல்சிற் றாமுட்டி
மருதணியீ இலந்தை வித்தும்
கொண்டதிப் பிலிமூலந் தான்றிகடு நெல்லியுங்
கொன்றையோ டரத்தை யகிலுங்
கோஷ்ட மொடுசீதளை தும்பை கீழ்காய் நெல்லி
கொடிவேலியுந் திராயுங்
கூகைநீ ராவின்பால் செம்பை முக்கத்தாரி
கோலவித் தொடுபட்டையுங்
குப்பைமேனியு முன்னை துளசி பொன்னாவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்
துண்டமா மிலவங்கப் பட்டைசிறு கொம்மட்டி
சுக்குபெரு வாகை தேற்றான்
துய்யமுள் ளங்கியுந் தழுதாளை பெருமல்லி
சொற்பொடு தலைக்காயதுந்
தொடர்கண் டங்காலியும் வில்லைவழுதலை வேருஞ்
சொற்கனா சிறுமல்லியுந்
தூயபா திரிவேரு மிளகுதேன் செவ்வியஞ்
சுவாச விக்கலுந் தீருமே."

இதன் விளக்கம் குரற்கம்மல் நோயில் காணலாம்.

6. குழந்தைகளுக்கு சளிக்கட்டு, சுரம், இருமல், மலச்சிக்கல், மூக்கில் நீர்பாய்தல் இவையிருப்பின்-

1. சஞ்சீவி மாத்திரை 1 முதல் 2 மாத்திரைகளைச் சிறிது வெந்நீரில் உரைத்து ஒரு வேளை கொடுக்க மலமிறங்கும். மேற்கண்ட குறி குணங்களும் தணியும்.

2. கத்தூரி மாத்திரை, வசந்த குசுமாகரம், பால சஞ்சீவி, அமிர்தாதி மாத்திரை, கோரோசனை மாத்திரை, சாந்த சந்திரோதயம், சிவப்பு மாத்திரை, இவைகளிலொன்றைத் தக்க அனுபானத்தில் உரைத்துக் காலை, மாலை கொடுக்க சளி, சுரம், இருமல், நீர்க்கோவை, வாயு இவை குணமாகும்.

மூக்கில் நீர்பாய்தல் அதிகரிப்பின் நீர்க்கோவை மாத்திரையை தாய்ப்பால் அல்லது வெந்நீரில் உரைத்து நெற்றியில் பற்றிட்டுச் சாம்பிராணி புகை காட்டி உலர்த்தலாம்.

அனுபானத்திற்கு:-

1. இஞ்சிச்சாறு, தேன், கற்கண்டு இதில் மேற்கூறிய மாத்திரைகளை உரைத்துக் கொடுக்கலாம்.

2.தாய்ப்பாலிலும் அனுபானித்துக் கொடுக்கலாம்.

3.ஆடாதோடையிலை, கண்டங்கத்திரியிலை, தூதுவளையிலை, துளசியிலை, கஞ்சாங் கோரையிலை, முசுமுசுக்கையிலை, இண்டு, அஞ்சிலை, நொச்சியிலை இவற்றில் சிலவற்றைக் கலந்து பிட்டவியல் செய்து சாறு பிழிந்து அத்துடன் தேன், கற்கண்டு சேர்த்து மாத்திரை உரைத்து காலை, மாலை கொடுக்க விரைவில் குணமாகும்.

குழந்தைகளில் "நாய்க்கணை எண்ணெய்" சிறந்த குணம்தரும் இதன் செய்முறையைச் சித்த ஆராய்ச்சி செய்மருந்து நூலில் பார்க்கவும் (Siddha Research Pharmacopoeia) This Neem Oil Preparation is otherwise called Eosinophilic Lung remedy and Bronchial Asthma remedy.

வயது வந்தவர்களில் இருமல், சுரம், தடுமன் (நீர்க்கோவை), உடம்பு உளைச்சல், மலச்சிக்கல், சளிக்கட்டு இவையிருப்பின்:-

1.அட்டபைரவம் 2 மாத்திரையை வெந்நீரில் கொடுக்க இரண்டொரு தடவை பேதியாகும். எல்லாக் குறி குணங்களும் தணியும். வெந்நீருக்குப் பதில் இஞ்சிச் சாறுடன் தேன் சேர்த்து அதில் உரைத்துக் கொடுக்கலாம்.

2. மாந்த எண்ணெய் (உத்தாமணித் தைலம்) ½ முதல் 1 தேக்கரண்டியளவு காலையில் மட்டும் ஒரு வேளை சிறிது வெந்நீரில் கொடுக்க பேதியாகும். ஐயக் குற்றங்களும் தணியும்.

3. அதன் பிறகு சாந்த சந்திரோதயம், வசந்தகுசுமாகரம், மகா வசந்த குசுமாகரம், கத்தூரி மாத்திரை, எமதண்டக் குளிகை, கோரோசனை மாத்திரை, குங்குமப்பூ மாத்திரை, தாளிசாதிவடகம், ஏதேனுமொன்றை முன் சொன்ன அனுபானங்களில் காலை, மாலை கொடுக்கலாம். இருமல் நோயில் ஆடாதோடை மணப்பாகு நல்ல குணம்தரும்.

4. பவளம், முத்து, முத்துச்சிப்பி, பலகரை, மான்கொம்பு இவைகளின் பற்பம், கத்தூரிக் கறுப்பு, கத்தூரிச் செந்தூரம், அன்னபவளம், சொர்ண பவளம் முதலிய செந்தூரங்கள், க்ஷயகுலாந்தகன், சொர்ண முத்து பவள பற்பம் இவைகளையும் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்து வர இருமல் குணமாகும்.

5. செம்பு பற்பம், கத்தூரிச் செந்தூரம், தாளகக் கறுப்பு இவை கலந்த மருந்துகளை உத்தாமணிச் சாற்றில் அனுபானித்துக் கொடுக்க காசம், சுவாசம், சயநோய் முதலியன குணமாகுமென மருத்துப் பாரதம் கூறுகிறது.

6. சிற்றரத்தைச் சூரணம், அக்கிராகாரச் சூரணம், தாளிசாதிச் சூரணம், திப்பிலி ரசாயனம் இவைகளிலொன்றை, கபத்தைப் போக்கக் கூடிய குடிநீர்களுடன் கொடுக்க இருமல் போகும். "ஈளை இருமல் ரசாயனம்" நாள்பட்ட இருமலில் நல்ல பலனைத் தரும். இரைப்பு நோய்க்கும் நல்லது.

7. கரிசாலைத்தைலம், கரிசாலை நெய், மிளகுத் தைலம், நிற்குண்டித் தைலம், சுக்குத் தைலம் இவற்றிலொன்றைத் தக்க அளவில் உள்ளுக்கும் கொடுத்து தலை முழுகவும் உபயோகித்து வர நாள்பட்ட இருமல் விரைவில் குணமாகும்.

சுக்குத் தைலம், அரக்குத் தைலம் இவற்றில் தலை முழுகி வர இருமல் குறையும்.

8. நெல்லிக்காய் லேகியம், தூதுவளை நெய், கத்தூரி மெழுகு இவை இருமலுக்கு ஏற்ற மருந்தாகும்.

"தூதுளையின் பழரசமுஞ் சுத்தாவின் பாலும்
தீதிலிரு சீரகந் திரிகடுகு- மாதேகேள்
கரகரவென்றே யெழுங்காச சுவாசச் சயம்
பரபரவென்றே யேகும்பார்."

என்பதனாலறிக!

9. பவளமுத்துச் சிப்பி பற்பம், மான் கொம்பு பற்பம், கற்பூர சிலாசத்து பற்பம், கத்தூரிச் செந்தூரம் இவை வகைக்கு ஒரு குன்றி எடை, தாளிசாதிச் சூரணம் 4 குன்றி எடை சேர்த்துத் தேன், நெய் கலந்து குழப்பி காலை, மாலை கொடுத்து வர இருமல், இரைப்பு, சயநோய் யாவும் குணமாகும். தங்கச் செந்தூரம் 1/2 அரிசி எடை சேர்த்து சாப்பிடலாம்.

10. புகையிருமலுக்கு மருந்து:- (Dry Cough)

சுக்கு, திப்பிலி, மிளகு சம எடை எடுத்து மை போலரைத்து மெல்லிய துணியில் வஸ்திரகாயஞ் செய்து, அந்த எடைக்குச் சமன் வெள்ளைச் சர்க்கரை என்னும் பூராச் சர்க்கரை சேர்த்து வைத்துக் கொண்டு திரிகடியளவு காலை, மாலை பசு நெய்யில் குழைத்து சாப்பிட மூன்று வேளையில் தீரும் (பிரமரகசியம்).

திப்பிலியை மை போலரைத்து வஸ்திரகாயஞ் செய்து இரண்டு சிட்டிகையளவு காலை, மாலை தேனில் குழப்பிக் கொடுக்க புகை இருமல் தீரும்.

இருமலுக்கு வாயிலடக்க மருந்து:- அதிமதுரம், பொரித்த வெண்காரம், வெள்ளை மிளகு வகைக்குச் சம எடை எடுத்துக் கல்வத்திலிட்டுக் கற்றாழைச் சோறு போட்டரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி 2 மாத்திரைகளை வாயில் அடக்கி உமிழ்நீரை விழுங்கவும். இருமல் அடங்கி விடும்.

இருமல்கியாழம் (சிகிச்சாரத்னதீபம்):-

சிற்றரத்தை, பேரீச்சங்காய், சுக்கு, அதிமதுரம் வகைக்கு 1/4 பலமாக

நறுக்கி ஒரு சீலையில் தளர்ச்சியாய் முடிந்து அதனைக் கால்படி பசுவின் பாலில் போட்டு மீண்டும் கால்படி தண்ணீர் கூட்டிச் சிறு தீயில் எரித்து, விட்ட தண்ணீர் சுண்டக் கவனித்து வடித்து 1/2 பலம் சீனாக்கற்கண்டைப் பொடித்துப் போட்டுக் கலக்கிச் சாப்பிடுக . இங்ஙனம் காலை, மாலை 5 முதல் 7 நாள் சாப்பிட நாள் பட்ட இருமலாயினும் உடனே தீரும்.

இம்பூரல் மகிமை இருமல் நோயில், (பக்கம் 111 விஷவைத்திய சிந்தாமணி)

"இம்பூரல் வேர்சமூலம் என்பதாகவே கொணர்ந்து
தம்பிரானையே நினைந்த தென்பதாகவே யுணர்வை
கூத்திருமல் கோழைசலம் நாற்றமொடு சீயகலும்
ஆத்திவிடு மேசுவாசம் பார்த்து பதமா யுணர்வை."

என்பதனால் இம்பூரல் சமூலம் குத்திருமல், கோழை, சீழ் நாற்றம் சளி, சுவாசம் இவைகளைக் குணப்படுத்துமென அறிக! குறிப்பாக இரத்த காசத்திற்கு நேர் மருந்து.

இம்பூரல் அடை:- புழுங்கலரிசி ஒரு சிரங்கையைச் சற்று தண்ணீரில் ஊறவைத்தெடுத்து, இம்பூரல் வேர்ப்பட்டை அல்லது சமூலம் சேர்த்து 10 மிளகும் வைத்து அம்மியில் நன்றாய் அரைத்து அடை தட்டி நல்லெண்ணெயில் போட்டு (எள்ளடை போல்) வேக வைத்து காலை தோறும் மூன்று நாள் சுடச்சுடச் சாப்பிட இரத்த காசம், குத்திருமல், கோழைக்கட்டு முதலியன நீங்கும். கை கண்டமருந்து. உப்பு இதில் சேர்க்கக்கூடாது.

ஓயாத இருமலுக்கு வாயிலடக்கி வைக்க மற்றொரு மருந்து கூறுகிறார்:-

மிளகு 2 பலம் நெய்யில் வறுத்துத் தூள் செய்து, அத்துடன் கறி மஞ்சள் தூள் ½ பலம் சேர்த்து 2 பலம் நல்ல வெல்லத்தைப் பாகு செய்து, அதில் இந்தத் தூளைக் கொட்டிக் கிளறி நெய் விட்டு, கழற்சிக் காயளவு உருண்டை செய்து வாயிலடக்கி வைத்திருந்தால் மார்பில் கட்டியிருக்கும் சளி கரைந்து இருமல் குணமாகும்.

ஓயாத இருமலுக்குக் குடிநீர்:

சீரகத்தையும்,வெள்ளைப்பூண்டையும் (உள்ளி) நறுக்கிப் போட்டு முறைப்படி குடிநீராக்கிச் சாப்பிடக் குணமாகும்.

அதிமதுரம்பாலையும் (Extractum glycerriz) சீனாக்கற் கண்டையும் வாயிலடக்கி வைத்திருக்க இருமலடங்கும்.

கோழை இருமலுக்கு மருந்து:-

5-பலம் நயம் தேனை அடுப்பிலேற்றிக் காய்ச்சி நன்றாய் சூடேறியவுடன் ¼ பலம் மிளகுத் தூள், ¼ பலம் பொரித்த வெண் கார்ம் இவற்றை அந்தச் சுடுகின்ற தேனில் போட்டுக் கலக்கி வைத்துக் கொண்டு வேளைக்குக் கால் பலம் வீதம் காலை, மாலை சாப்பிட்டு வரக் குணமாகும்.

சுக்கு, திப்பிலி, மிளகு தினுசுக்குக் கால் பலம் வீதம் எடுத்து மைபோலரைத்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயஞ் செய்து, அத்துடன் திரிகடிப்பிரமாணம் அசல் பூரா வெள்ளைச் சர்க்கரை கலந்து பசு நெய்யில் குழைத்து காலை, மாலை சாப்பிடக் குணமாம். புகையிருமலும் தீரும்.

கண்டங்கத்திரி, தூதுவளை, ஆடாதோடை, துளசி இவை வகைக்கு ஒரு பிடி வீதம் எடுத்துத் தட்டிச் சாறு வாங்கி, அதனோடு வசம்பு, சிற்றரத்தை, இஞ்சி இம்மூன்றையும் தட்டிச் சாறு பிழிந்து, முன் சாற்றுடன் சேர்த்து-1 முதல் 2 அவுன்சு உள்ளுக்குக் கொடுக்க நாட்பட்ட இருமல், கோழைக் கட்டு, ஓயாத இருமல் இவை போம். பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடலாம்

நெல்லிப் பருப்பை சர்க்கரை சேர்த்து அரைத்து, பாக்குப் பிரமாணம் உள்ளுக்குக் கொடுத்து, அதன் மேல் வெள்ளாட்டுப்பால் 1/8 படி சாப்பிட, இரைப்பு இருமல் நீங்கும்.

Special Research Preparation are Noted Below.

DRY COUGH POWDER OR PUKAI- ERUMALCHURNAM

(S.R Pharma)

1.	Chukku churnam	Of each in equal parts (fine churnam)
2.	Milagu churnam	
3.	Thippili churnam	

These three ingredients should be nicely strained through fine cloth and mixed.

4. White sugar equal to the total weight of the first three ingredients is added to the above compound churnam and mixed well.

Dose:- 10 to 20 grains maybe given twice day well mixed with Cows ghee.

Uses:- Pukai- Erumal or Dry Cough or Varatchi Irumal Persistent cough is cured in 3 days.

1. TONSILITIS DISEASES CURE NO.1 (SPECIAL)

(S.R Pharma)

1.	Chukku churnam	Of each equal parts or 2 ounces each.
2.	Milagu fried churnam	
3.	Thippili fried churnam	
4.	Induppu finely powdered	

5. Cheena Karkandu (Sugar kandy) finely powdered 4 parts or equal to the above 4 ingredients or 8 ounces.

These five ingredients are mixed well and Preserved in a bottle.

NOTE:- During administration it is always much useful if we add 2 grains of P.S. M.M. Baspam and Kasthuri chenduram grain 1 for each dose in cases of severe type with persistent cough.

Dose:- of The Tonsil Cure:- 5 to 10 grains twice a day with butter or ghee or honey or other suitable anupanams may be given.

Uses:- Tonsilitis, Tonsil enlarge ments, elongated uvula and cough etc. are relieved.

TONSILITIS CURE NO II. (S.R Pharma)

1. Chukku churnam	
2. Milaku churnam	
3. Thippili churnam	of each 2 oe.
4. Induppu churnam	
5. Jeeragam churnam	
6. Elarisi churnam	
7. Thalisapatri churnam	
8. P.S.S Baspam	1 ounces
9. Kasthuri Chenduram	2 drams
10. Cheena Karkandu	15 ounces
Mixed well and bottled up.	

Dose:- 5 to 15 grains may be given well mixed with Cow's ghee or butter or honey or other suitable anupanam.

Uses:- Kasam, Swasam, kshyam and particulary Tonsilitis are cured

3. TONSIL DISEASES CURE NO.III (SPECIAL)
(S.R. Pharma)

1. Chukku churnam 2. Milagu churnam 3. Thippili churnam 4. Kadukkai thole churnam 5. Thandrikkai thole churnam 6. Nellikaivatral churnam 7. Karupuravalli samoolam, dried, churmam-	of each Churnam One part 2 ounces.

No:- 7 Green Karupuravalli samoolam is dried in the shade and powdered , one part or 2 ounces is added to the above first six ingredients. They are placed in kalvam, rubbed with manjal Karisalai leaves juice for 12 hours or more rounded into pills of gr.ம்ீ each, dried in the shade and bottled up.

N.B:- After being rubbed and just before being rounded into pills. P.S.M.M. Baspam 2 tolas and Kasthuri Chenduram 1 tola may be added, rubbed for 15 minutes and then rounded into pills.

Dose:- One pill may be taken twice a day either as pill or as powder well mixed with honey.

Uses:- All sorts of Tonsil diseases are definitely cured.

N.B:- Plain Karpuravalli leaves green may be chewed morning, noon and evening daily which will definitely cure Tonsil Diseases in a fortnight. Karpuravalli leaves are said to be a specific for Tonsil disorders.

4. KAKKUVAN ERUMAL NIVARANI NO.1 OR WHOOPING COUGH REMEDY NO: 1 OR WHOOP CURE NO:1 (SPECIAL) (S.R. Pharma)

1. Myliragu ½ viss is taken and burnt into ash weighing- 7 ½ Tolas.
2. Milagu lbs.1½ is taken, powdered coarsely and fried into ash weighing. 7 ½ Tolas.

   (Both these ingredients are taken in equal parts of ash.)

3.	Lavangam churnam	- 4 ½ Tolas
4.	Athividayam churnam	- 4 ½ Tolas
5.	Thippili 20 tolas is taken andfired into ash weighing	- 3 Tolas
6.	Pavala churnam No. 2	- 3 Tolas
7.	Sringi Baspam No.2	- 3 to 7 ½ Tolas.
8.	Muthuchippi Baspam	-3 Tolas
9.	Silajathu Baspam	-3 Tolas
10.	Kasthuri Chenduram	- ½ to 1 Tola.

These ten drugs are mixed together as per rules in a mortar and preserved in a suitable bottle. Better to add P.S.M.M. Baspam 12 tolas in place of items 6,7, 8 and 9.

Dose:- 3 to 10 grains twice a day may be given according to the age of the children, well mixed with cow'sghee or honey or perferably in goat's milk.

Uses:- Particularly whooping cough is relieved. Cough, vanthi, Jwaram and Chalikattu are also cured. Goat's milk fresh may be given to children suffering from whoop morning and evening for 20 days which gives good relief to the spasms

5. KAKKUVAN LEHIYAM OR WHOOP -CURE LEHIYAM. (S.R. PHARMA)

1.	Kandangkathiri samoolam Juice	1 part or 1 1b
2.	Karunthulasi Juice	2 parts or 2 1bs
3.	Adathodai leaves Juice	3 parts or 3 1bs.
4.	Honey	4 parts or 4 1bs.
5.	Chukku	
6.	Milagu	
7.	Thippili	
8.	Kadukkai thole	
9.	Thandri thole	
10.	Nellivatral	
11.	Lavangam	
12.	Lavanga pattai	of each 2 grams, fine churnam.
13.	Elarisi	
14.	Chitharathai	
15.	Perarathai	
16.	Athimathuram	
17.	Thalisam	
18.	Jathikkai	
19.	Jathipathiri	
20.	Panangkarkandu	30 Tolas
21.	Cow's ghee.	½ Tolas.

METHOD OF PREPARATION:

The juices are mixed, boiled, reduced to ½ part, then panangkar kandu is dissolved in the solution, boiled again, made into pakupatham or syrup consistency, the churnam is then added and mixed well. Cow's ghee ½ lb. is added and removed from the fire. On being cooled, Honey is added, mixed well and preserved in a jar.

Dose:-¼ to ½ tolas according to the age for children under 10 years may be given twice a day.

Uses:-This is a direct specific for whooping cough. Better to give goat's milk as soon as it is drawn from the goat, morning and evening as a preventive and curative of whoop.

8. இரைப்பு நோய்

பரிகாரம்

தன்னிலை மிகுந்த ஐயம் முதலிய குற்றங்களைத் தன்னிலைப் படுத்துவதற்கும், மேல்நோக்குகாலின் (உதானன்) மிகுதியான வன்மையைக் குறைப்பதற்கும் பேதி மருந்துகளைக் கொடுத்துக் கழிச்சலான பிறகு நோய்க்கான மருந்துகளும், உணவுகளும் தருதல் நல்லது.

கழிச்சலுக்கு:-

1.முக்கிரட்டை வேர், காக்கட்டான் வேர், சிவதை வேர், நிலவாகையிலை இவை வகைக்குப் பலம் ¼, தண்ணீர் ஒரு படி விட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி, கால் முதல் அரை ஆழாக்கு வீதம் காலையில் மட்டும் கொடுக்கக் கழிச்சல் உண்டாகும்.

2. உத்தாமணித் தைலம் (மாந்த எண்ணெய்)- அரை தேக்கரண்டி அளவு சிறிது பாலில் காலையில் மட்டும் கொடுக்கக் கழிச்சலாகும். இரைப்பும் தணியும். தேவையிருப்பின் மூன்று நாட்கள் காலையில் மட்டும் தக்க அளவில் கொடுக்கலாம்.

3. குழந்தைகளாயின் சஞ்சீவி மாத்திரையும், பெரியோராயின் அட்டபைரவம், இலவங்காதி, மேகனாதக்குளிகை, வச்சிர கண்டி மாத்திரை, சீவரத்னக் குளிகை, சுகவிரேசனக்குளிகை இவற்றுள் ஏதேனும் ஒருவகை மாத்திரையைத் தக்க அளவில் காலையில் மட்டும் வெந்நீருடன் கொடுக்கக் கழிச்சலாகும்.

• **குறிப்பு:-** சஞ்சீவி மாத்திரையை (1. முதல் 2). உத்தாமணிச்சாறு 4,5 துளிகளிலனுபானித்துக் கொடுக்கலாமென நூல்கள் கூறுகின்றன.

1. நோய்க்கான மருந்துகள்:-

பவளம், முத்து, சிருங்கி, வெள்ளி, முத்துச்சிப்பி, தாளகச் செம்பு, தங்கம் இவற்றின் பற்பச்செந்தூரம், சுண்ணம் முதலியனவும் காளமேக நாராயணச் செந்தூரம், தாளகக் கறுப்பு, கத்தூரி மெழுகு. கத்தூரிக் கறுப்பு, சுவாசக் குடோரி, மகா வசந்தகுசுமாகரம், பூரண சந்திரோதயம், சாம்பிராணிப்பூ மாத்திரை, தாளிசாதி வடகம் ஆகிய இவற்றைத் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுக்கலாம். அன்றியும் தூய குலாந்தகன், சொர்ணபவளமுத்து பற்பம் இவைகளும் உபயோகமாகும். இவற்றிற்குத் துணை மருந்துகளாக ஐயமிகுதியைக் குறைக்கக் கூடிய குடிநீர், பிட்டவியல்,சுரசம், இலேகியம், பொடி முதலியன உபயோகிக்கலாம். அவையாவன.

1.ஆடாதோடைக் குடிநீர், 2. தாளிசபத்திரிக் குடிநீர், 3. ஆடாதோடையிலை, கண்டங்கத்திரி இலை, துளிசியிலை, தூதுவளை, கஞ்சாங்கோரை, முசுமுசுக்கை, திப்பிலிக் கொடி இவற்றை முறைப்படி பிட்டவியல் செய்த சுரசம், 4. ஈளை இருமல் ரசாயனம், 5. தாளிசாதிச் சூரணம். 6. திப்பிலி ரசாயனம், 7. அரத்தைச் சூரணம் இவை போன்றவற்றை உபயோகிக்கலாம்.

2.கடைச் சரக்குகளாவன:-

சிற்றரத்தை, தாளிசபத்திரி, திப்பிலி, அதிமதுரம், கோட்டம், இலவங்கம்,அக்கிராகாரம், கண்டுபாரங்கி, மூங்கிலுப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி மூலம் முதலியன உபயோகமாகும்.

3. பச்சிலைகளில்:-

துளசி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, கஞ்சாங் கோரை, தூதுவளை, முசுமுசுக்கை, திப்பிலிக் கொடி, கரிசாலை, பொன்னாங்காணி, உத்தாமணி, தும்பைப்பூ, இம்பூரல், மணித்தக்காளி ஆகிய இவற்றின் சாறு முதலியன உபயோகமாகும்.

4. இதன்றியும் தேரன் மருந்து பாரதத்தில் கூறியபடி செம்பு பற்பத்துடன் புனுகு, கத்தூரி சேர்த்து உத்தாமணிச் சாற்றோடு கொடுத்துவர

இந்நோய் நீங்குமென்பதைக் கீழ்க்கூறிய செய்யுளாலறிக.

"சுவேத வாகனான மைந்தனெனு மைந்தனைச்
சொர்க்கமெனு முத்தமாங்கத் தோன்றலெனு மான்மத
வலாரிதன் பகையான சுவாசமாங் காலகேய
நிவாதகவ சத்தவுணர் முப்பத்தி மூன்றான
நிகழ்லக்க ரோமாகரரை நிமிடத்திலே கொன்று
வேலிச் சாத்தினா னீராக்கிய காலையே
சவாது மணவாகை மாலிகை சூடியமராபதி
தன்னிலொரு பவனி வந்து சக்கரத் தந்தையுட
னமுதபோசன முண்டு தந்தை மகிழ்ந்த வேளை
துவாதசாதி த்தரென வொளிருமணி மவுலி பவனி
சொன்னவம் பரமுதவிச் சோதிக்க வேரம்பை
மாகைப் பணிக்கவவள் சொல்லி யுமாயினானே."

என்பதினாலறிக!

மான் மதம் என்பது கத்தூரி
வேலிச்சாறு என்பது உத்தாமணிச்சாறு.

5. அன்றியும் வழக்கில்:-

பொரித்த கோழி முட்டையின் ஓடுகளை உவர்மண் கூட்டி நீர் விட்டுக் கொதிக்க வைத்துக் கழுவி எடுத்ததைக் கல்வத்திலிட்டு நீர் முள்ளிச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி அகலிலடக்கிச் சீலை செய்து முறைப்படி புடமிட்டெடுத்து, மீண்டும் இவ்வாறு மூன்று புடமிடப் பற்பமாகும். ஒரே புடத்திலும் நயமான பற்பமான துண்டு, இது சிற்றண்ட பற்பமெனப்படும். இதில் துவரைஅளவு பற்பத்தை-ஒரு சிறு துண்டு கடுகுரோகிணித் தூளும், மிளகரணை வேர்ப்பட்டையும் கூட்டி குடிநீராக்கி அதில் அனுபானித்து காலை, மாலை கொடுக்க இரைப்பு நோய் நீங்குமெனக் கூறியுள்ளார். (சி.ம.)

உணவு.

தனக்கொவ்வாப் பொருள்களையறிந்து உணவை வகுத்தும். எளிதில் செரிக்கக் கூடியதும், உடலில் ஐயத்தைப் போக்கக் கூடிய உணவு

வகைகளைக் குறைந்த அளவில் உண்ண வேண்டும். இரவில் சிறிது ரொட்டி பால் சாப்பிடலாம். மாலை 6 மணிக்கு இந்தவித உணவை அருந்துவது நல்லது. பகலில் கஞ்சி ஆகாரம் கொள்ளலாம். அதிக இரைப்பு இருக்கிற நாட்களில் கஞ்சி ஆகாரம் பொருத்தமானது. கடினமான உணவு கொள்ளக்கூடாது.

மேலும் இருமல் நோய், இளைப்பு நோய் இவற்றில் கூறிய மருந்துகளையும் இந்நோயில் உபயோகிக்கலாம்.

பவள வீர சுண்ணம்:-

இந்நோய்க்கு ஏற்ற மருந்தாகும். இம்மருந்து இருமல், இரைப்பு, இளைப்பு, மஞ்சள் காமாலை, பித்தப்பையிலுள்ள கல்லடைப்பு முதலிய நோய்களுக்கு நல்ல பலனளிக்கும். ஒன்று முதல் இரண்டு சிட்டிகைஅளவு தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுத்து வரலாம்.

பொதுவாக எல்லாவகை இரைப்பு நோயிலும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் வழங்குவது யாதெனில்:-

1. இரைப்பு நோய் மாத்திரை:-

No. Bronchial Eosinophilic Asthmapills) வேளைக்கு 2. மாத்திரை வீதம் பொடிபண்ணி தேனில் குழப்பி காலை, மாலை கொடுத்து மேலே கூறியுள்ள குடிநீர், பிட்டவியல்,சுரசம் ஏதேனு மொன்றைக் கொடுக்கவும்.

2. இரைப்பு நோய்ப் பொடி:-

No. 1. Bronchial Asthma or Eosinophilic Lung remedypowder) தாளகக் கறுப்பு, கஸ்தூரிக் கறுப்பு அல்லது செந்தூரம், பவள வீரச் சுண்ணம், காளமேக நாராயணச் செந்தூரம், முத்து பற்பம், சிருங்கி பற்பம், முத்துச்சிப்பி, பற்பம், தங்கச் செந்தூரம், இவை வகைக்கு ஒரு அரிசி எடையும், தாளிசாதிச் சூரணம், அரத்தைச் சூரணம், அக்கிராகாரச் சூரணம், திப்பிலி ரசாயனம், திரிகடுகுச் சூரணம் இவற்றிலேதேனுமொன்று 4

சிட்டிகையும் சேர்த்துத் தேனில் குழப்பி காலை, மாலை கொடுத்து வர விரைவில் இரைப்பு நோய் குணமாகும். இச்சேர்க்கை மருந்து எங்கள் அனுபவங்களிலொன்று, கைகண்ட மருந்து.

3. இரைப்பு நோய்ப்பொடி-எண்.2

This is Bronchial Asthma and Eosinophilic Lung remedy No.1 (part)

1.	இரைப்பு நோய் மாத்திரை பொடித்தது	1 Part
2.	பற்பம் - P.s.s.	1 Part
3.	கத்தூரிச் செந்தூரம்	1 part
4.	காளமேக நாராயணச் செந்தூரம்	1 part
5.	தாளிசாதிச் சூரணம்	2 part

நன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு 5 முதல் 10 கிரெயின் அளவில் தினம் 2 அல்லது 3 வேளை தேனில் கலந்து கொடுக்க விரைவில் குணமாகும். கைகண்ட மருந்து அனுபவமானது.

This is Bronchiial Asthma and Eosinophilic Lung remedy No.2

இரைப்பு நோய்ப் பொடி எண்-3

1.சிவனாரமிர்தம்	
2.காளமேக நாராயணச் செந்தூரம்	
3.தாளகக் கறுப்பு	
4.கத்தூரிச் செந்தூரம், வகைக்கு	1 Part
5.(P.S.S) பற்பம்	4 Parts
6.சுவாசக் குடோரி மாத்திரை பொடித்தது	4 Parts
7.தாளிசாதிச் சூரணம்	12 Parts

நன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு 10 முதல் 15 கிரெயின் வீதம் காலை, மாலை தேனில் கொள்ள இரைப்பு நோய் விரைவில் குணமாகும். This is Bronchial Asthma and Eosinophilic Lung remedy No.3

இரைப்பு நோயில் உபயோகிக்கக்கூடிய சில தனிச் சரக்குகளாவன:- (Vide page 6 வைத்திய சதகம்.)

"கண்டுபா ரங்கியிரு சங்குமா டாதோடை
காயமோ டிருசீரமும்
கடுகுமோ தகனொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தியிலையுங்
கானதூதுளை யிந்துசாரணை விளாவிலை
கனியொரு வசம்பு குக்கில்
கரிக்கணாவெண் கருங்காலி சாதிக்காயுங்
கருங்காலி யவாச் சாரமும்
மண்டுகற் கடசிங்கி தேவதார முள்ளி
மாஞ்சில் தாளீ சேலமும்
வள்ளை வெந்தயங் கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வனமுருக்கொடு பண்ணையும்
வாலுளுவை நாகேசமி லவங்கப்பத் திரியும்
மஞ்சள் தேள் கடையாயிலும்
மயிலிறகு சாம்பலு ஆம்பல் சிற்றாமுட்டி
மருதணியிலந்தை வித்துங்
கொண்ட திப்பிலி மூலந்தான்றி கடுநெல்லியுங்
கொன்றை யோடரத்தை யகிலுங்
கோட்டமொடு சீதளை தும்பை கீழ்காய் நெல்லி
கொடிவேலி யுந்தி ராயுங்
கூகை நீராவின் பால்செம்பை மூக்கத்தாரி
கோலவித் தொடு பட்டையுங்
குப்பைமேனியு முன்னை துளசி பொன்னாவரை
குமிழிரு நெருஞ் சில்வேருந்
துண்டமாமி லவங்கப்பட்டை சிறுகொம்மட்டி
சுக்கு பெருவாகை தேற்றான்
துய்யமுள்ளங்கி யுந்தழுதாளை பெருமல்லி
சொற்பொடுதலைக் காயதுந்
தொடர்கண்டங் காலியும் வில்லைவழுதளை வேருஞ்
சொற்கனா சிறு மல்லியுந்
தூயபாதிரி வேருமிளகு தேன்செவ்வியஞ்
சுவாச விக்கலுந் தீருமே."

என பாவில் இருந்தாலும், அதன் "சுவாசகாச முந்தீருமே" எனவும் பொருள்படக் கூறலாம். இச் செய்யுளின் விளக்கம் இருமல் நோயில் கூறியுள்ளோம். இவைகளில் ஒன்று அல்லது பல சேர்த்துச் சூரணம், லேகியம், சுரசம், குடிநீர் ஏதேனுமொன்று தயாரித்து உபயோகிக்கலாம்

இரைப்பு நோயைக் குணப்படுத்துவதற்கு அடியிற் குறிப்பிட்ட சிறந்த முறைகளை அனுசரிக்கலாம். (Line of Treatment)

1. ஒற்றடம்:- சில தைலங்களைக் கொண்டு (குக்கில்தைலம், சடாமாஞ்சில் தைலம், கற்பூராதித் தைலம், கரிசாலைத் தைலம், நிர்க் குண்டித் தைலம், அரக்குத் தைலம், சுக்குத் தைலம், மிளகுத் தைலம், சந்தனாதித் தைலம் இவைகளிலொன்றை) மார்பைச் சுற்றிலும் தடவிப் பிடித்தலும் ஒற்றடமும் செய்யலாம். வியர்வையின்றி உடல் வெப்பத்துடன் வறட்சியுங் காணுமாகில் மேற்கண்ட தைலங்களிலொன்றைத் தடவி ஒற்றடமிடலாம். அ∴தன்றி வியர்வையுடனிருப்பின் தவுடு (Brandry Fomentation) போன்றவற்றை வறுத்து முறைப்படி ஒற்றடமிடலாம். இங்ஙனம் செய்வதனால் மார்புச்சளி இளகிச் சுலபமாக வெளியாகும். மார்பை இறுக்கிப் பிடித்தது போலிருந்தால் குறைந்து விடும். இதில் தைலங்களைத் தடவிப்பிடித்தலும் (Gentle massage), ஒற்றடமும் கூறியுள்ளோம்.

2.அவ்விதம் இளகிய மார்புச் சளியை வெளியேற்ற இலகுவாய் வாந்தி செய்விக்கலாம்.

1. சங்கங்குப்பிச் சாறு

2. கரிசாலைச் சாறு

3. தேற்றான் துளிர் இவை ஏதேனுமொன்றின் பச்சிலைச் சாறு அல்லது சுரசம் செய்துகொடுக்கலாம். சளி வாந்தியாகும் அல்லது ஆடாதோடையிலை, முசுமுசுக்கை, தூதுவளை, கண்டங்கத்திரி, தாளிசம், சிற்றரத்தை இவை போன்ற கபமகற்றி மருந்துகளைக் கொடுத்து சளியை வெளியாக்கலாம்.

3. பேதிக்குக் கொடுத்தும் கப மிகுதியால் தடைபட்ட வாயுவை அடிவயிற்றில் சேர்த்து பேதியாக்குவதன் மூலம் வாயுவை அகற்றலாம். பேதிக்குக் கொடுப்பதற்கு மாத்திரைகள் மேலே கூறியுள்ளோம். அட்டபைரவம், சஞ்சீவி மாத்திரை, கோடாசூரிக் குளிகை, வச்சிரகண்டி மாத்திரை, சீவரத்னக் குளிகை, சுகவிரேசனக் குளிகை, அகத்தியர் குழம்பு, இலவங்காதி, மேகனாதக் குளிகை இவைகளிலேதேனுமொன்றைத் தக்க அளவில் ஒரே வேளை கொடுக்கப் பேதியாகும். வாயுவும் நீங்கும்.

சுகதேகியாக இருந்தால் சிற்றாமணக்கெண்ணெய் 4 பங்கு, நயம் தேன் 1 பங்கு வீதம் கலந்து வைத்துக் கொண்டு இதில் ஒரு அவுன்சு வீதம் காலையில் கொடுக்கப் பேதியாகும். இரைப்பு நோயில் இது மிகவும் பயன்படும்.

4. ஆவி பிடித்தலும் இந்நோயில் நன்மையாகயிருக்கும். (Inhalatian) ஊமத்தையிலை, எருக்கிலை, போஸ்தக் காய்த்தோல் ஏதேனுமொன்றை தண்ணீர் அல்லது பசுவின் பால் இவற்றில் போட்டு வாய்மூடிக் கொதிக்க வைத்து அதனின்றும் வெளியாகும் ஆவியை முறைப்படி ஆவி பிடிக்கலாம்.

5. புகை பிடித்தலும் இரைப்பு நோயில் நற்பயனளிக்கும்.

1. வெடியுப்பைத் தண்ணீரில் கரைத்து (1:7 அளவில்)- பிளாட்டிங் பேப்பர் (Blotting paper) அல்லது இளந்துணியை அதில் நனைத்து உலர்த்திச் சுருட்டாகப் புகை பிடிக்கலாம்.

(ii) கரு ஊமத்தம்பூ, தனியாகவேனும் புகையிலையை அதனுடன் சேர்த்துப் பொடியாகக் கத்தரித்து சிறிது வெடியுப்பு சேர்த்தேனும் அல்லது சேர்க்காமலேனும் முருக்கனிலை (பலாசு) அல்லது காகிதத்தில் வைத்துச் சுருட்டி சுருட்டாகப் புகை பிடிக்கலாம் (10 பங்கு ஊமத்தம் பூவிற்கு-1 அல்லது 2 பங்கு நயம் புகையிலை சேர்க்கலாம். தனியாக கரு ஊமத்தம்பூவைச் சுருட்டாக உபயோகித்தாலே போதுமானது. நல்ல குணம் தரும்.

(iii) ஊமத்தம் விரையையும் பொடித்துச் சுருட்டாக உபயோகிக்கலாம்.

6. இதற்கு மேல் மேலே கூறப்பட்ட இரைப்பு நோய்க்கான உள் மருந்துகளைக் கொடுத்துவர எளிதில் குணமாகும்.

குறிப்பு:- இரைப்பு நோயில் தைலம் தடவிப் பிடித்துவிடல், ஒற்றிடமிடல், வாந்தி செய்வித்தல், பேதிக்குக் கொடுத்தல், புகை பிடித்தல், ஆவி பிடித்தல், உள் மருந்து கொடுத்தல் ஆகிய இம்முறைகளைக் கையாண்டு வந்தால் இரைப்பு நோய் குணமாகும்.

சர்வ சங்கார உப்பு பற்பம் அல்லது ஈளை நோய் நிவாரணி.
(Manuscripts):-

குப்பைமேனி சமூலம், கொண்டுவந்து நிழலிலுலர்த்திச் சுட்டு சாம்பலெடுத்து அதனைச் சிறுநீர் விட்டுக் கரைத்துக் கலக்கித் தெளியவிட்டு அந்தத் தெளிவை இறுத்து அடுப்பேற்றி வற்றக் காய்ச்சி வெயிலில் காய வைத்து உப்பெடுத்து இந்த உப்பைக் கல்வத்திட்டு பிரண்டைச்சாறு விட்டரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடி சீலை மண் செய்து குக்கிட புடமிட்டெடுக்கப் பற்பமாகும்.

அளவு:- அரிசி எடை, பற்பம் சிறிது திரிகடுகுத்தூள் தேன் கலந்து காலை, மாலை கொடுக்க இரைப்பு, இருமல், ஈளை, கபம் முதலியன விரைவில் குணமாகும்.

Our Research Preparations For Bronchial Asthma are Mentioned Below.

1. Bronchial Asthma and Eosinophilic Lung Remedy No. 4 or Swasa-kasa Nivarani Powder (Special) (S.R. Pharma).

1.	P.S. Baspam (Pavalam Sringi Baspam)	2 grams.
2.	Kasthuri Chenduram	2 grams.
3.	Vasantham or Balasanjeevi powder	2 grams.
4.	Swasa kudori powder	2 grams.
5.	Sivanaramirtham	2 grams.

6.	K.M.N. Chenduram	2 grams.
7.	Thalaka karuppu	2 grams.
8.	Gowthamar churnam	14 grams.

Thanikadu or Thalisathi Churnams also may be used.

Well mixed and bottled up.

Dose:- 5 to 15 grains to be taken morning and evening well mixed with honey.

Uses:- Kasam, Swasam, kayanoi, Jwaram and Marbunoi etc. cured, Particularly Bronchial Asthma and Eosinophilic Lung are relieved.

2. Dr. M.S. Velu's Bronchial Asthma Specific No. II (S.R. Pharma.)

1.	Ulantha Linga Kattu Chenduram	4 p.w.
2.	Rasa chenduram No. III (or Swarna Valai Rasa Chenduram.)	8 p.w
3.	Kalamega Narayana Chenduram	8 p.w
4.	Naga Chunnam No.1	8 p.w
5.	Pavala Chunnam No.2	8 p.w
6.	Muthu Chippi Baspam	8 p.w
7.	Palakarai Baspam	8 p.w
8.	Sringi Baspam	8 p.w
9.	Sangu Baspam No.1	8 p.w
10.	P.S.M.M Baspam	8 p.w
11.	Muppu Chunnam	4 p.w
12.	Gorojanathi pills (Special)	8 p.w
13.	Pachai karpuram No. I quality	12 p.w

14.	Menthol	4 p.w
15.	Thymol	8. p.w
16.	Quinine Hydrochloride	12 p.w
17.	Best Kungumappoo	4 Tolas.
18.	Posthekkai thol	13 palams

Posthekkai thol pounded, made into a concentrated decoction as per rules by adding about 12 Madras measures of water, reducing it to 1/8 part, filtered or strained and Rasa-Kriya prepared out of it. This posthekkai thole extract-12 p.w. This is dried in the hot Sun. and bottled up is added in this process

19.	Best Musk	½ Tola
20.	Otto-Rose	½ Teaspoonful
21.	Elakkai arisi churnam	½ palam
22.	Kadukkai thole churnam	½ palam
23.	Omam churnam	½ palam
24.	Chukku churnam	½ palam
25.	Milagu churnam	½ palam
26.	Thippili churnam	½palam
27.	Karunjeerakam churnam	½ palam
28.	Chirunagapoo churnam	½ palam
29.	Seemai Athividaya churnam	½ palam
30.	Valmilagu churnam	½ palam
31.	Best Jathi-Kottam churnam	½ palam
32.	Kattathippoo churnam	½ palam
33.	Lavangam churnam	½ palam
34.	Athimathuram churnam	½ palam
35.	Akkarakaram churnam	½ palam

36. Chitharathai churnam ½ palam

37. Best Honey

(Q. S or about lb 1 to make the consistency wax.)

All the above ingredients are mixed together as per rules in a Kalvam, rubbed well with Honey adding little by little and made into pills of I Kundri size or 2 grains size each. It is better to bottle up the waxy mass so that it may be dispensed in empty gelatin capsule or as pills to be taken well mixed with honey as and when necessary.

Dose:- One capsule for a dose may be swallowed with water or in the form of a pill may be taken well mixed with honey, two or three times a day before food or as and when there is an attack. This specific may be used both as prophylactic and as a prompt curative.

Uses:-Bronchial Asthma, Eosinophilic Lung, Cardiac asthma and all Pitha-Kapha or Vatha Kapha diseases are cured.

3. Dr. M.S. Velu's Bronchial Asthma Specific No. II (Improved method.) (S.R. Pharma)

1.	Ulantha Linga Kattu chenduram	4 p.w
2.	Swarna Valai Rasa chenduram	8 p.w
3.	Kalamega Narayana chenduram	8 p.w
4.	Naga Chunnam No.1	8 p.w
5.	Pavala Veera chunnam	8 p.w
6.	Muthuchippi Baspam	8 p.w
7.	Palakarai Baspam	8 p.w
8.	Sringi Baspam	8 p.w
9.	Sangu Baspam	8 p.w
10.	P.S.M.M. Baspam	8 p.w

11.	Muppu chunnam	4 pinches
12.	Gorojanathi pills	8 p.w
13.	Sarparajan Gudika	8 p.w
14.	Pachai- Karpuram	12 p.w
15.	Menthol	8 p.w
16.	Thymol	4 p.w
17.	Quinine Hydrochloride	12 p.w
18.	Best Kungumappu	12 p.w
19.	Posthakkai thol	10 palams

Posthakkai thol made into a concentrated decoction as per rules, filtered- again Rasakriya prepared out of it- dried and taken (i.e. Posthekkoi thole extract - 12 p.w)

20.	Best Musk	½ Tola
21.	Otto- Rose	½ Teaspoonful
22.	Thalaka chenduram or Thalaka karuppu	4 p.w
23.	Sivanaramirtham	½ palam or 5 p.w
24.	Elakkai arisi churnam	½ palam 5 p.w
25.	Kadukkai thole churnam	of each 5 p.w.
26.	Omam churnam	
27.	Chukku churnam	
28.	Milagu churnam	
29.	Thippili churnam	
30.	Karunjeerakam churnam	
31.	Chirunagappoo churnam	
32.	Athividayam churnam	
33.	Jathikottam churnam	
34.	Valmilagu churnam	
35.	Kattathippoo churnam	

36. Athimathuram churnam
37. Lavangam churnam
38. chitharathai churnam
39. Akarakaram churnam
40. Thippili mulam churnam

All the above ingredients are nicely powdered mixed together in a kalvam as per rules, rubbed well with honey little by little into waxy consistency and bottled up.

Dose:-About pepper size or 2 grs. may be taken well mixed with honey or enclosed in a gelatin capsule or sugar 2 or 3 times a day or as and when necessary.

Uses:- Bronchial and Cardiac asthma are relieved. So also Eosino philia of the Lungs is responded to. Pitha-Kapha or Kapa Vatha diseases are also well treated.

4. BRONCHIAL ASTHMA CURE NO. III (PREPARED OF NAGA CHUNNAM NO.1.)

1. Naga chunnam No.1 Part-1
2. Thirikadugu churnam or Panchadeepagni churnam- 5 parts.

These two ingredients are well mixed together and bottled up.

Dose:- 5 to 15 grains may be given twice a day, well mixed with honey or Cow's ghee or butter or other suitable anupanam.

Uses:- Kasam, Swasam, Kshyam, Eraipu Noi and indigestion, etc., are cured. Particularly this medicine is useful in severe type of Bronchial Asthma, Piles, Flatulance and Mahodaram.

5. BRONCHIAL ASTHMA CURE POWDER NO.5 (SPECIAL)

1.	Swasakudori No.1 powder	4 drams.
2.	Pavala chunnam No.3	1 drams.
3.	Sringi Baspam	1 drams.
4.	Kasthuri chenduram	1 drams.
5.	Sarparaja gudika powdered	1 drams.
6.	Thalisathi churnam	1 ozs

Mixed well and bottled up.

Dose:- 5 to 10 grains may be given 2 or 3 times a day well mixed with honey.

Uses:- Kasam, Swasam, Kshyam and Eosinophilia of the lung are relieved.

Bronchial asthma is very well controlled.

6. BRONCHIAL ASTHMA CURE SOLUTION (SPECIAL)

1.	Swasakudori pills No.1	4 oz (powdered)
2.	Vellai Erukkan flowers juice	1 ounce.
3.	Kuppaimeni leaves juice	8 oz
4.	Kammaru- Vetrilai juice	8 oz
5.	Honey	1 Ib

Mixed well and preserved in a bottle.

Dose:- One teaspoonful with hot water 2 or 3 times day or when there is an attack of Asthma.

Uses:- Bronchial Asthma and Eosinophilic Lung are relieved.

7. NARPAVALA CHUNNAM NO.1 (S.R. Pharma)

Purified Narpavalam- 200 grams.

Rubbed with Sortrukathalai juice or Kumari juice for one day, villai is made, dried, enclosed in a pair of suitable agals, clay cloth seven layers are provided to the margin and is subjected to putam with 300 Vratties, Next, rubbed with Keezh kaineli juice for 2 days, Villais are made and subjected to putam as per rules with 300 Vratties. On being cooled the medicine is secured, powdered and bottled up.

Dose:- 2 to 4 grains to be given with cow's butter or ghee or other suitable anupanam twice a day.

Uses:- Kasam, Swasam, Kshayam, Ushnathikkam, Jaundice and rickets are cured. It acts much better than kodipavala parpam or chunnam.

8. BRONCHIAL ASTHMA AND EOSINOPHILIC LUNG REMEDY NO.6. (S.R. Pharma)

1.	Swasakudori	4 drams.
2.	K.M.M Chenduram	1 dram.
3.	Sivanaramirtham	1 dram.
4.	P.S.S. Baspam	3 drams.
5.	Thalaga karuppu	1 dram
6.	Kasthuri chenduram	3 drams

7. Thalisathi churnam 12 drams.

Mixed well and bottled up

Dose:- 1 to 2 pinches to be taken with honey or other anupanams 2 or 3 times a day.

Uses:- Bronchial Asthma, Eosinophilic Lung and all diseases are cured.

9. FOR EOSINOPHILIA. (S.R. Pharma)

RE	Pavala chunnam	Gr. II
	Sringi Baspam	Gr. II
	Kasthuri Chenduram	Gr. II
	Thalisathi Churnam	Gr. V

For a dose B.D. with Honey. very effective.

9. இளைப்பு நோய்

இந்நோய் ஐயப்பெருக்கால் பிறந்து ஏழு உடற்கட்டுகளையும் குறையச் செய்து, வாயுக்களைத் தூண்டி நோயினை விளைவிக்குமாதலால் தன் அளவில் மிகுந்த குற்றத்தையும் அதற்குத் துணையாகவுள்ள மற்ற குற்றங்களையும் தன்னிலைப் படுத்துவதற்கான மருந்துவகைகளையும், மெலிவடைந்த உடற்கட்டினை வன்மைப்படுத்தி உடலுக்கு உரம் உண்டாக்கும் வாயுக்களைத் தன்னிலைப்படுத்துவதற்குமான மருந்து களையும் வழங்குதல் வேண்டும்.

மற்ற நோய்களைக் காட்டிலும், இந்நோய் பசித்தீயைக் கெடுத்து உடல் வன்மையைக் குறைத்து உடலை இளைக்கச் செய்யும் நோயாதலால் பசித்தீயைத் தூண்டக்கூடியதும், உடலுக்கு உரம் தரக் கூடிய மருந்துகளையும் உணவுகளையும் கொடுத்தல் வேண்டும்.

நிற்க! வறட்சியாலுண்டான ஐயப்பெருக்கைப் போக்குதற்கான வாந்தி, கழிச்சல் இவற்றை உண்டாக்கி, வறட்சியைத் தணிக்கக் கூடியதான பால், நெய் முதலியவைகளோடு கூடிய

1.மருக்காரை நெய், மருக்காரைக் குடிநீர் இவற்றைத் தக்க அளவில் கொடுக்க வாந்தியோடு கோழை வெளியாகும்.

2.நிலாவாரை நெய் கொடுத்து கழிச்சலையுண்டாக்கலாமென சித்த மருத்துவம் கூறுகிறது.

3.கோரோசனைத்துகள் வாந்தியும் கழிச்சலுமுண்டாக்கும்.

அன்றியும் பசித் தீயைத் தூண்டவும், உண்ட உணவைச் செரிக்கவும் (Carminatives and Digestives) உடற்கு ஊட்டம் தரக் கூடிய (Tonics) மருந்துகள், உணவுகள் கொடுத்து குற்றங்களைத் தன்னிலைப்படுத்தி, நோய்க்குரிய பெருமருந்துகளாகிய இரசம், உபரசம், பாடாணம், தங்கம், முத்து, நவலோகம், நவமணி இவை போன்ற சரக்குகளாலான பற்பச் செந்தூரங்களையும் வழங்கல் வேண்டும்.

II. 1. வாந்தி எழச் செய்ய மருக்காரை நெய் செய்முறை:-

இலைக்கள்ளிச் சாறு ½ ஆழாக்கு, மருக்காரைப்பழம் 2 பலம், அதிமதுரம் ஒரு பலம், மிளகு, திப்பிலி, சுக்கு வகைக்கு ½ பலம், பசுநெய் படி ½ இவற்றை முறைப்படி காய்ச்சி வடித்து ஒரு தேக்கரண்டி அளவு காலையில் ஒருவேளை கொடுக்க வாந்தியாகும். கோழையும் வெளியாகும். ஐயம் தணியும்.

2. கோரோசனைக் கறுப்பு அல்லது கோரோசனைத்துகள்:-

(Vide- சித்த வைத்தியத் திரட்டு)

இதில் ஒரு சிட்டிகை அளவு கொத்துமல்லிக் குடிநீரில் அனுபானித்துக் கொடுக்க வாந்தியும், கழிச்சலுமுண்டாகும்.

3. நிலாவாரை நெய் செய்முறை:-

நிலாவாரையிலை, சிவதைவேர், மருக்காரை வேர், சுக்கு, ஏலம், சிற்றரத்தை, கொம்புக்கள்ளி வேர் வகைக்குப் பலம் ஒன்று, தண்ணீர் படி 2 சேர்த்துக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடித்ததில், பசுநெய் ½ படி சேர்த்து மீண்டும் காய்ச்சிப் பதத்தில் நெய்யை வடிகட்டி வைத்துக் கொண்டு தேக்கரண்டி அளவில் கொடுக்க வாந்தியும் பேதியும் உண்டாகும். பசித்தீயும் ஏற்படும்.

II. கழிச்சலுக்கு வேறு:-

1. உத்தாமணி எண்ணெய். (மாந்த எண்ணெய்)

2. கழற்சி எண்ணெய் இவற்றிலொன்றை ½ முதல் ஒரு தேக்கரண்டி அளவு ஒரு வேளை கொடுக்க கழிச்சலுண்டாகும்.

3. வச்சிரகண்டி மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, அட்டபைரவம் இவைகளிலொன்றைக் கொடுக்க மலம் நன்றாய்க் கழியும்.

II. பசித்தீயைத் தூண்டுவதற்கும் மருந்துகள் கூறுகிறார்:-

1. நண்டுத் தீநீர் செய்முறை:- வரப்பு நண்டு 300 கொண்டு வந்து கழிக்க வேண்டுவனவற்றைக் கழித்து, நன்றாய்க் கழுவி ஒன்றிரண்டாகஇடித்து பாண்டத்திலிட்டு 15படி தண்ணீர் விட்டு சீரகம், இஞ்சி, இலவங்கம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஓமம் வகைக்குப் பலம் ஒன்று வீதம் இடித்துச் சேர்த்து வாலை சொருகிக் காய்ச்சித்தீநீர் வடித்து அதில் 1/8 முதல் ¼ ஆழாக்கு வரை காலை, மாலை, கொடுக்க பசித்தீயைத் தூண்டி உணவைச்செரிப்பிக்கச் செய்து உடற்கு ஊட்டத்தையும் உண்டு பண்ணும். இது கைகண்ட மருந்தென்கிறார் நூலாசிரியர்.

2. நத்தை நெய் செய்முறை:- நத்தைச்சதை வீசை ஒன்று ஆட்டுப்பால்படி 4, பசுநெய் படி 2 இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி நெய் வடித்து வைத்துக்கொண்டு- இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சித்திர சமூலம், அமுக்கிரா, தண்ணீர் விட்டான் கிழங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு வகைக்கு ஒரு பலம் வீதம் இடித்து சேர்த்து தண்ணீர் நான்குபடி கூட்டிக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடித்து மேற்கூறிய நெய்யில் சேர்த்து மீண்டும் நீர்வற்றக் காய்ச்சிப் பதத்தில் நெய்யை வடித்து வைத்துக்கொண்டு அந்நெய்யில் ஒரு தேக்கரண்டிஅளவு காலை, மாலை கொடுத்து வர பசி எடுக்கும். உணவைச் செரிப்பிக்கும். உடம்பு தேறி வரும்.

3. உடும்பு நெய்:- இவற்றையும் தக்க அளவில் காலை

4. முயல் நெய் ; மாலை உபயோகிக்க நல்ல பலனளிக்கும்.

5. மாத்திரை வகை:- 1. சயகுலாந்தகன், 2. பூரண சந்திரோதயம் 3. மகா வசந்த குசுமாகரம் இவை போன்ற மாத்திரைகளையும், செந்தூரங்களையும் தக்க அளவில் தக்க துணை மருந்துகளோடு கொடுத்துவர இளைப்பு நோய் குணமாகும்.

IV. பற்பச் செந்தூரங்கள்

இருமல், இளைப்பு நோய்களில் கூறிய பற்பச் செந்தூரம், சுண்ணம் யாவும் இளைப்பு நோயிலும் உபயோகிக்கலாம். பவளம், முத்து, முத்துச்சிப்பி, சிருங்கி, கற்பூர சிலாசத்து, தாளகம், இரசம், கெந்தி, தங்கம், வெள்ளி, அயம், காந்தம் இவை போன்ற சரக்குகளால் தயாரிக்கப்பட்ட பற்பச் செந்தூரங்கள், சுண்ணம், கட்டு முதலியன இளைப்பு நோயிலும் நல்ல பலனளிக்கும்.

V. உணவு:- உடலின் ஊட்டம் குறையாவண்ணம் பால், நெய், ஊன் பொருள், பழ வகைகள் ஆகிய இவற்றைச் செரிப்புத் தன்மைக்கு ஏற்றவாறு கொடுத்தல் வேண்டும். செரிப்பை உண்டாக்கக்கூடிய காய் வகைகள், கீரை வகைகள் முதலியன கொடுக்கலாம். நண்டு, நத்தை, முயல், புறா, காட்டு வெள்ளை எலி, உடும்பு, பழந்தின்னும் வௌவால், வெள்ளாடு ஆகிய இவற்றின் மாமிசம் சமையல் செய்தும்,சூப்புகள் தயாரித்தும் அளவோடு செரிமானம் அறிந்து கொடுத்து வருவது நல்லது.

சில முக்கிய குறிப்புகளும் சிறந்த பரிகாரங்களும் கீழே குறிப்பிட்டு உள்ளோம்.

இளைப்பு நோயில் முக்கியமாகப் பித்த சமனமும், கபஹரமுமான மருந்துகளைக் கொடுப்பதோடு, பல குறிகுணங்களோடு கூடிய இளைப்பு நோய் அரச நோயாகையால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு குறிகுணங்களறிந்து மருத்துவம் புரிதல் வேண்டும். கேடு அடைந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தி, பசித்தீயையும் தூண்டி, செரிப்புத் தன்மையையும் சீர்படுத்தி தக்க உணவுகளும், நோய்க்குரிய மருந்துகளும் கொடுத்துவரின் ஏழு உடற்றாதுக்களும் வன்மையடைந்து நோயாளியின் எடை கூடி வரும். சுரம், இருமல், சளி, தகை, மூச்சு வாங்கல், பெலக்குறைவு யாவும் நாளுக்கு நாள் குணம் அடையும்.

1. பித்த மிகுதியாலேற்பட்ட குறி குணங்களுக்கு அல்லது பித்தத்தையும் மிகு தாகத்தையும் சமனஞ்செய்ய:-

(வை. சதகம் 9-ல் கூறப்பட்டிருப்பதை அனுசரிக்கலாம்.)

"இச்சைகொள் ளதிமதுரமிரு வேலிலா மிச்சு
யினியமா துளையின் பழம்
இலுப்பையின் பூவதும் நெல்லியும் பேய்ப்புட
லிளநீருடன் சீனியும்
பச்சைக் கற்பூரமுஞ் சீந்திலும் நெற்பொரியும்
பாலுடன் பொரிமாவதும்
பற்படக நன்னாரி பச்சைப்ப யற்றுநீர்
பருநிலக் குமிழ் வேரதுங்

கொச்சைமுந் திரிகையும் பேரீந்து முத்தமுங்
கொத்துமலி கைச்சந்தனங்
குளிர்ந்த தண்ணீர துஞ்செந் தேனுமாகவே
குறித்த நன்னில வேம்பதும்
மிச்சமாய் நீருண்ட தண்ணீர் மிட்டானதும்
மேவுநற் செங்கரும்பும்
வேகமே லதுகொண்டு தாகமாய்த் தோன்றிய
விதாகநோய் ஹரங்களாமே."

மீண்டும் பக்கம் 26-ல் கூறியுள்ள **பித்த நோய் ஹரங்களையும் கவனித்தல் நலம்.**

"சீதையே சிறுநாணற் காவட் டம்புல்
தெற்பையோடு பெருநாணல் சீந்தில் சந்தந்
தேங்காய்ப்பா லறுகிளநீர் முத்தம் பாலை
சிறுகீரை யிலுப்பைப் பூசிவந்த நெய்தல்
தாதுமா துளங்கனியு மதுரம் வேம்பு
சர்க்கரையு முந்திரிகை பிச்சிப் பூவுஞ்
சம்புடனே கல்லாலு மாசோ டத்தி
தாமரையுங் கோவை வரிக்கந் தத்தோடு
போதவே யிருவேலி யிலாமிச்சம் வேர்
புகழ்தோடை நன்னாரி யாலும் நெல்லி
பூமிசர்க் கரைக்கிழங்கும் பாலுங் கன்னல்
பூசனி வெள்ளரிய ரம்பைக்கனி பேரீந்து
பேதையெனுங் குமரிதுராய் முருங்கைப் பூவும்
பின்முசுக்கை பசும்பயறுந் தகர நெய்யும்

பேய்ப்புடலும் புங்குநிலக் குமிழ்கற்பூரம்
பித்தத்தின் ஹரங்களெனப் பேசி னாரே."

என்பதனால் நாம் தெரிந்து கொள்வது யாதெனில் அதிமதுரம், இருவேலி, விலாமிச்சு, தித்திப்பு மாதுளம்பழம், இலுப்பைப்பூ, நெல்லி, பேய்ப்புடல், இளநீர், சீனி, பச்சைக் கற்பூரம், சீந்தில், நெற்பொரி, பால், பொரிமாவு, பற்பாடகம், நன்னாரி, பச்சைப் பயற்று நீர், நிலக்குமிழ் வேர், முந்திரிகை, பேரீந்து, கோரைக் கிழங்கு, கொத்துமல்லி, சந்தனம், குளிர்ந்த தண்ணீர், நயம் தேன், நிலவேம்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு, செங்கரும்பு இவையாவும் உட்டிண மிகுதியால் உண்டான "தாக ரோகங்களைப்" போக்குமெனவும்; அன்றியும் சிறு நாணல், காவட்டம்புல், தெற்பைப்புல், பெருநாணல், சீந்தில், சந்தனம், தேங்காய்ப்பால், இளநீர், முத்து, பாலை, சிறுகீரை, இலுப்பைப்பூ, சிவந்த நெய்தல் கிழங்கு, மாதுளங்கனி, அதிமதுரம், வேம்பு, சர்க்கரை, முந்திரிகை, பிச்சிப்பூ, நாவல், கல்லாலம், அரசு, அத்தி, தாமரை, கோவைக் கிழங்கு, இருவேலி, விலாமிச்சு வேர், ஆடாதோடை, நன்னாரி, ஆல், நெல்லி, பூமி சர்க்கரைக்கிழங்கும், பால் கற்கண்டு, பூசனி, வெள்ளரி, வாழைப்பழம், பேரீந்து, சோற்றுக் கற்றாழை, துராய், முருங்கைப்பூ, முசுமுசுக்கை, பாசிப்பயறு, தகரை, நெய், பேய்ப்புடல், புங்கு, நிலக்குமிழ் வேர், கற்பூரம் ஆகிய இவையாவும் பித்தமிகுதியைக் குறைக்கும் மருந்துகளென அறிக!

2. வாந்தியைப் போக்கும் சரக்குகளாவன:-

(பக்கம் 8- வைத்திய சதகம்.)

"புத்தோடு நாகமாந் துளிரும் வில்வம்
பொரிதாளி பத்திரியும் பொரிமா சுக்கும்
இத்தோடு சர்க்கரை தேனிளநீர் பாலும்
இலந்தைவிரை சீரகமும் மாது லங்கங்
கொத்தமலி மாதுளையின் பழமு முத்தங்
கொண்டவிளாங் கனியுமிரு வேலி சந்தம்
அத்தோடு பிலங்குறைக்கும் வாந்திக் கெல்லாம்
ஹரங்களெனவே முனிவ ரருளி னாரே."

என்பதனால், புற்றுமண், நாவல்மரத்துளிர், வில்வம், தாளிச பத்திரி, பொரிமாவு, சுக்கு, சர்க்கரை, தேன், இளநீர், பால், இலந்தைவிதை, சீரகம்,

மாதுலங்கம், (துருஞ்சி நாரத்தை) கொத்துமல்லி, மாதுளங்கனி, கோரைக் கிழங்கு, விளாம்பழம், இருவேலி, சந்தனம் இவையாவும் வாந்தியைப் போக்கக் கூடியவை என அறிக!

3. அரோசிகத்தைப் போக்குவதற்கு அரோசிக ஹரங்கள் கூறுகிறார். (பக்கம் 8- வைத்திய சதகம்.)

"திரிகடு கிஞ்சிவெல்லம் சீரகந் திரிசாதீகஞ்
திருகு தூதுளை யிந்துப்பு சிறுமூல மாதுலங்கம்
இருகுசர்க்கரை தாளீசமியல் வேப்பம்பூவுஞ் செவ்யம்
அருகுநற்றி ராயினோடு மரோசிக ஹரங்களாமே."

என்பதனால், திரிகடுகு, இஞ்சி, வெல்லம், சீரகம், திரிசாதம் (இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம்) தூதுவளை, இந்துப்பு, சிறுமூலம் (திப்பிலி மூலம்), மாதுலங்கம் (துருஞ்சி நாரத்தை), சர்க்கரை, தாளிசம், வேப்பம்பூ, செவ்வியம், துராய் இவையாவும் அரோசிகத்தைப் போக்கக் கூடியவை என அறிக.

குறிப்பு:- மேற்கூறியவற்றுள் பித்த மிகுதியால் ஏற்பட்ட குறி குணங்களுக்கு ஏற்ற சரக்குகளைச் சேர்க்க வேண்டியனவற்றைச் சேர்த்துக் குடிநீர், சுரசம், சூரணம், இலேகியம் முதலிய பக்குவங்களைச் செய்து கொடுக்க நிவர்த்தியாம்.

II பித்த ஐயத்தாலும் ஐயமிகுதியாலும் உண்டாகும் குறி குணங்களுக்குக் கீழ் கூறியவற்றை சமயம்போல் சேர்க்க வேண்டுவனவற்றைச் சேர்த்து மேலே கூறியதுபோல் மருந்துகள் தயாரித்துக் கொடுக்கக் குணமாகும்:-

i . சுவாசகாச ஹரம்:- (பக்கம் 16.வைத்திய சதகம்)

"கண்டு பாரங்கி யிருசங்கு மாடாதோடை
காயமோடிரு சீரமும்
கடுகுமோதக னொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தி யிலையுங்

கானதூ துளை யிந்துசாரணை விளாவிலை
கணியோடு வசம்பு குக்கில்
கரிக்கணா வெண்கருங்காலி சாதிக்காயுங்
கருங்காலி யவாச்சாரமும்
மண்டு கற்கடசிங்கி தேவதார முள்ளி
மாஞ்சில் தாளீ சாதேலமும்
வள்ளை வெந்தயங் கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வனமுருக்கொடு பண்ணையும்
வாலுளுவை நாகேச மிலவங்கப் பத்திரியும்
மஞ்சள்தேள் சடையாயிலும்
மயிலிறகு சாம்பலும் ஆம்பல் சிற்றாமுட்டி
மருதணி யிலந்தைவித்துங்
கொண்டதிப்பிலி மூலந்தான்றி கடுநெல்லியுங்
கொன்றை யோட ரத்தையகிலுங்
கோட்டமொடு சீதளைதும்பை கீழ்காய் நெல்லி
கொடிவேலி யுந்திராயுங்
கூகை நீராவின்பால் செம்பை மூக்கத்தாரி
கோலவித்தொடு பட்டையுங்
குப்பைமேனியு முன்னைதுளசி பொன்னாவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்
துண்டமா மிலவங்கப் பட்டை சிறுகொம் மட்டி
சுக்கு பெருவாகை தேற்றான்
துய்ய முள்ளங்கியுந் தழுதாளை பெருமல்லி
சொற் பொடுதலைக் காயதுந்
தொடர் கண்டங்காலியும் வில்லைவழுதளைவேருஞ்
சொற்கனா சிறுமல்லியுந்
தூய பாதிரிவேரு மிளகு தேன் செவ்வியஞ்
சுவாசவிக்கலுந் தீருமே."

இதில் கூறியுள்ள கடைச் சரக்குகளாவன:-

கண்டுபாரங்கி, பெருங்காயம், இருசீரகம், கடுகுரோகணி, ஓமம், தாளகம், மனோசிலை, வசம்பு, குக்கில், கருங்காலி, சாதிக்காய், எவாச்சாரம், கற்கடக சிங்கி, தேவதாரு, உள்ளி, சடாமாஞ்சில், தாளிசம், ஏலம், வெந்தயம், கொள்ளு, வெட்பாலை, சர்க்கரை, வாலுளுவை, சிறுநாகப்பூ, இலவங்கப் பத்திரி, மஞ்சள், மயிலிறகு சுட்ட சாம்பல், திப்பிலி

மூலம், தான்றி, கடுக்காய், நெல்லிமுள்ளி, சரக்கொன்றை, சிற்றரத்தை, அகில், கோட்டம், கூகைநீர், ஆவின் பால், இலவங்கப்பட்டை, சுக்கு, மிளகு, தேன், செவ்வியம், அதிமதுரம், மூங்கிலுப்பு, திப்பிலி ஆகியவைகளாம்.

பச்சிலைச் சரக்குகளாவன:-

இருசங்கு, ஆடாதோடை, நொச்சில், கரிசாலை, பருத்தியிலை, தூதுவளை, இண்டு, சாரணை, குட்டி விளாவிலை, விளாங்கனி, பொன்னாங்காணி, கலியாண முருக்கு, தேள் கொடுக்கிலை, ஆம்பல், சிற்றாமுட்டி, மருதாணி, இலந்தை வித்து, சீதளை, தும்பை, கீழ்காய் நெல்லி, கொடிவேலி, திராய், முசுமுசுக்கை, செம்பை, கண்டங்கத்திரி, கஞ்சாங்கோரை, குப்பைமேனி, முன்னை, துளசி, பொன்னாவாரை, குமிழ், இருநெருஞ்சில்வேர், வேலிப்பருத்தி, சிறுகொம்மட்டி, மணித்தக்காளி, பெருவாகை, தேற்றான், முள்ளங்கி, தழுதாளை, இம்பூரல், பெருமல்லி, பொடுதலைக்காய், சிறுவழுதளை வேர், சிறுமல்லி, பாதிரி வேர், திப்பிலிக் கொடி ஆகியவைகளாம்.

இவற்றுள் ஒன்று அல்லது பல சேர்த்துக் குடிநீர், சாறு, சுரசம், சூரணம், இலேகியம், ஏதேனுமொரு பக்குவம் செய்து கொடுத்து வர சுவாச காசம், இரைப்பு, இருமல், இளைப்பு முதலிய நோய்கள் குணமாகுமென அறிக!

ii . சயரோக ஹரம் கூறுகிறார்:- (பக்கம் 7 வைத்திய சதகம்)

“உற்றகறி பாலையும் வெள்ளாடதின்பாலு
மோங்குமயிர் மாணிக்கமும்
உடும்பதினிறைச்சியும் பூசனிக் காயதும்
உயர்நிலக்குமிழ் வேரதுங்
கொத்துமலி பேரீந்து முந்திரிகையின் கனி
கோவிநெய் யொடு வெண்ணெயுங்
குலவுநீர் முட்டானு மட்டவர்க் கத்துடன்
கூறுநல்ல முக்குராவுந்
தொற்றி வளர்சீந்தியிலும் நாகமல்லிகை வேருந்

துய்ய முத்தக்காசதுஞ்
சொற்சடா மாஞ்சிலோ டிலுப்பையின் பூவதுந்
துதிபெற்ற செந்தேனதுஞ்
சித்தமொடு ரைத்தமுன் காசசுவாசமாந்
திரவிய வர்க்கங்க ளெல்லாஞ்
செயரோகமான தொருகபத்துச் சுரங்களாய்ச்
செப்பினன் கும்ப முனியே.

என்பதனால், மிளகு, பாலை, வெள்ளாட்டுப்பால், மயிர் மாணிக்கம், உடும்பு இறைச்சி, பூசனிக்காய், நிலக்குமிழ் வேர், கொத்துமல்லி, பேரீந்து, முந்திரிகையின்கனி, ஆவினெய், வெண்ணெய், தண்ணீர் விட்டான், அட்டவர்க்கம் (இந்துப்பு, ஓமம், கருஞ்சீரகம், சீரகம், சுக்கு, திப்பிலி. பெருங்காயம், மிளகு) அமுக்கிரா, சீந்தில், நாகமல்லிகைவேர், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், இலுப்பைப்பூ, செந்தேன், இவைகளு மல்லாமல், இருமல், இரைப்பு நோய்களில் கூறிய சரக்குகளும், சயரோக மென்னும் இளைப்பு நோயில் உபயோகிக்கலாமென அறிகிறோம்.

iii சுரசாதங் குரற்கம்மல் ஹரம் கூறுகிறார்:

(பக்கம் 8 வைத்திய சதகம்.)

கண்டுபா ரங்கியுந் திப்பிலியின் மூலமுங்
கருவேம்பு முள்ளங்கியுங்
கரிசாலை பண்ணையும் வசம்பிலை யுருத்திராட்
சங்கன்சிர மேல மதுவும்
மண்டுதேன் செவ்வியமு முந்திரிகை மண்டு கொடிவேலி
வனமணித் தக்காளியும்
வளரு மாடாதோடை மிளகுதிப் பிலி சிறிய
வழுதலையின் வேரானதுந்
துண்டமா மிலவங்கப் பட்டையொடு பத்திரி
சுக்குடன ரத்தையகிலுந்
துய்ய கண்டங் காலியானையின் திப்பிலி
சுகந்தமா மிலவங்கமுங்
கண்டுமுன் சொன்னதொரு காசசு வாசமாங்
கபங்களினரங்க ளெல்லாங்
காணுங்கு ரற்கம்ம லானசுர சாதமாங்
கருதிய ஹரங் களிதுவே.

என்பதனால், கண்டுபாரங்கி, திப்பிலிமூலம், கறிவேப்பிலை, முள்ளங்கி, கரிசாலை, பண்ணை, வசம்பிலை, உருத்திராட்சம், சங்கு, சீரகம், ஏலம், தேன், செவ்வியம், முந்திரிகை, கொடிவேலி, மணித்தக்காளி, ஆடாதோடை, மிளகு, திப்பிலி, சிறுவழுதலைவேர், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சுக்கு, அரத்தை, அகில், கண்டங்கத்திரி, யானைத்திப்பிலி, இலவங்கம் ஆகிய இவற்றுடன் இருமல், இரைப்பு, இளைப்பு நோய்களில் கூறிய சரக்குகளும் இந்நோய்க்குப் பயன்படுமெனவும் கூறியுள்ளார்.

IV பாண்டு, காமாலை, சோபை இவற்றின் ஹரங்களும் கூறியுள்ளார்(பக் 22. வைத்திய சதகம்)

பாண்டு ரோக ஹரம்

திரிகடு கெருமைமோருஞ் சிறந்தவெள் ளாட்டு மோருங்
குருகுமண் டூர லோகங் கொடிவேலி கோவி னீரும்
அருகுவாய் விளங்கமுத்த மாட்சிக மிருமஞ் சள்தான்
பரிகடு தான்றிநெல்லி பாண்டுவி னரங்க ளாமே

காமாலை ஹரம்

சுக்குபுட லதிமதுரம் நெல்லி சிறுகீரை
துய்ய பொன் னாங்காணி முத்தஞ் சந்தனமு
மிக்ககரி சாலையுடன் கோட்டமயி லடியும்
மேதியுடன் வெள்ளாட்டுக் குழம்புமோர் சீந்தில்
தக்கசிறு பயறுபால் நெய்யொடு மான் கொம்பு
தருகீழ் காய்நெல்லி சதாவரியு மிருவேலி
கைக்குநடு மணிக்கட்டி லிரட்சையது போடக்
காமாலை ஹரங்களெனக் கருதுமுனி யுரைத்தார்

சோபை ஹரம்

“மேவுசா ரணைவேரு நாகண மரத்தையும்
வெள்ளாட்டு நீர் சாணமும்
வேளையு மெவச்சாரங் கோமயங் கொடிவேலி
வெள்ளிறகு காக்க ணானுந்

தாவுநேர் வாளமும் பஞ்சகோ லமுமஞ்சள்
தருமணிப் புங்கு வித்துந்
தசமூலம் பிரமியு மிஞ்சிபா வட்டையுஞ்
சார்குழம் பான மோரும்
பாவுநீர் முள்ளி வட்டக்கிலு கிலுப்பையும்
பருதேவ தார மதுவும்
பாங்கான வெள்ளுள்ளி சிவதைசங் கன்வேரும்
பண்ணுபேய்ப் பீர்க்கி னுடனே
தூவுநற் கடுக்காயும் விழுதியி னிலையதுஞ்
சுத்தலோகப் பொடியதுந்
தோகையே யிவையெலாம் முனிவ னுரைத்த
சோபையின ரங்க ளாமே."

என்பதனால், திரிகடுகு, எருமை மோர், வெள்ளாட்டு மோர், மண்டூரம், அயம், கொடிவேலி, ஆவின் நீர், வாய் விடங்கம், கோரைக் கிழங்கு, மாட்சிகம் (பொன்னிமிளை) இருமஞ்சள், தங்கம், கடுக்காய், தான்றி, நெல்லி முள்ளி இவையாவும் பாண்டுவினரங்களென்றும்;

சுக்கு, புடல், அதிமதுரம், நெல்லி, சிறுகீரை, பொன்னாங்காணி, கோரைக் கிழங்கு, சந்தனம், கரிசாலை, கோட்டம், மயிலடி, எருமைமோர், வெள்ளாட்டுக் குழம்பு மோர், சீந்தில், சிறுபயறு, பால், நெய், மான் கொம்பு, கீழ்காய் நெல்லி , சதாவேரி, இருவேலி, கையில் மணிக்கட்டில் இரட்டை ஆகிய இவைகள் காமாலை ஹரங்களெனவும்;

சாரணைவேர், நாகணம், அரத்தை, வெள்ளாட்டு நீர், வெள்ளாட்டுப் புழுக்கை, தைவேளை, எவச்சாரம், கோமயம், கொடிவேலி, வெள்ளறுகு, காக்கட்டான்வேர், நேர்வாளம், பஞ்சகோலம், (சித்திர மூலம், சுக்கு, செவ்வியம், திப்பிலி, திப்பிலிமூலம்), மஞ்சள், மணிப்புங்கு வித்து, தசமூலம் கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெருஞ்சி, பாதிரிவேர், பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம் இவற்றின் வேர், பிரமி, இஞ்சி, பாவட்டை, குழம்பு மோர், நீர்முள்ளி, வட்டக் கிலுகிலுப்பை, தேவதாரம், வெள்ளுள்ளி, சிவதைவேர், சங்கன்வேர், பேய்ப்பீர்க்கு, கடுக்காய், விழுதியிலை, அயப்பொடி, ஆகிய இவையாவும் சோபை யினரங்களெனவும் அறிகிறோம்.

V அதிசாரம், கிரஹணி, மந்தாக்கினி இவற்றின் ஹரங்களும் கூறியுள்ளார்:- (பக்கம் 12,13,14 வைத்திய சதகம்)

வட்டத்தி ருப்பியும் வெட்பாலை யின்வித்து
மாம்பருப் பொடுபட் டையும்
வறட்சுண்டி புளியதின் வித்துவேர் புறணியம்
வரப்பி னிலப்பூ லாவதும்
மாதுளங் காயதும் வில்லையி னிளங்காயும்
வன்னிளந் தும்பி யின்காய்
வாழைதென் னம்பூவு மாத்தியின் பூவதும்
வாசலவங் கப்பூவதும்

விட்டக் கொடிக்கழல் வித்து நீர்ப் பூலாவு
மேவுநீர் முள்ளி வித்தும்
வெட்டிவேர் பாலையின் பட்டைசா திக்காயும்
விடத்தேரி யானவிலையும்
வேங்கையின் பட்டையும் நெற்பொரியு மாகவே
மேவுமஞ் சிலைது ளிரதும்
வெள்ளறுகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவுதிப்பிலி லோத்திரந்

தொட்டக் கருங்காலி நாவலின் பட்டையுந்
துளிருடன் கடுக்காயதுந்
தோது சிறுகாஞ்சொறி பெருமரப்பட்டையுஞ்
சுக்கு மிலவம்பி சினதுந்
துய்யபால் நல்லெண்ணெய் முத்தமச மோதகஞ்
சொற்கடப் பன்பட் டையுந்
துலங்கு கீழ் காய்நெல்லி வெட்பா லையின்பட்டை
துய்யவெண் குங்கி லியமும்

அட்டதிக் கெங்குமிகு சித்தர்களு மெச்சிமகி
ழுருஞ்சடைக் கஞ்சா வதும்
ஆவாரையின் பட்டைநெய் யுடன்செந் தேனு
மாவினற் றயிரானதும்
அதிவிடைய முந்தில்லை வெள்ளாட்டுத் தயிருடன்
ஆனதோர் வகையி தெல்லாம்

அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார ஹரங்க ளாமே.

கிராணி ஹரம்.

ஆயிலும் புங்கு பொடுதலைக் காயு
மழிஞ்சியுங் குழம்புமோர் வசம்பும்
அதிநவச் சாரஞ் சத்தியின் சார
மாகிய நல்ல வச்சாரந்
தீயிலும் பெரிய சித்திரமூலந்
திரிகடு சிறியமூ லகமுஞ்
செவ்வியம் பற்பாடகங் கருவேம்பு
சீரகங் காயமூக் குரட்டை
பாயிலு முட்கா வேளைகா வட்டம்
பருகிய புல்லுநல் வேளை
பகர்புளி யாரையிந்து கல்லுப்பு
பாகுகாய்ச் சுப்புபொட் டிலுப்பு
சாயினுங் கருத்தவுப்பு சாரணையுஞ்
சாருமா வாரைதக் கோலந்
தாவுவெங் காரமாரை யினிலையுஞ்
சாற்றினர் கிராணியின் ஹரமே.

மந்தாக்கினி ஹரம்.

சாற்றின ரதிசாரத் திற்றாவிய மருந்தினோடு
மாற்றியகி ராணிகாண வகையுள்ள திரவியங்கள்
ஏற்றமாயீ திரண்டுமியல் மந்தாக்கி னிக்குமாகுந்
தோற்றமாய் முனிவன் சொன்னதுய்யநல் லரங்களாமே

என்பதனால் வட்டத்திருப்பி, வெட்பாலை வித்து, மாம்பருப்பு, மாமரப்பட்டை, வறட்சுண்டி, புளியன் வித்து, புளியன் வேர், புளியன் புறணி, வரப்பினிலப்பூலா, மாதுளங்காய், வில்வயிளங்காய், வன்னிளந்தும்பியின் காய், வாழைப்பூ, தென்னம்பூ, ஆத்தியின்பூ, இலவங்கப்பூ (கிராம்பு), கொடிக்கழல் வித்து, நீர்ப்பூலா, நீர்முள்ளி வித்து, வெட்டிவேர், பாலை

மரப்பட்டை, சாதிக்காய், விடத்தேரிலை, வேங்கை மரப்பட்டை, நெற்பொரி, அஞ்சிலைத்துளிர் (அஞ்சிலை நொச்சித் துளிரிலை), வெள்ளறுகு வித்து, சீரகம், பேரீந்து, திப்பிலி, உலோத்திரம் (வெள்ளிலோத்திரம்), கருங்காலி, நாவற் பட்டை, நாவல் துளிர் இலை, கடுக்காய், சிறுகாஞ்சொறி, பெருமரப்பட்டை, சுக்கு, இலவம்பிசின், பால், நல்லெண்ணெய், முத்து, ஓமம், கடப்பம்பட்டை, கீழ்க்காய்நெல்லி, வெண்பாலைப்பட்டை, வெண் குங்கிலியம், சடைக்கஞ்சா, ஆவாரைப்பட்டை, நெய், தேன், பசுவின் தயிர், அதிவிடையம்,தில்லை, வெள்ளாட்டுத்தயிர் ஆகிய இவை யாவும் அதிசார நோயின் (பெருங் கழிச்சல்) ஹரங்களென்றும்;

ஆயில் வேர், புங்கு, பொடுதலைக்காய், அழிஞ்சில்வேர்ப் பட்டை, குழம்புமோர், வசம்பு, நவச்சாரம், சத்திச்சாரம், சித்திர மூலவேர்ப்பட்டை, திரிகடுகு, சிறுமூலம், செவ்வியம், பற்பாடகம், கருவேம்பு, சீரகம், பெருங்காயம், மூக்கிரட்டை, முட்காவேளை, காவட்டம்புல், நல்வேளை, புளியாரை, இந்துப்பு, கல்லுப்பு, காய்ச்சுப்பு, பொட்டிலுப்பு, கருத்தவுப்பு, சாரணை வேர், ஆவாரைவேர், தக்கோலம், வெண்காரம், ஆரையிலை ஆகிய இவைகள் கிராணி நோயின்ஹரங்கள் எனவும்;

மேலே அதிசாரத்திலும், கிராணி நோயிலும் கூறிய திரவியங்கள் யாவும் மந்தாக்கினி ஹரங்களாகப் பாவிக்கலாமெனவும் அறிகிறோம்.

VI. தேகம் பெருக்க மருந்துகள் கூறுகிறார்:-
(பக்கம் 28-வைத்திய சதகம்.)

அதிக்குரு ஹரங்கள்

நிலக்குமிழ் பூசனிக்காய்
நெய்யும் பாலமுக் குராவும்
இலைக்குநீர் விட்டான் பாலை
எருமையின் தயிர்கற் றாழை
உலுக்குநல் லுளுந்து நீரு
முடலிளைத் தவர்களுக்கும்
அலுக்கியே பிலனுண் டாக்கு
மதிக்குரு ஹரங்க ளாமே.

என்பதனால் நிலக்குமிழ், பூசனிக்காய், நெய், பால், அமுக்கிரா,

தண்ணீர்விட்டான், பாலை, எருமைத் தயிர், கற்றாழை, உளுந்து நீர் ஆகிய இவைகள் உடல் இளைத்தவர்களைப் பெருக்க வைக்கவும், பெலனுண்டாக்கவும் பயனுள்ளவை என அறிகிறோம்.

Vii. கண்டமாலை ஹரங்களாவன:-(பக். 36 வைத்திய சதகம்.)

கண்டாலச்சிய வியணஹரம்.

கண்டாலச்சி முத்து முன்னே
கடிய சோகை மருந்ததனைக்
கொண்டே யாட்டுப் பாலுடனே
கூறும் செம்மறி யாட்டுப் பால்
பண்டே சத்ரங் கத்தியினாற்
பருகஞ் செருப்படை கடலையிலை
கண்டந் தன்னில் மாலையதாங்
கண்டா லச்சி ஹரமாமே.

என்பதனால் முத்து, சோபை நோயில் கூறிய மருந்துகளுடன் வெள்ளாட்டுப்பால், செம்மறியாட்டுப்பால், செருப்படை, கடலையிலை ஆகிய இவைகள் உபயோகமாவதோடு கண்டமாலைக் கழலைக்கு சத்ரங்கத்தியினால் அறுவை செய்வதுமுண்டு என அறிகிறோம்.

குறிப்பு:- மேலே பற்பல நோய்களின் ஹரங்கள் கூறியிருப்பது ஏனெனில் இளைப்பு நோயில் பல நோய்கள் கிளைக்கு மாதலால் அவ்வவற்றை அப்போதைக்கப்போது நிவர்த்திக்கும் பொருட்டு ஆங்காங்கு கூறியுள்ள சரக்குகளில் ஒன்று அல்லது பலவற்றைக் கொண்டு சாறு, சுரசம், குடிநீர், சூரணம், மாத்திரை, பற்பம் முதலியன தயாரித்துக் கொடுக்க கிளைநோய்களை இளைப்பு நோயுடன் எளிதில் குணமாக்கலாமென்ற நோக்கத்துடன் இங்கு ஒவ்வொன்றையும் விளக்கிக் கூறியுள்ளோம்.

iii. இளைப்பு நோயில் ஆரம்ப முதல் அந்தியம் வரை ஒவ்வொரு நிலையிலும் செய்ய வேண்டிய பரிகாரம் கூறுவோமாக. (Routine Treatment of இளைப்பு நோய்.)

1. ஆரம்ப நிலையில் (First Stage)

1. முசுமுசுக்கையிலை அடை.
2. கலியாண முருக்கு இலை அடை
3. இம்பூரல் இலை அடை

இவற்றிலேதேனு மொன்றைச் செய்து கொடுக்கலாம். காலை மாலையில் ஆகாரத்திற்கு முன் இதைக் கொடுப்பது நல்லது.

3. கொஞ்சம் காலதாமதமாகி வந்தால் (Second Stage):

A. வடகம்:-

1. தாளிசாதி வடகம்.
2. இம்பூரல் வடகம்.
3. தாளிசாதிச் சூரணம்.
4. ஈளையிருமல் சூரணம்.
5. கௌதமர் சூரணம்.

இவைகளிலொன்றைப் பித்த ஐயத்தைக் குறைக்கக் கூடிய பற்பம், செந்தூரம், சுண்ணங்களுடன் அனுபானமாகக் காலை, மாலை தக்க அளவில் கொடுத்து வரலாம்.

பவளம், முத்து, மான்கொம்பு, முத்துச்சிப்பி, பலகறை, சிலாசத்து, மாணிக்கம், தங்கம், தாம்பிரம் இவற்றின் பற்பம், செந்தூரம் பித்த ஐயத்தை குறைக்கும்.

B. அன்றியும் தேகம் மெலிவடைந்து வறட்சி, தாகம், சுரம், இருமல், இரத்தமின்மை இவை காணின் நெய் சேர்ந்த மருந்துகளைக் கொடுக்க நன்மை தரும். அவையாவன:

1. **தூதுவளை நெய்:- (Vide பக்கம் 50 குணவாகடம்)**

"தூதுவளையின் பழரசமுஞ் சுத்தாவின் நெய்பாலுந்
தீதிலிரு சீரகந் திரிகடுகு-மாதேகேள்
கரகரவென்றே யெழும்புங் காசசு வாசமீளை
பரபரவென்றே எழும் பார்."

அதாவது, தூதுவளையின் பழரசம், ஆவின்பால், ஆவின் நெய், இம்மூன்றும் சேர்த்து ஒருபடியானால் நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு வகைக்குப் பலம் 1/2 வீதம் பால் விட்டரைத்துக் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு தேக்கரண்டி அளவு காலை, மாலை கொடுத்துவர இருமல், இரைப்பு, இளைப்பு முதலியன குணமாம் என அறிக.

2. முசுமுசுக்கை நெய்

3. ஆடாதோடை நெய்

4. கண்டங்கத்திரி நெய்

5. கரிசாலை நெய்

6. நீற்றுப் பூசனி நெய்

7. சதாவேரி நெய்

8. நிலப்பனங்கிழங்கு நெய்

9. இம்பூரல் நெய்

10. குக்கிலாதி நெய்

11. முயல் நெய்

12. பழந்தின்னி வௌவால் நெய்

13. **கலைமான் நெய்:-** அதாவது கலைமான் இறைச்சியைக் குடிநீராக்கி வடித்து, அத்துடன் நெய் கூட்டிக் காய்ச்சி நெய்யை வடித்து வைத்துக் கொண்டு தேக்கரண்டி அளவில் காலை, மாலை கொடுப்பது நன்மை தரும்.

14. **மீன் எண்ணெய்**(Cod Liver Oil)

15. முள்ளெலி நெய் இவைகளிலொன்றைத் தக்க அளவோடு கொடுத்து வருவது நலம், நிற்க. மான் உப்புக் கண்டம், கருங்குரங்கு உப்புக் கண்டம், உடும்பு உப்புக் கண்டம், முயல் கண்டம், காட்டு எலி, முள் எலி

இவற்றின் கண்டம் இளைப்பு நோயில் மருந்தாக உபயோகிக்கலாமென அனுபவமுள்ள பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

16. கருங்குரங்கு ரசாயனம் அல்லது லேகியத்தை இந்நோயில் சிறப்பாக உபயோகிக்கிறார்கள்.

C. இளைப்பு நோயில் உபயோகிக்கக் கூடிய லேகியங்களாவன.

1. இம்பூரல் இலேகியம்
2. நீர்ப்பூசனி இலேகியம்
3. ஆடாதோடை இலேகியம்
4. கரிசாலை இலேகியம்
5. கண்டங்கத்திரி இலேகியம் அல்லது ரசாயனம்
6. வில்வாதி இலேகியம்
7. தாளிசாதி இலேகியம்
8. அமுக்கிராதி இலேகியம்
9. நெல்லிக்காய் இலேகியம்
10. வசம்பு இலேகியம், வசம்புத் தைலம்.

(Useful in glandular affections. Oil for internal and external use.)

D. இளைப்பு நோய்க்குரிய சில மாத்திரைகளாவன:-

1. பவளபற்பாதி மாத்திரை
2. தாளக மாத்திரை
3. வசந்தகுசுமாகரம்
4. மகா வசந்த குசுமாகரம்
5. ராஜ மிருகாங்கம்
6. மகா ராஜ மிருகாங்கம்

7. மகா ஏலாதி மாத்திரை
8. சய குலாந்தக மாத்திரை
9. பூரண சந்திரோதய மாத்திரை
10. சரபராசக் குளிகை முதலியன

E. பற்பச் செந்தூரங்களாவன:-

1. பவள பற்பம்
2. முத்து பற்பம்
3. முத்துச்சிப்பி பற்பம்
4. மனோசிலை பற்பம்
5. சங்கு பற்பம்
6. சிருங்கி பற்பம்
7. தங்க பற்பம்
8. தங்கம் முத்து, சிலாசத்து, சிருங்கி, பவளம், சேர்த்துச் செய்த பற்பம்.
9. இரச பற்பம்
10. சொர்ணவாலை ரச செந்தூரம்
11. காளமேக நாராயணச் செந்தூரம்
12. தாளக பற்பம், செந்தூரம்,தாளகக் கறுப்பு
13. கத்தூரிச் செந்தூரம், கத்தூரிக் கறுப்பு
14. அயபற்பம், அயச் செந்தூரம்
15. காந்தச் செந்தூரம்
16. அன்னபேதிச் செந்தூரம்
17. அன்னபவளச் செந்தூரம்
18. பொன்னிமிளைச் செந்தூரம்
19. தங்கச் செந்தூரம்

20. அயத் தங்கச் செந்தூரம்

21. அயக் காந்தம்

22. சுயமக்கினிச் செந்தூரம்

23. ஆறுமுகச் செந்தூரம்

24. அயவீரச் செந்தூரம்

25. சயகுலாந்தகச் செந்தூரம்

26. பூரண சந்திரோதயம்

27. வெள்ளி பற்பம்

28. தாம்பிர பற்பம், செந்தூரம்

29. கெந்தகச் செந்தூரம்

30. காரீயச் செந்தூரம்

31. தாளகக் கட்டு

32. பூரதாளக பற்பம் முதலியன.

குறிப்பு:- பூரண சந்திரோதயச் செந்தூரம், மாத்திரை, நரம்புத் தளர்ச்சி அதிகமுள்ள போதும், வெள்ளி பற்பம், செந்தூரம் மேகமும், சுரமுமுள்ள போதும்; முத்து பற்பம், செந்தூரம் தேகத்தில் ரத்தம் மிகவும் குறைந்து உடல் வெளுத்து கோழைக் கட்டு அதிகமுள்ள போதும்; சொர்ண வாலை ரச செந்தூர்ரம், தாளகச் செந்தூரம், பற்பம், கறுப்பு, காரீயச் செந்தூரம் இவை இளைப்பு நோயில் தோடங்கள் மிகவும் கேடடைந்த காலத்தும்; தாம்பிரச் செந்தூரம், பற்பம், கபம் மீறி நின்ற காலத்தும்; கெந்தக செந்தூரம், இரசதாது மிகவும் கேடடைந்த காலத்தும், தாளகக் கட்டினை இளைப்பு நோயின் அசாத்திய நிலையிலும் உபயோகிக் கலாமெனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

F. சில தலைமுழுக்குத் தைலங்களாவன:- இளைப்பு நோயில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் இவை தலைக்குத் தேய்த்து முழுகுவது பொருத்தமற்றது. அதற்குப் பதிலாக சில தைலங்களை தலை முழுக்கு உபயோகிப்பது நன்மை பயக்கும்.

1. குமரித்தைலம் (During convalescene)
2. நீர்குண்டித் தைலம் (for internal use external application and for bath)
3. அரக்கு சந்தனாதித் தைலம் அல்லது அரக்குத்தைலம்.
4. இலகு சந்தனாதித் தைலம்
5. மகாசந்தனாதித் தைலம்
6. கரிசாலைத் தைலம் (For internal use and bath.)
7. கையான் நெல்லிக்காய்த் தைலம்
8. சுக்குத் தைலம்
9. மிளகுத் தைலம் (for internal, external use and for both.)
10. வில்வாதித் தைலம் முதலியன.

சில இதர முறைகள் ஏடுகளிலிருந்தும் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும் இங்கு வரையப்பட்டுள்ளன.

2. சயத்திற்குப் பொன்னாவாரைக் குடிநீர்:-

(vide யூகி முனிவாத வைத்திய விளக்கம்.)

"சொல்லுபொன் னாவாரைச் சுகமான
வேர்ப்பட்டை-தூளாய்ப் பண்ணி
நல்லவெந் நீர்தனி லிட்டுநேர் திரிநாளு
முண்டிடவே-நண்ணும் பித்தங்
கல்லுமே சயகாசங் கனிவாகப்
போகுமது- சத்தி பண்ணும்
வில்லுமே வளைந்தாலோ விதமாக
அம்புதைக்கும்- விதந்தா னாமே."

என்பதனால், பொன்னாவாரை வேர்ப்பட்டையைத் தூளாய்ப் பண்ணி 1 முதல் 2 சிட்டிகையளவு அல்லது தக்கஅளவில் வெந்நீரிலனுபானித்துக் காலையில் மட்டும் மூன்று நாட்கள் கொடுக்க வாந்தி பண்ணும். பித்தம் போம். சயம், இருமல் குணமாகு மென்கிறார்.

2. சயத்திற்கு வாந்தி கொடுக்க:-

1. கனிவாகச் சயம்போகக் கனிந்து நல்ல
காட்டெருக்கம்- பாலைக் காயத்
தனியாக வைத்துப்பணம் தாட்டிகமாய்ப்
போட்டுநல்ல-தண்ணீரிட்டுப்
பனியாகக் கரைத்துப்படி பாதியுண்ண
வாந்தியது-பகருங்காலை
இனியது தானிருக்கவே பேராசைப்
பட்ட கதை- எய்துந்தானே

2. காத்தறிந்து அரஞ்சேரு கறி எடுத்து
அவித்திறுத்து-கனிந்த சாரம்
பார்த்தறிந்து உண்டிடவே பதிவான
வாந்தியது-பருகி நிற்கும்
சாத்தறிந்து சயகாச மீளைமுதல்
பித்தமெல்லாம்-தானேயோடும்
பார்த்தறிந்த பெரியோர்க்குப் பண்டிதமும்
வாதசித்தி-பதிவுமாமே.

என்பதனால் எருக்கம்பாலை ரவியில் நன்றாய் வற்றக் காய வைத்துப் பணவெடை எடுத்து ஒரு படி தண்ணீரில் கரைத்து, அதில் அரைப் படி கொள்ள வாந்தியுண்டாகும். (அளவு சற்று குறைவாகவே தேகபலம், நோயின் கடுமையறிந்து ஒரே வேளை கொடுக்கலாம்.)

அதற்கு முறிவாக மிளகுக் குடிநீரிட்டுக் கொடுக்க வாந்திநின்றுபோம். சயம், இருமல், ஈளை முதலியன குணமாகுமென்கிறார்.

3. சயத்திற்கு பூர தாளக பற்பம்:-

1. மெள்ளவே பூரமெடை மிதமாகச்
சேர்த்தரைத்து-மிகுந்தவுண்டை
கள்ளமறக் காயவைத்துக் கனிந்துமே
வளையலுப்பை-கனிவாய்க்கட்டித்

துள்ளவே சுண்ணாம்பில் துடியாக
உள்வைத்துத்-தோய்த்துப்பாரு
கள்ளநரி சந்தைக்குக் கனிவாக
போனகதை-கருணையாமே.

2. வழுவிலா வாலை என்ற வடிவான
அடுப்பிலிட்டு-வன்மையாக
நழுகாம விருசாமம் நலமாக
மேல்முடி-நாடித்தானே
கொழுகாம லெரித்து மெள்ள குணமாக
வாங்கிடுநீ-குருசெப்பாகும்
கழுதையைத் தான் கட்டி வைத்துக்
கனிவாக ஓதுவித்த- கதைபோலாமே

3. கழுப்போலச் சயம்போகும்
கனிவான காசமுதல்-காணாதோடும்
பழுப்போல் சிலேற்பனங்கள் பண்பான
தொண்ணூறும்- பதறியோடும்
இழுப்போல் புளிதள்ளு இதமாக
உண்டுபா-ரினிப்பாலோடு
தொழுப்புகுந்த ஆடதுபோல்
துடிப்புழுக்கை பட்டகதை துயருமாமே.

4. விடுவாதசி லேற்பனங்கள் விதமான
நோய்களெல்லாம்-வெகுண்டோடும்
படுகுழியில் யானையது அடிதவறி
விழுந்தகதை-போலேயாகுங்
கொடுக்காத பண்டிதமும் குணமாகுமோ
விதனைக் -கூறுவாரோ
கடுகு சிறுத்தாற் காரமது காத்லாய்ப்
போமோதான்- கருதுவாயே.

என்பதனால் பூர தாளக பற்பம் செயற்முறை, பிணி நீக்கம், பத்தியம் முதலியன கூறுகிறார்.

சுத்தி செய்த இரச கற்பூரம், தாளகம் சம அளவு எடுத்துக்

காட்டெருக்கம்பால் விட்டரைத்து உருண்டை செய்து உலர்த்தி வளையலுப்பைக் கொண்டு கவசங்கட்டி உலர்த்தி, கற்சுண்ணாம்புக்குள் பொதிந்து வாலுகையிலிட்டு மேற்சட்டி மூடி சீலை மண் செய்து வட்டடுப்பின் மேல் வைத்து இருசாமம் முத்தீயாக எரிக்க குரு செப்பாகும். இதனை 1 முதல் 2 அரிசி எடை தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க இளைப்பு, இருமல், ஈளை முதலியன குணம் ஆகும். சிலேற்பன நோய் தொண்ணூற்றாறும் குணம் என்கிறார். புளி தள்ளவும். இனிப்பு, பால் சேர்க்கவும் என்கிறார்.

4. சயகுலாந்தகச் செந்தூரம் செய்முறை:-

(பக்கம் 197 சில்லரை கோவை-அகத்தியர் பின் எண்பது)

1. இளைப்பான ரோகமது தீரவென்றால்
   இயம்புவேன் சயகுலாந்தகச் செந்தூரத்தை
   பிளைப்பான ஆயிரத்தை நூறில் சொன்னேன்
   பேச்செல்லா மிந்தமுறை சயனிப்பாரு
   உளைப்பான மால்தேவி பலமதொன்று
   உத்தமனே பூசனிக்காய் நீரிற்காய்ச்சி
   சிளைப்பான தோலாயந்திரமாகத் தூக்கி
   செங்கிழுவைச் சாற்றிலே சுத்திசெய்யே.

2. செய்திடவே யரிதாரம் சமனாய்ப் பூரம்
   சிலைகூட்டி எருக்கம்பால் தன்னாலாட்டி
   கொய்திடவே குகையிலிட்டுப் புடத்தைப் போட
   குலமெல்லாந் தான்புகைந்து சாம்பலாகும்
   செய்திடவே யந்திடைக்கிப் பவளம் நாரியிவை
   சேர்த்து முன்போல் புடத்தைப் போடு
   நைந்திடவே வெந்துபோம் அவ்விடைக்கி லிங்கம்
   நாலிலொன்று தங்கமரை கெந்தி காலே

3. கால்கூட்டிக் காந்தமரைப் பலமுஞ் சேர்த்து
   கனமான குமரிச்சார் முருக்கம் பூச்சார்
   கால்சேர்த்துப் புடம்போடு செந்தூரிக்கும்
   கனகமாஞ் செந்தூரம் புடமைந் தானால்

கால் சேர்த்துக் குழலிலே யடைத்துக் கொண்டு
காகனமாந் திரிகடுகு தேனி லுண்டு
பால்சேர்த்துப் பத்தியங்கொள் கருத்தாட் டின்பால்
பத்துநாள் மருந்துண்ணப்ப லிக்கும் நன்றே.

வெண்பூசனிக் காய்ச்சாற்றிலும் செங்கிளுவைச் சாற்றிலும் முறையேதோலாயந்திரம் கட்டித் தொங்கவிட்டுக் காய்ச்சிச் சுத்தி செய்தெடுத்த தாளகம்-பலம் ஒன்று, சுத்தி செய்த இரசகற்பூரம் பலம் ஒன்று, சுத்தி செய்த மனோசிலை பலம் ஒன்று, சுத்தி செய்த இலிங்கம் பலம் ஒன்று, சுத்தி செய்த கெந்தகம் பலம் ஒன்று இவ்வைந்து சரக்குகளையும் கிரமப்படி கல்வத்திலிட்டுப் பொடித்து வெள்ளெருக்கன்பால் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்திப் பொடித்து எழுசீலை மண் செய்துலர்த்திய கெங்காசலக் குப்பி அல்லது தேன்கலர் ஒடுக்க வாய்க் குப்பியிலடைத்து (Amber Coloured N.M. Bottle) வாய்க்கு ஓடு மூடி மீண்டும் பொருத்து வாய்க்கு எழு சீலை மண் செய்து வாலுகையில் வைத்து (குப்பியின் வாய் விளிம்பு வரைக்கும் மணல் பரப்பி) மேற்சட்டி மூடி, பொருத்து வாய்க்கு எழு சீலை மண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்து முத்தீயாக காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் மூன்று நாட்கள் எரிப்பு செய்ய வேண்டும். முதல் நாள் தீபாக்கினி கமலாக்கினியாகவும் இரண்டாம் நாள் கமலாக்கினி காடாக்கினியாகவும், மூன்றாம் நாள் காடாக்கினியாகவும் எரிக்க வேண்டும்.

(இரவில் எரிப்பு செய்யாமல் அடுப்பிலேயே தணலில் வாலுகையை வைத்திருக்க வேண்டும். மேற்கூறிய மருந்துப் பொடியைக் குப்பியில டைக்கும் போது மருந்துகள் யாவும் குப்பியில் பாதியளவுக்குள் இருக்கும்படியான பொருத்தமான குப்பி சேகரிக்க வேண்டும். குப்பியின் மறுபாதி காலியாக இருத்தல் வேண்டும். குப்பியின் வாயையும் பலப்பக் கல்லால் அல்லது மண் ஓட்டுச்சில் கொண்டு மூடிச் சீலைமண் செய்து விட வேண்டும். வாலுகைக்கு (அடிச்சட்டிக்கு) பொருத்தமான மேற்சட்டி கொண்டு மூடிச் சந்துவாய்க்குச் சீலைமண் செய்துவிட வேண்டும் இவையாவும் முக்கியமான குறிப்புகள். இவ்வாறு செய்யாது போனால் செந்தூரம் அதிக அளவில் சேதமாகும். எடை மிகவும் குறையும். இக்குறிப்புகளின்படி கவனமாகச் செய்தால் செந்தூரம் எடை குறையாது நல்ல நிறத்துடனும் மென்மையுடனும் பரிபூரணமாக அமையும். மூன்று நாட்கள் மேற்கண்ட பிரகாரம் எரிப்பு செய்து பின் குளிர ஆறவிட்டுக் குப்பியைச் சாக்கிரதையாக உடைத்துச் செந்தூரத்தைச் சேரிக்கவும்.

இந்தச் செந்தூரம் எடை எவ்வளவோ அதற்கு ஐந்திலொரு பாகம் (1/5 Part. the above Chenduram)

1. பவளபற்பம் (பவளத்தை வெள்ளெருக்கம் பால் விட்டரைத்து வில்லைத் தட்டி முறைப்படி புடம் போட்டெடுக்கப்பட்ட பற்பம் தான் இங்கே தேவை).

2. இ ந்தப் பவள பற்பத்தினெடைக்குச் சமன் கல்நார் பற்பம் (இதுவும் இளநீரில் ஒருநாள் ஊறவைத்து மறுநாள் எடுத்து ஆடு தீண்டாப்பாளை யிலையை அரைத்துக் கவசித்து உலர்த்தி கனபுடம் போட்டு எடுத்து இடித்துத் தூளாக்கிக் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கம் பால் விட்டரைத்து வில்லை தட்டி முறைப்படி கனபுடம் போட்டெடுக்கப்பட்ட கல்நார் பற்பம் இங்கே தேவை)

3. மேற்கூறிய பவள பற்பத்தினெடை உயர்ந்த முறையில் தயாரித்த காந்தச் செந்தூரம்.

4. அதே பவள பற்பத்தினெடை உயர்ந்த முறையில் தயாரித்த தங்கபற்பம் அல்லது செந்தூரம், இப்படியாக இவ்வைந்து மருந்துகளை அந்தந்த அளவுப்படி கூட்டிக் கல்வத்திலிட்டுக் குமரிப்பால் (கற்றாழைப் பால்) விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒரு அகலில் கற்சுண்ணத்தூள், சங்குப் பற்பம், மருதம்பட்டைச் சாம்பல் ஏதேனு மொன்றை பாதி அகல் அளவு போட்டு கையால் சற்று அழுத்தி வில்லையை வைத்து அதன் மேல் மீண்டும் பாதிக்கு அதே தூளை நிரப்பி நன்றாய் அழுத்தி, மேல் அகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி காற்றில்லா இடத்தில் இலகு புடமிடவும். ஆறிய பின் செந்தூரத்தைச் சேதமில்லாது நிறுத்துப் பார்க்கவும். மொத்த எடை குறையா திருப்பின் அதனையே எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம். நிறம் சிவந்த மஞ்சளாகவும் இருக்கவேண்டும்.

மொத்த எடையில் செந்தூரம் மிகக் குறையின் - (அதாவது 1. செந்தூரம், 2. பவள பற்பம், 3. கல்நார்பற்பம், 4. காந்தச் செந்தூரம், 5. தங்கச் செந்தூரம் ஆகிய இவற்றின் மொத்த எடை) அந்தக் குறைவுக்கு நேர் சமன் நம்பர் ஒன்றில் தயாரித்த குப்பி எரிப்புச் செந்தூரம் கூட்டி மீண்டும் குமரிப்பால் அல்லது முருக்கம் பூச்சாறு (புரசுவின் பூச்சாறு) விட்டரைத்து

வில்லை தட்டி உலர்த்தி முன்போல் அகலிலடக்கி இலகு புடம் போட்டெ: டுக்கவும். மொத்த எடை குறையாதிருப்பின் அதனையே எடுத்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம். ஒரு கால் செந்தூரத்தின் மொத்த எடை குறையுமானால் முன்போல் அந்தக் குறைவுக்கு நம்பர் ·ஒன்றில் தயாரித்த குப்பிச் செந்தூரம் கூட்டிக் கற்றாழைப் பால் அல்லது புரசம் பூச்சாறு விட்டரைத்து மீண்டும் இரண்டொருமுறை புடம் தேவையானால் போட்டெடுப்பது சிறந்ததாகும். ஒவ்வொரு தடவையும் வில்லையைக் கற்சுண்ணம், சங்குப் பற்பம், மருதம் பட்டை சாம்பல் ஏதேனுமொன்றை அகலிலிட்டு அதனுள் வில்லையை மறைத்து வைத்து மேல் மூடிச் சீலைமண் செய்து ஒரு குழியில் காற்றில்லாத இடத்தில் இலகு புடம் போட்டெடுக்க வேண்டும்.

குறிப்பு:- மேற்கண்ட பிரகாரம் இச் செந்தூரத்தைச் செய்து முடிப்பது நல்லது. அல்லது மேற்கூறிய பிரகாரம் புடத்தில் போடுவதைக் காட்டிலும் மணல் மறைவில் மருந்துகளை உள்ளடக்கிக் கவசஞ் செய்த அகலை வைத்து எரிக்கலாம். விவரம் எங்ஙனமெனில்:- மேற்கண்ட குப்பி எரிப்புச் செந்தூரம், பவள பற்பம். கல்நார் பற்பம், காந்தச் செந்தூரம், தங்கச் செந்தூரம், சமஎடை எடுத்துக் கல்வத்திலிட்டுக் குமரிப் பால் விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி மேலே கூறியபடி அகலில் கற்சுண்ணம், சங்கு பற்பம், மருதம் பட்டை சாம்பல் ஏதேனுமொன்றை வைத்து அதனுள் வில்லையை மறைத்து வைத்து நன்றாய் அழுத்தி மேல் அகல் மூடி சீலைமண் செய்து உலர்த்தி, ஒரு சட்டியில் இரண்டு அங்குலம் மணல் பரப்பி அதில் அகலை வைத்து, அகல் மறையும்படி மேற்கொண்டு மணல் கொட்டிப் பரப்பி வட்டடுப்பின் மேல் வைத்து இரண்டு சாமம் தீபாக்கினி, கமலாக்கினியாக எரித்து நன்றாய் ஆறிய பின், மருந்து வில்லையை எடுத்து நிறை தூக்கிப் பார்க்க மொத்தம் எடை குறையாதிருக்கும். அதனையே உபயோகிக்கலாம். எடைகுறையுமாயின் எடை குறைவுக்கு நேர் சமன் குப்பி எரிப்பு செந்தூரம் மட்டிலும் சேர்த்து முருக்கம் பூச்சாறு விட்டரைத்து, வில்லை தட்டி முன்போல் அகலிலடக்கி மணல் மறைவில் எரித்து ஆறிய பின் எடுக்கவும். மொத்தம் எடை மீண்டும் குறைவுக்கு நேர் குப்பி எரிப்பு செந்தூரம் கூட்டிக் கற்றாழைப் பால், முருக்கம் பூச்சாறு ஏதேனுமொன்று அல்லது இவ்விருசாறுகளையும் சமமாகக் கலந்து கொண்டு அல்லது தனித் தனியே இதனை விட்டுக் கல்வத்தில் ஒரு சாமம்

அரைத்து வில்லை தட்டி முன் போல் மணல் மறைவில் வைத்து எரித்தெடுக்க மேன்மையான செந்தூரம் கைகூடும். மொத்த எடை கிடைக்கும் வரை திரும்பத் திரும்ப இங்ஙனம் செய்து முடிப்பது சாலச் சிறந்தது.

புடம் போடுவதைக் காட்டிலும் இம் மாதிரியாக மணல் மறைவில் மருந்து வில்லையை அடக்கம் செய்த அகலை வைத்து எரித்தெடுப்பது செந்தூரம் நட்டமில்லாது சுலபத்தில் எடை குறையாத பிரகாரம் அமையும். சயகுலாந்தகச் செந்தூரம், ஆரம்பத்தில் எடுத்த மருந்துகளின் எடை குறையாது முடிவு பெறுமானால் நிச்சயம் இம்மருந்தினால் சயரோகம் மட்டிலும் அல்ல; இன்னும் பெரிய ஆபத்தான நோய்களெல்லாம் இம்மருந்தினால் குணமாகுமென்பதில் ஐயமில்லை.

குறிப்பு:-2. கல்நார் பற்பத்திற்குப் பதிலாக முத்துப் பற்பம், முத்துச் சிப்பிப் பற்பம் இவற்றிலொன்றைச் சேர்த்து சயகுலாந்தகன் தயாரிப்பது பொருத்தமானது அன்றியும், முத்து பற்பம், மாணிக்க பற்பம், அயச்செந்தூரம், சிருங்கி பற்பம் இவைகளை உயர்ந்த முறையில் தயாரித்து அவசியத்திற்கு ஏற்றவாறு சயகுலாந்தகச் செந்தூரம் முடிவு பெற்றவுடன் அதனுடன் சேர்த்து அரைத்துக் கலந்து வைத்துக் கொண்டும் உபயோகிக்கலாம். கயநோயில் இச்செந்தூரங்கள் யாவும் பிரயோகிப்பது நன்மை பயக்கும்.

அளவு:- ½ முதல் ஒரு அரிசி எடை சயகுலாந்தகச் செந்தூரத்தை காலை, மாலை தக்க அனுபானங்களில் நோயாளியின் பலம், நோயின் கடுமை அறிந்து கொடுக்க வேண்டும் 3,5,7,10 தினங்கள் மருந்து கொடுத்தும் அப்பால் அதேஅளவுப்படியான நாட்கள் மருந்தை நிறுத்தி வைத்தும், மீண்டும் அவசியம் போல் மருந்தின் அளவையும் நாட்களின் அளவையும் குறைத்தும், கூட்டியும் நோயானது இம்மருந்துகள் வசப்படும் தன்மை அறிந்தும் இச்செந்தூரத்தை உபயோகிப்பது சாலச் சிறந்தது. பொதுவாக திரிகடுகுத்தூள், தேன் இவை சேர்த்து இச்செந்தூரத்தைச் சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது.

பிணி நீக்கம்:- சயரோகத்திற்கு இதுவே நேர் மருந்தென அகத்தியர் கூறியுள்ளார்.

இளைப்பான ரோகமது தீரவென்றால்
இயம்புவேன் சயகுலாந்தகச் செந்தூரந்தான்.

என்பதனாலறிக! சயம் (இளைப்பு நோய்), காசம், ஈளை (இரைப்பு நோய்) முதலிய கப ரோகங்களும் இன்னுமிவைகளாலுண்டாகும் பலவீனமும் குணமாகும்.

குறிப்பு:- இம்மருந்து மேற்கூறிய நோய்களில் சிறந்த குணமுடையதாயினும், அந்நோயால் அதிகளவு உபத்திரவமுடைய வர்களுக்கு (Complications) அவ்வுபத்திரவம் சாந்தமாவதற்குரிய பல்வேறு மருந்துகளைக் கொடுத்து உபத்திரவம் தணிந்த பின்னர் இச்செந்தூரத்தைச் (சய குலாந்தகன்) சிறிய அளவில் நீடித்துக் கொடுத்துக் கொண்டு வர சயநோய் பூரணமாகக் குணமாகிவிடும். ¼ ½ ¾ 1 மண்டலம் எனும் 40 முதல் 45 நாட்கள் இம்மருந்தை விட்டு விட்டு அல்லது நிறுத்திக் கொடுத்து வரலாம்.

பத்தியம்:- நோயின் நிலைமைக் கேற்றவாறு நல்ல சத்துக்களுடையதும் எளிதில் செரிக்கக்கூடிய ஆகாரமும் கொடுத்து வருவது நல்லது. குறிப்பாக வெள்ளாட்டுப்பால் சேர்த்துப் பத்தியம் உட்கொள்ளுவதும் மிகவும் நல்லது.

5. இருமல், சுரம், சயத்துக்குக் குடிநீர்

நன்றான பாலிலே சிறுகாஞ் சோரி
நலமான வேர்தட்டிப் போட்டுக் காய்ச்சி
குன்றாமல் இராத்திரிக்குக் கொள்ளச் சொல்லு
குணமாகு மிருமல்முதல் சுரங்கள் யாவுஞ்
சென்றாகா மோருமாகா மீனு மாகா
செடகுறிப்பு பெலன்பார்த்து சேர்த்து வுண்ணு
வெண்டாத தாமரையின் பனிப் பருப்பை
வெந்நீரில் கொண்டிடவே விக்கல் போமே

என்பதனால், பசுவின் பாலில் சிறுகாஞ்சொறி வேர் தக்க அளவில் தட்டிப் போட்டுக் காய்ச்சி இரவு படுக்கைக்குப் போகும் போது சாப்பிட்டுவர 3 நாட்களில் இருமல், சுரம், சயம் யாவும் குணமாகுமென்கிறார். இருமல் முதல் சுரங்கள் யாவும் குணமாகும் எனக் கூறியிருப்பது இளைப்பு நோயிலுண்டாமிருமல், சுரம், சயம் தீருமெனக் கொள்ளல் வேண்டும். பத்தியம் கூறும் போது மோர், மீன் இவை ஆகாதெனவும்; செரிமானம், தேகபலம் இவற்றின் நிலைமையறிந்து பத்தியங் கொள்ளவேண்டுமெனவும் அறிவிக்கிறார்.

அன்றியும் தாமரை வித்துப் பருப்பைப் பொடித்து தக்க அளவில் வெந்நீர் அனுபானத்தில் கொள்ள விக்கல் நோய் தீருமெனவும் கூறுகிறார்.

6. எங்கள் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் உபயோகித்து வரும் சில கலப்பு மருந்துகளைக் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

1. Dr. M.S. VELU'S Irumal Nivarani or Bronchitis Remedy:-

Kasthuri Chenduram	2 grains
P.S.S. Parpam	4 grains
Thalisathi churnam	10 grains

Mixed well for a single dose in adults and taken with best Honey or ghee 2 or 3 times a day.

2. Dr. M.S. VELU'S Kaya Noi Nivarani or T.B. Lungs remedy.

1.Kshya kulanthakan Chenduram	1 grain.
2.P.S.S Parpam	4 grains.
3. Muthu Parpam	2 grains.
4. Kasthuri Chenduram	2 grains.

5. Thalisathi Churnam	10 grains.
or Thirikadugu Churnam	5 grains.

To be mixed well for a single dose in adults and taken with best Honey of ghee morning and evening.

3.AURO CALCIUM OR SWARNA- PAVALA -MUTHU CHUNNAM (Special)

1.Swarnam Leaves (Gold Rekku)	one Tola
2.Karpura Silajath (raw)	one Tola
3.Narpavalam (raw) purified	one Tola
4.Kalnar (raw) purified	one tola
5.Pearls dust (muthu)	one Tola

Powdered, mixed as per rules, rubbed together with Milakai Leaves Juice until Gold Leaves are nicely dissolved, Villai is made, enclosed in a pair of agals and subjected putam with 50 viratties very fine chunnam is achieved.

Dose:- ½ to one grain with suitable anupanam twice a day.

Uses:- All Lung diseases including T.B. Lungs, Diabetes mellitus and Impotency are cured.

10. உளமாந்தை

பரிகாரம்

பெரும்பாலும் இந்நோயின் குறிகுணங்களும், நோயுண்டாவதற்குரிய குற்ற வேறுபாடுகளும், இருமல் இளைப்பு நோயை ஒத்திருக்குமாதலாலும், குடலிலும் மார்பிலும் உண்டாகக் கூடிய இளைப்பு நோயையே பெரும்பாலும் இந்நோயாகப் பாவிக்கிற படியாலும் இருமல் இளைப்பு நோயில் கூறியுள்ள பரிகாரமே இந்நோய்க்கும் பொருந்துமென்பது பெரியோர்களது அபிப்பிராயம். இந்நோயை Tubercular intestines or Tubercular Enteritis என்பர். நோயின் குறிகுணங்களுக் கேற்றவாறு பரிகார முறைகளையும் அனுசரித்தல் நலம்.

N.B. All medicines mentioned under Pulmonary Tuberculosis

(இளைப்பு நோய், கயநோய்) may be used in உளைமாந்தை, காசம், இரைப்பு, இடுமருந்து (more or less symptomatic)

11. தமரக நோய்
(மார்பு நோய்)
பரிகாரம்.

கேடடைந்த ஐயத்தையும் வாயுக்களையும் (உதானன், சமானன்) தன்னிலைப்படுத்தி ஸ்தம்பித்திருக்கும் பித்தத்தையும் பிராண வாயுவையும் ஒழுங்காகத் தொழில் புரியும் படிக்கான மருந்துகளைக் கொடுத்தல் வேண்டும். மலச்சிக்கலிருப்பின் கழிச்சல் மருந்து கொடுத்தல் நலம்.

கழிச்சலுக்கு:- சஞ்சீவி மாத்திரை, வச்சிரகண்டி மாத்திரை (Night Pills) சுக விரேசன மாத்திரை (Healthy Laxative Pills), இலவங்காதி, மேகனாதக் குளிகை, சீவரத்னக் குளிகை. அட்டபைரவம், இவற்றுள் ஏதேனு மொன்றை இரண்டு மாத்திரை வீதம் ஒரே வேளை கொடுக்கக் கழிச்சலாகும். அகத்தியர் குழம்பும் தக்க அளவில் (1 முதல் 2 குன்றி எடை) பனை வெல்லத்தில் பொதிந்து ஒரே வேளை கொடுக்கப் பேதியாகும். சுக்கு அரைத்த விழுதுக்குள்ளும் அகத்தியர் குழம்பைப் பொதிந்து ஒரே வேளை விழுங்கச் செய்ய நன்றாய்ப் பேதியாகும். வாயுக்கள் தன்னிலை அடையும். மார்பு வலியும் குறையும்.

1. மார்பு நோயில் உபயோகிக்கக் கூடிய உருத்திரரோக ஹரங்களாவன:- (வைத்திய சதகம்.)

“தசமூலம் மூக்குரட்டை எள்ளி னெண்ணெய்
சாரணையின் வேருடனே தேவ தாரம்
நிசமாகு மரமஞ்சள் கூகை நீரும்
நேர்பஞ்ச லவணமுடன் நெய்யுஞ் சுக்கும்
கசமாகு மரத்தையுடன் சிற்றா முட்டி
காயமுட ன ரக்கிவைகள் கருதிக் கொண்டு
வசமாகும் உருத்ர வா யுவென்னும் பேராம்
மார்பினோய் ஹரங்களென வகுத்த தாமே”

என்பதனால் தசமூலம் (10 வகை மருந்து வேர்) . அவைகளாவன :-

கண்டங்கத்திரி, சிறுமல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெருஞ்சி, பாலை, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம், (இவற்றின் வேர்) மூக்கரட்டை, எள்நெய், சத்திச் சாரணை வேர், தேவதாரு, மரமஞ்சள், கூகைநீர், பஞ்சலவணம், நெய், சுக்கு, அரத்தை, சிற்றாமுட்டி, காயம், அரக்கு, ஆகிய இவையாவும் உருத்திர வாயுவென்னும் மார்பு நோய் ஹரங்களெனக் கூறியுள்ளார். இவற்றுள் தேவையான சரக்குகளைக் கொண்டு குடிநீர், சூரணம், மாத்திரை, இலேகியம் முதலான முறைகளைச் செய்து கொடுக்க தமரக நோய் குணமாகுமென அறிக.

2. கத்தூரி மாத்திரை, கோரோசனை மாத்திரை, கோரோசனை கத்தூரி மாத்திரை, வசந்தகுசுமாகரம், மகாராஜ மிருகாங்கம், மகாவசந்தகுசுமாகரம், பூரண சந்திரோதய மாத்திரை, சர்ப்பராசக் குளிகை, மகா ஏலாதி மாத்திரை, விட்டுணுச்சக்கரம் இவை போன்ற மாத்திரைகளைத் தக்க அளவில் இஞ்சிச்சாறு, தேன் இவை கலந்ததில் அனுபானித்துக் காலை, மாலை கொடுத்துவர கேடடைந்த வாயுக்களையும், ஐயத்தையும் ஒழுங்குபடுத்தி மார்பு வலியைக் குணமடையச் செய்யும்.

3.மேலும் மான்கொம்பு பற்பம், காண்டாமிருகக் கொம்பு பற்பம், பவள பற்பம், முத்து பற்பம், முத்துச்சிப்பி, பலகரை, தங்கம், தாம்பிரம் இவைகளின் பற்பச் செந்தூரம், அயச் செந்தூரம், காந்தச் செந்தூரம், அயக்காந்தம், அயத்தங்கச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், சுயமக்கினிச் செந்தூரம், உலோக மண்டூரச் செந்தூரம், கத்தூரிக் கறுப்பு, கத்தூரிச் செந்தூரம், தாளகக் கறுப்பு, பூரண சந்திரோதயம், காளமேக நாராயணச் செந்தூரம், சயகுலாந்தகன், சண்டமாருதம் இவை போன்ற பற்பச் செந்தூரங்களை நோயின் தன்மை நன்கு அறிந்து தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்து வர தமரக நோயும் அதனால் ஏற்படும் உபத்திரங்களும் (Complications) குணமாகும்.

4. மான்கொம்பு பற்பம் தமரக நோய்க்குப் பொருத்தமாகச் செய்வதற்கு கீழ்க்காணும் முறைப்படி செய்து வைத்துக் கொள்வது நல்லது.

சுத்தி செய்த கலைமான் கொம்புத் துண்டுகளுக்கு ஏலரிசியை நீர் விட்டரைத்துக் கவசஞ் செய்து கனபுடம் போட்டெடுத்து, மீண்டும் அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பசுவின்பால் விட்டு அரைத்து வில்லை தட்டி

அகலிலிட்டு சீலைமண் செய்து புடம் போட்டு எடுக்கப் பற்பமாகும். இதனை 5 முதல் 10 கிரெயின் அளவு காலை, மாலை ஏலாதிச் சூரணம் அல்லது Multivite Lehiyem (சீவிய விருத்தினி இலேகியம்)இவற்றுடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

5. மான்கொம்பு பற்பம் :-

சுத்தி செய்த மான் கொம்புத் துண்டுகளுக்குக் குப்பைமேனி இலையை அரைத்துக் கவசித்து உலர்ந்தபின் கனபுடம் போட்டெடுத்து மீண்டும் இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து பசுவின் பால் விட்டு அரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு சீலைமண் செய்து முன்போல் கனபுடம் போட்டெடுக்கப் பற்பமாம். இதனை மேற்கூறிய பிரகாரம் கொடுத்துவர மார்புநோய், களைப்பு, ஆயாசம், வாந்தி, மயக்கம் யாவும் குணமாகும். இந்த இரண்டு விதமாகச் செய்து முடித்த சிருங்கி பற்பமே தமரக நோய்க்கேற்றதென அறிக!

6. தமரக நோயில் முக்கியமாக சித்த ஆராய்ச்சி நிலையத்தில் உபயோகத்திலிருந்து வருவது சீரகாதிச் சூரணம் (Traditional Process) இதனையே B.P. Stabilizer (இரத்த அழுத்த நிவாரணி) எனவும் கூறுகிறோம். இந்நோய்க்கும் இது சிறந்த மருந்தாகும்.

அதன் செய்பாகம் கூறுவோமாக:-

1. வறுத்துப் பொடித்த நற்சீரகம்	20 தோலா
2. வறுத்துப் பொடித்த ஏலரிசி	10 தோலா
3. பச்சைக் கற்பூரம்	5 தோலா
4. சுக்கு சூரணம்	2 ½ தோலா
5. வறுத்துப் பொடித்த மிளகு	2 ½ தோலா
6. வறுத்துப் பொடித்த அரிசித்திப்பிலி	2 ½ தோலா
7. வறுத்துப் பொடித்த கொத்துமல்லி	5 தோலா
8. சீமை அமுக்கிராச் சூரணம்(சுத்தி செய்தது.)	10 தோலா
9. வெள்ளைச் சீனி	57 ½ தோலா.

இவற்றை முறைப்படி கலவை செய்து வைத்துக்கொண்டு 10 முதல் 15 கிரெயின் அளவு காலை, மாலை தேனில் கலந்து கொடுக்க மார்பு நோய், பித்தாதிக்கம், உடம்பு உளைச்சல், தேகக்கடுப்பு, மயக்கம், இரத்தக் கொதிப்பு, கிறுகிறுப்பு முதலியன குணமாகும்.

இரத்தக் கொதிப்புக்கு இதனை உபயோகிக்கும்போது, எலுமிச்சம்பழச்சாறு (ஒரு பழம்), தேன் 2 தேக்கரண்டிஅளவு, சிறிது சீனாக்கற்கண்டு கலந்து 2 அவுன்சு தண்ணீர் சேர்த்து அதில் மேற்கூறிய சூரணத்தைக் கலக்கிக் காலை, மாலை கொடுத்து வருவது நல்லது.

7. வேறு சூரணங்கள்:-(Vide சித்த வைத்தியத் திரட்டு)

சீரகச் சூரணம், அமுக்கிராச் சூரணம், இஞ்சி ரசாயனம், இஞ்சிச் சூரணம், ஏலாதிச் சூரணம், பஞ்சதீபாக்கினிச் சூரணம், அட்டதீபாக்கினிச் சூரணம், (அஷ்டவர்க்கச் சூரணம்,அவையாவன சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம் என்பவையாம்). திராட்சாதி சூரணம், தாளிசாதிச் சூரணம் இவைகளில் ஏதேனுமொன்றைத் தனியாகவேனும், முன்னே கூறிய பற்பச் செந்தூரங்களுடன் சேர்த்தேனும் தக்க அளவில் காலை, மாலை தேன் அல்லது வேறு அனுபானங்களுடன் கொடுத்துவர வாயுவையும், ஐயத்தையும் நன்னிலைப்படுத்தி மார்பு நோயைக் குணப்படுத்தும். செரிமானத்தின் தன்மை ஒழுங்கானால் மார்பு நோயும் குணமாகும்.

8.இலேகிய வகையில் பஞ்ச தீபாக்கினி இலேகியம், நாரத்தை இலேகியம், இஞ்சி லேகியம், (கண்டாத்திரி இலேகியம்), கேசரி லேகியம், பறங்கி இரசாயனம், பித்தவாயு இலேகியம், Multivite Lehiyam (சீவியவிருத்தினி இலேகியம்), மகாவில்வாதி இலேகியம், அசுவகெந்தி இலேகியம் முதலியன. பித்தவாயு இலேகியம், சீவிய விருத்தினி இலேகியம் செய்முறை அடியில் வரையப்பட்டுள்ளன.

9.பித்தவாயு இலேகியம்:- (Siddha Research Pharma Copoeia)

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலரிசி, கொத்துமல்லி- இவை வகைக்கு 5 அவுன்சு சூரணம், சீனாக்கற்கண்டு கிலோ 1 ½, 30 எலுமிச்சம் பழங்களின் சாறு, இளநீர் 4, பசுநெய் ½ லிட்டர், நயம்தேன் ½ லிட்டர் அல்லது

சற்று குறைவு, இவ்விதமாகச் சரக்குகளைச் சேகரித்து வைத்துக்கொண்டு, இளநீரையும், பழச்சாற்றையும் ஒன்றாகக் கலந்து அதில் கற்கண்டைக் கரைத்து அடுப்பேற்றி சிறுதீயில் பாகுபதமாகக் காய்ச்சிச் சூரணங்களைப் போட்டுக் கிளறி நெய்யையும் விட்டு நன்றாகக் கிளறி கீழே இறக்கி வைத்து ஆறியபின் தேன்விட்டுக் கிண்டி கண்ணாடி ஜாடியில் வைத்துக் கொண்டு சிறுநெல்லிக்காயளவு காலை, மாலை சாப்பிட்டுவர பித்தவாயு, வயிற்றுவலி, மார்பு வலி, அரோசிகம், அன்னத்துவேசம், பசியின்மை, அசீரணம் யாவும் குணமாகும். பித்தக்கிறுகிறுப்பு, மயக்கம், இரத்த அழுத்தம் இவைகளும் குணமாகும். அனுபவமுறை. கைகண்ட மருந்துகளில் ஒன்று.

10. சீவிய விருத்தினி இலேகியம்:-(Multivite Lehiyam)
(Siddha Research Pharma Copoeia)

சாலாமிசிரிப் பொடி 12 அவுன்சு, முருங்கைப்பிசின் பொடி, பாதாம்பிசின் பொடி, கருவேலம்பிசின் பொடி, விளாம்பிசின் பொடி, இலவம் பிசின்பொடி இவை வகைக்கு 6 அவுன்சு, ரோஸ்குல்கந்து 3 பவுண்டு, இஞ்சி முரபா 1 ½ பவுண்டு, பேரீச்சம் பழம் (கொட்டை நீக்கி) 3 பவுண்டு, திரிகடுகுச் சூரணம் 2 அவுன்சு, ஏலரிசிப் பொடி 2 அவுன்சு, சீரகப் பொடி 2 அவுன்சு, இலவங்கப் பொடி 2 அவுன்சு, அங்கூர் திராட்சை 3 பவுண்டு, தாதுபுஷ்டி சூரணம் 8 அவுன்சு, (Dextrose or Glucose D) 2 பவுண்டு, இலவங்கப் பட்டைப் பொடி 2 அவுன்சு, பாதாம் பருப்பு 1 கிலோ, எலுமிச்சம்பழச்சாறு (40 பழங்களின் சாறு,) சீனாக்கற்கண்டு 3 கிலோ, இளநீர் 8, நயம் பசுநெய் 1 லிட்டர், நயம் தேன் ½ லிட்டர், இவ்விதமாக சாமான்களைச் சேகரித்துக் கொண்டு கடைச் சரக்குப் பொடிகளையும், பிசின்களின் பொடிகளையும், (Dextrose or Glucose D) ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். கல்லுரலில் இஞ்சிமுரபா, பேரீச்சம்பழம், அங்கூர் திராட்சை, ரோஸ் குல்கந்து இவற்றை முறையே தனித்தனியாக நன்றாய் இடித்து அப்பால் ஒன்றாய்ச் சேர்த்து இடித்து வைத்துக் கொள்ள வேண்டியது. பாதாம் பருப்பை வெந்நீரில் ஒரு மணிநேரம் போட்டு வைத்திருந்து மேல் தோல் போக்கி அம்மியிலிட்டு மைபோல் அரைத்து வைத்துக் கொள்ளவும். பழச்சாறு, இளநீர் இவ்விரண்டையும் இலேகியம் கிளறுகிற சட்டியில் கலந்து கற்கண்டை அதில் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சிப் பாகுபதத்தில் கல்லுரலிலிடித்து வைத்த இஞ்சிமுரபா முதலிய கலவையைப் போட்டுக் கிளறி நன்றாய் உறவானவுடன், கலவைப் பொடியையும், பாதாம் பருப்பு அரைத்து வைத்ததையும் போட்டு நன்றாய்க் கிளறும் போது நெய்யையும்

சேர்த்துக்கிளறி இறக்கி வைத்துக்கொண்டு ஆறிய பிறகு தேன் சேர்த்து நல்லதோர் ஜாடியில் வைத்துக் கொள்ளவும்.

அளவும், பிணி நீக்கமும்:-நெல்லிக்காயளவு (½ முதல் 1 தோலா எடை) காலை, மாலை தனியாகவேனும், மற்ற பற்பச் செந்தூரங்களோ டாயினும் சேர்த்து உண்டுவர தேக ஆரோக்கியமும், பலமும், ஆயுளும் பெருகும். இருதய வலுக்குறைவு, மார்புவலி, மலச்சிக்கல், அசீரணம், பித்தவாயு, பசியின்மை, ருசியின்மை, மந்தம், சோம்பல், இரத்தமின்மை இவை யாவும், நீங்கி உடம்பில் சுறுசுறுப்பும் நரம்புகளுக்கு வலுவுமுண்டாகும். மிக்க அனுபவமுறை. யாவரும் விரும்பி சாப்பிடக் கூடியது. (Very Popular Lehiyam)

11. இஞ்சி இலேகியம் (Special Siddha Research Lab)

1.நயமான இஞ்சி 1½ கிலோ வாங்கி வந்து, தோல் சீவி, பட்டிணம் படியால் 6 படி தண்ணீர் விட்டு நீர் சுண்டக்காய்ச்சி நன்றாய் வெந்தபின் கீழிறக்கி ஆறவிட்டு அதனை அம்மியிலிட்டு மை போலரைத்து வைத்துக்கொள்ளவும்.

2. பேரீச்சம்பழம் விதை நீக்கி 3 கிலோ சேகரித்து சிறிது நெய் விட்டு வதக்கி எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாய் இடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

3. வெள்ளைச்சீனி (White Sugar) 3 கிலோ

4. பசுநெய் ½ லிட்டர்

5. நயம் ஏலக்காயரிசி பொடித்தது 2 தோலா எடை

6. நயம் தேன் 1½ பவுண்டு

இவற்றையும் சேகரித்து வைத்துக்கொண்டு இஞ்சி, பேரீச்சம் பழம், சீனி இம்மூன்றையும் ஒரு சட்டியிலிட்டு நன்றாய்க்கிளறி நன்றாய் உறவாகியவுடன் ஏலரிசிப்பொடியைச் சேர்த்துக்கிளறி, அப்பால்

நெய்யையும், தேனையும் சேர்த்து நன்றாய்க் கிண்டி ஒரு ஜாடியில் அடைக்கவும்.

அளவும் பிணி நீக்கமும்:- ½ முதல் 1 தோலா எடை காலை, மாலை தனியாகவேனும், வேறு பற்பச் செந்தூரங்களுடனாயினும் சேர்த்து உண்டுவர வயிற்றுக்கடுப்பு, சீதபேதி, மார்பு வலி, அரோசகம், நாக்கசப்பு, சுவையின்மை, பசியின்மை, மலச்சிக்கல், வயிற்றுப்பிசம், வாந்தி, பித்தாதிக்கம், குன்மம், வாய் நீரூறல், கிறுகிறுப்பு ஆகிய இவை நீங்கும். அனுபவமுறை (Traditional Process)

12. மார்பு நோய் பரிகாரம்:-

மேலே கூறிய மான்கொம்பு பற்பம், பவளம், முத்துச்சிப்பி கலவை பற்பம், பச்சைக் கற்பூரம் அல்லது கத்தூரிச் செந்தூரம் இவை வகைக்கு இரண்டு குன்றி எடையும், ஏலாதிச் சூரணம், சீரகாதிச் சூரணம், பஞ்ச தீபாக்கினிச் சூரணம் இவை ஏதேனுமொன்றை 5 குன்றி எடையும் சேர்த்து காலை, மாலை தேனில் குழப்பிக் கொடுத்து 1 முதல் 2 தேக்கரண்டிஅளவு வரை நயம் பிராந்தி- ஒரு அவுன்சு தண்ணீரில் கலந்தும் கொடுக்கலாம். அல்லது பிராந்தி கிடைக்காவிடில் தசமூலாரிஷ்டம் ½ முதல் 1 அவுன்சு கொடுக்கலாம். தமரக நோய் தீவிரமாகயிருக்கும் நிலையில் இதனைக் கொடுக்க நிச்சயம் குணம் ஆகும் (Siddha Research Lab Process)

13. வேறு முறை:- (Siddha Research Lab Process) தகையுடன் கூடிய மார்பு நோய் நிவாரணி (Heart and Respiratory Dyspnoea Cure)

1.காளமேக நாராயணச் செந்தூரம்	1 குன்றி எடை
2.கத்தூரிச் செந்தூரம்	2 குன்றி எடை
3.தாம்பிர பற்பம் அல்லது செந்தூரம்	½ குன்றி எடை
4.தங்கபற்பம் அல்லது செந்தூரம்	½ குன்றி எடை
5.P.S.S பற்பம்	2 குன்றி எடை
6.முத்து பற்பம்	1 குன்றி எடை

இவற்றைக் கலந்து அத்துடன் ஏலாதிச் சூரணம், சீரகாதிச் சூரணம்,

பஞ்ச தீபாக்கினிச் சூரணம் ஏதேனுமொன்று 4 குன்றி எடை சேர்த்துத் தேனில் குழப்பிக் கொடுக்கவும். இம்மாதிரியாக காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க விரைவில் குணமாகும். அனுபவ முறை. (In every severe and serious case of Heart attack with dyspnoea, better to use preparation of Copper, gold and Muthu parpam or chenduram. Every one of us must bear this point in mind)

14. மார்பு நோய் நிவாரணி எண். 2

(Chest pain cure No.2 Siddha Research Lab Process)

கத்தூரிச் செந்தூரம்
சிருங்கி பற்பம்
பவளம் முத்துச் சிப்பி பற்பம்
கற்பூர சிலாசத்து பற்பம் எண்.1
சுயமாக்கினிச் செந்தூரம் (our own process)

இவை வகைக்கு ஒரு குன்றி எடையும்; சீரகாதிச் சூரணம் 4 குன்றி எடையும் சேர்த்து ஒன்றாய்க் கலந்து தேனில் காலை, மாலை குழப்பிக் கொடுக்க மார்பு நோய், இருமல், இரைப்பு, தகை, பசியின்மை, மயக்கம், கிறுகிறுப்பு, இரத்த அழுத்தம் யாவும் குணமாகும்.

15. மேற்பிரயோகம்-

மான் கொம்பு, செம்மரம் அல்லது செஞ்சந்தனக்கட்டை, சுக்கு, துவரம்பருப்பு, அமுக்கிரா வேர், மொச்சை இவற்றைச் சூடான வெந்நீர், பால் அல்லது பிராந்தி (Brandy) இவற்றிலேதேனும் ஒன்றில் உரைத்து மார்பு வலி உள்ளயிடத்தில் பற்றிடச் சாந்தமாகும். (To be applied over the Cardiac region)

புழு மார்பு நோயில், புழுக்களை வெளியேற்ற வேண்டியது முக்கியமானது, புழுக்களை வெளியேற்றிய பிறகு மார்பு நோய்ப் பரிகாரங்களை அனுசரிக்க வேண்டியது.

புழுக்களைக் கொன்று வெளியேற்றுவதற்கு பரிகாரம்:

1.பன்னீர்ப்பூவை முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்க புழுக்களைக் கொல்லுமெனவும், அப்பால் மறுநாள் கழிச்சலுண்டாக்க மருந்து கொடுத்து கழிச்சலானால் புழுக்கள் யாவும் வெளியாகிவிடுமெனவும் பெரியவர்கள் பழைய நூல்களில் எழுதியிருக்கிறார்கள்.

2.சித்த வைத்தியத் திரட்டில் கூறியுள்ள **"தமரகக் குடிநீர்"** தயாரித்து தினந்தோறும் உட்கொள்ள தமரக நோயிலுண்டாம் படபடப்பு, வலுக்குறைவு, மூச்சு வாங்கல் இவை சாந்தமாகும் எனக் கூறியுள்ளார். (This acts as nutrition and medicine in Heart diseases.)

3.குடற்கிருமி, நாசினிச் சூரணம் (Intestinal worms remedy Siddha Research Lab Process)

1. சுத்தி செய்த பலாசு வித்து சூரணம்	2 Parts
2. வறுத்திடித்த பெருங்காயச் சூரணம்	1 Part
3. வறுத்திடித்த ஓமச் சூரணம்	1 Part
4. வறுத்திடித்த வாய்விடங்கம்	½ Part
5. வெள்ளைச் சீனி	4 Parts

நன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு 10 முதல் 20 கிரெயின் கலவைச் சூரணம் காலை, மாலை ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள் தேனில் குழப்பிக்கொடுத்து மறுநாள் காலையில் ஏதேனும் கழிச்சல் மாத்திரை கொடுக்க வேண்டும். சஞ்சீவி மாத்திரை குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கு வச்சிரகண்டி மாத்திரை, சீவரத்னக்குளிகை, சுகவிரேசனக் குளிகை, அகத்தியர் குழம்பு, சித்தாதி எண்ணெய் ஏதேனுமொன்றை ஒரு வேளை காலையில் மட்டும் தக்க அளவில் கொடுக்கப் பேதியாகும். கிருமிகள் மயங்கி பேதியுடன் வெளியாகும். மோரும், சாதமும் கொடுக்க பேதி நிற்கும். கிருமிகள் நீங்குவதுமன்றி வயிற்றுவலி, வயிற்றுப் பிசம் இவை யாவும் குணமாகும்.

4. சித்தவைத்தியத் திரட்டு கூறியுள்ள "நாக்குப் பூச்சிக் குடிநீர்" தயாரித்து ¼ முதல் ½ ஆழாக்கு வீதம் ஒரு நாள் இரண்டு நாட்களுக்குக் காலை, மாலை உட்கொள்ளச் செய்து மறுநாள் காலையில் மேலே கூறியபடி கழிச்சல் மருந்து ஒரு வேளை கொடுக்க வேண்டும். நாக்குப் பூச்சி, திமிர்ப்பூச்சி, கொக்கிப் புழு முதலிய குடற் கிருமிகள் வெளியாகுமெனக் கூறியுள்ளார்.

5. குடற்கிருமி நாசினி இலேகியம்:- (Siddha Research Lab: process)

சுத்தி செய்த பலாசு வித்து-30 தோலா **பொடி** செய்து வைத்துக் கொண்டு குப்பைமேனியிலை நிழலுலர்த்திப் பொடித்தது 30 தோலா, வாய்விடங்கம்-5 தோலா, வறுத்திடித்த ஓமச் சூரணம் 15 தோலா, வெள்ளைச் சீனி-2 பவுண்டு, வறுத்திடித்த பெருங்காயம் 5 தோலா, பசுநெய் ½ லிட்டர், நயம் தேன் ¼ லிட்டர் இவைகளைச் சேகரித்துக் கொள்ளவும். இளநீர் நான்கு கொண்டு வந்து ஒரு இலேகியப் பாண்டத்தில் விட்டு சீனியைக் கரைத்து பாகு காய்ச்சி, பாகு பதத்தில் மேற்கண்ட பொடியைப் போட்டுக் கிளறி நெய் விட்டுக் கிண்டி இறக்கவும். ஆறிய பின் தேன் சேர்த்துக் கிளறி ஜாடியில் வைக்கவும். ¼ முதல் ½ தோலா எடை 2,3 நாட்களுக்குக் காலை, மாலை கொடுத்து அடுத்த நாள் காலையில் முன்கூறியபடி கழிச்சலுக்கு மருந்து கொடுக்கக் குடற் புழுக்கள் யாவும் ஒழியும். அனுபவ முறை.

6.தேங்காய் இலேகியம் அல்லது தட்டைப்புழு நாசினி லேகியம் (Siddha Research Lab Process)

"அஃதிற் றேங்காயை அன்றவித்துச் சேய்க்கிய
சிக்கெனப் பூச்சி சிதறும்"

என வைத்தியக் குறள் கூறுகிறது. தேங்காய், இலேகியத்தை Purgative Krimi Nasani Lehiyam Particularly for Tape Worms என நாங்கள் பெயரிட்டுள்ளோம். அனுபவமுறை: தட்டைப்புழு இருந்தால் அதனையும், மற்ற கிருமிகளையும் மயக்கி உடனுக்குடன் கழிச்சலையுண்டாக்கி வெளியேற்றும். கழிச்சலுக்கு வேறு மாத்திரை, எண்ணெய் கொடுக்கத் தேவையில்லை, மோரும் சாதமும் கொடுக்க கழிச்சல் நின்று போம். ஒரே

வேளை காலையில் மட்டும் மூன்று நாட்கள் தேவையானாலும் இதனைக் கொடுக்கலாம். சிறிய சுண்டைக்காய், தேற்றான்வித்து அளவு சிறிது கரும்புச் சர்க்கரையில் புரட்டி வாயிலிட்டுத் தண்ணீருடன் விழுங்கச் செய்யவும்.

செய்முறை:-

(a) 1. பூரபற்பம் அல்லது பூரக்கட்டு பற்பம் அல்லது சுத்தி செய்த இரசகற்பூரம்.

2. இரசபற்பம் அல்லது இரசபதங்கம் அல்லது சுத்தி செய்த பாதரசம்

3. இலிங்கக் கட்டு செந்தூரம் அல்லது சுத்தி செய்த சாதிலிங்கம்.

4. கெந்தக பற்பம் அல்லது சுத்தி செய்த கெந்தகம் இவை வகைக்கு 2 வராகனெடை.

(b) சுத்தி செய்த நேர்வாளம் 10 வராகனெடை.

(c) சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலி மூலம், சித்திர மூலவேர்ப்பட்டை, சன்னிநாயகம், பரங்கிப் பட்டை, கருஞ்சிவதை வேர், நயம் பெருங்காயம்-இவற்றின் சூரணம் வகைக்கு 2 வராகனெடை.

(d) கொடிக் கள்ளிப் பால்-சுமார் 4 அவுன்சு

(e) பனை வெல்லம் ½ வீசை அல்லது 60 தோலா

(f) முற்றின நயம் பெரிய தேங்காய் ஒன்று.

மருந்து செய்முறை:-

a, b, c-யில் கூறிய சரக்குகள் யாவையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு தேங்காயைக் கண் திறந்து அதிலுள்ள தண்ணீரை வெளியேற்றி அதனுடன் மேற்கூறிய கலவைப் பொடியை உட்செலுத்தி, கொடிக் கள்ளிப் பாலையும் தேங்காய்க்குள் விட்டு, வாய்க்கு ஒரு குச்சி கொண்டு ஆப்பு அடித்து (நன்றாய் வாயை மூடி) பசுவின் சாணத்தால் தேங்காயைச் சுற்றிலும் ஒரு அங்குலக் கனம் கவசஞ் செய்து வெயிலில் நன்றாய் உலர்த்தி சுமார் ஐம்பது வராட்டியில் புடம் போடவும். புடம் எரியும்

சமயம் தேங்காயின் ஓடு கருகினாலும் மருந்துகளின் புகையும் வாடையும் வெளியேறினாலும் உடனே புடத்தைப் பிரித்து தேங்காயின் ஓடு, சாணிக் கவசம் இவற்றை நீக்கி உள் தேங்காயுடன் மருந்தையும் சேகரித்துக் கொள்ளவும். இதனை நிறுவை செய்து இதன் எடைக்குச் சமன் பனை வெல்லத்தைச் சேர்த்து அம்மியிலிட்டு நன்றாய் மைப்போலரைத்து இலேகியம் போல வழித்தெடுத்து ஜாடியில் வைக்கவும்.

அளவு:- இலந்தை விதை, தேற்றான் வித்து, சிறிய சுண்டைக்காய் ஆகிய இந்த அளவு தேக பலமறிந்து ஒரே வேளை காலையில் மட்டும் ஒன்று முதல் மூன்று நாட்களுக்கு கரும்புச் சர்க்கரை அல்லது மலை வாழைப்பழம் இதில் பொதிந்து விழுங்கச் செய்யவும். நன்றாய்ப் பேதியாகும். கிருமிகளும் ஒழியும். மிகவும் முக்கியமான கைகண்ட மருந்தாகும். குறிப்பாகத் தட்டைப் புழு நோய்க்கு அரியதோர் மருந்தாகும். மோரும் சாதமும் கொடுத்தால் பேதி நின்று போம். அதிகம் பேதியானால் வசம்பு சுட்ட சாம்பல் தேனில் குழப்பிக் கொடுக்கப் பேதி நிற்கும். அன்றியும் இதனை மகோதரம், நீர்ப் பெரு வயிறு, கல்லீரல், மண்ணீரல் வீக்கம், சோபை, காமாலை, பாண்டு, குன்மம் முதலிய நோய்களிலும் இதனை உபயோகிக்கலாம்.

7. கிருமி நோய் ஹரங்கள் (வைத்திய சதகம்.)

வனத்தினிற் புரசன் விரையொடு காயம்
வசம்பு வெள்ளுள்ளியும் பரட்டை
வளர்கொடி வேலி வேம்பதின் பருப்பும்
வாய் விளங்கங் கடுக்காயுஞ்
சினத்திடுந் தென்னம் பாளையு மவுரி
செருப்படி பிரண்டை வேப்பிலையுந்
திப்பிலி சேராங் கொட்டையும் பாகல்
செய்ய மூக்குரட்டை சந்தனமும்
கனத்திடுங் கோவைக் கிழங்கொடு முத்தங்
கழல் விரைத கரையின் விரையுங்
காட்டெருமைப் பால் மூங்கிலின் குருத்துங்
கடுமெவச் சாரமானதுவும்
அனத்திடு நொச்சில் கசப்பது கொடுக்கும்
அருமையாந் திராயிவை யெல்லாம்
ஆனதோர் வயிற்றிற் பூச்சிகள் புழுக்க
ளாகிய கிருமி நோய் ஹரமே.

என்பதனால், புரசம் விதை, பெருங்காயம், வசம்பு, வெள்ளுள்ளி, பரட்டை, கொடிவேலி, வேம்பின் பருப்பு, வாய்விடங்கம், கடுக்காய்த் தோல், தென்னம்பாளை, அவுரி, சிறுசெருப்படை, பிரண்டை, வேம்பினிலை, திப்பிலி, சேராங்கொட்டை, பாகல், மூக்குரட்டை, சந்தனம், கோவைக் கிழங்கு, கோரைக் கிழங்கு, கழற்சி வித்து, தகரை வித்து, காட்டெருமைப் பால் (எருக்கம் பால்), மூங்கில் குருத்து, எவாச்சாரம், நொச்சில், திராயிலை ஆகிய இவையாவும் வயிற்றிலுள்ள பூச்சிகள் புழுக்களெனக் கூறப்படும் கிருமி நோய் ஹரங்களெனக் கூறியுள்ளார்.

8. வேப்பங் கொழுந்து இலையை நன்றாய் மை போலரைத்து பச்சரிசித் தவுடு (Bran) அல்லது வெள்ளைச் சீனியில் புரட்டி நெல்லிக்காய் அல்லது கொட்டைப் பாக்களவு காலை, மாலை மூன்று நாள் விழுங்கச் செய்யக் கிருமிகள், வயிற்று வலி, மஞ்சட் காமாலை ஆகிய நோய்கள் குணமாகும். அனுபவமுறை.

மார்பு நோய்க்கு கத்தூரி மெழுகு: பயறளவு தேனில் தினம் 3 வேளை கொடுத்து வர சன்னி, சீதளம், சுரம், கபநோய். உப்பிசம், மாந்தம், விக்கல், முகவாதம், சூதகசன்னி , இருமல், தகை, மாரடைப்பு, நடுக்கு வாதம் இவை குணமாம். (Refer to under) (விக்கல் நோய்)

தமரக நோயினர்க்குத் தமரகக் குடிநீர் கொடுக்கலாம்: இதனைச் சித்த வைத்தியத் திரட்டில் கூறியுள்ளபடி காடிச் சூப்பு தயாரித்து தினம் ஒரு வேளை கொடுத்துவர தமரக நோயிலுண்டாம் படபடப்பு, வன்மையின்மை, மூச்சு வாங்கல் ஆகிய இக்குறி குணங்கள் நீங்கும். குருதிப் பெருக்கு உண்டாகும். உடல் வலுப்படும்.

குறிப்பு:- கிருமியைப் போக்குவதற்கு பல பரிகாரங்கள் இதில் கூறியிருப்பினும் வெளுப்பு நோயில் கிருமிகப் பாண்டு வுக்குப் பரிகாரம் கூறியிருப்பதையும் அங்கு நோக்கினால் குடற் புழுவைப் போக்குவதற்கு இதற்கு மேற்கொண்ட முறைகளையும் காணலாம். (Chapter 23)

The following items are our Research Preparations:

1. Intestinal Worms Cure Powder No.1 or Kirimi Nivarana Churnam No.1 (S.R. Pharma)

1.Purfied Palasu vithu Paruppu churnam 2 parts or 8 ozs

2.Perunkayam, fried churnam	1 part or 4 ozs
3.Omam fried churnam	1 part or 4 ozs
4.White sugar	4 parts or Ib-1

Mixed together and bottled up.

Dose:- 10 to 15 grains may be given twice a day for one or two days with Annakati-jalam, or cow's buttermilk and on the third day a mild purgative-may be given in the morning if necessary.

Uses:- very useful in intestinal Worms. colic intestines and flatulance.

7. Chest pain Cure or Marbu Noi Nivarani:

1.Kasthuri chenduram	1 Tolas
2.Sringi Baspam	4 Tolas
3.Silajathu Baspam	4 Tolas
4.Swayamagni chenduram	4 Tolas
5.B.P. Stabilizer	13 Tolas

Mixed well and bottled up.

Dose:- 1 to 2 Pinches B.D. with honey or other suitable anupanam

Uses:- Chest pain, Indigestion, Anorexia, Pandu, Sobai and Kamalai etc, are cured.

12. சுவையின்மை

பரிகாரம்.

இந்நோயில் மிகுதியடைந்த தீக்குற்றம், மேல் நோக்குகால் இவற்றைத் தன்னிலைப்படுத்தவேண்டும். அன்றியும் வளி, அழல் கலப்பினாலேற்பட்டிருப்பின் அவற்றையும் ஒழுங்கு படுத்தல் வேண்டும். வேறு வகை காரணங்களாகிய மனக்கலக்கம், பீதி, மிகுந்த மன மகிழ்ச்சி, மனதின் வேறுபாடு இவற்றால் இந்நோய் உண்டாயிருப்பின் அவைகளுக்கேற்ற பரிகாரங்களைச் செய்தல் நலம்.

1.மலச்சிக்கல் இருப்பின் **"தித்திப்பு மலகாரி இலேகியம்"** கழற்சிக் காயளவு காலை, மாலை கொடுத்து மலத்தைக் கழிக்கச் செய்யலாம்.

2. வச்சிரகண்டி மாத்திரை, சுகவிரேசன மாத்திரை, சஞ்சீவி மாத்திரை ஏதேனுமொன்றை இரவில் படுக்கைக்குப்போகும் போது அல்லது அதிகாலையில் ஒரே வேளை 2 மாத்திரைகள் கொடுக்க மலம் கழியும்.

நோய்க்கு நேர் மருந்துகள்

1. பசிதீபனச் சூரணம்:- சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், வெண்காரம், பெருங்காயம், ஓமம், ஏலரிசி, இந்த எட்டுவித சரக்குளில் வெண்காரம், பெருங்காயம் இவ்விரண்டு சரக்குகளை அடுப்பிலிட்டுப் பொரித்துப் பொடித்துச் சேர்த்தும், மற்றவைகளையும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து சமன் அளவு எடுத்துக் கலந்து வைத்துக் கொண்டு, திரிகடிப் பிரமாணம் காலை, மாலை உட்கொள்ள செரியாமந்தம், புளியேப்பம், அருசி, வயிற்றிரைச்சல், பித்த சம்பந்தமான ரோகங்கள் யாவும் நீங்கும். அகோரப் பசி உண்டாகும்.

2. சீரகச் சூரணம்:- ஐந்து பலம் நற்சீரகத்தைச் சுத்தப்படுத்தி ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு, எலுமிச்சம் பழச்சாறு மிதக்க விட்டு இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் வெயிலில் உலர்த்தவேண்டும். இவ்வாறே இஞ்சிச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு, முடக்கொற்றான் சாறு, பிரண்டைச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு இவை ஒவ்வொன்றிலும் முறையே ஊற வைத்து உலர்த்திப் பொடித்து வைத்துக் கொண்டு திரிகடியளவு காலை, மாலை சாப்பிட மேற்கூறிய நோய்கள் யாவும் நீங்கும். பித்த சம்பந்தமான நோய்களுக்கு நேர் மருந்தாகும். அன்றியும் மயக்கம், கிறுகிறுப்பு, வாந்தி, அக்கினி மந்தம், உஷ்ணம் முதலிய பிணிகளும் நீங்கும்.

குறிப்பு:- மேற்கூறிய சாறுகளுடன் கரும்புச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, தூதுவளைச் சாறு, வேப்பம் பட்டைச்சாறு, தும்பைச் சாறு, இவைகளிலும் ஊற வைத்து உலர்த்தி எடுக்கலாம் (ஆ.வே.ம.)

3.இஞ்சிச் சூரணம்:- மேல் தோல் சீவிய இஞ்சி 10 பலம் எடுத்து வில்லைகளாக அரிந்து, பசு நெய் விட்டு வறுத்து வைத்துக் கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், கிராம்பு, ஓமம், சீரகம், வாலுளுவையரிசி, சாதிக்காய், திப்பிலி மூலம், அதிமதுரம், குரோசாணி ஓமம், அமுக்கரா, கசகசா, இலவங்கப் பத்திரி, கொத்துமல்லி, பேரீந்து, முந்திரி இவை வகைக்கு ¼ பலம் வீதம் எடுத்து இளவறுப்பாக வறுத்து இடித்துச் சூரணம் செய்து, இத்துடன் சீனாக் கற்கண்டு 10 பலம் பொடித்துச் சேர்த்து வைத்துக் கொண்டு வேளைக்கு ¼ பலம் வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர உஷ்ணம், பித்த வாயு, அரோசகம் இவை தீரும். பசி தீபனமுண்டாகும். மலங்கழியும். இச்சா பத்தியம்.

4.இஞ்சிச் சூரணம்:-

இஞ்சியை மேல் தோல் சீவி வில்லைகளாக நறுக்கி நெய்விட்டு வறுத்தெடுத்தது பலம் 3, திப்பிலி பலம் 3, மிளகு பலம் 3, திப்பிலி மூலம், ஏலம், சுக்கு, சாதிக்காய், சடாமாஞ்சில், சீரகம், சோம்பு, கோட்டம், சிறு நாகப்பூ, இலவங்கப் பத்திரி, வெட்டிவேர், கிராம்பு, சாதிப்பத்திரி, தாளிசம் வகைக்குப் பலம்1, நாட்டுச் சர்க்கரை பலம் 10, சர்க்கரை நீங்கலாக மற்ற சரக்குகளைச் சுத்தித்து இடித்து வஸ்திரகாயம் செய்து சர்க்கரையுடன் கலந்து வைத்துக் கொண்டு திரிகடியளவு காலை, மாலை சாப்பிட சுவையின்மை, ஊண் வெறுப்பு, பக்க வாய்வு, குலை எரிவு, வாய்வு, வாந்தி, கோழை, சூதக வாயு இவை தீரும். (சி.வை. திரட்டு)

5. கேசரி இலேகியம்:- 1முதல் 2 வராகனெடை காலை, மாலை கொடுத்து வர பித்தம், பித்தாசீரணம், அன்ன வெறுப்பு, அசீரண பேதி, பித்த வாயு, வயிற்று வலி இவை குணமாகும். (சி.வை. திரட்டு)

6. எலுமிச்சு இலேகியம்:- அளவு, பிணி நீக்கம் முன் கூறியது போலவே (S.R.Pharma).

7. இஞ்சி இலேகியம்:- கொட்டைப் பாக்களவு காலை, மாலை கொடுக்க வாயு, பித்தம், வாந்தி, சூலை, வலி, அரோசகம், அன்னத்துவேசம் எட்டு குன்மம், வயிற்றுப் பொருமல் இவை தீரும் (சி.வை. திரட்டு)

குறிப்பு:- இதனைக் கண்டாத்திரி இலேகியம் எனவும் கூறுவர். அகத்தியர் வைத்திய ரத்னச் சுருக்கம்.

8. புளியாரை நெய்:-தேக்கரண்டிஅளவு காலை, மாலை கொடுக்க பித்த வெட்டை, பித்த வாயு, எரிச்சல், நீர்ச்சுருக்கு, மயக்கம், வாய் நீரூறல், சுவையின்மை, பித்த நோய்கள் , வாந்தி இவை குணமாம்.

9. திராட்சாதிச் சூரணம்:-தான்றிக்காயளவு காலை, மாலை தேனில் கொள்ள இளைப்பு, உழலை, இருமல், பொருமல், காசசுவாசம், குன்மம், தாதுசயம், பிரமேகம், வயிற்றுநோய், அரோசகம், வாந்தி, பயித்தியம், பாண்டு, சுரத்துடன் கூடிய சயம், சன்னி, தியக்கம், மயக்கம், பித்தம் 40, நளிர், எரிவு இவை தீரும் (சி.வை. திரட்டு)

10. வில்வாதி இலேகியம்:- வில்வ வேர் பலம் 1, வில்வப் பழம் 5, இவற்றை இடித்து 2 படி தண்ணீரில் போட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் ½ படியாய் வற்றக் காய்ச்சி வடிகட்டிய கியாழத்தில் வெல்லம் பலம் 2 கரைத்துக் காய்ச்சிப் பாகு செய்து அதில் திப்பிலி மூலம், சித்திர மூலம், செவ்வியம், கூகை நீர், வாலுளுவை, சடாமாஞ்சில், அதிவிடையம், இந்துப்பு. இவை வகைக்கு ½ பலம், குங்குமப்பூ, கிராம்பு, சாதிப்பத்திரி, சாதிக்காய், கோரோசனை வகைக்கு வராகனெடை ½ வீதம் எடுத்து வெதுப்பிப் பொடித்துத் தூவிப் போதுமான நெய் சேர்த்து மெழுகு பதமாகக் கிண்டி இறக்கி ஆறியபின் தேன் ஒரு பலம் விட்டுப் பிசைந்து பீங்கானில் வைத்துக்கொண்டு கொட்டைப் பாக்களவு காலை, மாலை சாப்பிட்டு வரக் குன்மம், சத்தி, விக்கல், நெஞ்சு வலி, அரோசகம், மூக்கில் நீர்ப்பாய்தல்.

குலை எரிவு, காமாலை, கிராணி, இருமல், வயிற்றுவலி, கிருமி, மூலம் ஆகிய இவை தீரும், (செய்முறை பாக்கெட் வைத்தியம்)

11. **அன்னத்துவேச நிவாரணி:-** ஒரு எலுமிச்சம் பழத்தை நான்காய்க் கீறி அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், காயம் வகைக்கு ¼ பலம் வீதம் பொடித்துக் கலந்து பிளவுக்குள் செலுத்தி இரவில் பனியில் வைத்து காலையில் தினந்தோறும் ஒவ்வொரு பத்தையாய் நான்கு நாட்கள் சாப்பிட்டு வர பித்த வாயு, கிறுகிறுப்பு, நெஞ்செரிவு, வாய் நீரூறல், வெள்ளோக்காளம், அன்னஞ் செரியாமை, அன்னத்துவேசம் யாவும் தீரும்.

12. **அரோசகத்திற்குக் குடிநீர்:-** ஏலம் பலம் 1, பொரித்த சீரகம் பலம் 1, இவை இரண்டையும் முறைப்படி கியாழம் வடித்து சீனி கலந்து சாப்பிடத் தீரும். (செ. பாக். வை,)

13. **நாரத்தங்காய் இலேகியம்:**-நாரத்தம் பழம், இஞ்சி, அமுக்கரா வேர், மூக்கரைச் சாரணை வேர், இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றாய்க் கலந்து 50 பலம் பனை வெல்லத்தைக் கரைத்துப் பாகு காய்ச்சி அதில் திரிகடுகு, ஏலம், அதிமதுரம், தேசாவரம், கோட்டம், சிற்றரத்தை, மல்லி, தாளிசம், முந்திரிகை இவை வகைக்குப் பலம் 1, அதிவிடையம், அமுக்கரா, அக்கராகாரம், வால் மிளகு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, திரிபலை, குரோசாணி, ஓமம், சந்தனம், கருஞ்சீரகம், வகைக்குப் பலம் ½ இவைகளை இடித்து வடிகட்டின சூரணத்தையும் 15 பலம் சீனியையும் தூவி ஒரு படி நெய்யையும் விட்டுக் கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஆற்றி 2 படி தேன் விட்டுப் பிசைந்து வேளைக்கு புன்னைக்காய் வீதம் காலை, மாலை கொள்ள பித்தம், நெஞ்செரிவு, அரோசகம், வாந்தி, தாபசுரம், வாதபித்தருட்சை, கிறுகிறுப்பு, வாயு, தலைநோவு, அக்கினி மாந்தம், மலக்கட்டு, காந்தல் முதலியன தீரும். பத்தியம்; புளி, கசப்பு, மோர் நீக்கவும். (கைமுறை பாக்கெட் வைத்தியம், சி.வை. திரட்டு)

14. **சுக்கு வடகம்:**-சுக்கு பலம் 6, தாளிசம் பலம் 5, செவ்வியம், மிளகு வகைக்குப் பலம் 1. திப்பிலி பலம் 4, விலாமிச்சு வேர். சாதுர் சாதம் வகைக்குப் பலம் ¼ சூரணித்துக் கலந்து பசுவின் பாலிற் பிட்டவியல் செய்தெடுத்து சர்க்கரை பலம் 6 சேர்த்துப் பிசைந்து கொட்டைப்பாக்கு, பிரமாணம் உருண்டை செய்து, காலை, மாலை ஒவ்வொரு உருண்டை சாப்பிட்டு வர சத்தி, விக்கல், அரோசகம், வாய் நீரூறல், வாயு, அக்கினி

மந்தம், பொருமல், ஈளை, இருமல், திரிதோடம் யாவும் நீங்கித் தீபனமுண்டாகித் தேகம் பலக்கும். (கை.மு. பா. வை.)

15. கரிசாலை இலேகியம்:-புன்னைக் காயளவு காலை, மாலை சாப்பிட வெண்பாண்டு, பித்த வெட்டை, கைகால் ஓய்ச்சல், காந்தல், எரிவு, வாந்தி, மயக்கத்துடன் கூடிய தூக்கம், நீர்சுரப்புடன் கூடிய வீக்கம், கிராணி, அரோசகம் ஆகிய இவை தீரும். (சி.வை. திரட்டு)

16. சரபங்க வில்வாதி இலேகியம்:1 ¼ வராகனெடை அளவு காலை, மாலை சாப்பிட பித்த வெட்டை, பித்த பாண்டு, கயநோய், குன்மம், கிராணி, வாய் கசப்பு, வெள்ளோக்காளம்,வாய் நீரூறல், அக்கினி மாந்தம், சூலை, கைகால் காந்தல், பித்தம் 40, அரோசகம் இவை தீரும்.

பத்தியம்: புளி, கைப்பு, புகை, பெண் நீக்க வேண்டும். (சி.வை. திரட்டு)

17. அன்னத்துவேச நிவாரணி:-

1.இஞ்சியைத் தோல் போக்கித் தண்ணீர் தெளித்துத் தட்டிச் சாறு வாங்கி அதை ஒரு சட்டியைக் காயவைத்து இறக்கி அதில் விட்டு முறித்துக் கொண்டு, அடியில் தங்கிய சுண்ணாம்பு வண்டலை நீக்கி தெளிவை மட்டும் வடிகட்டி எடுத்தது ஒரு அவுன்சு.

2.எலுமிச்சம்பழச் சாறு 2 அவுன்சு அத்துடன் சேர்த்து

3.அங்கூர் திராட்சை 50 கிராம் விதை, காம்பு, நீக்கி மேற்கூறிய சாற்றில் ஊறவைத்துப் பிசைந்து சக்கையை நீக்கி விட்டு

4.அத்துடன் சீனாக்கற்கண்டு சிறிது போட்டு

5.நயம் தேன் 2 தேக்கரண்டி அளவு சேர்த்து, காலையில் மட்டும் ஆகாரத்திற்கு முன் சாப்பிடச் செய்யவும். மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுத்து வர அரோசகம், அன்னத்துவேசம், சுவையின்மை, பசியின்மை, மலச்சிக்கல், வாய் நீரூறல், பித்தாதிக்கம், கிறுகிறுப்பு, வாந்தி, மயக்கம் யாவும் தீரும். அனுபவத்துடன் கைகண்ட மருந்து, கவனிக்கவும்.

18. வைத்திய சதகத்தில் கூறியுள்ள அரோசக ஹரங்கள்:

திரிகடு கிஞ்சிவெல்லஞ் சீரகஞ் திரிசா தீகஞ்
திருகுதூ துளையிந்துப்பு சிறுமூலமாது ல்ங்கம்
இருகுசர்க் கரைதாளீசமியல்வேப்பம் பூவுஞ் செவ்வியம்
அருதிநற் றிராயினோடு மரோசிக ஹரங்க ளாமே.

திரிகடுகு, இஞ்சி, வெல்லம், சீரகம், திரிசாதம், தூதுவளை, இந்துப்பு, சிறுமூலம், மாதுளங்கம், சர்க்கரை, தாளிசம், வேப்பம்பூ, செவ்வியம், திராய் இவையாவும் அரோசகத்தைப் போக்கக் கூடியவையாம்.

19. மகாவில்வாதி இலேகியம்: ஒரு கொட்டைப் பாக்களவு காலை, மாலை சாப்பிட்டு வர அரோசகம், வீக்கம், சக்தி, பாண்டு, விடப்பாண்டு, வயிற்றெரிவு, வயிறுப்பல், கிராணி, கைகாலெரிவு, காந்தல், அன்னத்துவேசம், அதிசாரம், பித்தம் 40 இவை தீரும். (சிகிச்சாரத்ன தீபம்)

20. மந்தவாயு சூரணம்: திரிகடியளவு காலை, மாலை தேனிற் கொள்ள சுவையின்மை, செரியாமை, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இரத்த அழுத்தம், வாந்தி, மந்தவாயு இவையாவும் குணமாகும். (சிகிச்சாரத்ன தீபம்.)

21. இஞ்சி எலுமிச்சு மணப்பாகு: இதில் 1 முதல் 2 தேக்கரண்டி அளவு எடுத்து சிறிது தண்ணீர் கலந்து காலை, மாலை கொடுக்க அரோசிகம், வாந்தி பித்தாதிக்கம், கிறுகிறுப்பு, செரியாமை, இரத்த அழுத்தம் முதலியன குணமாகும். (சிகிச்சாரத்ன தீபம்.)

13. நீர்வேட்கை நோய்

பரிகாரம்

இந்நோய் உண்டாவதற்குரிய காரணங்களை அறிந்து அவற்றிற்குத் தகுந்த பரிகாரம் செய்தல் வேண்டும். தீக்குற்றம் மிகுதியாலேற்படின் அதனைத் தணிக்கவும், மற்ற நோய்களுக்குத் துணைநோயாக உண்டாயின் அந்தந்த நோய்களைப் பரிகரிப்பதனாலும் நாவறட்சி நோயைக் குணப்படுத்த வேண்டும். பேதி, வாந்தி, நீரிழிவு, இரத்தப் போக்கு இவற்றில் உடலிலுள்ள நீர் மிகுதியும் வறளச் செய்வதாலும், முப்பிணி நோயிலும் தாகநோய் உண்டாகும். ஆடல், பாடல், ஓடல் முதலிய செயல்களிலும் நீர்வேட்கை உண்டாகும். முதற் காரணமாயுள்ள நோயைக் குணப்படுத்துவதின் மூலம் தாக நோயும் தணியும்.

1. சாதிசம்பீரக் குழம்பு:-

¼ ½ ¾,1 குன்றி எடை, நோய் வன்மைக்குத் தக்கவாறு ஒரு நாளைக்கு 3 அல்லது 4 வேளை நாவினால் நக்கிச் சாப்பிடச் செய்ய வாந்தி, விக்கல், தாகம், பாண்டு, குழந்தைகளுக்குண்டாம் மாந்த பேதி, வெப்பு, மூர்ச்சை இவை தீரும். (சி. வை. திரட்டு)

2. அதிமதுரக் குடிநீர்:-

வில்வ வேர், விலாமிச்சு வேர், நெருஞ்சி வேர், நன்னாரிவேர், சோம்பு, விளாவரிசி, முத்தக்காசு, நெற்பொரி, திராட்சை, நெல்லி வற்றல், இலுப்பைப்பூ, சுக்கு இவை வகைக்கு மூன்று விராகனெடையாக இடித்து ஒரு மட்கடத்தில் போட்டு அதில் ½ படி தண்ணீர் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயில் நான்கிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு வடித்து ஒரு அவுன்சு வீதம் மூன்று மணிக்கொரு தடவையாகக் கொடுத்து வர நாவறட்சி தீரும்.

3. நாயுருவிக் குடிநீர்:-

நாயுருவிச் சாம்பல் ஒருபலம், வாழைச் சருகு சுட்ட சாம்பல் ஒரு பலம், கரியாக வறுத்தெடுத்த பூநாகம் ஒரு பலம் இம்மூன்று சரக்குகளையும் ஒரு மட்கலத்தில் போட்டு அதனில் ஒரு படி தண்ணீர்விட்டு காற்படியாக வற்றக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு 2 அவுன்சு அளவாக தினம் 2,3 வேளை கொடுத்து வர எத்தகைய நாவறட்சியாயினும் குணமாகும். தாகம், விக்கல், நாசுரசுரப்பு, நாகறுப்பு, நாவறட்சி யாவும் குணமாகும். (கண்ணுசாமியம்.)

4. ஆவாரைக் குடிநீர்:-

நாவல்பட்டை, மருதம்பட்டை, கோரைக் கிழங்கு, கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காய், கட்டுக் கொடி, போஸ்தக்காய்; கடலழிஞ்சிப்பட்டை, ஆவாரைப் பூ, ஆவாரைப் பட்டை, ஆவாரை வேர்ப்பட்டை இவை வகைக்குப் பலம் ஒன்றாக இடித்துச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு, வேண்டும் போது ஒரு தோலா சூரணத்தைக் கால்படி தண்ணீரில் போட்டு அரைக்காற் படியாகச் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு வடிகட்டிச் சாப்பிடவும். இவ்விதம் தினம் இருவேளை பத்து நாட்கள் சாப்பிட்டு வர மதுமேகமும் அதனாலேற்படும் அதிதாகமும் குணமாகுமென்பர். இத்துடன் அப்பிரேக நயம் செந்தூரம் சேர்த்துச் சாப்பிடுவது சாலச் சிறந்தது. (சிகிச்சாரத்னதீபம்.)

5. ஆற்று மணற் குடிநீர்:-

வாலுகாட்டிகக் கஷாயம்- Traditional manuscript.

1. ஆற்றுமணல் ஒரு சிரங்கை (Handful)
2. நெற்பொரி ஒரு சிரங்கை
3. மயிலிறகு ஒரு தோலா
4. பூநாகம்- No. 12 to 15
5. பனை ஓலை (Green leaves cut into bits) ½ சிரங்கை
6. எலுமிச்சம் பழத்தோல் (One fruit skin without juice cut into bits)
7. அரசங் கொழுந்து
8. ஆலங் கொழுந்து
9. இத்திக் கொழுந்து

(7–9) வகைக்கு ஒரு தோலா.

இந்த ஒன்பது சரக்குகளையும் ஒரு சட்டியிலிட்டு ஒன்றன் பின் ஒன்றாகக் கருக வறுத்து ஒரு படி தண்ணீர் (Madras measure) விட்டு அத்துடன் அதிமதுரம், அக்கிராகாரம், சாதிக் கோட்டம் வகைக்கு ஒரு துண்டு ¼ தோலா எடை தட்டிப் போட்டுக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி வேளைக்கு 2 முதல் 3 அவுன்சு வீதம் சிறிது பனைவெல்லமுங் கூட்டி மூன்று மணிக்கொரு தடவை கொடுத்து வர ஊழிநோயிலுண்டாம் தாகம், வாந்தி, விக்கல், நா, தொண்டை வறளல், குமட்டல், களைப்பு இவை யாவும் வெகு விரைவில் குணமாகும். என் அனுபவ முறை.

6. பிரசண்டமாருதக் கருக்கு அல்லது தும்பைக் கருக்குக் குடிநீர்:

தும்பையிலை, குப்பைமேனியிலை, தைவேளையிலை இவை வகைக்கு ஒரு பிடி வீதம் எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக வறுத்துச் சாம்பலான பிறகு அவற்றைக் கொட்டி விட்டு, அச்சட்டியில் வெந்தயம் ½ பலம் போட்டுச் சிவக்க வறுத்து ஒருபடி தண்ணீர் விட்டு ஆழாக்காக காய்ச்சி வடித்து ¼ ஆழாக்கு வீதம் (அவுன்சு) 2 அல்லது 3 மணிக்கொரு தடவை கொடுத்துவர நீர் வேட்கை, வாந்தி, பேதி, வயிறுப்பல் இவை தீரும். குறிப்பாக ஊழி நோயில் தாகம், வாந்தி, பேதி, வயிறுப்பல் இவற்றைப் போக்க உபயோகிப்பதுண்டு.

7. மண்புழுக் குடிநீர்:-

மண்புழு (பூநாகம்)-20 சேகரித்து பசுவின் பால் அல்லது மோரில் சற்று நேரம் போட்டு வைத்தால் வயிற்றிலுள்ள மண்யாவையும் கக்கி விடும். புழு சுத்தமாகும். இதனைச் சட்டியிலிட்டுக் கருக்கிச் சாம்பலான பின் ஒரு படி நீர்விட்டு நான்கிலொன்றாய்க் காய்ச்சி வற்றவைத்து வேளைக்கு 2 அவுன்சு வீதம் வடிகட்டி அடிக்கடி கொடுத்து வர நாவறட்சி, தாகம், வாந்தி, விக்கல் இவை குணமாகும்.

8. மணற் குடிநீர்:-

ஆற்று மணல் ஒரு சிரங்கையைச் சட்டியிலிட்டுக் கருக வறுத்துக் கொட்டி விட்டு அச்சட்டியில் முன்போல் நீர்இட்டு வற்றக் காய்ச்சிக் கொடுத்து வர மேற்கண்ட நோய்கள் தீரும்.

9. நாயுருவிக் குடிநீர்:-

நாயுருவி சமூலம், புளியிலை, ஈர்க்கு, முருங்கை ஈர்க்கு, மாவிலிங்கம்பட்டை, சித்திரமூலவேர்ப்பட்டை, சிவனார்வேம்பு, எருக்கம்பூ, தென்னங்குரும்பை (பிஞ்சு) இவை யாவும் வகைக்குப் பலம் ஒன்று, தண்ணீர் படி 4 (Madras measure) சேர்த்துக் காய்ச்சி எட்டிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி வேளைக்கு 2 அவுன்சு வீதம் 3 மணிக்கொரு தடவையாகக் கொடுத்துவர வாந்தி பேதியில் காணும் நீர்வேட்கை குணமாகும். சிறிது நயம் கத்தூரியும் கலந்து கொடுக்க மிக விரைவில் குணமாகும். (Manuscript)

10. குளிர் காய்ச்சலில் நாவறட்சிக் குடிநீர்:-

வட்டத்திருப்பி, வசம்பு, நிலவேம்பு, நிலப்பூச்சி (பூநாகம்), மிளகு இவ்வைந்தும் வகைக்கு ஒரு பலம் எடுத்து சட்டியிலிட்டுக் கருக்கிச் சாம்பலாக்கிக் கொட்டி விட்டு, அதில் கருஞ்சீரகம், ஓமம் வகைக்கு ½ பலம் போட்டுப் பொரிய விட்டு தண்ணீர் 1 படி விட்டு நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி 2 அவுன்சு வீதம் தினமும் 3 வேளை கொடுக்க நாவறட்சி தீரும்.(பிரமரகசியம்- பாகம் 2)

11. அதிமதுரக் குடிநீர்:- (செய்முறை பாக்கெட் வைத்தியம்)

அதிமதுரம், சதகுப்பை, கோட்டம், விலாமிச்சு வேர், வெட்டி வேர், மல்லி, சுக்கு, சீரகம், இந்த எட்டு சரக்குகளையும் ஒரு பலம் வீதம் எடுத்து முறைப்படி கியாழமிட்டுக் கொடுக்க நாவறட்சி, தாகம் தீரும்.

12. வில்வக் கொழுந்து குடிநீர்:-

வில்வக் கொழுந்து, அதிமதுரம், வெட்டிவேர், கோட்டம், பாலை, மல்லி, பாசிப்பயறு இவ்வேழையும் வகைக்கு ஒரு பலமாக எடுத்து முறைப்படி கியாழமிட்டுக் கொடுக்கத் தாகம், நாவறட்சி தீரும்.

13. ஆற்று மணற் குடிநீர்:-

ஆற்று மணல் ஒரு பிடியைச் சட்டியிலிட்டுத் தீப்போல் வறுத்து ஒரு

பிடி அரசங்கொழுந்தைக் குறுக அரிந்து போட்டுக்கருகின பிறகு ஓமம்1 ¼ வராகனெடை இட்டு, பொரிந்தபின் ஒரு படி தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி 2 அவுன்சு வீதம் அடிக்கடி கொடுத்துக் கொண்டு வர நாவறட்சி, தாகம் நிற்கும்.

14. நாவறட்சிக்குச் சூரணம்:-

கடுக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி,சிறுதேக்கு, கற்கடகச் சிங்கி, கோட்டம், சடாமாஞ்சில், இந்துப்பு இந்த பத்து வகைச் சரக்குகளையும் வெதுப்பிப் பொடித்து வைத்து கொண்டு திரிகடிப் பிரமாணம் தேனிலாவது முலைப்பாலிலாவது கலந்து மூன்று வேளை கொடுக்கத் தீரும் (கை. மு பாக்கெட் வைத்தியம்.)

15. விதாக நோய் ஹரங்கள்:- (சதசுலோகம்.)

இச்சைகொள் ளதிமதுர மிருவேலி லாமிச்சு
மினியமாதுளையின் பழம்
இலுப்பையின் பூவதும் நெல்லியும் பேய்ப்புட
லிளநீருடன் சீனியும்
பச்சைக்கற் பூரமுஞ் சீந்திலும் நெற் பொரியும்
பாலுடன் பொரிமாவதும்
பற்படக நன்னாரி பச்சைப் பயற்று நீர்
பருநிலக் குமிழ் வேரதுங்
கொச்சைமுந் திரிகையும் பேரீந்து முத்தமுங்
கொத்துமல் லிகைசந் தனமுங்
குளிர்ந்ததண் ணீரதுஞ் செந்தேனு மாகவே
குறித்தநன்னிலவேம் பதும்
மிச்சமாய் நீருண்ட தண்ணீர்மிட் டானதும்
மேவுநற் செங்கரும்பும்
வேகமே லதுகொண்டு தாகமாய்த் தோன்றி
விதாகநோய் ஹரங்க ளாமே.

அதிமதுரம், இருவேலி, விலாமிச்சு வேர், மாதுளம் பழம், இலுப்பைப்பூ, நெல்லிக்காய், பேய்ப்புடல், இளநீர், சீனி, பச்சைக் கற்பூரம், சீந்தில் கொடி,

நெற்பொரி, பால், பொரிமாவு, பற்பாடகம், நன்னாரி வேர், பச்சைப்பயற்று நீர், நிலக்குமிழ் வேர், முந்திரிகை, பேரீந்து, முத்து, கொத்துமல்லி, சந்தனம், குளிர்ந்த தண்ணீர், செந்தேன், நிலவேம்பு, தண்ணீர் விட்டான் கிழங்கு, செங்கரும்பு இவை யாவும் தாகரோக நிவாரணி யாம்.

16. நண்டுவளைத் தண்ணீர்:-

வாந்தி, தாகம், விக்கல் இவற்றைப் போக்கு மென்பதையும் அறிக.

17. கண்டாவிழ்தம் :- (Refer to under விக்கல் நோய்)

இதனை நாவில் அடிக்கடி தடவி வர சப்த தோடங்கள், பதிமூன்று சன்னி, நாவறட்சி, நாவழுவழுப்பு, நாக்கறுப்பு, நாமுள்ளு, தாகம், சுகசன்னி, வாந்தி, அசாத்திய விக்கல், வாதம் முதலியன குணமாகும்.

18. நன்னாரி மணப்பாகு:-

இரண்டு தோலா எடை மணப்பாகும் நான்கு தோலா எடை தண்ணீரும் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வர மேகநீர், கை காலெரிவு, கண்ணெரிவு, நாவறட்சி, தாகம் இவை தீரும். தேகங் குளிரும்.

செய்முறை:-

37 1/2 ரூபாயெடை நன்னாரி வேரை இடித்து 1 ½ படி தண்ணீரில் ஆறு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி முக்காற் படியாக வற்றவைத்து வடிகட்டி 37 ½ ரூபாயெடை சீனி கரைத்து பாகு பதமாய்க் காய்ச்சி இறக்கவும்.

14. செரியாமை

பரிகாரம்

இந்நோயில் பெரும்பாலும் வளி அழல் அல்லது அழல் வளிக் கலப்புக் குற்றங்கள் காரணமாக இருக்கும். அத்துடன் மேல் நோக்குங்கால், கீழ்நோக்குங்கால், நடுக்கால் இவைகளும் கேடடையும். இவற்றைத் தன்னிலைப்படுத்துவதும் உணவாதிச் செயல்களை ஒழுங்குபடுத்துவதும் நமது கடமையாகும்.

1. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்:-

இதனைத் திரிகடியளவு காலை, மாலை தேன் அல்லது நெய்யில் கொள்ள உட்டிணநோய், சூலை, பித்தவாயு, கபநோய், பொருமல், செரியாமை, மயக்கம், அத்திசுரம், வெட்டை, மூலவாய்வு முதலியன தீரும். (சி. வை. திரட்டு)

2. அட்ட தீபாக்கினிச் சூரணம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம் இவை வகைக்குச் சம அளவாக எடுத்து காயம், இந்துப்பு நீங்கலாக மற்றவைகளை இளவறுப்பாய்வறுத்து, பெருங்காயத்தைப் பொரித்தும், இந்துப்பைப் பொடித்தும் ஒன்றாய்ச் சேர்த்து கல்லுரலிலிட்டு நன்றாய் இடித்து வஸ்திரகாயம் செய்து ஒரு மட்குடுவையில் பத்திரப்படுத்துக.

அளவு:- வேளைக்குத் திரிகடிப் பிரமாணம் சாப்பாட்டு வேளையில் சிறிது அன்னத்துடன் கலந்து நெய் விட்டுப் பிசைந்து முதலில் இதனை உண்டு பிறகு வழக்கம் போல சாப்பிட்டு வர நன்றாய்ச் சீரணமாகும். வயிற்றிலுண்டாகும் வாயுக்களைப் பரிகரிக்கும். குன்ம நோயின் முதற்குறியாகிய அசீரணத்தைப் போக்கும். இதனை அன்னப்பொடி எனவும் கூறுவர். மோரில் அனுபானித்தும் இதனைச் சாப்பிடலாம். (சிகிச்சாரத்ன தீபம்.

3. இந்துப்புச் சூரணம்:-

இந்துப்பு	பலம்	1
சீரகம்	பலம்	3
சுக்கு	பலம்	5
ஓமம்	பலம்	2
திப்பிலி	பலம்	4
கடுக்காய்	பலம்	15

இங்குக் கூறப்பட்ட 6 சரக்குகளில் இந்துப்பு தவிர மற்றவைகளைப் பொன்மேனியாக வறுத்து இந்துப்புடன் சேர்த்து கல்லுரலிலிடித்து வஸ்திரகாயஞ்செய்து ஒரு புது மட்குடத்திலிட்டு வைத்துக் கொள்க.

அளவு:-திரிகடிப் பிரமாணம் தினம் இருவேளை காலை, மாலை தேனில் கொடுத்துவர ஆகாரம் எளிதில் செரிப்பித்து மலச்சிக்கலையும் போக்கும்.

4. சீரகச் சூரணம்:-

ஐந்து பலம் சீரகத்தை ஒரு பழகின மட்பாண்டத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு மூழ்க விட்டு ரவியில் உலர்த்தவும். இப்படி மூன்று முறை சாறு விட்டு உலர்த்திய பின் கரிசாலை, முசுமுசுக்கை, நெல்லிக்காய், தூதுவளை, வேப்பம்பட்டை, தும்பை இவை ஒவ்வொன்றின் சாற்றையும் முன்போல் மூழ்க விட்டு உலர்த்தி, முடிவில் நன்றாய் இடித்துச் சூரணித்து நான்கிலொரு எடை சீனி சேர்த்து ஒரு புதுக் கலயத்தில் பத்திரப்படுத்துக.

அளவு:- திரிகடியளவு காலை, மாலை தேனில் கொடுக்க கிறுகிறுப்பு, வாந்தி, அரோசகம், அக்கினிமந்தம், செரியாமை, தேக காங்கை இவை தீரும்.

(சிகிச்சாரத்ன தீபம்.)

5. பஞ்சதீபாக்கினி இலேகியம்:-

ஒரு பாக்களவு காலை, மாலை சாப்பிட்டுவர வாய்வு, வாதம் உஷ்ணம், பித்தவாயு, உடல் உளைவு, உடற்குத்து, வலி, கடுப்பு, எரிச்சல், பேதி, பொருமல், வாத கிரகணி, அஸ்தி சுரம், அஸ்தி வெட்டை, வாந்தி, அசீரணம் யாவும் தீரும். (சி.வைத். திரட்டு)

6. இஞ்சி இலேகியம்:-

இஞ்சி	பலம்	5
தாளிசபத்திரி	பலம்	1
எலுமிச்சம்பழம்	பலம்	10
நெல்லிக்காய்	படி-	½
சீரகம்	பலம்	1
கிராம்பு	பலம்	1
தேன்	பலம்	5
நாட்டுச் சர்க்கரை	பலம்	5

இம்முறையைச் செய்வதற்கு முன்னதாக ஒரு கோப்பையில் எலுமிச்சம்பழச்சாறு விட்டு அதனில் சீரகத்தைப் போட்டு ரவியில் வைத்து உலர்த்தியபின் அதனை இடித்து வைத்துக்கொண்டு, அப்பால் நெல்லிக்காயை உரலிலிடித்து கொட்டைகளையெல்லாம் நீக்கிச் சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ளவும். பிறகு இஞ்சியின் மேல் தோல் போக்கிச் சிறு துண்டுகளாக நறுக்கி எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு, மிகுதியுள்ள தாளீசம், கிராம்பு இவ்விரண்டு சூரணங்களையும் கூட்டி ஒருமிக்கக் கலந்து தேனையும், சர்க்கரையையும் கொஞ்சங் கொஞ்சமாக விட்டரைத்து ரவியில் வைத்துப் பதமாக்கவும்.

அளவு:- வேளைக்கு சிறு சுண்டைக்காயளவு அன்னம் புசிப்பதற்கு முன் தினம் அந்தி, சந்தி சாப்பிட்டுவர சீரண சக்தியை உண்டாக்குவதுடன் பித்த சம்பந்தமான ஓக்காளம், வாந்தி, செரியாமை, வயிற்றுவலி,

மார்பெரிச்சல் இவை நிவர்த்தியாகும். இதனை **"போஜனக் குறடா"** என்றும் சொல்லுவர்.

7. மகா வில்வாதி இலேகியம்:-

ஒரு பாக்களவு காலை, மாலை சாப்பிட்டுவர ♨ ரோசகம், சத்தி, வீக்கம், பாண்டு, விடப்பாண்டு, வயிற்றெரிவு, வயிற்றுபபிசம், கிராணி, கைகாலெரிவு, காந்தல், அன்னத்துவேசம், செரியாமை, அதிசாரம், பித்தம் 40, சயகாசம் யாவும் தீரும். (சிகிச்சாரத்னதீபம்.)

8. சௌபாக்கிய சுண்டி:-

ஆவின்பால்	படி-	2
சர்க்கரை	வீசை-	½
சுக்கு	பலம்	8
வாலுளுவையரிசி	பலம்	1
ஓமம்	பலம்	1
வாய்விடங்கம்	பலம்	1
திப்பிலி	பலம்	1
மிளகு	பலம்	1
ஏலம்	பலம்	1
கரிசாலை	பலம்	1
சதகுப்பை	பலம்	1
தனியா	பலம்	1

இப்பன்னிரண்டு சரக்குகளில் முதலில் ஒரு இரும்புக் கடாவில் ஆவின்பால் விட்டு அடுப்பேற்றி வெள்ளைச் சர்க்கரையைச் சுத்தப்படுத்தி அதில் போட்டு சிறு தீயாக எரித்துப் பாகு பதத்தில் மற்ற சரக்குகளின் சூரணத்தைத் தூவிக்கிண்டி இலேகிய பதத்திற்குத் தக்கபடி நெய், தேன் விட்டுப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- சுண்டைக்காயளவு இலேகியம் காலை, மாலை சாப்பிட்டு வரகுன்மம், வலி, சூதக வாயு, வயிற்றுப்பிசம், அசீரணம் இவை குணமாகும்.

9. கேசரி இலேகியம்:-

1முதல் 2 வராகனெடை அளவு காலை, மாலை சாப்பிட்டு வர பித்தம், பித்தா சீரணம், அன்ன வெறுப்பு, அசீரண பேதி, பித்த வாயு, வயிற்று வலி, இவை குணமாகும். (சி.வை. திரட்டு)

10. தயிர்ச் சுண்டிச் சூரணம்:-

இதில் மூன்று விரல் அளவு காலை, மாலை வெந்நீரில் கொள்ள அசீரண பேதி தீரும்.

11. கண்டாத்திரி சூரணம்:- ஏட்டுப்பிரதி.

தோல் சீவிய இஞ்சி பலம் 3 சிறு துண்டுகளாக நறுக்கிநெய் விட்டு வறுத்து அத்துடன்1 மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் 3திப்பிலி மூலம் பலம் 1 ஏலரிசி பலம் 2சுக்கு, சாதிக்காய், சாதிப் பத்திரி, சடாமாஞ்சில், சீரகம்இவை வகைக்குப் பலம் 2 கோட்டம் பலம்1 சிறுநாகப்பூ, இலவங்கம், இலவங்கப்பத்திரி, வெட்டிவேர் தாளிசம் இவை வகைக்கு பலம்1சர்க்கரை பலம்10

இவற்றை முறைப்படி பொடித்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு திரிகடி அளவு காலை, மாலை தேனில் சாப்பிட்டுவர 5 முதல் 7 நாட்களில் அசீரணம், பக்க வாயு, சூசிகாவாயு, குலை எரிச்சல் முதலியவை குணமாகும்.

12. புதினா மாத்திரை:- ஏட்டுப்பிரதி.

கறியுப்பு, சோம்பு, மிளகு, சீரகம், சுக்கு, இஞ்சி இவை வகைக்குப் பலம் ½, புதினாயிலை பலம் ¼ இவற்றை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வேளைக்கு ஒரு மாத்திரையைப் பொடித்து வாயிலிட்டு வெந்நீருண்டால் அசீரணம், வாந்தி, அசீரண பேதி குணமாகும். காலை, மாலை 5 நாட்கள் சாப்பிடக் குணமாகும்.

13. தீபாக்கினிச் சூரணம்:- (சி. வைத். திரட்டு).

இதில் திரிகடியளவு காலை, மாலை தேனில் கொடுக்க அசீரணம் போம், கயம், காசம், குன்மம், கிராணி, மூலம் இவைகளும் குணம் அடையும். .

14. மந்தாக்கினி ஹரம்:- (சதகலோகம்)

"சாற்றின ரதிசாரத்திற் றாவிய மருந்தி னோடு
மாற்றிய கிராணி காண வகையுள்ள திரவி யங்கள்
ஏற்றமா யீதிரண்டு மியல்மந்தாக் கினிக்கு மாகுந்
தோற்றமாய் முனிவன்சொன்ன துய்யநல் லரங்க ளாமே."

அதிசார நோயிலும், கிராணி நோயிலும் கூறப்பட்ட சரக்குகள் யாவும் மந்தாக்கினி என்ற செரியாமைக்குப் பயன்படுமெனக் கூறியுள்ளார்.

15. அதிசார ஹரங்களாவன:-

"வட்டத்தி ருப்பியும் வெட் பாலையின் வித்து
மாம்பருப் பொடுபட்டையும்
வறட்சுண்டி புளியதின் வித்துவேர் புறணியும்
வரப்பினிலப் பூலாவதும்
மாதுளங் காயது வில்லையி னிளங்காயும்
வன்னிளந் தும்பியின்காய்
வாழைதென் னம்பூவு மாத்தியின் பூவதும்
வாசல வங்கப்பூவதும்

விட்டக் கொடிக்கழல் வித்துநீர்ப் பூலாவு
மேவுநீர் முள்ளிவித்தும்
வெட்டிவேர் பாலையின் பட்டைசா திக்காயும்
விடத்தேரி யானவிலையும்
வேங்கையின் பட்டையும் நெற்பொரியு மாகவே
மேவுமஞ்சிலை துளிரதும்
வெள்ளறுகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவுதிப் பிலிலோத்திரந்

தொட்டக்க ருங்காலி நாவலின் பட்டையுந்
துளிருடன் கடுக்காயதுந்
தோதுசிறு காஞ்சோரி பெருமரப் பட்டையுஞ்
சுக்குமில வம்பிசினதுந்
துய்யபால் நல்லெண்ணெய் முத்தமச மோதகஞ்
சொற்கடப் பன்பட்டையுந்
துலங்குகீழ் காய்நெல்லி வெட்பா லையின்பட்டை
துய்யவெண் குங்கில்யமும்

அட்டதிக் கெங்குமிகு சித்தர்களு மெச்சிமகி
ழுருஞ்சடைக் கஞ்சாவதும்
ஆவாரை யின்பட்டை நெய்யுடன் செந்தேனு
மாவிநற் றயிரானதும்
அதிவிடய முந்தில்லை வெள்ளாட்டுத் தயிருடன்
ஆனதோர் வகையிதெல்லாம்
அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார ஹரங்களாமே."

வட்டத்திருப்பி, வெட்பாலை வித்து, மாம்பருப்பு, மாமரப் பட்டை, வறட்சுண்டி, புளியின் வித்து, புளியின் வேர், புளியம் புறணி, நிலப்பூலா, மாதுளங்காய், வில்வப்பிஞ்சு, வன்னிளந் தும்பியின் காய், வாழைப் பூ, தென்னம் பூ, ஆத்தியின் பூ, இலவங்கப் பூ, கொடிக்கழல் வித்து, நீர்ப்பூலா, நீர்முள்ளி வித்து, வெட்டிவேர், பாலையின் பட்டை, சாதிக்காய், விடத்தேரிலை, வேங்கை மரப்பட்டை, நெற்பொரி, அஞ்சிலைத் துளிர், வெள்ளறுகு வித்து, சீரகம், பேரீந்து, திப்பிலி, வெள்ளிலோத்திரம், கருங்காலி, நாவற்பட்டை, நாவலின் துளிர், கடுக்காய், சிறுகாஞ்சொறி, பெருமரப்பட்டை, சுக்கு, இலவம்பிசின், பால், நல்லெண்ணெய், முத்து, ஓமம், கடப்பமரப்பட்டை, கீழ்க்காய்நெல்லி, வெட்பாலைப்பட்டை, வெண்குங்கில்யம், சடைக் கஞ்சா, ஆவாரைப்பட்டை, நெய், செந்தேன், பசுவின் தயிர், அதிவிடயம், தில்லை, வெள்ளாட்டுத் தயிர் ஆகிய இவையாவும் அதிசார நோயின் நிவாரணி, ஆதலால் மந்தாக்கினி என்ற செரியாமைக்கும் பயன்படுத்தலாமென்கிறார்.

16. கிராணி ஹரங்களாவன:-

"ஆயிலும் புங்கு பொடுதலைக் காயு
மழிஞ்சியுங் குழம்புமோர் வசம்பும்

அதிநவச் சாரஞ்சத் தியின்சார
மாகிய நல்லவச் சாரந்
தீயிலும் பெரிய சித்திர மூலந்
திரிகடு சிறிய மூலகமுஞ்
செவ்வியம் பற்பாட கங்கரு வேம்பு
சீரகங் காயமுக் கரட்டை
பாயிலு முட்கா வேளைகா வட்டம்
பருகிய புல்லுநல் வேளை
பகர்புளி யாரையிந்து கல்லுப்பு
பாகுகாய்ச் சுப்புபொட் டிலுப்பு
சாயினுங் கருத்த வுப்பு சாரணையுஞ்"
சாருமா வாரைதக் கோலந்
தாவுவெங் காரமாரை யினிலையுஞ்
சாற்றினர் கிராணியின் ஹரமே.

ஆயில் வேர், புங்கு, பொடுதலைக் காய், அழிஞ்சி, குழம்பு மோர், வசம்பு, நவச்சாரம், சத்திச்சாரம், எவச்சாரம், சித்திர மூலம், திரிகடுகு, சிறுமூலம், செவ்வியம், பற்பாடகம், கருவேப்பிலை, சீரகம், பெருங்காயம், மூக்கரட்டை, முட்காவேளை, காவட்டம்புல், நல்வேளை, புளியாரை, இந்துப்பு, கல்லுப்பு, காய்ச்சுப்பு, பொட்டிலுப்பு, கருத்தவுப்பு, சாரணை, ஆவாரைவேர், தக்கோலம், வெண்காரம், ஆரையிலை ஆகிய இவையாவும், கிராணி நோயைப் போக்கும் சரக்குகளாம். ஆதலால் மந்தாக்கினி நோய்க்கும் உபயோகமாகுமென்கிறார்.

17. மந்தவாயுச் சூரணம் அல்லது வாயுச்சூரணம் (Traditional)

வறுத்திடித்த சீரகச் சூரணம், வறுத்திடித்த ஏலக்காயரிசிச் சூரணம், நயம் பச்சைக் கற்பூரம் இம் மூன்று சரக்குகளையும், சமன் எடை ஒரு பங்கு வீதம் எடுத்து ஒன்றாய்க் கலந்து அத்துடன் கரும்புச் சர்க்கரை மூன்று பங்கு சேர்த்து வைத்துக்கொண்டு திரிகடியளவு காலை, மாலை தேனில் கொள்ள செரியாமை, அசீரணம், வயிற்றுப் பொருமல்,வயிற்றுவலி, மந்தவாயு, இரத்த அழுத்தம், அரோசகம், வாந்தி இவை குணமாகும். பசி தீபனம் உண்டாகும்.

1.PANCHA DEEPAGNI CHURNAM NO III (TRADITIONAL)

(S.R. Pharma)

1.Chukku churnam	
2.Milaku churnam	
3.Thippili churnam	
4.Kothamalli churnam	of each 6 tolas
5.Elarisi churnam	
6.Cheena karkandu	30 Tolas

To be mixed well

The above may be used as churnam in a dose of 1/4 to 1/2 teaspoonful or 15 to 30 Grains B.D. with honey or the above compound churnam may be mixed with pure Honey into a Lehiyam and taken in a dose of 1/4 to 1/2 tola B.D. Better to prepare the Karkandu into a suitable syrup the churnam be mixed in it and the Honey added when it is cooled in the end.

Uses:- Pithavayu, Indigestion, Vandhi and Eructations etc, are relieved.

15. விக்கல் நோய்

பரிகாரம்

இந்நோயில் வாயுவானது குளிர்ச்சிப் பொருட்களால் கனவாயுவாகக் குளிர்ந்து ஐயத்தை மிகுதிப்படுத்தி விக்கல் நோயை விளைவிக்கும். மிகுதியடைந்த ஐயத்தையும், வாயுவையும் தன்னிலைப்படுத்துதல் வேண்டும். அன்றியும் விக்கல் நோய் வேறு பல நோய்களுக்குத் துணை நோயாகவரின் முதலில் ஏற்பட்ட நோய்க்கும், விக்கலுக்கும் சேர்ந்து பரிகாரம் செய்தல் வேண்டும்.

1. முக்குற்ற நோய்
2. நீர்வேட்கை
3. பசியால் வாடினோர்
4. நீரிழிவு

ஆகிய நோய்களில் விக்கல் வருவதுமுண்டு.

1. மயிலிறகாதிச் சூரணம்:-

திரிகடியளவு தினம் 2,3 வேளை தேனிற் கொடுக்க விக்கல் தீரும். (சி. வை. திரட்டு)

2. மயிலிறகாதிச் சூரணம் எண் 2 (S.R Pharma):-

திப்பிலி வறுத்திடித்த சூரணம்	8 பங்கு
சீரகம் வறுத்திடித்த சூரணம்	10 பங்கு
மயிலிறகு சுட்டுக் கருக்கிச் சாம்பலாக்கியது	4 ½ பங்கு
பட்டுக்கூண்டு வறுத்துக் கருக்கிச் சாம்பலானது	4 ½ பங்கு

இந்த நான்கு சரக்குகளையும் ஒன்றாய் கலந்து புட்டியிலடைக்கவும்.

அளவு:- 5 முதல் 15 கிரெயின் வீதம் தினம் 3 வேளை தேனில் கொள்ள விக்கல் விரைவில் குணமாகும். கைகண்ட மருந்து.

3. நண்டுவளைத் தண்ணீர்: இதனை அடிக்கடி சிறுகச் சிறுகக் கொடுத்துவர வாந்தி, தாகம், விக்கல் இவை குணமாகும். (பதார்த்த குண சிந்தாமணி)

4. நயம் கத்தூரி:- அரிசி எடை எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்து மென்று தின்ன விக்கல் நிற்கும்.

5. வசந்தகுசுமாகரம் அல்லது மகா வசந்தகுசுமாகரம்:-

மாத்திரை ஒன்றை வெற்றிலை மிளகு, திப்பிலி, அக்கிராகாரம், அதிமதுரம், கோஷ்டம் இவை சேர்ந்த குடிநீரில் அல்லது ருமஸ்தகி, இலவங்கப் பட்டை இவை சேர்ந்த குடிநீரில் அனுபானித்துக் காலை, மாலை கொடுக்க விக்கல் குணமாகும்.

6. சாதிசம்பீரக் குழம்பு:- ஒரு குன்றி எடை நாவில் தடவிச் சப்பிச்சாப்பிட வாந்தி, விக்கல், நாவறட்சி, அரோசகம் யாவும் குணமாம்.

7. தாமரைவித்துப் பருப்பு நெ. 5, அரக்குக் குளவிக்கூண்டு மண் சம எடை சேர்த்து வெந்நீர் விட்டு அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க அல்லது பசும்பாலில் கலக்கிக் கொடுக்க விக்கல் நிற்கும். தினம் 3,4 வேளை மூன்று நாட்கள் கொடுக்க குணமாகும். (அகத்தியர் 1600 ஏடு.)

8. குரு பற்பம் (ஏடு- Traditional):-

"செருப்பின் தோலு மிளகும் தழல்தனில்
கருக்கித் தேனில் கலந்து நக்கிட
செருக்கி விக்கலுஞ் செய்திடும் வாந்தியும்
நிறுத்திப் போடும் நிமிடத்தில் கண்டிடே"

என்பதனால் பழைய செருப்புத் தோலைச் சிறு துண்டுகளாக்கி சமம் மிளகு சேர்த்துச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்துக் கருக்கிச் சாம்பலாக்கி

வைத்துக் கொண்டு 2 சிட்டிகை வீதம் தேனில் குழப்பி நக்கிட விக்கல், வாந்தி இவை தீரும். தினம் 3, 4 வேளை கொடுக்கலாம்.

9. விக்கலுக்குத் திராட்சைக் குடிநீர்:-

(Dr. M.S. Velu's own experiencc in Persistent Hiccup with complications.)

மல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டதிப்பிலி, சிற்றரத்தை, தாளிசம், சீரகம், ஏலரிசி, இவை வகைக்கு ¼ பலம், அங்கூர் திராட்சை பலம் 2 (விதை, காம்பு நீக்கிச் சேர்க்கவும்). தண்ணீர் ஒரு படி (Madras Measure) விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி காலை, மாலை வீசம் படி கஷாயம் வீதம் கொடுத்து வர தீராத விக்கலும் மூன்று நாட்களில் குணமாகும். (In addition "Luminol" ½ tablet once a day by mouth gives very good results)

10. விக்கல் நிவாரணி:-(வேறு)

விதைக் கரும்புச் சாறுடன் எலுமிச்சம் பழச்சாறு சிறிது கலந்து தினம் 3,4 முறை கொடுக்க விக்கல், வாந்தி, கிறுகிறுப்பு குணமாகும்.

11. விக்கல் நிவாரணி:-(வேறு)

துத்திவேர், அரசங்கொழுந்து, நெல்லி வற்றல் இவை வகைக்கு ஒரு பலம், பேரீச்சம்பழம் 2 ½ பலம், திப்பிலி ½ பலம், ஏலரிசி ¼ பலம், நெற்பொரி 1/8 படி, தண்ணீர் ஒரு படி (Madras Measure) விட்டுக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி வேளைக்கு வீசம் படியளவு கஷாயம் ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுத்து வர விக்கல் தீரும்.(Traditional)

12. விக்கல் நிவாரணி:-(வேறு)

1.திப்பிலி	3 வ ராகனெடை
2.ஏலரிசி	1 ½ வராகனெடை
3.பழைய செருப்புத் தோல்	5 வராகனெடை
4.மயிலிறகுத் தட்டை	5 வராகனெடை

5.எலுமிச்சம் பழம் ஒன்று அல்லது இரண்டு

இவற்றுள் செருப்புத் தோலையும் மயிலிறகுத் தட்டையையும் கருக்கிச் சாம்பலாக்கியும், திப்பிலி, ஏலரிசி, இரண்டையும் வறுத்துப் பொடித்தும், எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து எலுமிச்சம் பழம் சாறு பிழிந்து அதில் விட்டு தேனும் சிறிது சேர்த்து வைத்துக் கொண்டு அடிக்கடி நாவில் தடவி வர விக்கல் நிற்கும்.

13. விக்கல் நிவாரணி:-(வேறு)

கற்கடக சிங்கி, சடாமாஞ்சில், சிறுதேக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, பூசணிப் பருப்பு இவை வகைக்குச் சமம் சூரணம் எடுத்துக் கலந்து வைத்துக் கொண்டு, அதற்குச் சம எடை சர்க்கரை கலந்து காலை, மாலை தேனில் கொடுக்க விக்கல் நிற்கும்.

14. விக்கல் லேகியம்:- (ஏடு: Traditional)

நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி, வறுத்திடித்த பொடி, சிற்றரத்தை இடித்த பொடி வகைக்கு ஒரு பலம், அங்கூர் திராட்சை விதை, காம்பு நீக்கி 2பலம், இலவங்கம், அக்கிராகாரம் இவற்றின் பொடி வகைக்கு ஒரு பலம், நயம் தேன் ¼ படி இவற்றுள் சூரணங்களையும் சர்க்கரையையும் ஒன்றாய்க் கலந்து தேன் விட்டுப் பிசைந்து எடுத்து வைக்கவும். நெய் சேர்க்கிறதில்லை.

அளவு:- கழற்சிக் காயளவு தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர விக்கல் குணமாகும். இதனைச் சூரணமாகக் கலந்து வைத்துக் கொண்டு தேன் விட்டுக் குழப்பிச் சாப்பிடலாம்.

15. விக்கல் நோய் தீர தாமரை வித்து இலேகியம்:-

பேரீச்சம்பழம்	பலம் 1 (3தோலா)
அங்கூர் திராட்சை	பலம் 1 (3 தோலா)
கற்கண்டு	பலம்2 (6 தோலா)
தேன்	அவுன்சு 4
சாதிக்காய்	தோலா 1

சாதிப் பத்திரி	தோலா 1
ஏலம்	தோலா 1
கிராம்பு	தோலா 1
வால்மிளகு	தோலா 1
கசகசா	தோலா 1
திப்பிலி	தோலா 1
தாமரை விதைப்பருப்பு	பலம் 2 (6 தோலா)
பசுநெய்	அவுன்சு 8
பாதாம் பருப்பு	பலம் 1 (3 தோலா)
பசுவின் பால்	படி (2 பவுண்டு)

செய்முறை:-

பழங்கள், கசகசா, பருப்பு இவையாவும், நெய் தெளித்து வறுத்து அரைத்து நுணுக்கி வைத்துக் கொண்டு, மற்ற சரக்குகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து வைத்துக் கொண்டு, பாலில் கற்கண்டைப் பொடித்துக் கரைத்துப் பாகு செய்து சூரணங்களைத் தூவிக்கிளறி நெய் சேர்த்து இறக்கவும். ஆறிய பின் தேன் சேர்த்துக் கிளறி ஜாடியில் வைக்கவும்.

அளவு:- நெல்லிக்காயளவு காலை, மாலை அல்லது தினம் 3 வேளை சாப்பிட்டு வர எப்படிப் பட்ட கொடிய விக்கலும் குணமாகும். (Manuscript)

16. விக்கல் நிவாரணி:-(வேறு)

அரிசித்திப்பிலி, கருஞ்சீரகம், மயிலிறகுத் தட்டை இம் மூன்றும் சமன் எடை எடுத்து சட்டியிலிட்டு வெளுக்கும் வரை வறுத்து சாம்பலாக்கிப் பொடித்துத் தேனில் குழப்பி வைத்துக்கொண்டு நாவில் அடிக்கடி தடவி வர விக்கல் நின்று விடும்.

17. விக்கல் நிவாரணி:-(வேறு)

மயிலிறகு, சீரகம், மான்கொம்பு, ஏலக்காய் விதை,தாளிசம்,

எலுமிச்சம் பழத்தோல், நெற்பொரி இவை யாவும் வகைக்குச் சமஎடை எடுத்துப் பொடித்து ஒரு கருப்புப் பட்டுத்துணியில் வைத்துப் பந்து போல் சுருட்டித் தேனில் தேய்த்து ஒரு வாயகன்ற மட்சட்டியில் வைத்துஅடுப்பேற்றி எரித்து நன்றாய்த் தீப்பற்றி எரிந்து அமர்ந்து கரியாக நின்றவுடன் அதனைக் கல்வத்திலிட்டு மீண்டும் தேன் விட்டு அரைத்து எடுத்து வைத்துக் கொண்டு நாவில் அடிக்கடி தடவி வர விக்கல் தீரும்

18. விக்கல் நிவாரணி:-(ஆத்ம ரச்சாமிர்தம்.)

கிராம்பு, ஏலம், சீரகம் இம் மூன்றையும் தனித்தனி இளவறுப் பாய் வறுத்துப் பொடித்து சமன் எடையாக நிறுத்தெடுத்து அத்துடன் மயிலிறகுத் தட்டை சுட்ட சாம்பல் மூன்றிலொரு பங்கு சேர்த்து வைத்துக் கொண்டு திரிகடியளவு தினம் 2,3 வேளை தேனில் கொள்ள விக்கல் தீரும்.

19. விக்கல் நிவாரணி:-(வேறு)

சாம்பிராணி, நல்ல வெல்லம் இவ்விரண்டும் சம எடை எடுத்துக் கல்வத்திலரைத்து மெழுகு பதத்தில் வழித்து வைத்துக் கொண்டு தூதுளங்காய் அளவு மூன்று மணிக்கொரு தடவை தேனில் கொடுக்க விக்கல் குணமாகும். (வைத்திய சிந்தாமணி).

20. விக்கல் நிவாரணி:-(வேறு)

பழைய செருப்புத்தோல், பாக்கு, திப்பிலி, மிளகு இவற்றைப் பொடித்துச் சமன் எடை ஒரு சட்டியிலிட்டு வறுத்துக் கருக்கிச் சாம்பலாக்கி தேன் விட்டுக் கல்வத்தில் அரைத்து வைத்துக் கொண்டு அடிக்கடி நாவில் தடவிச்சப்பிச் சாப்பிட்டுவர (15 நிமிடங்களுக்கொரு முறை நாவில் தடவ) விக்கல் குணமாகும்.

21. கெட்டியான கரும்புச் சர்க்கரைத் துண்டை அண்ணாக்கடியில் நனைத்து வாயில் ஒதுக்கிக் கொள்ள விக்கல் நிற்கும்.

22. பழைய செருப்புத் தோலைச் சுட்டு, சாம்பலாக்கி அதில் சிறிது எடுத்துத் தேனில் குழப்பி அடிக்கடி நாவில் தடவிச் சாப்பிட விக்கல் தீரும்.

23. விக்கல் நிவாரணி:- (வேறு ஏடு)

சாம்பிராணியைப் பொடித்துக் கரும்பு ரசம் விட்டரைத்து மெழுகு பதத்தில் வழித்து வைத்துக் கொண்டு அடிக்கடி நுனிநாவில் தடவ உடனே விக்கல் நிற்கும்.

24. விக்கல் நிவாரணி:- (வேறு ஏடு)

மயிலிறகு சுட்ட சாம்பல், அதிமதுரம், திப்பிலி இவற்றைப் பொடித்துச் சம எடை எடுத்துக் கல்வத்திலிட்டு, நண்டு வளைத் தண்ணீர் வார்த்தரைத்து, அத்துடன் சர்க்கரையும் தேனும் கலந்து வைத்துக் கொண்டு அடிக்கடி நாவில் தடவிவர விக்கல் குணமாகும்.

25. விக்கல் நிவாரணி:- (வேறு ஏடு)

மல்லி, அதிமதுரம், விலாமிச்சு வேர், செவ்வியம், மாகாணிக்கிழங்கு, வில்வவேர், இவை யாவும் சம எடை கூட்டிப் பொடித்துக் கல்வத்திலிட்டு நண்டுவளைத் தண்ணீர் வார்த்தரைத்து மேற்கொண்டும் நண்டுவளைத் தண்ணீரில் கலக்கிக் கொடுக்க வாந்தி, தாகம், விக்கல் யாவும் குணமாகும்.

26. விக்கல் நிவாரணி:- (வேறு ஏடு)

திரிகடுகு, கடுக்காய்த் தோல், சர்க்கரை, வெண்காரம் இவையாவும் சம எடை எடுத்துப் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து சிறிது தேனுங் கலந்து வைத்துக் கொண்டு அடிக்கடி நாவில் தடவி வர விக்கல் குணமாகும்.

27. விக்கல் நிவாரணி:- (வேறு ஏடு)

ஏலம், இலவங்கம், பத்திரி, சிறுநாகப்பூ, வில்வப்பழச் சதை, நெற்பொரி, முத்தக்காசு, சந்தனம், முடக்கொற்றான் கொழுந்து இவை சம எடை எடுத்துப் பொடி பண்ணி சர்க்கரையும் தேனும் விட்டுக் குழப்பி வைத்துக் கொண்டு நாவில் தடவி வர விக்கல் குணமாகும்.

28. விக்கல் நிவாரணி:-(வேறு)

பூவரசம் பட்டைத் தூளை மஞ்சளுடன் தேன் விட்டுக் குழப்பி தினம் 2, 3 முறை விழுங்க விக்கல் தீரும். (ஏடு).

29. விக்கல் தீரக் குடிநீர்:-(ஏடு)

நாயுருவி சுட்ட சாம்பல், வாழைச் சருகு சுட்ட சாம்பல், மயிலிறகுத் தட்டை சுட்ட சாம்பல், பூநாகம் வறுத்துச் சாம்பலாக்கியது இவை யாவும் வகைக்கு ஒருபலம் எடுத்துச் சட்டியிலிட்டுத் தண்ணீர் ஒரு படி (Madras Measure) விட்டு நான்கிலொன்றாய் காய்ச்சித் தக்க அளவில் தினம் 3, 4 முறை கொடுத்து வர சீதளந்தா லேற்பட்ட தாகம், விக்கல், வாந்தி. நாவறட்சி, நாவின் சுரசுரப்பு, நாக்கருப்பு இவை குணமாகும்.

30. விக்கல் நிவாரணி: - (ஆத்ம ரக்ஷாமிர்தம்)

தேற்றான்விதை, சந்தனம், கலைமான் கொம்பு இம்மூன்றும் சம ன் எடை எடுத்துப் பொடித்து முலைப்பால் வார்த்தரைத்துக் கொட்டைப்பாக்களவு எடுத்து இளநீரில் கலக்கி ½ வராகனெடைபொரித்த வெண்காரமும், வெல்லமும் சேர்த்து தினம் 2, 3 வேளை கொடுக்க விக்கல் குணமாகும்.

31. விளாம்பழத்தின் ஓடு சுட்டு கருக்கிய சாம்பல்:-

சிறிதளவு தேனில் குழப்பி தினம் 3, 4வேளை கொடுக்க விக்கல் தீரும்.

32. Special Camphor in oil:-

3 grains I.C.C by Hypodermic injection has given very good results in persistent Hiccup.

33. விக்கலுக்குப் புகை பிடித்தல்:-(புலிப்பாணி 500)

சந்தனக் கட்டைத்தூள், நயம் சாம்பிராணித் தூள் இவை இரண்டும் சமம் கலந்து ஒரு காகிதத்தில் வைத்துச் சுருட்டி சுருட்டுப் போல் புகை பிடித்தால் விக்கல் குணமாகும்.

34. விக்கலுக்கு முகர்ந்து பார்க்க:-(Smelling ஏடு)

நயம் ஏலக்காயரிசி பொடி செய்து ஒரு துணியில் கிழியாகக் கட்டி அன்னக்காடிநீரில். தோய்த்து அடிக்கடி முகர்ந்து பார்க்க விக்கல் நிற்கும். (i.e.by smelling the bundle of Elarisi powder dipped in Annakatijalam.)

35. புளியைச் சுட்டு முகர்ந்து பார்க்க விக்கல் நிற்கும்

36. விக்கலுக்கு நசியம்:- (ஏடு)

இந்துப்பு பொடி செய்து பொட்டணங்கட்டி பசு நெய்யில் ஊறவைத்து மூக்கில் 3, 4 துளிகள் பிழிந்து உறிஞ்சும்படி செய்ய தும்மல் வரும், விக்கல் நின்று போம்.

37. தீராத விக்கலுக்குப் புகை பிடிக்க:- (தேரையர் வைத்தியம் - 1,500)

சந்தனம், சாம்பிராணி, அதிமதுரம், அகிற்கட்டை இவற்றைத் தூள் செய்து ஒரு துணியில் முடிச்சுக்கட்டி புகைய விட்டு புகைபிடிக்க மூன்று தினங்களில் விக்கல் குணமாகும்.

38. விக்கலுக்கு மேற்பூசும் மருந்து:- (ஏடு)

கம்பளி சுட்ட தூள் ஒரு பலம் நிறுத்து, இலந்தை இலையை அரைத்துக் குளிர்ந்த தண்ணீரில் கரைத்து ஒரு தட்டையில் முட்கள் குத்தி சிலுப்பினால் நுரை வரும், இந்த நுரையை வழித்துச் சிற்றாமணக் கெண்ணையும் முன் கூறிய கம்பளி சுட்ட தூளும் சேர்த்து மத்தித்து தொப்புளிலிருந்து தொண்டை வரைக்கும் பூச விக்கல் நீங்கும்.

அல்லது

வில்வ குடுக்கையை முலைப்பாவில் உரைத்து விளக்கெண்ணெய் சேர்த்துக் குழப்பி முன் போல் பூச விக்கல் தீரும்.

ஆகாரம்:-பால் கஞ்சி கொடுக்கவும். விக்கல் நோய் எக்காரணத்தாலுண்டாகியதோ அதற்கேற்றவாறு பத்தியம் வைக்கவும்.

39. விக்கல் குடிநீர்:-(சிகிச்சாரத்ன தீபம்.)

பசு முன்னையிலை, பச்சைப் பயிறு, நெற்பொரி, வில்வயிலை வகைக்கு ஒரு பலம், ஏலம் ¼ பலம், ஒரு பழகிய புதுச் சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு கியாழம் வீதம் ஆறு மணிக்கொரு தடவை கொடுத்து வர விக்கல் நிற்கும்.

40. கத்தூரி மெழுகு:- (விஷவைத்திய சிந்தாமணி)

கத்தூரி	1 பாகம்
பச்சைக் கற்பூரம்	2 பாகம்
கோரோசனை	3 பாகம்
குங்குமப்பூ	4 பாகம்
புனுகு	1/4 பாகம்
சவ்வாது	¼ பாகம்
பூநீக்கிய லவங்கம்	4 பாகம்
வால் மிளகு	4 பாகம்
ஏலக்காயரிசி	8 பாகம்
சிறுலவங்கப் பட்டை	8 பாகம்

இவற்றில் சூரணம் செய்ய வேண்டியவைகளைச் சூரணித்து எல்லாவற்றையும் ஒன்றாய்க் கல்வத்திலிட்டுக் கம்மாறு வெற்றிலைச் சாற்றில் ஒரு சாமம், கற்பூரவல்லிச் சாற்றில் ஒரு சாமம், தூதுவேளைச் சாற்றில் ஒரு சாமம், இஞ்சிச் சாற்றில் ஒரு சாமம், மிளகுக் குடி நீரில் ஒரு சாமம், மஞ்சள் கரிசாலைச் சாற்றில் ஒரு சாமம், இப்படி தனித்தனியே ஒவ்வொரு சாமம் அரைத்துக் கல்வத்துடன் நிழலில் உலர்த்திப் பிறகு சுயம்தேன் விட்டு மெழுகு பதமாய் அரைத்து வழித்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ஒரு பயிறு பிரமாணம் தேனில் குழப்பி தினம் 2, 3 வேளையாக 3, 5 நாட்கள் கொடுக்க சன்னி, சீதளம், சுரம், கபநோய், உப்பிசம், மாந்தம், விக்கல், முகவாத சன்னி, சூதக சன்னி, இருமல், தகை, மாரடைப்பு, நடுக்கு வாதம் முதலிய பெரிய நோய்கள் தீரும்.

41. கண்டாவிழ்தம்:- ஏட்டுப்பிரதி.

(a) நாக பற்பம் அல்லது வெள்வங்க பற்பம், வெள்ளி பற்பம், தங்க பற்பம், முத்து பற்பம், தாம்பிர பற்பம், யானைத் தந்த பற்பம் அல்லது காண்டாமிருகக் கொம்பு பற்பம் (அல்லது உரைப்பு) பவள பற்பம், மான் கொம்பு பற்பம், சுவர்ணவாலை ரச செந்தூரம் இவை யாவும் வகைக்கு ஒரு அரிசி எடை.

(b) இஞ்சி சுக்கு, சிற்றரத்தை, அக்கராகாரம், வில்வ வேர் அல்லது வில்வக் குடுக்கை அதிமதுரம், இலவங்கம், சாதிக்கோட்டம், திப்பிலி, ருத்திராட்சம், மதன காமப்பூ, ஆடாதோடை வேர் இவையாவும் வகைக்கு 4,5 உரைப்பு முலைப்பால் விட்டு உரைத்துச் சேர்க்கவும்.

செய்முறை:-

(a) யில் கூறிய பற்பச் செந்தூரங்கள் கையிருப்பில் இருப்பவைகளை ஒரு அரிசி எடை எடுத்துக் கொண்டும், பற்பச் செந்தூரமில்லாதவற்றிற்கு அசல் உலோகம், கொம்பு இவை சுத்தி செய்திருந்தால் அவற்றையே 4,5 உரைப்பு உரைகல்லில் வைத்து முலைப்பால் விட்டு உரைத்தும் சேர்க்கவும்.

(b)யில் கூறிய தனி மருந்துகளை உரைகல்லில் வைத்து முலைப்பால் விட்டு 4, 5 உரைப்பு உரைத்துச் சேர்க்கவும். இவற்றுள் கிடைக்கக்கூடிய சரக்குகளைச் சமயோசிதமாக உபயோகிக்கலாம். எல்லாவற்றையும் ஒரு கோப்பையிலிட்டு முலைப்பாலும் தேனுங் கூட்டி நன்றாய்க் குழப்பி (Likelinctus) வைத்துக் கொண்டு அடிக்கடி நாவில் தடவி வரவும்.

தீரும் நோய்கள்:-

சப்த தோடங்கள், பதிமூன்று சன்னிகள், நாவறட்சி, நாவழுவழுப்பு, நாகறுப்பு, நாமுள்ளு, தாகம், சுகசன்னி, வாந்தி, அசாத்திய விக்கல், வாதம் முதலிய பல நோய்களெல்லாம் குணமாகும்.

42. விக்கல் நிவாரணி

சுத்தி செய்த சங்கு சேகரித்து அதனை முலைப்பாலிலுரைத்து நாவில் தடவி வர விக்கல் நின்று விடும் (ஏடு)

16. வாந்தி நோய்

பரிகாரம்.

இந்நோய் உண்டாவதற்கு வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றங்கள் தனித்தனியாகவும், கலப்புற்றும் காரணமாயிருக்கும். ஆகையால், எக்குற்றம் அல்லது எக்கலப்புக் குற்றங்கள் காரணமென்பதை நன்கு அறிந்து அதற்குத் தக்கவாறு பரிகாரம் செய்தல் வேண்டும். கேடடைந்த குற்றத்தினளவாய், மேல் நோக்குகால் கீழ் நோக்குகால் , நடுக்காலும் கேடடையும். அவற்றையறிந்து வாயுக்களைத் தன்னிலைப் படுத்த பரிகாரம் செய்தல் வேண்டும். வேறு நோய்களுக்குத் துணை நோயாக வாந்தி ஏற்படின் ஆரம்ப நோய்க்கும் வாந்திக்கும் சேர்ந்து பரிகாரம் புரிதல் வேண்டும். வாந்தி நோய் தனி நோயாக ஏற்படின் கீழ்க்கண்ட மருத்துவம் புரிதல் வேண்டும்.

குறிப்பு:- அரோசகம், செரியாமை (மருந்தாக்கினி) நீர்வேட்கை இவற்றிற்குக் கூறிய மருந்துகள் யாவும் வாந்தி நோயிலும் உபயோகிக்கலாம்.

1. தயிர்ச் சுண்டி சூரணம்:-

மூன்று விரல் அளவு சூரணத்தை, சிறிது வெந்நீரில் காலை, மாலை கொள்ள அசீரண பேதி, வாந்தி இவை தீரும். (சி. வை. திரட்டு)

2. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்:-

மூன்று விரல் அளவு சூரணம், தேன் அல்லது நெய்யில் காலை, மாலை கொடுக்க செரியாமை, வாந்தி, பொருமல் இவை தீரும்.

(சி. வை. திரட்டு.)

3. தீபாக்கினிச் சூரணம்:-

மூன்று விரல் அளவு சூரணம் தேனில் காலை, மாலை கொடுக்க அசீரண வாந்தி, குன்மம் இவை குணமாகும்.

4. சீரகச் சூரணம்:-

வெருகடியளவு சூரணம், காலை, மாலை தேனில் கொள்ள வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, அக்கினி மந்தம், உஷ்ணம், காங்கை இவை தீரும்.

(சி.வை திரட்டு.)

5. சாதி சம்பீரக்குழம்பு:-

ஒரு குன்றியளவு, நாவில் 2, 3 வேளை தடவிச் சாப்பிட வாந்தி, தாகம், விக்கல், பாண்டு, மாந்த பேதி, வெப்பு, மூர்ச்சை இவை குணமாகும்.

(சி. வை. திரட்டு)

6. கேசரி இலேகியம்:-

1 முதல் 2 வராகனெடை காலை, மாலை சாப்பிட்டு வர பித்தம், பித்தா சீரணம், அன்ன வெறுப்பு, அசீரண பேதி, வாந்தி, வயிற்று வலி, பித்த வாயு இவை தீரும். (சி. வை திரட்டு)

7. எலுமிச்சு இலேகியம்:-(S.R Pharma)

அளவு, பிணி, நீக்கம், கேசரி லேகியம் போலவே உபயோகிக்க வேண்டும்.

8. இஞ்சி ரசாயனம்:-

மூவிரல் அளவு ரசாயனம் தேனில் காலை, மாலை கொள்ள வாந்தி, உடலெரிவு, அனல், மந்தம், பித்தப் பிணிகள் இவை தீரும்.

9. நண்டுக்குழிநீர்:-

அடிக்கடி கொடுத்துவர வாந்தி,தாகம், விக்கல் இவை தீரும்.

10. நவரசத் துவையல்:-

தக்கயளவில் காலை மாலை கொடுத்துவர வாந்தி அறவே நின்று விடும்.

11. புதினா மாத்திரை:-(Refer to No.12 under செரியாமை)

வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை வெந்நீரில் அனுபானித்துக் கொடுக்க செரியாமை, பேதி, வாந்தி இவை தீரும்.

12. மகா வில்வாதி இலேகியம்:- (சிகிச்சாரத்ன தீபம்)

ஒரு பாக்களவு காலை, மாலை சாப்பிட்டு வர அரோசகம், வீக்கம் சக்தி, பாண்டு, செரியாமை, வயிற்றெரிவு, கைகாலெரிவு, அன்னத் துவேசம், அதிசாரம், பித்தம், சயகாசம் யாவும் குணமாகும். (Refer to No. 7 under (செரியாமை)

13. தாளிசாதி வடகம்:-

காலை, மாலை ஒரு வடகம் பொடி பண்ணித் தேனிற் கொள்ள கபம், வாதம், கிரகணி, அதிசாரம், அலசம், வமனம், பக்கநோய் இவை குணமாகும். சுண்டைக்காயளவு வடகம் உருட்டினால் போதுமானது.

(சி. வை திரட்டு.)

14. எலுமிச்சு மணப்பாகு, நாரத்தை மணப்பாகு, நெல்லிக் காய் மணப்பாகு, மாதுளங்க ரசாயனம் (ஆயுர் வேதம்) இவற்றிலொன்றைத் தக்கஅளவில் சிறிது தண்ணீர் கலந்து தினம் 2,3 முறை கொடுத்து வர வாந்தி, அரோசகம், அன்னத்துவேசம். மசக்கையில் பெண்களுக்கேற்படும் வாந்தி இவை குணமாகும்.

15. புதினாத்துவையல், புளியாரைத் துவையல்:-

இவற்றையும் வாந்தியை நிறுத்தப் பயன்படுத்தலாம்.

16. படிகாரச் செந்தூரம் ஒரு சிட்டிகையும், மந்தவாயுச் சூரணம் அல்லது பித்தாதிக்கம் நிவாரணச் சூரணம்.

மூவிரல் அளவும் சேர்ந்து காலை, மாலை தேனில் கொள்ள வாந்தி, அரோசகம், கிறுகிறுப்பு, வாயு, பசியின்மை யாவும் குணம் ஆகும். (Refer to S.R. Pharma for these Preparations)

17. வாந்தி நோய் ஹரம்: (சத சுலோகம்.)

"புத்தோடு நாகமாந் துளிரும் வில்வம்
பொரிதாளி பத்திரியும் பொரிமா சுக்கும்
இத்தோடு சர்க்கரை தேனிளநீர் பாலும்
இலந்தை விரைசீர கமுமாது லங்கங்
கொத்துமலி மாதளையின் பழமு முத்தங்
கொண்டவி ளாங்கனியு மிருவேலி சந்தம்
அத்தோடு பெலங்கு றைக்கும் வாந்திக் கெல்லாம்
ஹரங்க ளெனவே முனிவர ருளினாரே"

புற்று மண், நாவற்றுளிர், வில்வவேர், நெற் பொரி, தாளிசம், பொரிமா, சுக்கு, சர்க்கரை, தேன், இளநீர், பால், இலந்தை விதை, சீரகம், மாதுளங்கம், கொத்துமல்லி, மாதுளம்பழம், முத்து, விளாங்கனி, இருவேலி, சந்தனம் இவை யாவும் வாந்தியை நிறுத்தக்கூடியவையாம்.

18. வாந்தி நிவாரணி:- (for children and adults page 189 புலிப்பாணி)

இலவங்கச் சூரணம், அதிவிடயச் சூரணம், அரிசித்திப்பிலிச் சூரணம், மயிலிறகுத் தட்டை சுட்ட சாம்பல், இவை சம எடை எடுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு 1 முதல் 2 சிட்டிகையளவு சிறுவர்களுக்கும், மூவிரல் அளவு பெரியவர்களுக்கும் தேனில் குழப்பி தினம் 2, 3 வேளை கொடுக்க வாந்தி நிற்கும். அசீரணம், மாந்த பேதி இவைகளும் குணமாகும். அனுபவமான முறை.

சில மணப்பாகு செய்முறை.

1.எலுமிச்சம்பழ மணப்பாகு:-

தேறின எலுமிச்சம்பழ ரசத்தினெடைக்கு இரண்டு பங்கு அல்லது 2 ½ பங்கு சீனி அல்லது கற்கண்டு கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் புட்டியிலடைத்துக் கொண்டு மூன்று தோலா எடை மணப்பாகுடன் ஆறு தோலா எடை தண்ணீர் கலந்து தினம் காலை, மாலை சாப்பிட்டு வர பித்தந் தீரும். வாந்தி நிற்கும். அரோசகம் போம்.

2. நாரத்தம்பழ மணப்பாகு:-

நாரத்தம் பழ ரசத்தினெடைக்கு இரட்டிப்பு சீனி கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் புட்டியிலடைத்துக் கொண்டு மேற்கண்ட அளவுப்படி காலை, மாலை கொடுக்கப் பித்தம், வாந்தி, அரோசகம் யாவும் குணமாம்.

3. கொமட்டி மாதுளம் பழமணப்பாகு:-

கொமட்டி மாதுளம் பழங்களை மேற்றோல் நீக்கி இடித்துச் சாறு பிழிந்து அந்த எடைக்குச் சமம் சீனியாவது, கற்கண்டாவது கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் புட்டியிலடைத்துக் கொண்டு ஒரு தோலா எடை மணப்பாகு, இரண்டு தோலா எடை தண்ணீரும் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வர பித்தம், பித்தச்சூடு, வாந்தி, அரோசகம் இவை நீங்கும்.

4. மாதுளம் பழ மணப்பாகு:-

மாதுளம் பழ் ரசத்தினெடைக்கு ஒன்றரைப் பங்கு சீனி சேர்த்து முன்போல் காய்ச்சிப் பாகு செய்து புட்டியிலடைத்துக் கொண்டு சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள் தீரும்.

19. ஆற்று மணற் குடிநீர், பிரசண்ட மாருதக் கருக்கு, மண்புழுக் குடிநீர்:-

இந்த மூன்று குடிநீர்களைத் தக்கஅளவில் கொடுத்து வர வாந்தி, தாகம் நாவறட்சி, விக்கல் முதலிய நோய்கள் குணமாகும்.

(vide நீர் வேட்கை Nos 5,6 and 7)

20. பாகக் கடுக்காய்:-(சி.வை. திரட்டு)

இதில் ஒரு துண்டு உணவுக்கு முன்னும், பின்னும் உண்ண வாந்தி, இருமல், மாந்தம், வயிற்று நோய் இவை நீங்கும்.

21. இஞ்சி எலுமிச்சு மணப்பாகு:-(S.R. Pharma)

1 முதல் 2 தேக்கரண்டியளவு மணப்பாகும் ஒரு அவுன்சு தண்ணீரும் கலந்து காலை, மாலை கொடுக்க பித்தம், வாந்தி, அரோசகம், செரியாமை, குடற்புரட்டல், கிறுகிறுப்பு, இரத்த அழுத்தம் முதலியன குணமாகும்.

22. தீராத வாந்தி, வயிற்று வலி, குன்மத்திற்கு திராட்சைக் குடிநீர்:-(Traditional)

அங்கூர் திராட்சை விதைக் காம்பு நீக்கி-60 கிராம், ஏலக்காய் ¼ ரூபாயெடை தோலுடன் தட்டிச் சேர், சோம்பு ஒரு ரூபாய் எடை இம்மூன்றையும் ஒரு பாண்டத்திலிட்டு ½ படி தண்ணீர் விட்டு நான்கிலொன்றாய் வற்ற வைத்து வேளைக்கு இரண்டு அவுன்சு இந்தக் குடிநீர் வடிகட்டி எடுத்து அத்துடன் இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு , புதினாச்சாறு வகைக்கு ½ அவுன்சு கூட்டி நயம் தேனும் கற்கண்டும் தூள் செய்து கரைத்து தினம் 2,3 வேளை கொடுத்துவர குன்மம், தீராத வாந்தி இவை குணமாகும்.

23. PITHA- VANTHI REMEDY:

1.	Chukku churnam	4oz
2.	Elarisi Churnam	4 oz
3.	Jeerakam Churnam	4 oz
4.	Nelli vattal churnam	4 oz
5.	Sugar	16oz

Mixed and bottled up.

Dose:-10to 20 grains B.D with ghee or honey.

Uses:-Vanthi, Salivation, Pitha mayakkam, Giddiness, and Andavayu etc., are cured.

24. CHILDREN- VANTHI REMEDY:

1.	Lavanga churnam	of each equal parts or 1 oz each
2.	Athividayam churnam	Do
3.	Arisi thippili churnam	Do
4.	Myleragu burnt up ash	
	Mixed well and bottled up	Do

Dose:-1 to 2 pinches B.D or. T.D.S. to be give with Honey.

Uses:-Vanthi and indigestion are cured in children and adults.

25. VANTHI REMEDY NO.2 (S.R. Pharma)

1.	Padikara Chenduram	1to 2 pinches.
2.	B.P. Stabilzer	¼ to ½ teaspoonful

Mixed and given for one dose with honey 2 to 3 times a day. Vanthi Giddiness and Sleeplessness are relieved.

26. PADIKA-VENGKARA BASPAM OR ACHARAM NIVARANI OR STOMATITIS CURE NO. 1 (SPECIAL) (S.R. Pharma)

1.	Fried Padikaram	5 palams
2.	Fried Vengkaram	5 palams

Both are finely powdered rubbed with cow's butter (preferably home made churned butter)- Ib 1 in a kalvam, placed in a suitable kuduvai, mouth

covered with an odu clay cloth seven layers are made to the margin, dried a bit and subjected to putam with 50 to 60 Vratties in a pit. (The medicine inside the Kuduvai should be less than half of the capacity of the Kuduvai). On being cooled. the baspam is secured, at times it is greyish. No matter it can be used.

Next, Sringi Baspam No, 1 half of the total weight of the above finished Baspam is added, mixed nicely in a kalvam and bottled up.

Note:- When we use the butter purchased from the ghee shop for putams of any medicine, it becomes blackened. We must not use the bazaar sold butter under any circumstance. Simple Padikaram too rubbed with bazaar butter becomes black. Home-made butter is better used.

Dose:- 2 to 4 grains with Cow's butter or castor oil may be taken two or three times a day.

Uses:- Stomatitis,Glossitis, Pharyngitis, Nausea, Vomiting and Mercuria lism are cured.

27. STOMATITIS CURE POWDER NO. II (SPECIAL)

(S.R. Pharma)

1.	Padika Vengkara Baspam or Stomatitis Cure No.1	5 ounces.
2.	Kungilya churnam	2 ½ ounces.
3.	Shavarkara chunnam	1 ¼ ounces.
4.	Nellikai-Juice powder	5 ounces.

All these ingredients are well mixed together and bottled up.

Dose:- 5 to 10 grains may be given with Cow's butter or other suitable anupanams morning and evening.

Uses:- Stomatitis, Praryngitis, Nausea, Vomiting, Urinary troubles and Mercuialism are cured.

17. மாந்த நோய்

பரிகாரம்

இந்நோயில் வளிக் குற்றம் மிகுந்து, ஐயத்தையும் பெருகச் செய்து உணவைச் செரிப்பிக்காமல் மேல் நோக்குங்கால், கீழ் நோக்குங்கால் இவைகளையும் கேடடையச் செய்கின்றபடியால் இவற்றைத் தன்னிலைப் படுத்துவதற்குரிய பரிகாரங்களைச் செய்தல் அவசியம்.

1. தாளிசாதி வடகம்:-

சுண்டைக்காயளவுள்ள ஒரு வடகத்தைப் பொடித்துத் தேனில் குழப்பிக் காலை, மாலை கொடுக்க அலசம் என்ற மாந்த நோய் தீரும். அன்றியும் கபம், வாயு, கிராணி, வமனம், அதிசாரம், பக்க நோய் முதலிய நோய்களும் குணமாகும். (சி. வை. திரட்டு)

2. வச்சிரவல்லி என்ற பிரண்டை வடகம்:

இதில் ஒவ்வொரு வடகம் நெய்யில் வறுத்துக் காலை, மாலை புசிக்க மாந்தம், குன்மம், வல்லைக்கட்டி முதலிய உதரரோகங்கள் நீங்கும். பசி தீபனம் உண்டாகும். (சி.வை. திரட்டு)

3. பிரண்டை வடகம்:-(சி.வை. திரட்டு)

வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை உபயோகித்து வர மாந்தம், கிருமி, சயித்திய வாயு, குன்மம் இவை நீங்கும். பசி தீபனம் உண்டாகும்.

4. கறிவேப்பிலை வடகம்:-(சி.வை. திரட்டு)

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை சாப்பிட்டு வர மாந்தம், பசியின்மை, கழிச்சல், சீரணப் பிணிகள் இவை தீரும்.

5. பாகக் கடுக்காய்:-(சி. வை. திரட்டு)

இதில் ஒரு துண்டு உணவுக்கு முன்னும் பின்னும் உண்ண மாந்தம், இருமல், வயிற்று நோய், வாந்தி இவைகள் தீரும்.

6. இஞ்சி ரசாயனம்:-(சி. வை. திரட்டு)

இதில் மூவிரல் அளவு காலை, மாலை தேனிற் கொள்ள மாந்தம், வாந்தி, உடலெரிவு, அனல், பித்தப் பிணிகள் தீரும்.

7. இஞ்சிச் சூரணம்:-(சி. வை திரட்டு)

இதில் மூவிரல் அளவு காலை, மாலை தேனிற் கொள்ள மாந்தம் சுவையின்மை, ஊண்வெறுப்பு, பக்க வாய்வு, குலை எரிவு, வாய்வு, வாந்தி, கோழை, சூதகவாயு இவைகள் தீரும்.

8. சுண்டை வற்றல் சூரணம்:-(சி.வை. திரட்டு)

இதில் வெரு கடியளவு எருமைத் தயிரில் காலை, மாலை சாப்பிட மாந்தம், பொருமல், இரைச்சல், கழிச்சல், மூலம், அதிசாரம், கிரகணி இவை தீரும்.

9. தயிர்ச் சுண்டி சூரணம்:-(சி.வை. திரட்டு)

இதில் மூவிரல் அளவு வெந்நீரில் காலை, மாலை கொடுக்க மாந்தம், அசீரண பேதி குணமாகும்.

10. பஞ்ச தீபாக்கினிச் சூரணம்:-

மூவிரல் அளவு காலை, மாலை தேனிற் கொள்ள மாந்தம் செரியாமை, பித்த வாயு. கப நோய். மயக்கம், மூலவாயு முதலியன குணமாகும். (சி.வை. திரட்டு)

மலச்சிக்கலிருப்பின் வச்சிரகண்டி மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, சுகவிரேசன மாத்திரை. சித்தாதி எண்ணெய், வெள்ளை எண்ணெய், வாதநாசத்தைலம் ஏதேனுமொன்றைத் தக்க அளவில் தக்க அனுபானத்தில் ஒரு வேளை கொடுத்து மலத்தைக் கழிக்கலாம்.

புதினா ரசம் ஒரு பலம், எலுமிச்சம் பழச்சாறு 2 பலம், கொஞ்சம். சர்க்கரை, தேன் இவை கலந்து அரை அவுன்சு வீதம் காலை, மாலை கொடுக்க மாந்தம், வாந்தி, அரோசகம் தீரும். பசிதீபனம் உண்டாகும். (ஏடு)

11. மந்தவாயுச் சூரணம்:- (Refer to No. 17 under செரியாமை)

இதில் திரிகடியளவு காலை, மாலை தேனிற் கொள்ள மாந்தம் செரியாமை, அசீரணம், வயிற்று பொருமல், வயிற்று வலி, இரத்த அழுத்தம், அரோசகம், வாந்தி இவை தீரும். பசி தீபனம் உண்டாகும்.

குறிப்பு:- செரியாமையிற் கூறிய மருந்துகள் மாந்த நோயிலும் பயன்படும்.

12. குன்மக்குடோரி:-(சி.வை. திரட்டு)

இதில் ஒரு சுண்டைக்காயளவு காலை, மாலை பசுமோர் அல்லது வெந்நீர் இவற்றில் அனுபானித்துக் கொடுக்கச் சூதகச் சூலை, குன்மம், மாந்தம், அசீரணம், பித்தவாயு இவை குணமாகும்.

13. இஞ்சி ரசாயனம்:- (Refer to No.7) லேகியம் under குன்மநோய்

இதில் நெல்லிக்காயளவு காலை. மாலை கொள்ள குன்மம். மாந்தம்,

செரியாமை, வாந்தி, ருத்ரவாயு, வாய் நீரூறல் முதலான நோய்கள் குணமாம்.

இதன் காரணமாக மற்ற குற்றங்களும் தத்தம் தொழிலைச் செய்யா! இக்குற்ற வேறுபாடுகளையறிந்து தக்க பரிகாரம் புரிதல் வேண்டும். வாயுக்களின் கேடால் உணவு செரியாது குருதியின் வன்மையைக் குன்றச் செய்யும். எரு கட்டுப்படும், வயிற்றில் வாயு பெருகி வயிறு புரட்டல், வலியையும் உண்டாக்கும். வாந்தியும் உண்டாகக் கூடும். இதில் மேல் நோக்குங்கால், கீழ்நோக்குங்கால், நடுக்கால் இவைகளின் தொழில் சரியாக நடை பெறாததால் இக்குறிகுணங்களைப் பிறப்பிக்கின்றன. இவற்றையறிந்து தன்னிலை திரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தவும். மிகுதியடைந்த வாயுக்களைச் சீர்படுத்தவும், மருத்துவம் புரிதல் வேண்டும். மலச்சிக்கலைப் போக்கவும், பசித்தீயைத் தூண்டவும், உண்ட உணவு செரிப்பிக்கவும், வயிறு புரட்டல், வலி வாந்தி இவற்றைப்போக்கவும், தக்க பரிகாரம் செய்தல் வேண்டும்.

குன்ம நோயில் வாந்தியில்லாதிருந்து உண்ட உணவு வயிற்றில் செரியாது மந்தம் ஏற்பட்டால் உடனே வாந்தி செய்விக்க நேரிடின் கீழ்க்கண்ட மருந்துகளை உபயோகிக்கலாம்.

18. குன்ம நோய்

பரிகாரம்

இந்நோயில் மந்தம் ஏற்பட்டு வளிக்குற்றம் கேடடைந்து வாயு மிகுந்து அதன் காரணமாக மற்ற குற்றங்களும் தத்தம் தொழிலைச் புரிதல் வேண்டும். வாயுக்களின் கேடால் உணவு செரியாது குருதியின் வன்மையைக் குன்றச் செய்யும். எரு கட்டுப்படும், வயிற்றில் வாயு பெருகி வயிறு புரட்டல், வலியையும் உண்டாக்கும். வாந்தியும் உண்டாகக் கூடும். இதில் மேல் நோக்குங்கால், கீழ்நோக்குங்கால், நடுக்கால் இவைகளின் தொழில் சரியாக நடை பெறாததால் இக்குறிகுணங்களைப் பிறப்பிக்கின்றன. இவற்றையறிந்து தன்னிலை திரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்தவும், மிகதியடைந்த மலச் சிக்கலைப் போக்கவும், பசித்தீயைத் தூண்டவும், உண்ட உணவு செரிப்பிக்கவும், வயிறு புரட்டல், வலி, வாந்தி இவற்றைப்போக்கவும், தக்க பரிகாரம் செய்தல் வேண்டும்.

குன்ம நோயில் வாந்தியில்லாதிருந்து உண்ட உணவு வயிற்றில் செரியாது மந்தம் ஏற்பட்டால் உடனே வாந்தி செய்விக்க நேரிடின் கீழ்க்கண்ட மருந்துகளை உபயோகிக்கலாம்.

வாந்தி செய்விக்க மருந்துகள்:-

1. சஞ்சீவி மாத்திரை ஒன்றைப் பொடித்துத் தேனில் குழப்பி சிறிது இலைக்கள்ளி இலையை வரகு வைக்கோல் அனலில் வாட்டிப் பிழிந்த சாறு ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டியளவு கலந்து காலையில், ஒரே வேளை கொடுக்க வாந்தியும். பேதியுமுண்டாக்கும்.

2. வசம்பு தட்டிப் போட்டு முறைப்படி குடிநீராக்கி ஒரு சங்களவு ஒரே வேளை காலையில் புகட்ட வாந்தியாகும். வயிற்றில் கட்டுப்பட்ட மந்தப் பொருள்கள் யாவும் வெளியாகும்.

3. கடுகு, அழவனம் வேர், சுக்கு, கோட்டம், வகைக்கு ஒரு

வராகனெடை கொண்டு முறைப்படி குடி நீராக்கி ஒரு அவுன்சு முதல் இரண்டு அவுன்சு குடிநீர் ஒரே வேளை காலையில் கொடுக்க வாந்தியாகும் (சித்த மருத்துவம்.)

4. வமனக் கஷாயம்:- (சிகிச்சாரத்ன தீபம்) ஒரு பலம் மரக்காளானை அரைப்படி தண்ணீரில் போட்டு கால்படியாகக் காய்ச்சி வடித்துச் சாப்பிடுக. சிறிது நேரம் சென்று தண்ணீர் சாப்பிட வாந்தியாகும். இப்படி எவ்வளவு தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டுவந்தாலும் உள்தங்காமல் வாந்தியையே உண்டாக்கும். வாந்தியை நிறுத்த விரும்பின் தண்ணீர் சேராத அன்னத்தைப் புசிக்க நிற்கும்.

5. நஞ்சுமுறிச்சான் கொடி சமூலத்தை அரைத்து நெல்லிக் காய்ப் பிரமாணம் பாலில் கலக்கிச் சாப்பிட்டு சிறிது நேரம் சென்றபின் பச்சைப் பயிறும் பச்சரிசி நொய்யும் கலந்து கஞ்சி காய்ச்சி வைத்துக் கொண்டு அதனைச் சிறிது சிறிதாகச் சாப்பிட்டுக் கொண்டுவர உள்தங்காமல் வாந்தியாகிக் கொண்டே இருக்கும். நிறுத்த வேண்டின் வெறும் அன்னம் குழம்புடன் பிரட்டிச் சாப்பிடுக. வாந்தி நிற்கும். எவ்விதத்திலும் தண்ணீர் சேர்ந்த ஆகாரம் கூடாது. வாந்தி நின்றபின் மனம் போல் சாப்பிடலாம்.

கழிச்சலுக்குக் குடிநீர் வகை (சித்த மருத்துவம்.)

1. சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூல வேர்ப்பட்டை, முப்பட்டைக் கள்ளி வேர்ப் பட்டை இவை ½ பலம் நன்றாய்த் தட்டி முறைப்படி குடிநீராக்கி வடித்து ¼ முதல் ½ ஆழாக்கு அளவில் இந்துப்பு, நவச்சாரம், கறியுப்பு இவை ஓரளவாகப் பொடித்ததில் ஒரு சிட்டிகை அளவு கூட்டி காலையில் உண்ணக் கழிச்சலையும் ஒருமுறை வாந்தியையும் உண்டாக்கும்.

2. பேரீச்சங்காய், கொட்டை திராட்சை, சீரகம், ஓமம், சீந்தில் தண்டு, வெட்டிவேர், நிலாவாரை, அதிமதுரம், கடுகுரோகணி இவை ஓரளவாகக் கொண்டு முறைப்படி குடிநீராக்கி 2 ஆழாக்கு வீதம் சிறிது பனங்கற்கண்டும் இந்துப்பும் சேர்த்து ஒரு வேளை காலையில் கொடுக்க கழிச்சலுண்டாம். அழல் குன்ம நோய்க்கு ஏற்ற கழிச்சல் மருந்தென்கிறார் சித்த மருத்துவ நூலாசிரியர்.

3. கொம்புக்கள்ளி சுட்ட சாம்பல், கொடிவேலி வேர்ப்பட்டை, சுக்கு,

திப்பிலி, மிளகு, கோட்டம், அக்கராகாரம், அதிமதுரம், சிவதை வேர், கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காய் வகைக்குச் சம எடை எடுத்து இடித்ததில் ஒரு சிரங்கை எடுத்து முறைப்படி குடி நீரிட்டு இந்துப்பு சிறிது கூட்டி ஒரேவேளை காலையில் கொடுக்க கழிச்சலாகும். (சித்த மருத்துவம்.)

பொடிவகை:-

1.பிரண்டை வற்றல், சிற்றாமுட்டி, சீரகம், ஓமம், சுக்கு, மிளகு, சித்திர மூலம், பெருங்காயம், சிவதை வேர், சதகுப்பை, காட்டு எள் இவைகளைப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து வகைக்குப் பலம் 2, கூகை நீர் பலம் 10 இவை யாவும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும்.

இதற்கு மேல், ஒரு சாலில் 2 படி தண்ணீர் விட்டு அதில் 5 பலம் கள்ளியைச் சிதைத்துப் போட்டு அத்துடன் ½ படி பசுவின் தயிர் கூட்டி சாலின் வாய்க்குச் சீலை ஏடு கட்டி அதன் மேல் முன் பொடியைப் பரப்பி வைத்து, மேல் மூடி அடுப்பின் மேல் வைத்து சிறு தீயாக எரித்துப் பிட்டவியல் செய்து, உலர்த்தி எடுத்து வைத்துக்கொண்டு ஒரு விரற்கடையளவு இப்பொடியைக் கொள்ளக் கழிச்சலாகும். காற்றும் பரியும்.

நெய்வகை:-

1.பிரண்டைச்சாறு, முடக்கற்றான் சாறு, துளசிச்சாறு, புளியாரைச்சாறு இவை வகைக்கு ஒரு படி; சித்திர மூல வேர்ப்பட்டை, வெள்ளைச்சாரடை வேர், சிறுதேக்கு, வசம்பு, அமுக்கிரா, சீந்தில் தண்டு , சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம் இவை வகைக்குப் பலம் இரண்டு; கடுகுரோகணி, சிவதை, அதிமதுரம், பூண்டுத்திரி இவை வகைக்குப் பலம் ஒன்று; பசு நெய் படி இரண்டு இவைகளை முறைப்படி கல்க்கச் சரக்குகளை அரைத்து சாறுகளையும் நெய்யையும் கலந்து அதில் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு தக்க அளவில் சிறிது இந்துப்பு கூட்டிக் காலையில் மட்டும் ஒரே வேளை கொடுக்க கழிச்சலுண்டாம்.

2. கடுக்காய்த் தோல் பலம் 10, வாய்விடங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி சிறுதேக்கு, கடுகுரோகணி, சிவதை வேர், சுண்டை வற்றல், கள்ளி வேர்ப்பட்டை, ஊழலாற்றிப் பட்டை இவை வகைக்கும் பலம் ஒன்று. இவைகளை இடித்துச் சேர்த்து நான்குபடி தயிர்த் தெளிவு விட்டுக் காய்ச்சி

ஒரு படியாக வற்ற வைத்து வடிகட்டி அத்துடன் பசு நெய் ஒரு படி விட்டு அடுப்பேற்றி அதில் சீரகம், சோம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, திப்பிலி இவை வகைக்கு ½ பலம் பொடித்துப் பால் விட்டரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்து தக்கஅளவில் காலையில் மட்டும் ஒரு வேளை கொடுக்க வலி குன்மம், வாயுகுன்மம் போம். பேதியாகும்.

3. கொட்டை முந்திரிகை, பேரீந்து, பற்பாடகம், சீந்தில், வெட்டி வேர், விலாமிச்சு வேர், அதிமதுரம், கோரைக் கிழங்கு, கடுக்காய், தான்றி, நெல்லிவற்றல் வகைக்குப் பலம் மூன்று, மீண்டும் கடுக்காய்த் தோல் பலம் இருபது எடுத்து எல்லாவற்றையும் இடித்துப் பாண்டத்திலிட்டு நான்குபடி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி, அத்துடன் பசு நெய் ½ படி கூட்டி அடுப்பேற்றி சீரகம், சோம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், இலவங்கப்பட்டை இவை வகைக்கு ஒரு வராகனெடை எடுத்துப் பால் விட்டரைத்து அந்நெய்யில் கலந்து காய்ச்சிக் கலக்கம் திரண்டு வரும் போது பெருங்காயம் ஒரு பலம் பொரித்துப் பொடித்துக் கூட்டி ஒரு கொதிவந்தபின் வடித்து 1 முதல் 3 தேக்கரண்டியளவு காலையில் ஒரு வேளை கொடுக்க அழல் குன்மம்போம். கழிச்சல் உண்டாகும். (சி.ம.)

பேதி எண்ணெய் வகை:-

சித்தாதி எண்ணெய், வெள்ளை எண்ணெய். வாதநாசத் தைலம், மெருகுள்ளி எண்ணெய், குமட்டி எண்ணெய், கழற்சி எண்ணெய் இவைகளிலேதேனுமொன்றைத் தக்க அளவில் காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் தேகபலம், நோயின் கடுமையறிந்து கொடுக்கப் பேதியாகும். குன்மநோயும் குணமாகும்.

கற்கங்கள்:-

1 குன்மக்குடோரிப் பூண்டில் பச்சையான இலையை ஆய்ந்து ஒரு பலம், மிளகு ½ பலம், உப்பு 1/16 பலம் இவற்றைச் சேர்த்து நெகிழ அரைத்து அடையாகத் தட்டியதில் காலை, மாலை சுண்டைக் காயளவு சாப்பிடவும். நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு சுண்டைக்காய் வீதம் மருந்தை அதிகப்படுத்திக்கொண்டே சாப்பிட்டு வரவும். 5 சுண்டைக்காயளவு சாப்பிட வேண்டிய நாள் வந்தவுடன் அன்று முதல் நோய் தீரும் வரை அதே 5 சுண்டைக்காயளவு காலை, மாலை சாப்பிட்டு வந்தால் போதுமானது.

மருந்து சாப்பிட்டவுடன் சிறிது தண்ணீர் சாப்பிடவும். தினந்தோறும் கலக்கத்தைக் கெட்டுப் போகாதபடி இருக்கச் சற்று வெயிலில் வைத்துக்கொண்டு வரவும் வேண்டும்.

2. சில்லிக்கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை இவற்றை அரைத்து சிறிது பனை வெல்லம் கூட்டி வெள்ளாட்டுப் பாலில் கலந்து காலை, மாலை கொடுத்து வர எரி குன்மம் போம்.

3. இஞ்சியை மேற்றோல் சீவிச் சிறு துண்டுகளாகத் தறித்துப் பசுநெய் தெளித்து இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்தது பலம் 5; மிளகு, திப்பிலி, கோட்டம், கொடி வேலி வேர்ப்பட்டை இவை வகைக்குப் பலம் ½ பொடித்து கலந்து ஒரு வராகனெடை அளவு காலை, மாலை சிறிது சர்க்கரையுடன் கூட்டியுண்ண குன்ம நோய் தீரும்.

4 ஓமத்திற்சோர நெருஞ்சியிலைச்சாறு விட்டுலர்த்திப் பொடித்ததைத் தக்க அளவு காலை, மாலை வெற்றிலைச் சாற்றுடன் உட்கொண்டு வரக் குன்மநோய் போம். உடலின் திமிரும் நீங்கும். (சி.ம.)

குடி நீர்:- (தேரன் முறை)

1.குன்மக் குடோரிப் பூண்டு, மிளகு, சுக்கு, திப்பிலி, இலவங்கம், சாதிக்காய் இவை வகைக்குப் பலம் 1; கள்ளிவேர்ப் பட்டை பலம் ½, தண்ணீர் எட்டு பங்கு சேர்த்து எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி தக்க அளவில் காலை, மாலை கொடுத்துவரக் குன்ம நோய் குணமாம்.

2. முருங்கைப் பட்டை, வெள்ளைப் பூண்டு, சாரணைவேர், வன்னிமரப் பட்டை, கழற்சிப் பருப்பு, கொழிஞ்சிப் பட்டை, சுக்கு இவை வகைக்கு 2 கழஞ்சு இடித்து ஒருபடி தண்ணீர் விட்டு உழக்காகக் காய்ச்சி வடித்துக் காலை, மாலை சாப்பிட்டு வரக் குன்மம் போம்.

3. கழற்சிப் பருப்பு, பூண்டு, செவ்வியம், இந்துப்புகாயம், சுக்கு, ஓமம் இவற்றை இடித்து முறைப்படி குடிநீரிட்டு தக்கஅளவில் காலை, மாலை கொடுக்க சூலை குன்மம் நீங்கும்.

4. நெற்பொரி, பாசிப்பயறு, வில்வம், முன்னை, ஏலக்காய், சுக்கு,

நெல்லிமுள்ளி இவைகளைச் சமன் கூட்டி முறைப்படி குடிநீரிட்டுத் தக்க அளவில் காலை, மாலை கொடுக்க சத்தி குன்மம், சுரசத்தி, கிறுகிறுப்பு, உழலை, மூர்ச்சை முதலியன தீரும்.

5. வேலம் பட்டை, நெல்லி வற்றல், நெற்பொரி, பச்சைப் பயறு, வில்வக்கட்டை இவை சமன் பொடித்துப் பசுநீர் விட்டுக் குடிநீராக்கி தக்க அளவில் காலை, மாலை குடிக்க ஏப்பமும், குன்மமும் போம்.

பொடிவகை:- (தேரையர்)

1.சாரணைவேர், சுக்கு, இந்துப்பு இவை வகைக்குப் பலம் 1; மிளகு, திப்பிலி, பூண்டுத்திரி, ஓமம் இவை வகைக்குப் பலம் 2; கடுக்காய்த் தோல் பலம் 15 இவைகளை இடித்துத் தூளாக்கி அதில் திருகுகள்ளிப் பால் படி 1; வெள்ளாட்டின் நீர் படி 1; வெள்ளாட்டுப் பால் படி 2 இவைகளைக் கூட்டிப் பிசைந்து வெயிலில் உலர்த்திய பின், 20 ஆற்றுத் தும்மட்டிக் காய்களைக் கொண்டு வந்து நான்கு நான்கு பிளவாகக்கீறி அதனுள் மேற்படி தூளைப் பொதிந்து கயிறு கொண்டு சுற்றிப் பானையிலடுக்கி வாய்மூடிச் சீலைமண் செய்து ஆட்டுப் புழுக்கையைக் கொண்டு புடமிட்டுக் கறுப்பு நிறமடையும் நிலை கண்டு அறிந்து தீயாற்றவும். இக்கரியைப் பொடித்து ½ முதல் 1 சிட்டிகை அளவு இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் இவைகளிலொன்றில் அனுபானித்துக் கொடுத்து உப்பு, புளி நீக்கவும். குன்ம நோய்கள் நீங்கும்.

2. ஆடாதோடையிலையை உலர்த்தி எடுத்த எடைக்கு ½ பங்கு சுத்தி செய்த உப்பும், ¼ பங்கு ஓமமும் கூட்டி சட்டியிலிட்டு மேற்சட்டி மூடி சீலைமண் செய்து 60 விராட்டியில் புடமிடச் சாம்பல் ஆகும். இச்சாம்பல் ¼ வராகனெடையளவு காலை, மாலை மிளகுக் குடிநீரில் கொள்ளக் குன்மம் போம்.

3. உலர்ந்த கையாந்தகரை, வெள்ளுள்ளி, உப்பு மூன்றும் சமன் கூட்டி கடுக்காய், நெல்லி வற்றல், தான்றிக்காய் இவற்றின் தோல் அதேஅளவு கொண்டு பானையிலிட்டு ஓடு மூடிச் சீலைமண் செய்து புடமிட்டுப் பொடித்துத் தக்க அளவு காலை, மாலை கொடுக்கக் குன்மம் போம்.

4. சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், இலவங்கப் பட்டை இவை

வகைக்குப் பலம் 1; ஓமம், இந்துப்பு, வெடியுப்பு, நவாச்சாரம் இவை வகைக்கு பலம் 2; வெள்ளுள்ளி, கடுகு, பொரித்த பெருங்காயம், சாரணைவேர், கொடிவேலி வேர்ப் பட்டை இவை வகைக்குப் பலம் 3; சூரத்துக் கடுக்காய்த் தோல் பலம் 15 இவற்றைப் பொடித்து, கள்ளிப்பால் படி 1, வெள்ளாட்டுச் சிறுநீர் படி 4-ம் கூட்டிப் பிசைந்து உலர்த்திப் பொடித்து, பிறகு 30 ஆற்றுத்தும்மட்டி காய்களை நான்கு நான்கு பிளவாகக் கீறி அவற்றுள் பொதிந்து பானையிலடுக்கி வாய்மூடிச் சீலைமண் செய்து பழைய குப்பை மேட்டில் நூறு எருவில் புடமிட்டெடுக்கச் சாம்பலாகும். இச்சாம்பல் ஒரு சிட்டிகையளவு காலை, மாலை தேன், இஞ்சிச்சாறு கலந்து கொடுத்து மோரும், சோறும் கொடுத்து மற்ற ஆகாரப் பொருட்களை நீக்கி வாரம் ஒன்றுக்கு 5 நாளாக 4 வாரங்கள் சாப்பிட்டுவர எண் வகைக் குன்மம்போம்.

5. நாரத்தங்காயை வளையமாகத் தறித்து உப்பு கூட்டி மட்கலத்திலிட்டுத் ததும்பக் கள்ளிப் பாலிட்டு வாய்மூடிச் சீலைமண் செய்து பூமியில் புதைத்து 40 நாட்கள் சென்றபின் எடுத்து ஒரு துண்டை இரண்டு பங்காக்கிக் காலை, மாலை கொள்ளக் குன்மம் போம். (சி.ம.)

எண்ணெய் வகை:-

1.வெள்ளுள்ளிச் சாறு, நொச்சி, மூக்கரட்டை, காட்டு முருங்கைப் பட்டை, வெள்ளைச் சாரணை, ஆடு தீண்டாப் பாளை, வேளைக் கீரை, கொட்டைக் கரந்தை, பிரமி இவற்றின் சாறு வகைக்கு 1 படி; வெள்ளாட்டுப்பால், வெள்ளாட்டுச் சிறுநீர், எலுமிச்சப்பழச்சாறு, புளிப்பு நாரத்தம் பழச்சாறு, செங்கழுநீர்க்கிழங்குச் சாறு, பிரண்டைச்சாறு, நெய் எண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு ½ படி கூட்டி சிறு தீயாக எரித்துக் குழம்பு பாகமாக்குக.சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லி, தான்றி, கோஷ்டம், கொடிவேலி வேர்ப்பட்டை, அழிஞ்சில் வேர்ப்பட்ண்ட, சிறுதேக்கு, இலவங்கம், சாதிக்காய், சாதிப் பத்திரி இவை வகைக்கு 1 பலம் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து மேற்படி குழம்பில் தூவிக் கடுகு பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு நெய்யும் கடுகுமாக ½ உச்சிக் கரண்டியளவு காலையில் மட்டும் சாப்பிட்டுவரக் குன்மம் யாவும் தீரும்.

2. வெள்ளைப்பூண்டுச்சாறு படி 1, பேய்க்குமட்டிச் சாறு படி 1, நெய் படி ¼ , விளக்கெண்ணெய் படி ¼ கூட்டி மெழுகு பதமாகக் காய்ச்சித் துழாவிக் கொண்டே வந்தபின் அதில் இந்துப்பு, நவாச்சாரம், கல்லுப்பு, வெண்காரம், பூநீறு இவை வகைக்குப் பலம் ஒன்று, கடுக்காய்த் தோல்

பலம் 5, சாதிக்காய், சாதிப்பத்திரி, கொடிவேலி வேர்ப்பட்டை, பொரித்த வெங்காயம் வகைக்குப் பலம் 2 கூட்டிக் கடுகு பதத்தில் இறக்கி மிளகு அளவு காலையில் மட்டிலும் கொடுக்கவும்.(It 'is Kummatti mezhugu)

Dose:- Pepper size only once in the morning to be swallowed with Sugar.

3. தோல், முளை நீக்கிய வெள்ளைப்பூண்டு பலம் 20, பொரித்த பெருங்காயம் பலம் 10, மெருகங்கிழங்கு தோல் சீவி உலர்த்தியது பலம் 5, கொடிவேலி வேர்ப்பட்டை பலம் 2 1/2 கழற்சிப் பருப்பு பலம் 1, இந்துப்பு, கறியுப்பு, நவாச்சாரம், வெண்காரம், சீனாக்காரம், வெடியுப்பு, வளையலுப்பு வகைக்குப் பலம் ½ இவற்றை இடித்து மைபோலரைத்து அத்துடன் சிற்றாமணக்கு நெய் 1 படி, பசுநெய் 1 படி கூட்டிக் காய்ச்சிக் கடுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு நன்றாய்க் கலக்கி ஒரு உச்சிக் கரண்டி வீதம் காலை, மாலை கொடுக்க குன்மநோய் போம். (சி.ம.)

இலேகியம் வகை:-

1.குன்மக் குடோரி:- (சி.வை. திரட்டு) இதில் சுண்டைக் காயளவு காலை, மாலை சிறிது மோர் அல்லது வெந்நீரில் அனுபானித்துக் கொடுக்க ருது காலத்திலுண்டாகும் சூதகச் சூலை (சூதக வாயுவின் வலி), குன்மம், பித்தவாயு, மாந்தம், அசீரணம் இவை தீரும்.

இஞ்சி பிரண்டை லேகியம்:- இஞ்சித் தோல் நீக்கி சிறு துண்டுகளாகத் தறித்து நெய் விட்டு வதக்கிப் பொடித்து பலம் 20, பிரண்டையை மோரிட்டு உப்பு கூட்டி வற்றலாக்கி இடித்த பொடி பலம் 10, கொத்துமல்லி, சீரகம், சிறு தேக்கு, சிற்றரத்தை, சோம்பு, குரோசாணி ஓமம், திப்பிலி, மிளகு இவை வகைக்குப் பலம் 1 (பொடி) பனங்கற்கண்டு ஒரு வீசை, எலுமிச்சம் பழச்சாறு படி ½, புளித்த காடி படி ½, கொடி நாரத்தம் பழச்சாறு படி ½ இவைகளைக் கூட்டிக் கரைத்து வடிகட்டி, காய்ச்சி, பாகு பதத்தில் மேற்படி பொடிகளைச் சிறுகச் சிறுகத் தூவி இலேகிய பதத்தில் எடுத்துக் கொள்ளவும்.

அளவு:- புன்னைக் காயளவு காலை, மாலை கொடுக்க குன்ம நோயும் வாந்தியும் போம். அழல் குன்மத்திற்கு ஏற்ற மருந்தாகும். (சி.ம.)

குறிப்பு:- இதில் நெய், தேன் சேர்க்கும்படி கூறவில்லை, ஆனால் இவ்விரண்டும் தக்க அளவில் இலேகியத்தில் சேர்க்கலாம்.

(My own view)

3. ஆமணக்கின் வேர், திருகுக் கள்ளி வேர்ப்பட்டை, பூவரசு வேர்ப்பட்டை, பெருமரத்து வேர்ப்பட்டை, சீந்தில் தண்டு, சாரடை வேர், வில்வவேர், அமுக்கிராங்கிழங்கு, சிறுதேக்கு, சிற்றாமுட்டி வேர் இவை வகைக்குப் பலம் 2, சுக்கு, திப்பிலி, மிளகு, சித்திர மூல வேர்ப்பட்டை, கண்டங்கத்திரி வேர், சீரகம், கருஞ்சீரகம், சோம்பு, குரோசாணி ஓமம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, இலவங்கம், புளிவஞ்சி, சதகுப்பி இவை வகைக்குப் பலம் 1, இவற்றை ஒன்றிரண்டாய் இடித்து 4 படி நீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து, அத்துடன் காடி, புளிப்பு மாதுளம் பழச்சாறு, புளியாரைச் சாறு, இஞ்சிச் சாறு, புளித்த தயிர்த் தெளிவு, நாரத்தம் பழச்சாறு, அரிசி கழுவிய கழுநீர் இவை வகைக்கு ரு படி கூட்டி பனைவெல்லம் ஒரு வீசை சேர்த்து, ஒரு கொதி வந்த பின் வெல்லம் நன்றாய்க் கரைந்த பிறகு வடித்து, வாயகன்ற கடாயிலிட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில், அதில் கொத்துமல்லி, மோடி, யானைத் திப்பிலி, வெண்மிளகு, அசோகப்பட்டை, வெள்ளி லோத்திரப் பட்டை, புங்கம் வேர்ப்பட்டை, பிரண்டை, பெருங்காயம் இவற்றை வறுத்துப் பொடியாக்கி வகைக்குப் பலம் 1, உளுந்து மாவு, கோதுமை மாவு, கொள்ளு மாவு இவை வகைக்கு உழக்கு வீதமும், எள் பொடி 1/8 படி, பெருங்காயம் பொரித்து பொடியாக்கியது 1/8 படி, இவற்றைக் கலந்து கிண்டி இலேகிய பதத்திலெடுத்து நெய் உழக்கும் தேன் ஆழாக்கும் சேர்த்துக் கிண்டி இறக்கவும்.

அளவு:- புன்னைக்காயளவு காலை, மாலை கொடுக்கக் குன்ம நோய்கள் நீங்கும், (சி.ம.)

4. அண்டலேகியம் (Traditional Process) எலுமிச்சம் பழம் 25, கோழி முட்டை 25, சீரகம் பலம் 25, சோம்பு பலம் 1, சர்க்கரை பலம் 25, நெய் பலம் 5 ¼ தேன் பலம் 5 ¼.

செய்முறை:- முட்டையின் வெண்கருவை மட்டும் ஒரு பாண்டத்திலிட்டு அத்துடன் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து சேர்த்து, சர்க்கரையை அதில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயெரித்து காய்ச்சிக் கிண்டிக் கொண்டேயிருந்து பாகு பதத்தில் சீரகம், சோம்பு வறுத்து இடித்து

வஸ்திரகாயஞ் செய்த பொடியைத் தூவிக் கிளறி, நெய் விட்டு இறக்கி வைத்துக் கிளறவும். ஆறிய பின் தேன் சேர்த்துக் கிண்டி ஜாடியில் வைக்கவும்.

அளவு:- கழற்சிக் காயளவு காலை, மாலை ஆகாரத்திற்கு முன் சாப்பிட்டு வர, எப்பேர்ப்பட்ட குன்ம நோயும் இரண்டு வாரத்தில் குணமாகும். வயிற்று வலி எதுவாக இருந்தாலும் குணமாகும். உஷ்ணம் தணியும், பசி தீபனமுண்டாகும். குன்ம நோய்களுக்குக் கைகண்ட அனுபவ முறை. யாவரும் இதனைக் கையாளலாம்.

Note:- Gastric troubles such as peptic ulcer., duodenal ulcer and chronic Appendicites etc. are sure to be responded to sucessfully when this Anda Lehiyam is administered under liquid diet. No need for operations. Siddha physicians can definitely Challenge these Cases to be cured with this Lehiyam without operations. It is worth-while trying this Lehiyam before operations are under taken in these cases. A combination of Silajath Parpam No. 1 and Sangu Parpam No. 4 (of S.R. Pharma) of each one or two pinches may be added to the Lehiyam and taken twice a day. This Process hastens recovery of the above abdominal ailments.

5. குன்ம லேகியம்:- (Traditional process) இலவங்கச் சூரணம், ஓமம் வறுத்திடித்த சூரணம், அதிவிடயச் சூரணம், கடுக்காய்ப் பூ சூரணம், கடுக்காய்ப்பிஞ்சு வறுத்திடித்த சூரணம் இவ்வைந்தும் வகைக்கு 5 பலம் சூரணம், இந்துப்பு பொடித்தது 2 ½ பலம், நெய் தெளித்து பொரித்திடித்த பெருங்காயப் பொடி 2 ½ பலம், பச்சை கருவேப்பிலை சிறிது மாங்காயளவு விழுதாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இவைகளை எல்லாம் ஒரு சட்டியில் ஒன்றாய்க் கலந்து பசுவின் மோர் 1 ½ to 2 (Madras Measure) படி விட்டுக் குழம்பு பாகமாகக் கரைத்து (or Quantity Sufficient) அடுப்பேற்றி சிறு தீயில் எரித்துக் கிளறிக் கொண்டே வர நீர் வற்றி இலேகிய பதம் வரும்போது கீழிறக்கி வாயகண்ட புட்டியில் வைத்து மூடி வைக்கவும். இதனைக் கறிவேப்பிலை இலேகியம் என்றும் கூறுவர்.

அளவு:- ½ முதல் 1 தோலா எடை இலேகியம் காலை, மாலை பசுவின் மோரில் அல்லது சுடு தண்ணீரில் அனுபானித்துக் கொடுக்க குன்மநோய், வயிற்றுவலி, பொருமல், ஏப்பம், அசீரணம், கிரகணி இவை குணமாகும். இதுவும் அனுபவ முறை. (S.R. Pharma) தேவையிருப்பின்

சர்க்கரை சிறிது மருந்து சாப்பிடும்போது சேர்க்கலாம். (Useful in diabetics and others for stomach troubles)

9. நெல்லிக்காய் இலேகியம் (Manuscript and Traditional) இதனையும் குன்ம இலேகியம் என்றே அழைக்கிறோம். ஏனெனில் அண்ட லேகியம் போல் இதுவும் குன்ம நோயில் வெகு சிறப்பாக வேலை செய்கிறது.

1.முற்றின நெல்லிக்காய் - 12 படி (Madras Measure)

2.பசு நெய் - ½ படி

3.நல்லெண்ணெய்- ¼ படி

4.அஸ்கா சர்க்கரை-6 வீசை

5.சுக்கு

6.மிளகு

7. திப்பிலி

8. திப்பிலி மூலம்

9. ஓமம்

10. சீரகம்

11. இலவங்கம்

12. ஏலக்காய் அரிசி

13. தக்கோலம்

14. கொத்துமல்லி

15. கூகை நீர்

16. அதிமதுரம்

17. வாய்விடங்கம்

இவற்றின் வறுத்திடித்த பொடி வகைக்கு 6 தோலா.

18. மேற்கொண்டு பசு நெய்- ¼ படி (Madras Measure)

19. நயம் தேன் ½ படி

செய்முறை:-

நெல்லிக்காயை ஒரு பாண்டத்திலிட்டு 30 படி (Madras Measure) தண்ணீர் விட்டு அடுப்பேற்றி வற்றக் காய்ச்சி, வெந்த காய்களைத் துண்டு படுத்தி அவற்றிலுள்ள விதை, நார் இவைகளைப் பொறுக்கி எடுத்து விட்டு நன்றாய்ப் பிசைந்து ஒரு சல்லடையில் சிறுகச் சிறுக வைத்துத் தேய்த்து வெண்ணெய் போல் வரக் கூடிய நெல்லிக்காயின் சதையை ஒரு வெண்கல உருளியில் போட்டு அடுப்பேற்றி நீர்ச்சத்து வற்றும்படி நன்றாய் வதக்கி, அப்பால் முதலில் கூறிய நெய்யும் நல்லெண்ணெய்யும் கலந்து அதில் விட்டுக் கிளறி, சர்க்கரையை நெல்லிக்காய் வெந்து வடித்த சாற்றில் கரைத்து பாகுகாய்ச்சி அதில் நெல்லிக்காய்ப் பாவினையையும் சூரணங்களையும் போட்டுக் கிண்டி பின்னால் கூறியுள்ள நெய்யையும் போட்டு நன்றாய் கிளறி இறக்கி ஆறிய பின் தேன் விட்டுப் பிசைந்து பளிங்கு சாடியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ½ முதல் 1 தோலா வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர குன்மம் யாவும் குணமாம். இத்துடன் கற்பூர சிலாசத்து பற்பம் நெ.1 அல்லது 2, சங்கு பற்பம் நெ.4 அன்னபேதிச் செந்தூரம் இவை வகைக்கு இரண்டு சிட்டிகை வீதம் சேர்த்து காலை, மாலை சாப்பிட்டு வர விரைவில் குன்ம நோய்கள் குணமாகும். தாம்பிர பற்பம் அல்லது செந்தூரத்திற்கும் இந்த மாதிரி, லேகியங்களை அனுபானமாக உபயோகிக்க குன்மம் எதுவாயிருப்பினும் விரைவில் குணமாகி விடும்.

அன்றியும் வயிற்று வலி, வாயு, பொருமல், கிரகணி, மேக நோய், அத்தி சுரம், உள் அழலை, காசம், சுவாசம், கயம், ஈளை, இரைப்பு, கைகால் எரிவு முதலிய நோய்களும் குணமாகி விடும்.

This Lehiyam is also worth-while trying in cases of peptic ulcer Duodenal ulcer and Appendicities etc., before operation is under taken, Several cases have been cured without operation by using the above parpams and this Lehiyam.

7. இஞ்சி ரசாயனம்:- (ஏட்டுப்பிரதி) அரைப்படி எலுமிச்சம் பழச்சாற்றில் இந்துப்பு ஒரு பலம் கரைத்து அதில் 10 பலம் மேல் தோல் சீவிய இஞ்சியை வில்லையாக அரிந்து போட்டு மூன்று நாட்கள் ஊறவைத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து கோஷ்டம், பெருங்காயம்,

அக்கிராகாரம் இவை வகைக்கு பலம் 1/8, பறங்கிப் பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்குப் பலம் 1/16, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றி, நெல்லிவற்றல், அதிவிடையம், மல்லி, சிங்கி, தாளிசபத்திரி, சீரகம், சதகுப்பை, மகரப்பூ, அதிமதுரம், சோமனுப்பு, பொட்டிலுப்பு, இலவங்கம், இலவங்கப் பத்திரி, சன்ன இலவங்கப்பட்டை இவை வகைக்கு ¼ பலம் விகிதம், இந்த 25 சரக்குகளையும் வெதுப்பி இடித்து ஒன்றாய்க் கலந்து தேன் படி ¼ , பசுநெய் ¼ படி விட்டு நன்றாய், பிசைந்து வைத்துக் கொண்டு நெல்லிக்காயளவு காலை, மாலை 40 நாட்கள் கொள்ள அஷ்ட குன்மம், நெஞ்செரிவு, வாந்தி, குடல் புரட்டல், நடுக்கம், கழிச்சல், வயிற்றிரைச்சல், மண்டைக் குத்து, பித்தப் படப்படப்பு, வாய் நீரூறல், விலாக்குத்து, ருத்ரவாயு, செரியாமை , அபானக் கடுப்பு, பொருமல், கைகால் ஒய்தல் இவைகள் யாவும் தீரும்.

மாத்திரை வகை (சி.ம)

1.தாம்பிர பற்பாதி மாத்திரை- (சி.ம.) செம்பு பற்பம், இலிங்கம், தாளகம், நவச்சாரம் இவை வகைக்குப் பலம் 1, வசம்பு சுட்ட சாம்பல், வாய் விடங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம் இவை வகைக்குப் பொடி பலம் ½.

அரைப்பு:- கொடிவேலிச்சாறு, புளிப்பு மாதுளைச்சாறு, கொடி நாரத்தைச்சாறு இம்மூன்று சாறுகளாலும் வகைக்கு இரண்டு நாளரைத்துக் குன்றியளவு மாத்திரை உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ஒரு உருண்டை வீதம் காலை, மாலை கொள்ள வலி குன்மம், வாந்தி குன்மம் நீங்கும். (சி.ம.)

2. இரச பற்பாதி மாத்திரை:- சுத்தி செய்த இரசம் பலம் 1, கல்வத்திலிட்டு காந்தட் கிழங்கின் சாறு விட்டு 10 நாளரைத்துப் பின் தேக்கிலைச் சாறு, தேக்குப் பூச்சாறு, கொடும்பைச் சாறு, துளசிச் சாறு இவற்றில் தனித்தனியே கை ஓயாமல் அரைத்து ஒரே வில்லையாக தட்டி உலர்ந்த பின் அதன் எடைக்குப் பச்சைக் காந்தட் கிழங்கை அரைத்து சற்று நீர் வற்றி வரும்போது இரண்டு துண்டுகளாகத் தட்டி அதன் நடுவில் இரச வில்லையை வைத்து இறுக அழுத்தி, உலர்த்தி ஏழு சீலை மண் செய்து மணல் மறைவில் 20 விராட்டியில் புடமிடவும்.

இவ்வாறு மீண்டும் நான்கு முறை புடமிட்டெடுக்க இரச பற்பமாகும். இப்பற்பத்திற்குச் சுத்தி செய்த வாளம், ஓமம், சீரகம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, மாசிக்காய் இவை சமன் கொண்டு கொடுக்காய்ப்புளியை நீரிற் கரைத்து அந்நீரைக் கொண்டு நான்கு நாளரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்யவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் தேகபலம், நோயின் கடுமை அறிந்து காலை, மாலை இஞ்சிச் சாற்றுடன் தேன் கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க அழல் குன்மம், சூலை குன்மம் போம் என சித்த மருத்துவம் கூறுகிறது. உப்பு நீக்கவும்.

மெழுகு வகை:-

1. குன்மக் குடோரி மெழுகு (கண்ணுசாமியம்):

1. "மண்ணோட்டில் வீரம் மருவப் பலமிட்டே
கண்ணோட்டம் வைத்தெரித்துக் காணெருக்கன் கொண்ட விலை
நாடிப் பிழிச்சாற்றில் நற்சுறுக்கோர் சாமமிட்டுக்
காடிக்காரங் காசு காட்டு"

2. "காட்டிய பின்னாற் சுறுக்குக் காணவிரு சாமம்
வாட்டி மெழுகாய் வருநேரம் நீட்டே
கலுவத்திற்றாக்கிக் கலசப்பாலிட்டே
வலுவாயரைக்க வனப்பு"

3. "வனப்பா மெழுகு வருங்குன்மம் வாய்வு
கனமாம் பெருஞ்சன்னி காணக்- குணமாகும்
பச்சைப் பயறளவே பற்றியிருசந்தி
இச்சை பொழுதாறே எண்."

ஒரு பலம் வீரத்தை முறைபோல் சுத்தி செய்து ஒரு மண்ணோட்டில் வைத்து சிறு தீயில் எரித்து எருக்கம் பழுப்பு இலை பிழிந்தெடுத்த சாற்றால் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து வீரம் கரைந்த பின் ஒரு விராகனெடை வெள்ளிக் காடிகாரம் போட்டு மீண்டும் அச்சாற்றாலிரண்டு சாமம் சுருக்குக் கொடுத்து, மெழுகு பதத்தில் சேதப் படாமல் ஓலையால் வழித்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலால் நான்கு சாமம் அரைத்து கொம்பு டப்பியில் வைத்திடுக!

இதனை ஆறுமாதம் வரை உபயோகப்படுத்தக் கூடாது. பின்னர் குன்மம், பாரிச வாயு, சன்னி முதலிய நோய்களுக்குச் சிறு பச்சைப் பயிறளவு பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கவும். முதல் நாள் சில தேதிகளுக்கு வாந்தியானாலும் ஆகும். மறு நாள் அதற்கு மறுநாள் வாந்தியாகாது. இதற்குள் வாய் வேக்காடு உண்டாகிறதாவென்று கவனித்துக் கொண்டே வர வேண்டும். அப்படி புலப்பட்டவுடனே மருந்தை நிறுத்திவிட வேண்டும். மீண்டும் தேவையாயின் 10 நாள் இடைவிட்டு இரண்டு மூன்று முறை கொடுக்கக் குணமாகும்.

பத்தியம்:- பால் கஞ்சி நல்லது. புளி சேர்க்காமல் இச்சாபத்தியமாக வைத்தல் வேண்டும். இது குன்ம நோய்க்கு கைகண்ட மருந்து. அசாத்தியமெனக் கைவிட்ட பிணியாளிகள் இதனைச் சாப்பிட்டு குணமடைந்ததுண்டு. (This is worth- while trying in cases of Peptic ulcer, Duodenal ulcer, Appendicitie and Carcinoma of gastro intestinal tract) தேக கூறும் காலபலமும் அறிந்து இம் மெழுகை உபயோகிக்க நன்மை உண்டாகும்.

2. வீரமெழுகு- (ஏட்டுப்பிரதி)

பேயன் வாழைப்பழம் 25 எடுத்து அத்திப்பட்டை இடித்த பொடி பச்சையாக (Green and fresh) ஒரு பிடி, வெண்காரம் பொடித்தது ½ பலம், உமி (சுனையுள்ளது) 1 பிடி, இவற்றையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு சட்டியிலிட்டு நன்றாய்ப் பிசைந்து ஒரு கெட்டித் துணியில் கட்டித் தொங்க வைத்திருந்து (அடியில் பீங்கான் கோப்பையைச் சாறு வடிந்து கொண்டிருப்பதற்காக வைத்திருக்க வேண்டும்.) ஆறு மணி நேரஞ் சென்று அந்தப் பொட்டலத்தைப் பிழியச் சாறுவரும். இந்த சாற்றுக்குப் பெயர் **"வாழைப்பழ செயநீர்"** என்பர்.

இதற்கு மேல், சுத்தி செய்த வீரம் ஒரு பலம் எடுத்து இரும்பு கரண்டியைச் சுத்தமாகத் துலக்கி வீரக் கட்டியை அதில் வைத்து முன் தயாரித்த வாழைப்பழ செயநீர் கொண்டு சிறு தீயில் சுருக்குக் கொடுக்கவும், வீரம் கரைந்து மெழுகாகும். இறுகிய பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். அதை வழித்து ஒரு கல்வத்திலிட்டு முலைப்பால் கொண்டு நான்கு சாமம் அரைத்து வழித்துக் கொம்புச் சிமிழில் வைக்கவும். ஒருக்கால் நீர்பாகமாய் இருந்தால் சிறிது திரிகடுகுத் தூள் தூவிக் கலந்து

வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு கடுக்ளவு, சிறிது பனை வெல்லத்திற்குள் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் சாப்பிடக் குன்ம நோய் யாவும் குணமாகும். மெழுகைத் தயாரித்து ஆறு மாதங்களுக் கப்புறம் தான் உபயோகிக்க வேண்டும். பத்தியம், பிணி நீக்கம் யாவும் மேலே குன்மக் குடோரி மெழுகுக்குக் கூறியது போலேயாகும். அனுபவ முறை.

3. குன்மக் குடோரி இலேகியம்:- (சிகிச்சா ரத்ன தீபம்.)

பனை வெல்லம் பலம் 10, நவாச்சாரம், வெங்காயம், வளையலுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சோற்றுப்பு, சுத்தித்த பூநீர், சூடம் இவை வகைக்குப் பலம் ஒன்று, வெள்ளாட்டு அமுரி படி ½.

செய்பாகம்:-

ஒரு பழகின பாண்டத்தில் பனை வெல்லத்தையும் வடிகட்டின வெள்ளாட்டு அமுரியையும் விட்டுக் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீ எரித்து பாகுபதம் வரும் சமயம் மற்ற சரக்குகளை இடித்துப் பொடித்துத் தூவிக் கிண்டி இலேகிய பதத்தில் இறக்கி ஆறவைத்துச் சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டு தேன் விட்டு அரைத்து மெழுகு பதமாக்கி ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்துக.

உபயோகம்:- வேளைக்கு சிறு சுண்டைக்காயளவு காலை, மாலை இரு வேளை தனியாக வேனும் அல்லது சூதக பற்பத்துடன் சேர்த்தேனும் கொடுக்க வலி குன்மம், சத்தி குன்மம், செரியாமை, வயிற்றுப்பிசம் முதலியன தீரும். இச்சாபத்தியம்.

4.சௌபாக்கியச் சுண்டி:- (சிகிச்சாரத்ன தீபம்)

ஆவின் பால் படி 2, சர்க்கரை வீசை ½, சுக்கு பலம் 8, வாலுளுவையரிசி, ஓமம், வாய் விளங்கம், திப்பிலி, மிளகு, ஏலம், கரிசாலை, சதகுப்பை, தனியா இவை வகைக்குப் பலம் 1.

செய்முறை:-

இப்பன்னிரண்டு சரக்குகளில் முதலில் ஒரு இரும்பு கடாயில் ஆவின் பாலை விட்டு அடுப்பேற்றி சுத்தப்படுத்திய வெள்ளைச் சர்க்கரையைப் போட்டு சிறு தீயாக எரித்து பாகுபதம் வரும் போது மற்ற சரக்குகளை

இடித்தெடுத்த சூரணத்தைத்தூவிக் கிண்டி இலேகிய பதத்திற்குப் போதிய நெய், தேன் விட்டுப் பிசைந்து வைத்துக் கொள்க.

உபயோகம்:- வேளைக்குச் சுண்டைக்காய்ப் பிரமாணம் தினம் காலை, மாலை சாப்பிட குன்மம், வலி, சூதக வாயு, வயிற்றுப்பிசம், அசீரணம் முதலியன குணமாகும்.

5.எட்டு வகைக் குன்மம் தீர:- முக்கரைச் சாரணை வேரைத் தக்க அளவில் காலை, மாலை ஆவின் பாலில் அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் ஒரு மண்டலத்தில் எண் வகைக்குன்மமும் தீரும். அன்றியும் நரை, திரை மாறும். உடல் இறுகும், பகலில் நட்சத்திரம் தெரியும் என்கிறார். (ஏடு.)

6. குன்மம், வாந்தி, ஏப்பம், வாய் நீரூறல் இவற்றிற்கு குடிநீர். (ஏட்டுப்பிரதி)

ஏலக்காய், நெல்லி வற்றல், பசும் பயிறு, மிளகு, நெற்பொரி, வில்வவேர் இவை வகைக்கு 2½ பலம் எடுத்துத் தூள் செய்து இரு பாகமாய்ப் பிரித்து ஒரு பாகத்தைச் சட்டியிலிட்டு அதில் இரண்டு இளநீரைக் கண் திறந்து விட்டு அடுப்பேற்றி எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துக் காலையில் சாப்பிடவும். மறு பாதியை இதே மாதிரி மாலையில் குடிநீரிட்டு வடி கட்டி சாப்பிடவும். இப்படி 6 நாட்கள் 12 வேளை சாப்பிட்டு வரக் குன்மம் தீரும். அத்துடன் கூடிய வாந்தி, ஏப்பம், வாய் நீரூறல், பொருமல், செரியாமை, அரோசகம் முதலியனவும் குணமாகும்.

பத்தியம்:- உப்பிட்ட பருப்பும், பசுவின் மோரும், வெந்நீரும், தூதுவளை, பொன்னாங்கண்ணி, விளாங்காய், நெல்லிக்காய், பசு நெய், தேன் இவை ஆகும். புளி கூடாது. ஏழாம் நாள் ஸ்நானம் செய்து, எட்டாம் நாள் புளி கூட்டவும். (Manuscript) கைகண்ட குடிநீர்.(This is worth while trying in peptic ulcer Duodenal ulcer, Appendicities and Carcinoma of Gastro intestinal tract.)

பற்பச் செந்தூரங்கள்:-

1.குன்ம காலன் என்ற செம்பு பற்பம்:-

ஒரு அரிசி எடை காலை, மாலை, தேனில் குழப்பிக்கொடுத்து சாதிக்காய்க் குடிநீர் கொடுக்க எண்வகைக் குன்ம நோய்களும் குணம் ஆகும். (This is worth while trying in peptic ulcer Duodenal, ulcer, Appendicities and Carcinnonoma of Gastro intestinal tract.) இத்துடன் சங்கு பற்பம், உப்புச் செந்தூரம், இவை சேர்த்தும் கொடுக்கலாம்.

பத்தியம்:- புளி நீக்கி இலகுவான ஆகாரம் கொடுக்கவும்.

N.B:- You can also give Drakshi Kudineer mentioned under item 22 of Vanthi noi as anupanam in all Gunmam diseases particularly சத்தி குன்மம், பித்த குன்மம் மற்றும் எரி குன்மம்.

2.தேரன் மருத்துவ பாரதத்தின்படி:-

செம்பு பற்பம், செந்தூரம் வாத குன்மத்திற்கு நேர் மருந்தெனவும் சாதிக்காய் குடிநீருடன் கொடுக்கும்படியாகவும் கூறப்பட்டு இருக்கிறது.

காரணம் யாதெனில்:- வாத குன்மத்திற்கீடான கர்ணனை செம்புக்கீடான அர்ச்சுனன் கொன்றான் எண்பதும், சாதிக்காய்க்கு ஈடான துஷ்டத்துாய்மன் உதவியால் வென்றான் என்பதும் கூறப்பட்டு உள்ளது. 16, 17- ம் நாள் பாரதப் போரில் கர்ணன்மாண்டான் என்பது சரித்திரம். வாத குன்மம் வாத சுரத்திற்குத் தொடர்பு நோயாக ஏற்படும்.

(மேற்கோள்-விருத்தம் பக்கம் 11. தேரையர் மருத்துப் பாரதம்)

"வேதவி யாசப் பொருப் பிலருட் சௌபாக்கிய
விக்கிரன ராசன் வரைத்த படியே வாத
வெப்பினுக்கீ ரைந்தே நாளதற் குளெந்த
வினைகளும் வீடுமிக் குமுதநோய்க் குள்ளாகி
வாதுபுரி தனுவாதத் தினுக்கைந்தே நாளா
மற்றதற்கு நோயடங்கி வருத்தஞ் செய்யும்
வருகன்ன வினைக்கெல்லா மிரண்டே நாளா
மற்றவையும் மேற்படியே அவைகள் போலாம்

பாதிநாளே நோய்ச்சல் லியங்களுக்கப்
படியே யெல்லாப் பிணியும் விடமித் தொன்றாம்
பருவரலாம் வாதசேட் பாந்தத்திற்கும்
பாதி நாளே சரியிப்பதி னெட்டே நாள்
காதுமமர் வீடுமர்க் குந்துரோண ருக்குங்
கண்ணக் குஞ்சல்லியற் குங்கதைக்கு முன்னாங்
கர்த்தருக் குள்ளேமற றப்படையு மாரதருங்
காவலரு மடங்கி நிற்குங் கணக்குத்தானே."

பீஷ்மர் வாத சுரம், இதற்குப் பத்து நாட்கள் கெடு, சுரம் ஆரம்பித்த பத்தாம் நாள் வாத சுரம் தணியும், பீஷ்மர் அர்ச்சுனனால் பத்தாம் நாள் போரில் மாண்டபடியால் இந்தக் கருத்து நிலவியது. பதினோறாம் நாள் முதல் ஐந்து நாளில் தனுர்வாதம் என்னும் துரோணர் மாண்டார். 16, 17-ம் நாள் பாரதப் போரில் கர்ணன் மாண்டான். கர்ணன் வாத குன்மத்தைப் பிரதிபலிக்கும். அர்ச்சுனனால் கர்ணன் மாண்டபடியால் செம்பு பற்பம் இதற்கு நேர் மருந்தாகியது. பதினெட்டாம் நாள் போரில் 1/2 நாளில் சல்லியனும் மீதி ½ நாளில் துரியோதனன் அவனைச் சேர்ந்த சைனியங்கள் யாவும் மாண்டனவாம். ஆதலால் வாத கப நோய்கள் தொலைந்தன என அறிகிறோம்.

2. இரச பற்பம், கருவங்க பற்பம்:-

இவை தனித்தனியே அரிசி எடை வீதம் காலை, மாலை 3 முதல் 5 நாட்களுக்கு கற்பூர சிலாசத்து பற்பம், சங்கு பற்பம் வகைக்கு 1/2 சிட்டிகை வீதம் கலந்து தேனில் குழப்பிக் கொடுக்க குன்ம நோய்கள் தீரும். மேலே கூறப்பட்ட, இலேகியம், குடிநீரை இவற்றிற்கு அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

பத்தியம்:- பால் கஞ்சி கொடுக்கலாம். தேவையானால் மருந்தை 10 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை, இரு முறை 3 முதல் 5 நாட்கள் காலை, மாலை கொடுக்கலாம்.

3. வெள்ளைப் பாடாண பற்பம் ஒன்று குன்ம நோய்க்கு ஆதரவாக சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளது.

குன்ம நோயில் உணவு விதிகளெப்படி:- என்பதை சித்த மருத்துவத்தில் கூறியுள்ளார். குன்ம நோய் தீனிப்பையைப் பற்றி வருமாதலால் உணவு எளிதில் செரிக்கக் வேண்டும். இருமுறை வடித்த சோறும், இளங்காய்கறிகளும் உத்தமம், இளங்கத்திரி, முருங்கை, வெண்டை, பீர்க்கு, புடலம் போன்ற பிஞ்சுக் காய்களை உபயோகிக்கலாம். எளிதில் செரிக்கக் கூடாத தேங்காய், கொள்ளு, உளுந்து, மாமிசம் முதலியவைகளும், சோறும், நீர்வாழ் பொருட்களாகிய மீன், கருவாடு முதலியவைகளையும் நீக்கி வைப்பது நல்லது. செரிப்புத் தன்மையில்லையாயின் கஞ்சி வகைகள் கொள்ளல் வேண்டும். இஞ்சி, மாகாணிக் கிழங்கு, பிரண்டை, பச்சைக் கொத்துமல்லி, புதினா இவற்றின் துவையல் மிளகாய் சேர்க்காமல் தயாரித்தும் உண்ணலாம். ஊறுகாய்களும் உண்ணலாம்.

குன்ம நோய் ஹரங்கள்:-(வைத்திய சதகம்)

கடிதான நொச்சிலு முழவுமண் குடிநறுங்
கருது முழவூரு நீரும்
காட்டாமணக் குடன்சிறு மல்லிபெரு மல்லி
கருவேம்பு தாணி நெல்லி
கடுக்காயும் புங்குடன் பஞ்சலவ ணஞ்சுக்கு
கரந்தையு மெவச்சாரமுங்
காயமுட னொட்டறை யுமாயிலின் புட்டையுங்
கழல்வி ரையுமுள் ளங்கியும்

வடிவான புளியன் புறணியின் சாம்பலும்
வன்பனைப் பூச்சாம்பலும்
வாலுளுவை சீந்தியுஞ் சிறியதும் மட்டியும்
வனமுருக் கிளநீரதும்
வசம்புகண் டங்காலி யுள்ளிசிறு வழுதலையு
மாவிலிங்கம் பட்டையும்
மாதுளம் பழநிம்பு நாரத்தை யின்பழம்
மருவு சதுரக் கள்ளியும்

திடமான சத்தியின் சாரமும் வேளையுந்
தேவதாரமும் வில்வமுஞ்
சீரகந் தழுதாழை பாதிரியின் வேரதுந்
திப்பிலிமூல மதுவுஞ்
சித்திர மூலியுமாற் றினிற்சி விறியுஞ்
செவ்வியந் திப்பிலி யதுஞ்
சீரான புளியாரை நெருஞ்சியின் வேரதுஞ்
சேருங்க ருஞ்சீரமுங்

கொடிதான சாரணை மூக்குரட்டை யின்வேருங்
குலவுநல் லெண்ணெ யதுவுங்
கூகை நீ ராவின்பால் புளிகருணை யின்கந்தங்
குப்பையின் மேனியதுவுங்
கொள்ளதின் குடிநீரு மோண்ட வெண்ணெயுங்
குமிழதின் வேரிதெல்லாங்
கொடியகுன் மங்களும் பீலிகை ஹரமென்று
குறுமுனி யுரைத்த படியே.

நொச்சி, உழமண், உழமண் ஜலம், காட்டாமணக்கு, சிறுமல்லி, பெருமல்லி, கருவேப்பிலை, தான்றி, நெல்லி, கடுக்காய், புங்கு, பஞ்சலவணம், (அதாவது வளையலுப்பு, கல்லுப்பு, மரவுப்பு, அமுரியுப்பு, அட்டுப்பு)-சுக்கு, கரந்தை, எவச்சாரம், பெருங்காயம், ஒட்டறை, ஆயில்மரப்பட்டை, கழற்சி வித்து, முள்ளங்கி, புளியன் புறணிச்சாம்பல், பனைப் பூச்சாம்பல், வாலுளுவையரிசி, சீந்தில் கொடி, சிறுதும்மட்டி, வனமுருக்கு, இளநீர், வசம்பு, கண்டங்கத்திரி, உள்ளி, சிறுவழுதலைவேர், மாவிலங்கம்பட்டை, மாதுளம்பழம், வேம்பு, நாரத்தையின் பழம், சதுரக்கள்ளி, சத்திச்சாரம், வேளை, தேவதாரம், வில்வம், சீரகம், தழுதாழை, பாதிரி வேர், திப்பிலிமூலம் சித்திர மூலம், செவ்வியம், திப்பிலி, புளியாரை, நெருஞ்சி வேர், கருஞ்சீரகம், சாரணையிலை, மூக்குறட்டை, வேர், நல்லெண்ணெய், கூகைநீர், ஆவின்பால், புளி, கருணைக் கிழங்கு, குப்பைமேனி, கொள்ளுக் குடிநீர், சிற்றாமணக்கெண்ணெய், குமிழ் வேர் முதலான சரக்குகள் யாவும் கொடிய நோய்களான குன்மம், பிலீகம் ஆகிய இவற்றின் ஹரங்களென அறிகிறோம்.

இரத்த குன்மம், சத்தி குன்மம் ஹரங்கள் கூறுகிறார்:- (வை.ச)

“திடமான புங்கம்வேர் ஆயில் பட்டை
சிறியவ ழுதலைவேருங் கண்டங் காலி
கொடிவேலி சாரணையு மூக்கு ரட்டை
கொள்ளுடனே வெள்ளுள்ளி எள்ளு காயம்
வடிவான முள்முருக்க னிலையும் பட்டை
வனமுருக்கன் தோல்சாம்ப லெவாச்சாரந் தான்
கடிதான விரத்தகுன்ம மென்றும் பேராய்க்
கருதுவார் சத்தி குன்ம ஹரங்க ளாமே.”

புங்கம் வேர், ஆயில்பட்டை, சிறுவழுதலை வேர், கண்டங்கத்திரி, கொடிவேலி, சாரணை, மூக்கரட்டை, கொள்ளு, வெள்ளுள்ளி, எள்ளு, காயம், முள் முருக்கனிலை, முள் முருக்கன் பட்டை, வனமுருக்கன்தோல் சாம்பல், எவாச்சாரம் ஆகிய இவற்றை இரத்த குன்மம், சத்தி குன்ம ஹரங்களெனக் கூறுவர்.

குன்ம நோய்ப் பரிகாரம் பற்றி சில முக்கிய குறிப்புகள்:-

1. கழிச்சலுக்குக்கொடுப்பதின் மூலம்:-

மலக்கட்டை போக்குவதுமல்லாமல் வ்ாயுவையும் அகற்றி வயிற்றுப்புண் ஆற்றுவதற்கு 1 முதல் 3 தினங்களுக்கு காலையில் மட்டும் ஒரே வேளை-வெள்ளை எண்ணெய், கழற்சி எண்ணெய், வாதநாசத் தைலம், சித்தாதி எண்ணெய், மேகநாத எண்ணெய், கலிங்காதி எண்ணெய் இவற்றிலேதேனுமொன்றைத் தக்க அளவில் கொடுத்துப் பத்தியம் வைக்கவும், பால், கஞ்சி ஆகாரம் கொடுக்கலாம்.

2. வாயுவை அகற்றிப் பசித்தீயைத் தூண்டுவதற்கு:-

திரிகடுகு இலேகியம், வில்வாதி இலேகியம், அண்ட இலேகியம், குன்மக் குடோரி, இலேகியம், கண்டாத்திரி இலேகியம், (இஞ்சி லேகியம்), பஞ்சதீபாக்கினி லேகியம் அல்லது சூரணம், நாரத்தம் பழ இலேகியம், கேசரி இலேகியம், சாரடை இலேகியம், அஷ்ட தீபாக்கினிச் சூரணம், மந்தவாயுச் சூரணம், கறிவேப்பிலைச் சூரணம், கறிவேப்பிலை இலேகியம்,

நெல்லிக்காய் இலேகியம் இவற்றிலேதேனும் ஒன்றைத் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்து வரலாம்.

3. அஷ்ட குன்மங்களுக்கும் சில பொது மருந்துகளாவன:-

1. தாம்பிர பற்பம், சுண்ணம், செந்தூரம் காலை, மாலை அரிசி எடை தேனில் கொடுத்து சாதிக்காய்க் குடிநீர் கொடுக்கவும்.

2. இரசபற்பம், சுண்ணம், அரிசி எடை பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கவும், பத்து நாட்கள் சென்று மீண்டும் ஒரு முறை கொடுக்கலாம்.

3. கருவங்க பற்பம் அல்லது திருவங்க பற்பம் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை திரிகடுகு தேனில் கொடுக்கலாம்.

4. கெந்தி பற்பம், சுண்ணம் இவை 1 முதல் 2 குன்றி எடை திரிகடுகு, தேன் கலந்ததில் காலை, மாலை கொடுக்கலாம்.

5. கெந்தக சுடர்த் தைலம் 5 முதல் 15 துளிகள் காலை, மாலை சிறிது கரும்பு சர்க்கரையில் கலந்து சாப்பிடலாம்.

6. பூர பற்பம், பூரக்கட்டு பற்பம் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை திரிகடுகு, தேனில் கலந்து கொடுக்கலாம்.

7. சண்டரச பற்பம், சாதிலிங்கப் பற்பம், செயரச பற்பம், சீனரச பற்பம் இவைகளிலொன்றை 1 முதல் 2 அரிசி எடை பனை வெல்லத்திற்குள் பொதிந்து காலை, மாலை விழுங்கச் செய்யலாம். 3 நாட்கள் கொடுத்து அப்பால் 10 நாட்கள் கழித்து தேவையானால் மீண்டும் மூன்று நாட்கள் மருந்து கொடுக்கலாம்.

8. துருசுபற்பம், சுண்ணம், செந்தூரம், இவைகளிலொன்றை அரிசி எடை, காலை, மாலை திரிகடுகு, தேனில் கொடுக்கலாம்.

9. சவ்வீர பற்பம் (பிரமாஸ்திரம் Vide S.R. Pharma) அரிசி எடை காலை, மாலை பனை வெல்லத்தில் பொதிந்து 3 நாட்கள் விழுங்கலாம்.

மீண்டும் 10 நாட்கள் சென்ற பின் மறு முறையும் 3 நாட்கள் மருந்தைக் கொடுக்கலாம்.

10. வீரமெழுகு, வீரச்செந்தூரம் அவ்வவற்றிற்குரிய அளவுப்படி எடுத்து மெழுகை பனை வெல்லத்திலும், செந்தூரத்தைத் திரிகடுகு, தேனிலும் அனுபானித்து காலை, மாலை 3 நாட்கள் கொடுக்கலாம்.

11. சங்கு பற்பம் எண். 4 சிலாசத்து பற்பம் எண்.1 அன்னபேதி செந்தூரம், உப்புச் செந்தூரம் இவை அவ்வவற்றிற்குரிய அளவுப்படி எடுத்து, மந்த வாயுச் சூரணம் சிறிது கூட்டி தேன்கலந்து குழப்பிக் காலை, மாலை 7 நாட்கள் கொடுக்க எல்லாவித குன்ம நோய்களும் நீங்கும். அனுபவமாகக் கையாண்ட முறை இது. (For Preparations please refer to S.R. Pharmacopoeia)

12. சுயமாக்கினிச் செந்தூரம் (S.R. Pharma) 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை திரிகடுகு அல்லது மந்த வாயுச் சூரணம் தேன், கலந்ததில் அனுபானித்துக் கொடுத்துவரக் குன்மம் தீரும்.

13. நவ உப்புச் சுண்ணம், ஐந்துப்புச் சுண்ணம், உப்புச் செந்தூரம், உப்புக்கட்டு, உப்பு பற்பம் இவைகளில் ஒன்றை மந்தவாயு, பஞ்ச தீபாக்கினி இச்சூரணங்களில் ஒன்றைக் கூட்டி தேன் கலந்து காலை, மாலை கொடுத்து வரக் குன்மம் குணமாம் (S.R. Pharma)

14. சிறு காடை இறகு பற்பம், கிளிஞ்சல் பற்பம், வெள்ளி பற்பம், பலகறை பற்பம், முத்து பற்பம், சவர்க்காரச் சுண்ணம் இவற்றைத் தனியாக வேனும், கலந்தேனும் தக்க அனுபானத்தில் அவ்வற்றிற்குரிய அளவுப்படி போதிய நாளளவில் மருந்தைக் கொடுத்து, பத்தியம் வைக்கக் குன்ம நோய் குணமாகும்.(S.R. Pharma)

15. குமட்டியுப்பு சூரணம், நெய், எண்ணெய், மெழுகு, குழம்பு இவற்றிலொன்றைத் தக்க அளவில், தக்க நாளளவில் கொடுக்க குன்ம நோய்கள் குணமாகும். மலம் கழியும்.

16. நாயுருவி உப்பாதிக் குழம்பு-இதில் ஒரு குன்றி முதல் ½ கழஞ்சு எடை வரை எடுத்து அத்துடன் தாம்பிரச் செந்தூரம் ஒரு குன்றி எடை முதல் ஒரு பணவெடை வரை வைத்து வெள்ளைச் சர்க்கரையும் கலந்து காலை,

மாலை, அரை மண்டலம் கொடுக்க எண் வகைக் குன்மமும், வாய்வு முதலியனவும் தீரும். (சி.வை. திரட்டு)

17. பஞ்ச சூத மெழுகு- உளுந்தளவு காலை, மாலை மூன்று நாட்கள் பனை வெல்லத்திற்குள் பொதிந்து விழுங்கிப் பிரண்டைக் குடிநீர் அனுபானமாகக் கொடுக்க எண்வகைக் குன்மம் போம். இது ஒரு பெரிய மருந்து, இன்னும் பல கொடிய நோய்களுக்குத் தக்க அனுபானத்தில் கொடுக்கக் குணமாகும். (சி.வை. திரட்டு.)

18. குன்மக் குடோரி லேகியம் (மீண்டும் இங்குக் கூறுகிறேன். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.) இதில் சுண்டைக்காயளவு சிறிது மோர் அல்லது சுடுதண்ணீரில் அனுபானித்துக் காலை, மாலை கொடுக்கக் குன்மம் போம். ருது காலத்திலுண்டாகும் சூதகச் சூலை (Dysmennorrhoea) விரைவாயு, (Orchitis) பித்தவாயு, மந்தம், அசீரணம் இவை குணமாகும். (சி.வை. திரட்டு)

19. வாந்தி, ஓக்காளம், ஏப்பம், வயிற்று வலி, அசீரணம் இவை காணின் குடிநீர்:-

இந்துப்புவை தண்ணீர் தெளித்து அரைத்து வசம்பு ஒரு துண்டுக்குக் கவசம் செய்து உலர்த்திச் சட்டியிலிட்டு எரித்துச் சாம்பலாக்கி, அத்துடன் ஏலரிசி, சுக்கு, மிளகு இவை சமஅளவு ஒன்றிரண்டாய்த் தட்டி சேர்த்து பானையிலிட்டு தண்ணீர் படி விட்டு, நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி, வடிகட்டி சிறிது சர்க்கரை சேர்த்துக் காலை, மாலை கொடுக்க மேற் கூறிய நோய்கள் உடனே தீரும்.

20. வயிற்று நோய் நிவாரணி அல்லது பச்சைக் கற்பூரச் சூரணம்:-

தோல் சீவிய சுக்குச் சூரணம்	1பங்கு
ஏலக்காயரிசி வறுத்திடித்த சூரணம்	½ பங்கு
பச்சைக் கற்பூரம்	¼ பங்கு

இம்மூன்று பொடிகளையும் கலந்து வைத்துக் கொண்டு சமம் சர்க்கரை சேர்த்து வராகனெடையளவு சூரணம் காலை, மாலை தேனிற்

கொள்ள வயிற்று வலி, பித்த வாயு, வாந்தி, விக்கல், அசீரணம், வெள்ளோக்காளம், மார்பு நோய் இவை குணமாகும்.

21. வலி குன்மத்திற்கு அயவீரச் செந்தூரம்-இதனை அயச் செந்தூரமென்றும் கூறுவர்:- (ஏடு-யூகி முனி வாத வைத்தியம்)

"மெய்யான வீரமயம் மேன்மைபெற
எடைசேரு மிகுதிநீரைக்
கையார விட்டாட்டிக் காதலுடன்
கடமிட்டுக் கணிந்தெரிக்க
அய்யாரத் தீயெரித்து அடைவாக
வுண்ண வலி குன்மம்போகும்
பொய்யாடும் வாதியர்க்குப் போசனமுங்
கிடையாது புலையர் தாமே."

இது அய வீரச் செந்தூரம், அயச் செந்தூரம் என்றும் கூறுவர். சுத்தி செய்த அயப் பொடியும், சுத்தி செய்த சவ்வீரமும் சம எடை எடுத்துக் கல்வத்தில் ஒன்று படக் கலந்தரைத்து அப்பால், சங்கு நீர், புகை நீர், வாய் நீர் என்றழைக்கப்படும் வெடியுப்புத் திராவகம் அல்லது தண்ணீர் இவற்றிலேதேனும் ஒன்றைவிட்டு இரண்டு நாட்களரைத்து இலேசு வில்லையாக எரிப்புச் சட்டியில் தட்டி, இரவியுலர்த்தி மேற் சட்டி மூடி ஏழு சீலை மண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்து மூன்று நாட்கள் எரிக்க வேண்டும். தினம் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை எரிக்க வேண்டும். இரவில் எரிப்பை நிறுத்திக் தணலில் அடுப்பின் மேலேயே வைத்திருக்க வேண்டும். முதல் நாள் தீபாக்கினி கமலாக்கினியாகவும், இரண்டாம் நாள் கமலாக்கினி காடாக்கினியாகவும், மூன்றாம் நாள் காடாக்கினியாகவும் எரிக்க வேண்டும். அப்பால் ஆறின பின் கவசத்தைப் பிரித்து அடிச் சட்டியிலுள்ள செந்தூரத்தை மட்டும் சேகரித்துப் பொடித்துப் பாட்டிலில் வைக்கவும். இந்தச் செந்தூரத்தை அரிசி எடை திரிகடுகு தேனில் காலை, மாலை கொள்ள வலி குன்மம் குணமாகும். மற்றும் அயவீரச் செந்தூரத்தில் கூறிய பிணிகள் யாவும் தீரும்.

(S.R. Pharma)

22. வலி குன்மத்திற்கு கல்லுப்புச் சுண்ணம். (ஏடு-யூகி. முனி வாத வைத்தியம்.)

நழுகாமற் கடல் நுரையும் நாட்டுப்பும்
எடை சேர்த்து நலம் தாட்டி
வழுவாமற் புடமிடவே வடிவான
சுண்ணாம்பாம் வகை நான் கொன்று
பழுவான வன்னியிட்டுப் பாகமா
யுண்ண வலி குன்மம் போகும்
கழுவடியிற் காத்திருந்து காதலுறும்
நாய் போலே காணுவாரே.

கடல் நுரையும் சோற்றுப்பும் சமம் கூட்டிக் கல்வத்திலிட்டு நன்றாயரைத்து மட் சட்டியிலிட்டு மேல் மூடி முறைப்படி புடம் போட்டெடுக்கச் சுண்ணமாகும். இதில் நான்கிலொரு பாகமாக லிங்கக் கட்டுச் செந்தூரம் சேர்த்துக் கலந்து வைத்துக் கொண்டு 1 முதல் 2 குன்றி எடை எடுத்து அத்துடன் திரிகடுகுத் தூள், தேன் கலந்து காலை, மாலை சாப்பிட வலி குன்மம் போம் என அறிக. (S. R. Pharma)

23. குன்மம், வாந்தி,வாய், நீரூறல், ஏப்பத்திற்குக் குடிநீர்:-

(தேரையர் வைத்தியம்- 1500 பக்கம் 69)

மேற்கோள்.

1. "நீங்குமேப்ப நெருங்குங் குன்மத்திற்கு
பாங்கு வேலம் பகரும் நெல்லி முள்ளி
தாங்கு நெற்பொரி தனிய பசும்பயற்
வாகு வில்வம் வகைக்குச் சமன் சேரே."

2. " சேர்த்துச் சூரணஞ் சிறப்பாய்ப் பொடித்துமே
பார்த்துமே யிளநீரி லரைத்துமே
வார்த்துக் கோமியம் வாகாகக் காய்ச்சுமே
தூர்த்து மண்டலந் துணிவாக வுண்டிடே"

3. "உண்டபோது வுறை மிருமலும்
கண்ட குன்மம் கருதிய ஏப்பமும்
நிண்ட வாந்தி நெருங்கிய வூரலும்
அண்டிடாம லவனிவிட் டோடுமே.

4. "ஓடும் பத்தியமுற்ற பருப்பாகும்
நீடுமே பசும்பாலும் வெண்ணீருண்ணு
ஆடுந்தூதுளை யாகும் பொன்னாங் கண்ணி
தேடுமண்டலஞ் சிறப்பா யருந்திடே"

ஏலம், நெல்லி முள்ளி, நெற்பொரி, பாசிப் பயறு, வில்வவேர் இவை வகைக்கு ஒரு பலம் கூட்டிப் பொடித்து இளநீர் விட்டரைத்து பசுவின் கோமியம் ஒரு படி விட்டு நான்கிலொன்றாய்க் காய்ச்சி வேளைக்கு 2 அவுன்சு வீதம் காலை, மாலை ஒரு மண்டலம் சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

பத்தியம்:- துவரம் பருப்பு, பாசிப் பருப்பு, பசுவின் பால், வெந்நீர், தூதுவளை, பொன்னாங்கண்ணி இவைகளைச் சேர்க்கலாம்.

24. உப்புச் செந்தூரம் (எண் வகைக் குன்மங்களுக்கும் பொருந்தும், பக்கம் 61 தேரையர் வைத்தியம் 1500)

1. "இல்லையே குன்ம மிறங்கியே யோடிட
தில்லை யாடுஞ் சிவன்பதஞ் சாட்சியாய்
கொல்லை மேவுங் குறித்திடி வுப்பினை
வல்லை தும்மட்டிச் சாற்றா லரைத்திடே"

2. "அரைத்து வில்லை யழகாகச் செய்திடு
திரைத்த வோட்டினில் தீரச் சீலை செய்து
உரைத்தகுக் குடம் உற்றப் புடமிடு
நிரைத்த செந்தூரம் நேர்மையைப் பார்த்திடே"

3. "பார்த்திடப்பா பணவிடை செந்தூரம்
நேர்த்திடப்பா நிறை பனை வெல்லத்தில்
கார்த்துமே யிருவேளை யருந்திடில்
தூர்த்த குன்மந் துடித்தோடிப் போகுமே."

சோற்றுப்பு வேண்டிய அளவு எடுத்து ஆற்றுத் தும்மட்டிக் காய்ச்சாறு விட்டுக் கல்வத்தில் இரண்டு நாள் அரைத்து அகலிலிட்டு மேல் அகல் மூடிச் சீலை மண் செய்து முழப்புடம் போட்டெடுக்கச் செந்தூரமாகும். 1 முதல் 2 குன்றி எடை செந்தூரம் பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை சாப்பிடக் குன்ம நோய் எல்லாம் பறந்தோடிப் போம் என்கிறார்.

25. உப்புச் செந்தூரம் (வேறு. பக்கம் 143, 144 சி.வை. திரட்டில் கூறப்பட்டிருக்கிறது.) இதில் குன்றி எடை செந்தூரம் திரிகடுகு, தேன் கலந்ததில் காலை, மாலை கொடுக்க எண் வகைக் குன்மம், நெஞ்செரிவு, சூலை, சூதக வாய்வு முதலான பிணிகள் தீரும்.

26. சகல குன்ம வாயுவிற்கு கருங்கோழிச் சூரணம்:- முற்றின கருங்கோழியைக் குடல், தலை, மயிர் நீக்கி அதன் வயிற்றுக்குள் பெருங்காயம், கடுகு, திப்பிலி, கண்டதிப்பிலி, சுக்கு, மிளகு, இந்துப்பு, கருஞ்சீரகம், ஓமம், பொரிகாரம், சீனாக்காரம், சவுக்காரம், வகைக்கு வராகனெடை 3, சத்தி சாரணைக் கிழங்கு, திருகு கள்ளி வேர்ப்பட்டை வகைக்குப்பலம் 1 அரைத்து வைத்து மூடி கொள்ளவித்த தண்ணீர் படி 2,சிறு தும்பைச் சாறு படி 1 நன்றாய்க் கலந்து அதற்குள் விட்டு மூடிச் சீலை மண் செய்து நீர் வற்ற வேக வைத்து எலும்பு நீக்கி உலர்த்திப் பொடித்துத் திரிகடியளவு காலை, மாலை தேனிற் கொள்ள சகல குன்ம நோய்களும் தீரும். (செய் முறை பாக்கெட் வைத்தியம்).

27. பித்த குன்மத்திற்கு வில்வவேர் குடிநீர்:- வில்வ வேர், முல்லை வேர், சுக்கு, ஏலம், பாசிப் பயறு, நெல்லிப் பருப்பு இவை வகைக்கு ¼ பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாய் வற்ற வைத்துக் காலை, மாலை மூன்று நாட்கள் ஆறுவேளை கொடுக்க பித்த குன்மம் குணமாகும். (செய்முறை பாக்கெட் வைத்தியம்.)

28. குன்ம நோயில் மலமும் கழிந்து வலியுங் குறைய வேண்டுமானால் **"நவ உப்புமெழுகு"** ஒரு குன்றி எடை காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்களுக்குக் கொடுக்க நல்ல பலனளிக்கும். (Preparation please refer to சி. வை. திரட்டு)

29. இதே விதமாகக் குமட்டிக் குழம்பையும் உபயோகிக்கக் குன்ம நோயில் நல்ல பலனளிக்கும். (சி.வை.திரட்டு)

30. எரி குன்மம், பித்த குன்மத்திற்கு தாளிசாதிச் சூரணம் மூவிரல் அளவு காலை, மாலை தேன் அல்லது வேறு அனுபானங்களுடன் அல்லது வேறு பற்பச் செந்தூரங்களுடன் சேர்த்துத் தேனுங் கலந்து கொடுக்கக் குணமாகும். (சி.வை.திரட்டு.)

31. VEDIUPPU CHUNNAM FOR GUNMAM:- (S.R. Pharma)

Vediuppu	10 grams
Padikaram	2 grams
Navaksharam (Ammoni Chloride)	2 g rams

These are rubbed well and mixed. Added to it 14 grams of Tamarind (பழைய புளி) pounded nicely in a stone mortar, made into cylindars, burnt in mud chatty over coconut dried leaves fire one by one, collected all the chunnams, powdered and preserved in a stoppered bottle.

Dose:- 5 to 10 grains B.D. with Thirikaduku Churnam equal parts and water or (மோர்) Butter milk.

Uses:- All Gunnams are relieved.

32.பஞ்சபாண மாத்திரை-

இதில் ஒரு மாத்திரை வீதம் காலையில் மட்டும் சாப்பிட்டுவர அக்கினி மந்தம், குன்மம், வாயு, பித்தம், கிரகணி இவை குணமாகும்.

செய்முறை:-

பெருங்காயம், இந்துப்பு, திப்பிலி இவை வகைக்கு ஐந்து பலம், ஓமம் 2 பலம், சீரகம் 2 பலம், கருஞ்சீரகம் 6 பலம், மிளகு 9 பலம், சுக்கு 7 பலம் இவைகளை உலர்த்திப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு நாள் அரைத்து, சிறு சுண்டைக் காயளவு மாத்திரைகளாக்கி தினம் காலையில் மட்டும் சாப்பிட்டு வர மேற்கண்ட நோய்கள் குணமாகும். (பிரமரகசியம்)

33. போஜனக் குடோரி மாத்திரை:- இதில் ஒரு மாத்திரை காலையில் மட்டும் சாப்பிட்டு வர அக்கினி மந்தம், குன்மம், வயிற்று வலி, வாயு, பித்தவாயு, சூதக வாயு, கிரகணி இவை குணமாகும்.

செய்முறை:-

சுக்கு, பெருங்காயம் வகைக்கு ஒரு பலம், இஞ்சி 2 பலம், இந்துப்பு 2 பலம், சீரகம், மிளகு, வகைக்கு 3 பலம் இவைகளை உலர்த்திப் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்து சுண்டைக்காயளவு மாத்திரைகளாக்கி மேற்கூறியபடி சாப்பிட்டு வர அந்நோய்கள் குணமாகும். (பிரமரகசியம்)

34. STOMATITIS - CURE No. 3 (S.R. Pharma)

1.	Stomatitis cure No.2	1 oz
2.	Annabedhi chenduram	1 oz
3.	Thiriphala churnam	1/2 oz
4.	Nellikai Juice powder	1/2 oz

Mixed well and bottled up.

Dose:-1 to 3 pinches or 2 to 6 grains B.D. with butter or Honey.

Uses:- Stomatitis, Glossitis and Pharyngitis etc., are cured.

35. STOMATITIS -CURE No.4 (S.R. Pharma)

1.Stomatitis cure No.2	1 oz
2. Annabedhui Chenduram	1 oz
3. Nellikai juice powder	1 oz
4.Navaneetha baspam	½ oz
5. Thiriphala churnam	1 oz

6. Masikai churnam 1 oz

Mixed well and bottled up.

Dose uses are the same as that of Stomatitis cure No.3

36. GUNMAM CURE BASPAM (S.R. Pharma)

Silajathu baspam No.2	1 oz
Sangu baspam No.1 or No. 14	1 oz
Annabedhi chenduram No.1	1 oz

To be mixed and bottled up.

Dose:- 5 to 10 grains B.D. with Nellikai Lehiyam or Nellikai Juice Lehiyam 1/2 to 1 tola.

Uses:- All kinds of Gunmam are cured marvellously in a fortnight use. Gastric troubles, peptic and Duodenal ulcers and Appendicitis are worthtrying

19. சூலை நோய்

பரிகாரம்

இந்நோயில் வளிக்குற்றமிகுந்து மேல் நோக்குங்கால், கீழ் நோக்குங்கால் ஆகிய வாயுக்களைத் தூண்டி அவற்றின் வன்மை மிகுந்து மற்ற குற்றங்களையும் கேடடையச் செய்து சூலை நோயைப் பிறப்பிக்கும். கேடடைந்த குற்றங்களையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்த வேண்டியதும் வலி, குத்தல், குடைதல், புரட்டல், வாந்தி முதலியவற்றைப் போக்கவும், மலம், நீர் இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டியதும் மருத்துவனின் கடமையாகும்.

பேதிக்கும் வாந்திக்கும் தக்க குடிநீர், எண்ணெய், பேதி, மாத்திரை இவற்றில் ஏதேனுமொன்றைக் கொடுத்து மலம், நீர் ஒழுங்கான பின், நோய்க்கான மருத்துவம் புரிதல் வேண்டும். மேற்பூச்சு, ஒற்றடம் முதலிய வெளிப் பரிகாரங்களைக் கொண்டு குத்தல், குடைதல், வலி முதலியவற்றைப் போக்க வேண்டும்.

கழிச்சலுக்குக் குடிநீர் வகை:- (சித்த மருத்துவம்.)

1. சிவதைவேர், சுக்கு, கடுகுரோகணி, அங்கூர் திராட்சை இவை வகைக்குச் சம எடை கூட்டி முறைப்படி குடிநீராக்கி ¼ ஆழாக்கு ஒரு வேளை காலையில் கொடுக்க மலம் கழியும். தேவையானால் மாலை நேரத்திலும் கொடுக்கலாம்.

2. காட்டாமணக்கு வேர், கருங்கொடி வேலிவேர், சிவதை வேர், வாய் விடங்கம், கடுகுரோகணி, சுக்கு, அதிமதுரம் இவை வகைக்கு ¼ பலம் எடுத்து ஒரு படி நீரிட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துக் கொடுக்கக் கழிச்சலுடன் சூலை நோயின் கடுமையும் குறையும்.

3. முட்காவேளை வேர், மூக்கரட்டை வேர், காக்கணம் வேர், கழற்சி வேர், காட்டாமணக்கு வேர், திரிகடுகு, திரிபலை இவை சம எடை எடுத்து 16 பங்கு தண்ணீர்விட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து ½ ஆழாக்கு குடிநீரில் சிறிது இந்துப்பு சேர்த்துக் கொடுக்கக் கழியும் (சி.ம.)

பேதி எண்ணெய் வகை:-

கழற்சி எண்ணெய், சித்தாதி எண்ணெய், மேகநாத எண்ணெய், மாந்த எண்ணெய், வெள்ளை எண்ணெய், வாதநாசத்தைலம், மெருகுள்ளித் தைலம், கருடன் கிழங்கு எண்ணெய், கருங்கோழித்தைலம் இவைகளிலேதேனுமொன்றை அவ்வவற்றிற்குரிய அளவில் காலையில் மட்டும் ஒன்று முதல் மூன்று நாட்கள் தனியாகவேனும் முட்காவேளைக் குடிநீரில் அனுபானித்தும் கொடுக்க மலமுங்கழியும், வலி வேதனையும் குறையும்.

பேதி மாத்திரை வகை:-

மேகநாதக் குளிகை, கோடாசூரி மாத்திரை, காக்கண மாத்திரை, சஞ்சீவி மாத்திரை, தாழம்பூ மாத்திரை, இலவங்காதி மாத்திரை, அட்டபைரவ மாத்திரை, வச்சிர கண்டி மாத்திரை, சீவரத்னக் குளிகை, சுகவிரேசன மாத்திரை இவற்றிலேதேனும் ஒன்றை நோயாளியின் பலம், காலம், நோயின் கடுமை அறிந்து காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் கொடுக்க மலமுங்கழிந்து நோயின் வன்மையும் குறைந்து விடும்.

பேதிக்கான மெழுகு வகை:-

அகத்தியர் குழம்பு, கௌசிகர் குழம்பு, சண்டமாருதக் குழம்பு, நவாச்சாரக் குழம்பு, கும்மட்டிக் குழம்பு, நவ உப்பு மெழுகு இவைகளி லேதேனுமொன்றை, தக்கஅளவில் காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் நோயாளியின் வன்மை, நோயின் கடுமையறிந்து கொடுக்கப் பேதியுமாகும். நோயின் கடுமையும் குறைந்து விடும்.

நோய்க்கான மருந்துகள்.

மாத்திரை வகை:-

1. விட்டுணுச்சக்கர மாத்திரை-ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை திரிகடுகுத்தூள், இஞ்சிச்சாறு, தேன், இவை கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க பக்கவாதம், விக்கல், சோகை, 13 சன்னி, ஏப்பம், மூர்ச்சை, வாயு இவை தீரும், பக்க சூலைக்கு ஏற்ற மருந்து.

2. சலமஞ்சரி:- (பக்கம் 143. கண்ணுசாமியம்)

இதில் ½ பணவெடை வீதம், காலை, மாலை இளநீர், பழச்சாறு, வெந்நீர், கரிசாலைக்குடிநீர் இவற்றில் கொடுக்க கவுசி, நீராமை, பாண்டு, சோகை, வீக்கம் இவை தீரும். உக்கார சூலை நோய்க்கு இது ஏற்ற மருந்து.

செய்முறை:-

சங்குப்பொடி, சாஸ்திரபேதி, காந்தம், சிலாசத்து, கல்நார், வெங்காரம்/ அயம்/ கெந்தி/ படிகாரம் இவை வகைக்கு ஒரு கழஞ்சு வீதமும் இவைகளின் மொத்த எடைக்கு நேர் வெடியுப்பும் கூட்டி மெழுகு பதமாயரைத்து மூசையிலிட்டு அனலில் வைத்து உருகினவுடன் ஆற்றி எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட சரக்குகளில் நாம் எடுத்துக் கொள்ளவேண்டியது சங்கு பற்பம், சிலாசத்து பற்பம், காந்தச் செந்தூரம், அயச்செந்தூரம், கல்நார் பற்பம், சுத்தித்த கெந்தகம், இவைகளுடன் மற்ற சரக்குகளைச் சேர்க்கலாம், அரைக்கலாம். பின் உருக்கலாம்.

3. சலோதாரி மணி:- (சி.வை. திரட்டு)

இதில் ஒரு மாத்திரை தேன், பால் இவற்றில் அனுபானித்துக் காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் கொடுக்க மலம் நீர் கழியும். உக்கார சூலையில் பயன்படும். அன்றியும் அந்தரவாயு, சுரவாயு, இருமல், நீரடைப்பு, சதையடைப்பு இவை தீரும்.

4. சூலை பூபதி

இதில் ஒரு மாத்திரை வீதம் காலையில் மட்டும் தக்க அனுபானத்தில் 1 முதல் 3,5 நாட்கள் கொடுக்க சூலை நோய் தீரும். நோயின் பலம், நோயாளியின் பலம், பருவம் அறிந்து மாத்திரையை இருவேளையும் கொடுக்க வேண்டி இருந்தாலும் கொடுக்கலாம் (சி.வை. திரட்டு.)

5. சூலைக் குடாரம்:-

இதில் ஒரு மாத்திரை இஞ்சிச்சாறு தேன் கலந்ததில் அனுபானித்துக் காலையில் மட்டும் 1 முதல் 3, 5 நாட்கள் கொடுக்க குன்மம், சூலை இவை குணமாகும். (சி.வை. திரட்டு)

6. நவலோக பூபதி:-

இதில் ஒரு மாத்திரை முன் போல் தக்க அனுபானத்தில் கொடுக்க சூலை நோய் போம். (சி.ம)

மெழுகு வகைகள்.

1. இரச கெந்தி மெழுகு:-

மோருஞ் சோறுமுண்டு இம்மெழுகில் சுண்டைக் காயளவு காலை, மாலை பனை வெல்லத்திற்குள் பொதிந்து ஒரு மண்டலம் வரை சாப்பிட்டு வர வாத சூலை, வெடிசூலை, ஏகசூலை, இடி சூலை, புடைசூலை, துடிசூலை, முதலியன குணமாகும். மற்றும் பல நாட்பட்ட கொடிய நோய்களெல்லாம் குணமாகும். (சி. வை. திரட்டு, and S.R. Pharma)

2. இரச மெழுகு:-

இதில் மிளகளவு காலை, மாலை பனை வெல்லத்திற்குள் பொதிந்து ஏழு நாட்கள் சாப்பிட்டு மறுபத்தியம் ஏழு நாட்கள் வைக்கவும். பதினைந்தாம் நாள் தலை முழுகவும். மேக சூலை போம். மற்றும் மேக வெள்ளை, தடிப்பு புண்கள், கிரந்தி, அரையாப்பு, கை கால் முடக்கு முதலியவைகளும் குணமாகும். பால், கஞ்சி, பால் சாதம் கொடுக்கலா'ம். உப்பில்லாப் பத்தியம். அவசியம்.

குறிப்பு:- இம்மெழுகை பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை சாப்பிட்டு இளநீரும் உடன் அனுபானமாக மூன்று நாட்கள் ஆறு வேளை கொடுத்துவர இரத்த மூத்திரம் என்னும் குருதி நீர் (Haematurea) நோய் நிச்சயம் குணமாகும். (S.R. Pharm and சி.வை. திரட்டு)

3. நந்தி மை:-

இதில் தேற்றான் விதை அளவு பனை வெல்லத்திற்குள் பொதிந்து காலை, மாலை ¼, ½, ¾, 1 மண்டலம் கொடுத்துவர நாட்பட்ட சூலை பதினெட்டும், எண்வகை குன்மமும் குணமாகும். அன்றியும் எண்ணிக்கை யற்ற நாட்பட்ட கொடிய நோய்களெல்லாம் இம் மெழுகினால் குணமாகும்.

(Refer to சி. வை.திரட்டு)

4.நவ உப்பு மெழுகு:-

இதில் மிளகளவு காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் பனை வெல்லத்தில் பொதிந்து விழுங்க மலம் கழியும். சூலை, வலிகுன்மம், மகோதரம், சூதகவாயு, எண்குன்மம், அண்டவாதம், நீர்க்கோவை, முடக்கு வாதம், பாரிச வாயு முதலிய பெரிய நோய்கள் குணமாகும்.

(சி.வை. திரட்டு.)

5.நவச்சார மெழுகு:-

இதில் குன்றியளவு காலையில் மட்டும் ஒரே வேளை 1 முதல் 3 நாட்கள் பனை வெல்லத்தில் பொதிந்து விழுங்கச் செய்ய பேதியாகும். சூதகச் சூலை, சூதக வாயு, சூதகக் கட்டு இவை குணமாகும்.

செய்முறை:-

கம்பி நவாச்சாரக் கட்டிக்குக் கீழ்காய் நெல்லி சமூலத்தை அரைத்து விரற்கனம் கவசஞ் செய்து அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி 4, 5 எருவில் புடமிட்டெடுத்துப் பிறகு, ஆகாசத் தாமரையை அரைத்த விழுதைக் கொண்டு முன் புடம் போட்டெடுத்த நவாச்சாரக் கட்டிக்குக் கவசஞ் செய்து அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து முன் போல் புடம் போடவும். இப்படியாக இதில் இரண்டு புடங்கள் போட்டெடுத்து ஒரு அயக்கரண்டியை நன்றாய்த் துலக்கி கொம்புக் கள்ளிப்பால் விட்டு அதில் நவாச்சாரக் கட்டியைப் பொடித்துப் போட்டு தணல் மேல் வைத்துக் கிளறிக் கொண்டிருக்க நாறு போல் வரும். அதனை எடுத்துக் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும். இதனைச் சிமிழில் வழித்து வைக்கவும்.

6.வான மெழுகு:-

இதில் உளுந்தெடை, காலை, மாலை பனை வெல்லத்தில் பொதிந்து 3, 5 நாட்கள் சாப்பிட சூலை 18-ம், குன்மம் 8-ம் மற்றும் அநேக நாட்பட்ட கொடிய நோய்களும் குணமாகும். தேவையாயின் பன்முறை இம்மெழுகை விட்டு விட்டு 3, 5 நாட்கள் முறையாகக் கொடுக்கலாம். (செய்முறையை சி.வை. திரட்டிலும் S.R. Pharma விலும் பார்க்கவும்)

குறிப்பு:- கனகலிங்க மெழுகையும் இவ்வாறே உபயோகிக்கலாம்.

7. குமட்டி மெழுகு:-

இதில் ஒரு குன்றியளவு காலையில் மட்டும் 1 முதல் 3 நாட்கள் பனை வெல்லத்தில் பொதிந்து விழுங்க மலம் கழியும். சூலை குன்ம நோய்களும் குணமாகும். குறிப்பாக சூதகச் சூலை, கற்பசூலை, நிதம்பச் சூலை இவற்றில் பயன் தரும்.

8. இடி வல்லாதி:-

இதில் சுண்டைக்காயளவு காலை, மாலை ஒரு மண்டலம் சாப்பிட்டுவர சூலை குன்மம், குட்டம் முதலிய கொடிய நோய்கள் அநேகம் குணமாகும். (சி.வை. திரட்டு- இச்சாபத்தியம்.)

9. சேங்கோட்டை, இலேகியம்:-

இதில் சுண்டைக்காயளவு காலை, மாலை இருவேளை ஒரு மண்டலம் சாப்பிட்டு வர சூலை, குன்மம், குட்டம் முதலிய பல பெரிய நோய்கள் குணமாகும். (S.R Pharma)

10.பஞ்ச சூதமெழுகு:-

பயறளவு மிளகுப் பொடியில், காலை, மாலை 3 நாட்கள் இதைக் கொடுக்க சூலை நோய் போம்.

பற்பச் செந்தூரங்கள்.

1.இரசபற்பம், செந்தூரம், சுண்ணம்:-

இவைகளிலொன்றைத் தக்க அளவில், நாளளவில், அனுபானத்தில் கொடுக்க குன்மம், சூலை, குட்டம், புற்று முதலிய சகல கொடிய நோய்களும் குணமாகும். (Preparations refer to S.R. PharmaCopocia)

2. தாமிர பற்பம், செந்தூரம், சுண்ணம்:-

இவைகளும் மேற்கூறியவாறே கருதப்படும்.

3. கருவங்கச் சுண்ணம், வங்கரச குரு பற்பம்:-

இவைகளும், குன்மம், சூலை, நீரிழிவு, குட்டம் முதலிய நோய்கள் தக்க அனுபானத்துடன் கொடுக்க சிறந்த குணம் தரும். (Preparations refer to S.R. PharmaCopoeia)

4. அயவீரச் செந்தூரம், அயகாந்தச் செந்தூரம், காந்த அயரசச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், சுயமாக்கினிச் செந்தூரம்:-

இவைகளிலொன்றைத் தக்க அளவில், தக்க அனுபானங்களுடன் கொடுத்துவர சூலை, குன்மம், வாயு, பாண்டு, சோபை, காமாலை, குட்ட நோய் முதலிய பெரிய நோய்கள் குணமாகும். (Preparations refer to S.R. Pharma Copoeia)

5. ஆமையோடு தாளக பற்பம்:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை திரிகடுகுத் தூள் தேன் கலந்ததில் காலை, மாலை கொள்ள சூதகச் சூலை குணமாகும். (S.R Pharma)

6. நாகரசச் செந்தூரம் (S.R. Pharma)

இதில் ஒரு அரிசி எடை பனை வெல்லத்தில் பொதிந்து காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க குன்மம், சூலை, குட்டம், புற்று, நீரிழிவு நோய் முதலான பல வகைப்பட்ட கொடிய நோய்கள் குணமாகும். பெரிய மருந்துகளில் இது ஒன்று.

7. நவச்சாரக்கட்டு அல்லது சுண்ணம்:- (ஏடு)

இதில் அரிசி எடை காலை, மாலை திரிகடுகுத் தூள் தேன் கலந்ததில் கொடுக்க (3 முதல் 5 நாட்கள்) குன்மம், சூலை, கவிசை, நீராம்பல், பெருவயிறு, வயிற்றுப் பொருமல், வாத ரோகம் இவை குணமாகும்.

செய்முறை:- கம்பி நவச்சாரம் 5 பலம் ஒரே கட்டியாக எடுத்துக் கொண்டு அதற்குக் கவசம் கட்டுவதற்காக.

வெடியுப்பு	பலம் 4
பூநீறு	பலம் 3
துருசு	பலம் 2
சீனக்காரம்	பலம் 4
வெண்காரம்	பலம் 6
சவ்வீரம்	பலம் 8
சுத்தி செய்த அண்ட ஓடு	பலம் 7
சுத்தி செய்த பேரண்டஓடு	பலம் 8

இந்த எட்டு மருந்துகளையும் தூள் செய்து ஒன்றாய் முறைப்படி கலந்து கல்வத்தில் நன்றாய்ப் பசை போலரைத்து நவச்சாரக் கட்டிக்கு அங்கி பூட்டி சீலைமண் செய்துலர்த்தி ஒரு குழியில் காற்றில்லா விடத்தில் நூறு விராட்டியில் புடமிட்டு ஆறவிட்டெடுக்க நவாச்சாரம் கட்டாக இருக்கும். அது சுண்ணமாகவுமிருக்கும். மேன்மையான மருந்துகளில் இதுவு மொன்று, மேற்குறிப்பிட்ட நோய்களில் சிறந்த குணம் அளிக்கும். அனுபவ முறை.

8. நண்டுக்கல் பற்பம்:- (சி.வை. திரட்டு)

இதில் 1 முதல் 2 குன்றி எடை பற்பம், நீரைப் பிரிக்கும் மூலிகைச்சாறு அல்லது குடிநீரில் அனுபானித்து காலை, மாலை கொடுத்துவர உக்காரசூலை குணமாகும். இத்துடன் குங்கிலிய பற்பம், படிகாரபற்பம், வெங்காரச் சுண்ணம் அல்லது வெடியுப்புச் சுண்ணம், கற்பூர சிலாசத்து பற்பம், நன்னாரி வேர்ப் பட்டைச் சூரணம் இவற்றுள் சிலவற்றைத் தக்கஅளவில் சேர்த்து இளநீரில் அனுபானித்துக் காலை, மாலை கொடுக்க உக்காரசூலை விரைவில் குணமாகும். நீர் எரிச்சல், நீர்கடுப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு, நீர்க்கட்டு முதலான நோய்களும் குணமாகும்.

இவற்றுடன் யானைத்தந்த பற்பம்:-

1 முதல் 2 குன்றி எடை சேர்த்துக் கொடுக்க Prostatic enlargement என்ற நோயில் காணும் குறிகுணங்கள் மாறும் (S.R. Pharma)

9. சண்ட மாருதச் செந்தூரம், பஞ்சபாசாணச் செந்தூரம், பஞ்ச சூத செந்தூரம், பஞ்ச சூத மெழுகு:

இவைகளிலொன்றை அவற்றிற்குரிய அளவுப்படிக்கும், காலஅளவுப்படிக்கும் தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க குன்மம், சூலை, குட்டம் முதலிய பெரிய நோய்கள் குணமாகும்.

10. சய குலாந்தகன் செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம்:-

இவை சூலை, குன்மம், சயநோய் முதலான பெரிய நோய்களைக் குணப்படுத்தும், நாட்பட்ட நோய்களுக்கு தக்கஅளவில் அனுபானத்தில் காலை, மாலை கொடுத்துவர சிறந்த பலனளிக்கும்.

11. சங்குபற்பம், கற்பூர சிலாசத்து பற்பம், அன்னபேதிச் செந்தூரம், உப்புபற்பம், செந்தூரம், பஞ்சலவணபற்பம் இவைகளில் சிலவற்றைத் தக்கஅளவில் சேர்த்து மந்தவாயுச் சூரணம் மூவிரலளவு அத்துடன் சேர்த்து தேன் கலந்து காலை, மாலை கொடுக்க குன்ம சூலை, ஆம சூலை இவைகள் குணமாகும்.

சூரணம் வகை.

பஞ்ச தீபாக்கினி சூரணம், அட்ட தீபாக்கினி சூரணம், அஷ்டாதிச் சூரணம், திரிகடுகுச் சூரணம், கறிவேப்பிலைச் சூரணம், சீரகாதிச் சூரணம், பச்சைக் கற்பூரச் சூரணம், மந்தவாயுச் சூரணம், ஏலாதிச் சூரணம் இவைகளிலொன்றை அதனதன் அளவுப்படி காலை, மாலை தனியாகவேனும் அல்லது வேறு பற்பச் செந்தூரத்துடனாகிலும் சேர்த்து தேன் விட்டுக் குழப்பிச் சாப்பிட்டு வர சூலை, குன்மம், அசீரணம் முதலியன குணமாகும். (S.R. Pharma)

இலேகிய வகை.

குன்மக் குடோரி, கேசரி இலேகியம், பஞ்ச தீபாக்கினி, இலேகியம் வில்வாதி இலேகியம், கண்டாத்திரி லேகியம், சீரகாதி இலேகியம் (எ.க. அண்டலேகியம்), நெல்லிக்காய் லேகியம், இஞ்சி இலேகியம், பித்த வாயு இலேகியம், எலுமிச்சு, இலேகியம், இவைகளிலொன்றை அதனதன் அளவுப்படி தனியாகவேனும் மற்ற பற்பச் செந்தூரங்களுடன் சேர்த்தாகிலும் காலை, மாலை கொடுக்க அழல் சூலை, ஆமசூலை, குன்மசூலை, பக்க சூலை, தூர சூலை, உலர்த்து சூலை இவை குணமாகும்.

(S.R. Pharma சி.வை. திரட்டு.)

வடகம்

1. தாளிசாதி வடகம்:-

சுண்டைக் காயளவு உருண்டையைப் பொடித்துத் தேன் கலந்து காலை, மாலை கொடுக்க பக்க சூலை குணமாகும். கபம், கிரகணி, அதிசாரம், அலசம், வமனம் இவைகளும் குணமாகும்.

2. பிரண்டை வடகம்:-

ஒரு உருண்டையைப் பொடித்துத் தேனில் அல்லது மோரில் அனுபானித்துக் காலை, மாலை கொடுக்க ஆமசூலை, குன்ம சூலை குணமாகும். அன்றியும் பசி தீபனமுண்டாகும். உணவு சீரணமாகும். கிருமிகள் சாகும். வாயு குன்மம் போம்.

3. கடுகுரோகணி வடகம் பித்தசூலைக்கு ஏற்றது:-

ஒரு உருண்டையைக் காலை, மாலை முன்போல் கொடுக்க பித்த சூலை குணமாகும்.

4. கறிவேப்பிலை வடகம்:-

முன்போல் காலை, மாலை கொடுக்க ஆமசூலை, குன்மசூலை குணமாகும்.

வெளிப்பூச்சு தைலம் வகை.

மெழுகுத் தைலம், வாதகேசரித் தைலம், அர்க்கக்ஷீரத் தைலம், (எருக்கன் பால் எண்ணெய்), சடாமாஞ்சில் தைலம், குக்கில் தைலம், விஷமுட்டித் தைலம் (Hospital PharmaCopoeia) இவற்றிலேதேனு மொன்றை வலியுள்ள இடங்களில் மேற் பூச்சாகப் பூசி தவிடு, நொச்சியிலை, முடக்கொற்றானிலை, வாத மடக்கியிலை (தழுதாழை), சிற்றாமணக்கிலை, இவற்றிலேதேனும் ஒன்றை ஆமணக்கெண்ணெய் தெளித்து வதக்கிப் பொட்டலமாக்கி ஒற்றடமிடலாம்.

தலைமுழுக்குத் தைலங்கள்.

கொம்பரக்குக் தைலம், சுக்குத் தைலம், மிளகாய்த் தைலம், மிளகுத் தைலம், பலாமடக்குத் தைலம், நொச்சித் தைலம், உளுந்துத் தைலம் இவைகளிலொன்றை நோயின் தன்மைக்கேற்றவாறு தலை முழுகி வர மிகவும் நல்லது.

உணவு

வாயுவைப் பெருக்கக் கூடிய உருளைக் கிழங்கு, சேமக் கிழங்கு, வாழைக்காய், மாமிசம், மச்சம், தட்டைப்பயறு, மொச்சைப் பயறு முதலான ஆகாரங்களை நீக்கி இலகுவான உணவுகளை அருந்தல் வேண்டும். அன்றியும் ஆமசூலை, குன்மசூலை இவற்றில் கஞ்சிவடிவமான ஆகாரம் கொள்ளல் நன்று.

பக்கசூலையில் மிளகாய் அடித்தட்டு பற்றிடல் நல்லது

செய்முறை:-

மிளகாய் அடிதட்டு (காம்பு), கடுகு, சுக்கு, எள்ளு, காயம் இவற்றை சம எடை கொண்டு பொடித்து நீர் விட்டரைத்து பக்க சூலையில் வலியுள்ள இடத்தில் பற்றிடக் குணமாகும். (ஏ.டு)

வாத சூலை ஹரங்கள் (வைத்திய சதகம்).

"கச்சசா ரணைவேரும் மூக்கி ரட்டை
கழல்விரையுந் திரிகடுகுங் காயம் நொச்சில்
நச்சுகொடி வேலியுட னுள்ளி காயம்
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் களறு காயும்
பச்சையா மெவாச்சாரஞ் சத்திச் சாரம்
பஞ்சலவ ணம்புரசு வேம்பு வேளை
வச்சதிப் பிலிமூலஞ் செவியங் கொள்ளும்
வாதமிகுஞ் சூலைகுன்மம் ஹரங்க ளாமே."

சாரணைவேர், மூக்கிரட்டைவேர், கழல் விரை, திரிகடுகு, காயம், நொச்சி, கொடிவேலி, உள்ளி, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், திப்பிலி, எவாச்சாரம், சத்திச்சாரம், பஞ்சலவணம், புரசு, வேம்பு, வேளை, திப்பிலி மூலம், செவ்வியம், கொள்ளு இவையாவும் வாத சூலை, குன்ம சூலை முதலியவற்றின் ஹரங்களென அறிகிறோம்.

வாத நோய், சூலைநோய் தீர கருங்கோழித் தைலம் எண்.1 கூறுகிறார்:-

1. "குக்குடத்தின் முட்டையிட்டகோழி யொன்று
குடலோடு சிகையும் போக்கி
நக்கிடவே யுரலிலிட்டுக் காயஞ் சுக்கு
நலமான பறங்கியுடபட்டை யுள்ளி
தக்கிடவே வகைவகைக்குப் பலங்கா லாக
தாட்டிகமாய் மிடாவிலிட்டுச் சொல்லக் கேளு
சிக்கனவே பாணிபடி பத்து விட்டுச்
செயம்பெறவே அடுப்பேற்றிக் காய்ச்சி டாயே."

2. "காய்ச்சியே நிம்பயெண்ணெய் படிதான் விட்டுக்
கடுகெனவே வடித்திட்டுப் பின்பு கேளு
தாழ்ச்சியில் லாதொரு கரண்டி யந்தி சந்தி
தவறாம லுண்டிடவே வாதம் போகும்

பாய்ச்சிடவே சூலைபதி னெட்டும் போகும்
பருதிகண்ட பனியதுபோல் பறந்து போகும்
வாய்ச்சதிது சொல்லாதே வயித்தியத்தை
வடிவாகச் செய்திடவே வாழ்வு மாமே"

தலைமுட்டையிட்ட கருங்கோழி ஒன்று சேகரித்துக் குடல், உரோமம் இவற்றைப் போக்கிவிட்டு உரலிலிட்டுப் பஞ்சுபோலிடித்து அத்துடன் காயம், சுக்கு, பறங்கிப்பட்டை, உள்ளி இவைவகைக்குப் பலம் வீதம் பொடித்துச் சேர்த்து ஒரு மண் மிடாவிலிட்டு நீர் படி பத்து விட்டு (Madras Measure) எட்டிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடிகட்டித் தைலம் காய்ச்சும் சட்டியிலிட்டு ஒரு படி வேம்பு எண்ணெய் அதில் சேர்த்துக் காய்ச்சித் தைல பாகத்தில் வடிகட்டி பாட்டிலில் வைக்கவும். இதில் ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை தினம் இருவேளை கொடுத்துவர வாதம் எண்பதும், சூலை பதினெட்டும் தீரும். இது கைகண்ட அனுபவம் வாய்ந்த மருந்தாகும். மேல் பிரயோகமாகவும் இதனைத் தடவலாம். (ஏடு.)

கருங்கோழித் தைலம் எண் .2

தலைமுட்டையிட்ட கருங்கோழி ஒன்று சேகரித்து தோல் உரித்து குடல், தலை, கால் முதலியவற்றை நீக்கிவிட்டு வயிற்றில் நிறையக் கடுகைச் செலுத்திக் கல்லுரலிலிட்டு இடித்து இரண்டும் சேர்ந்து மசிந்த பின்பு மட்பாண்டத்திலிட்டு வேப்பெண்ணெய் ½ படி, தனித் தேங்காய்ப்பால் ¼ படி சேர்த்துக் காய்ச்சி நீர்ச்சத்து வற்றி கறிசிவந்து கருகி, எண்ணெய் பிரியும் சமயம் ஒரு சட்டுவத்தால் கசடை நன்றாய் அழுத்தித் தைலத்தை வடித்துப் புட்டியில் அடைக்கவும்.

இதில் ¼ முதல் ½ அவுன்சு எண்ணெய் காலை, மாலை உள்ளே கொடுத்து மேல் பிரயோகமாகவும் பூசிவர முன் கூறியபடி சகலவாத நோய்களும் (பாரிச வாதம், முடக்கு வாதம், திமிர் வாதம், கீல் வாயு, கைகால் குடைச்சல் முதலியவை,) பதினெட்டு சூலை நோய்களும், ஐவகை வலி நோய்களும் குணமாகும். (ஏடு)

கருங்கோழித் தைலம் எண். 3.

தலைமுட்டையிட்ட கருங்கோழி ஒன்று சேகரித்து முன் போல்

தோலுரித்து குடல், தலை, கால் இவற்றை நீக்கி விட்டு, வயிறு நிறையக் கடுகு பொதிந்து உரலிலிட்டு நன்றாய் மசியும்படி இடித்து மட்பாண்டத்திலிட்டு நல்லெண்ணெய் 12 அவுன்சும், வேப்பெண்ணெய் 12 அவுன்சும் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி கறியானது சிவந்து பின் கருகி நீர்ச்சத்து முற்றிலும் வற்றி எண்ணெய் பிரியும் சமயம் ஒரு சட்டுவத்தால் மேற் படி கசடை (திப்பியை) அழுத்தி வேறொரு பாத்திரத்தில் எண்ணெயை வடித்துப் புட்டியிலடைக்கவும். இதனை ¼ முதல் ½ அவுன்சு வீதம் உள்ளுக்கு தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வரவும். வெளிப்பிரயோகமாகவும் தேய்க்கவும். இதனால் சகல வாத ரோகங்கள் (கீல்வாயு, தனுர்வாதம், முடக்கு வாதம் முதலியன) சூலை பதினெட்டு, ஐவகை வலி, இசிவு முதலிய நோய்கள் குணமாகும். (ஏடு)

குறிப்பு:- மேற்கூறிய மூன்று வகைக் கருங்கோழித் தைலங்களும், அனுபவமாகக்கையாண்ட முறைகள். வாத நோய், சூலை நோய், ஐவகை வலி முதலிய நோய்கள் நிச்சயமாகக் குணமாகும்.

இளம்பிள்ளை வாதத்திற்கும், முடக்கு வாதத்திற்கும், சூலை நோய்க்கும் பரிகாரமாகக் கூறுகிறார். " மயில் எண்ணெய்"

(யாகோபு சிந்தாமணி பக்கம் 87)

1. "குமரகுரு பரனேறும் பட்சிதனைக்
 கொண்டு வந்துசிகை பிடுங்கிக்குட லைப்போக்கி
 அமரவே உரலிலிட்டுப் பறங்கிப் பட்டை
 அடைவான சேரரைக்கால் உள்ளி நேரே
 சிமரயிடு காயமது கழஞ்சி நாலு
 சேர்த்தி டித்துப் பாண்ட மதிலிட்டுப் பாணி
 நமரயிடு யெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
 நலமாக வடிகட்டிச் சட்டி யூற்றே"

2. "ஊற்றிய நிம்பெண் ணெய் படி தான்வாரு
 உறுதிபெறத் தீயதனை விளக்குப் போலே
 பார்த்துமே யெரித்திடுநீ திரியைத் தோய்த்துப்
 பதமாகக் கொளுத்திடவே பற்றிற் றானால்

நாற்றிசைவு மெண்ணெய் பதமாகும்பாரு
நலமாகு மெண்ணெய்யைத்தான் கரண்டி வீதம்
சேர்த்துஉண்ண யிளம்பிள்ளை வாதந் தன்னைச்
சிதைந்துவிடு முடக்குவாதஞ் சூலை போமே"

தலைமுட்டையிட்ட **மயில் பட்சி** ஒன்று சேகரித்து சிகை, குடல் இவற்றைப்போக்கி உரலிலிட்டுப் பஞ்சுபோலிடித்து அத்துடன் பறங்கிப்பட்டை 1/8 சேர், உள்ளி 1/8 சேர், காயம் 4 கழஞ்சு இவைகளைப் பொடித்துச் சேர்த்திடித்து ஒரு பாண்டத்திலிட்டு, நீர் பத்து படி விட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டித் தைலம் காய்ச்சும் சட்டியிலிட்டு, நயம்வேப்பெண்ணெய் ஒரு படி விட்டு அடுப்பேற்றி தீபம் போல் சிறு தீயாக எரித்துக் காய்ச்சித் தைல பாகம் வரும் சமயம் ஒரு திரியில் தைலத்தை நனைத்து நெருப்பில் பிடிக்க சுடர்சத்தமின்றி திரியானது தீப்பற்றிற்றானால் அதுவே பதமென்று எண்ணி, சட்டியைக் கீழிறக்கித் தைலத்தை வடிகட்டி ஆறவிட்டுப் புட்டியிலடைக்கவும். இதனை ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை உள்ளுக்குக் கொடுத்தும், மேற்பிரயோகமாகத் துவாலையுமிட இளம்பிள்ளை வாதம் (Infantile Paralysis due to Anterior Polio-myelitis) மற்றுமுள்ள பாரிச வாதம், முடக்கு வாதம், திமிர்வாதம், சூலை பதினெட்டு, ஐவகை வலி இவையாவும் குணமாகும்.

கருங்கோழித்தைலம் எண். 4:-

தலைமுட்டை யிட்ட கருங்கோழி ஒன்று சேகரித்து சிகை, குடல், தலை, நகம், கால்கள் இவற்றை நீக்கி சதையையும் எலும்பையும் சேர்த்து இடித்து அம்மியிலிட்டு நன்றாய் அரைத்து கடுகு 8 தோலா, வெந்தயம் 4 தோலா இவற்றைத் தனித்தனியாக அம்மியில் வைத்து சிறிது தண்ணீர் தெளித்து அரைத்து, மேற்கண்ட சரக்குகள் மூன்றையும் ஒன்றாய்க் கலந்து, பிசறி, இரும்பு வாணலியிலிட்டு நல்லெண்ணெய் 20 அவுன்சு விட்டு நன்றாய்ப் பிசறி அடுப்பேற்றி எரிக்க-கிளறிக் கொண்டேயிருக்க நீர்வற்றி எண்ணெய் திரள் பதத்தில் இறக்கி உடனே ஒரு மல் துணியில் கொட்டி கட்டி இறுக்கிப் பிழிய 12 அவுன்சு தைலம் கிடைக்கும்.

இதனை ஒரு தேக்கரண்டியளவு காலை, மாலை கொடுத்துவர வாதரத்தம், கீல்வாயு, முடக்கு வாதம், பக்கவாதம், வாத சூலை முதலியன குணமாகும்.

RASAGHENDI MELUGU N0.1 (Traditional) (S.R. Pharma)

1.Purified Valairasam	3 Tolas
2.Purified Ghendakam	3 Tolas
3.Ulantha Linghakattu chenduram or Jathilingakattu chenduram	1 ½ Tolas
4. Rasakarpurakattu baspam or Purified Rasakarpuram	1 ½ Tolas
5. Rasa chenduram, No. II or Rasakarpura chenduram or Bazaar Rasa Chenduram purified	1 ½ Tolas
6.Purified Thalakam	1 P.W
7. Purified Manosilai or Manosilaikattu chenduram	1 P.W.
8. Vediuppu (ஐந்தாம் காய்ச்சல்)	1 1/2 Tolas
or Muppuguru	1 gram
9. Purified Parangippattai churnam or Parangi churnam compound No.1	6 Tolas

These ingredients are finely powdered, mixed together in a kalvam as per rules and rubbed well for 2 days with cow's ghee (பசுநெய்) add in (little by little) until the medicinal compound becomes waxy consistency. This is then secured and preserved in a suitable glass jar.

Dose:- 2 to5 grains may be given twice a day well enclosed in white sugar or palm jaggery or in gelatin capsules. Dose may be gradually increased if necessary.

Uses:- Mega Noi, Vellai, Gleet, Leucorrhoea, Diabetes mllitus, Jwaram, Leprosy, Cancer, All worst skin diseases and joint affections are cured. In children kalkaduvan (கால்கடுவன்) and other Sebborrhic dermatitis are also cured when given in fractional doses according their age.

RASAGHEDNDI MELUGU NO.II (S.R Pharma)

1.Rasa baspam or Purified Patharasam

2.Purified Ghendakam

3. Rasakarpura- kattu baspam or purified Rasa karpuram

4. Thalakakattu baspam or purified Thalakam

5. Kantha Chenduram No.I or Purified Usikantham

6. Mayil thuththam chenduram or chunnam or purified mayil thuththam

7. Purified Thurusu (Palthuththam)

8. Purified Mirudar Singi

9. Chukku churnam

10. Omam churnam

11. Kari manjal churnam

12. Thippili churnam

13. Chitharathi churnam

14. Jathikottam churnam

15. Valuluvaiarisi churnam

16. Sombu churnam

17. Elakaiarisi churnam

18. Jathikai churnam

19. Milaku churnam

20. Jeerakam churnam

21. Karpokiarisi churnam

22. Masikai churnam

23. Thippilimulam churnam

24. Vayvidangam churnam

25. Vasambu churnam

26. Lavangam churnam

27. Parangippattai churnam

28. Serangkottai Purificd and pounded into a fine mass

29. Kadukaithole churnam

30. Karunjeerakam churnam

31. Kattu Jeerakam churnam

32. Chiruthekku churnam

33. Thalisapathiri churnam

34. Munthrikai or Angoor Drakshai without seeds, rubbed into a fine paste.

35. Pirappan kilangu churnam

36. Purified Ettivithu churnam

37. Thetranvithu churnam

38. Neerpoondu (Sentha marai kilanku churnam)

39. Ellu finely powdered

40. Kollu- finely powdered

41. Kopparai thengai finely rubbed into a paste

42. Chiruchenniver churnam

43. Shangam verpatti churnam

44. Seemai Amukaraver churnam

45. Akasakarudan kilangu churnam

46. Chitharamoola verpattai churnam - of each equal parts or 1 p.w. or quantity sufficient.

47. Hen's eggs No.2 (whole contents should be used)

48. Palm Jaggery - equal to the weight of the first 56 drugs or 46 p.w.

METHOD OF PREPARATION:-

The first 46 drugs are taken in fine powders or in fine paste according to the types of ingredients, mixed together in a kalvams as per rules, the whole contents of the eggs are poured in the compound churnam little by little and mixed well. Next, the palm Jaggery, may be ground nicely for 2 hours into a fine paste in a kalvam or some mortar and rubbed together with the churnam compound and the egg contents until it becomes of a waxy consistency or the jaggery may be made into a thick syrup and this syrup may be used for rubbing the above compound churnam and egg contents into a fine melugu consistency for about 12 hours. The melugu is then Preserved in a suitable glass jar.

Note:-1. Some physicians adopt, other methods of preparation namely (1) out of the first 46 ingredients purified Shengkottai alone is taken double the weight, while the other ingredients are taken single weight powdered nicely in stone mortar with acrow bart (கடப்பாறை.)

After the bits of Shengkottai are nicely powdered along with the rest of the ingredietins, excess of any rough Solid bits of Shengkottai is removed carefully and then the egg poured and pounded.

After this egg contents are well mixed with the powder compound the palm jaggery is added and pounded continuously for about 12 hours until the mass is of a waxy consistency.

Note:-2. It is always safe to keep this medicine compound well exposed to the hot Sun for 1 or 2 hours while it is being pounded with egg contents and jaggery and again pounded. This sort of exposure to the Sun for a little while and then pounding alternately ensures moisture free of the medicine and thus prevents fungus formation. When it is kept for a long time in stock. The older it is kept, the better is said to be the good effect.

Note:-3 The potency of this Rasaghendhi melugu is said to be increased when it is preserved in a jar well scaled after preparaion for a period of six months and then used. This may be administered for a mandalam of 40 to 45 days. Medicine should be stopped on the day of oil bath. cow's ghee or castor oil or Cocount oil bath is advisable or Panchakalpam bath may be adopted during the course of administration this melugu.

Dose:- 5 to 15 grains or about a small chundaikai size may be taken morning and evening enclosed in palm jaggery or plaintain fruit or in empty gelatin capsules after food. Butter milk or curd and rice may be taken before taking the medicine in the morning. The dose of the medicine should be gradually increased in exceptional chronic cases.

Uses:- This is suitable and effective specific for every so many subacute and chronic ailments. All kinds of Vadharogam, soolairogam, rogam, including Rheumatism, Rheumatoid arthritis, Polyarthritis, Narithalai vayu, Paralysis and Hemiplegia etc. Meganoi, Chori, Kuttan, Cancer, Leprosy, Padai and other chronic skin diseases, Vranam, Sinuses, Fistula, Piles, Puzhuvettu (Baldness), Syphilis, Tubercular glands (Kandamalai) Buboes, Urticara Carbuncles, Vadha kudachal, Neuritis and evert so many chronic illness are cured provided it is continued for a fairly long time according to the toleration of the patient and severity of the ailments. This is one of the Universal remedy for almost all diseases.

Note:-4 In place of Padharasam and Ghendakam of each 1 p.w. it is better to use Swarnavalai Rasa chenduram 2 p.w. in this process.

20 , 21. மண்ணீரல் நோய் - கல்லீரல் நோய்

பரிகாரம்

மண்ணீரல், கல்லீரல் நோய்கள் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை உண்டாகும். இவ்விரண்டும் அவயவங்களில் உண்டாகும். நோய்கள் இரட்டைப் பிள்ளைகளைப் போன்றவை, இடப்பாட்டீரல் வலப்பாட்டீரல் இவ்விரண்டிலொன்று கெடின் மற்றொன்றும் கெடு மென்பர் சில நூலோர் (Sympathetic affection). இவ்விரண்டு நோய்களுக்கும் முக்குற்ற வேறுபாடுகள் யாவும் பெரும்பாலும் ஒரே மாதிரியெனக் கூறுவர். ஆதலால் பரிகாரமும் சற்றேறக்குறைய ஒரே மாதிரியாகவே பாவிக்கலாம்.

இவ்விரண்டு நோய்களும் அழல் குற்ற மிகுதியால் எழுந்து மற்ற இரு குற்றங்களையும் துணை கொண்டு பரவுகாலின், செயலைக் கெடுத்து, கீழ்நோக்குக்கால், மேல் நோக்குக்கால், நடுக்கால், முதலிய வாயுக் களையும் கேடடையச் செய்யுமாதலால், கேடடைந்த குற்றங்களையும் குறிப்பாக அழல் குற்றத்தையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்த வேண்டியதும், பின் நோய்க்கான நேர் மருந்துகளையும் வழங்கல் வேண்டும்.

முதலில் வாந்தியையும், அப்பால் கழிச்சலையும் உண்டாக்கக் கூடிய மருந்துகளைக் கொடுத்து அப்பால் நோய்க்கான மருந்துகளையும் கொடுக்கவேண்டும். (சி.ம.)

1.வாந்தியை உண்டாக்க பப்பாளிக் காய்ச்சாறு 2 தேக்கரண்டி அளவு எடுத்து, சிறிது கடுகு அல்லது சிறிது மருக்காரைத் தூள் கூட்டியரைத்து ஒரே வேளைவிழுங்கச் செய்து இளவெந்நீர் குடிக்க வாந்தியாகும். (சி.ம)

குறிப்பு:- வயிறு வீங்கிச் சீழ் கொண்டால் (Gum boil) பப்பாளிக் காயை நகத்தால் இலகுவாய்க் கீறினால் பால் வரும், அந்தப் பாலை

விரலால் சிறிது தொட்டுப் பல்லரணையில் தேய்க்க உடனே இரத்தம் வரும். (Gum boil) கரைந்து விடும். குளிர்ந்த நீரில் வாய் கொப்பளிக்க இரத்தம் வருவது நின்று விடும். அனுபவத்தை இங்கு தெரியப் படுத்தினேன்.

In one application gum boil or gum a bsess becomes quite alright.

2. வாந்திக்கும் கழிச்சலுக்கும் குடிநீர்:-

குப்பைமேனியிலை	1 பிடி
ஊசித்தகரையிலை	1 பிடி
மருக்காரையின் காய்	10
தண்ணீர் படி	½

இதனைக் காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கி வடிகட்டிக் கொடுக்க வாந்தியும் கழிச்சலு முண்டாகும்.

3. கீழ்க்காய் நெல்லிச்சாறு ½ ஆழாக்கு, பேதி உப்பு 1 பலம், கடுகு 1 வராகனெடை இவைகளைக் கூட்டிக் கொதிக்க வைத்து வடிகட்டி ஆறியபின் மீண்டும் சற்று சூடாக்கிக் கொடுக்கப் பித்துப் பித்தாக வாந்தியையும் கழிச்சலையும் உண்டாக்கும். (சி.ம)

குறிப்பு:- குன்ம நோயில் கூறியுள்ள (இயல் 18) வாந்தி செய்விக்கும் குடிநீர் முதலிய மருந்துகளையும், அதே மாதிரி கழிச்சல் செய்விக்கும் குடிநீர் முதலிய மருந்துகளையும் மண்ணீரல், கல்லீரல் நோய்களிலும் உபயோகிக்கலாம். நல்லபலனளிக்கும்.

குடிநீர் வகை.

1. மண்டூராதி அடைக்குடி நீர்:- இது ஒரு வகை (சி.ம.)

வெண்சாரடைப் பூண்டு, மூக்கிரட்டைப் பூண்டு, சிவப்பு அம்மான் பச்சரிசி, நீர்முள்ளிப்பூ, நெருஞ்சில், சரக்கொன்றை வேர்ப்பட்டை, ஆயில்

மரப்பட்டை, ஊழலாத்திப் பட்டை, வேப்பம்பட்டை, திரிபலை இவை வகைக்குப் பலம் 3, இரும்புச் சிட்டம், இரும்பு அரப்பொடி, காந்தக்கல் இவை வகைக்குப் பலம் 2 இவைகளை இடித்து மட்பாண்டத்திலிட்டு வெள்ளாட்டு நீர், பசு நீர், காடி நீர், தென்னங்கள் இவை வகைக்குப் படி 2 சேர்த்து சிறு தீயில் காய்ச்சி நான்கிலொரு பாகமாக வற்றிய பின் இதில் வேளைக்கு ஒரு ஆழாக்கு வீதம் காலையில் மட்டும் ஒரே வேளையாகக் கொடுத்து வர கழிச்சலுண்டாகும். சிறு நீரும் நன்றாய்ப் பிரியும், இதனைச் சிறு தணலில் வைத்துக் கொண்டு காலை, மாலை தினம் இரு வேளை 1/2 ஆழாக்கு வீதம் கொடுத்து வர நீர்ப் பெரு வயிறு, மண்ணீரல் நோய், கல்லீரல் நோய் முதலியன குணமாகும்.

2. வெள்ளாட்டு நீர் ஊறல் கியாழம்:-(Similar to cold infusion)

சரக்கொன்றை வேர்ப்பட்டை, வெள்ளெருக்கன் வேர்ப்பட்டை, சத்திச்சாரணைவேர், சிவகரந்தை வேர், கடுகுரோகணி, சுக்கு, மிளகு, திப்பிலி இலவங்கம், இலவங்கப்பட்டை, சிறு நாகப்பூ, கடுக்காய், தான்றி, நெல்லிமுள்ளி இவை வகைக்குப் பலம் 1 இவைகளை நன்றாய் இடித்து வைத்துக்கொண்டு வெள்ளாட்டு நீர் ஒரு ஆழாக்கில் உள்ளங்கையளவு மேற்கூறிய பொடியைச் சேர்த்து ஓர் இரவு ஊறவைத்துக் காலை தோறும் வடித்துக் கொடுக்க நீரும், மலமும் தாராளமாய்க் கழியும். மண்ணீரல், கல்லீரல் நோய்களும், நீர்ப்பெரு வயிறு, பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்களும் குணமாகும்.

குறிப்பு:- உள்ளங்கையளவுப் பொடி நூலில் கூறியிருப்பினும் அனுபவத்தில் சற்றுக் குறைத்துச் சேர்க்கலாமென்பது என் அபிப்பிராயம்.

3. கொடிவேலியாதிக் குடிநீர்:-

கொடி வேலி வேர்ப்பட்டை, கொல்லன் கோவைக் கிழங்கு, புளிகரணைச் கிழங்கு, சிவகரந்தை வேர், அக்கிராகாரம், நீர்முள்ளி, நெருஞ்சில், வெள்ளரி வித்து, கடுக்காய், தான்றி, நெல்லி முள்ளி இவை வகைக்கு பலம் 1 இவைகளை இடித்து வைத்துக் கொண்டு இதில் 4 பலம் பொடி எடுத்து ஒரு படி நீரில் போட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றி வரும்

சமயம் இறக்கி வைத்துக் கொண்டு வேளைக்கு வீசம் படியளவு வடிகட்டி காலை, மாலை கொடுத்துவரக் கழிச்சலையும் நீரையும் நன்றாய் வெளிப்படுத்தி மேற்கூறிய நோய்களைக் குணப்படுத்தும். (சி.ம)

நோய்க்கான மருந்துகள்

2. மண்ணீரல்விருத்தி நோயில் கியாழம் (பிடங்கனாரிக் குடிநீர் கொடுக்கலாம் மிகச் சிறந்தது.(ஏட்டுப்பிரதி)

கிருஷ்ணபாலையிலை	ஒரு கைப்பிடி
(அதாவது பிடங்கனாரியிலை)	
கடுக்காய்த் தோல்	½ தோலா
கறிமஞ்சள் பொடி	¼ பலம்
பூண்டு	ஒரு பல்

தண்ணீர் ½ படி விட்டுக்காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி ½ முதல் ஒரு ஆழாக்குக் குடிநீர் வீதம் காலை, மாலை தினம் இருவேளை கொடுத்து வர சுரம் தணியும். காய்ச்சல் கட்டி என்ற மண்ணீரல் விருத்தி குணமாகும்.

2. நத்தை சதை நெய்:-

நத்தைச் சதை பலம் 20, சித்திர மூலம், நாட்டு அமுக்கராங்கிழங்கு, வசம்பு, கடுக்காய், தான்றி, நெல்லி வற்றல், சாதிக்காய், மாசிக்காய், சீந்தில் சர்க்கரை, நிலவேம்பு, நாவற் பட்டை, வேம்பின் பட்டை, ஊழலாத்திப் பட்டை, சிறுகுறிஞ்சான் வேர், எள்ளுக்காய்த் தோல், செந்நாயுருவியரிசி இவை வகைக்குப் பலம் ஒன்று, பசு நெய் படி ஒன்று, பால் படி ஒன்று.

செய்முறை:-

கடைச் சரக்குகளை இடித்து ஒரு பாண்டத்திலிட்டு 4 படி நீர் விட்டு ஒரு படியாக வற்றக் காய்ச்சி வடிகட்டிய குடிநீரில் நத்தைச் சதை, பால், நெய் இவற்றைச் சேர்த்து எரித்துக் கடுகுத்திரள் பதத்தில் வடித்து வைத்துக்கொண்டு ஒரு உச்சிக் கரண்டி வீதம் காலை, மாலை கொடுத்துவர மண்ணீரல், கல்லீரல் நோய்கள் குணமாகும். இரத்த மூல நோய்க்குச் சிறந்ததோர் மருந்தாகும். இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

3. சாரம் (உப்பு) கலவை:-

எள் செடி, வாழைச் சருகு, ஆண் பனைப்பூ (ஆணங்காய்) புகையிலை, நாயுருவி இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து எரித்துச் சாம்பலாக்கி, அதனளவுக்கு நான்கு பங்கு நீர் விட்டுக் கலக்கித் தெளிவிறுத்து (வடிகட்டி) சிறு தீயில் எரித்துச் சுண்டிய பின்பு அதனை இரவியுலர்த்த உப்பு உரையும், இதனை மீண்டும் 1:4 பங்கு நீர் விட்டு முன் போல் காய்ச்சி உப்பாக்கவும். மொத்தம் 5 முறை இவ்விதம் செய்யவும். இந்த உப்பை எடுத்து வைத்துக் கொண்டு 1 முதல் 2 குன்றியளவு தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுத்து வர சிறு நீரைப் பெருக்கி இழியச் செய்து மண்ணீரல், கல்லீரல் நோய்களையும், நீர்ப் பெரு வயிறு, சோபை முதலிய நோய்களையும் குணப்படுத்தும்.

4. நண்டு நெய்:-

a. வரப்பு நண்டு ஒரு வீசை சேகரித்து வந்து உரலிலிட்டு இடித்து ஒரு பாண்டத்திலிட்டு நான்கு படி நீர் விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிக்கவும்.

b. திப்பிலி, வாய்விடங்கம், சிறுநாகப்பூ, முருங்கைப்பட்டை, வசம்பு, கடுகு ரோகணி, புன்னை வேர்ப்பட்டை இவை வகைக்கு 5 பலம் , இவற்றை இடித்து, அத்துடன் புங்கன்கொட்டைத் தோலோடு உலர்த்திச் சட்டியிலிட்டு எரித்துச் சாம்பலாக்கியது ¼ படி சேர்த்து நீர் படி நான்கு விட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி கியாழத்தையும் முன் தயாரித்த

நண்டுக் குடிநீரையும் சேர்த்து பசு நெய் படி ஒன்று, பப்பாளிக்காய்ச் சாறு படி ¼ , பசு நீர் படி 1/4, வெள்ளாட்டு நீர்படி 1/4 இவைகளை எல்லாம் தைலம் காய்ச்சும் சட்டியில் ஒன்றாய்ச் சேர்த்து அதில் சேர்க்க வேண்டிய கலக்க மருந்துகளாவன:

திரிபலை, அரத்தை, கோஷ்டம், அக்கிராகாரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, திரிகடுகு இவை வகைக்கு 1/2 பலம் வீதம் பொடித்துப் பால் தெளித்து அம்மியில் கலக்கமாக அரைத்துக் கலக்கிக் காய்ச்சி கடுகு திரள் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு அதில் முன் தயாரித்த **உப்புக் கலவை** (சாரம் கலவை) மருந்தில் 2 பலம் எடுத்துச் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதில் காலையில் மட்டும் ஒரு தேக்கரண்டி வீதம் கொடுத்து வர மலம், நீர் முதலியவற்றை நன்றாய் வெளிப்படுத்தி மண்ணீரல், கல்லீரல் நோய்களையும், நீர்ப்பெரு வயிறு, பாண்டு, சோபை, வாயு முதலியன குணமாகும். (சி.ம.)

பற்பச் செந்தூரங்கள்.

அயம், காந்தம், மண்டூரம், அன்னபேதி, வெடி அன்னபேதி, செம்பு, பொன், வெள்ளி, வெள்ளீயம், துத்தநாகம், சிறுகண் நாகம், திருவங்கம், தாளகம், வெள்ளைப்பாடாணம் இவற்றின் பற்பச் செந்தூரங்கள், நவாச்சாரக்கட்டு அல்லது பற்பம், உலோக மண்டூரச் செந்தூரம், பனை விரலாதிச்சாரம், புனர்னவ மண்டூரம், நவ உப்புச் சுண்ணம், ஐந்துப்புச் சுண்ணம், உப்பு பற்பம் அல்லது செந்தூரம், இலிங்கக் கட்டுச் செந்தூரம், சீவ லோகச் செந்தூரம் முதலியவற்றைத் தனியாகவேனும் சிலவற்றைச் சேர்த்தாகிலும் தக்க அனுபானங்களோடு காலை, மாலை நோயாளியின் தன்மை, நோயின் கடுமை, மென்மை இவற்றையறிந்து கொடுத்துவர மண்ணீரல், கல்லீரல் நோய்கள் குணமாகும். அன்றியும் இந்நோயில் துணைநோயாக வரக்கூடிய சுரம், பாண்டு, காமாலை, சோபை, பெருவயிறு, வாயு இவற்றிற்கு சமயோசிதம் போல் தகுந்த வைத்தியமும் புரிதல் வேண்டும்.

2. **சங்கத் திராவகம்:**- 5 முதல் 10 துளி வரை காலை, மாலை தண்ணீரில் கலந்து கொடுத்து வர மண்ணீரல் நோய் குணம் ஆகும்.

3. பஞ்ச திக்த பானகம்:- 1/4 முதல் 1/2 தேக்கரண்டி வீதம் காலை, மாலை கொடுத்துவர மண்ணீரல், கல்லீரல் நோய்கள் குணம் அடையும்.

4.அன்னாசிப் பழம், பப்பாளிப் பழம் அல்லது பப்பாளிச் காய்ச்சாறு காய்ச்சல் கட்டியில் நல்ல பலனளிக்கும்.

5. முள்ளங்கிச்சாறு:- தக்க அளவில் காலை, மாலை கொடுத்து வர கல்லீரல், மண்ணீரல் விருத்தி நோய்கள் (கட்டிகள்) குணமாகும்.

N.B:- Mullangi leaves jucie is said to be very effective in Cases of Jaundice and Mullangi Kizhangu is to be fried and given with diet in Sobai, Kamalai, Ascitis and in spleen and Liver diseases with out salt.

6. மண்ணீரல், கல்லீரல் நோய்க்கு நேர் மருந்துகளாவன:-

இரச பற்பம், சண்டரசம், செய ரசம், சாதிலிங்க பற்பம், தாம்பிரபற்பம், துருசு பற்பம், சண்டமாருதச் செந்தூரம், சுயமக்கினி செந்தூரம், நவச்சாரக் கட்டு, பலகறை, சங்கு, பவளம், முத்து, கற்பூர சிலாசத்து இவற்றின் பற்பம், பொன்னிமிளைச் செந்தூரம் இவை ஏதேனுமொன்று அல்லது பலவற்றைக் கலந்து தக்க அளவில் அந்தந்த மருந்துகளின் கால விகிதப்படி பத்தியம் வைத்துக் கொடுத்து வர மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

7. லோக மண்டூரச் செந்தூரம், சீவலோகச் செந்தூரம், வெடி அன்ன பேதிச் செந்தூரம், புனர்னவ மண்டூரம், கற்பூர சிலாசத்து பற்பம் நெ.2 வெண்காரச் சுண்ணம் அல்லது வெடியுப்பு சுண்ணம் இவை வகைக்கு 2 குன்றி எடையும், Ascites cuer Churnam 10 குன்றி வீதமும் தேனில் கலந்து காலை, மாலை இரு வேளை கொடுத்து நீர்முள்ளிக் குடிநீர் அல்லது பிடங்கனாரி குடிநீர் அல்லது கீழ்க்காய் நெல்லி சமூலம், கரிசாலை கடுக்காய்த் தோல் இவை சேர்ந்த குடிநீர் அல்லது திரட்சாதிக் குடிநீர் (Under Jaundice) அல்லது மேலே குறிப்பிட்ட மண்டூராதிக் அல்லது சித்த வைத்தியத் திரட்டில் கூறியிருக்கிற மண்டூராதி அடைக்குடிநீர் அல்லது எருமை நீர்க்காந்தக் கடுக்காய் அல்லது பசுநீர்க் கடுக்காய் இவை களிலேதேனுமொன்றில் அனுபானித்துக் கொடுத்துவர வெகு விரைவில் மேற்கண்ட நோய்கள் குணமாகும். சிறுநீரில் Albumen ஏற்பட்டு உடல் எங்கும் வீக்கம் உண்டாகியிருந்தாலும், நீர்ப்பெரு வயிறு இருந்தாலும் ஆச்சரியமாகக் குணமாகும். உப்பில்லாப் பத்தியம் வைக்க வேண்டும்.

8. நூறு ஆண்டுடைய வேப்பம்பட்டையை முறைப்படி குடி நீர் செய்து தக்க அளவில் காலை, மாலை கொடுத்து வர, மண்ணீரல், கல்லீரல் நோயில் காணும் சுரமும் தணிந்து மண்ணீரல், கல்லீரல் கட்டியும் குணமாகும்.

இதே மாதிரி நூறு ஆண்டுடைய வேப்ப மரத்தின் கள் 1 முதல் 2 தேக்கரண்டியளவு காலை, மாலை கொடுத்து வர மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

9. கருந்துளசிக் குடிநீர்:- இதில் வீசம்படியளவு காலை, மாலை இரு வேளை அல்லது தினம் மூன்று வேளை கொடுத்துவர மேற்கூறப்பட்ட நோய்கள் குணமாகும்.

செய்முறை:-

நிலத்துளசி அல்லது கருந்துளசி வேர் பலம் ½, மிளகு பலம் ¼ , சிற்றரத்தை பலம் ¼ , சதகுப்பை பலம் 1, தண்ணீர் படி 1 விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து காலை, மாலை கொடுத்து வர மண்ணீரல், கல்லீரல் நோயில் ஏற்படும் சுரமும், கட்டியும் குணம் ஆகும்.

10. குமட்டியுப்பு:- பேய்த்தும்மட்டிக்காய்ச்சாறு ½ படி, பஞ்சலவணம் (கல்லுப்பு, கறியுப்பு, இந்துப்பு, நவச்சாரம், வெடி உப்பு இவை வகைக்குப் பலம் 3 வீதம் எடுத்துப் பொடித்துக் கலந்தது) 15 பலம் இதனைச் சாற்றில் கலக்கி ரவியுலர்த்தவும், பிறகு அதில் பசுவின்பால் படி ½ விட்டுக் கரைத்து அடுப்பேற்றி சுண்டக் காய்ச்சி வறுத்து உப்பாக எடுத்துக் கொள்ளவும்.

அளவு:- இதில் மூவிரல் அளவு எடுத்துக் காலையில் மட்டும் பசு மோர் அல்லது நீராகாரம் அல்லது காடிநீர் இவற்றிலொன்றில் அனுபானித்துக் கொடுக்க பேதியாகும்.

பயன்கள். காய்ச்சல்கட்டி, காமாலைக்கட்டி, பெருவயிறு,, நீர்ப்பெருவயிறு, சூதக வாயு முதலியவை குணமாகும். நோயாளியின் பலமறிந்து நோயின் கடுமையும் அறிந்து தினம் காலையில் மட்டும் கொடுத்து வருவதில் நாட்கணக்கையும் நிதானித்து கொடுக்க வேண்டும்.

11. கறியுப்பு பற்பம், இதில் 2 சிட்டிகையளவு காலை, மாலை ஓம இலேகியத்திலனுபானித்துக் கொடுக்க மண்ணீரல், கல்லீரல் நோய், வயிற்றுவலி, அசீரணம் இவை தீரும்.

செய்முறை:- (ஏட்டுப்பிரதி):

கறியுப்பு பருங்கற்களாக 1 படி எடுத்து வேலிப் பருத்தியிலைச் சாறு விட்டு நன்றாயரைத்து வில்லை தட்டி உலர்த்தி, அகலிலிட்டு மேல கல்மூடி சீலைமண் செய்து 50 விராட்டியில் புடமிடவும். மீண்டும் முன்போல் அதே சாறு விட்டரைத்து இரண்டு புடங்கள் போட்டெடுக்கப் பற்பமாகும். இதில் 2 முதல் 4 குன்றி எடை காலை, மாலை தகுந்த அனுபானங்களில் கொடுத்துவர மேற்கூறிய பிணிகள் யாவும் குணமாகும்.

விசேட அனுபானம் ஓம இலேகியம்:- ஓமம் 5 பலம் வாங்கி இளவறுப்பாக வறுத்துப் பொடித்துச் சம எடை பனை வெல்லம் சேர்த்து மெழுகு போலரைத்து அத்துடன் கறியுப்பு பற்பம் வைத்து தக்க அளவில் காலை, மாலை கொடுக்க வயிற்று வலி, அசீரணம், காய்ச்சல் கட்டி இவை தீரும்.

12. காய்ச்சல் கட்டியுடன் மலச்சிக்கலிருப்பின் கடுக்காய் குடிநீர்.

கடுக்காய்த் தோல், கடுகுரோகணி, ரோஜாப்பூ இதழ் Fresh Rose petals இவை வகைக்கு ½ பலம் வீதம் எடுத்துப் பாண்டத்திலிட்டு தண்ணீர் ஒருபடி விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி ½ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுத்து வர சுகவிரேசனமாகும். சுரம் தணியும். காய்ச்சல் கட்டியும் கரைந்துவிடும்.

13. சுயமக்கினிச் செந்தூரம், காந்த அயச் செந்தூரம், காந்த அயரசச் செந்தூரம்

இவைகளிலொன்றைத் திரிகடுகுச் சூரணம் தேன் கலந்ததில் அனுபானித்துக் காலை, மாலை கொடுத்து முன் கூறிய குடிநீர்களில் ஒன்றைக் கொடுத்துவர மண்ணீரல், கல்லீரல் கட்டிகள், பெரு வயிறு இவை

குணமாவதோடு இரத்த விருத்தியையும், உடல் வன்மையையும் உண்டாக்கும். (S.R Pharma)

14. சித்தா கொய்னா-கலவை:-

(Not the modren medical quinine but substitute for it in siddha)

பொற்சீந்தில் அல்லது நாட்டுச் சீந்தில் கிழங்கு சேகரித்து மேல் தோல் சீவி சிறு வில்லைகளாக நறுக்கி உலர்த்தி இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும்.

அதே மாதிரி கோவைக் கிழங்கு (கள்ளியில் படராததும் காய் கசப்பாக இருப்பதுமான செடியில் சேகரித்த கோவைக் கிழங்கு) சேகரித்து முன்போல் சூரணம் செய்து கொள்ளல் வேண்டும்.

பிறகு இவ்விரண்டு சூரணங்களும் சம எடை எடுத்துச் சேர்த்து ஒரு கல்வத்திலிட்டுப் பசுவின்பால் விட்டரைத்து வில்லை தட்டி உலர்த்திப் பொடித்து தாய்ப்பால்தெளித்துப் பிட்டுபோல் பிசைந்து நிழலிலுலர்த்தி, அச்சமயம் அடிக்கடிக் கிளறிக்கொடுத்து கையால் பிசைந்து நன்றாய் உலர்ந்த பின் புட்டியில் வைக்கவும்.

அளவு:- இதில் ஒரு நெல் எடை தினம் இருவேளை அல்லது மூன்று வேளை தேன் அல்லது கெந்தகப்புளிப்பு (Dilute Acid Sulphuric) இவற்றிலொன்றில் அனுபானித்துக் கொடுத்து வர முறைக்காய்ச்சல், குளிர் காய்ச்சல், நாட்பட்ட சுரம், விடாச் சுரம், காய்ச்சல் கட்டி முதலியன குணமாகும். (This is a Substitute for Quinine products)

15. தாளக மாத்திரை: வெள்ளைப்பாடாண மாத்திரை:

இவைகளிலொன்றை காலை, மாலை தக்க அனுபானத்துடன் கொடுக்க மேற்கண்ட சுரங்கள், சுரக்கட்டி இவை குணமாகும்.

(S.R. Pharma)

22. வெளுப்பு நோய்.

பரிகாரம்.

இந்நோயில் உடல் வன்மை குறைந்து பசித்தீ கேடடைந்து உண்ட உணவு சரியாகச் செரியாத காரணத்தால் இரசக் குருதிகள் ஊட்டம் பெறா. இவைகளும் "அனல் பித்தமும்" கெட்டு தோலுக்கு நிறத்தைக் கொடுக்கும் அழல் (ரஞ்சித பித்தமும்) மெலிந்து, நிறத்திலும் எடையிலும் குறைந்து, தீக்குற்றத்தைப்பெருக்கும். அதன் காரணமாக மற்ற இரு குற்றங்களும் தன்னிலை மிகுந்து பரவுகாலின் (வியானன்) வன்மையைக் கெடுத்து வெளுப்பு நோய் உண்டாகிறது.

ஆதலால் இந்நோயில் தன்னிலை திரிந்த குற்றங்களைத் தன்னிலைப் படுத்துவதற்கு கழிச்சல் மருந்துகளை வழங்க வேண்டும். அப்பால் பசித்தீயைத் தூண்டும் மருந்துகளையும், உண்ட உணவு சரிவரச் செரிக்கக் கூடிய மருந்துகளையும், குருதியின் வன்மையைப் பெருக்கக் கூடிய மருந்துகளையும் கொடுத்தல் வேண்டும்.

கழிச்சலுக்கு கொடுக்கக்கூடிய மருந்துகள் இலகு விரேசன காரியாக இருத்தல் நல்லது.

1. திராட்சைக் குடிநீர்:- (சி.ம.)

அங்கூர் திராட்சை, பேரீந்து (கச்சூர்), பன்னீர்ப்பூ, சிவதை வேர் இவை வகைக்கு சம எடை சேர்த்து முறைப்படி குடிநீரிட்டுத் தக்க அளவில் தினம் காலையில் ஒரு வேளை அல்லது அவசியமானால் மாலையிலும் கொடுத்து வர மலம் ஒழுங்காய்க் கழியும்.

2. அகத்திக் கீரையை வேகவைத்து வடித்த நீரில் சிறிது பனங் கற்கண்டு கூட்டி ½ முதல் 1 ஆழாக்கு காலையில் மட்டும் கொடுத்து வர மலம் கழியும், வயிற்றுப் புழுவும் வெளியாகும். (சி.ம.)

3. நிலவிளா, பற்பாடகம், சீந்தில் கொடி, நிலாவாரை, சிவதை வேர் இவை சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு வடிகட்டி தக்க அளவில் சிறிது பேதியுப்புங் கூட்டி காலையில் மட்டும் கொடுக்கப் பேதியாகும். பித்த நீர் அகலும். (சி.ம.)

4. மேலும், அழற்சி எண்ணெய் (See below) மலக்குடார மெழுகு, தித்திப்பு பேதி இலேகியம் (Sweet Laxative Lehiyam) மூலக்குடார நெய், அத்திப்பழ மணப்பாகு இவைகளில் ஒன்றைத் தக்க அளவில் காலையில் மட்டும் கொடுத்து வர மலம் நன்றாய்க் கழியும். பசித் தீபனமுண்டாக்கும். (for preparation of these medicines please refer to வை.திரட்டு, S.R. Pharma and Hosptital Pharma copoeia).

பிறகு பசித்தீயைத் தூண்டவும், உண்ட உணவு செரிப்பிக்கவும் கீழ்க்கண்ட பொடி, இலேகியம் முதலியவற்றை உபயோகிக்க வேண்டும்:-

1. திரிகடுகுச் சூரணம், இலேகியம்.
2. பஞ்ச தீபாக்கினிச் சூரணம், இலேகியம்.
3. அட்ட தீபாக்கினிச் சூரணம்.
4. தாளிசாதிச் சூரணம்.
5. ஏலாதிச் சூரணம்.
6. சௌபாக்கிய சுண்டி.
7. சுண்டை வற்றல் சூரணம்.
8. தாளிசாதி வடகம்.
9. தயிர் சுண்டிச் சூரணம்.
10. இஞ்சி ரசாயனம், இலேகியம்.
11. சீரகாதிச் சூரணம், இலேகியம்.
12. மந்தவாயுச் சூரணம்.
13. கண்டாத்திரி இலேகியம்.
14. பித்த வாயு இலேகியம்.

15. வில்வாதி இலேகியம்.

16. கறிவேப்பிலை சூரணம்.

இவைகளிலொன்றை காலை, மாலை தனித்தும், மற்ற பற்பச் செந்தூரங்களுக்கு அனுபானமாகவும் உபயோகித்து வர நல்ல பசி தீபனம் உண்டாகும். உண்ட உணவு நன்றாய்ச் செரிக்கவும் செய்யும். (Please refer to சி.வை. திரட்டு. S.R. Pharma and Hospital Pharma for their preparation and other details.)

இதற்கு மேல் குருதியின் வன்மையைப் பலப்படுத்துவதற்குக் கீழ்கண்ட இரும்பு, காந்தம், மண்டூரம், தங்கம், வெள்ளி, முத்து, பவளம் முதலான பற்பச் செந்தூரங்கள் கொடுத்து வர வேண்டும்.

1.கரிசாலை இலேகியம்:-

இதில் புன்னைக்காயளவு காலை, மாலை ஒரு மண்டலம் வரை சாப்பிட்டு வர பித்த பாண்டு தீரும், மற்றும் வெட்டை, கைகால் ஓய்ச்சல், எரிவு , மயக்கம், வாந்தி, அரோசிகம், கிராணி, நீர் சுரப்புடன் கூடிய வீக்கம் முதலியன குணமாகும். இதனை உண்பவர்கள் அசுவ கெந்தி தைலத்தில் தலை முழுகுதல் நல்லது. (சி.வை. திரட்டு)

2.அழற்சி எண்ணெய்:- (செய்முறை ஏட்டுப்பிரதி) (கழிச்சலுக்கு)

முள்ளங்கிச் சாறு, மணித்தக்காளிச் சாறு, சோற்றுக் கற்றாழைச் சாறு, வெள்ளறுகுச் சாறு, வல்லாரைச் சாறு, சிறு கீரைக் சாறு, சிற்றாமணக் கெண்ணெய் இவை வகைக்கு ஒரு படி வீதம் சேகரித்து ஒன்றாய்த் தைலம் காய்ச்சும் பாண்டத்திலிட்டுக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் வடிகட்டிப் புட்டியிலடைக்கவும், இதில் 1 முதல் 2 தேக்கரண்டி எண்ணெய் காலையில் மட்டும் கொடுத்து வர மலம் கழியும். நீரும் நன்றாய் வெளியாகும். உடல் காந்தல், எரிச்சல் தணியும். அழல் குற்றம் தன்னிலைப் படும். பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு இவற்றில் இதனை இலகு விரேசனமாகக் கொடுக்கலாம். (Healthy Laxative Oil). வாய்ப்புண், வயிற்றுப்புண், குடற்புண், மூல நோய் இவற்றில் மலம் கழிவதற்கு இந்த எண்ணெயை அளவறிந்து ஒரு வேளை காலையில் அல்லது இரவில் படுக்கைக்குப் போகும் போது

சிறிது பாலில் அல்லது ஆரஞ்சு பழச்சாற்றில் அனுபானித்துக் கொடுத்து வரலாம்.

3. பொற்றலைக்கையான், கடுக்காய் லோகமண்டூரம்:-

இவை சேர்த்துக் குடிநீர் செய்து 2 முதல் 3 அவுன்சு காலை, மாலை கொடுத்து வரக் குருதியின் வன்மையைப் பெருக்கும்.

4. அயஜம்பீர கற்பம்:-

(சரியான முறை இங்கு குறிக்கப்பட்டிருக்கிறது).

சுத்தி செய்த அயப்பொடி பலம் பத்து சேர்க்கும்படி புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப்படியும் சேர்க்கலாம். ஆனால் சிறந்த குணம் பெற வேண்டுமானால் வெகு நன்றாய் முடிவு பெற்ற அயச் செந்தூரம் (மாதுளம்பூ நிறமுடைய செந்தூரம்) பலம் ஐந்து சேர்த்தால் மிக்க நலமாயிக்கும். மிளகுப் பொடி பலம் 10 சேர்க்க வேண்டும். பூண்டுதிரி பலம் 5 எடுத்துக் கொள்ள வேண்டும். இம்மூன்று சரக்குகளையும் முறைப்படி நன்றாய் இடித்துக் கலந்து வைக்கவும். எலுமிச்சம் பழம் 40 எண்ணிக்கை எடுத்து ஒவ்வொன்றையும் நான்கு பிளவாக நறுக்க வேண்டும். ஊறுகாய்க்கு உப்பு வைப்பது போல் ஒவ்வொரு எலுமிச்சம் பழத்திலும் மேற்கண்ட கலவைப் பொடியை 40 கூறாகப் பொதிந்து ஒரு ஜாடி அல்லது மட் பாண்டத்தில் அடுக்கி வைத்து நல்லெண்ணெய் 25 பலம் எடையை அதில் எங்கும் சுவரும்படி விட்டு மேல்மூடி சீலைமண் செய்து பூமி பந்தனம் வைத்திருந்து, 40 நாட்கள் சென்ற பின் அதனைத் திறந்து வேளைக்கு ஒரு பிளவு வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர வெளுப்பு நோய், ஊதல்நோய்,. மஞ்சள் நோய் இவை குணமாம்.

குறிப்பு:- புத்தகத்தில் சொல்லியிருக்கிற படி 50 பலம் நல்லெண்ணெய் விட்டு வைத்தால் ஊறுகாய்ப்பாகம் சரியாக வருவதில்லை. அயப்பொடியைச் சேர்த்துச் செய்தால் களிம்பு நாற்றம் அதிகம் உண்டாகும். பூமிபந்தனம் மாட்டுத் தொழுவில் குழி வெட்டி அதில் வைத்திருப்பது போதுமானது. அடிக்கடி மேல் பாகத்தில் தண்ணீர் தெளிக்கலாம். சேறுள்ளயிடத்தில் பாண்டத்தை புதைத்து வைப்பது தேவையில்லை. என்

அனுபவத்தை இங்கே விளக்கியுள்ளேன். எண்ணெயின் அளவைக் கூறிய விடத்து "முற்கூறிரு" என்று நூலில் எழுதியுள்ளார். அதன்படி 50 பலம் எண்ணெய் சேர்க்கவேண்டும். எல்லாம் எண்ணெய் மயமாய்ப் போய் விடும். எண்ணெய்ச் சிக்கல்அதிகம் வீசும். "முற்கூறிடு" என்பதாக ஆதி நூலில் பெரியோர்கள் எழுதியுள்ளனர். (கையெழுத்துப் பிரதி) அதன்படி முதல் மூன்று சரக்குகளின் மொத்த எடைக்கு சம எண்ணெய் சேர்க்க வேண்டுமென்பதை நாம் அறிகிறோம். 25 பலம் எண்ணெய் சேர்த்தால் அயஜம்பீரகற்பம் வெகு நேர்த்தியாகயிருக்கும்.

5.அய பிருங்கராஜ கற்பம்:- (செய்முறை.)

புத்தகத்தில் கூறியது ஒரு புறமிருக்க என் ஆராய்ச்சி அனுபவத்தை இங்கு விளக்கியுள்ளேன்:-

அயப்பொடிக்குப் பதிலாக நயமான முன்கூறியது போன்ற அயச்செந்தூரம் 4 பலம் எடுத்துக் கொள்க! மண்டுரத்திற்கு பதிலாக நன்றாய் முடிவு பெற்ற மண்டுரச் செந்தூரம் 6 பலம் எடுக்கவும். அம்மியிலிட்டுப் பொற்றலைக் கையான் சாறு தெளித்து நன்றாய் விழுது போலரைத்து வில்லைகளாகக் தட்டி ரவியுலர்த்தவும். வில்லைகள் நன்றாயுலர்ந்த பின் மீண்டும் அம்மியிலிட்டுப் பொடித்து (அல்லது இம்முறை கல்வத்திலிட்டு) பொற்றலைக் கையான் சாறு விட்டு இரண்டு நாளரைத்து வில்லைகள் செய்து ரவியுலர்த்தவும். இம் மாதிரியாக மொத்தம் ஐந்து முறை சாறு விட்டரைத்து வில்லைகள் செய்து உலர்த்திப் பொடித்த பொற்றலைகையான் சூரணம் 10 பலம் எடுத்துக் கொள்ளவும். பிறகு இம்மூன்று சரக்குகளையும் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து பொற்றலைக் கையான் சாறு விட்டு ஒரு நாள் அரைத்து மறுநாள் கல்வத்துடன் ரவியில் வைத்து உலர்த்தவும். நன்றாய் உலர்ந்த பின் மீண்டும் மேற்படி சாறு விட்டு ஒரு நாள் அரைத்து மறுநாள் வெய்யிலில் உலர்த்தவும்: இவ்விதமாக மொத்தம் மூன்று முதல் ஐந்து தடவை அரைத்து உலர்த்தவும், அதன் பின் முன் செய்த மாதிரியே எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு நாள் கல்வத்திலரைத்து மறுநாள் ரவியுலர்த்தவும், இதனைத் திரும்பவும் மூன்று முதல் ஐந்து தடவை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உலர்த்தி இறுதியாகப் பொடி பொடித்துப் பாட்டிலில் வைக்கவும். இதுவே மிகச் சிறந்தமுறை. மேன்மையான குணமளிக்கும். இதுவே ஆராய்ச்சியின் பயன், இதனை 1 முதல் 2 சிட்டிகையளவு காலை, மாலை தேன், நெய்,

வெண்ணெய், பாலேடு, பழச்சாறு, தயிர் முதலான அனுபானங்கள் ஒன்றில் கலந்து சாப்பிட்டுவர மேற்கூறிய பாண்டு, சோபை, காமாலை, வல்லை, பிலீகம் முதலியவை குணமாகும். மிகச் சிறந்த மருந்துகளில் ஒன்று.

குறிப்பு:- இதனை மாத்திரையாக உருட்டி நிழலுலர்த்தி காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டு வரலாம். முன் மருந்துகளை இறுதியாக அரைத்து முடிந்தவுடன் அதனை ரவியில் உலர்த்தாமல் சிறு இலந்தை விதையளவு மாத்திரையாக உருட்டி விடலாம்.

6.அயபற்பம், செந்தூரம்:- இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தேன், சர்க்கரை, திப்பிலி, மிளகு இவற்றிலொன்றில் அல்லது வேறு தக்க அனுபானங்களில் கலந்து கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு, மேக நோய், வாயுக்கள், பழைய சுரங்கள், மேகப் புண்கள் முதலியன குணமாகும். பொதுவாக அயபற்பச் செந்தூரத்தால் பலவீனத்தைக் கொடுக்கக் கூடிய நோய்கள் யாவும் விரைவில் குணமாகும்.

7.காந்த பற்பம், செந்தூரம்:- இதில் ஒரு குன்றியளவு காலை, மாலை தேன், நெய், வெல்லம் முதலிய அனுபானங்களில் கொடுக்க மேற்குறிப்பிட்ட நோய்கள் யாவும் குணமாகும். அன்றியும் அசதி வெப்பு, இரத்த காசம் , உளமாந்தை, வாத பித்தங்களும் குணமாகும். தேகத்திற்கு மிக்க பலத்தைத்தரும். வில்வாதி இலேகியம். மகாவில்வாதி இலேகியம் இதில் அனுபானமாக உபயோகிக்க மிகவும் நல்லது.

பத்தியம்:- அயம், காந்த பற்பச் செந்தூரங்கள் சாப்பிடும் போது பூசனிக்காய், கொள், கடுகு, காடி இவை ஆகா. நெய், சர்க்கரை, பால் கோதுமை இவைகள் உத்தமம். பெண்போகம் விரும்பினால் தின்ற மருந்து விருதாவாய் விடும்.

8.அயவீரச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், அன்னபேதிச் செந்தூரம், வெடி அன்னபேதிச் செந்தூரம், அன்னபவளச் செந்தூரம், பொன்னிமிளைச் செந்தூரம், மண்டூரச் செந்தூரம், உலோக மண்டூரச் செந்தூரம், சித்த மண்டூரம், எ்.குச் செந்தூரம், தங்கச் செந்தூரம், பற்பம், அயபூநாகச் செந்தூரம், அயத் தங்கச் செந்தூரம், வெள்ளி பற்பம், முத்து பற்பம், பவளபற்பம், மான்கொம்பு பற்பம், காந்த அயச் செந்தூரம், காந்த

அயரச செந்தூரம், சுயமக்கினிச் செந்தூரம் இவை போன்ற மருந்துகளைத் தனித்தனியாக வேனும் அல்லது சிலவற்றைக் கலந்தேனும் நெய், தேன் அல்லது வேறு தகுந்த சூரணம், இலேகியங்களிலேனும் அனுபானித்து தக்க அளவில் காலை, மாலை கொடுத்துவர பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்களைக் குணமாக்குவதோடு, உடலுக்கு நல்ல பலத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும்.

அன்றியும், அயகாந்தச் சூரணம், சுவர்ண பவள பற்பம், சுவர்ண பவள முத்து வெள்ளிக் கலவை பற்பம், சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு, பூரண சந்திரோதயம், திரிலோகச் செந்தூரம் (அயம், காந்தம், அயக்கிட்டம்), கரிசாலை இலேகியம், சிந்தாதி இலேகியம் (சிஞ்சாதி இலேகியம்), அயதாம்பிரச் செந்தூரம், பஞ்சலோகச் செந்தூரம், நவலோகச் செந்தூரம், கண்டரச பற்பம், சாதிலிங்க பற்பம், இரச பற்பம், சுவர்ண வாலை ரச செந்தூரம், காளமேக நாராயணச் செந்தூரம், குலாந்தகச் செந்தூரம், கெந்தகச் சுண்ணம், வான மெழுகு, கனக இலிங்க மெழுகு, தங்க மெழுகு, மண்டூராதி அடைக் குடிநீர், பொற்றலைக் கையான்-கடுக்காய்-அயமண்டூரம் சேர்த்த குடிநீர், வெண்பூசணி இலேகியம், நெல்லிக்காய் லேகியம், நன்னாரி, நிலப்பனை, தண்ணீர் விட்டான் கிழங்கு, வல்லாரை இவற்றின் நெய், இவற்றிலேதேனும் ஒன்று அல்லது பல அவசியம் போல் குறிகுணங்களுக்கு ஏற்றவாறு அவ்வவற்றிற்குரிய அளவுப்படி எடுத்துக் கலந்து தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை முதலிய பிணிகள் நீங்கி தேகம் பலப்படும். (For Preparation and other details please refer to S.R. Pharma and சி. வை. திரட்டு) மேற்கூறிய மருந்துகள் யாவும் பசி தீபனம், செரிமானம், இரத்த விருத்தியை உண்டாக்கும்.

தித்திப்பு பேதி மெழுகு:- (ஏடு-மிகவும் நல்லதோர் "இலகு விரேசனகாரி" செய்கையுள்ளது).

செய்முறை:-

இரஸ்தாளி வாழைப்பழம்	1 அல்லது ஒரு பலம் எடை
கச்சூர் பழம் (பேரீந்து)	1 பலம்
அங்கூர் திராட்சை	1 பலம்

சீனாக்கற்கண்டு பொடித்தது	1 பலம்
பாதாம் பருப்பு	1 பலம்
தேன்	1 பலம்
பசு நெய்	1 பலம்

சுக்கு, மிளகு, திப்பிலி சூரணம், வகைக்கு ½ பலம் வெண்கடுகு ½ பலம் இவைகளை முறைப்படி பொடித்து, கல்வத்தில் இட்டு, ஒன்று சேர்த்து மெழுகு போல் நன்றாய் அரைத்து எடுத்து டப்பியிலடைக்கவும்.

அளவு:- சுண்டைக்காயளவு அதிகாலையில் அல்லது படுக்கைக்குப் போகும் போது தினம் ஒரே வேளை சாப்பிட நன்றாய் மலங்கழியும். சிரமமிராது. அதிகம் போனால் மோர் சாப்பிடலாம். அல்லது வசம்பு சுட்ட சாம்பல் ஒரு சிட்டிகையைத் தேனில் குழைத்துச் சாப்பிட உடனே பேதி கட்டுப் படும்.(This is only a healthy Laxative)

அன்றியும், வயிற்றில் கிருமிகளிருந்தால், அதனால் ஏற்படும் "கிருமிகப் பாண்டு நோயில் கிருமிகளைப் போக்குவதற்கு கீழ் கண்ட முறைகளிலொன்றைப் பிரயோகிக்கலாம்:" (As an anthelmentic in case of மண்ணுண் பாண்டு or கிருமிகப் பாண்டு.)

1. இளங்கொழுந்து வேப்பிலையை அரைத்து ஒரு நெல்லிக் காய் அல்லது கொட்டைப் பாக்களவு மூன்று உருண்டைகள் உருட்டி அதிகாலையில் மட்டும் மூன்று நாட்கள் தவிடு அல்லது கரும்புச் சர்க்கரையில் புரட்டி முழுங்கச் செய்யக் கொக்கிப் புழு, மற்ற குடற் கிருமிகளும் வெளியாகும். அதனாலேற்படும் வயிற்று வலியும் குருதிக் குறையும் குணமாகும். ஆகாரம்:- மோரும் சாதமும் கொடுக்கவும்.

2. சிற்றாமணக்கெண்ணெய் ஒரு அவுன்சு, பசுவின் பால் வீசம் படி, சீனாக்கற்கண்டு சிறிது பொடித்துச் சேர்த்துக் காலையில் மட்டும் கொடுக்க நன்றாய்க் கழிச்சலுண்டாகும். களைப்பு இராது. கிருமிகள் வெளியாகும். மோரும் சாதமும் ஆகாரம் கொடுக்கவும்.

3. கடுக்காய்த் தோல் 2 கழஞ்சு, வேப்பலகு (வேம்பின் ஈர்க்கு) 10 கழஞ்சுஇவற்றைப் பொடித்துச் சேர்த்து பிரண்டைச் சாறு விட்டு அரைத்து, வழித்து, அத்துடன் பசுவின் வெண்ணெய் சிறிது சேர்த்துக் காலையில் மட்டும் முழுங்கி விடக் கிருமிகள் யாவும் வெளியாகும். (ஏட்டுப்பிரதி)

மேற்கோள்.

இரண்டு கழஞ்சு கடுக்களையும்
ஈரைந்து வேப்பலகும் காட்டுப்
பிரண்டை சாற்றரைத்து ஆவின்
வெண்ணெயிலீய்ந்து முழுங்கிடவே
திரண்டு கிடந்த புழுக்கள் யாவும்,
கீரைக்கிருமி உள்ள தெல்லாம்
புரண்டு திரண்டு விழாதாகில்
பொன்பதி னாயிரம் தருவோமே-

என்பதனால் மேற்குறிப்பிட்ட பரிகாரம் கிருமி நாசினி யென அறிகிறோம்.

4. கடுக்காய்த் தோல் 4 பங்கு, காயம் 3 பங்கு, சுக்கு 2 பங்கு உப்பு பற்பம் 1 பங்கு இந்த விகிதப்படி பொடித்து, கலந்து ஒரு புட்டியில் வைத்துக் கொண்டு, இதில் 1 முதல் 2 வராகனெடை பொடியை பசு நீர் 2 முதல் 4அவுன்சில் கலந்து காலையில் மட்டும் கொடுக்கப் பேதியுடன் கிருமிகளும் வெளியாகும். மோரும் சாதமும் ஆகாரம் கொடுக்கவும். (ஏட்டுப்பிரதி)

கடுக்காய் நாலு காயமூன்று கதித்த சுக்கு
யிரண்டுடனே
அடுக்கடையுப்பு ஒன்றுடனே யடைவா
யரைத்துண் பீரேல்
கொடுப்பாய் கோமூத்திரத்தில்
கொள்ளப் பூச்சியுள்ள தெல்லாம்
கிடைக்காதுன் மலம் சீதங்கிருமி யாவும்
போய்விடுமே.

என்பதனால் இதனைக் காலையில் மட்டும் கொடுக்கக் கிருமிகள் வெளியாவதுமல்லாமல், பழைய மலம், சீதம் யாவும் குணமாகும் என்கிறார்.

5. தேங்காய் இலேகியம்:-(ஏடு)

சுத்தி செய்த பூரம், ரசம், லிங்கம், கெந்தி இவை வகைக்கு இரண்டு வராகனெடை, சுத்தி செய்த நேர்வாளம் பத்து வராகனெடை, சுக்கு, திப்பிலி, தேசாவரம், சித்திரமூலம், சன்னிநாயகம் பறங்கிச் சக்கை, சிவதை வேர், பெருங்காயம் இவைகளின் பொடிவகைக்கு இரண்டு வ்ராகனெடை, கொடிகள்ளிப்பால் ஒரு ஆழாக்கு, பனை வெல்லம் (செல்லத்தக்க அளவு), முற்றின தேங்காய் ஒன்று முன்கூறிய மருந்துப்பொடிகளை ஒன்றாய்க் கலந்து கள்ளிப்பால் விட்டுக் கல்வத்தில் சற்று அரைத்து தேங்காயை ஒரு கண் திறந்து உள்ளிருக்கும் தண்ணீரை வெளியாக்கி விட்டு, மருந்துகளைத் தேங்காய்க்குள் செலுத்தி மீதியுள்ள கள்ளிப் பாலையும், தேங்காய்க்குள் விட்டு வாய்க்கு ஆப்பிட்டு அடைத்து, அப்பால் தேங்காய் பூராவும் சாணத்தினால் ஒரு அங்குலம் கவசம் செய்து நன்றாய் ரவியுலர்த்தி நூறு வரட்டியில் புடமிட மருந்தின் வாடை வெளியில் வீசினாலும், தேங்காயின் மேலோடு கருகினாலும் உடனே நெருப்பினின்றும் கவசத்தை வெளியிலெடுத்து ஆறவைத்துப் பிரித்து ஓடு நீக்கி தேங்காயுடன் உள் மருந்தையும் சேர்த்து அம்மியிலிட்டு நன்றாய் இலேகியம் போல் ஒன்றாய்ச் சேரும்படி அரைக்க வேண்டும். இலேகிய பதம் வரக்கூடியதாக சம எடை பனைவெல்லம் சேர்த்து அரைத்து வழித்து அகல வாயுடைய புட்டியில் வைக்கவும்.

அளவு:- 2 குன்றி முதல் 4 குன்றி அளவு காலையில் மட்டும் 1 முதல் 3 தினங்கள் கரும்புச் சர்க்கரையில் புரட்டி விழுங்கச் செய்யவும். சிறு சுண்டைக்காயளவு சாதாரணமாய்க் கொடுப்பதுண்டு. களைப்பின்றி நன்றாய் பேதி ஆகும். தட்டைப் புழு, கொக்கிப் புழு, மற்றுமுள்ள குடற் புழுக்கள் யாவும் வெளியாகும். அன்றியும் மகோதரம் குறிப்பாக (நீர்ப்பெரு வயிறு) பீலிகம், பாண்டு, சோபை, குன்மம், வயிற்றுவலி முதலிய பிணிகள் குணமாகும். (S.R. Pharma)

6. தசதீட்சைக் குழம்பு (வேறு வகை தேங்காய் இலேகியம் என்பர்)

முற்றின தேங்காய் ஒன்று கண் திறந்து நீர் போக்கி அதனுள் கொடிகள்ளிப் பால், சதுரக் கள்ளிப்பால் இவை வகைக்கு ஒரு அவுன்சு, சுத்தி செய்த கெந்தி, ரசபற்பம், காந்தச் செந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, காயம், வெண்கார பற்பம் அல்லது பொரித்த வெண்காரம், கடுகுரோகணி இவை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடியாக்கி ஒன்றாய்க் கலந்து மேற்கூறிய பால் விட்டுக் கல்வத்தில் அரைத்து வழித்துத் தேங்காய்க்குள் செலுத்தி ஆப்பிட்டு சாணம் கவசஞ் செய்து உலர்த்திப் புடமிட்டு (75 எருவில்) முன் போல் மருந்து வாடை வெளி வீசினாலும், ஓடு கருகினாலும் உடனே கவசத்தை வெளியிலெடுத்து ஆறவிட்டுப் பிரித்து ஓடு நீக்கித் தேங்காயுடன் மருந்தும் சேர்ந்த எடைக்கு சமம் பனைவெல்லம் சேர்த்து அம்மியிலிட்டு மெழுகு அல்லது குழம்பு பதமாக அரைத்து வழித்துச் சிமிளில் அல்லது வாயகன்ற புட்டியில் வைக்கவும்.

அளவு:- காசு எடை காலையில் மட்டும் ஒரே வேளை சர்க்கரையில் புரட்டி விழுங்கவும். அல்லது Gelatin Capsule-ல் அடைத்தும் விழுங்கலாம். பேதியாகும்.

அதிகம் பேதியானால் முறிவு:- மோருஞ் சாதமும் கொடுக்கவும். வசம்பு சுட்ட சாம்பல் ஒரு சிட்டிகை தேனில் குழப்பிக் கொடுக்கலாம். வசம்பு சுட்ட சாம்பலை எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்தும் கொடுக்கலாம்; பேதி நிற்கும். புழுக்கள்யாவும் வெளியாகும். அன்றியும் பெரு வயிறு, பீலிகம், பாண்டு, சோபை, காமாலை, புண், கண் எரிவு, கைகால் முடக்கு இவை யாவும் குணமாகும்.

7. நன்றாய் முற்றின தேங்காய் ஒன்றை நெல் வேகவைக்கும் போது அதனுள் வைத்து வேகவைத்து, நெல் வெந்த பின் தேங்காயை வெளியிலெடுத்து ஓடு நீக்கித் தேங்காயை மட்டும் காலையில் சாப்பிடச் செய்யவும். பேதியாகும். தட்டைப் புழுவுக்கு (Tape Worm) இது நேர் மருந்தெனக் கூறியுள்ளார்.(ஏட்டுப்பிரதி) அனுபவமுறை.

மேற்கோள்

"அஃதிற் றேங்காயை யன்றவித்துச் சேய்க்கீய
சிக்கெனப் பூச்சு சிதறும்" (வை.குறள்).

8.கிருமி எண்ணெய்:-(ஏடு)

சிற்றாமணக்கு நெய்	¼ படி
பசும் பால்	¼ படி
தேங்காய்ப் பால்	¼ படி
காட்டெருமைப் பால் (அதாவது சதுரக்கள்ளிப் பால்)	1/8 படி

சாணிப் பாலில் வேக வைத்துக் கழுவி மேற்றோல் போக்கி, முளை நீக்கி உலர்த்தி நெய் தெளித்து வறுத்தெடுத்த புரசம் விதைப் பருப்பு பலம் ஒன்று , இதனைப் பொடித்து முன் சரக்குகளுடன் எல்லாவற்றையும் தைலச்சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயில் காய்ச்சிக் கடுகு திரள் பதம் வரும்போது தைலத்தை வடித்து புட்டியில் அடைக்கவும்.

அளவு:-1 முதல் 2 வ்ராகனெடை அளவு கரும்புச் சர்க்கரை அல்லது காப்பியுடன் (Indian coffee) கலந்து காலையில் மட்டும் கொடுக்க எல்லா வகைக் கிருமிகளும் வெளியாகும். கழிச்சலுண்டாகும். Milk, Tea, முலைப்பால் ஏதேனும் ஒன்றில் அனுபானித்தும் இந்த எண்ணெயைக் கொடுக்கலாம்.

9. மேனி எண்ணெய்:- (ஏட்டுப்பிரதி)

சிற்றாமணக்கெண்ணெய் படி ¼

குப்பைமேனியிலை ஒரு பலம்.

செய்முறை:-

குப்பைமேனியிலையை எண்ணெய் நன்றாய்க் காயும் போது சிறிது சிறிதாகப் போட்டுப் பொரிந்த பின் கண்ணுக் கரண்டியால் பொரிந்த இலைகளை எடுத்து வைக்கவும். எல்லா இலைகளையும் பொரித்து எடுத்த பிறகு அந்த எண்ணெயைச் சிறிது சிறிதாக வார்த்து பொரிந்த இலைகளை ஒரு மட்சட்டியிலிட்டு மத்துவினால் கடைந்து புட்டியிலடைக்கவும்.

அளவு:-¼ முதல்½ பலம் மட்டும் கொடுக்க குடற் கிருமிகள் வெளியாகும்.

10.முருக்கம் விதை மாத்திரை:-(S.R. Pharma)

இதில் ஒரு மாத்திரை (சுண்டைக் காயளவு) காலையில் மட்டும் பனை வெல்லம், இளநீர், நெய், பால், சீனி ஆகிய அனுபானங்களில் கொடுக்கக் கிருமி, மந்தம், சீதக்கட்டு, கெண்டை, வயிற்றுப்பிசம், கவிசை இவை தீரும். (சி.வை. திரட்டு)

11.குடற் கிருமி நாசினி:-(Intestinal worms remedy)

சுத்தி செய்த பலாசு வித்துச் சூரணம்	2	பங்கு
வறுத்திடித்த பெருங்காயச் சூரணம்	1	"
வறுத்திடித்த ஓமம் சூரணம்	1	"
வறுத்திடித்த வாய் விடங்கம் சூரணம்	½	"
வெள்ளைச் சீனி (white sugar)	4 ½	"

இவ்வைந்து சரக்குப் பொடிகளை முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு மூவிரல் அளவு காலை, மாலை ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குத் தேனில் கொடுத்து அடுத்த நாள் காலையில் பேதிக்கு

சஞ்சீவி மாத்திரை, முருக்கன் வித்து மாத்திரை, வச்சிரகண்டி மாத்திரை, மேகனாத குளிகை அல்லது மேற்கண்ட எண்ணெய் ஏதேனுமொன்றைத் தக்க அளவில் கொடுக்கப் பேதியுடன் கிருமிகளும் மயங்கி வெளியாகும்.

ஆகாரம்:- மோரும் சாதமும் கொடுக்கவும், சிறுவர்களுக்கு அளவைக் குறைத்துக் கொடுக்கவும். இதுவே சித்த ஆராய்ச்சி நிலையத்தில் உபயோகப் படுத்துவதாகும்.

12. நிலவேர்க் குடிநீர் (நாக்குப் பூச்சி குடிநீர்):- (சி.வை. திரட்டு)

இதில் ¼ முதல் ½ ஆழாக்கு வீதம் காலையில் மட்டும் கொடுக்கப் பேதியாகும். பேதியாகாது போனால் மாலையில் அளவைக் குறைத்துக் கொடுக்கலாம். அதிலும் பேதியாகாது போனால் மறு நாள் மேலே கூறியிருக்கிற பேதி மாத்திரை அல்லது எண்ணெயைத் தக்க அளவில் ஒரு வேளை கொடுக்கப் பேதியாகும். நாக்குப் பூச்சி, திமிர்பூச்சி, கொக்கிப்புழு முதலிய குடற் கிருமிகள் வெளியாகும்.

ஆகாரம்:-மோரும் சாதமும் கொடுக்கவும்.

13.சித்தாதி எண்ணெய்:- (For correct formula please refer to S.R. Pharma copoeia)

இதில் ½ முதல் ஒரு தேக்கரண்டி அளவு காலையில் ஒரே வேளை சிறிது பசும்பால், நிசித்தண்ணீர், சோம்புக் குடிநீர் ஏதேனும் ஒன்றில் கொடுக்கக் களைப்பில்லாமல் நன்றாய் பேதியாகும். கிருமிகளும் வெளியாகும். குறிப்பாக தட்டைப் புழு வெளியாகும் (Tape Worm) இது ஒரு பெரிய மருந்து, தகுந்த அளவில் மூன்று நாட்கள் காலையில் மட்டும் கொடுத்து வரலாம்.

ஆகாரம்:- மோரும் சாதமும் கொடுக்கலாம். அதிகம் பேதியானால் வசம்பு சுட்ட சாம்பல் தேனிலாவது, எலுமிச்சம் பழச்சாற்றிலாவது கலந்து கொடுக்க ஒரே வேளையில் பேதி நிற்கும். சீரகக் குடிநீர், பழச்சாறு, மோர் இவைகளும் கொடுக்க பேதி நின்று விடும்.

குறிப்பு:-

கிருமிக்கு சிகிச்சை செய்து முடிந்த பிறகு மண்ணுண்பாண்டு நோயில் திரிலோகம், பஞ்சலோகம், நவலோகம் செந்தூரங்களிலொன்றை கரிசாலை இலேகியம், வில்வாதி இலேகியம், மகாவில்வாதி இலேகியம், (Multivite Lehiyam) தாது விருத்தி இலேகியம் ஏதேனும் ஒன்றுடன் சேர்த்து தக்க அளவில் ஒரு மண்டலம் வரைக்கும், காலை, மாலை கொடுத்துவர எல்லாவிதப் பாண்டு நோய்களும் குணமாகும்.

குறிப்பு:- சித்தாதி எண்ணெயினால் பல கொடிய நோய்கள் குணமாகும். இது ஒரு சிறந்த மருந்து, கவிசை, சிர நோய், சூலை, நீராம்பல் கட்டி, மலக்கட்டு, சொறி, இரணம், கிரந்தி, மேகம், வாய்ப்புண், கண் எரிவு, தாகம், விக்கல், சத்தி, குன்மம், அரையாப்பு, பயித்தியம், பறங்கிப் புண், சூதக வாய்வு, வலிநோய், வாய்வு, வயிற்று நோய், பூச்சி வெட்டு, எண்வகைக் குன்மம், நெறிவீக்கம், பவுத்திரம் இவை குணமாகும். புற்று நோய், குறை நோய், (Psoriasis) இவற்றிலும் உபயோகிக்க நல்ல பலனளிக்கும்.

பாண்டு ரோகஹரம் (வைத்திய சதகம்):-

திரிகடுகெருமை மோருஞ் சிறந்த
வெள்ளாட்டு மோரும்
குருகு மண்டூரம் லோகங் கொடிவேலி
கோவினீரும்
அருகுவாய் விடங்க முத்தமாட்சிகம்
இருமஞ்சள் தான்
பரிகடு தான்றி நெல்லிப்
பாண்டு வின் ஹரங்களாமே

திரிகடுகு, எருமை மோர், வெள்ளாட்டு மோர், மண்டூரம், அயம், கொடிவேலி வேர்ப்பட்டை, பசு நீர், வாய் விடங்கம், முத்து, தேன், இருமஞ்சள் (கறிமஞ்சள், கஸ்தூரி மஞ்சள்), கடுக்காய், தான்றி, நெல்லி இவைகள் வெளுப்பு நோயின் ஹரங்களென அறிக.

உணவு

பசியைத் தூண்டக் கூடியதும், உடலின் குருதியைப் பெருக்கக் கூடியதுமான உணவுப் பொருள்களைப் பெரிதும் கையாள வேண்டும். அன்றியும், கிருமிகளை அகற்றக் கூடிய அகத்திக் கீரை, பாகற்காய், இவற்றை அடிக்கடி சேர்த்து வரலாம். எளிதில் செரிக்கக் கூடிய உணவு கொள்ளல் வேண்டும்.

கீரை வகைகளில்:-

கரிசாலை, பொன்னாங்கண்ணி, அறுகீரை, சிறுகீரை, மணத்தக்காளி, தாளிக்கீரை, முளைக் கீரை, பருப்புக் கீரை, எலி செவிக்கீரை, முருங்கைக் கீரை, முருங்கைப் பூ, வாழைப் பூ,இவைகளைத் தாராளமாய் உணவில் சேர்க்கலாம்.

காய்கறிகள்:-

கத்திரிப்பிஞ்சு, வாழைக்கச்சல், முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, வெண்டைப் பிஞ்சு, புடலம் பிஞ்சு, பீர்க்கம் பிஞ்சு, தக்காளி, முட்டைக் கோஸ் இவை போன்ற காய்கறிகளை உபயோகிக்கலாம்.

மாமிச வகைகளில்:-

வெள்ளாட்டுக் கறி, அதன் ஈரல், எலும்பு, போட்டி(தீனிப்பை) முதலியனவும், காடை, கவுதாரி, உள்ளான், புறா, கோழி விடை, உடும்பு முதலியனவும், இத்தியாதி உணவுகள் உடற்கு ஊட்டத்தைக் கொடுத்துக் குருதிப் பெருக்கையும் உண்டாக்கும்.

உணவைச் செரிக்க வன்மை இல்லாதவர்களுக்கு கஞ்சி வகைகளையும் ஊனின் ரசத்தையும் (Soup) கொடுத்தல் வேண்டும்.

ஊன் வகைகளில் சூப்பு:-

வெள்ளாட்டு ஈரலை சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து சம நீர் விட்டு அடுப்பேற்றி சிறு தீயாக எரித்து ஈரல் சற்று வெந்த சமயத்திலிறக்கி (இரண்டொரு கொதி வந்தவுடன் இறக்கி) நன்றாய்ப் பிசைந்து பிழிந்து வடிகட்டிய நீரை எடுத்து அத்துடன் பழரசங்களுள் கொடி முந்திரி, சாத்துக்குடி, ஆரஞ்சு, ஆப்பிள், தக்காளிப் பழம், இவற்றின் ரசத்தில் ஒன்றைக் கூட்டி தினம் ஒரு வேளை கொடுக்கக் குருதிப் பெருக்கு உண்டாகும்.

வெள்ளாட்டின் தனி ஈரலை சிறு சிறு துண்டுகளாக்கி மிஷினில் போட்டுப் பிழிந்தெடுத்த சத்து ரசம். இத்துடன் முன்போல் பழரசம் கூட்டி ஒரு வேளை தினம் கொடுக்கலாம். இதில் ஈரல் துண்டுகளைப் பிழியும் போது தண்ணீர் சேர்க்க வேண்டாம். கொதிக்க வைக்கவேண்டாம். தேவையானால் சிறிது சுடு தண்ணீர் தெளித்துப் பிழியலாம். காலை நேரத்தில் இதனைத் தயாரித்துக் கொடுத்து வரக் குருதிப் பெருக்கை உண்டாக்கி உடலைத் தேற்றவும் செய்யும்.

தமரகக் குடிநீர்:-

இதனைச் சித்த வைத்தியத் திரட்டில் கூறியுள்ள படி சூப்பு தயாரித்து தினம் ஒரு வேளை கொடுத்து வர தமரக நோயில் உண்டாகும் படபடப்பு, வன்மையின்மை, மூச்சு வாங்கல் ஆகிய குறி குணங்கள் நீங்கும். அன்றியும் பாண்டு நோயில் குருதிப் பெருக்கை உண்டாக்கி உடலை வலுப்படுத்தும்.

குறிப்பு:-

மண்ணுண் பாண்டு நோயில் கிருமியைப் போக்கும் மருந்துகளை விவரமாகக் கூறியிருப்பதோடு, மார்பு நோயில் (தமரக நோயில்)ஒரு பிரிவான புழு மார்பு நோயில் கிருமிகளைப் போக்குவதற்கான முறைகள் கூறியிருப்பதையும் மாணவர்கள், மருத்துவர்கள் கவனித்தல் நல்லது.

Our Research Prepartion for Anaemia are noted below:-

4 ,ANAEMIA CURE OR PANDU NIVARANI (SPECIAL)

1. Jeevaloka Chenduram	2 Parts or 4 tolas
2. Aya Veeram	1 Part or 2 tolas
3. Ayakantha Chenduram	1 Part or 2 tolas
4. P.S.M.M. Baspam	2 Parts or 4 tolas.

All these four ingredients are mixed together and bottled up.

Dose:- 3 to 5 grains may be give twice a day with Thiri kadugu,pancha Deepagni Churnams or with B.P. Stablizer and honey or with Jaundice Cure No.II churnam and Honey or with General Tonic Lehiyam or other suitable anupanams.

Uses:- Pandu, Sobai, Kamalai and Indigestion are cured, Liver, Kidneys, Spleen, Heart diseases are well responded to.

23. ஊதல் நோய்.

பரிகாரம்.

இந்நோயில் குருதியின் வன்மை குறைந்து, முறிந்து அல்லது நீர்த்து உடலில் ஐயமிகுதியை விளைவித்து நீரைப் பெருக்கி (அதாவது குருதியின் நீர்பாகத்தை அதிகமாக்கி) உடல் முழுமையும் நீர்மயமாக நீர் கோர்த்து ஊதச் செய்யும். இதன் காரணமாக மற்ற இரு குற்றங்களும் வாயுக்களும் கேடடையும்.

மிகுந்த குற்றத்தினளவாய் கீழ் நோக்குகால் தன் வன்மை இழந்து சிறு நீரையும், எருவையும் இயற்கையாக கழிக்காத படி கடைப்படுத்தும். பரவுகால் குருதியை உடலில் சரியாகப் பரவச் செய்ய முடியாதபடி தன் வன்மையை இழந்து நிற்கும்.

ஆதலால் மருத்துவன் கவனிக்க வேண்டியது யாதெனில், மிகுதியடைந்த குற்றங்களைத் தன்னிலைப்படுத்தியும் உடலில் ஊறிநிற்கும் நீரை வெளிப்படுத்தவும் வேண்டும். அன்றியும், குருதியின் வன்மையைப் பெருக்கி, உடற்கு ஊட்டத்தைத் தரக்கூடியதும், சிறுநீரைக் கழிக்கக் கூடியதும், எருக்கட்டை ஒழிக்கக் கூடியதுமான குடிநீர், பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலான மருந்துகளை வழங்கல் வேண்டும்.

குடிநீர் வகை.

1. நீர்முள்ளிக் குடிநீர்:-

சித்த வைத்தியத் திரட்டில் கூறியபடி தயாரித்து அரை ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுத்துவர நீரைப் பெருக்கிக் கழித்து ஊதல் நோயைப் போக்கும். நீர்கட்டுக்கும் உபயோகிக்கலாம்.

2. நீர்முள்ளிக் குடிநீர்:-

நீர் முள்ளி சமூலம்	3 செடி
சிறு நெருஞ்சி சமூலம்	2 செடி
சிறுகீரை வேர்	10 வேர்
சுரைக் கொடி	ஒரு முழம் நறுக்கிச் சேர்க்கவும்.
அவுரி வேர் (பட்டை நீக்கி)	ஒன்று
வெள்ளரி விதை	2 பலம்
நெல்லிவற்றல்	ஒரு தோலா
கடுக்காய்த் தோல்	ஒரு தோலா
தான்றிக்காய்த் தோல்	ஒரு தோலா
தண்ணீர் (Madras measure)	இரண்டு படி

இவற்றை எல்லாம் முறைப்படி பாண்டத்திலிட்டுக் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி வேளைக்கு வீசம் படியளவு காலை, மாலை கொடுத்துவர நீரையும் மலத்தையும் நன்றாய்க் கழிக்கச் செய்து ஊதல் நோயைக் குணமாக்கும். இது அனுபவமுறை, அவசியம் போல் வேண்டாத சரக்குகளை நீரும் மலமும் கழிவதற்கு ஏற்றாற்போல் மாற்றிக் குடிநீர் தயாரிக்கலாம். (Acute chronic interstital Nephritis, Ascitis, Albuminurea and Nutritional oedema respond to this decoction exceedingly well). -(S.R. Pharma)

உப்பில்லாப் பத்தியம்:- பால், கஞ்சி, மோர், பார்லியரிசி வேகவைத்த நீர் இவை கொடுக்கலாம்.

3. மண்டூராதி அடைக் குடிநீர்:- சித்த வைத்தியத் திரட்டில் கூறியுள்ளபடி தயாரித்து வேளைக்கு இரண்டு அவுன்சு வீதம் தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை, மகோதரம் முதலியன குணமாகும். உப்பில்லாப் பத்தியம், பால் கஞ்சி கொடுக்கலாம்.

4. இயல் 21, 22-ல் மண்ணீரல், கல்லீரல் நோயில் கூறப்பட்ட குடிநீர் வகையில் 1. மண்டூராதி அடைக்குடிநீர், 2. வெள்ளாட்டு நீர் ஊறல் கியாழம் இவ்விரண்டும் ஊதல் நோயிலும் உபயோகிக்கத் தக்க பலனை அளிக்கும். ஊதல் நோய் குணமாகும்.

5. வாழைக் கிழங்குச் சாறும், பசு நீரும் வகைக்கு ½ ஆழாக்கு வீதம் கலந்து காலை, மாலை கொடுத்துவர நீரையும் மலத்தையும் பிரிக்கும். ஊதல் நோய் குணமாகும். (ஏடு.)

6. வெண்கார பற்பம் குடிநீர்:-

தனியாக முறைப்படி குடிநீர் செய்து தக்க அளவில் காலை, மாலை கொடுக்க மலமும் நீரும் கழிந்து வீக்கம் வற்றும்.

7. அதேமாதிரி வெண்கார பற்பம் குடிநீர் :-

10 கழஞ்சு பச்சை வெண்காரம் பொரித்தெடுத்து ஒரு வேளைக்கு கொத்து மல்லிக் குடிநீர் ஒரு சேரில் கலந்து காலை, மாலை அவசியம் போல் கொடுத்து வர மலமும் நீரும் கழிந்து வீக்கம் வற்றும் பித்த நீர் போம். (யூகி முனிவாத வைத்திய விளக்கம்- ஏட்டுப்பிரதி.)

8. நெற்பொரி, சுக்கு, மிளகு, வெண்கார பற்பம் இவையாவும் சம எடையாகப் பொடித்து, ஒன்றாய்க் கலந்து தக்க அளவில் வெந்நீரில் காலை, மாலை கொடுத்துவர மலமும் நீரும் கழிந்து மகோதரம், ஊதல் நோய் முதலியன குணமாகும்.

மேற்கோள்:- (6,7 மற்றும் 8-யூகி முனிவாத வைத்திய விளக்கம் ஏட்டுப் பிரதி.)

6. "விடுவாதஞ் செய்வோமென்பார்
வேதாந்த மார்க்கம் போல்-விரித்துப் பேசும்
கொடுவாதி வெண்காரம் குணமாகப்
பொரித்துக் -குடிநீர்

நடுவாதி மலமடைப்பு நலமான சலமடைப்பு
யிரண்டுந்-தீரும்
சுடுவாதி தனக்குவேறெத்தனை சொன்னாலுந்
தோயான்-தானே" என்பதனாலும்.

7. "கொத்து மல்லிக் கியாழமதில் குணமாகச்
சேரிறுத்துக் -குணவெண்காரம்
பத்துக் கழஞ்சு பொரித்துப் பதிவாகச்
சேர்த்துண்ணப் பகர்ந்த வாயு
பித்த மகோதர நீர்கள் பிசகறவே
வடித்து விடும்-பெருமை சொன்னேன்
சித்தம் வைத்தால் பண்டித முந்திறமாகத்
தீர்ந்துவிடுஞ்-செல்வமாமே" என்பதனாலும்.

8. "நெறியான நெற்பொரியும் நேர்ந்த
சுக்கு மிளகோடு-நெறியாய்க் கொண்டு
குறியான வெண்காரம் குணமான பொரி
நேராம் கூட்டி-வெந்நீர்
பிரியாம லுண்டிடவே பெரு நோய்கள்
மலசலங்கள் பிரித்து -வைக்கும்
எறிவார் கைக்கல்லது போல் இருந்து
உழைப்பான் வாதியர்களி-னியவானே"

என்பதனாலும் அறிகிறோம்.

9. ஊசிக் காந்தம் ஊறல் கியாழம்:-

சுத்தியான ஊசிக் காந்தம் ஒரு பலம் என்றிருப்பினும் நாம் இங்கு உபயோகிக்க வேண்டியது ஊசிகாந்தச் செந்தூரம் ½ பலம், இதனை நன்கு சிந்திக்க வேண்டும். இந்துப்பு ஒரு பலம், சூரத்துக் கடுக்காய்த் தோல் (நம்பர் 30-ன் கொட்டை நீக்கிய தோல்), எருமை நீர் படி இரண்டு. முதல் மூன்று சரக்குகளையும் பொடித்து எருமை நீரில் ஊறவைத்து மறுநாள் முதல் அதிகாலையில் 1 முதல் 1½ ஆழாக்குக் கியாழம் வடிகட்டிக் காலையில் மட்டும் கொடுத்து வரவும். இதுபோல் ஏழு நாட்கள் கொடுக்கவும்.

பத்தியம்:- உப்பில்லாப் பத்தியம். குறுணித் தண்ணீரில் ஒரு படி உப்பைக் கரைத்துச் சுண்டக் காய்ச்சி ரவியுலர்த்தி உப்பாக்கி அதனை மறு பத்தியம் ஏழு நாட்களுக்கு உபயோகிக்கலாம்.

பிணிநீக்கம்:- சோபை, பெருவயிறு, வெப்பு, பாவை, பாண்டு, மகோதரங்கள் முதலியவை குணமாகும். (ஏட்டுப்பிரதி)

பொடிவகை

1. அல்லிக் கிழங்குக் கலவைப் பொடி:-

செவ்வல்லிக் கிழங்கு, குங்குமப்பூ, திப்பிலி, சீரகம், கடுக்காய், தான்றி, நெல்லி, சுத்தித்த நேர்வாளம், அதிமதுரம், கோஷ்டம் இவை வ்கைக்கு சம எடை எடுக்கவும். சோளவேர், பனைவேர், வில்வவேர், செந்நாயுருவி வேர், அசோகு வேர், கரிசாலை வேர் , வேல் வேர் இவை வகைக்கு இரட்டி எடை எடுக்கவும். இவற்றைப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து பாண்டத்திலிட்டு துளசிச் சாறு ததும்ப விட்டுக் கலக்கி பதினான்கு நாட்கள் வெயிலில் வைத்தும், இரவில் பனியில் (நிலாவில்) வைத்தும் உலர்த்த வேண்டும். தினந்தோறும் சாறு வற்றிய அளவுக்குப் புதிய சாறு விட்டு வைக்கவேண்டும். இதற்கு மத்தியில் கல்வத்தில் மருந்தை நன்றாய் அரைத்தும் புதிய சாறு சேர்த்தும் வெயிலிலும், இரவு மதியிலும் வைத்து வர வேண்டும். நன்றாய் உலர்ந்த பிறகு கல்வத்தில் பொடித்து புட்டியில் அடைக்கவும்.

அளவு:- ஒரு பலகறையளவு அதிகாலை சூரியோதய முன்பு மாலையில் சூரியன் மறையும் முன்பும் கரும்பு வெல்லத்தில் வைத்துக் கொடுக்கக் கழியச் செய்து சிறு நீரையும் வடிக்கும். சோபை நோய், மகோதரம் தீரும். (சி.ம.)

2. அமுரி கடுக்காய்ப் பொடி:-

பருங்கடுக்காய் (சூரத்துக் கடுக்காய்) கொட்டை நீக்கிய தோல் பலம் இருபது, இதனை ஒன்றிரண்டாயிடித்து, பசுநீர், வெள்ளாட்டு நீர், யானை

நீர், ஒட்டை நீர் இவை வகைக்குப் படி நான்கு எடுத்து, ஒவ்வொன்றிலும் முறையே ஊறவைத்து ரவியில் உலர்த்தியும், பிறகு நுண்ணிய பொடியாக்கி வைத்துக் கொண்டு 1 முதல் 2 வராகனெடை வீதம் மேற்படி பொடியை வெந்நீரில் கலந்து காலையில் மட்டும் கொடுத்து வர மலம் நீர் முதலியவற்றை நன்றாய் கழித்து மகோதரம், சோபை இவற்றைக் குணப்படுத்தும். சூதக வாயு, வயிற்று வலி முதலியன குணமாகும். (சி.ம.)

3. நீர் முள்ளிப் பூ சூரணம்:-

வெள்ளை நிற நீர் முள்ளிப் பூ, செவ்வல்லிக் கிழங்கு, நெருஞ்சி முள், சிவதை வேர், கடுக்காய், தான்றி, நெல்லி இவை வகைக்குச் சம எடை எடுத்து நன்றாய் உலர்த்திப் பொடித்து, அத்துடன் தென்னை வட்டு கூட்டி (தென்னங் கருப்புக் கட்டி) தக்க அளவில் காலையில் மட்டும் அல்லது தேவையானால் மாலையிலும் கொடுத்து வர மலம், நீர் நன்றாய்க் கழியும். சோபை குணமாகும். (சி.ம)

4. மண்டூராதிப் பொடி:-

சுத்தித்த பழைய செங்கல் சிட்டம், இரும்புச் சிட்டம் இவை வகைக்குப் பலம் 5, நுண்ணிய பொடியாக்கி மட்சட்டியிலிட்டு, அதில் கடுக்காய், தான்றி, நெல்லி இவற்றின் தோல் வகைக்குப் பலம் பத்து வீதம் சேர்த்து முறைப்படி குடி நீராக்கி , மீண்டும் சுண்டக் காய்ச்சி ரவியிலுலர்த்தி நன்றாய்க் காய்ந்த பிறகு இதே மாதிரியாக ஒன்றின் பின் ஒன்றாகப் பசு நீர், வாழைக் கிழங்குச் சாறு, சிறு கீரைக் சாறு, கரிசாலைச் சாறு இவற்றைச் சேர்த்து வற்றக் காய்ச்சி ரவியில் வைத்து உலர்த்தி வரவும். இறுதியாக அதனைப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ஒரு வராகனெடை வீதம் காலையில் மட்டும் கொடுத்து வர வயிறு கழியும். நீரிறங்கும். வீக்கம், பெரு வயிறு குணமாகும். (சி.ம)

5. பசுநீர் கடுக்காய்ப் பாவனம்:- (ஏட்டுப் பிரதி)

"சுத்த மொத்த நாழியாலே-துலங்குங்
கோமயம் நானாழி
முத்த நல்ல.கடுக்காய் நூறு - முழுமன
சற்றுத் தகர்த்திட்டு
நித்தத்தினிய நெருப்பிலேற்றி-நேரே
முடாநேர் தெரித்ததின் மேல்
எத்துஞ்சுக் கிருபதின் கழஞ்சு-ஏற்றந்
திப்பிலி யிதிற்பாதி
மற்றுமிரு பலம் பனையின் சர்க்கரை
மாற்றந் தூவிக் குழம்பாக்கி
மெத்த நெல்லுக்குள்ளே புதைத்து
மீண்டும் பத்தாம் நாளெடுத்து
தக்க குழம்புடன் கடுக்காயொன்று
கூடவிரவித் தின்றுவிட
பித்தஞ் சோகை பாண்டு ரோகம்
வாயு விகாரமூல வியாதி
தத்து மகோதரங் குனட்டு குன்மம்
கவின் பீலிகை யிவையெட்டும்
மற்றுமுள்ள வாயு ரோகம்
வாராதிருக்க மருந்திதுவே."

பசுநீர் நான்குபடி சேகரித்து மட் பாண்டத்திலிட்டு சூரத்துக் கடுக்காய் நூறு எண்ணிக்கை வாங்கிக் கொட்டை நீக்கிப் பொடித்து அதிலிட்டு அடுப்பிலேற்றி, அத்துடன் சுக்குப் பொடி இருபது கழஞ்சு, திப்பிலிப் பொடி பத்துக் கழஞ்சு, பனங் கருப்பட்டி (பனையின் சர்க்கரை) அல்லது பனங்கற்கண்டு இரண்டு பலம் பொடித்து எல்லாவற்றையும் மேற்படி நீரில் சேர்த்துக் காய்ச்சிக் குழம்பு பதத்திலிறக்கி ஆறவிட்டு மூடிச் சீலைமண் செய்து நெற் குவியலுக்குள் புதைந்து வைத்திருந்து பத்து நாட்கள் சென்ற பிறகு எடுத்து, மேற்படி குழம்புடன் கடுக்காயொன்று தினம் காலையில் மட்டும் தின்றுவர நீரும் மலமும் நன்றாய் பிரியும். பித்த சோபை, பாண்டு, வாயு, மூலநோய், மகோதரம், குன்மம், கவிசை, பீலிகம் இவ்வெட்டு நோய்களும் குணமாகுமென அறிகிறோம். (ஏடு.)

இதற்கு மேல் குருதியைப் பெருக்கவும், உடலின் நீரைக் கழிக்கவுமான இரும்பு மண்டூரம் இவற்றால் செய்த மருந்துகளை முன்பு கூறிய குடிநீர்களோடு கொடுத்தல் நன்று:-

1. இரும்புப்பழ கற்பம் (அய ஜம்பீர கற்பம்)

2. இரும்பு கரிசாலை கற்பம் (அய பிருங்கராஜ கற்பம்)

3. கரிசாலை இலேகியம்.

ஆகிய இம்மூன்று மருந்துகளைப் பற்றி இயல் 22 வெளுப்பு நோயில் கூறியபடி தயாரித்து உபயோகிக்க பாண்டு, சோபை, காமாலை குணமாகும்.

4. சித்த மண்டூரம் 110- குணபாடம் (எண். 2&3)

இதில் கழற்சியளவு என்றிருந்த போதிலும் பணவெடையளவு காலையில் மட்டும் கொடுத்து வந்தால் போதுமானது. மலமும் நீரும் கழியும். பாண்டு, சோபை, காமாலை, பெருவயிறு இவை குணமாகும். இதனை **இரும்பு சிட்ட கற்பமென்றுங் கூறுவர்.** தேவையாயின் மாலையில் சிறிய அளவு கொடுத்து, வரலாம்.

பற்பச் செந்தூரங்கள்

அயபற்பச் செந்தூரங்கள், அயபூநாகச் செந்தூரம், அய வீரச் செந்தூரம், காந்தச் செந்தூரம், காந்த அயச் செந்தூரம், அயக் காந்தச் செந்தூரம், அயத் தங்கச் செந்தூரம், காந்த சுவர்ணச் செந்தூரம், அயம் கெந்திச் செந்தூரம், ஆறுமுகச் செந்தூரம், வெடி அன்ன பேதிச் செந்தூரம், சீவலோகச் செந்தூரம், திரிலோகச் செந்தூரம், உலோகமண்டூரச் செந்தூரம், ஜலமஞ்சரி, கற்பூர சிலாசத்து பற்பம், வெடியுப்புச் சுண்ணம், வெண்காரச் சுண்ணம், நண்டுக்கல் பற்பம், படிகார பற்பம், வெண்கார பற்பம் நவாச்சாரக்கட்டு பற்பம், புணர்ணவ மண்டூரம், பனைவிரலாதிச்சாரம் (Ayurveda) சுவர்ணபவள பற்பம், இத்தியாதி மருந்துகளில் ஒன்று அல்லது

பலவற்றைச் சேர்த்து அவ்வவற்றிற்குரிய அளவுப்படி நோயின் குறி குணங்களின் தீவிர நிலையை அறிந்து நீரைப் பிரிக்கக் கூடிய அனுபானங்களுடன் கொடுத்து வர சோபை, பாண்டு, காமாலை, பெருவயிறு முதலிய அனேக நோய்களைப் போக்கும். நோய் குணமாகும் வரை உப்பில்லாப் பத்தியம் வைப்பது நல்லது.

குறிப்பு:- இவற்றின் செய்பாகத்தை S.R.Pharmacopoeia -வில் பார்க்கவும். சிலவற்றை இதனடியிலும் குறிப்பிடுகிறோம்.

2.சீரணக் கருவிகளும் நீர்க் குண்டிக்காயும் அதிகம் கெட்டுப் போகாமலிருந்தால் சோபை, பெருவயிறு, நோய்களில் அசல் ரச பற்பம், செந்தூரம், சுவர்ணவாலை இரசச் செந்தூரம், சண்டரசம், சாதிலிங்க பற்பம், சவ்வீர பற்பம், பஞ்சசூதச் செந்தூரம், பஞ்சசூத மெழுகு, வானமா மெழுகு, கனகலிங்க மெழுகு இவைகளிலொன்றைத் தக்க அளவில், காலம், பலம் இவற்றின் குறிப்பையறிந்து தக்க அனுபானங்களுடன், பத்தியத்துடனும் கொடுத்து வர சோபை, பாண்டு, மகோதரம், குன்மம் முதலிய பெரிய நோய்கள் குணமாகும்.

5.சர்வ சங்கார உப்பு பற்பம்:- செய்முறை (ஏட்டுப் பிரதி)

குப்பை மேனிச் சமூலம் சேகரித்து உலர்த்திச்சுட்டு, இரும்புச் சட்டியிலிட்டு வறுத்துச் சாம்பலாக்கி பாண்டத்திலிட்டு சிறு நீர் நான்கு பங்கு அதில் விட்டுக் கலக்கி மூன்று நாட்கள் வைத்திருந்து தெளிவிறுத்து வடிகட்டி அதை அடுப்பேற்றிக் காய்ச்சிவற்ற வைத்துப் பிறகு ரவியுலர்த்தி எடுக்க உப்பாக இருக்கும். இதனைப் பிரண்டைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடிச் சீலைமண் செய்து முழுப்புடமிடப் பற்பமாகும். இதுவே சர்வ சங்கார உப்பு பற்பம் எனப்படும்.

அளவு:- இதில் ஒரு குன்றி எடை காலை, மாலை தேனில் அல்லது வேறு தக்க அனுபானங்களில் கொடுத்து வர இருமல், ஈளை, இரைப்பு, காமாலை, சோபை, கபனடைப்பு ஆகிய இந்நோய்கள் குணமாகும். பத்து நாட்கள் காலை, மாலை மருந்தைக் கொடுக்கலாம்.

6. அயகாந்தச் சூரணம்:-

(யூகி முனி வரது வைத்திய விளக்கம் 200- எட்டுப் பிரதி)

திரிகடியளவு ஒரே வேளை காலையில் மட்டும் கொடுக்கவும். அல்லது அவசியம் போல் அளவைக் குறைத்துக் காலை, மாலை கொடுத்து வர மலம்,நீர் நன்றாய்க் கழியும். பாண்டு, சோபை, பெருவயிறு, வாயு முதலிய நோய்கள் தீரும்.

"கரும்புரசம் தந்தி விரை நற்சுக்கு மரீசமிடை
சமனாய் ரெண்டு
இரும்பு அங்குச மெட்டு யீரெட்டுக்
கடுக்காயாம்-இசைந்த நெல்லி
வரும்பருப்பு யீரெட்டு சேர்த்தரைத்து
உண்டிடுநீ-வரும் நோய் போம்
கரும்பு தின்னக் கைக்கூலி கொடுப்
பவன்போல்-வைத்தியர்க்குக் கணக்குமாமே."

இரச பற்பம், சுத்தித்த நேர்வாளம், சுக்கு, மிளகு இவை வகைக்கு 2 பங்கு அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம் இவை வகைக்கு 8 பங்கு, கடுக்காய்த் தோல், நெல்லிப் பருப்பு இவை வகைக்கு 16 பங்கு, இவற்றை எல்லாம் தனித் தனியாகப் பொடித்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். இதனை மேற்கூறியபடி உபயோகிக்க பாண்டு, சோபை, பெருவயிறு, வாயு இவை தீரும். மலம் நீர் கழியும்.

7.சுவர்ண பவள பற்பம்:-

இதில் ஒரு குன்றி எடை காலை, மாலை பசு வெண்ணெய், நெய், தேன், திரிகடுகு இலேகியம், நெல்லிக்காய் இலேகியம், பெரும் பூசணிக்காய் இலேகியம், மகாவில்வாதி இலேகியம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் அனுபானித்துக் கொடுக்க இருமல், ஈளை, கயநோய், பசியின்மை, அருசி, சோபை, பாண்டு, காமாலை, தாது நட்டம், மது மேகம், சருமநோய், குட்டம், புற்று நோய் முதலிய பல நோய்கள் குணமாகும். (பெரியவர்கள் அனுபவ முறை)

செய்முறை:-

சுருள் தங்கம் அல்லது தங்க பற்பம், செந்தூரம், முத்து பற்பம், கற்பூர சிலாசத்து பற்பம், பவள பற்பம் இவை வகைக்குச் சம எடை எடுத்து கல்வத்திலிட்டு ஒன்றாய் கலந்து பன்னீர் அல்லது மிளகாயிலைச் சாறுவிட்டு இரண்டு நாட்களரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடி சீலை மண் செய்து முழப்புடமிட்டெடுக்கப் பற்பம் நேர்த்தியாக இருக்கும். இது ஒரு முறை.

மேற்கண்ட நான்கு சரக்குகளையும் பற்பங்களாக அல்லாமல் அசல் சுருள் தங்கம், கற்பூர சிலாசத்து, முத்து, நற்பவளம் இவற்றை முறைப்படி சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்து சம எடை எடுத்து மேற்கண்ட பன்னீர் அல்லது மிளகாயிலைச் சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி முன்போல் புடமிட ஒரே புடத்தில் பற்பமாகும். தேவையானால் மீண்டும் ஒன்றிரண்டு புடம் போட்டெடுக்கலாம். அனுபானம், பிணி நீக்கம் மேற்கூறிய நோய்கள் குணமாகும். (S.R. Pharma)

8.அயக்காந்த கரிசாலை உருண்டை (S.R. Pharma Copoeia)

இதில் ஒரு உருண்டை வீதம் காலை, மாலை சாப்பிட்டு வர பாண்டு, சோபை, காமாலை, அக்கினி மந்தம், கைகாலெரிவு, கல்லீரல் மண்ணீரல் நோய், முதலியன குணமாகும். குறிப்பாக காமாலை நிவாரணி என்பர். (Preparation See below No.14)

9. சீவலோகச் செந்தூரம்:- சீவலோக மெழுகு:-

இவற்றிலொன்றைத் தக்க அளவில் காலை, மாலை தக்க அனுபானங்களுடன் கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை, மகோதரம் ,நீர்ப்பெரு வயிறு முதலிய நோய்கள் குணமாகும். இதனை மெலிந்தவர்களுக்கு கொடுத்து வர உடல் பருத்து எடை கூடி பலமும் உண்டாகும். பசு வெண்ணெய், நெய், பாலேடு இவற்றில் கொடுக்க வேண்டும். ஸ்தூல (பெருத்த) தேகிகளுக்குத் தேனில் ஒரு வேளையும் கொடுத்து வர உடல் கனம் குறைந்து இரத்த விருத்தியையும் பலத்தையும் அதிகப்படுத்தும். (ஏட்டுப் பிரதி- அனுபவ முறை - S.R. Pharma)

செய்முறை:-

1.அயச் செந்தூரம் (இதற்கென்றே அடியில் குறிப்பிட்ட படி தயாரிக்க வேண்டும்)	10 தோலா
2.காந்தச் செந்தூரம் (அதே மாதிரி)	10 தோலா
3. உலோக மண்டூரச் செந்தூரம் (அதே மாதிரி தயாரிக்கப்பட்டது)	10 தோலா
4. பொற்றலைக் கையான் பாவனைச் சூரணம் (இதற்கென்றே அடியில் குறிப்பிட்டபடி தயாரிக்கப்பட்டது.)	10 தோலா
5.சுக்குச் சூரணம்	10 தோலா
6. மிளகு சூரணம்	10 தோலா
7. திப்பிலி சூரணம்	10 தோலா
8.ஏலக்காய் அரிசிச் சூரணம்	10 தோலா
9.சீரகச் சூரணம்	10 தோலா
10. இலவங்கம் சூரணம்	10 தோலா
11. கீழ்க்காய் நெல்லிச் சமூலச் சூரணம்	10 தோலா

இந்தப் பதினொன்று சரக்குகளில் 1 முதல் 4 வரையிலுள்ள மருந்துகளை ஒன்றாய்க் கலந்து வைத்துக்கொள்ளவும். 5 முதல் 11 வரையிலுள்ள ஏழு சரக்குகளைக் கல்வத்திலிட்டு ஒன்றாய்க் கலந்து பொற்றலைக் கையான் சாறு விட்டு மூன்று நாட்கள் நன்றாய் அரைத்துக் கல்வத்துடன் ரவியில் வைத்து நன்றாய் உலர்த்திய பின்பு மீண்டும் பொடித்து எடுக்கவும். இவ்விரண்டு வகை கலப்புப் பொடிகளை ஒன்றாய்ச் சேர்த்து நன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். இதுவே "சீவலோகச் செந்தூரம்"

அளவு:- இதில் 5 குன்றி முதல் 10 குன்றி வரை காலை, மாலை தேன், நெய், வெண்ணெய் அல்லது வேறு ஏதேனும் தக்க அனுபானங்களுடன் கொடுத்துவர மேற்கூறிய நோய்கள் குணமாகும்.

குறிப்பு:- இந்த சீவலோகச் செந்தூரம் எடைக்கு சமன் பனைவெல்லம் சேர்த்திடித்து மெழுகு பதமாக வழித்து வைத்துக் கொண்டு ஒன்று முதல் இரண்டு சுண்டைக் காயளவு காலை, மாலை சாப்பிட்டு வரலாம். இதற்குப் பெயர் **சீவலோக மெழுகு** என்பதாம்.

2. This is a very good specific for the relief of acute and chronic Nephritis and in Nutritional oedema (Visha Sobai) when this Jeevaloga Chenduram is given along with Vengara chunnam or Vediuppu Chunnam, Logha mandura Chenduram, vedi Annabedhi Chenduram, karpura Silajathu Parpam No. 2 or No.4 and Ascitis cure Churnam or decoction in proper and suitable doses 2 or 3 times a day on salt free diet.

10. அயச் செந்தூரம்:-

(Special process for being added to the preparation of Jeevalogha Chenduram and Jeevalogha Mezhugu) (ஏட்டுப் பிரதி.)

செய்முறை:-

சுத்தி செய்த அயப்பொடி ½ வீசை (or Q.S.) எடுத்துக் கல்வத்தில் பொடித்து கெந்தகத்திராவகம் (Acidum Sulphuricum) 4 அவுன்சு அதில் விட்டு நன்றாய்ப் பிசைந்து, ரவியில் உலர்ந்தபின் பொற்றலைக்கையான் சாறுவிட்டு இரண்டு நாட்கள் நன்றாக அரைத்துக் கல்வத்துடன் ரவியில் உலர வைக்கவும்.

பிறகு அதனைப் பொடித்து முன்போல் 4 அவுன்சு கெந்தகத் திராவகம் விட்டுப் பிசறி ரவியுலர்த்தி பொற்றலைக்கையான் சாறு விட்டு 2,3 நாட்கள் அரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடிச் சீலை மண் செய்து உலர்த்திக் காற்றில்லாத இடத்தில் குழி வெட்டி அதில் எருவடுக்கி (800 விராட்டியில்) புடமிட்டு ஆறவிட்டெடுக்க சிறிதளவு செந்தூரமாகியிருக்கும்.

இதனை, மீண்டும் பொற்றலைக்கையான் சாறு விட்டரைத்து முன்போல் இரண்டு புடங்கள் போட்டெடுக்க அருமையான செந்தூரமாக இருக்கும். இந்தப் புடங்களுக்கு மருந்தை அரைக்கு முன் கெந்தகத் திராவகம் சேர்க்க வேண்டியதில்லை. ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

அளவு:- 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தக்க அனுபானங்களுடன் கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை, மந்தாக்கினி, வாயு இவை தீரும். பசி தீபனமுண்டாக்கும். ஆகாரம் நன்றாய்ச் செரிமான மாகும். இந்த மாதிரி தயாரித்த அயச் செந்தூரம் சீவ்லோகச் செந்தூரம் தயாரிப்பதற்குச் சேர்க்கப்படுகிறது.

11. ஊசிக் காந்தச் செந்தூரம்:-

(Special process for being added to the preparation of Jeeva logha Chenduram and Jeevalogha mezhugu). (ஏட்டுப் பிரதி.)

செய்முறை:-

அயச் செந்தூரம் செய்த மாதிரியே காந்தச் செந்தூரமும் தயாரிக்க வேண்டும்.

சுத்தி செய்த ஊசிக் காந்தம் ½ வீசை (or. Q.S) எடுத்துக் கல்வத்தில் பொடித்து கந்தகத்திராவகம் (Acidum Sulphuricum) 4 அவுன்சு அதில் விட்டு நன்றாய்ப் பிசைந்து ரவியில் வைத்து உலர்ந்த பின் பொற்றலைக் கையான் சாறு விட்டு இரண்டு நாட்கள் அரைத்துக் கல்வத்துடன் இரவியில் உலர வைக்கவும்.

பிறகு அதனைப் பொடித்து முன்போல் 4 அவுன்சு கெந்தகத்திராவகம் விட்டுப் பிசைந்து ரவியில் வைத்து உலர்ந்த பின் பொற்றலைக் கையான் சாறு விட்டு 2, 3 நாட்கள் நன்றாயரைத்து வில்லைதட்டி அகலிலிட்டு மூடிச்சீலைமண் செய்து உலர்த்தி காற்றில்லாத இடத்தில் குழி வெட்டி அதில் எருவடுக்கி (800 விராட்டியில்) புடமிட்டு ஆற விட்டெடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

இதனை மீண்டும் பொற்றிலைக்கையான் சாறுவிட்டு அரைத்து முன்போல் இரண்டு புடங்கள் போட்டெடுக்க அருமையான செந்தூர மாகியிருக்கும். இந்த இரண்டு புடங்களுக்கும் கெந்தகத் திராவகம் சேர்க்க வேண்டியதில்லை. ஞாபகப்படுத்திக் கொள்ளவும். இதனை தனியாகவும் உபயோகிக் கலாம். இதனையே சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு

தயாரிப்பதற்கு உபயோகிக்க வேண்டும். இதனை தனியாக உபயோகிக்கும் போது அளவு, அனுபானம், பிணி நீக்கம் யாவும் அயச் செந்தூரம் போலவே உபயோகிக்கலாம்.

12. உலோக மண்டூரச் செந்தூரம்:-

(Special process for being added to preparation of Jeevalogha (Special process for being added to preparation of Jeevalogha Chenduram and Jeevalogha Mezhugu) (ஏட்டுப் பிரதி.)

சுத்தித்த உலோக மண்டூரம் (அயக்கிட்டம்) ½ வீசை (ஒ.Q.S) எடுத்து பொடித்துக் கல்வத்திலிட்டு பொற்றலைக் கையான் சாறு விட்டு 2, 3 நாட்கள் நன்றாயரைத்து வில்லை தட்டி அகலிலிட்டு மூடி, சீலைமண் செய்து உலர்த்திக் காற்றில்லாத இடத்தில் குழி வெட்டி அதில் எருவடுக்கி (800 விராட்டியில்) புடமிட்டு ஆறவிட்டுப் புடத்தைப் பிரித்துச் செந்தூரத்தை நிறுத்துப் பார்க்கவும்.

பிறகு, இது போல் பொற்றலைக்கையான் சாறு விட்டு முன் செந்தூரத்தை 2,3 நாட்கள் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி, அகலிலிட்டு முன்போல் குழி வெட்டி அதில் எருவடுக்கி புடமிடவும். மொத்தம் 3 முதல் 4 புடங்கள் போட்டெடுக்க அருமையான உலோக மண்டூரச் செந்தூரம் அமையும். இதனையே சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு தயாரிக்க உபயோகிக்க வேண்டும். இதனைத் தனியாகவும் அயச் செந்தூரம் காந்தச் செந்தூரம் போன்றும் அளவு, அனுபானம், பிணி நீக்கம் முதலியன அனுசரிக்கலாம்.

13. பொற்றலைக்கையான் பாவனைச் சூரணம்:-

(Special process for being added to the preparation of Jeevalogha Chenduram and Jeevalogha Mezhugu) (ஏட்டுப் பிரதி.)

பொற்றலைக்கையான் சமூலம் போதிய அளவு சேகரித்து நிழலிலுலர்த்திப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து ½ வீசை கல்வத்திலிட்டு பொற்றலைக்கையான் சாறு விட்டு 2,3 நாட்கள் நன்றாயரைத்து கல்வத்துடன் ரவியில் வைத்து உலர்த்தவும். மீண்டும் இதனைப் பொடித்து

அதே சாறு விட்டு 2, 3 நாட்களரைத்து ரவியுலர்த்தவும். மொத்தம் 3 முதல் 5 முறை இந்த விதமாகப் பொற்றலைக்கையான் சாற்றிலரைத்து ரவியுலர்த்தி இறுதியில் பொடி செய்து பாட்டிலில் வைக்கவும். இதனையே சீவலோக செந்தூரம், சீவலோக மெழுகு தயாரிப்பதற்கு உபயோகிக்க வேண்டும். தனித்தும் இந்தப் பாவனைப் பொடியை மூவிரல் அளவு காலை, மாலை தக்க அனுபானத்துடன் கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை இவை குணமாகும். (It is a Brain and Liver Tonic)

14. அயக் காந்த கரிசாலை

சீவலோகச் செந்தூரத்திற்கு உபயோகித்த மாதிரி

1. அயச் செந்தூரம்
2. காந்தச் செந்தூரம்
3. மண்டூரச் செந்தூரம்
4. பொற்றலைக்கையான் பாவனைச் சூரணம்
5. வறுத்திடித்த மிளகுச் சூரணம்.

இவ்வைந்து சரக்குகளும் சம எடை எடுத்துக் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து அரைப்புக்குப் பொற்றலைக்கையான் சாறுவிட்டு மூன்று நாட்கள் நன்றாயரைத்து சிறிய சுண்டைக்காயளவு மாத்திரைகள் உருட்டி நிழலிலுலர்த்தி பாட்டிலில் வைக்கவும்.

அளவு:- ஒரு உருண்டை வீதம் 12 நாட்கள் காலை, மாலை இஞ்சிச்சாறு, தேன், கற்கண்டு கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க மஞ்சள் நோய், வெளுப்பு நோய், ஊதல் நோய், பெருவயிறு, கல்லீரல் மண்ணீரல் நோய், வாயு, அக்கினி மந்தம், கைகாலெரிவு முதலியன குணமாகும். இதனைக் குறிப்பாகக் **காமாலை நிவாரணி** எனக் கூறுவர். வேறுதக்க அனுபானங்களும் உபயோகிக்கலாம்.

ஆகாரம்:- காமாலை நோயில் மோரும் சாதமும் உப்பில்லாமல் கொடுக்கலாம். ஒருநாள் விட்டு ஒரு நாள் மருந்து, முடிந்த பிறகு முக்கூட்டு எண்ணெய் தலை முழுகி வரவும்.

15.அயம் கெந்திச் செந்தூரம்:-

இதில் ஒரு குன்றி எடை தக்க அனுபானங்களுடன் காலை, மாலை கொடுத்துவர பாண்டு, சோபை, காமாலை, சரும நோய், கிராணி, வாயு இவை யாவும் குணமாகும்.

செய்முறை:- (S.R. Pharma)

சுத்தி செய்த அயப்பொடி 1 பங்கு

சுத்தித்த கெந்தி 3 பங்கு/இவ்விரண்டையும் கல்வத்தில் பொடித்து ஒன்றாய்ச் சேர்த்து கற்சுண்ணநீர் விட்டு ஏழு நாட்களரைத்துப் பிறகு உலர்த்திப் பொடித்து அயச் சட்டியில் வைத்துப் புகையடங்க வறுத்தெடுக்கவும். நீண்ட நேரம் அதிகமாக நெருப்பு எரித்து செந்தூரத்தை வறுத்தெடுப்பது செந்தூரம் நன்றாய் அமையும். இதனை உபயோகிக்க மேற்கண்ட நோய்கள் குணமாகும்.

16. காந்த அயச் செந்தூரம்:-

இதில் குன்றி எடை காலை, மாலை தக்க அனுபானத்துடன் கொடுக்க பாண்டு, காமாலை, சோபை, அக்கினி மந்தம், வாயு, வாத நோய், தாது நட்டம் முதலியன குணமாகும்.

செய்முறை:-(S.R. Pharma)

சுத்தித்த இரசம்	1 பாகம்
சுத்தித்த கெந்தி	2 பங்கு
சுத்தித்த அயப்பொடி	2 பங்கு
சுத்தித்த காந்தம்	4 பங்கு

இவற்றைப் பொடித்து முறைப்படி கலந்தரைத்து குமரிச் சாறு விட்டு மூன்று நாட்கள் அரைத்து, எரிப்புச் சட்டியில் இலேசான வில்லையாக

அகலமாகத் தட்டி மேல் சட்டி மூடி சீலைமண் செய்து ஆறுமுகச் செந்தூரத்திற்கு எரிப்பு செய்த மாதிரி இதனையும் எரித்தெடுக்கவும். தேவையானால் மேலேறிய பதங்கமும் செந்தூரத்தையும் சேர்த்து குமரிச்சாறு விட்டு அரைத்து மொத்தம் மூன்று முறை திரும்பத் திரும்ப எரித்தெடுக்கலாம். இறுதியில் அடிச்சட்டியில் அமைந்த முருக்கம்பூப் போன்ற செந்தூரத்தை மட்டும் எடுத்து உபயோகிக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட காந்த அயம், அயக்காந்தம் ஆறுமுகச் செந்தூரங்களை மடக்கிமடக்கி எரிப்பது நல்லது. மேற்சட்டியில் இரசம் பதங்கிக்காமலிருக்கும் வரை எரித்தெடுப்பது செந்தூரம் வல்லமை யுடையதாக இருக்கும்.

17. வித்து வகைச் சூரணம் வித்து வகை இலேகியம்:-

இவற்றிலொன்றைத் தக்க அளவில், தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுத்துவர நன்றாய் நீர் பிரிந்து சோபை, நீர்பெரு வயிறு குணமாகும். அன்றியும் தாது விருத்தியும், தேக வலுவும் உண்டாக்கும். நீர்ச்சுருக்கு, வெள்ளை, வெட்டை இவைகளும் குணமாகும். மூத்திரத்தில் மேற்பரப்பில் நெய் போல் மிதக்கும் ஒரு வகை நோய் நிச்சயம் இம்மருந்தை அருந்தக் குணமாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

செய்முறை:- (எட்டுப் பிரதி)

1. உளுந்து மாவு
2. எள் பொடி
3. பூனைக்காலி வித்துப் பொடி
4. நீர்முள்ளி வித்துப் பொடி
5. நிலப்பனைக் கிழங்குப் பொடி
6. தண்ணீர் விட்டான் கிழங்குச் சூரணம்

இந்த 6 சரக்குகளும் வகைக்கு ஒரு பலம்

7. சுக்குப் பொடி
8. மிளகுப் பொடி
9. திப்பிலிப் பொடி

இம்மூன்றும் வறுத்துப் பொடித்தது வகைக்கு அரைபலம்

10. வெள்ளைச் சீனி 7 ½ பலம்.

இப்பத்து சரக்குகளையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டால் இதற்கு **வித்துவகைச் சூரணம்** எனப் பெயராகும்.

அளவு:- மூவிரல் அளவுப் பொடியை காலை, மாலை தேன், நெய், இளநீர், பால் ஏதேனுமொன்றில் கொடுத்துவர மேற் கூறிய நோய்கள் குணமாகும்.

அன்றியும் மேற்கூறிய பத்து சரக்குகளுடன்

11. இளநீர்	ஒரு ஆழாக்கு
12. நெய்	ஒரு ஆழாக்கு
13. நயம் தேன் வீசம் படி	(4 அவுன்சு)

இவற்றையும் சேர்த்து முறைப்படி இலேகியம் கிளறிக் காலை, மாலை நெல்லிக்காய் அல்லது கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வர மேற்கூறிய நோய்கள் குணமாகும். அனுபவ முறை. கை கண்ட மருந்து.

18. சோபை உருண்டை:-(S.R. Pharma)

ஒன்று வீதம் காலை, மாலை கொடுத்து வர சோபை, பாண்டு காமாலை, நீர்ப்பெருவயிறு, Albuminurea உட்பட யாவும் குணம் அடையும். Very effective in cirrhosis of the Liver.

சோபை ஹரம் (வைத்திய சதகம்)

"மேவுசா ரணைவேரு நாகண மரத்தையும்
வெள்ளாட்டுநீர் சாணமும்
வேளையு மெவாச்சாரங் கோமயங்
கொடுவேலி வெள்ளிறகு காக்கணானுங்
தாவுநேர் வாளமும் பஞ்சகோ லமுமஞ்சள்
தருமணிப் புங்கு வித்துந்
தசமூலம் பிரமியு மிஞ்சிபா வட்டையுஞ்
சார்குழம் பான மோரும்

பாவுநீர் முள்ளிவட்டக் கிலுகிலுப் பையும்
பருதேவ தாரமதுவும்
பாங்கான வெள்ளுள்ளி சிவதைசங்கன்வேரும்
பண்ணுபேய்ப் பீர்க்கி னுடனே
தூவுநற் கடுக்காயும் விழுதியி னிலையதும்
சுத்தலோ கப்பொடி யதும்
தோகையே யிவையெலா
முனிவனு ரைத்தபடிசோபையின்ஹரங்க ளாமே."

சாரணைவேர், நாகணம், அரத்தை, வெள்ளாட்டு நீர், வெள்ளாட்டின் சாணம், தைவேளை, எவாச்சாரம், கோமயம், கொடிவேலி, வெள்ளைக் காக்கணான், நேர்வாளம்,பஞ்சகோலம், (சுக்கு, திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திர மூலம்) மஞ்சள், மணிப்புங்கன் வித்து, தசமூலம் (கண்டங்கத்திரி, சிறு மல்லிகை, சிறுவழுதுணை, தழுதாழை, நெருஞ்சில், பாதிரி, பெருங்குமிழ், பெருமல்லிகை, வாகை, வில்வம்- 10 drugs) பிரமி, இஞ்சி, பாவட்டையிலை,குழம்பு மோர், நீர்முள்ளி, வட்டக் கிலுகிலுப்பை, தேவதாரம், வெள்ளுள்ளி, சிவதை வேர், சங்கம் வேர், பேய்ப்பீர்க்கு, கடுக்காய், விழுதியிலை, அயப்பொடி ஆகிய இவை சோபையின் நிவாரணிகளாம்.

24.மஞ்சள்நோய்

பரிகாரம்.

இந்நோயில் அழல் குற்றத்தைப் பெருக்கக் கூடிய உணவாதி செயல்களால் அழல் குற்றம் தன்னளவில் மிகுந்து ஐயத்தையும் துணைகொண்டு அழல் ஐயமாகி, இவ்விரு குற்றங்களும் மிகுந்த நிலையில் பரவு காலை (வியானன்) தன் தொழிலை நடைபெறாத படி கேடடையச் செய்து குருதியின் வன்மையையும் கெடுக்கும். அன்றியும் இதே காரணமாக வலப்பாட்டீரல் தாக்கப்படுவதால் பித்த நீர் இயற்கை வழியில் செல்ல வொட்டாமற் தடைப்பட்டுக் குருதியுடன் கலக்கச் செய்வதால் பித்து நீரும் குருதியுஞ் சேர்ந்து இந்நோயை விளைவிக்கும். வளிக்குற்றமும் கெட்டு அழல் வளியாக நோயைப் பிறப்பிக்கும். அன்றியும், மற்ற கால்களும் கேடடையும், ஆதலால் மருத்துவனது கடமை யாதெனில் அழல் ஐயம், அழல் வளிக் குற்றங்களைத் தன்னிலைப்படுத்தி, பித்த நீரைத் தனக்கேற்ற வழியில் செல்லுவதற்குரிய பரிகாரங்களையும், குருதியின் வன்மையைப் பெருக்கக் கூடிய பரிகாரங்களையும் செய்தல் வேண்டும். கேடடைந்த பரவுகால், மற்ற வாயுக்கள் இவற்றை ஒழுங்குபடுத்தி அதனதன் தொழிலைச் செவ்வையாக்கவும் வேண்டும். பின் நோய்க்கான மருந்துகள் கொடுக்க வேண்டும்.(சி.ம.)

வாந்தி செய்விக்கும்படி சித்த மருத்துவத்தில் கூறியிருப்பினும் பெரும்பாலும் மஞ்சள் நோயில் வாந்தியும் ஒரு குறி குணமாக இருக்குமாதலால் அப்பேர்ப்பட்ட இனங்களில் வாந்தி செய்விக்க மருந்து கொடுப்பது வழக்கமில்லை.

மலத்தை வெளியாக்க இலகு விரேசன காரியாகக் கொடுத்தல் நலம். சீமை சாமந்தி, ரோஜா மொக்கு, கொடி முந்திரிகை, சரக்கொன்றைப் பட்டை, இலைபூ, கீழ்க்காய் நெல்லி, திரிபலை, கடுகு ரோகணி, சிவதை வேர், நீர்முள்ளிப்பூ, வேப்பம்பூ, சீந்தில், நெருஞ்சில் இவை சேர்ந்த குடிநீர் கொடுக்கலாம்.

1. மலக்குடார எண்ணெய் ஒரு தேக்கரண்டி அளவு சிறிது பாலில் கலந்து இரவு படுக்கைக்குப் போகு முன் சாப்பிட காலையில் தாராளமாக மலங்கழியும்.

2.மலக்குடார மெழுகு ஒரு கழற்சிக் காயளவு முன்போல் இரவில் சாப்பிட காலையில் மலங்கழியும்.

3. தித்திப்பு பேதி மெழுகு சுண்டைக் காயளவு அல்லது தித்திப்பு பேதி இலேகியம் நெல்லிக் காயளவு இரவில் சாப்பிடக் காலையில் மலம் போகும். அல்லது அவசியம்போல் காலை, மாலை இரு வேளையும் கொடுக்கலாம்.

இவற்றால் மலம் சரியாகக் கழியாது போனால் சிறுவர்களுக்கு **"சஞ்சீவி மாத்திரை"** யில் இரண்டு மாத்திரை காலையில் வெந்நீருடன் கொடுக்க நன்றாய் மலங்கழியும்.

பெரியவர்களுக்கு 1. வச்சிரகண்டி மாத்திரை 2. அட்ட பைரவம் 3. சுக விரேசன மாத்திரை 4. சீவரத்தினக் குளிகை 5. விரேசன பூபதி 6. இலவங்காதி மாத்திரை இவைகளிலொன்றை இரண்டு மாத்திரை அளவில் காலையில் வெந்நீருடன் ஒரே வேளை கொடுக்க நன்றாய் மலங் கழியும். (This is the Auothers experience)

கழிச்சல் வாந்தியாக சித்த மருத்துவம் கூறுவதாவது

1. சஞ்சீவி மாத்திரையை இலைக்கள்ளியிலைச் சாற்றில் கொடுக்க 2,3 தடவை வாந்தியையும், கழிச்சலையும் உண்டாக்கும். பித்த நீரும் கழியும்.

மருக்காரைச் சூரணம்:-

2. மருக்காரைக் காயைச் செம்பிஞ்சாகக் கொண்டு வந்து எலுமிச்சம் பழச்சாறு,இலைக்கள்ளியிலைச் சாறுகளில் ஒவ்வொன்றிலும் 2 நாட்கள் ஊறவைத்து உலர்த்திப் பொடித்து அரை முதல் ஒரு சிட்டிகை அளவு காலையில் மட்டும் ஒரு வேளை கொடுக்க வாந்தியும் பேதியுமாகும்.

கற்கவகை

சீந்தில், கரிசாலை, கீழ்க்காய் நெல்லி, சிவனார்வேம்பு. கடுக்காய், நெருஞ்சில், சரக்கொன்றைப்பூ, இலை, பட்டை இவைகளிலொன்றைக் கல்க்கமாக்கிக் கொடுக்கலாம்.

குடிநீர் வகை

1.கீழ்க்காய் நெல்லியின் சாறு ஒரு ஆழாக்கில் 8 முதல் 10 வராகனெடை பேதி உப்பு (Magnesium sulphate) கூட்டி சிறு தீயெரித்துச் சுடவைத்து உப்பு கரைந்தவுடன் வடித்துக் காலையில் மட்டும் கொடுக்க கழிச்சல் வாந்தியை உண்டாக்கி அதில் பித்த நீரையுங் கழிக்கச் செய்யும்.

2. நீர் முள்ளிப்பூ, வேப்பம்பூ, நெருஞ்சில், கடுக்காய், தான்றி, நெல்லி வற்றல், சிவதை வேர், இவை சமன் கொண்டு எட்டு பங்கு நீர் விட்டு எட்டிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி காலை, மாலை தக்க அளவில் கொடுக்கக் காமாலை நோய் நீங்கும்.

கொன்றைப் பட்டை, வேப்பம் பட்டை, நெல்லிப் பட்டை, மரமஞ்சள், கறி மஞ்சள், கடுகு ரோகணி இவை சமன் கொண்டு முறைப்படி குடிநீராக்கி தக்க அளவில் காலை, மாலை கொடுத்து வரக் காமாலை நோய் நீங்கும்.

சித்த மருத்துவம் கூறும் பற்பச் செந்தூரங்கள்

1. இரும்புக் கிட்டச் செந்தூரம்
2. இரும்புச் செந்தூரம்
3. கற்பூர சிலாசத்து பற்பம்
4. வெடியுப்பு சுண்ணம்
5. நவச்சாரச் செந்தூரம்
6. ஐந்துப்புச் சுண்ணம்
7. காளமேக நாராயணச் செந்தூரம்

இவை போன்ற பற்பச் செந்தூரம், சுண்ணம், முதலியவற்றைத் தனித்தும், சிலவற்றைச் சேர்த்தும் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் காலை, மாலை, கொடுத்துவரக் காமாலை நோய் நீங்கும்.

வேண்டுமாயின் பித்த நீரைக் கழிக்கக்கூடிய மேற்கண்ட குடிநீர்களிலொன்றில் துணைகூட்டிக் கொடுத்துவர மிகவும் நல்லது.

அல்லது கீழ்க்காய் நெல்லிச் சாற்றில் 1 முதல் 2 தோலா பேதியுப்பு கூட்டிக் கரைத்து வடிகட்டிக் கொடுக்கலாம். (பேதியுப்பு என்பது Magnesium Sulphate)

உணவு

உப்பில்லாப் பத்தியம் வைப்பது குறிப்பிடத் தக்கது. புளி, உப்பு நீக்கிய கஞ்சி வகை நல்லது. இருமுறை வடித்த சோறு கொடுக்கலாம். எண்ணெய், நெய், வெண்ணெய் முதலிய கொழுப்புப் பொருள்களை நீக்க வேண்டும். தாளிப்புஇல்லாத காய்கறிகள் (இளம்பிஞ்சுகள் கீரை வகைகள், பழங்கள், மோர், வெள்ளாட்டுப் பால், பசும்பால், சீனி, அஸ்கா இவை சேர்க்கலாம். புகை பிடித்தல், புகையிலை, லாகிரி வஸ்துக்கள் கூடாது.

Dr. M.S. Velu's Siddha Research medicines for infective Hepatitis (Jaundice) and its Complications are mentioned below:- (மஞ்சள் நோய்க்கு ஆராய்சி மருந்துகளாவன.)

1.கீழ்க்காய் நெல்லிக்கற்கம்:-

கீழ்க்காய் நெல்லிசமூலம் ¼ பலம் அல்லது அரைத்தெடுத்த விழுது கொட்டைப் பாக்களவு, அத்துடன் விரலிமஞ்சள்தூள், நற்சீரகம் வகைக்கு 4 சிட்டிகை கூட்டிப் பசுவின்பால், மோர், எருமை மோர், வெள்ளாட்டுப்பால், மோர் ஏதேனும் ஒன்றில் கலக்கி காலை, மாலை 3 முதல் 5 அல்லது 7 நாட்கள் கொடுக்கக் காமாலை நோய் தீரும். உப்பில்லாப் பத்தியம். சுரமில்லையாயின் தினந்தோறும் குளிக்கலாம்.

குறிப்பு:- சிலர் விரலி மஞ்சள் தூளுக்குப் பதில் மஞ்சள் சுட்ட கரியைச் சேர்க்கிறார்கள். கல்கீகம் அரைக்கும் போது ஈரவெங்காயம் ஒரு பல் அத்துடன் சேர்த்து அரைக்கிறார்கள், இப்பரிகாரம் யாவும் நல்ல பலன் தருகிறது.

குறிப்பு:- இதே மாதிரி "கரிசாலைக் கற்கம்" "அவுரியிலைக் கற்கம்" தயாரித்துக் கொடுக்கலாம்.

2. கீழ்க்காய் நெல்லிச்செடி நான்கு, ஏலக்காயரிசி, சீரகம், கறிமஞ்சள்தூள் இவை வகைக்கு ஒரு காசு எடை சேர்த்து பசுவின் பால்

விட்டரைத்து மேற்கண்ட பால், மோர் ஏதேனும் ஒரு அனுபானத்தில் கலக்கிக் காலை, மாலை கொடுக்க நிச்சயம் குணமாகும். ஈர வெங்காயம் ஒரு பல்லும் சேர்த்து அரைக்கலாம்.

குறிப்பு:- இதனை எருமைத் தயிர் அல்லது மோர் அல்லது எருமைத் தயிர் அல்லது எருமைச் சாணி பால் வகைக்கு 2 ஆழாக்கு வீதம் கலந்து அதில் கலக்கிக் கொடுக்கலாம். வெள்ளாட்டுப்பால், மோர் இவற்றிலும் கலக்கிக் கொடுக்கலாம். உப்பில்லாப் பத்தியமிருக்க வேண்டும்.

குறிப்பு:- எருமை சாணிப்பால் என்பது, எருமை சாணம் போட்ட நிமிடமே அதனை எடுத்து ஒரு கெட்டித் துணியில் வைத்துப் பிழிய நீர்வரும். இதையே சாணிப்பால் என்பர். அதனை இங்கு மோர் அல்லது தயிருடன் சமன் கலக்கலாம். (அனுபவ முறைகள்.)

3. அவுரியிலைக் கற்கம்- (அனுபவமுறை)

தனி அவுரியிலையைக் கொட்டைப் பாக்களவு விழுதாக அரைத்து பசுவின் பாலில் கலக்கி காலை, மாலை முன்போல் கொடுக்கக் குணமாகும்.

4. இளநீர் ஒன்றைக் கண் திறந்து நான்கு தேற்றான் விரைகளைத் தட்டி அதில் போட்டு இரவு வைத்திருந்து காலையில் மேற்படி இளநீரை விட்டு ஊறிப் போயிருக்கின்ற தேற்றான் விதைப் பொடியை அரைத்து இளநீரில் கலக்கிக் குடிக்கவும், மூன்று முதல் ஐந்து நாட்கள் காலை தோறும் இவ்விதம் சாப்பிடக் குணமாகும். உப்பில்லாப் பத்தியம் அவசியம்.

5. ஆவாரை வேர்ப்பட்டையை எலுமிச்சங்காயளவு அரைத்துத் தேங்காய்ப் பாலில் கலக்கி காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்க குணமாகும். உப்பில்லாப் பத்தியம்.

6. மஞ்சட் காமாலையுடன் வலப்பாட்டீரல், இடப்பாட்டீரல், இவை பருத்திருந்தால் சிறந்த பரிகாரம் D.r. M.S. Velu's சொந்த அனுபவ முறை:-(Biliary Cirrhosis of liver)

உயர்ந்த மாதிரியில் தயாரித்த ரசபற்பம் ½ முதல் 1 அரிசி எடை பனைவெல்லம் அல்லது Empty Gelation Capsule -ல் பொதிந்து காலை,

மாலையும் விழுங்கச் செய்து உடனே மேலே கூறிய கீழ்க்காய் நெல்லிக் கற்கம் அல்லது அவுரியிலைக் கற்கம் ஏதேனும் ஒன்றை முன்போல் பசுவின்பாலில் கலக்கிக் கொடுக்கவும். மூன்று முதல் ஐந்து நாட்கள் இவ்விதம் கொடுக்கவும். நோயின் பலம் நோயாளியின் பலமறிந்து நாளளவை நிதானித்து மருந்தைக் கொடுக்க வேண்டும். உப்பில்லாப் பத்தியம். ஈரல் கட்டி கரைந்து மஞ்சள் காமாலையும் குணமாகும்.

7. தனி முள்ளங்கியிலைச் சாறு, பால் சமன் கலந்து காலை, மாலை 3 முதல் 5 நாட்கள் கொடுக்க மஞ்சள் நோய் குணமாவதாகக் கூறப்படுகிறது. உப்பில்லாப் பத்தியம்.

8.யூகி முனிவாத வைத்திய விளக்கம் 200-ல் கூறிய காமாலைக்குப் பரிகாரம்:- (ஏட்டுப் பிரதி)

"பசும்பாலோர் படியதனில் பரிவாங்
கீழ்க்காய் நெல்லி- பதிவாஞ் சாறு
விசுவாச மாயெடையா மிட்டுண்ணு
உப்பு தள்ளு-வேகம் போகும்
கசிவான காமாலை கண்டிந்த முறை
கண்டால் -காணா தோடும்
பசியாத வரந்தருவேன் பழையது
தாவெனுங் கதையின்-பண்பு தானே".

என்பதற்கிணங்க பசுவின் பால், தனிக்கீழ்காய் நெல்லிச்சாறு இவ்விரண்டும் சமன் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை வீசம்படி அளவு (4 அவுன்சு) கொடுத்து வரக் காமாலை நோய் குணமாகுமென அறிகிறோம். உப்பில்லாப் பத்தியம்.

9. சிறு ஆமணக்குக் கொழுந்து:-

இதைச் சேகரித்துத் தட்டிச் சாறு பிழிந்து சமம் வெள்ளாட்டுப் பால்கலந்து வைத்துக்கொண்டு ஆழாக்கு வீதம் வாரம் ஒரு முறை (ஞாயிறன்று) அதிகாலையில் கொடுக்கப் பேதியாகும். காமாலை நோயைத் தடுக்கு முறையாகவும், குணப்படுத்தும் பரிகாரமாகவும் இதனைக் கொடுக்கலாம். உப்பில்லாப் பத்தியம், வெள்ளாட்டுப் பாலும், சாதமும் கொடுக்கலாம். மறுநாள் உப்பு சேர்க்கலாம். (ஏட்டுப்பிரதி.)

10. சோபையுடன் கூடிய வறட்காமாலை நோய்க்கு காமாலை உருண்டை சிறந்த மருந்தாகும்.

செய்முறை:-கரிசலாங்கண்ணி (கரிப்பான்) ஒருகை பிடி (அல்லது ஒரு குத்து) கருஞ்சீரகம், அரிசித்திப்பிலி, மிளகு, பூண்டு இவை வகைக்குப் பலம் கால், எல்லாவற்றையும் முறைப்படி நன்றாய் அரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தி, வாயகன்ற புட்டியில் போட்டுத் ததும்ப சுயமான நல்லெண்ணெய் விட்டு வாய் மூடி மூன்று நாள் ரவியில் வைத்திருந்து அப்பால் காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர சோபையுடன் கூடிய வறட்காமாலை குணமாகும். புளி உப்பு நீக்கவும்.

11. கீழ்க்காய் நெல்லி நெய்:-

கீழ்க்காய் நெல்லிச்சாறு ஒரு படி, பசு நெய் ஒரு படி, வால் மிளகு, சாதிக்காய், ஏலக்காயரிசி இவை வகைக்கு அரை பலம் வீதம் எடுத்துப் பால் விட்டரைத்து, எல்லாவற்றையும் தைலச் சட்டியில் கலந்து அடுப்பேற்றிப் பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு உச்சிக் கரண்டி வீதம் காலை, மாலை கொடுக்க காமாலை நோய் குணமாகும். உப்பில்லாப் பத்தியம். (ஏட்டுப் பிரதி)

12. கரிசாலை நெய்:-

கரிசாலைச் சாறு ஒரு படி, பசு நெய் ஒரு படி, முக்கடுகு ஒரு பலம், குரோசாணி ஓமம் ¼ பலம், வால் மிளகு ½ பலம் மேற்கூறியது போல் இதனையும் முறைப்படி காய்ச்சி வடித்துக் கொண்டு காலை, மாலை ஒரு உச்சிக்கரண்டி வீதம் கொடுத்து வர வறட் காமாலை நோய் நீங்கும். உப்பில்லாப் பத்தியம்.

குருதியைப் பெருக்கி, தேக வன்மை செய்யும் மருந்துகள்:-

அயஜம்பீரகற்பம், அயபிருங்க ராஜ கற்பம், அயகாந்த கரிசாலை உருண்டை, சீவலோகச் செந்தூரம், சீவலோக மெழுகு, கரிசாலை, இலேகியம், சித்த மண்டூரம் முதலியவை பாண்டு, சோபை நோயில்

கூறியிருப்பதைக் கவனிக்கவும். காமாலை நோயிலும் அவற்றைப் பிரயோகிக்கக் குணமாகும். அன்றியும், காந்த அயம், அயவீரம், அயக்காந்தம், அயத்தங்கம், காந்தச் சுவர்ணம், சுவர்ண பவளம், சுவர்ணம், முத்து, நற்பவளம்,கொடிப்பவளம், அயகாந்தம், லோகமண்டூரம், முத்துச் சிப்பி, பலகரை, கற்பூர சிலாசத்து, சங்கு இவை சேர்ந்த பற்பச் செந்தூரங்கள், சுய மக்கினி, நவலோகச் செந்தூரம், திரிலோகச் செந்தூரம் சித்தர் நவலோக கற்பம், ஆறுமுகச் செந்தூரம், அன்னபேதிச் செந்தூரம், வானமா மெழுகு, கனகலிங்க மெழுகு, அபரஞ்சி ரேக்குமெழுகு ஆகிய இவைகளிலொன்று அல்லது பலசேர்த்தும் அவசியம் போல் தக்க அளவில் தக்க அனுபானங்களுடன் கொடுத்து வர பாண்டு, சோபை, காமாலை முதலிய நோய்களை குணமாக்கிக் குருதியின் வன்மையும் தேக வன்மையையும் பெருக்கி உடலை நன்னிலையில் நிலைத்திருக்கச் செய்யும். (Refer to S.R. Pharma for Preparations)

13.திராட்சைக் குடிநீர்:-(Special Preparation for use in Kamalai Noi in the Siddha Research Lab at Coimbatore which is very popular giving appreciable effect.)

1. அங்கூர் திராட்சை(விதை காம்பு நீக்கி)60- கிராம்
2. ஏலக்காய் (தோலுடன்)-நெ. 30
3. சீரகம் ஒரு தேக்கரண்டியளவு
4. வால்மிளகு அரை தேக்கரண்டியளவு
5. ரோஜாப்பூ இதழ்கள் (Green and fresh)
6. கீழ்க்காய் நெல்லி வேர் (நெ. 10 to 12 green)
7. தண்ணீர் 2 படி (Madras Measures)

இவற்றைச் சட்டியிலிட்டு சிறு தீயில் காய்ச்சி நான்கிலொன்றாய் வற்றவைத்து அப்போதைக்கப்போது வடிகட்டி வேளைக்கு வீசம்படி வீதம் (3 to 4 Ounces) ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை சிறிது சீனாக்கற்கண்டு சேர்த்துக் கொடுத்து வர எப்பேர்ப்பட்ட காமாலை நோயும் 3 முதல் 5 நாட்களுக்குள் வேகம் குறைந்து குணமாகிவிடுகிறது. கைகண்ட அனுபவமுள்ள குடிநீர் எல்லோரும் கையாள வேண்டியது அவசியம். காமாலைக்குரிய பற்பச் செந்தூரங்களுக்கு இக்குடிநீரை அனுபானமாக

உபயோகிப்பது சாலச்சிறந்தது. இக்குடிநீருடன் கற்பூர சிலாசத்து பற்பம் No.1 or 2 சேர்த்துக் கொடுத்து வர விரைவில் காமாலை நோய் குணமாகும். உப்பில்லாப் பத்தியம்.

14. வலப்பாட்டீரல் வீக்கத்துடன் சுரம், காமாலை முதலிய குறி குணங்களிருப்பின் அடியிற் குறிப்பிட்ட பற்பத்தையும் குடி நீரையும் தயாரித்துக் கொடுத்து வந்தால் நிச்சயம் குணமாகும்.

1. கீழ்க்காய் நெல்லி, மணித்தக்காளி, பொற்றலைக்கையான் இவற்றிலொன்றைக் கொண்டு தயரித்த பவள பற்பம் ஒரு பங்கு.

2. கீழ்க்காய் நெல்லிச் சமூலத்தைக் கொண்டு தயாரித்த கற்பூர சிலாசத்து பற்பம், மான் கொம்பு பற்பம், சங்கு பற்பம், பொற்றிலைக்கையானைக் கொண்டு தயாரித்த அயமண்டூரச் செந்தூரம் இவை வகைக்கு 2 அல்லது 2 ½ பங்கு.

3. சொர்ணவாலை ரச செந்தூரம்-ஒரு பங்கு.

4. உலாந்தாலிங்கக்கட்டு செந்தூரம்-ஒரு பங்கு.

5. நயம் கத்தூரி செந்தூரம்-ஒரு பங்கு.

இவற்றை முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு இதில் 2 முதல் 4 சிட்டிகை வீதம் எடுத்து அத்துடன்

6. **காமாலை நிவாரணப் பொடி** No. 2 or 2-A சமம் சேர்த்துக் காலை, மாலை தேனில் குழப்பிக்கொடுத்து, அடியிற் குறிப்பிட்ட குடிநீராவது அல்லது மேலே கூறியுள்ள திராட்சாதிக் குடிநீராவது கொடுத்துவர மேற்கூறிய குறிகுணங்கள் யாவும் குணமடையும். சுரம் தணியும். மலம் நீர் ஒழுங்காய்க் கழியும். ஈரல் வீக்கம் கரைந்துவிடும். காமாலையும் குணமாகிவிடும். அனுபவமான கைகண்ட மருந்து. மிகுந்த முயற்சி எடுத்து மருந்துகளை தயாரிக்க வேண்டும்.

அதற்குரிய குடிநீர் செய்முறை:-

கீழ்க்காய் நெல்லிசமூலம்	4, 5 செடி
விட்டுணு கிரந்தி	ஒரு கைபிடி

கரிசாலை	ஒருகைபிடி
சீரகம், ஏலக்காய், பறங்கிச்சக்கை,	
சாதிக் கோட்டம் இவை வகைக்கு-	அரை தோலா.
அங்கூர் திராட்சை	3 தோலா.
தண்ணீர்	ஒரு படி (Madras Measure)

இவற்றை முறைப்படி சட்டியிலிட்டு காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி காலை, மாலை அரை ஆழாக்கு வீதம் கொடுக்கக் குணமாகும்.

முக்கிய குறிப்பு:-

காமாலை நோயில் மேற்கண்ட எந்த மருந்து கொடுப்பினும் புளி, உப்பு இல்லாமல் மோர் சாதம், பால் கஞ்சி இவை கொடுப்பதே நல்லது. எத்தனை நாட்கள் பச்சிலை மருந்துகள், இரச பற்பம் முதலியவை கொடுக்கப்படுகிறதோ அத்தனை நாட்கள் பின்னிட்டும் மேல் பத்தியம் வைப்பது நலமாயிருக்கும். அப்பால் ஓமஸ்நானம் ஒரு முறையும், பிறகு வால்மிளகு அல்லது பஞ்சகற்ப ஸ்நானம் மூன்று முறையும் அடுத்தடுத்துச் செய்ய வேண்டும். மூன்றாவதாகக் கீழ்க்கண்ட தைலங்களில் ஒன்றை வாரமிருமுறை தலைமுழுகி வரவேண்டும். இவ்வாறு நடைமுறையில் தலை முழுகிவர காமாலை நோயினாலேற்பட்ட சிரமங்கள் மாறி உடல் குளிர்ந்து (சூடு தணிந்து) தேகம் பலப்படும்.

தைலங்களாவன:-

1. கீழ்க்காய் நெல்லித் தைலம் (செய்முறை):-நல்லெண்ணெய் இரண்டு ஆழாக்கு, கீழ்க்காய் நெல்லிவேர், கருஞ்சீரகம், நற்சீரகம் இவை வகைக்கு கால் பலம், இவற்றை பசும்பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துத் தலை முழுகி வரலாம். அல்லது...

1. வேறு கீழ்க்காய் நெல்லிச்சாறு கொண்டு தயாரிக்கும் தைலம்.
2. கரிசாலைத் தைலம்
3. கையான் நெல்லிக்காய்த் தைலம்.

4. வெட்டிவேர்த் தைலம்.

5. அரக்குத் தைலம்

இவற்றிலொன்றில் தலைமுழ்கி வரலாம்.

6. மகா சந்தனாதித் தைலமும் முழுகலாம். அல்லது பஞ்ச கற்பஸ்நானமே தொடர்ந்து முழுகிவர மிகவும் சிறந்தெனக் கூறுவர்.

15. மஞ்சட் காமாலைக்கு நசியம்:-(ஏட்டுப்பிரதி)

1. கொள்ளவே மஞ்சட் காமாலை தீரக்
குறிப்பான கரிப்பீர்க்கம் விரைப்பருப்பை எடுத்து
மெல்லவே கல்வத்தில் பொடித்துக் கொண்டு
வெள்ளையுள்ள துணியிலே முடிந்து கொண்டு
அள்ளவே முலைப்பாலில் நனைய வைத்து
அந்திசந்தி உச்சி நேரத்திலும் நாசியிலே
மெல்லவே பிழிந்து வர ஆறு வேளை
வெகுநாளாய்ச் சடத்திருந்த காமாலை நீரே."

2. நீரெல்லாம் நாசியால் சிந்தச் சிந்த
நிசம்பாரு மஞ்சள் போலிறங்கிப் போகும்
ஊரெல்லாந் திரியாதே பொய்யோ யில்லை
உப்பு வறுத்துக் கூட்டுபுளியைத் தள்ளு
பாரெல்லாம் ஏழாம்நாள் கொதிநீர் முழ்கு
பதினைந்து நாள்வரைக்கும் புளியா காது
வீரெலா மொழிந்துவிடும் மண்டல மொன்றுக்கு
மெய்மயக்கு மாதர்களைச் சேராதே.

கரிப்பீர்க்கு விரைப்பருப்பைப் பொடித்து முடிச்சு கட்டி முலைப்பாலில் நனைய வைத்து நாசியில் ஒரு நாளைக்கு மூன்று வேளை ஆறு நாட்கள் பிழிந்துவர நாட்பட்ட காமாலை நோய் தீரும். நாசியால் சிந்தச் சிந்த மஞ்சளாகப் பித்தநீர் வெளியாகும். உப்பு வறுத்துக் கூட்டவும். புளி நீக்கவும். 15 நாட்களுக்கு இந்த பத்தியம். 7- ஆம் நாள் கொதிநீர் முழுகவும். ஒரு மண்டலம் வரை மாதர்களைச் சேரக் கூடாது என்பதேயாம்.

16. மஞ்சட் காமாலைக்கு நசியமும் உள்மருந்து ஒன்றும்.

1. "மெல்லயிவை தீரயிலே காமாலைக்கு
விவரமாய் நசியமொன்று விளம்பக் கேளு
மள்ளுதற் குக்குட்டி விளாயிலை கசக்கி
மைந்தனே மூக்கினிலே நசியம் பண்ணே."

2. "பண்ணு நீ காலமே ரெண்டு வேளை
பாகமாய்ப் பிழிந்த பால்ரெண்டு வேளை
விண்ணுலகில் காமாலை தீர்ந்து போகும்
விவரமா யின்னமொரு விவரங் கேளு"

3. "மண்ணுசித் தாமணக்குக் கொழுந்து தட்டிச் சாறு
மைந்தனே வெள்ளாட்டுப் பால்ரெண்டும்
நண்ணரைக் கால்படியாகக் கலந்து கொண்டு
ஞாயிற்றுக் கிழமைநாள் காலமே கொள்ளே."

4. "கொள்ளவே யொருதினத்தில் புளியுப்பு தள்ளு
கொடிதான இராத்திரியில் புழுங்கல ரிசிக்கஞ்சி
அள்ளியே சாப்பிட்டு மறுநாள் உப்புசேர்த்து
அருளான மூன்றாம்நாள் முக்கூட்டு தேய்க்க
தள்ளவே காமாலை யெல்லாந் தீரும்
...."

குட்டிவிளாயிலையைக் கசக்கிச் சாறெடுத்து காலை தோறும் இரண்டு நாட்கள் நாசியில் பிழிய மறு இரண்டு நாட்களில் காமாலை குணமாகும்.

அன்றியும், சிற்றாமணக்குக் கொழுந்து கொண்டு வந்து தட்டிச்சாறு பிழிந்து சமம் வெள்ளாட்டுப்பால் சேர்த்து (வகைக்கு ½ முதல் ஒரு ஆழாக்கு வீதம்) ஞாயிற்றுக்கிழமை காலையில் மட்டும் ஒரு நாள் சாப்பிட பேதியாகும். பித்துநீர் கழியும். காமாலை தீரும்.

பத்தியம்:- அன்றைய தினமட்டிலும் புளியுப்பு நீக்கவும். இரவில் புழுங்கலரிசிக் கஞ்சி சாப்பிடலாம். மறுநாள் புளியுப்பு சேர்க்கலாம். மூன்றாம் நாள் மூக்கூட்டு நெய் தேய்த்து தலை முழுகலாம். இதனால் காமாலை தீருமென அறிகிறோம். (ஏட்டுப்பிரதி.)

17. மஞ்சட் காமாலைக்குப் பச்சிலைக் கட்டு (ஏட்டுப்பிரதி).

1. சேராதே யின்னுமஞ்சட் காமாலைக்குச்
செவ்வாய் நாள் அருக்கன் நாளிரண்டி லொன்றில்
கூறாதே தைவேளை மாவிலங்கை யொன்றில்
கொடுதீபம் நமசிவய- நசி-நசி என்றே
தான்பரித்தே யிலைபறித்துக் கசக்கிக் கொண்டு
பருந்துட்டு அல்லவென்றா லதுபோல ஓடு
முராதே பெண்களுக்கு வலக்கையில் கட்டு
வேகமுள்ள ஆண்பிள்ளைக்கு இடக்கையில் கட்டே.

2. கட்டுவது தோளுக்கும் முழங்கைக்கும் நடுவே
கரிவேலே நரம்பிருக்கு மதின்மேல் கட்டு
துட்டுதனைப் பச்சிலைமேல் வைத்துக் கட்டு
தீட்டிடித்திடுவான் மறுநாளில விழ்த்துப் போடு
எட்டிரண்டு நாள்வரையும் விளக்கெண்ணெய் மஞ்சள்
எய்யாமல் குழைத்தந்த புண்ணில் போடு
இந்நோயில் வளிக்குற்றம் தன்னளவில் மிகுந்து, மேல் நோக்குக்கால், கீழ்நோக்குக்கால், நடுக்கால் முதலிய வாயுக்கள் தத்தம் இயற்கைத்தொழிலை விட்டு அதற்கு எதிரான தொழிலைச் செய்யுமாறு தூண்டப்பட்டு, அதே காரணமாக ஐயமிகுந்து வளி ஐயமாகி நோயை மீண்டும் வலுப்படுத்தும். இறுதியில் முக்குற்றங்களும் கேடடைந்து முப்பிணியாகி நோயினனைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கிக் கொள்ளவும் செய்யும். ஆதலால் கேடடைந்த குற்றங்களையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்தும் பொருட்டு கழிச்சலை உண்டாக்க தேன், பால்-சிற்றாமணக்கெண்ணெய் இம்மூன்றும் சம அளவில் கலந்து மலத்துவாரத்தில் பீச்சுக் கொடுக்க **(with in Enema syringe or with an Enema can fitted with Rubber Tube and rectal nozzle).** வெளிக்குப் போகும். ஒருக்கால் வெளிக்குப் போக வில்லையானால் கழிச்சலாகக்கூடிய பேதி எண்ணெய்களைத் தக்க அளவில் ஒரு வேளை கொடுக்கலாம். வயிற்றுநோயடங்க வயிற்றின் மேல் பாலும். நீரும் கலந்து கொதிக்க வைத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் விட்டு ஒரு துணியை அதில் தோய்த்து பொறுக்கக் கூடிய சூடாக ஒற்றடமிட வயிற்று நோய் குறைந்துவிடும்.

உள்ளுக்கு, உப்புச்செந்தூரம், குமட்டியுப்பு, பிரண்டைவடகம், குன்மக்குடோரி லேகியம், தாளிசாதி வடகம் இவை போன்றவைகளைக் கொடுக்கலாம். இந்தவித மருந்துவங்களால் நோய் கட்டுபட வில்லையானால் இந்நோய் மருந்து வகை வைத்தியத்திற்கு வசப்படாதென எண்ணி ஒருகால் அறுவை சிகிச்சையில் குணமாகக் கூடுமென நோயினனிடம் கூறி அறுவை மருத்துவரிடம் அனுப்பி விடவும் என்பதாக சித்த மருத்தும் கூறுகிறது.

மேற்கண்ட இந்நோய்க்குரிய பரிகாரங்களை இங்குக் கூற விரும்புகிறேன்.

1. ஆரம்ப நிலையில் மின்சார ரசம் போன்ற கீழ்க்குறிப்பிட்ட முறைப்படி தயாரித்து 5 முதல் 10 துளி வீதம் பஞ்சமூலக் குடி நீரில் கலந்து காலை, மாலை கொடுக்க வாயுவைப் போக்கி வயிற்று வலியைக் குறைக்கும்.

செய்முறை;- Menthol, Thymol, Pachai Karpuram, Nattu Shudan, Shambirani pathangam இவை வகைக்குச் சம எடை அல்லது 4 drams each. Kasturi if available 1 dram may be added. to be rubbed in mortar and bottled up.

Dose:- 5 to 10 drops morning and eveing.

பயன்பாடு:- அசீரணம், வாயு, வயிற்றுவலி, குடற்புரட்டல், வாந்தி, விக்கல், பசியின்மை யாவும் குணமாகும்.

குறிப்பு:- தேள் கொட்டு, பூரான்கடி, வண்டுகடி முதலியவற்றிற்கு மேல் பூச்சாக இதனைத் தடவக் குணமாகும்.

2. பேதிக்குக் கொடுக்க வேண்டுமானால் வண்ணமுகத்தைலம், சித்தாதி எண்ணெய், கழற்சி எண்ணெய் இவை ½ முதல் ஒரு தேக்கரண்டியளவு காலையில் மட்டும் வெந்நீருடன் கொடுக்கலாம். அல்லது வெள்ளை எண்ணெய் ½ முதல் 1 அவுன்சு ஒரு வேளை கொடுக்கலாம்.

3. நோய்க்கான மருந்தாக வயிற்றுவலி நிவாரணி அல்லது பச்சைக் கற்பூராதிச் சூரணம் ½ முதல் ஒரு வராகனெடையளவு காலை, மாலை தேனில் கலந்து சாப்பிட குடற்பிடிப்பு வலி நிற்கும்.

செய்முறை:- சுக்குப் பொடி 1 பாகம், ஏலக்காய் அரிசிப்பொடி ½ பாகம், பச்சைக் கற்பூரம் ¼ பாகம், சர்க்கரை 1¾ பாகம் இவற்றை முறைப்படி கலந்து வைத்துக் கொண்டு மேற்கூறிய அளவில் கொடுத்துவர பித்தவாயு, வயிற்றுவலி, மார்புவலி, குடல்புரட்டல், குன்மம், வாயு, வாந்தி, விக்கல், அசீரணம், ஏப்பம், ஓக்காளம், அமட்டல், குமட்டல் ஆகிய இவை குணமாகும். (S.R. Pharma).

4. அண்ட லேகியம் என்னும் சீரகாதி லேகியம் (அல்லது குன்ம லேகியம் எண் 1) தக்களவில் காலை, மாலை கொடுத்து வர குடற் பிடிப்பு நோய் குணமாகும். (Preparations S.R. Pharma and see under Gunmam- Chapter.)

5. பஞ்வலவணச் சுண்ணம், நவஉப்புச் சுண்ணம்-இவைகளில் ஒன்றைத் தக்களவில் காலை, மாலை திரிகடுகு, தேனில் கொடுக்க குணமாகும்.

6. நோய் கடுமையாக இருப்பின்-வீரச்சுண்ணம் வீரபற்பம் வீரமெழுகு, தாம்பிரச்சுண்ணம், சுவர்ண பஞ்சபூதிச் செந்தூரம் இவற்றிலொன்றைத் தக்களவில் (gelatin capsule)அல்லது பனைவெல்லத்தில் பொதிந்து காலை மாலை கொடுத்து பஞ்ச மூலக்குடி நீர் கொடுத்து வர நல்லது. 1 முதல் 3 அல்லது 5 நாட்கள் இப்பேர்ப்பட்ட மருந்துகளைக் கொடுக்கலாம்.

பத்தியம்:- உப்பில்லாப் பத்தியம் வைத்து பால் கஞ்சி சாப்பிடலாம்.

குறிப்பு:- இம்மருந்துகள் வயிற்றில் எதிர் நோக்கும் வாயுவை (Reversed peristalsis) சரிப்படுத்தி கேடடைந்த குற்றங்களை ஒழுங்கு படுத்துவதால் நோய் குணமாகும். வயிற்றை இழுத்துப் பிடித்து வலியுண்டாவதைக் குணப்படுத்தும். அன்றியும், வீரக்கட்டு, பூரக்கட்டு, ரசக்கட்டு, லிங்கக்கட்டு, திரிரசக்கட்டு, பஞ்சரசக்கட்டு இவற்றிலொன்றைத் தக்க குடிநீர், தேன் முலைப்பால் இவற்றிலொன்றில் உரைத்துக் கொடுக்க மிகவும் விரைவில் குணம் தரும்.

பஞ்ச பூதிச் செந்தூரம் செய்முறை - (ஏட்டுப்பிரதி)

லிங்கக்கட்டுச் செந்தூரம்	-	1 பலம்
நயம் கத்தூரி	-	½ வராகனெடை
கோரோஜனை	-	1 வராகனெடை
குங்குமப்பூ	-	1 ½ வராகனெடை
பச்சைக் கற்பூரம்	-	2 வராகனிடை
புனுகு	-	½ வராகனெடை
சவ்வாது	-	½ வராகனெடை

இவ்வேழு மருந்துகளையும் கல்வத்திலிட்டு பொடித்து ஒன்றாய் கலந்து ஐந்து நாட்கள் நன்றாக அரைத்து புட்டியில் அடைத்து வைத்துக் கொண்டு 2 முதல் 4 அரிசி எடை வீதம் காலை, மாலை தேனில் கொடுக்க சுரம் குணமாகும். ஆடாதோடை சுரசத்தில் கொடுக்க காச்ம். சுவாசம், இளைப்பு நோய் இவை தீரும். இஞ்சிச் சுரசம் அல்லது சுக்குக் குடிநீரில் கொடுக்க வாயுக்கள் போம். வெண்ணெயில் கொடுக்க மூல நோய் தீரும். வசம்பு, ஏலம், சுக்கு, மிளகு இவை சேர்ந்த குடிநீரில் கொடுக்க வாந்தி நிற்கும். தேனில் கொடுக்க விக்கல் தீரும். சுக்குச் சூரணத்தில் கொடுக்க வாதநோய், வெட்டைவாயு, சூலைக்கட்டு இவை குணமாகும். தேனில் கொடுக்க விரைவாயு குடற்புரட்டல், குடற்பிடிப்பு இவை குணமாகும்.

(ஏட்டுப்பிரதி)

வண்ணமுகத்தைலம்:

சுத்தி செய்த நேர்வாளம் 2 வராகனெடை, சுத்தி செய்த ரசம், கெந்தி, தாளகம் இவை வகைக்கு 1 வராகனெடை, சுத்தி செய்த வெள்ளைப்பாடாணம், பூரம் இவை வகைக்கு ஒரு வராகனெடை, நரம்பு நீக்கிய புகையிலையைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டியும், மற்றவைகளை முறைப்படி அரைத்து ஒன்றாய்ச் சேர்த்தரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி தேன் போன்ற நிறம் வரும்போது வடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு:- ½ முதல் 1 தேக்கரண்டியளவு எண்ணெய் காலையில் மட்டும் கொடுத்துவரப் பேதியாகும். வாதம் எண்பதும் குணமாகும். குடல்வாதம், குடற்றபிடிப்பு, குடல்வாயு இவைகளும் குணமாகும். 1 முதல் 5 நாட்களுக்கு தேக வன்மையறிந்து கொடுத்து வரலாம். உப்பில்லாப் பத்தியம் வைக்கவும். புகையிலை ஆகும்.

27. பெருங்கழிச்சல்.

பரிகாரம்.

இந்நோயில் உணவாதி செயல்களால் வளிக்குற்றம் அல்லது வளி அழல் குற்றங்கள் கேடடைந்து, மிகுதியாகி மேல் நோக்குக் காலைத்தூண்டி எழச்செய்து, அதன் காரணமாகச் செரியாமையை உண்டாக்கி வாய் நீரூறல், விக்கல், ஏப்பம் முதலியவற்றையும் உண்டாக்கும். அதே காரணமாகக் கீழ்நோக்குகாலும் தூண்டப்பட்டு வயிறு புரட்டல், காற்றுச்சேரல், வயிறு இரைதல், கழிச்சல் ஆகியவற்றைப் பிறப்பித்து உடற்தாதுக்களில் ரசதாதுவையும், குருதிதாதுவையும் கேடடையச் செய்வதால் குருதியின் வன்மை குறைந்து உடல் வெளுத்துக் கால்களில் வீக்கமும் உண்டாவதுண்டு. சிறுநீர் குறைந்து மஞ்சள் அல்லது சிவந்த நிறம் பெறும். மலம் நீர் நீராகப் பல நிறங்களோடுமிருக்கும். மலம் குழம்பாகவும், சீரணமாகவும், தண்ணீராகவும், ரத்த நிறமாகவும் இருக்கக்கூடும்.

ஆதலால் இந்நோயில் கேடடைந்த குற்றங்களையும் வாயுக்களையும் தன்னிலைப்படுத்த வேண்டியது முக்கியமாகும். பசித்தீயைத் தூண்டுவதற்கான மருந்துகளையும், பேதியைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளையும் உணவாதிகளையும் கொண்டு கேடடைந்த குற்றங்களையும் வாயுக்களையும் ஒழுங்கு படுத்தலாம். கழிச்சல் கட்டுப்பட்டு சிறுநீரும் ஒழுங்காய் இறங்குமானால் குருதியின்மையைப் பெருக்கி உடல் வன்மையைத் தேற்றக்கூடிய மருந்துகளும் உணவுகளும் கொடுத்தல் சாலச்சிறந்தது.

குடிநீர் வகை.

1. மாதுளம் பழத்தோல், சுக்கு இவை வகைக்கு மூன்று கழஞ்சு. தண்ணீர் இரண்டுபடி விட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய் வற்றவைத்து

வடிகட்டி ஆழாக்குக் குடிநீரில் சிறிது தேனுங்கூட்டி காலை, மாலை கொடுக்கப் பெருங்கழிச்சல் நிற்கும்.

2. அதிவிடயம், வில்வப்பழம், இருவேலி, கோரைக் கிழங்கு இவை வகைக்கு இருகழஞ்சு, தண்ணீர் இருநாழி விட்டுக்காய்ச்சி எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி ஆழாக்குக் குடிநீரில் சிறிது திப்பிலியும் சுக்கும் பொடித்துப் போட்டு காலை, மாலை கொடுக்க அதிசாரம், வாதசூலை இவை குணமாம்.

3. கோரைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், நன்னாரி, சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், தாமரைவளையம், சுக்கு, பங்கம்பாளை, ஓமம் இவை வகைக்கு ஒரு கழஞ்சு, நீர்பபடி இரண்டு விட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி வடிகட்டி ஆழாக்குக் குடிநீரில் சிறிது அதிவிடயம் பொடித்துச் சேர்த்து காலை, மாலை கொடுக்க சுரத்தோடு கூடிய கழிச்சல் தீரும்.

4. மாதுளைப்பிஞ்சு, அதிவிடயம், முத்தக்காசு, பெருமரத்தோல் சுக்கு, விளாங்காய்ச்சதை இவை வகைக்கு இரண்டு கழஞ்சு நீர் இரு நாழி விட்டுக்காய்ச்சி எட்டொன்றாக்கி வடிகட்டி ஆழாக்கு குடிநீர் காலை, மாலை, கொடுக்க அதிசார சுரம் தீரும்.

5. அழல் பெருங்கழிச்சலுக்கு:-

(அதாவது தொப்புளை முறுக்கி வலித்தல், ரத்தக்கடுப்பு, மலம் கருத்து இளகி நுரையுடன் வீழ்தல் இக்குறிகுணங்கள் இருப்பின்) திப்பிலியாதிக் குடிநீர் கொடுக்கலாம். திப்பிலி, கொடிவேலி, வசம்பு, வெட்பாலை, உத்தாமணி வேர், இலந்தை வேர், கோரைக்கிழங்கு, அதிவிடயம், செவ்வியம், கடகரோகணி, கண்டுபாரங்கி, திரிகடுகு, பெருங்குரும்பை, வேப்பம் ஈர்க்கு, கடுகு, கருஞ்சீரகம், கீழ்க்காய் நெல்லி, விளாவேர், பெருங்காயம் இவை வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து வெறுகடி பொடியை எடுத்துக் குடிநீராக்கிச் சாப்பிட்டு வர பெருங்கழிச்சல், பொருமல், நாபி சூலை, கடுப்பு, இருமல் இவை போம். தீபனசக்தி உண்டாகும்.

6. மரமஞ்சள் குடிநீர்:-

மரமஞ்சள், மஞ்சள், அதிமதுரம், வில்வப் பழம், வெட்பாலை அரிசி இவை வகைக்கு 2 கழஞ்சு, நீர் நாழி விட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி வடிகட்டி ஆழாக்கு குடிநீரில் சிறிது அதிவிடயம் பொடித்துக் கூட்டிக் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல் வகைகள் நிற்கும்.

பொடி வகை.

1. தயிர்ச் சுண்டிச் சூரணம்:- மூவிரல் கொண்ட அளவு வெந்நீரில் காலை, மாலை கொள்ள அசீரணம் பேதி தீரும்.

2. சுண்டை வற்றல் சூரணம்:- இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை எருமைத்தேயிரில் கொள்ள பொருமல், மந்தம், இரைச்சல், கழிச்சல், மூலம், அதிசாரம், கிரகணி இவை தீரும். (சி.வை. திரட்டு)

3. அன்னப்பொடி (கறிவேப்பிலைச் சூரணம்):- 10 முதல் 15 கிரெயின் (அல்லது மூவிரல் கொண்ட அளவு) வீதம் காலை, மாலை ஆகாரம் சாப்பிடும் போது அன்னத்துடன் சாப்பிடலாம். அல்லது தேன், மோர், வெந்நீர் இவற்றில் கலந்தும் கொடுத்துவர அசீரணம், கழிச்சல், ஏப்பம், ஓக்காளம், பொருமல், அருசி, வாந்தி, இருமல், குமட்டல், பசியின்மை முதலான நோய்களைப் போக்கும். அன்னமய கோசத்திலுண்டாம் நோய்களைப் போக்குவதில் அன்னப்பொடி எனக்கூறும் கறிவேப்பிலைச் சூரணம் மிகச்சிறந்த மருந்தாகும். சித்த ஆராய்ச்சி நிலையத்தில் தயாரித்து அனுபவித்த ஐந்து விதமான அன்னப்பொடியைக் கீழே காணலாம்.

ANNA PODI NO. 1 OR D.D.S. REMEDY

1. Chukku churnam	
2. Milaku churnam	
3. Thippili churnam	of each equal parts of
4. Lavangam churnam	2 ounces each.
5. Elakai arisi churnam	

6. Jeerakam churnam	of each equal parts of 2 ounces each.
7. Thalisapatri churnam	
8. Jathikai churnam	
9. Jathikottam churnam	
10. Chiru nagappu churnam	
11. Chitarathai churnam	
12. Vayu vidangam churnam	
13. Thandrikai churnam	

These powders are well mixed together, kept soaked in lime fruit juice (about 50 fruits) for one or two days, then allowed to dry in the Sun, powdered and bottled up.

Dose:- 10 to 15 grains. B.D. may be given with honey or other suitable anupanams. This may be taken with principal meals also.

Uses:- Indigestion, Diarrhoea, Belching, Eructations, Distaste, Vanthi, Bronchits and Nausea, etc., are cured. Appetite is improved.

N.B: This is prepared without *Kariveppillai podi.*

2. KARIVEPILAI CHURNAM COMPOUND NO. 1 (Annapodi No.II)

1. Chukku churnam	of each one part.
2. Milaku churnam (fried)	
3. Thippili fried churnam	
4. Jeerakam fried churnam	
5. Perungkaayam fried churnam	
6. Induppu powder.	
7. Kariveppillai leaves. fried with	

cow's ghee and powdered 3 to 4 parts.

All these powders are mixed well and bottled up.

Dose:- 10 to 15 grains or about ¼ to ½ teaspoonful may be taken twice a day with principal meals or with buttermilk or honey and lime fruit juice.

Uses:- Indigestion, Flatulence. Stomach ache, Diarrhoea, Chest pain, Heart-burn. Dry cough, vomiting and sluggish Liver, etc., are cured when given with suitable anupanams.

3. KARIVEPPILLAI CHURNAM COMPOUND NO.II or Annapodi No.III.

1. Chukku churnam	of each equal parts or about 5 ounces each
2. Milaku churnam (fried)	
3. Thippili fried churnam	
4. Jeerakam fried churnam	
5. Karunjeerakam fried churnam	
6. Omum fried churnam	
7. Perungayam fried churnam	
8. Induppu nicely powdered	

9. Kariveppillai churnam 4 parts or 20 ounces (green Kariveppillai leaves are gently fried with cow's ghee, nicely powdered, strained through sieves and added).

All these nine powders are mixed well and bottled up.

Doses:- 10 to 15 grains may be given twice a day with the following anupanams for diseases noted against each.

Uses:- 1. With honey this Annapodi may be given in cases of diarrhoea. After each motion, a small dose may be given. In about 4 doses diarrhoea becomes quite alright.

2. With lime fruit juice or cold rice conjee water (நீராகாரம்) or rice sour water (புளித்த தண்ணீர்), this powder may be given for Pitha vayu or dyspepsia, also for nausea. vomiting, disinclination for food (anorexia) and for stomach pain.

3. With a mixture of Inji juice, lime juice and honey, this powder may be given for gastric troubles (Dyspepsia) heart burn and chest burn(சூலை எரிவு) etc.,

4. With cow's ghee or honey this powder may be given for Dry cough.(புகைச்சல் இருமல்)

4. KARIVEPPILLAI CHURNAM COMPOUND NO. 3 or Ashta churnam. (special):- No. 1.

1. Chukku churnam
2. Milaku churnam (fried)
3. Thippili fried churnam.
4. Omum fried churnam
5. Induppu (or uppu chenduram½ the dose).
6. Kariveppillai (fried with ghee and powdered).
7. Perunkayam fried churnam.
8. Chundai vartal fried churnam.

} of each equal parts or 2½ ounces.

Mixed well and bottled up.

Dose:- Thirikadi dose or 10 to 15 grains may be given twice a day with ghee or along with meals.

Uses:- Indigestion, flatulence, diarrhoea and dysentery are cured.

Note:- Ripe-Mango dried nut paruppu, fried and powdered may also be added.with ghee.

மாங்கொட்டைப் பருப்பு வறுத்த பொடியும் சேர்த்துச் செய்யலாம்.

5. KARIVEPPILLAI CHURNAM COMPOUND NO.4

or Seetharaktha Moola Kothippu nivarani:-

1. Ripe -mango-fruit-kernal powder (Fried with ghee and powdered).

2. Kariveppillai churnam (Fried with ghee and powdered)

3. Chundai vartal churnam (Fried with ghee and powdered).

(Mixed well.)

Doses:- 5 to 20 grains may be given twice a day with cow's butter or curd.

Uses:- Seetham, Raktham, Bedhi, Moolakothippu and Moolakaduppu are cured. Dysentry is very well responded to.

4 தாளிசப் பொடி:-

சித்த மருத்துவத்தில் இதனைப் பெருங்கழிச்சலுக்கு மருந்தாக கூறப்பட்டிருக்கிறது. (சி.வை. திரட்டை நோக்கும்போது இம்மருந்து கழிச்சலைப் போக்குமெனக் கூறப்படவில்லை).

வடகம்.

1. தாளிசாதி வடகம்:-

1. சுண்டைக்காயளவுள்ள வடகம் ஒன்றைப் பொடித்துத் தேனில் குழப்பிக் காலை, மாலை கொடுக்க, கபம் , வாயு, கிரகணி, அலசம், வமனம், அதிசாரம், பக்க நோய் இவை ஏழு நோய்களும் குணமாகும்.

2. பிரண்டை வடகம்:-

இதில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுத்து வர பசி தீபனமுண்டாகும்; உணவு சீரணமாகும். கிருமிகள் சாகும். சயித்திய வாயு குன்மம் ஆகிய நீங்கும்.

3. வாழை வடகம்:-

இதனைச் சித்த மருத்துவத்தில் கழிச்சலுக்கு ஒரு மருந்தாகக் கூறப்பட்டிருக்கிறது (சி.வை. திரட்டை நோக்கும்போது பெருங்கழிச்சலுக்கு இது மருந்தாகக் கூறப்படவில்லை). பெரும்பாட்டுககு இது சிறந்த மருந்தாகும்.

4. கரிவேப்பிலை வடகம்:-

இதனை காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர வாயிளைப்பு, பசியின்மை, கழிச்சல், சீரணப் பிணிகள் இவை தீரும்.

மாத்திரை வகை.

1. கபாட மாத்திரை:-

இதில் ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை தேனில் கொடுக்க கழிச்சலும், வாழைப்பூச்சாற்றில் கொடுக்க இரத்தக் கடுப்பு மூலக் கடுப்பு, இரத்தக் கிராணி, சீக்கிராணி, சலக்கிராணி, சங்கரகிராணி, மரக்கிராணி, வாயுக்கிராணி, சோறாக்கழிக்கிராணி, அதிசாரக்கடுப்பு இவை தீரும். (சி.வை. திரண்டு).

2. கட்டுவாதி மாத்திரை எண்.1

இம்மாத்திரை சிறுவர்களது கழிச்சல் நோய்களுக்கப் பயனளிக்கக்கூடியது. இம்முறைகளை இங்கு கூற விரும்புகிறேன்.

செய்முறை.

1. சாதிக்காயைத் துளைத்து மூன்று குன்றி எடை அபினியை அடைத்து அந்தவாயை அதன் தூளால் மூடி , மஞ்சளை அரைத்து கவசஞ் செய்து உலர்த்தி 1 முதல் 1 ¼ எருவில் புடம் போட்டெடுத்துக் கவசம் நீக்கி உள்ளிருக்கும் சாதிக்காய்க்கு சமம் பேரீச்சங்காய் சேர்த்து மூலைப்பால்

விட்டரைத்து பயறளவு மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு, காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் தேன் அல்லது முலைப்பாலில் கொடுக்கக் கழிச்சல் தீரும். (புலிப்பாணி 500).

2. கட்டுவாதி மாத்திரை எண். 2

இதனைக் குழந்தைகளது விடாக் கழிச்சலுக்குக் கொடுப்பதாகும்.

செய்முறை:-

சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், அபின் இவை வகைக்கு2 ½ வராகனெடையாக நிறுத்தெடுத்து நல்லெண்ணெயில் தோய்த்து இரண்டு சாமம் அரைத்து சிறிய குன்றியளவு மாத்திரை உருட்டி உலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு மாத்திரை வீதம், காலை, மாலை உச்சி நேரம் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை முலைப்பாலில் கொடுக்க பேதி நிற்கும் (பிரமரகசியம் பாகம். 2)

5. ஊழிமாத்திரை:-

இதில் ஒரு மாத்திரையைத் தேனில் அல்லது வேறு துணை மருந்துகளுடன் காலை, மாலை கொடுக்க ஊழி, அதிசாரம் கிராணி முதலிய கழிச்சல்கள் போம். (சி. வை திரட்டு.)

6. வச்சிரகபாட மாத்திரை:-

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை தேனில் அல்லது வேறு அனுபானங்களில் கொடுக்க கழிச்சல்கள் யாவும் நின்றுபோம். (சி.ம)

பற்ப செந்தூர வகை.

1. ஐந்துப்பு பற்பம்:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தகுந்த அனுபானத்தில் கொடுக்க (நீராகாரம், புளித்த மோர் இவற்றில் அனுபானித்துக் கொடுக்க) குன்மம், வாதக் குடைச்சல், வயிற்றுக் கடுப்பு.

அண்டவாயு, கிராணி, செரியாமை, மகோதரம் இவை குணமாகும்.

செய்முறை:- காண்க குணபாடம் தாது ஜீவ வகுப்பு மற்றும் கண்ணுசாமியம்.)

2. உப்புச் செந்தூரம்:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க அசீரணம், குன்மம், நெஞ்செரிவு, சூலை, சூதக வாயு இவை தீரும். (சி.ம.)

3. நாக பற்பம்:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை நெய் அல்லது வெண்ணெயிற்கொள்ள மூலம், உஷ்ண பேதி, சீதபேதி, கிராணி, அசீரணபேதி, வாந்திபேதி இவையாவும் குணமாகும். (for Prepration please refer to S.R. Pharma Copoeia see- below)

4. பவழ பற்பம்:-

¼ முதல் ½ குன்றி எடை தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க இருமல், ஈளை, கயம், சுரம் ஆகிய இந்நோய்கள் குணமடையும். சித்த மருத்துவத்தில் கழிச்சல் நோய்க்கும் இதனை உபயோகிக்கலா மெனக் கூறப்பட்டிருக்கிறது. உஷ்ணம் சம்பந்தமான சீதக் கழிச்சலில் வெதுப்பிய எலுமிச்சம் பழத்தை அறுத்துச் சாறு பிழிந்து அதில் கலந்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுத்து வர சீதக் கழிச்சல் நிற்கும்.

5. நத்தை பற்பம்:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுக்க மூலம், ஆசனக் கடுப்பு, குதம் வெளித்தள்ளல், கழிச்சல்கள் இவை குணமாகும். (S.R. Pharma see below)

1. NATHTHAI BASPAM- (S.R. Pharma)

Live Naththais flesh and fresh are secured from tanks about lbs. 5 or quntity suffcient. It is cleaned and washed with water. This is purified by boiling for a while in a solution of puneerjalam and Karchunnaneer and again washed well.

Next, this purified Naththais (whole contents) are put in a suitable mud pot, mouth covered with an agal, clay cloth seven layers are aplied to the junction, dried and is subjected to heavy putam in a pit with about 500 to 600 Vratties.

On being cooled, it is secured from the pot, powdered placed in a kalvam rubbed with Vatta thuththi leaves juice (வட்டத்துத்தி இலைச்சாறு) for 2 days, Villai is made, dried kavacham is made to the Villai with rubbed paste of " Vatta thuththi leaves" dried again and is subjected to open putam with abovt 400 vratties. It becomes a fine white baspam.

Next if necessary one more putam may be applied by using the same juice for rubbing and the same leaves paste for kavacham of villai. Nice baspam is thus obtained.

Dose:- 2 to 5 grains B.D. may be given with butter or ghee or honey or other suitable annupanams.

Uses:- diarrhoea, dysentery, prolapse of rectum or anus, bleed ing piles, tenesmus burning of the rectum and anus fistula and fissure annus etc., are relieved.

N.B:- Sotru Kaththalai juice may be used for rubbing in addition to the above Vatta thuththi leaves juice.

2. NAGA BASPAM NO.1 (S.R. Pharma)

Chirukan Nagam purified as per rules in Illuppainei 10 to 21 times by melting Nagam in an iron karandy and pouring it in Illupainei while at the same time dusting with a few pinches of powdered Navaksharam each time over the spot where the melted Nagam is poured in the oil.(Ib 1- Nagam Purified is taken.)

1. Purified Patharasam equal part is also taken. Thonthippu is made as per rules (i.e mercury is kept in a small mud chatty and another centralhole chatty is placed over the mercury container. Then the purified Nagam is melted and slowly poured through the hole in the upper chatty so that the purified and melted Nagam and mercury may combine themselves in the bottom chatty. Nagam now becomes brittle. This placed in kalvam, powdered, added powdered PERUNGAYAM half of the quantity of Nagam or 1/2 Ib and rubbed together with VELIPPARUTHTHI LEAVES JUICE for 2 or 3 days, are made, dried in the Sun, powdered again, placed in a frying pan or steel kadai or iron chatty and burnt over heavy fire. kindlng or frying the medicine constantly with an iron satvam. The medicine catches fire, gives out smoke and ultimately becomes ash coloured. Frying is continued all the while without stop and for a few hours more frying is done even after all smoke is passed away or ceased.

2. Next, the medicine is weighed, placed in a kalvam, rubbed, with the **JUICE of VELIPPARUTHI LEAVES** for 2 days, villais are made, enclosed in a pair of agals, dried, clay cloth seven layers are provided to the junction of the agals, dried and subjected to putam with about 300 to 400 vratties in a pit in an airtight compartment. On being cooled it is taken out, powdered, weighed, and presrved in a bottle if the baspam is very fine and well finished.

3. If not, for third time baspam may be rubbed with the same **VELIPPARUTHI LEAVES or SHOTRU KATHTHALAI JUICE** for 2 days, villais may be made and subjected to putam as before. Now the Naga baspam becomes excellent in colour and fineness, It it sandalwood colour.

Dose:- 2 to 4 grains may be given with honey or cow's butter or ghee, or other suitable annupanams twice a day.

Uses:- Diarrhoea, dysentery, piles, fistula, colitis, enteritis, gonorrhoea, leucorrhoea, dhadhu nattam and seminal weakness are cured. When given for 20 to 30 days piles are radically cured.

SPECIAL NOTE FOR NAGA BASPAM NO.1:-

After being rubbed with **VELIPPARUTHTHI LEAVES JUICE** the compound of Rasam and Nagam thontham with perungkayam. villai is made. dried, powdered, fried in an iron-pan under heavy fire until all the smoke ceases and nagam becomes brittle or finely powdered. This powder is then rubbed with **VELIPPARUTHTHI LEAVES JUICE** again for one or two days, Villai is made, enclosed in a pair or agals clay cloth is made and subjected to putam with 600 varatties, one being cooled, it is taken out and found very fine baspam.

This is the best process for this naga baspam.

3. NAGA BASPAM NO. II OR NAGA SANGU BASPAM:-

(S.R. Pharma)

1. Chirukan nagam, purfied in Illuppai nei 21 times (2 ½ ounces)
2. Ordinary raw sangku purified- 2 ½ ounces powdered.

Nagam is melted in an iruppu kadai (இரும்பு கடாய்) over the fire and when it is being melted, Sangku powder is given krasam little by little and fried well. This process is done until the whole Nagam is turned brittle and formed fine powder along with sangku powder.

This brittle nagam compound is then placed in a kalvam, rubbed with Veliparuththi, Leaves juice or kumari juice for 2 days made into a Villai, enclosed in a pair of suitable agals. seven layers of clay cloth are provided to the junction or agals, dried and is subjected to putamwith about 300 vratties in a pit. On being cooled the next day, it is taken out and the above process or rubbing with Velipparuththi leaves juice or kumari juice and putam are repeated once more. It then becomes an excellent white Baspam.

Dose:-2 to 4 grains may be given B.D. with cow's butter or ghee or honey or other suitable anupanams.

Uses:- gonorrhoea, gleet, leucorhoea piles, fistula. diarrhoea, dysentry and dadhunattam are cured.

4. THUTHA NAGA BASPAM OR NAGA BASPAM NO. III (S.R. Pharma)

1. Thuththa Nagam purified - 1 lb

2. Patharasam Purified - 1-lb

Thonthippu is made as per rules. placed in a kalvam, powdered added Perungkayam, 1 b ½ rubbed together with velipparuththi leaves juice for 2 days, made into a thin villai iron pan. dried well, fried under heavy fire until, the smoke ceases and nagam becomes brittle and finally powdered.

This powder is then rubbed with velipparuththi leaves juice again for 1 or 2 days, villai is made, enclosed in a pair of agals, clay cloth is made to the junction of the agals 7 layers, dried and subjected to heavy putam with about 600 Vratties. On being cooled it is taken out, weigher powdered and bottled up. It is found an excellent nice parpam. If not, one more putam by rubbing, with the same velipparuththi leaves juice or kumari juice may be applied.

Dose:- Uses and anupanam etc, are the same as that of nagabaspam No.1

5. NAGA BASPAM NO.4:- (S.R. PHARMA)

Chirukan Nagam purified 4 oz, is taken and thonthippu is made with equal part of purified patharasam as per rules. This is then rubbed with Puliyarai leaves juice for 2 days villai, is made, dried, enclosed in a pair of suitable agals, clay cloth seven layers are applied to the margin, dried and putam is applied in a pit in an airtight compartment with about 300 Vratties. On being cooled the next day it is taken out, powdered in a Kalvam rubbed with the same puliyarai leaves juice, villai made and putam is applied as before. It must be a good baspam by these two putams.

If it is not satisfactory it may be subjected to one or two more putams by rubbing it with the juice of velipparuththi leaves juice and if necessary one or two more putam by rubbing with KUMARI JUICE (Shotru kathalai juice) as before may be made as per rules. Then the baspam becomes properly finished

Dose:- Anupanam and uses are the same as that of No.1 Nagabaspam.

6.NAGA BASPAM COMPOUND (or Moola noi- nivarani No. 1 **(S.R. Pharma)**

1. Naga baspam No. 1 or 2 3 or.4 -one part or 21 tolas.
2. Kodi pavala chunnam No. II 1/3 part or 7 tolas.
3. Karpura silajathu baspam No. V- 1/3 part or 7 tolas.
4. Amaiodu baspam No. II. 1/3 part or 7 tolas.

These four ingredients are mixed in a kalvam, rubbed with kumari juice (sotrukaththalai) for 2 or 3 days, dried with the kalvam and then rubbed with Adathodai leaves juice for 2 or 3 days, villais are made., enclosed in suitable agals, clay cloth seven layers are made at the margin dried and putam is applied with 600 varaties in a pit in an airtight compartment. On being cooled, it is taken out, weighed and powdered.

Similarly second putam is applied by rubbing with Adathodai leaves juice for 2 or 3 days and the villai are enclosed in the rubbed paste of Adathodai leaves. They are subjected to open putam. Now it becomes an excellent compound baspam

Dose:-2 to 4 grains may be given twice a day with cow's butter or ghee or honey or karunai lehiyam or other suitable anupanam.

Uses:- piles, grahani, dysentery, manthabedhi, asanakaduppu etc., are cured. This is also useful as an aphrodisiac.

6. நாகபற்பம் கலவை:-

இதில் 1 முதல் 2 குன்றி எடை தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க மூலம், கிராணி, சீதபேதி. மாந்த பேதி, ஆசனக் கடுப்பு, பெருங்கழிச்சல் முதலியன குணமாகும். தாது விருத்தியை உண்டாக்கும்.
(S.R. Pharma see below)

7. இலிங்கத்துவர் (படிகலிங்கச் செந்தூரம்)

இதில் 3 முதல் 5 குன்றியளவு காலை, மாலை கொடுக்க சீத பேதி, இரத்த பேதி, பெரும்பாடு நிவாரணமாகும், நெய் வெண்ணெயில் கொடுக்கலாம். தேனில் கொடுக்க கழிச்சல் தீரும். (சி.வை.திரட்டு)

8. முத்து பற்பம்:-

அரிசி எடை காலை, மாலை வில்வயிலைச் சாற்றில் கொடுக்க அதிசாரம் போம். இதனை முறையான அனுபானங்களில் கொடுக்க அநேக நோய்களைப் போக்கும். (சி. வை திரட்டு)

9. அன்னபேதிச் செந்தூரம்:-

இதில் ஒரு குன்றி எடை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க சுரம், சீதபேதி, பாண்டு முதலியன தீரும். தேனில் கொடுக்க கழிச்சல் போம். (சி.வை, திரட்டு)

இலேகியம் வகை.

1. இஞ்சி லேகியம்.

இதில் ஒரு பாக்களவு காலை, மாலை கொடுக்க வாயு, பித்தம், வாந்தி, குலை வலி, அரோசகம், அன்னத்துவேசம், அட்டகுன்மம், பொருமல் இவை தீரும். (சி.வை. திரட்டு) இதனைக் கண்டாத்திரி இலேகியமெனவும் கூறுவர். சித்த மருத்துவம் இதனைக் கழிச்சலுக்கும் உபயோகிக் கலாமெனக் கூறியுள்ளது. (சி.வை.திரட்டு. S.R. Pharma)

2. சாதிக்காய் இலேகியம்:-

இதில் ஒரு நெல்லிக்காயளவு காலை, மாலை கொடுக்க குரற் கம்மல், கண்ணெரிவு, கைகாலெரிவு, சோபை, விக்கல், க்ஷயமிருமல். தேகம், அசதி,

உளைச்சல், காந்தல், உடம்புருகல், சோறு ஊண்தள்ளல், தாதுநட்டம், தாகம், வயிறு பொருமல், அக்கினி மந்தம், மூலம், நீர்க்கடுப்பு. நீர்ச்சிறுப்பு, அதிசாரம். பித்தமயக்கம் முதலிய நோய்கள் ஒரு மண்டலத்தில் பூரண குணமாகிவிடும்.

பத்தியம்:- கள், சாராயம், சேவல்கறி, மீன், மாமிசம் இவை ஆகா.

செய்முறை:-(எட்டுப் பிரதி)

அ. பசுவின்பால், இளநீர், தேங்காய்ப் பால், முருங்கைப் பூச்சாறு இந்நான்கும் வகைக்கு ஒருபடி.

ஆ.சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை இவ்வாறு மருந்துகளும் வகைக்குப் பலம் ஒன்று வீதம் எடுத்துப் பாண்டத்திலிட்டுத் ததும்ப பசுவின் பால் வார்த்து இரண்டு சாமம் ஊறவைத்து அப்பால் அவற்றை எடுத்து ரவியில் நன்கு உலர்த்தி இளவறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணஞ் செய்யவும்.

இ. கிராம்பு, ஏலக்காயரிசி, ஓமம், வால் மிளகு, கசகசா, விலாமிச்சு இவ்வாறு மருந்துகளும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து இளவறுப்பாய் வறுத்து இடித்துச் சூரணிக்கவும்.

ஈ.ஆமையோடு பற்பம், பவளபற்பம், மான்கொம்பு பற்பம், கற்பூர சிலாசத்து பற்பம், பால் கருடப்பச்சைக்கல் பற்பம் இவ்வைந்து பற்பங்களும் வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்துக் கொள்ளவும்.

பனைவெல்லம் பலம் பத்து.

செய்முறை:

'அ' வில் கூறிய பால், இளநீர். சாறு இவற்றை ஒரு பாண்டத்திலிட்டு அடுபபேற்றிக் காய்ச்சி வற்றிவருகிற பாகத்தில் (உ) வில் கூறிய பனைவெல்லத்தைத் தட்டி அதில் போட்டுக் கரைத்துப் பாகு பதம் வரும் சமயம். (ஆ.இ.ஈ) இவற்றில் கூறிய சூரணங்களையும். பற்பங்களையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு சிறுகச்சிறுக மேற்படி பாகில்

போட்டுத் துடுப்பால் நன்றாய்க்கிண்டி, நாட்டுச் சர்க்கரை பலம் ஐந்து சேர்த்துக் கிளறி அப்பால் நயம் பசுநெய் கால்படி விட்டுக்கிண்டி, சட்டியைக் கீழே இறக்கி வைத்துக் கொண்டு ஆறிய பிறகு நயம் தேன் அரைக்கால் படி சேர்த்துக் கிளறி நெல்லிக்காயளவாக உருண்டைகள் செய்து புதுச்சட்டியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:- காலை, மாலை ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர மேற் குறிப்பிட்ட நோய்கள் யாவும் குணமாகும். (ஏட்டுபிரதி).

சரபங்க வில்வாதி லேகியம்:-

இதில் 1 ¼ வராகனெடை அளவாகக் காலை, மாலை உட்கொள்ள பித்த வெட்டை, பித்தபாண்டு, ஷயம், குன்மம், கிராணி, வாய்கசப்பு, வெள்ளோக்காளம், வாய் நீருறல் அக்கினி மந்தம், சூலை, கைகால் எரிவு, பித்தம் 40 இவைகள் ஒரு மண்டலத்தில் தீரும்.

பத்தியம்:- புளி, கைப்பு, புகை, பெண் நீக்க வேண்டும்.
(சி.வை. திரட்டு)

மணப்பாகு வகை.

1.வில்வ மணப்பாகு, 2. குடசமணப்பாகு. 3. செம்பருத்தி மணப்பாகு இவற்றிலொன்றை 1 முதல் 2 தேக்கரண்டியளவு தினமும் 2 அல்லது 3 வேளை கொடுக்க கழிச்சல்கள் நீங்குமென சித்த மருத்துவம் கூறுகிறது.
(S.R. Pharma)

வேறு சில பரிகாரங்கள் இதன் அடியிற் கூறியுள்ளோம்.

பேதி வயிற்றுக்கடுப்புக் குடிநீர்:-(for Diarrhoea and Dysentery)

ஆனைக்கன்றி லொருபிடியும்
யசுரன் விரோதி யிளம்பிஞ்சும்
கானக்குதிரை புறத்தோலுங்
காலிற்பொடியை மாட்டினதும்

தானத்தாய் கொல் சலத்துடனே
தயவாய்க் காய்ச்சி நாலிலொன்றாய்
மானைப் பொருதும் விழியாலே
வடுகுந் தமிழுங் குணமாமே. (ஏட்டுப்பிரதி)

அத்திப்பிஞ்சு ஒரு பிடி, கோவைப்பிஞ்சு, மாமரப் பட்டை, சிறுசெறுப்படை இவை வகைக்கு ஒரு பிடியாகத் தட்டி சட்டியில் இட்டு வாழைக்கிழங்குச்சாறு நான்குபங்கு விட்டுக் காய்ச்சி நான்கில் ஒன்றாய் வற்றவைத்துக் காலை, மாலை சாப்பிட வயிற்றுக் கடுப்பு, கிராணி, பேதி இவை குணமாகும்.

2. சுட்ட சுக்கு(நெய்தடவி) சூரணித்து ½ முதல் 1 வராகனெடை அளவு காலை, மாலை தேனிற் குழப்பிச் சாப்பிட அசீரணம், வறிற்று வலி, மந்தம், பேதி இவை குணமாகும்.

3.முதண்டலேகியம்:-

இதில் ½ வராகனெடையளவு காலை, மாலை சாப்பிட்டு வர அதிசாரம், கிராணி, சீதபேதி, விந்து நட்டம் இவை தீரும். பசி எடுக்கும். அண்டவாதம் போம்.

செய்முறை:- சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், அக்கராகாரம், சுத்தி செய்த கஞ்சா இவை வகைக்கு பலம் ஒன்று சூரணித்து எடுத்துக் கொள்ளவும். தேன் பலம் 12. நெய் பலம் 5. தேனைச் சற்று சுடவைத்து சூரணங்களை ஒன்றாய்க் கலந்து தேனில் சிறிது சிறிதாகத் தூவிக் கிண்டி நெய் விட்டுக் கிளறி இறக்கி ஜாடியில் வைக்கவும். மேற்கூறிய அளவில் கொடுக்க அந்நோய்கள் தீரும். அன்றியும், மேகநோய், வாயுக்கள் குணமாகும். தேகதிடமுண்டாகும். பாலும் சாதமும் கொடுக்கவும். சுகவாசிக்குப் பத்தியமில்லை.

4. தான்றிக்காய் லேகியம்:-

இதில் ½ முதல் 2 ½ வராகனெடை வீதம் காலை, மாலை கொடுக்க அதிசாரம், கிராணி, இரத்தபேதி, மூலக்கடுப்பு, மூலநோய், உஷ்ண ரோகம், வாயுக்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றுக்கடுப்பு ஆகிய இவை தீரும்.

செய்முறை:- (அனுபவ வைத்திய நவநீதம்)

தான்றிக்காய்த் தோல் 25 பலம் எடுத்து ஒரு சட்டியிலிட்டு தண்ணீர் 2 படி விட்டு ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் காலை காய்ச்சி எட்டிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி இலேகியச் சட்டியில் இட்டு வெள்ளைச்சீனி 15 பலம் சேர்த்துப் பாகு காய்ச்சி அதிவிடையம், சாதிக்காய், அபின், சுத்தி செய்த கஞ்சா இவை வகைக்கு ¼ பலம் வீதம் பொடித்துக் கலந்து அந்தப்பாகில் தூவிக்கிளறி நெய் ஒரு ஆழாக்கு விட்டுக்கிண்டி ஆறிய பின் தேன் ½ ஆழாக்கு சேர்த்துக் கிளறி ஜாடியில் வைக்கவும். மேற்குறிப்பிட்ட அளவில் கொடுத்துவர அந்நோய்கள் குணமாகும்.

வசம்புச்சூரணக் கலவை:- (Mostly for younger children in diarrhoea) மாந்த பேதிக்கு சிறந்த மருந்து.

இதில் 1 முதல் 4 அல்லது 5 சிட்டிகை வரையில் முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கச் சீதளத்தாலுண்டான இரைப்பு, கபநோய்கள், மாந்தம், வாந்தி, வயிறு இரைச்சல் பேதி முதலியன குணமாகும்.

பத்தியம்:-பால் உண்ணும் குழந்தையாக இருப்பின் தாய் காரம், புளி நீக்கி உண்ணல் நலம்.

செய்முறை:- கண்ணுசாமியம் (very popular in S.R. Lab)

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, பெருங்காயம், ஓமம் (அட்டதீபாக்கினிச் சூரணம்) இவை தம்மைப் பொன் மேனியாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து எடுத்தது வகைக்குப் பலம் ¼ இவை சேர்ந்த மொத்த எடைக்குச் சமமாக வசம்பைச் சுட்டுக் கரியாக்கியது இரண்டு பலம் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாய்க் கலக்க அரைத்துச் சீசாவிலிடவும். மேற்குறிப்பிட்டபடி இதனை உபயோகிக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

6. பிரண்டையுப்பு:- (ஆயுர் வேத மஞ்சரி)

இதில் 2 முதல் 3 குன்றி எடை காலை. மாலை கொதிநீர் அல்லது புளித்த மோர் இவற்றில் கொடுக்க அசீரணம். பேதி. பசி மந்தம் இவை போம் சிறு குழந்தைகளில் மாந்தம். பிரளி, பால்போல் கழிதல் இவை குணமாகும்.

செய்முறை:-

முற்றிய பிரண்டைக் கொடி கொண்டு வந்து கணுக்களை நீக்கிக் கண்டங்களாக நறுக்கி இடித்துச்சாறு பிழிந்து கோணியில் வடிகட்டி ½ படி சாறு எடுத்து சட்டியிலிட்டு, அத்துடன் கறியுப்பு ¼ படி கலந்து சிறுதீயில் வற்றக்காய்ச்சி, அதன்பின் அதனைக் கீழே இறக்கி மேல்மூடிச் சீலைமண் செய்து 50 விராட்டியில் புடம் போட்டு எடுத்து புட்டியில் வைக்கவும். மேற்குறிப்பிட்டளவில் உபயோகிக்க அந்நோய்கள் போம்.

7. மாதுளைத்தோடுச் சூரணம்:-

இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை, வெந்நீரில் கலந்து கொடுக்க சுரப்பெருங்கழிச்சலும், எருமைத் தயிரில் அனுபானித்துக் கொடுக்க மற்ற வகை கழிச்சல்களும் குணமாகும். பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல், கடுப்புக்கழிச்சல் இவையாவும் குணமாகும்.

செய்முறை:-

மாதுளம் பழத்தின் தோடு நிழலில் உலர்த்திப் பொடித்தது, சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், நற்சீரகம், கருஞ்சீரகம், வாய்விடங்கம், ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசாணி, நெல்லிப்பருப்பு, வில்வக்குடுக்கை, தான்றிக்காய்த் தோல் சுத்தி செய்த கஞ்சாப்பொடி, கஞ்சாவிரை, அபின் இலவங்கப் பட்டை, ஏலம், பெரு மரத்துப்பட்டை, புளியம்விரைத் தோல், அதிவிடயம், வெட்பாலையரிசி இவை வகைக்கு சமஎடை சூரணம், எல்லாச் சூரணங்களையும் முறைப்படி ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். மேற்குறிப்பிட்டபடி இதனைக் கொடுத்துவர அந்நோய்கள் யாவும் குணமாகும்.

8. பூபதி செந்தூரம்:- ஏட்டுப்பிரதி

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை. மாலை தேனில் கொடுக்க கிராணி, அதிசாரம் போம். மிளகுக் குடிநீரில் கொடுக்க சுரம், குளிர் சுரம் போம். திரிகடுகில் கொடுக்க வாய்வுகள், மேகநோய்கள் போம்.

செய்முறை:- (ஆசிரியர் பாம்பாட்டி ஐயர் எனக் கூறப்பட்டிருக்கிறது)

"உலகினில் மாந்தர்க் குற்றிடுங் கிராணி
நிலவில் வாய்வு நீரது மேகம்
பலபிணி யால் பகரும் பூபதி
பழமையை யாய்ந்து பரிந்து புகல்வேன்
பாம்பாட்டி ஐயர் தலமதிற் சொன்ன
தருவன மருந்தாம்
கெந்தியுமொன்று கிருபையாம்லிங்கம்
அந்தமாயிரண்டு அருஞ்சுத்தி செய்யே
இஞ்சியினீ ரால் எழி லிருசாமம்
தஞ்ச மென்றதனைத் தயவுடனரைத்து
காய்ந்த பின்னால் கழறுவேன் குடிநீர்
ஆய்ந்திடு நாவல் அழுகுளமாவின்
சேர்த்திடு சதியன் திருவதாமத்தி
மருதின் பட்டை வகை யொரு பலமாய்
கிராம்பொரு பலமாம் கிளறுங்கா வித்தி
திரமொரு பலமாம் திகழ்ந்தவை யிடித்து
சட்டியில் போட்டு சரிநால் படியாய்
விட்டுத் தண்ணீரை விதமாய்க் காய்ச்சி
எட்டொன்றாக இருவரைப்படியை
கெட்டியாகவே கிறு முன் மருந்தில்
கல்வத்திலிட்டு கணக்கிருசாமம்
மெல்ல வரைத்துப் பின்வயச் சட்டியில்
போட்டுக் குழம்பை மூட்டிடு வக்கினி
நாட்டில் தீபமாய் நலமிகுஞ் சூடு
தயவாய்க் கொடுத்துச் சாறெல்லாம் வற்றி
சமயம் பார்த்துத் தகுதியா யெடுத்து
நீரில்லாது நெடும் பதமாய்
நேரத்தை யறிந்து நிமலத்தை தொழுது
கல்வத்திலிட்டுக் கடுகப் பொடித்து
நல்கிய மருந்தை நலமாங் குன்றி
கொடுத்திடு தேனில் கொடிய கிராணி
விடுத்திடுமேகம் விழலதி சாரம்
சுரமது போகும் துயமுறு குளிரும்

அரமதால் மிளகு அயின குடிநீர்
அதினினில் விடும் அருங் குளிர் கண்டாய்
பதியினல் வந்த பழவாய்வதற்கு
திரிகடு கிலிடுதீய ரோகங்கள்
பிரிந்தேவோடும் பெயர்பெறு மருந்தாம்."

சுத்தி செய்த கெந்தி ஒரு பலம், சுத்தி செய்த சாதிலிங்கம் 2 பலம், இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஒன்றாய்க் கலந்து இஞ்சிச் சாறு கொண்டு இரண்டு சாமம் அரைத்து, கல்வத்துடன் ரவியில் உலர்த்தவும். பிறகு நாவற் பட்டை, மாம்பட்டை, அத்திப் பட்டை, மருதம் பட்டை இவை வகைக்குப் பலம் ஒன்று வீதம் எடுத்து, அத்துடன் இத்திப்பட்டை பலம் ஒன்று, கிராம்பு பலம் ஒன்று இவற்றையும் சேர்த்திடித்துச் சட்டியிலிட்டு, நீர் படி நான்கு விட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி இந்தக் குடிநீரை விட்டு முன் மருந்துகளை ஒரு சாமம் அரைத்துப் பிறகு சட்டியில் வழித்துப் போட்டு மீதிக் குடிநீரையும் அதில் விட்டு அடுப்பேற்றி தீபாக்கினியாகச் சிறு தீயாக எரித்து, நீர்ச்சத்து முற்றிலும் வற்றிய பிறகு சட்டியை இறக்கி ரவியில் வைத்து உலர்த்திப் பொடித்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும். மேற்கூறியபடி தக்கஅளவில் தக்க அனுபானங்களில் கொடுக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

9. மிளகாய் மெழுகு:- ஏட்டுப்பிரதி

இதில் கடலைப் பிரமாணம் காலை, மாலை தேன், சர்க்கரை இவற்றுடன் கலந்து கொடுக்க அசீரண பேதி, பெருங்கழிச்சல், ஊழிபேதி, வயிற்றுப் பொருமல் இவை குணமாகும்.

செய்முறை:-

விரை அடர்ந்துள்ளதும் பொக்கையில்லாததுமான நல்ல சாதி மிளகாய் வற்றல்களைக் காம்பு நீக்கி தேன் விட்டுக் கருகாமல் வறுத்து, தேன் விட்டுக் கல்வத்தில் மெழுகு பதமாக அரைத்து வழித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு முற்கூறிய பிரகாரம் உண்ணக் கழிச்சல்கள் போம். ஊழி நோய்க்குச் சிறந்த மருந்தாகும்.

10. பூரணாதி இலேகியம்:(பாகம் 17 VI பிரம்ம ரகசியம்)

இதில் பெரியவர்களுக்குப் பாக்களவும், சிறுவர்களுக்கு ஒரு குன்றியளவும் தேவையுள்ள போது தினம் ஒரு வேளை கொடுக்க மாந்தம், அசீரணம், உஷ்ணபேதி, வயிற்றிரைச்சல், பசியின்மை முதலிய நோய்கள் தீரும். தாதுபுஷ்டி உண்டாகும்.

செய்முறை:-

சுத்தி செய்த கஞ்சா, இலவங்கப் பத்திரி, சிறு இலவங்கப்பட்டை, கசகசா, சோம்பு, ஏலம், பேரரத்தை, சிறுநாகப்பூ, சீரகம், அதிமதுரம், சுக்கு, திப்பிலி, தாளிசபத்திரி-கிராம்பு-இவை வகைக்குப் பலம் 5, சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு பலம் 21/2, மிளகு பலம் 10, தேன் பலம் 10, நெய் பலம் 20, 20 சர்க்கரை சேர் 15, எலுமிச்சம் பழம் அல்லது புளிப்பு நாரத்தம் பழரசம் படி ¾ சூரணிக்க வேண்டிய சரக்குகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்துப் பழச்சாற்றில் சர்க்கரை சேர்த்து பாகு செய்து, அதில் மேற்கண்ட சூரணத்தை ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு தூவிக் கிளறி நெய் சேர்த்துக் கிண்டி இறக்கி ஆறிய பின் தேன் சேர்த்துக் கிளறவும். இதனை ஜாடியில் வைத்துக் கொண்டு மேலே கூறிய பிரகாரம் கொடுத்து வர அந்நோய்கள் யாவும் குணமாகும்.

11. கட்டுவாதி இலேகியம்:-(பிரம்மரகசியம் பக்கம்.54 பாகம் 1)

இதில் ஒரு சுண்டைக் காயளவு காலையில் மட்டும் மூன்று நாட்கள் கொடுக்க சீதக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், மந்தம், அசீரணம் இவை தீரும்.

செய்முறை:-

சீமை அதிவிடயம், கடுக்காய்ப்பூ, மாசிக்காய், மாதுளம் பழத்தோல், சாதிக்காய், இலவங்கப்பட்டை, போஸ்தக்காய், கசகசா, மாங்கொட்டைப் பருப்பு, புளியங்கொட்டைத் தோல் வகைக்கு ஒரு வராகனெடை, அபினி, கோரோசனம் இவை அரை வராகனெடை, நல்ல வெல்லம் பலம் ½, நெய் பலம் 1 .நெய்யை அடுப்பேற்றி வெல்லத்தை அதில் கரைத்து சிறு தீ எரித்து பாகுபதத்தில் மற்ற சரக்குகளைச் சூரணம் செய்து வைத்துக் கொண்டு

சிறுகச் சிறுகத் தூவிக் கிளறி இறக்கவும். இதில் தேன் சேர்க்கப் படவில்லை. மேற்கூறிய பிரகாரம் கொடுக்க அந்நோய்கள் யாவும் தீரும்.

12. வெள்ளைப் பூண்டு கலிக்கம்:- (யூகி முனிவாத வைத்திய விளக்கம் 200- ஏடு)

"முக்கண்ணை உடைத்திளநீர் முனிவான
பூண்டில் விட்டு முயன்ற வித்து
தக்கதெடுத் ததைப் பிசைந்து தாட்டிகமா
யிளநீரில் தானே மூலம்
விக்கலுடன் கழிச்சலோடு விதமான
கிராணியெல்லாம் வெருண்டு போகும்
திக்கதனி லலைந்தாலும் தேசத்தில்
திரிந்தாலும் தெரியா வாறே."

இளநீரைக் கண் திறந்து ஒரு சட்டியிலிட்டு வேண்டிய அளவு பூண்டைத் தோலுரித்து அதில் போட்டு வேக வைத்து வெந்தபின் அதனைப் பிசைந்து இளநீரில் கலக்கிக் கொடுக்க மூலம், விக்கல், கழிச்சல், கிராணி இவை தீரும்.

உணவு

கழிச்சல் மிகுதியாயிருப்பின் இருமுறை வடித்த சோறும், நீரும் மட்டுமே கொடுத்தல் நன்று. பார்லி அரிசியை வேக வைத்து எடுத்த நீர் கொடுக்கலாம். நோயின் வன்மை குறைந்திருப்பின் சிறுகச் சிறுக உணவின் அளவைப் பெருக்கி இருமுறை வடித்த சோற்றுடன் சிறிது மோர் கூட்டிக் கொடுத்து, அது செரிக்குமாயின் உணவை உயர்த்திக் கொண்டே வந்து காய்கறி வகையில் அத்திப்பிஞ்சு, அவரைப் பிஞ்சு போன்றவைகளைக் கொடுக்கலாம்.

அதிசார ஹரம் (சதசுலோகம்)

வட்டத்தி ருப்பியும்வெட் பாலையின் வித்து
மாம்பருப் பொடு பட்டையும்
வறட்சுண்டி புளியதின் வித்துவேர் புறணியும்
வரப்பினில் பூலாவதும்

மாதுளங்காயதும் வில்லையி னிளங்காயும்
வன்னிளந் தும்பியின் காய்
வாழை தென்னம்பூவு மாத்தியின் பூவதும்
வாசலவங்கப் பூவதும்
விட்டக் கொடிக் கழல் வித்து நீர்ப் பூலாவு
மேவுநீர் முள்ளி வித்தும்
வெட்டிவேர் பாலையின் பட்டை சாதிக்காயும்
விடத் தேரியான விலையும்
வேங்கையின் பட்டையும் நெற் பொரியுமாகவே
மேகவு மஞ்சிலை துளிரதும்
வெள்ளறுகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவுதிப்பிலி லோத்திரந்
தொட்டக் கருங்காலி நாவலின் பட்டையும்
துளிருடன் கடுக்காயதுந்
தோதுசிறு காஞ்சொரி பெருமரத்துப் பட்டையுஞ்
சுக்குமிலவம் பிசினதுந்
துய்ய பால் நல்லெண்ணெய் முத்தமச மோதகஞ்
சொற் கடப்பன் பட்டையுந்
துலங்கு கீழ்க்காய் நெல்லி வெட்பாலையின் பட்டை
துய்ய வெண்குங் கிலியமும்
அட்டதிக் கெங்குமிகு சித்தர்களு மெச்சிமகி
ழுருஞ்சடைக் கஞ்சாவதும்
ஆவாரையின் பட்டை நெய்யுடன் செந்தேனு
மாவினற்ற யிரானதும்
அதிவிடய முந்தில்லை வெள்ளாட்டுத் தயிருடன்
ஆனதோர் வகையி தெல்லாம்
அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார ஹரங்க ளாமே."

வட்டத்திருப்பி, வெட்பாலைவித்து, மாம்பருப்பு, மாம்பட்டை, வறட்சுண்டி, புளியின் வித்து, புளியின்வேர், புளியின் ஊறணி, வறட்பூலா, மாதுளங்காய், வில்வயிளங்காய், வன்னியுந்தும்பியின்காய், வாழைப் பூ, தென்னம்பூ, ஆத்தியின் பூ, இலவங்கப்பூ, கழற்சிவித்து, நீர்ப்பூலா, நீர்முள்ளிவித்து, வெட்டி வேர், பாலையின் பட்டை, சாதிக்காய், விடத்தேரிலை, வேங்கையின் பட்டை, நெற்பொரி, அஞ்சிலை நொச்சித் துளிர், வெள்ளறுகுவித்து, சீரகம், பேரீந்து, திப்பிலி, வெள்ளி லோத்திரம்,

கருங்காலி, நாவற்பட்டை, நாவல்துளிர், கடுக்காய், சிறுகாஞ்சோரி, பெருமரத்துப் பட்டை, சுக்கு, இலவம்பிசின், பால், நல்லெண்ணெய், முத்து, ஓமம், கடப்பம் பட்டை, கீழ்க்காய் நெல்லி, வெட்பாலையின் பட்டை, வெண்குங்கிலியம், சடைக் கஞ்சா. ஆவாரையின் பட்டை, நெய், தேன், பசுந்தயிர், அதிவிடயம், தில்லை, வெள்ளாட்டுத்தயிர், ஆகிய இவைகளெல்லாம் அதிசார நிவாரணி எனக் கூறியுள்ளார்.

Certain Reaserch Siddha medicines for Diarrhoea are mentioned below:-

DIARRHOEA CURE POWDER NO.1 (Special) (S.R. Pharma)

1. Grahani Kapada churnam No.1	1 Part.
2. Vasambu churnam compound	½ part
3. Naga baspam	¼ part

In this proportion these three ingredents may be taken, mixed well and bottled up.

Dose:- 5 to 15 grains according to the age may be given 2 or 3 times a day and bottled up.

Diet:- Milk and bread or Rice or Sago conjee diet may be allowed

Uses:- diarrhoea, grahani and mantha bedhi in children are cured.

2.DIARRHOEA CURE POWDER NO.2 (Special) (S.R. Pharma)

1. Thalisathi Vadagam powdered	1 Part or 2 ounces
2. Lasunathi vati or vellai poondu mathirai powdered.	½ part or 1 ounce
3. Naga baspam No.1	¼ part- ¼ ounce
4. Nathai baspam	¼ part- ¼ ounce

Mixed well and preserved

Dose:- 5 to 10 grains may be mixed with honey and taken 2 or 3 times a day according to the siverity of the cases.

Uses:- Diarrhoea, Grahani and Indigestion. etc, are cured in 2 or 3 doses.

3. DIARRHOEA CURE MELUGU OR GRAHANI KAPADA MELUGU:-

Grahani kapada melugu grs. 5 to 10 may be given with honey 2 or 3 times a day in adults only. preparation is noted below.

Uses:- Diarrhoea, Grahani and Dysentery are cured.

GRAHANI KAPADA MELUGU (Special) (S.R. Pharma)

1. Masikkai churnam 10 tolas.
2. Jathikai churnam 10 tolas.
3. Vellai Kasukatti 10 tolas
4. Abin 2½ tolas if available or in its absence Posthekai thol extract powdered 5 tolas may be substituted (we can prepare even without this item)
5. Lavangam churnam 5 tolas
6. Lavangapattai churnam 5 tolas

These five or six ingredients are taken in the above proportion, mixed together in a kalvam, rubbed with honey into a waxy consistency or melugu pakam and then bottled up.

Dose:- About a chundaikai size for adults or about 5 to 10 grains may be given well mixed with honey 2 or 3 times a day. In elderly children under 12 years the dose may be reduced according to their age.

Uses:- Diarrhoea, Grahani, Dysentery, Colitis. Sprue and enteritis etc., are excellently cured.

Diet:- Liquid diet.

4. VASAMBU CHURNAM compound for Children (Special) (S.R. Pharma)

1. Vasmbu (வசம்பு) burnt up char 10 tolas.
2. Ashta deepagni churnam 10 tolas

Mixed well in a kalvam and bottled up.

Dose:- 2 to 5 grains B.D. with breast milk or honey may be given.

Uses:- Mantha Noi, Indigestion, Vanthi, Diarrhoea, Chalikattu/ Allu mantham or Neerkanai and gastro-inestinal disorders in children are relieved.

Note:- When this is given with Kapada churnam, each about 2 pinches Manthabethi, indigestion and Vanthi are immediately controlled.

Note:- One Viss raw Vasambu on being burnt up weighs about 9 to 10 tolas of Vasambu-burnt up char. (வசம்பு கட்டகரி)

5. KATTUVATHI CHURNAM (Special) for Children (S.R. Pharma)

1. Grahani Kapada churnam	...	...	2.oz.
2. Vasambu churnam Co.	...	...	2.oz.
3. Aamai odu Baspam No. 2 or 3.	...	...	1oz.
4. Naga Baspam, No.1	...	...	1/4 oz.

Mixed and bottled Up.

Dose:- 2 to 4 grains according to the age of the children to be given twice or thrice a day with honey or other suitable anupanam.

Uses:- Diarrhoea, of all kinds are cured in children.

6. GRAHANI KAPADA CHURNAM NO.1 OR DIARRHOEA CUM DYSENTERY CURE (S.R.PHARMA):

1. Masikai churnam ... 1 part
2. Jathikai churnam ... 1 part
3. White kasukatti churnam ... 1 part
4. Abin powdered if available ¼ to ½ part may be added.

All these ingredients are nicely powdered, mixed together and preserved in a bottle.

Dose:- 5 to 15 grains according to the age may be given well mixed with honey Better to give this with a few grains of Vasambu Churnam compound and Naga Baspam No.I or Nathai Baspam in cases of Diarrhoea. But Dysentery this kapada churnam or the other Seethabedhi churnam may be given with a few grain of Sringi churnam compound or Kasukatti churnam compound and Naga Baspam or Nathai baspam. Separate receipies for Diarrhoea and Dysentery are noted elsewhere.

Uses:- Diarrhoea, Colitis, sprue and Dysentery are cured when given as indicated above. Very good responses are recorded in all these cases.

Note:- In the absence of opium, Posthekai thol extract nicely powdered 1/4 th part may be added and used. If not, it may be omitted.

7. GRAHANI KAPADA CHURNAM NO. II OR SEETHA BEDHI CHURNAM. (S.R.Pharma)

1. Salamisri churnam ... ... 1 part
2. Masikkai churnam .. ... 2 part
3. Jathikai churnam ... ... 1 part
4. Checna karkandu churnam ... 2 ½ part

These four ingredients are well mixed and preserved in a bottle.

Dose:- 5 to 15 grains may be given with honey 2 or 3 times a day as that of Grahani kapada churnam No.1

Uses:- Diarrhoea, Dysentery and Colitis are cured. Better to give this powder along with a dose of either sringi churnam or Kasukkatti churnam and Naga Baspam No. I in cases of Sprue and Dysentery with blood, mucus and tenesmus which are quickly relieved.

8. ATHISARAM GRAHANI NIVARANI OR DIARRHOEA CURE POWDER NO.3 (S.R. PHARMA)

1. Thalisathi Vadagam	...	4 oz.
2. Vellaipoondu (Maathirai) Powdered Churnam	...	4 oz.
3. T. Naga Baspam	...	4 drams.
4.Nathai Baspam	..	4 drams
5.Amai odu Baspam No.2 or 3	...	4 drams

Mixed well and bottled up.

Dose:- 5 tp 10 grains may be given 2 or 3 times a day.

Uses:- Diarrhoea of all kinds and indigestion are cured.

9. OMAM (ஓமம்) LEHIYAM:-

Select best sort of Omam, remove the husk with the hands in a muram, and then weigh 10 palams or 30 tolas. (ஓமம் 10 பலம் நன்றாய் முறத்தில் போட்டுத் தேய்த்து உமி போக்கித் தேர்ந்தெடுக்கவும்)

This is kept soaked for a day in pure and fresh Poduthalai juice about lbs. 2. Next day onwards this Omam with the juice is kept in the sun to be completely dried.

Thereafter this Omam is again kept immersed in pure and fresh Velipparuththi leave juice lbs.2. for a day. Next day onwards it is kept in the sun to be completely dried.

It is then placed in a muram, crushed with the hand, removed its outer covering and then ground in a grinding stone or pounded into fine powder in a stone mortar.

Next Panaivellam 10 palams or 30 tolas and white sugar 10 palams or 30 tolas are made into a syrup on the fire, the above Omam pavani powder is added to it, kindled well, cow's ghee lb. 1 is added and mixed well. Removed from the fire and on being cooled. Honey Ib. ½ is added and preserved in a bottle.

Dose:- ¼ to ½ tola twice a day may be given.

Uses:- *All sorts of Diarrhoea, grahani, indigestion and flatulance are* cured. This may be advantageously given with Iya chenduram or Linga kattu chenduram in all Gastro-intestinal disorders.

13. ஓமலேகியம் :- (ஏட்டுப் பிரதி)

இ,தில் ¼ முதல் ½ தோலா லேகியம் காலை, மாலை சாப்பிட்டு வர அதிசாரம், கிராணி, அசீரணம், பொருமல் ஆகிய இவை குணமாகும். அன்றியும் இதனுடன் அயச்செந்தூரம், லிங்கக்கட்டுச் செந்தூரம் ஏதேனுமொன்றைச் சேர்த்துக் கொடுக்கச் சீரணக் கருவிகளிலுள்ள குற்றங்களை விரைவில் சரிப்படுத்துமெனக் கூறப்பட்டிருக்கிறது.

28. நிணக் கழிச்சல்

பரிகாரம்.

இந்நோயில் உணவாதி செயல்களால் உடல் வன்மை குறைந்து "தீ" க் குற்றம் கேடடையும். அதனால் செரியாமை உண்டாகும். இதன் காரணமாக உணவு அகட்டில் தங்கிப் புளித்து மேல் நோக்குகால், கீழ்நோக்குகால், நடுக்கால், பரவுகால் இவை மிகுதியடைந்து "தீ" க் குற்றத்தால் தூண்டப்பட்டு வாயுக்கள் மிகுந்து கேடடையும்.

மேல் நோக்குக்காலின் செயலால் புளியேப்பம், வாந்தி, விக்கல், நீர்வேட்கை, வாய் நீரூறல் என்னும் குறிகுணங்களையும், கீழ் நோக்குக்காலின் செயலால் வயிறு உப்பல், புரளல், நோதல், பேதி ஆதல் முதலிய குறிகுணங்களையும், பரவுகாலின் செயலால் உணவின் சாரத்தை சரிவரப் பரவவொட்டாமறதடுத்து உடலுக்கு ஊட்டம் அளிக்காதவாறு செய்து அதனால் உடல் வன்மை குன்றல், உடல் செரித்தல், கைகால் வீக்கம் முதலிய குறிகுணங்களையும், நடுக்கால் கேடடைவதால் மற்ற கால்களுக்கு உதவி புரிய இயலாது. மேற்கண்ட செரியாமை முதலிய குறிகுணங்களையும் விளைவிக்கும்.

இங்ஙனம் தோன்றிய குறிகுணங்கள் நீங்காது நிலைத்திருப்பின் ஏற்கனவே கேடடைந்த குற்றத்திற்குத் துணையாக மற்ற குற்றங்களில் ஒன்று அல்லது இரண்டேனும் சேர்ந்து நோயினனை வாட்டித் துன்பங்களை மிகுதிப்படுத்தி உயிரையும் போக்குவதுண்டு.

ஆகையால் மருத்துவன் கவனிக்க வேண்டியது யாதெனில் கேடடைந்த "தீ" க் குற்றம் அல்லது தொந்த மிகுதி, கேடடைந்த வாயுக்கள் இவற்றைத் தன்னிலைப்படுத்த வேண்டும். கழிச்சலை நிறுத்தவும், பசித்தீயைத் தூண்டி உணவாதிகளைச் செரிப்பிக்கச் செய்வதும், குருதியின் வன்மையையும் நிறத்தையும் பெருக்கக்கூடிய மருந்துகளையும்

உணவுகளையும் கொடுத்தல் வேண்டும். படிப்படியாக நோயின் குறிகுணங்களையறிந்து தக்க மருந்துகளும் உணவுகளும் வழங்கல் வேண்டும்.

சித்த மருத்துவத்தில் கூறியுள்ள சில பரிகாரங்களாவன:-

குடிநீர்வகை.

1. வேம்பு, கருவேம்பு இவற்றின் ஈர்க்குகள், சுக்கு, சீரகம், ஓமம் இவை வகைக்குச் சம எடை எடுத்து முறைப்படி குடிநீராக்கிக் கொடுக்க சீதக்கழிச்சல், நிணக்கழிச்சல், கீழ்வாய் எரிச்சல் போம்.

2. பீநாறிப்பட்டை, சாதிக்காய். சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து முறைப்படி குடிநீரிட்டு ½ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்க நிணக் கழிச்சல்கள் குணமாகும்.

3.செம்பருத்திப்பிஞ்சு, பொடுதலைப்பிஞ்சு, ஓமம், புளியங்கொட்டைத் தோல், இலவங்கப் பட்டை இவை வகைக்கு ஒரு பலம். நீர்படி இரண்டு விட்டுக் காய்ச்சி உழக்காக வடித்து ½ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கும்போது சிறிது மாசிக்காய்த்தூள் சேர்த்துக் கலக்கிக் கொடுக்க நிணக்கழிச்சல் போம்.

4. வில்வப்பழத்தோடு, விளா ஓடு, ஒதியம்பட்டை, அத்திப்பட்டை, நாவற்கொட்டை, கொம்பரக்கு, சாதிக்காய். சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, இம்பூறல் வேர்ப்பட்டை இவை வகைக்கு ஒரு பலம், நீர் படி இரண்டு கூட்டிக் காய்ச்சி உழக்காக வற்றவைத்து வடிகட்டி ½ ஆழாக்கு வீதம் காலை, மாலை கொடுக்கும்போது காவிக்கல் பொடி 2 சிட்டிகை கூட்டிக் கொடுக்கக் குருதிக் கழிச்சல் போம்.

5. நுணாயிலை, பொடுதலையிலை இவை வகைக்கு ஒரு பிடி கொண்டு குறுகத் தரித்து சட்டியிலிட்டுத் தேன் விட்டு வதக்கி இரண்டு படி நீர் விட்டு அதில் ஆலம்பட்டை, வெள்ளுள்ளி, நற்சீரகம், மிளகு, இலவங்கப்பட்டை, குரோசாணி ஓமம் இவை வகைக்கு ½ பலம் பொடித்துப்

போட்டு கால்படியாக வற்றக் காய்ச்சி வடித்து, அரை ஆழாக்கு வீதம் எடுத்து பொரித்துப் பொடித்த பெருங்காயம் ஒரு சிட்டிகை கலந்து காலை, மாலை கொடுக்க சூட்டாலுண்டான வாயு, கழிச்சல் போம்.

6. நெல்லிமுள்ளி, அதிவிடயம், கூவிளம் பிஞ்சு, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, மாதுளம்பிஞ்சு, முருங்கை ஈர்க்கு, வேப்பீர்க்கு, நாவற்கொழுந்து இவை வகைக்குப் பலம் இரண்டு சேகரித்து இடித்துச் சட்டியிலிட்டு நீர்படி இரண்டு கூட்டிக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடித்து, ½ ஆழாக்கு குடிநீரில் கடுக்காய்ப்பூ, கடுக்காய்ப்பிஞ்சு, கூட்டிப் பொடித்ததில் இரு சிட்டிகை கலந்து காலை, மாலை கொடுக்க நிணக்கழிச்சல் போம்.

7. சுக்கு, மிளகு, திப்பிலி. அதிவிடயம். சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஓமம் இவை வகைக்கு ஒரு பலம், சுண்டை வற்றல், பெருங்காயம் வகைக்கு ½ பலம், பிரண்டை நன்றாய் உலர்ந்தது பலம் 2 கூட்டி நீர் படி இரண்டு விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து, ½ ஆழாக்கு குடிநீரில் இந்துப்பு ஒரு சிட்டிகை சேர்த்து காலை, மாலை கொடுக்க குன்மக்கழிச்சல் தீரும்.

8. பச்சைப்பிரண்டை, கொத்தமல்லிக் கீரை, கறிவேப்பிலை, வெந்தயக் கீரை இவை ஓரளவாய்க் கொண்டு இடித்துப் பிழிந்த சாற்றில் ½ ஆழாக்கு, எருமை மோர் ½ ஆழாக்குங் கூட்டிக் கலக்கி, இதில் ½ ஆழாக்கு எடுத்துப் பொடித்த பெருங்காயம் ஒரு சிட்டிகை சேர்த்துக் காலை, மாலை கொடுக்க நிணக்கழிச்சல் குணமாம்.

9. சித்திர மூலவேர்ப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடயம், சோம்பு, பெருமரப்பட்டை, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு இவை வகைக்குப் பலம் ஒன்று. நீர் படி இரண்டுவிட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடித்து, ½ ஆழாக்கு குடி நீரில் இரண்டு சிட்டிகை கம்பியுப்பு பொடித்துக் கலந்து தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்க கர்ப்பக்கிராணி (Antepartum and post-partum Diarrhoea).தீரும்.

மெழுகு வகைகள்.

1. ஊழி மெழுகு

இதில் உளுந்தளவு, காலை, மாலை, பனைவெல்லத்தில் அல்லது தேனில் கொடுக்க ஊழி நோய், கழிச்சல், கிராணி, வாதநோய், சன்னிபாதம் இவை போம்.

செய்முறை:- சுத்தி செய்த இலிங்கம், ரசம், வீரம், சூடன், சாம்பிராணி இவை வகைக்குச் சம எடை எடுத்து முறைப்படி பொடித்து ஒன்றாய்க் கலந்து தேன் விட்டரைத்து மெழுகு பதத்தில் வழித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு மேற்கூறியவாறு உபயோகிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

இலிங்கம், இரசம். வீரத்திற்குப் பதிலாக இலிங்கக்கட்டுச் செந்தூரம், இரசபற்பம், சவ்வீரக்கட்டு பற்பம் இவற்றைச் சம எடை சேர்த்துச் செய்வது பொருத்தமாகும்.

2. சாதிக்காய் மெழுகு-

ஒரு குன்றி எடை காலை, மாலை தேனிற் கொள்ள கழிச்சல் களைப்பைப் போக்கும்.

3. இலிங்க மெழுகு-

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தேனில் கொடுக்க எல்லாவகைக் கழிச்சலும் குணமாகும்.நோய்க்கேற்ற அனுபானங்களை உபயோகிக்கவும்.

செய்முறை-

சுத்தி செய்த இலிங்கம், கஞ்சா, அபினி இவை வகைக்குப் பலம் ½ இவற்றை மைபோலரைத்து அத்துடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறுநாகப்பூ, வில்வப்பழச்சதை, இலவம் பிசின், ஊமத்தன்

விரை இவை வகைக்குப் பலம் ¼ பொடித்துக் கூட்டி வாழைப்பூச்சாறு கூட்டி மெழுகு போல் நன்றாயரைத்து, புளிப்பு மாதுளைப்பிஞ்சுகளைத் துளைத்து அதற்குள் பொதிந்து வாய்மூடி எருமைச்சாணத்தால் சீலை செய்து அவிப்புட மிட்டெடுத்து சீலை நீக்கி காயோடு அம்மியிலிட்டு மெழுகு போலரைத்தெடுத்து மீண்டும் கல்வத்திலிட்டு எருமைத் தயிர்த் தெளிவு விட்டு மூன்று நாட்கள் அரைத்து மெழுகு பதமாக வழித்தெடுத்துப் புட்டியில் வைக்கவும். மேற்கூறியவாறு கொடுக்கக் கழிச்சல் யாவும் குணமாகும்.

பற்பச் செந்துரங்கள்.

1. நாக பற்பம்.

1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தேன், நெய், வெண்ணெய் இதில் ஏதேனுமொன்றில் அல்லது வேறு தக்க அனுபானத்துடன் கொடுக்க எல்லாவகைக் கழிச்சலையும் போக்கும். அன்றியும் மூலம், பகந்திரம், வெள்ளை, வெட்டை, தாது நட்டம் முதலான நோய்களையும் போக்கும் பெருங்கழிச்சலில் நான்குவகை கூறப்பட்டிருக்கின்றன.

முத்துபற்பம்:-

இதில் ½ முதல் ஒரு அரிசி எடை தக்க அனுபானங்களில் காலை, மாலை கொடுக்க அத்திசுரம், சோபை, அருசி, தேகம் குன்றல், கண்ணோய், பித்தாதிக்கம். சில்விஷம், கயநோய், கோழைகட்டல், கோழைமனசு, இந்திரியநட்டம். மாலைக்கண், உட்டிணாதிக்கம், வலி நோய், மூலம், பித்தம், வாதம், அடிக்கடி மலம்போதல், உட்காய்ச்சல், வாந்தி, காசம், இரைப்பு, இரத்த பித்தம். தமரகநோய் முதலிய நோய்கள் குணமாம், பொதுவாக முத்து பற்பத்தைப் பசு வெண்ணெய் , நெய் இவற்றில் கொடுப்பது நல்லது. மலத்தைக் கட்டக் கூடிய வேறு பற்பச்செந்தூரம் பொடி இவற்றுடன் முத்துபற்பமும் சேர்த்துக் கொடுக்க கழிச்சல் நோய்களை எளிதில் குணப்படுத்தி உடலையும் தேற்றும் என அறிக. சித்த ஆராய்ச்சி நிலையத்தில் உபயோகித்து வரும் முத்து பற்பச் செய்முறையை அறிக.

3. MUTHU PASPAM:-

pearls (best quality)	...	...	1 ½ tolas
Muppu Guru	...	...	2 grs.

These are powdered in a kalvam, rubbed with **MANJAL KARISALAI JUICE** for 2 days, villai is made, enclosed in a pair of suitable agals, seven layers of clay cloth are povided to the margin. dried and is subjected to putam in a pit in an airtight compartment with about 150 vratties. On being cooled it is taken out and the white baspam is powdered, weighed and preserved in a suitable bottle. In a single putam it becomes a fine baspam.

Dose:- ½ to 2 grains B.D. may be given with cow's butter or ghee or other suitable anupanams.

Uses:- Aththi-jwaram, sobai, Arosakam, (tastelessness), General debility. Eye diseases, Pithathickam, Cilvisham, Kapha diseases, Kozhaikattu, Weak mind, Seminal Emission or loss of semen, night blindness, Ushnathickam, Valippu, piles, Piththam, Vatham, Sprue, Colitis, Internal fever, Vanthi, kayanoi, Kasam, Eraippu Rakthapitham and Thamarakanoi are all well responded to.

3. பவளபற்பம் :-

இதனை ½ முதல் 1 அரிசி எடை காலை, மாலை தக்க அனுபானங்களில் கொடுக்க ஈளை, கயம், விக்கல், சுரம், சுவாசம் முதலிய நோய்கள் குணமாகும். எலுமிச்சம்பழத்தை தணலில் வெதுப்பி அறுத்துச் சாறு பிழிந்து அதில் கலக்கி தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுத்துவர நிணக்கழிச்சல், கடுப்புக் கழிச்சல் குணமாகும். (செய்முறையை சிவை. திரட்டு, S.R. Pharma இவற்றில் காணவும்.)

4.அன்னபேதிச் செந்தூரம்:-

இதில் ஒரு குன்றிமணியளவு காலை. மாலை தக்க அனுபானங்களில் கொடுக்க சுரம், சீதபேதி, பாண்டு முதலியன தீரும். பெரும்பாலும் கழிச்சல்

5. சண்டமாருதச் செந்தூரம்-

ஒன்று முதல் இரண்டு குன்றி எடை காலை, மாலை பனைவெல்லம் அல்லது திரிகடுகுச் சூரணம் தேன் கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க சன்னி 13, குன்மம் 8, தோடம் 7, கல்லீரல், மண்ணீரல் நோய், மகோதரம், வாதம் 80, பக்கவாதம் முதலிய அநேக நோய்கள் தீரும். 5 முதல் 7 நாட்கள் மருந்தைக் கொடுக்கலாம். அபின் சிறிது கலந்து இச் செந்தூரத்தைக் கழிச்சல் நோய்களில் கொடுக்க அதிசாரம், நிணக்கழிச்சல் இவை குணமாகும். இந்செந்தூரம் செய்முறை, அளவு, அனுபானம், பிணிநீக்கம் யாவும் சித்த ஆராய்ச்சி நிலையத்தில் தயாரித்து உபயோகித்து வருகிற இருவகை முறைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி தயாரித்து உபயோகிப்பது மிகவும் நல்லது. வாய் பிடிக்காது. நோயையும் விரைவில் குணப்படுத்தும். இரண்டு வகை முறைகளும் மிகவும் போற்றத்தக்கவை.

4. CHANDAMARUTHAM NO.I (Special (S.R. Pharma)

1. Purified Jathilingam or Jathilinga kattu chenduram	8 parts.
2. Purified Rasakarpuram or Rasa karpura kattu baspam	10 parts.
3. Purified Shavviram or Veeram kattu baspam	2 parts
4. Purified Ghendakam or Ghendaka kattu baspam	2 parts
5. Purified Rasa chenduram or Swarna Valai Rasa chendurams.	22 parts.

All these 5 ingredients are rubbed well together in a kalvam for 4 or 5 days as it is, without using Breast milk or other fluids. The longer the compound chenduram is rubbed in the kalvam the better will be its effect.

Dose:- 2 or 4 grains B.D. may be given for 5 to 7 days enclosed in capsule or palm jaggery or with Thirikadugu Churnam and honey.

Uses:- Janni 13, Gunmam 8, Thodam 7, liver and Spleen diseases, Mahodaram, Vadham 80, Paksha Vadham, Paralysis, Tetanus, Orchitis, Vali Noi, Joint diseases, Chorea, Rheumatism, Vranam, Syphilis, Soolai Noi, kandamalai, Mega-Ooral in palms and feet, Karumegam, Vandukkadi, Allergic-dermatitis, dental bite poisoning, Cancer and ever so many diseases can be tackled

with this chenduram successfully with proper anupanams. This is also useful in Hypertension when given with B.P. Stabilizer and Honey.

SPECIAL NOTE FOR CHANDA MARUTHAM NO.I (Special)

Note:- These five raw drugs purified may also be rubbed with white of eggs in a Kalvam, small villais may be made dried in the shade, put in a kuduvai, covered with a lid, clay cloth 7 layers may be to the margin dried, kept over 3 cornered stones in a chatty containing one Madras measure of cow's milk, boiled on slow fire until the milk is almost dried and the medicine is taken out, rubbed in the kalvam for 3 hours until there is no moisture. It is dried well and preserved in a stoppered bottle.

5. CHANDAMARUTHAM NO. II (Special) (S.R. Pharma).

1. Purified Jathilingam or Jathilinga kattu chenduram	.. 12 parts.
2. Purified Rasa karpuram or Rasa karpura kattu parpam.	.. 15 parts.
3. Purified Veeram or Veeram kattu parpam	..3 parts.
4. Purified Ghendakam or Ghendaka kattu baspam	..3 parts.
5. Purified Rasa Chenduram or Swarna Valai rasa chenduram.	...3 parts.

All these 5 ingredients are rubbed together in a kalvam continuously for 4 to 5 days without using breast milk or other fluids. The longer it is rubbed, the greater will be its potency and effect. The colour in this process is of coral resemblence (Pavalam).

DOSE:- Anupanam and uses are the same as that of No. I Chandamarutham.

Note:- To avoid Mercurialism in certain rare cases, it is better to add to the above compound chenduram about 1/4th part of fried padikaram or padikara parpam and rubbed together in a kalvam before use, Mercurialism is rare in Nos I and II chandamarutham. If it occurs, the medicine may be stopped and mercurialism treated separately.

6. பலகரைப் பற்பம்:-

1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தேனில் கொடுக்கக் கிராணி தீரும். மற்றும் பல அனுபானங்களில் கொடுக்கப் பல நோய்கள் குணமாகும். செய்முறை, அளவு, அனுபானம், பிணி நீக்கம் இவற்றைக் கீழே காண்க.

6. PALAGARAI PASPAM-(S.R.Pharma)

Palakarai purified by boiling in puneer jalam and karchunna neer in equal parts and then washed with water lbs. 3 or quantity sufficient is taken. This is kept soaked in lime fruit juice for one day, then rubbed in a kalvam with the same juice for 2 or 3 days. Villai is made, dried, enclosed in a pair of suitable agals, margin provided with seven layers of clay cloth, dried and are subjected to putam with about 300 varatties.

Next this baspam is rubbed with the juice of **CHIRUNERUNJI** for 1 or 2 days, Villais are made and subjected to putam as before. On being cooled the baspam is secured powdered and preserved in a bottle. This much is enough for a good baspam.

DOSE:- 2 to 4 grains may be given with honey or cow's butter or ghee or other suitable anupanams.

USES: All Pithakapha diseases are relieved. This baspam is added to our P.S.M.M. Baspam compound. Leucorrhoea, Gonorrhoea, Gleet, Urethritis, Scanty and burning micturition, Abdominal pains, Megakangai Gunmam and animal poisonous affections, kamalai, liver and spleen diseases, kasam, swasam, kayanoi, Vishajwaram, inflamation of Gastro intestinal tract, thirst and grahani are cured.

7. நத்தைப் பற்பம்-

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க கழிச்சல்கள் குணமாகும். அன்றியும் மூலம், குதம் வெளித்தள்ளல், ஆசனக்கடுப்பு முதலியன குணமாகும்.(for preparation and other details please refer to under chapter (பெருங்கழிச்சல்.)

சித்த மருத்துவ நூலில் நிணக்கழிச்சல் மருத்துவத்தில் குறிப்பிட்டிருக்கும் மருந்துகள் நீங்கலாக வேறு பல சிறந்த பரிகாரங்களைக் கீழே வரைந்துள்ளோம்.

1. சௌபாக்கியச் சுண்டி-

இதில் மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை நீராகாரம் மோர், வெந்நீர் இவற்றிலொன்றில் கொடுக்க நிணக்கழிச்சல், அசீரண பேதி, வயிற்றுவலி, பொருமல், பித்த வாயு, சத்திவிக்கல் இவை குணமாகும்.

செய்முறை-

தோல் சீவிய சுக்கு பலம் 8, சிறுதுண்டுகளாக நறுக்கி செம்முள்ளிச்சாறு, செந்திராச்சாறு, முருக்கனிலைச்சாறு, கரிசாலைச்சாறு, சிறுசெருப்படைச்சாறு இவற்றில் வகைக்கு கால்படிசாற்றில் முறையே ஊறவைத்து ரவியில் வைத்து நன்றாயுலர்த்திப் பொடித்து அத்துடன் தக்கோலம், வாலுளுவை, கூகைநீர், கரியபோளம், விடங்கம், தான்றி, நெல்லி, திப்பிலி திப்பிலி மூலம் இவை வகைக்கு ஒரு பலம் வீதம் சூரணம் , சேர்த்து நன்றாய்க் கலந்து வைத்துக்கொண்டு முன்கூறிய அளவுப்படி கொடுக்க அந்நோய்கள் குணமாகும்.

2 பிரண்டையுப்பு-

இதில் 2 முதல் 4 குன்றி எடை, காலை, மாலை கொதிநீர், புளித்த மோர் இவற்றிலொன்றில் கொடுக்க நிணக்கழிச்சல் குணமாம்.(For Preparation please refer to Chapter பெருங்கழிச்சல்)

3. உப்புப்பொடி (ஏட்டுப் பிரதி)

இதில் 2 குன்றி முதல் 3 குன்றி எடை காலை, மாலை பிரமிச்சாற்றில் கொடுக்க வாத, பித்த சேத்தும கிராணிகள், மூலக்கிரகணி, வாயுக்கிராணி, இரத்தக்கிராணி, சங்கரகிராணி, சீதக்கிராணி முதலான கிராணி வகைகள் குணமாகும்.

செய்முறை:-

1. செய்திடு வாதபித்த சேத்தும கிராணி மூலம்
கொய்திடு கிராணிவாயு கூடிய கிராணிரத்தம்
நைதிடு சங்ரகிராணி நவிற்றிடு சீத கிராணி
எய்திடு கிராணிக்கெல்லா மினியநன் மருந்து கேளே."

2. இனியதோ ருப்பு காய மிந்துப்பு வளையலுப்பு
கனியவெள் ளுள்ளிசுக்கு காட்டுத்திப் பிலிமரீசம்
தனியது சவட்டு மண்ணுந்தரு சித்திர மூல மோமம்
பனியதோர் பிரமிச் சாற்றில் பணவிடை பொடியுங் கொள்ளே."

கறியுப்பு பற்பம் அல்லது செந்தூரம் எடுத்துக் கொள்க. வறுத்துப் பொடித்த பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு வெள்ளைப்பூண்டு (தோலுரித்தது), சுக்குப்பொடி, திப்பிலி, மிளகு, இவை வறுத்து இடித்தெடுத்த பொடி, அன்னக்காடி நீரில் பத்து முறை சுத்தி செய்த பூநீறு, சித்திர மூலப்பொடி, வறுத்துப் பொடித்த ஓமம் ஆகிய இப்பதினொன்று சரக்குகளையும் சம எடை நிறுத்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு முன்கூறிய அளவுப்படி பிரமிச் சாற்றில் காலை, மாலை கொடுக்கக் கிராணிக் கழிச்சல்கள் யாவும் குணமாகும்.

4. மதகஜ கண்டீரவ மாத்திரை: - (சி.வை. திரட்டு)

இதில் ஒரு மாத்திரை வீதம், காலை மாலை தக்க அனுபானத்தில் கொடுக்கக் கிராணி, வயிற்றுவலி, அதிசாரம், வயிற்றுக் கடுப்பு இவை குணமாகும்.

5. நாபியாதி மாத்திரை:-(ஏட்டுப் பிரதி)

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை இஞ்சிச் சாறு தேன் கலந்ததில் அனுபானித்துக் கொடுக்க எல்லாக் கிராணி வகைகளும் குணமாகுமென்கிறார்.

செய்முறை:-

"நாபியுடனே திரிகடுகு நல்ல லிங்கம் அதிவிடயம்
மேவியிவைகள் சமன்கூட்டி விளங்குநிம்பச் சாற்றரைத்து
தாவுமிஞ்சிச் சாற்றினிலே தானேகொள்ள வல்லீரேல்
பூவிலுள்ள கிராணிஎல்லாம் போமே யுண்மை புகலிதுவே"

சுத்தி செய்த கருநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, சுத்திசெய்த லிங்கம் (அல்லது மிகச் சிறந்ததாக லிங்கக்கட்டுச் செந்தூரம் சேர்க்கலாம்.) அதிவிடயம் இச்சரக்குகளைச் சம எடை எடுத்து முறைப்படி வறுக்க வேண்டியவற்றை வறுத்துப் பொடித்தும் மற்றவைகளைப் பொடித்தும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாயரைத்து ஒரு குன்றியளவு மாத்திரைகள் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் முன் சொன்னபடி இஞ்சிச்சாறு தேனில் கொடுத்து வர கிராணிக் கழிச்சல்கள் எல்லாம் தீரும்.

6.அத்திப் பிஞ்சு, கோவைப்பிஞ்சு, மாம்பட்டை, சிறுசெருப்படை இவை வகைக்கு ஒரு பிடி இடித்துப் பாண்டத்திலிட்டு 4 பங்கு வாழைக் கிழங்குச் சாறு விட்டுக்காய்ச்சி நான்கிலொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி காலை, மாலை கொடுக்க வயிற்றுக் கடுப்பு, கிராணி, பேதி இவை போம். (For stanzas refer to under chapter 27)

7. கஞ்சாவாதி மாத்திரை (ஏட்டுப் பிரதி)

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை தக்க அனுபானத்தில் கொடுக்க கிராணிகள் யாவும் தீரும்.

செய்முறை:- இதில் இருமுறைகள் இருக்கின்றன.

1. "கஞ்சாநாபி காந்தமபின்
 கருதூமத்தைச் சாற்றரைத்து
 விஞ்சரவுண்டை பேதி எல்லாம்
 விட்டுப் போகும் விளம்பக்கேள்"

2. நஞ்சா விளாம் பிசனபினு
நன்றாய்க் கஞ்சா விலைச்சாற்றில்
துஞ்சா வரைத்து குடிப்பீரேல்
துன்பக் கிராணி யகன்றிடுமே!

சுத்தி செய்த கஞ்சாப்பொடி, நாபிப் பொடி, காந்தச் செந்தூரம் (எண். 1 S.R. Pharma) அபின் இவை சமஎடை கொண்டு கல்வத்திலிட்டு கரு ஊமத்திலைச்சாறு விட்டரைத்து மிளகுப்பிரமாணம் மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை வீதம் சாப்பிட்டுவரப் பேதிகள் யாவும் குணமாம்.

விளாம்பிசின், அபின் இவை இரண்டும் சம எடை கல்வத்தில் பொடித்துக் கஞ்சாயிலைச்சாறு அல்லது குடிநீர்விட்டு நன்றாய் அரைத்துப் பயறு அளவு மாத்திரை செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை சாப்பிடக் கிராணிகள் யாவும் போம் என அறிக!

8. சூதாதி மாத்திரை:-(ஏட்டுப் பிரதி)

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை தக்க துணை மருந்துகளோடு கொடுக்க சகல கிராணிகளும் தீரும்.

செய்முறை:-

சுத்தி செய்த இரசம் (அல்லது இரசபற்பம்) சாதிக்காய், சாதிப்பத்திரி, சுத்தி செய்த இலிங்கம் (அல்லது இலிங்கக் கட்டுச் செந்தூரம்) சுத்தி செய்த காந்தம் (அல்லது காந்தச் செந்தூரம் No.1) காரீய பற்பம், வறுத்திடித்த சீரகப் பொடி, ஓமப்பொடி இவை சம எடை எடுத்துக் கல்வத்தில் ஒன்றாய்க் கலந்து கஞ்சாயிலைச் சாறு விட்டு நன்றாயரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரை உருட்டி உலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை ஒரு மாத்திரை தக்க துணை மருந்தோடு கொடுக்க சகல கிராணிகளும் தீரும்.

9. கிராணி கபாட மாத்திரை:-

இதில் ஒரு உருண்டை காலை, மாலை தக்க துணை மருந்துகளுடன் கொடுக்க பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல் யாவும் தீரும்.

செய்முறை:- (ஏட்டுப் பிரதி)

சாதிக்காய், இலவங்கம், அதிவிடயம், அபின், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, தாளீசம் இவை வகைக்குச் சம எடை எடுத்துப் பொடித்து மாதுளங்காய்க்குள் பொதிந்து சாணத்தினால் கவசஞ்செய்து உலர்த்தி இலகு புடமிட்டு கவசம் பிரித்து மாதுளங்காயுடன் கல்வத்திலிட்டு கஞ்சாயிலைச்சாறு அல்லது குடிநீர் விட்டு அரைத்து தூதுளங்காயளவு மாத்திரை முன் கூறியபடி கொடுக்கக் குணமாகும்.

10. அய கெந்திச் செந்தூரம்(ஏட்டுப் பிரதி)

இதில் 1 முதல் 2 குன்றி எடை செந்தூரம் தக்க அனுபானங்களில் கொடுக்க கிராணி, பசியின்மை, புளித்தேப்பம், உள்மூலம், பாண்டு, சொறி சிரங்கு, காணாக்கடி முதலியன தீரும்.

செய்முறை:-

அரப்பொடி பத்து பலம் எடுத்து படிகாரத் தண்ணீரில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவி, பிறகு எலுமிச்சம்பழச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்துக் கழுவி, உலர்த்தி எடுத்த அரப்பொடியில் 4 பலம், சுத்தி செய்த கெந்தகம் பலம் ஒன்று, நவாச்சாரம் பலம் ¼ இவற்றைக் கல்வத்திலிட்டு முறைப்படி பொடித்து ஒன்றாய்க் கலந்து கற்சுண்ணத் தெளிவுநீர் விட்டு ஐந்து நாட்கள் அரைத்து (ஒவ்வொரு நாளும் அரைத்து முடிந்து எழுந்திருக்கும் போது மருந்து மிதக்க (ததும்ப) கற்சுண்ணநீர் விட்டு கல்வத்தை முடிவைத்துவிட்டுப் போகவும்.) மறுநாள் வந்து பார்க்கும்போது கல்வத்தில் விட்டு வைத்த கற்சுண்ணநீர் சுண்டியிருக்கும் (வற்றியிருக்கும்). மறுபடியும் அதே கற்சுண்ண நீரினால் அரைக்கவும். இங்ஙனம் ஐந்து நாட்கள் அரைத்து முடிந்த உடன் மருந்திலுள்ள நீர் யாவும் சுண்டிய பிறகு ஒரு இருப்பு கடாயில் வழித்துப் போட்டு வெய்யிலில் வைத்து ஒரு நீளக் கரண்டியால் நம் முகத்தை மாறவைத்துக் கொண்டு மருந்தைக் கிளறிக் கொண்டிருக்க, மருந்து நன்றாய் உலர்ந்தவுடன் தானே புகை கிளம்பும். வறுத்துக் கொண்டிருக்கப் புகைந்து அப்பால் புகை அடங்கும். மீண்டும் நன்றாய்ச் செந்தூரம் சிவக்கும் வரைக்கும் வறுத்துக் கொண்டிருப்பது நல்லது. முடிவான செந்தூரம் அயப்பொடியின் எடையளவு இருத்தல் நலம். இதனை மேலே கூறிய அளவில் கொடுத்து வர அந்நோய்கள் குணமாகும்.

11. வான்மெழுகு:-(சி.வை. திரட்டு-. S.R.Pharma)

இதில் உளுந்தளவு மெழுகு, பனைவெல்லத்தில் பொதிந்து காலை, மாலை கொடுத்து வர வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, வயிற்றுக் கடுப்பு இன்னும் அநேக நாட்பட்ட நோய்கள் போம்.

12. வாழைச்சாறு:-

அரை முதல் ஒரு ஆழாக்கு காலை, மாலை மூன்று நாட்கள் கொடுக்கக் கிராணி தீரும். (ஏட்டுப் பிரதி)

13. ஈஸ்பர சிந்தாமணிச் செந்தூரம்:-(ஏட்டுப் பிரதி)

இதில் 1 முதல் 2 அரிசி எடை, காலை, மாலை சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குரோசாணி, ஓமம், அதிவிடயம் இவை சம அளவு வெதுப்பிச் சூரணித்த பொடி மூவிரல் கொண்ட அளவில் வைத்து, தேனுங்கூட்டிக் கொடுக்கக் கிராணி கழிச்சல் போம். பத்து நாட்கள் கொடுக்கக் குணமாகும்.

செய்முறை:-

சுத்தி செய்த கெந்தி 2 ½ பலம், இரசம் 2 பலம், இலிங்கம் ஒரு பலம், மனோசிலை ½ பலம் இவற்றை முறைப்படி பொடித்து அரைத்து ஒன்றாய்க் கலந்து 1. பொற்றலைச் கையான் சாறு, 2. மாதுளம் பூச்சாறு, 3. முருக்கன் பூச்சாறு, 4. பிச்சிப் பூச்சாறு இவற்றில் முறையே வகைக்கு இரண்டு சாமம் அரைத்துக் கல்வத்துடன் உலர்த்திப் பொடித்து எழுசீலை மண் செய்து உலர்த்திய காசிக் குப்பியில் (Amber coloured or Blue coloured. N.M. bottle may be used) அரைவாசியளவில் மருந்தைப் பிடிக்கக் கூடிய குப்பியில் அடைத்துக் குப்பியின் வாயை பலப்பக்கல் அல்லது பொருத்தமான ஓடு மூடி அதற்கும் சீலை மண் செய்துலர்த்தி முறைப்படி வாலுகையில் (மணல் மறைவில்) வைத்து மேல் மூடி எழுசீலை செய்து வட்டடுப்பின் மேல்வைத்து முதல் நாள் தீபாக்கினி, கமலாக்கினியாகவும், மறுநாள் கமலாக்கினி

காடாக்கினியாகவும், மூன்றாவது நாள் காடாக்கினியாகவும் 8 மணி முதல் இரவு 8 மணி வரை தினம் எரித்தும், இரவில் நெருப்பை எரிக்காமல் தணலில் வைத்திருக்கவும் வேண்டும். ஆறிய பின் கவசம் பிரித்து அடிசட்டியிலிருக்கும் செந்தூரத்தை மட்டும் சேகரித்து வைத்துக் கொண்டு மேற்கூறிய அனுபானத்தில் பத்து நாட்கள் காலையில் கொடுக்கக் கிராணிகள் யாவும் குணமாகும். (மேற்கொண்ட பிணி நீக்கம் அனுமானம் இவற்றை S.R. Pharma வில் காணவும்.)

குறிப்பு:- வாலுகையில் வைத்துச் செந்தூரங்களைக் குப்பி எரிப்பு செய்ய வேண்டின் இதில் குறிப்பிட்டிருக்கிறபடி நடந்து கொண்டால் செந்தூரம் எடை குறையாது பரிபூரணமாக அமையும். இதுவே நமது அனுபவம்.

14. கிராணிக்கு ஒரு குடிநீர்:- யூகி முனிவாத வைத்திய விளக்கம் , (எட்டுப் பிரதி)

> "பூண்டுபடி அவித்திறுத்துப் புகலரிய திரிகடுகு கஞ்சா விட்டுக்
> கூண்டுவகைக் கொன்றிடுநீ குணமாக வெட்டொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சிப்
> பாண்டுவினால் கிராணிக்குப் பதிலாகக் கொடுத்துண்ணப் பாரி லேகும்
> ஆண்டவனே தெய்வமாம் ஆளாதவன் தெய்வம் அல்ல தானே"

பூண்டு, சுக்கு, திப்பிலி, மிளகு, சுத்தி செய்த கஞ்சா இவை வகைக்கு ஒரு பலம் எடுத்துச் சட்டியிலிட்டு ஒரு படி நீர் விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வடித்து ½ முதல் 1 ஆழாக்கு அல்லது நோயினனின் வன்மைக்குத் தக்க அளவில் அளவைக் குறைத்துக் காலை, மாலை கொடுக்க பாண்டுவினாலேற்பட்ட கிராணி தீரும்.

15. நிறக. பெருங்கழிச்சல் நோயில் கூறப்பட்டுள்ளன.

1. தயிர்ச்சுண்டிச் சூரணம்.
2. தாளிசாதி வடகம்.
3. மாதுளைத்தோடு சூரணம்
4. மிளகாய் மெழுகு.
5. வெள்ளைப்பூண்டு கல்கம்.

6. பூபதிச் செந்தூரம்.

7. நாக பற்பம், செந்தூரம்.

8. படிகலிங்கச் செந்தூரம்.

9. கட்டுவாதி மாத்திரை.

10. வசம்புச் சூரணம் கலவை.

11. கட்டுவாதிச் சூரணம்.

12. கிராணி கபாடச் சூரணம். No. 1 & 2.

13. Diarrhoea Cure Powder No.1 &2.

14. கிராணி கபாட மெழுகு.

15. கட்டுவாதி லேகியம்.

16. பூரணாதி லேகியம்.

17. முதண்ட லேகியம்.

18. தான்றிக்காய் லேகியம்.

19. நாகபற்பம் கலவை.

20. அன்னப்பொடி என்னும் கறிவேப்பிலைச் சூரணம்.

21. சுண்டை வற்றல் சூரணம்.

22. கறிவேப்பிலை வடகம்.

23. கபாட மாத்திரை.

24. நத்தைப் பற்பம்.

25. ஓமலேகியம்.

இவையாவும் நிணக்கழிச்சல் நோயிலும் நல்ல குணம் தருமாதலால் அம்மருந்துகளையும் தாராளமாய் இந்நோயில் உபயோகிக்கலாம்.

16. கைக்குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் உண்டாகும் கழிச்சல் நோய்களுக்கு சித்த ஆராய்ச்சி நிலையத்திலும் அதற்கு முன் எமது அனுபவத்தில் கையாண்ட சில பரிகார முறைகளையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

கழிச்சல், பெருங்கழிச்சல், கிராணி இவை குழந்தைகளிலும் சிறுவர்களிலும் (மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்கள்) உண்டாகும் போது இவற்றை பிரளி, மாந்தக்கழிச்சல், கணை, பச்சை நிறமாய்க் கழிதல் இவை போன்ற பெயர்களால் தமிழ் மக்கள் அழைப்பார்கள்.

பரிகாரங்களாவன:-

அறை வீட்டுக் குழந்தைகளுக்கு நுரைத்தும் பால் திரண்டது போலும் பச்சையாயும் அடிக்கடி கழியுமானால்.

(1) அமுர்தாதிக் குடிகா:-

ஒரு மாத்திரையை முலைப்பால் அல்லது வேறு குடிநீரில் உரைத்துக் காலை, மாலை கொடுக்கக் குணமாகும். அன்றியும் இந்த மாத்திரையின் குணம் யாதெனில், மாசிப்பத்திரிக் குடிநீரில் உரைத்துக் கொடுக்க மாந்தமும், இலவங்கக் குடிநீரில் கொடுக்க மாந்த சுரமும், வாந்தியும், முலைப்பாலில் கொடுக்க குடற்படுவன், நீர்ப்பாடு, மாந்தம், கரப்பான், நாவறட்சி, வயிற்றெரிவு, விடாச்சுரம், உப்பிசம், இருமல் முதலியனவும் தீரும். (சி. வை. திரட்டு).

(2) ஆமையோட்டுப் பற்பம்:

இதில் 1 முதல் 2 குன்றி எடை, தேன் அல்லது முலைப்பால் அல்லது வேறு குடிநீரில் கொடுக்க மேற்கண்ட கழிச்சல் குணமாகும். அன்றியும் மாந்த சுரம், கணைச்சூடு போம். பெரியவர்களுக்கு இப்பற்பத்தைக் கொடுக்க அசீரணபேதி, மூலம், மேக காங்கை இவை குணமாகும். செய்முறையைக் கீழே காணலாம்.

7. AMAIODU BASPAM, NO. 1 (S.R. Pharma) special for Dysmenorrhoea).

Amaiodu lbs 3. purified by boiling in puneer jalam (4 ounces of puneer dissolved in one Madras measure of water and Karchunna neer one Madras measure) then washed with water and dried.

2. Thalakam 3 to 4 palam are taken powdered rubbed in a kalvam with "Kuppaimeni leaves Juice" into a fine paste with which kavacham is made about ½ thick to all pieces of purified Amaiodu, dried. again kavacham is made with the rubbed paste of plain kuppaimeni leaves, dried and then subjected to open putam in a pit in an airtight compartment with about 300 Varatties. On being cooled the next day it is carefully taken out and weighed.

Next the same first putam finished Amaiodu baspam is rubbed in a kalvam with Kuppaimeni leaves Juice for 2 days, villais are made, dried, again kavacham is made with the paste of the Thalakam 3 tolas rubbed with Kuppaimeni leaves juice, dried, again kavacham is made with the rubbed paste of Kupppaimeni leaves, dried and open putam is applied for the second time as before. Now it becomes a very good baspam.

Dose:- Thuttu edai is mentioned in ancient works, but 2 to 4 grains are enough for a dose. This may be given once a day in the morning for 6 days for a course, enclosed in a rubbed mass of pepper or dried chillies in the proportion of 25 on the first day, 20 on the second day, 15 on the 3rd day, 10 on the 4th day, 5 on the 5th day and lastly 5 on the 6th day and swallowed with water. This is what is written in the original cudgeon leaves.

N.B. But I have been giving this baspam either alone with simple honey or combined with other baspams or chendurams as follows. In cases of Dysmenorrhoea. This may also be used for children as that of Nos. 2 and 3 Amaiodu baspams.

(1) Amaiodu baspam grs. 2 to 4 (2) Navauppu guru chunnam grs. 2(3) Pattukaruppu grs. 2 and (4) Ashta churnam grs. 5 to 10 mixed for a dose and taken twice a day for 3, 5 or 7 days with honey. This receipe has given immense good result by giving immediate relief in Dysmenorrhoea, Scanty menses and Amenorrhoea.

Uses:- Dysmenorrhoea or Soothaka Soolai, Scanty menses, Amenorrhoea and mantha noi are cured. Very popular medicine with us for Dysmenorrhoea.

8. AMAIODU BASPAM NO.2 (Special) (S.R. Pharma):-

Amaiodu Q.S. purified in puneer jalam and karchunnam neer as described under Amaiodu baspam No. I is taken . Kavacham is made with fine **KARCHUNNAM PASTE,** dried in the sun and the kavacham made Amaiodu pieces are subjeced to putam in a pit in an airtight compartment with about 300 varatties for one viss of Amaiodu. On being cooled, it is taken out. cleaned and weighed.

Next the same first putam finished Amaiodu is powdered, rubbed with the **JUICE OF ADATHODAI LEAVES or KUPPAIMENI LEAVES JUICE** dried again and subjected to open putam as before for the second time. Now the baspam becomes excellent which may be finely powdered and bottled up.

Dose:- 2 to 4 grains may be given with honey or Breast milk or other suitable anupanam twice a day.

Uses:- This is a children -medicine useful in mantha bedhi, Jwaram and kanaichudu. In adults also it may be given in an increased dose for indigestion, piles and mega kangai, etc

பிரண்டையுப்பு:

இதில் 1 முதல் 2 குன்றி எடை காலை, மாலை கொதி நீர் அல்லது புளிப்பு மோரில் கொடுக்க மாந்தபேதி, அசீரணம் தீரும்.

(4) வசம்புச் சூரணம் கலவை :

இதில் ஒரு சிட்டிகை முதல் இரண்டு சிட்டிகை தேன் அல்லது முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல் போம்.

(5)கோரோசனை மாத்திரை:

இதில் ஒரு மாத்திரை தேன் அல்லது முலைப்பாலில் காலை, மாலை கொடுக்கக் கழிச்சல் சுரம், தலைப்பாரம் , இருமல், மாந்தம், சளிக்கட்டு முதலியன குணமாகும். (முறையைக் கீழே காணவும்.)

(6) குழந்தைகளது கட்டுவாதி மாத்திரை:

இதில் 1முதல் 2மாத்திரைகளை காலை, மாலை தேன், முலைப்பால் ஏதேனுமொன்றில் கொடுக்கக் கழிச்சல் குணமாகும். ஓமக் குடிநீரிலும் அனுபானிக்கலாம். (முறையைக் கீழே காணவும்).

9. AMAIODU BASPAM NO.3 (SPECIAL) (S.R. PHARMA)

Amaiodu one viss or Q.S. purified in puneer jalam and Karchunnam neer as described under Amaiodu baspam No. 1is taken.

Kavacham is made with the rubbed mass of **KUPPAIMENI LEAVES,** dried and is subujected to open putam in a pit in an airtight compartment with about 300to 350 Varatties for one viss of Amaiodu. On being cooled it is taken out and weighed.

Next, this is rubbed with the juice of Adathodai leaves for 2days,Villais are made , dried enclosed in the rubbed mass of Adathodai leaves or Kuppaimeni leaves, dried again and subjected to open putam for a second time as before.On being cooled, it is taken out, baspam is powdered and bottled up.

Dose:- 2 to 4 grains may be given with honey or butter or other anupanams.

Uses:- This is specific for piles (esp: Bleeding piles) Diarrhoea Manthabedhi, Manthajwaram and indigestion are also cured. Here we are using this baspam mostly for piles and mantha bedhi

(vii) **கட்டுவாதிச் சூரணம்** (for children)

இதில் 1 முதல் 2 அரிசி எடை காலை, மாலை தேனில் கொடுக்கப் பேதி குணமாகும்.

(Receipie under chapter 27 and also see below)

10. KATTUVATHI CHURNAM FOR CHILDREN (Special):-
(S.R.Pharma)

1. Grahani Kapada Churnam	...	2 oz.
2. Vasambu Churnam Co.	...	2.oz.
3. Aamaiodu Baspam No.2 or 3	...	1 oz.
4. Naga Baspam No. 1	...	1/4 oz.

Mixed well and bottled up.

Dose : 2 to 4 Grains according to the age of the children to be given twice or thrice a day with honey or other suitable anupanam.

(viii) கோரோசனை கத்தூரி மாத்திரை.

இதில் 1 முதல் 2 மாத்திரை தேன், முலைப்பால் ஏதேனுமொன்றில் காலை, மாலை கொடுக்க மாந்தம், பேதி, சளிக்கட்டு, சுரம், நீர்க்கணை, விக்கல், வாயு, இருமல், வலிநோய் (இசிவு), தலைவலி இவை குணமாகும் (see receipie below)

11. GOROJANAI MATHIRAI NO.I (other known as abreka mathirai).

1. Abreka chenduram	of each equal parts or 3 tolas each.
2. Rasa chenduram (Preferably Swarna Valai rasa chenduram is used)	
3. Rasakarpuram parpam.	
4. Gorojanam	
5. Kungumappoo	
6. Pachai karpuram	
7. Elarisi churnam	
8. Lavangam churnam	

9. Jathikottam churnam
10. Jathikai churnam
11. Akkarakaram churnam

} of each equal parts or 3 tolas each.

These eleven drugs are individually powdered in equal parts, mixed in a kalvam as per rules, rubbed with (1) Vetrilai juice (2) Chandanakattai kudineer and (3) Shanbagappu kudineer for about 9 to 12 hours in each and then pills are rounded about the size of a green gram or 1 grain each.

The pills are dried in the shade and bottled up. After rubbing with the first juice it should be allowed to dry with the kalvam, then rubbed with the seconddecoction, dried and then rubbed with the third decoction. When proper consistency is reached pills should be rounded. There is no harm in rubbing with Kungumappu kudineer also in addition for 12 hours.

N.B. In this connection it is said in certain books that karpuram (Nattusudam) is to be used in place of Rasakarpuram and in that case it is also said that kungamappu kudineer or Lavangam kudineer for rubbing is to be used in place of Vetrilai juice, But certain other old works have emphasized Rasakarpuram and Vetrilaijuice. It is also my experience to use Rasakarpuram and Vetrilai juice as mentioned in the above formula.

Dose:- 1 to 2 pills according to the age of the patient may be given morning and evening with suitable anupanams.

Indications:-

Generally speaking this pill is effective in children diseases especially, in fevers of all types, cold (coryza), mantham, kapha diseases, janny vatham and convulsions, etc. It is given in these diseases, with breast milk. As a special case this pill is given with **Anda thailam** for 3 to 5 days twice a day in Infantile convulsions and infantile paralysis. It is also given with mantha kudineer for 3 to 5 days twice a day in case of mantham (Allu mantham or Neer kanai and Mukku mantham etc.) in children. It is given with honey in case of severe colds and mandai soolai.

Special Note:-

Gorojanai pills 1 to 2 finely powdered plus equal part of Linga kattu chenduram, P.S. Baspam and Silajathu baspam No.1 act better when given with

honey in all kinds of fevers both in children and in adults, morning and evening for 3 to 5 days.(S. R. Pharma)

12. GOROJANAI MATHIRAI NO.2 (Otherwise known as Rasa parpa Mathirai) (S. R. Pharma)

1. Rasa parpam. 2. Rasa karpura parpam 3. Gorojanam 4. Kungumappoo 5. Pachai Karpuram 6. Elarisi churnam 7. Lavangam churnam 8. Jathi koshtam churnam 9. Akkarakaram churnam.	Of each churnam - equal parts or 3 tolas each.

These nine ingredients are placed in a kalvam, mixed as per rules, rubbed with (1) Chandanakattai kudineer for 12 hours, allowed to dry with the kalvam and then rubbed with (2) Vetrilai juice for 12 hours.

When pill-making consistency is reached, pills are rounded about the size of a black-gram each. The pills are dried in the shade and bottled up.

Dose:- 1 to 2 pills according to the age of the children may be given twice a day with suitable anupanams.

Indications:- Diseases and anupanams mentioned under Gorojanai mathirai No.1 may be adopted for No.II also. Fevers, severe cold and mantham in children are definitely cured by the use of these pills.

13. GOROJANAI MATHIRAI NO.3 (Special) (S. R. Pharma)

1. Gorojanam 2. Kungumappu 3. Pachai karpuram	Of each in equal parts or about 1 ½ tolas.

4. Jathikai churnam 5. Lavangam churnam 6. Elarisi churnam 7. Koshtam churnam 8. Akkarakaram churnam 9. Karpuram 10. Swarnavalai rasa chenduram 11. Abreka chenduram	Of each in equal parts or about 1 ½ tolas.

All these ingredients are powdered, mixed together in a kalvam and rubbed with the following juices:-

1. Chandana kattai kudineer for 12 hours (i.e.white chandana kattai) coarsely powdered one palam is put in a chatty, water lb 2 is added, boiled and reduced to 1/8th part. This is filtered and the decoction is used for rubbing.

2. Shanbagappu kudineer for 12 hours prepared in the same manner as above and

3. Kungumappu kudineer for 12 hours prepared by kungumappu ½ palam, water lb 1, boiled and reduced to 1/4th part. This is filtered and the decoction is used for rubbing. After this kind of rubbing of the above eleven ingredients with the decoctions, it is rounded into pills of kunri size or 2 grains each, dried in the shade and bottled up.

Dose:- 1 to 2 pills twice a day may be given with breast milk or other anupanams mentioned below.

Uses:- Fever, Chalikattu, Fainting, Delirium, Nasal catarrh, Kapha soolai and bronchial affections are cured.

1. When given with Andathailam Convulsion and Tetanus are cured.

2. When given with mantham decoctions Allumantham or mukku mantham is cured. Better to give this pill for 3 to 5 days in serious ailments.

14. Gorojanai Kasthuri Mathirai (Special) or G.K. Mathirai for Children (S. R. Pharma).

		Grams
1. Gorojanai	...	20
2. Kungumappu	...	20
3.Pachai karpuram	...	20
4. Kasthuri	...	20
5. Jathikai	...	20
6. Lavangam	....	20
7.Elakkai arisi	....	20
8. Koshtam	....	20
9. Akkrakaram	...	20
10.Karpuram	...	20
11. Swarnavalai rasa chenduram	..	20
12. Abreka baspam or chenduram	...	20
13. Ulantha linga chenduram	...	20

All these ingredients are powdered in a kalvam, mixed well and rubbed with the following juices or fluids.

1. Chandanakattai kudineer for 12 hours (chandanakattai 5 palams is taken, water added 6 Madras measures, boiled and reduced to 1/8th part and strained.)

1. Shanbakappu kudineer for 12 hours.

2. Kungumappu kudineer for 12 hours.

DECOCTION PREPARED:-

Kungumappoo one tola is taken added water lb 4, boiled and reduced to ¼ th part and strained rubbed well in a kalvam, then rounded into pills of kunri size (2 grains each) dried in the shade, weighed and bottled up.

Dose:- 1 to 2 pills or 2 to 4 grains may be given twice a day with breast milk or honey or other suitable anupanams.

Uses:- Cold, Fever, Cough, Dyspnoea, Indigestion, Hiccup, vayu, Giddiness, Neerkanai and Headache etc., are cured. In children it is, very useful in convulsions when given with Mandha-Thailam.

15. CHILDREN'S KATTUVATHI MATHIRAI (SPECIAL)

1. Kapada churnam	...	1 part or 2 oz.
2. Vasambu churnam compound.	..	1 part or 2 oz.
3. Amaiodu baspam	...	¼ part or ½ oz.
4. Naga baspam	...	1/8 or ¼ or ½ oz.

Mixed well and rubbed in a kalvam with omum decoction (i.e. omum 60 grams, water lbs 8, boiled and reduced to ¼th part and decanted) rubbed for 6 hours, rounded into pills of pepper size dried in the shade and bottled up.

Dose:- 1 to 2 pills to be given two or three times a day with suitable anupanams. Honey or breast milk or omum decoction may be used.

Uses :- Diarrhoea of all kinds in children are cured.

N.B. The above 4 powders may be mixed together and used as a compound powder also.

Dose of the compound powder is 1 to 3 pinches with Honey.

(ix) மாந்த பேதிக் குடிநீர் (ஏட்டுப் பிரதி)

"போக்கை அடைக்கும் பொடுதலை" என்பது பழமொழி. குழந்தைகளது கழிச்சலுக்குச் சிறந்த பச்சிலை மருந்து இது. பொடுதலை ஒருபிடி கொண்டு வந்து ஒரு சட்டியை அடுப்பில் வைத்துச் சூடேறியவுடன் சிறிது ஓமத்தைப் போட்டுப் பொரிய விட்டு, பொடுதலையையும் வதக்கும்போது சிறிது முலைப்பால் அல்லது நீர் தெளித்து வதக்கி எடுத்து ஒரு துணியில் கொட்டிச் சாறு பிழிந்து ஒரு சங்களவு காலை, மாலை மூன்று வேளை புகட்ட கழிச்சல் நின்றுபோம். இத்துடன் தேவையானால் அமிர்தாதி

மாத்திரை, கட்டுவாதி மாத்திரை ஏதேனுமொன்றை உரைத்தும் கொடுக்கலாம்.

(x) பொடுதலைக் கூட்டுச் சுரசம்:-

பொடுதலையிலை, பேய்மிரட்டியிலை, வாய்க்கால் சடைச்சியிலை, முருங்கையிலை, பிரண்டையிலை, திருநீற்றுப் பச்சையிலை, துளசியிலை, இவற்றிலேதேனும் சிலவற்றைப் பொடுதலையுடன் சேர்த்து வகைக்கு ஒரு கைபிடி வீதம் எடுத்துக் குறுக அரிந்து வைத்துக்கொண்டு முன்போல் ஓமத்தைப் பொரியவிட்டுப் பச்சிலையைப் போட்டு வதக்கிச் சிறிது முலைப்பால் அல்லது நீர் தெளித்து வதக்கிச் சாறு பிழிந்து ஒரு சங்களவு சாறுடன் வசம்பு, பெருங்காயம் இவை இரண்டையும் சுட்டு உரைத்து காலை, மாலை புகட்டக் கழிச்சல் குணமாகும். (அனுபவமுறை)

(xi) பல ஈர்க்குக் குடிநீர்:-

வேப்பீர்க்கு, கருவேப்பிலை ஈர்க்கு, நுணா ஈர்க்கு, நெல்லி ஈர்க்கு, கருவேலம் ஈர்க்கு, இவை வகைக்கு ஒரு துட்டெடை சேகரித்து, ஓமம் சிறிது ஒரு சட்டியில் பொரியவிட்டு மேற்கண்ட ஈர்க்குகளைப் போட்டு வதக்கி நீர்படி ¼ விட்டுக் காய்ச்சி நான்கில் ஒன்றாய் வற்றவைத்து வடிகட்டி ஒரு பாலாடையளவு குடிநீருடன் வசம்பு, பெருங்காயம் சுட்டு உரைத்து காலை, மாலை கொடுக்கப் பேதி நிற்கும். சொருகல், மாந்தம் இவை குணமாகும்.

(xii) வாந்தியும் பேதியுமானால்:-

1. கட்டுவாதிச் சூரணம் (for children) இதில் 1 முதல் 2 சிட்டிகையளவு தேனில் தினம் இரண்டு அல்லது மூன்று வேளை கொடுக்கக் குணமாகும் அல்லது (2) வாந்தி நிவாரணப் பொடியில் ஒரு சிட்டிகையும் முன் சொன்ன கட்டுவாதிச் சூரணத்தில் ஒரு சிட்டிகையும் சேர்த்து தேனில் காலை, மாலை கொடுக்கக் குணமாகும் அல்லது (3) ஓமம், பூண்டு இவற்றை முன்போல் சட்டியிலிட்டு வதக்கி நீர் சேர்த்துக் குடிநீராக்கி ஒரு பாலாடை குடிநீரில் வசம்பு சுட்ட கரி உரைத்து தினம் 2,3 வேளை கொடுக்க வாந்தியும் பேதியும் நிற்கும்.

(xiii) வாய்க்கால் சடைச்சி ஒரு கைபிடி, சீரகம், வெங்காயம் இவை சிறிது சேர்த்துத் தட்டிச் சாறு பிழிந்து வைத்துக் கொண்டு, நல்லெண்ணெய்

½அவுன்சு ஒரு கரண்டியிலிட்டுக் கொதிக்க வைத்து எடுத்து அதில் மேற்படி சாற்றைக் கலந்து குலுக்கி காலை தோறும் மூன்று நாள் இதன்படி செய்து கொடுக்கக் கழிச்சல்கள் யாவும் குணமாகும்.

குறிப்பு :- குழந்தைகளுக்குண்டாம் கணை, சீதபேதி, இவற்றைப் பற்றிய பரிகாரம் கடுப்புக் கழிச்சலில் காணவும். (2) ஒரு வருடத்திற்குட்பட்ட சிசுக்களுக்கு அபின், கஞ்சா இவை சேர்ந்த மருந்துகள் கொடுக்கலாகா! கவனிக்கவும்.

கிராணி ஹரம் (சதகுலோகம்)

"ஆயிலும் புங்கும் பொடுதலைக் காயு
மழிஞ்சியுங் குழம்பு மோர் வசம்பும்
அதிநவச்சாரஞ் சத்தியின் சாரம்
ஆகிய நல்லவச்சாரந்
தீயிலும் பெரிய சித்திரமூலந்
திரிகடு சிறிய மூலகமுஞ்
செவ்வியம் பற்பாடகங் கருவேம்பு
சீரகங் காய மூக்குரட்டை
பாயிலு முட்கா வேளை காவட்டம்
பருகிய புல் நல்வேளை
பகர் புளியாரை யிந்து கல்லுப்பு
பாகுகாய்ச்சுப்பு பொட்டிலுப்பு
சாயினுங் கருத்தவுப்பு சாரணையுஞ்
சாருமாவாரை தக்கோலந்
தாவு வெங்காரமாரையி [illegible]லையுஞ்
சாற்றினர் கிராணியின் ஹரமே.

ஆயில், புங்கு, பொடுதலைக்காய், அழிஞ்சி வேர்ப்பட்டை, குழம்புமோர், வசம்பு, நவச்சாரம், சத்திச்சாரம், சித்திரமூலம், திரிகடுகு, சிறுமூலம், செவ்வியம், பற்பாடகம், கருவேம்பு இலை, சீரகம், பெருங்காயம், மூக்கரட்டை, முட்காவேளை, காவட்டம் புல், நல்வேளை, புளியாரை, இந்துப்பு, கல்லுப்பு, காய்ச்சுப்பு, பொட்டிலுப்பு, கருத்தவுப்பு, சாரணை, ஆவாரை, தக்கோலம், வெங்காரம், ஆரையினிலை இவை யாவும் கிராணிக் கழிச்சலைத் தீர்க்கக் கூடியவையாம்.

17. கிராணிக்கு நாகபற்பம் (யூகிமுனி வாத வைத்திய விளக்கம் 200-ஏட்டுப்பிரதி)

அதில் 1 முதல் 2 குன்றி எடை, காலை, மாலை தேனிலுண்ணக் கிராணி வகை எல்லாம் குணமாகும். இருமுறைகள் கூறியுள்ளார்.

(1) "சோரமது பலமொன்று சூட்டுரசமெடை
சேர்த்துத் துடியா யாட்டி
வீரமது காலிட்டு அரைபாணி
புடமிடவே வெளுத்து நிற்கும்
சீரதாய்ப் பணவெடைதான் தேனிலுண்ணக்
கிராணிவகை எல்லாம் போகும்
ஓரணைதா னெருதுக்கு ஒத்தை
எருதுமு தாலுமுத வாதாமே."

விளக்கம்:- ஈயமும் ரசமும் வகைக்கு ஒரு பலமெடுத்து முறைப்படி தொந்தித்து, வீரம் ¼ பலம் கூட்டி நீர் விட்டரைத்து (வெடியுப்பு திராவகம் விட்டரைக்கலாம்.) வில்லை தட்டிப் புடமிட நீறிப்போம் என்கிறார். அதனை உபயோகிக்கக் கிராணி தீரும்.

(2) திருடர் தாம்ப லமொன்று
திடமான சூதமெடை சேர்த்துருக்கு
வருடியே புட்டாகும் வளையலுப்பு
அரைத்துமேல் கவசங் கட்டி
நெருடியே புடமிட்டு நேராக்கு
கிராணி எல்லாம் நேர்ந்து போகும்
குடருருக்கு கொக்கு நிறங்குணங்
காணாப் பாவனையாங் கொள்கையாமே!

நாகமும் சூதமும் வகைக்கு ஒரு பலமெடுத்து முறைப்படி தொந்தித்து, அதற்கு வளையலுப்பு நீர் விட்டரைத்துக் கவசங் கட்டிப் புடமிட்டு முன்போல் கொடுக்க கிராணி வகை எல்லாம் போம் என்கிறார்.

29. கடுப்புக் கழிச்சல்

பரிகாரம்.

இந்நோயில் உணவாதிச் செயல்களால் அழல் குற்றமிகுந்து கீழ்நோக்குக்காலைத் தூண்டிக் கடுப்புடன் கழிச்சலை உண்டாக்கும். அழல் மிகுதியால் ரத்தம் கேடடையும். உடல் மெலியும். ஐயத்தைத் தூண்டும். அழல் ஐயக் கலப்பால் குடலில் புண் உண்டாகிச் சீதம், ரத்தம் இவை வெளிப்படும். வாயு மிகுதியால் வயிற்றுவலி, கடுப்பு முதலிய குறி குணங்களையும், அப்பால் முக்குற்றங்களும் கேடடைந்து முப்பிணி குறி குணங்களையும் உண்டாக்கும். நாடிகள் தளர்ச்சி அடையும். ஆதலால் வைத்தியர் கவனிக்க வேண்டியது யாதெனில், கேடடைந்த அழல் குற்றம், அழல் ஐயக் குற்றம், இவைகளைத் தன்னிலைப்படுத்தவும், மிகுதியடைந்த வாயுவையும் தன்னிலைப்படுத்தக் கூடியதுமான மருந்துகள், ஆகாரங்கள் இவற்றைப் பிரயோகிக்க வேண்டும். குடற் புண்ணை ஆற்றி இரத்தம், சீதம் நிற்பதற்கும், வயிற்றிலுண்டாகும் வலி, கடுப்பு இவற்றைப் போக்குவதற்கும் ஏற்றதாகப் பரிகாரம் செய்தல் வேண்டும்.

சித்த மருத்துவத்தில் கூறியுள்ள பரிகார முறைகளாவன:-

1. தன்னிலை மிகுந்த அழல் குற்றத்தைத் தன்னிலைப் படுத்தும் பொருட்டு முதலில் சிற்றாமணக் கெண்ணெயில் சிறிது பால் கலந்து ஒரு வேளை கொடுக்கலாமென்றும்; அல்லது 2. சிற்றாமணக்கெண்ணெயில் சிறிது பிஞ்சுக் கடுக்காய்ப் பொடி, மாசிக்காய்ப் பொடி இவற்றைக் கூட்டிக் கொடுக்கலாமெனவும் கூறியுள்ளார். 3. சோற்றில் வேக வைத்தெடுத்த சாதிக்காய் ஒன்று, சுத்தி செய்த பூரம் ஒரு வராகனெடை, சிற்றாமணக்கெண்ணெய் பலம் மூன்று இம்மூன்றும் கூட்டி மெழுகு போலரைத்து வேளைக்கு ஒரு தேக்கரண்டியளவு கொடுக்க ஆரம்பத்தில் கழிச்சல் உண்டாக்கி அப்பால் கழிச்சல் நின்றுவிடும்.

குறிப்பு:- பூரம் கடுப்புக் கழிச்சலில் சேர்க்கலாம் என்பது ஒரு

சந்தேகம், ஒருக்கால் குடற் புண் ஆற்றுவதற்காக இதனைச் சிற்றாமணக்கெண்ணெயிற் சேர்த்துக் கொடுத்திருக்கலாமென்று எண்ணினாலும் சிற்றாமணக் கெண்ணெயின் அளவு சரியாகச் சித்த மருத்துவத்தில் பொருளில் குறிக்கப்படவில்லை. பூரம் சேர்ந்த ஆமணக்கெண்ணெய் கடுப்புக் கழிச்சலுக்குக் கொடுத்தால் கழிச்சலும் கடுப்பும் அதிகமாகுமென்பது என் கருத்து. சாதிக்காய் சேர்ந்திருப்பதால் பூரத்தின் செய்கையின் அளவை மீற விடாது. குடற் புண்ணை ஆற்றிக் கடுப்பையும் கழிச்சலையும் குறைத்து விடும். எனினும் அனுபவித்தவர்களுக்கு மட்டுமே இதன் குணம் தெரிய வரும். ஆமணக்கெண்ணெய் மூன்று பலம் போட்டு இருப்பது என்னுடைய உத்தேசம். பாவில் கற்பூரம் என்று இருக்கிறது. நாட்டுக் கற்பூரம் இதில் சேர்க்கவேண்டியது என அபிப்பிராயம். இரச கற்பூரம் அல்ல. அன்றியும் சிற்றாமணக்கெண்ணெய் பலம் திரி என்றே கூறப்பட்டிருக்கிறது. பாவில் கூறியிருப்பதைக் கவனித்து இம்முறையைக் கையாளும்படி சொல்ல விரும்புகிறேன்.

"சிற்றா மணக் கெண்ணெய் பலந்திரி
கற்பூரம் விராக னொன்று
சற்றே சோற்றிற்றான வித்த சாதிக்
காயு மொன்றாகும்
இவை எல்லாந் தானே எண்ணெயிட்டுத்
தானரைத்து
கொற்றே வேளைக் கொரு கரண்டி கொடுப்பாய்
சீத பேதி போமே."

என்பதினால் சரியான முறையை இதிலிருந்து தெரியலாம்.

குடிநீர் வகை.

1. அத்தியிளம் பிஞ்சு, வேலம் பிஞ்சு, காட்டு (மா) மரப்பட்டை, சிறுசெருப்படை இவை வகைக்கு ஒரு பிடி கூட்டி நெகிழஅரைத்து வாழைத் தண்டின் சாற்றில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க வயிற்றுக் கடுப்புடன் கூடிய சீதக் கழிச்சல் போம் எனச் சித்த மருத்துவம் கூறுகிறது. இந்தக் குடிநீரை பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல், இவற்றில் நாம் எழுதியிருக்கிறோம். அந்தவிடத்தில் கோவைப் பிஞ்சு என்று கூறியிருப்பது (அரையன்-விரோதி)-

இங்கே வேலம்பிஞ்சு எனக் கூறப்பட்டிருக்கிறது. உந்தயிடங்களில் குடிநீராக அடுப்பேற்றிக் காய்ச்சி நான்கிலொன்றாக வற்ற வைத்துக் காலை, மாலை கொடுக்கும்படி சொல்லியிருக்கிறது. இது ஒரு வகையில் சாப்பிடச் சுலபமாகவிருக்கும். ஆனால் சித்த மருத்துவத்தில் கூறியது போல் வகைக்கு ஒரு பிடி எடுத்து அரைத்து வாழைக் கிழங்குச் சாற்றில் கலக்கி வடிகட்டிப் பச்சையாக காலை, மாலை கொடுப்பது என்றால் மருந்தைச் சாப்பிடுவது மிகவும் பிரயாசையாக இருக்கும். *இதற்குரிய மேற்கோள் பெருங்கழிச்சல் இயல் 27-ல் காணலாம்.*

2. மாதுளை இளம்பிஞ்சு, வாழைப்பூக் குருத்து, விடதாரிக் கொழுந்து, கோரைக்கிழங்கு, பெருமரப்பட்டை இவை வகைக்குச் சம எடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு ஆழாக்களவு காலை, மாலை கொடுக்கச் சீதபேதி குணமாம்.

3. வில்வப்பழத்தின் ஓடு, குடசப்பாலைப் பட்டை, வெட்பாலையரிசி, இலவங்கப்பட்டை, அதிவிடயம், சாதிக்காய், சாதிப் பத்திரி இவை வகைக்குச் சம எடை எடுத்து முறைப்படி குடிநீராக்கி ½ முதல் ஒரு ஆழாக்கு குடிநீர் காலை, மாலை கொடுக்க வயிற்றுக் கடுப்பும் கழிச்சலும் தீரும்.

4. விளாங்காயின் சதை, பிஞ்சு, பெருமரப்பட்டை, அதிவிடயம் இவை சமஎடை எடுத்து முறைப்படி குடிநீரிட்டு முன்போல் காலை, மாலை ½ முதல் ஒரு ஆழாக்கு வீதம் கொடுக்க சீதபேதி குணமாம்.

பொடி வகைகள்

1. குடசப்பாலைப் பட்டை, வெட்பாலையரிசி, மாதுளையோடு வெந்தயம், விளாம்பிசின் உலர்ந்த வில்வப் பழச்சதை இவை வகைக்கு ஒரு பலம் வீதம் எடுத்து இடித்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து, அத்துடன் அபின் இரண்டு குன்றி சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு காலை, மாலை ½ முதல் ஒரு வராகனெடை வீதம் கொடுக்கச் சீதபேதி மற்றுமுள்ள கழிச்சல்களும் தீரும்.

2. இலவம் பிசின், குடசப்பாலைப் பிசின், அதிவிடயம், சிறு நாகப்பூ சாதிக்காய், சாதிப்பத்திரி, காசுக்கட்டி இவை வகைக்கு ஒரு பலம் எடுத்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து, அத்துடன் சுத்தி செய்த கஞ்சாப் பொடி பலம் கால் கூட்டிக் கலந்து வைத்துக்கொண்டு இதில் ½ சிட்டிகையளவு காலை, மாலை கொடுக்க கடுப்புக் கழிச்சல் குணமாகும். (This is also a good receipe)

1.கட்டுவாதி மாத்திரை (*குழந்தைகளுக்கு*): *பார்க்க: இயல்* 27,28

ஒரு சாதிக்காயைத் துளைத்து அதனுள் ஒரு குன்றி எடை அபினியை அடைத்து மூடி ஓர் இரும்புக் கதிரில் குத்தி தேனில் தோய்த்து நெய் விளக்கில் சுட்டு நன்றாய் வெந்தபின் கல்வத்திலிட்டு அரைத்துக் குன்றியளவு மாத்திரை உருட்டி வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுக்கக் குணமாம்.

குறிப்பு:- இம் முறையைக் கட்டுவாதி மாத்திரை.எண்1 (*குழந்தைகளுக்கு*) என்பதான பெருங்கழிச்சல் நோயில் *இயல்* 27-ல் கூறப்பட்டிருக்கிறது. அதன்படி செய்து உபயோகித்தால் நல்ல பலனளிக்கும்.

2. வச்சிர கபாட மாத்திரை:-

இதில் ஒன்று காலை, மாலை தேன் அல்லது வேறு அனுபானங்களில் கொடுக்கக் கழிச்சல்கள் யாவும் நிற்கும். (சி.ம.)

3. ஊழி மாத்திரை:-

இதில் ஒன்று காலை, மாலை தக்க துணை மருந்துடன் கொடுக்க ஊழி, அதிசாரம், கிரகணி இவற்றைக் குணப்படுத்தும். ஆனால் கடுப்புக் கழிச்சலில் கொடுக்கலாமென சித்த மருத்துவம் கூறுகிறது.

(சி.வை. திரட்டு)

பற்பச் செந்தூரங்கள்.

1.பவளபற்பம் ஒரு குன்றி, இலிங்கத்துவர் பத்து குன்றி இவ்விரண்டையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் காலை, மாலை கொடுத்து முன்கூறிய குடிநீர்களில் ஒன்றை வழங்கலாம்.

2. நாகபற்பம், வெள்ளி பற்பம், சிலாசத்து பற்பம், நத்தைப் பற்பம், அன்னபேதிச் செந்தூரம், பவள பற்பம், இவை வகைக்கு ஒரு குன்றி வீதம் ஒன்றாய்க் கலந்து வெண்ணெயில் காலை, மாலை கொடுக்கக் கடுப்புக் கழிச்சல் குணமாகும். ஒருக்கால் நோய் கடுமையில்லாது இருந்தால் மேற்கண்ட பற்பச் செந்தூரங்களைத் தனித்தும், சிலவற்றைக் கலந்தும் வெண்ணெயில் கொடுக்கலாம். (சி.ம.)

உணவு

கடுப்புக்கழிச்சலுள்ளமட்டும் காரம் சேர்ந்த உணவுகள் கூடா, சவ்வரிசி, கூவைக் கிழங்குமாவு இவற்றின் கஞ்சியாகிலும், மணக்கத்தை, கார் குருவை இவற்றின் அரிசிக் கஞ்சியாகிலும் கொடுக்கலாம். இருமுறை வடித்த சோறும் கொடுக்கலாம். வாழைப்பிஞ்சு, அத்தியிளம்பிஞ்சு, அவரைப் பிஞ்சு, இவற்றைக் காரமில்லாமல் கொத்துமல்லி சேர்த்து சமைத்துக் கொடுக்கலாம். அறுகீரை, பொன்னாங்காணி, மணத்தக்காளிக் கீரை முதலியன உபயோகமாகும்.

வேறு சில பரிகாரங்கள் அனுபவ முறைகள்.

1. குழந்தைகளாயிருப்பின்

நத்தைச் சூரியிலை ஒரு பிடி அல்லது ஒரு குத்து, ஏழு கிராம்பு சேர்த்து ஒரு மட்சட்டியில் வதக்கும்போது வீசம்படி முலைப்பால் தெளித்து நன்றாய் வதக்கிச்சாறு பிழிந்து காலை, மாலை, மறுநாள் காலையில் ஒரு வேளை இவ்விதமாக மூன்று வேளை கொடுக்க குழந்தைகளுக்குண்டாம் இரத்தம், சீதம், கடுப்பு முதலியன குணமாகும். கைகண்ட அனுபவமான முறை.

2. குழந்தைகளில் பேதி அதிகமாக இருப்பின் வாய்க்கால் சடைச்சியிலை ஒரு பிடியில், சீரகமும், ஈரவெங்காயம் ஒரு துண்டும் சேர்த்துத் தட்டிச் சாறு பிழிந்து ஒரு கரண்டியில் நல்லெண்ணெய் அரை அவுன்சு விட்டுக் கொதிக்க வைத்து வெளியிலெடுத்து அந்தச் சாற்றை அதில் கலந்து குலுக்கி 1 முதல் 2 பாலாடையளவு காலை, தோறும் மூன்று நாட்கள் கொடுக்க சகல கழிச்சல்களும் மாந்தம், பிரளி இவை குணமாகும். இதனை "எரி எண்ணெய் " என்பர்.

3. கசகசா சிறிது எடுத்து அரைத்து நீரில் கலக்கிப் பால் பிழிந்து ஒரு பாலாடையளவில் சாதிக்காய், மாசிக்காய் இவை வகைக்கு ஒரு சிட்டிகை கலந்து காலை, மாலை கொடுக்க மூன்று வேளையில் குழந்தைகளின் இரத்தம், சீதம், கடுப்பு, சூதம் வெளித்தள்ளல் இவை குணமாகும்.

4. கட்டுவாதி மாத்திரை(*குழந்தைகளுக்கு*): *பார்க்க: இயல்* 27,28.

அதாவது ஒரு சாதிக்காயில் துவாரம் போட்டு அபின் ஒரு குன்றி எடை பொதிந்து வாயை மூடி மஞ்சளரைத்துக் கவசங்கட்டி உலர்த்தி அவிப்புடம் போட்டெடுத்து கவசம்பிரித்து வெந்தசாதிக்காயின் எடைக்குச் சமன் பேரீச்சங்காய்ப் பொடி சேர்த்து முலைப்பால் விட்டு அரைத்து அரை குன்றி அல்லது பயறளவு மாத்திரையாக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு காலை, மாலை, ஒரு மாத்திரை வீதம் தேன் அல்லது முலைப்பாலில் கொடுக்க எல்லா வகைக் கழிச்சலும் குணமாகும். (புலிப்பாணி 500)

5. வெந்தயத்தைச் சிறிது சிவக்க வறுத்து கால்படி நீர்விட்டு, சித்திரப், பாலாடை ஒருபிடி அதில் போட்டு வற்றக் காய்ச்சி ஒரு பாலாடை அளவு குடிநீர் வடிகட்டி காலை, மாலை குழந்தைகளுக்குப் புகட்ட அவர்களுக்குண்டாகும் சீதபேதி குணமாகும்.

6. சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் வயிற்றுக்கடுப்பு ஏற்பட்டால், கடுக்காய்ப்பூச் சூரணம் (கற்கடக சிங்கிச் சூரணம் வறுத்துப் பொடித்தது) மூவிரல் கொண்ட அளவு காலை, மாலை வெண்ணெயில் கொடுக்க இரத்தக் கழிச்சல் குணமாகும்.

7. காசுக்கட்டி சூரணம் கலவை:-

இதில் 5 முதல் 10 குன்றிமணி அளவு காலை, மாலை நெய், வெண்ணெய், சர்க்கரை இவற்றிலொன்றில் கொடுக்க சீதபேதி, இரத்த பேதி, கடுப்பு இவை குணமாகும்.

செய்முறை:-

காய்ச்சுக்கட்டி(வெள்ளை அல்லது சிவப்பு) 3 பங்கு, இலவங்கப் பட்டை 3 பங்கு, இலவங்கம் 2 பங்கு, சாதிக்காய் ஒரு பங்கு இவற்றைப் பொடித்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு மேற்கூறியபடி கொடுக்கக் குணமாகும்.

குறிப்பு:- எலுமிச்சம் பழத்தைத் தணலில் வெதுப்பி அறுத்துச் சாறு பிழிந்து அதில் க்லிந்தும் இதனைக் கொடுக்கலாம்.

7. மதகஜ கண்டீரவ மாத்திரை:-

இதில் ஒன்று தக்க அனுபானத்தில் கொடுக்க கிராணி, அதிசாரம், வயிற்றுச் சூலை, (வயிற்றுக் கடுப்பு) இவை தீரும். (சி.வை. திரட்டு)

8. கட்டுவாதி லேகியம்:-

சுண்டைக் காயளவு காலை தோறும் மூன்று நாள் கொடுக்க சீதக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், மந்தம், அசீரணம் இவை குணமாகும். (செய்முறை:இயல் 27-ல் காண்க)

9. வாழைப்பழம் ஒன்றை நீட்ட வசத்தில் கீறி ஒரு குன்றி அபினை நீட்டி அதனுள் வைத்து நூலால் கட்டி கும்பிச் சாம்பலில் அவிப்புடம் போட்டெடுத்து அதனைப் பெரியவர்களுக்குக் கொடுக்க உடனே சீதபேதி, கடுப்பு இவை நின்று போம்.(அனுபவ முறை)

10. ஆசனக் கடுப்பு, அதிகமிருப்பின், மலமில்லாது சீதம் மட்டிலும் போய்க் கொண்டிருப்பின் மலை வாழைப்பழம் 3 உரித்து பழத்தை ஒரு

பாத்திரத்திலிட்டு, வெள்ளைச்சீனி (மாவுச்சீனி) சிறிதும், நயம்பசு நெய் 4 தேக்கரண்டியளவு சேர்த்துப் பிசைந்து சாப்பிட ஒரே வேளையில் கடுப்பும், சீதமும் நின்று விடும். மலம் ஒழுங்காக வெளியாகும். இது அனுபவ முறை கைகண்ட பக்குவம்.

ii. மாதுளம் பிஞ்சு அல்லது மங்குஸ்தான் தோடு தக்க அளவு எடுத்து காலை, மாலை தயிரில் அரைத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்க மூன்று நாட்களில் வயிற்றுக் கடுப்பு குணமாகும்.

குறிப்பு:- எவ்வகையான கழிச்சல்களின் காரணமாக கால் கைகள், உடம்பு இவை வீங்கினாலும், கழிச்சலைப் போக்கி ஆகாரத்தைச் சீர்படுத்திக் கொடுப்பதின் மூலம் உடம்பு தைரியமும், இரத்த விருத்தியும், உடல் வன்மையுமுண்டாகப் பிரயாசைப்பட வேண்டும். வீக்கம் தானே வற்றிப்போம். மற்ற படிக்கு வீக்கத்தைக் குணமாக்க வேண்டிய நீர், எரு பிரிக்கக்கூடிய மருந்துகளைக் கழிச்சல் உள்ள காலத்தில் கொடுத்தல் நன்றன்று. கழிச்சல், பாண்டு, கழிச்சல் சோபையில் வெகு சாக்கிரதையோடு பரிகாரம் செய்தல் வேண்டும். உணவுகளைச் சீரணிக்கக் கூடியதும் நல்ல சத்துள்ளதாகவும் இருத்தல் நலம்.

12. ஆவாரயிலையை எலுமிச்சங்காயளவு அரைத்து வெண்ணெயில் குழப்பி அல்லது செந்தவுட்டில் புரட்டி ஒரே வேளை விழுங்கச் செய்ய வயிற்றுளைவு நின்று போம்.

மேற்கோள். (ஏட்டுப் பிரதி.)

1. வயிற்றுளைச்சலான பேர்க்குப்
புராதன மாயாவாரை யிலை
எலுமிச்சங்காய் போலரைத்துப்
பச்சை வெண்ணெயில் குழைத்
துள்ளூட்டிடே....

2. ஊட்டுவாய் செந்தவுட்டில் புரட்டி
ஒருவருக்குஞ் சொல்லாதே தீர்ந்து போகும்"

13. தீராத வயிற்றுக் கடுப்பாக இருந்தால், நாக பற்பம், நாகச் செந்தூரம், மிருதார்சிங்கி பற்பம் இவைகளிலொன்றைத் தேனிலாவது கட்டுவாதி லேகியத்துடனாவது அனுபானித்து காலை, மாலை கொடுக்க விரைவில் குணமாகும். (Preparations refer to under chapter 27 and 28 for Naga parpam Naga chenduram in சி.வை. திரட்டு and Mirudarsingi parpam see below)

14. In very stubborn cases, please give the following recepies.

a. Pavala parpam compound (See below P. S.S.M.M Parpam) 2 pinches, Kasukatti churnam compound 5 pinches fiet pulvis one to be given well mixed with burnt up lime fruit juice three times a day.

b. If necessary, side by side give a compound of kattuvathi mathirai or kapada mathirai or Mathagaja kandeeravam one pill in suitable dose well powdered singi churnam compound 2 pinches, Lingathuvar 2 pinches, and Annabedhi chenduram 2 pinches, well mixed for a dose and to be given with honey twice a day.

c. Further more, if necessary well prepared Naga parpam one kundri weight may be given with honey twice a day side by side. Any of these a, b, and c may be given or all the three receipies may be employed in resisting and stubborn cases.

Recepies which are in use in the Siddha Research Laboratory are shown below:-

DYSENTERY CURE POWDER NO.1 (Special) (S.R. Pharma):-

1. Grahani kapada churnam No. 1 or Seethabedi churnam (which is otherwise named Grahani Kabada churnam) 1 Part.
2. Singi churnam compound ... ½ to ¾ part
3. Naga baspam No. 1 ... ¼ th part

These three ingredients are taken in the above proportions, Mixed well and bottled up.

Dose:- 5 to 20 grains according to the age may be given well mixed with honey 2 or 3 times a day Curd, buttermilk and Sago conjee may be allowed.

Uses:-This gives excellent results in cases of Dysentery and colitis etc.

2. DYSENTERY CURE POWDER NO.2 (Special) (S.R. Pharma)

1. Grahani kapada churnam No. 1 or Seethabedhichurnam (which is otherwise named Grahani kapada churnam No.11) — 1 Part. or 2 oz
2. Kasukatti churnam No.11 .... ½ to or 1 oz
3. Naga baspam No. 1 .... ¼ th or ½ oz

These three ingredients may be taken in the above proportions mixed well and preserved in a bottle.

Dose:- 5to 15 grains according to the age may be given well mixed with honey 2 or 3 times a day.

Diet: Curd, Buttermilk, Cow's Milk and Sago conjee may be allowed.

Uses: This compound also gives excellent results in Dysentery and colitis etc.

3.DYSENTERY CURE POWDER NO.3 (Special) (S.R. Pharma)

1.P.S.M.M Baspam	1 part or 2 ¼ ounces.
2.Naga baspam No.1	1/3 part or 6 drams.
3.Padikara chenduram or padigalinga chenduram	½ part or 9 drams

These three ingredients are taken in the above proprotion, mixed well and bottled up.

Dose:- 5 to 10 grains may be given 2 or 3 times a day well mixed burnt-lime fruit juice.

Diet:- Curd, buttermilk, cow's milk and sago conjee may be allowed.

Note:- A lime fruit is to be heated over fire gently and its juice is used here as anupanam. This is very useful when there is profuse blood, mucus, tenesmus and pain in Dysentery. This is another excellent medicine in Dysentery and colitis etc. It is also good to take in addition, pomegranate tender fruit (மாதுளம் பிஞ்சு) rubbed into a paste and mixed with curd morning and evening.

Another point to be noted in Dysentery is when there is much tenesmus and pain it is good to take a mixture of plantain fruits (2 or 3 மலைப்பழம்) White Sugar and 3 to 4 teaspoonful of cow's ghee-all three ingredients being well mixed together once a day. This compound abruptly stops unbearable tenesmus and pain. This is our Lab experience.

4. DYSENTERY CURE POWDER NO.4 (Special) (S.R. Pharma)

1. Annabedhi chenduram	1 part or 2 oz
2. Padikara chenduram or padigalinga chenduram	1 part or 2 oz
3. Kasikatti Churnam compound or Grahani kapada churnam No.1,	2 parts or 4 oz

These three ingredients may be taken in the above proportion mixed well and bottled up.

Dose:- 5 to 10 grains may be given well mixed with honey 2 or 3 times a day. This medicine stops blood and mucus in dysentery and Colitis.

Diet:- Is the same as mentioned under Dysentery cure powder No. 1 to 3

5. DYSENTERY CURE POWDER NO V *(Special)* (S.R. Pharma)

1.Mangusthan odu churnam	1 part or 2 oz
2.Kasikatti churnam Co	1 part or 2 oz
3.Naga baspam compound or Naga baspam No.1	1/5th part or 3 drams

Mixed well and bottled up.

Dose:- 5 to 20 grains to be taken two or 3 times a day well mixed with curd or honey or butter.

Uses:- Blood, Mucus in the stool and tenesmus in Dysentry are relieved rather quickly.

6.DYSENTERY CURE POWDER NO. VI (Special) (S.R. Pharma)

1. Naga baspam	1 part or 1 oz.
2. Nathai baspam	2 part or 2 oz.
3. Grahani kapada churnam	3 parts or 3 oz

Mixed well and bottled up.

Dose:- 5 to 10 grains to be given with honey 2 or 3 times a day for children the dose may be reduced according to the age.

Uses:- Dysentery, Diarrhoea and colitis are cured.

7. MIRUDAR SINGI BASPAM or **SINGI PADIKA BASPAM** (S.R. Pharma)

Mirudar singi	1 part or 10 tolas
Padikaram	3 parts or 30 tolas.

These two ingredients are powdered, mixed and rubbed in a kalvam with kuppai meni leaves juice for 1 or 2 days. While it is of semisolid waxy consisteny it is placed in a pair of suitable agals, covered, immediately seven layers of clay cloth are made to the junction of the agals, dried and putam is applied in a pit in an air tight compartment with about 50 to 60 vratties. It becomes a fine white baspam even after the first putam. Sometimes it may not be properly burnt and the colour may be blackish and in that case one more putam may be necessary by rubbing with the same meni leaves juice.

Dose:- 1 to 4 grains may be given with cow's butter or ghee or honey or with any other suitable anupanams.

Uses:- Dysentery, Diarrhoea, Bleeding piles, Fistula in ano, Urinary Fistula, skin diseases, Vranam, Gonorrhoea, Leucorrhoea, and Gleet are cured.

NF. This preparation is also done in the proportion of mirudarsingi one part and padikaram 2 parts. Other details are the same as that mentioned above. Dose, Anupanams and uses are the same.

8. P.S.M.M.BASPAM COMPOUND NO.1 OR SARVA NOI NIVARANI BASPAM (S.R. Pharma)

1. Pavala baspam	of each equal parts.
2. Karpura silajathu baspam	
3. Kalaiman kombu (Sringi) baspam	
4. Muthu chippi baspam	

These are well mixed and rubbed with Adathodai leaves juice for 2 days. Villai is made, enclosed in a rubbed mass of Adathodai leaves dried and subjected to putam with 300 *varatties*. On being cooled it is carefully taken out, powdered and bottled up.

Dose:- 2 to 5 grains may be taken well mixed with honey or butter or ghee or it may be filled in No.2 size capsules and swallowed one capsule twice a day.

Uses:- All lung lesions, fever and peripheral neuritis are cured, It may be given as an Alternative medicine and corrective agent in almost all diseases including mineral and metallic medicinal administraion. It relieves cough of all kinds. General burning sensation of the body and extremities is also relieved.

Note:- 1. This baspam can be given to one and all diseases provisionally until the diseases is correctly diagnosed and special medicines are chosen

2. Special preparation of Pavala baspam maankombu baspam and karpurasilajathu baspam for P.S.M.M Baspam is mentioned under P.S. M.M Baspam No. II

9. P.S.M.M. BASPAM COMPOUND NO II (OR SARVANOI NIVARANI BASPAM NO.II)

1. Pavala chunnam No. II 2. Silajathu baspam No. I 3. Sringi baspam No.II 4. Muthu chippi baspam 5. Sangu baspam 6. Palakarai baspam and 7. Amaiodu baspam No. III	of each 8 ounces or equal parts are taken

These seven ingredients are mixed in a kalvam, rubbed with Adathodai leaves juice for 1 or 2 days, villai is made in small cakes, dried, enclosed in Adathodai leaves rubbed mass, dried again and are subjected to open putam in a pit with about 300 varatties. On being cooled the baspam cakes are carefully secured, powdered and preserved.

Dose:- 2 to 4 grains may be given well mixed with honey or ghee or butter or cow's or Goat's milk or with other suitable anupanam twice a day. It may also be taken in Gelatin empty capsules No. 2 size.

Uses:- All lung lesions, fever and Neuritis including burning sensation of the extremities and all over the body are relieved. It can be used as an alterative medicine in almost all diseases and a corrective agent in mineral and metallic medicinal adminstrations.

Note:- This baspam can be safely given provisionally in almost all diseases until correct diagnosis is arrived at.

i. Pavala baspam for P.S. M.M baspam:

Kodi pavalam purified lb. 1 is taken, powdered, rubbed with kumari juice for 1 or two days, villai is made dried, enclosed in a rubbed mass of kandangkathiri samoolam and putam is applied as per rules. This baspam is better used in P.S.M.M baspam.

ii. Maankombu baspam for P.S.M.M baspam

Purified kalaimaan kombu lbs. 1 or more is kept in the midst of Agaththi keerai, water is added suitably, boiled and taken out. These maankombu pieces are enclosed in Adathodai leaves rubbed mass, dried and subjected to open putam. On being cooled it secured for use in the P.S.M.M baspam No. II

iii. Karpura Silajaththu baspam for P.S.M.M baspam:

Karpura silajaththu purified in Ilaneer lb. 1 or more is taken, kept soaked for one day in karchunna neer washed dried, kavacham is made with vendayam rubbed into a paste dried and subjected to open putam as per rules. This is used for P.S.M.M. baspam.

10. SINGI CHURNAM COMPOUND: (S.R. Pharma)

1. Lavangam Fried churnam	each in equal
2. Lavangapattai churnam	parts.
3. Kadukai poo churnam	

These three ingredients are mixed well and preserved in a bottle.

Doses and Uses are the same as that of Seethabedhi churnam or Grahani Kapada churnam No. II. However this compound powder is particularly useful in cases or Profuse mucus and blood in the stools. This may be mixed with burnt up Lime juice and licked up 2 or 3 times a day either alone or with Naga Parpam, Pavala parpam. Amai odu parpam and Sangu param.

11. KASHI KATTI CHURNAM COMPOUND: (S.R. Pharma)

1. White Kasikatti churnam or Red Kasikatti churnam	3 parts
2. Lavangapattai churnam	3 parts
3. Lavangam churnam	2 parts
4. Jathikai churnam	1 part

These four ingredients are mixed well and bottled up.

Dose and Uses are the same as that of Singi churnam compound. The churnam stops blood and mucus in the stools, Tenesmus and pain are relieved in Dysentery and colitis.

12. DYSENTRY VADAKAM: (இரத்த சீதக்கடுப்பு நிவாரணி) (S.R. Pharma)

Secure Madhulam pinju (பிஞ்சு மாதுளங்காய்)

Introduce in it Jathikai, Lavangam and Masikai of each one tola churnam. Next the Mathulam pinju is covered with a few layers of kavicloth, dried and subjected to Laguputam or Aviputam. The pinju should become well boiled and at the same time it should not become charred (காய் வேக வேண்டும் ஆனால் கருகக்கூடாது). This is then rubbed in a stone mortar (அம்மி) adding Kasakasa fried churnam one tola and made into Vadakams about a chundaikai size. When this is given with curd, Dysentry of all types is cured. Very promising and useful remedy.

Dose: One vadakam to be given 2 or 3 times a day with curd.

Uses: Raktha-kaduppu and Seetha kaduppu are cured.

30. ஊழி நோய்

பரிகாரம்.

பூமியிலுண்டாகும் தட்பவெப்ப வேற்றுமையாலும் உணவு, செயல் இவற்றின் வேற்றுமையாலும் முதன் முதலாக ஐயக் குற்றம் தன்னளவில் மிகுந்து பசித்தீயைக் குறைத்து உணவு செரியாமையை உண்டாக்கும். பிறகு வளி, தீக்குற்றங்களும் ஐயத்துடன் சேர்ந்து மேல் நோக்குகால், கீழ் நோக்குகால், பரவுகால் ஆகிய இம்மூன்றையும் எழச் செய்து இந்நோயைப் பிறப்பிக்கும். மேல் நோக்குகாலின், செயலால் வாந்தி, விக்கல், நீர் வேட்கை, நாவறட்சி, வயிறுப்பல் முதலிய குறிகுணங்களையும்; கீழ்நோக்குகாலின் செயலால் வியர்வை, வன்மை குன்றல், காது கேளாமை, கண்பஞ்சடைதல், கைகால் சில்லிடல், குறக்கு வலி ஆகிய இக்குறிகுணங்களையுமுண்டாக்கி முக்குற்றக் கேடால் முப்பிணி தொடர்ந்து கொல்லும்.

ஆதலால் மருத்துவன் கவனிக்க வேண்டியது யாதெனில் இந்நோயில் முதன்மையாய்க் கேடடைவது ஐயம். உடலை மாய்க்கச் செய்வது ஐயக்குற்றமேதான். ஆதலால் ஐயத்தைத் தன்னிலைப் படுத்தவும், ஐயப்பெருக்கால் கேடடைந்த பசித்தீயைத் தூண்டவுமான வழியைத் தேடுதல் வேண்டும். அத்துடன் அவ்வப்போது எழும் குறிகுணங்களையும் அறிந்து பரிகாரம் செய்து வரல் வேண்டும். தக்க மருந்துகளையும் உணவுகளையும் கொடுத்துக் கேடடைந்த குற்றங்களையும் வாயுக்களையும் தன்னிலைக்குக் கொண்டு வரல் வைத்தியனின் கடமையாகும்.

சித்த மருத்துவத்தில் கூறியுள்ள பரிகாரங்களாவன:-

குடிநீர் வகை

1.மிளகாய், தேங்காய்க்குடுமி, கம்பளமயிர் இவை வகைக்குச் சம எடை சட்டியிலிட்டுக் கறுக்கி எட்டு பங்கு நீர்விட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கி

வடித்து அரை ஆழாக்கு வீதம் ஒரு மணிக்கொரு தடவை வாந்தி, கழிச்சல் நிற்கும் வரை கொடுக்கவும்.

2. சித்திர மூல வேர்ப்பட்டை, இலவங்கப்பட்டை, இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்குப் பலம் ½ நீர் ஒரு படிவிட்டு நான்கிலொன்றாய்க் காய்ச்சி வடித்து ஒரு அவுன்சு வீதம் ஒரு மணிக்கு ஒரு தடவை கொடுக்கவும்.

3. தும்பைப்பூ, சிறுநாகப்பூ இலவங்கப்பட்டை, ஓமம், மிளகு, திப்பிலி, சுக்கு வகைக்குப் பலம் ஒன்று, நீர் படி ஒன்று விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்து ஒரு அவுன்சு வீதம் மூன்று மணிக்கொரு தடவை கொடுக்கலாம்.

4. **தும்பைக் கருக்குக் குடிநீர்:** (பிரசண்ட மாருதக் கருக்கு என்றும் பெயராகும்.)

தும்பை, குப்பைமேனி,தைவேளை இவை வகைக்கு ஒரு பிடி இலையை எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக வறுத்து அதைக் கொட்டி விட்டு அச்சட்டியில் வெந்தயம் ½ பலமிட்டு சிவக்க வறுத்து நீர் ஒரு படி விட்டு ஆழாக்காகக் காய்ச்சி வடித்து கால் ஆழாக்கு (2 அவுன்சு) வீதம் இரண்டு மணிக்கொரு தடவை கொடுக்க நீர் வேட்கை, பேதி, உப்புசம், வாந்தி, தாகம் இவை போம்.

கற்கம்

1. மிளகாய் (காம்பு நீக்கி) பலம் ஒன்று, கற்பூரம் ½ பலம் கூட்டி எலுமிச்சைப் பழச் சாற்றில் மெழுகு போலரைத்து இரண்டு மணிக்கொரு தடவை சுண்டைக்காயளவு கொடுக்கலாம்.

2. ஓமத் தீநீர்:

ஓமம் பலம்	40
இலவங்கம் பலம்	20
இலவங்கப்பட்டை பலம்	15
சிறு நாகப்பூ பலம்	15

மிளகு, திப்பிலி, சுக்கு இவை வகைக்குப் பலம்	15
சாதிக்காய் பலம்	10
சாதிப்பத்திரி பலம்	10

இவற்றை ஒன்றிரண்டாய்ப் பொடித்து எட்டுப்படி கள்ளில் கொட்டி ஒவ்வொரு நாளும் கலக்கிக் கொடுத்து மூன்றாம் நாள் தீநீர் இறங்கும் போது வடிவாயில் கஸ்தூரி, குங்குமப்பூ இவை வகைக்கு இரண்டு வராகனெடை, பச்சைக் கற்பூரம் பத்து வராகனெடை, கற்பூரம் இரண்டு, பலமுமிட்டுத் தீநீர் வடித்து 10 துளி முதல் 20 துளி வரை நீரில் கலந்து ஒரு மணிக்கொரு முறை கழிச்சல் நிற்கும் வரை கொடுக்கவும்.

பொடி வகைகள்

1. கபாடச் சூரணம்:-

இதன் முறை சித்த மருத்துவத்தில் குறிக்கப்படவில்லை, ஆயினும் இங்கு ஒரு முறையைத் குறிக்கிறேன். சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றி, நெல்லி, வாய்விடங்கம், கடுகுரோகணி, அதிவிடயம், ஓமம், குரோசாணி ஓமம், நற்சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, ஏலம், கோட்டம், அதிமதுரம், செங்கழுநீர்க்கிழங்கு, கிராம்பு, காசுக் கட்டி, வெள்ளுள்ளி, சாரணை வேர்ப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, வசம்பு ஆகிய இந்த இருபத்தைந்து சரக்குகளையும் வகைக்கு இரண்டு வராகனெடையாக நிறுத்துப் பொன்மேனியாக வறுத்து அதனுடன் ½ பலம் பொரித்த பெருங்காயத்தையும் கூட்டி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொள்க. வேளைக்கு மூவிரல் அளவு காலை, மாலை ஏழு நாள் கொடுக்கப் பல விதமான பேதி, கிராணிகளைப் போக்கும் என்கிறார். (*சிகிச்சாரத்ன தீபம்* Part 2) Please refer to S.R. Pharma also

2. தயிர் சுண்டிச் சூரணம்:

இதில் மூவிரல் அளவு காலை, மாலை வெந்நீரில் கொள்ள அசீரணபேதி தீரும்.

3. தாளிசாதிச் சூரணம்:

இது சித்த மருத்துவத்தில் கூறப்பட்டிருந்த போதிலும் வாந்தி பேதியை நிறுத்தும் குணம் இதற்கு இல்லை.

இம்மூன்று சூரணங்களையும் ஊழி நோய் ஆரம்ப நிலையில் கொடுக்கலாமென்கிறார்.

பெரு மருந்துகள்.

1. ஊழி மாத்திரை:

தக்க துணை மருந்துடன்ஒரு மாத்திரை வீதம் காலை, மாலை கொடுக்க ஊழி, அதிசாரம், கிராணி இவை தீரும்.

2. கபாட மாத்திரை:

இதில் ஒரு மாத்திரை காலை, மாலை மூன்று நாட்கள் தேனில் கொடுக்க கழிச்சலும், வாழைப்பூச்சாற்றில் கொடுக்கக் கிராணி, கடுப்புக் கழிச்சல், அதிசாரமும் தீரும். (சி.வை. திரட்டு)

3. சாமளா தேவி மாத்திரை:

இதில் ஒரு மாத்திரை வீதம் மூன்று மணிக்கொரு தடவை சாராயத்தில் கொடுக்க கொம்பன் என்ற ஊழியும், மஞ்சள் குடிநீர் அல்லது மஞ்சளை அரைத்துக் கலக்கித் தெளிவிறுத்த நீரில் கொடுக்க குடற்படுவன் என்ற ஊழியும், மிளகு வறுத்துச் செய்த குடிநீரில கொடுக்க அக்கரன் என்ற ஊழியும் குணமாகும் (சி.ம.)

செய்முறை:-

தூய்மையாக்கிய வீரம், பூரம், இலிங்கம், கற்பூரம்,சுக்கு, மிளகு, அபின், கஞ்சாப் பருப்பு, கஸ்தூரி, குங்குமப்பூ, வெடியுப்புச் சுண்ணம் இவை

வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் கூட்டி கஞ்சாக் குடிநீரில் 2 சாமமும், கொடி வேலி வேர்ப்பட்டைக் குடிநீரில் 4 சாமமும், ஊமத்தையிலைச் சாற்றில் 2 சாமமும், அரைத்து மிளகுப் பிரமாணம் மாத்திரைகள் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். முன் குறிப்பிட்டபடி இம் மாத்திரையைக் கொடுக்க அந்நோய்கள் குணமாகும்.

வெடியுப்புச் சுண்ணம் செய்முறை:-

எட்டாங் காய்ச்சல் வெடியுப்பு வேண்டிய அளவு எடுத்து சட்டியிலிட்டு வறுக்கும்போது, உப்பு இளகும் போது தலைப் பிள்ளை நஞ்சுக் கொடியை சிறு துண்டுகளாக்கி ஒவ்வொன்றாகக் கொடுத்து வறுக்க வெடியுப்பு சுண்ணமாகும்.

மெழுகு வகை

1. ஊழிக் கால மெழுகு:-

ஒரு குன்றி எடை மூன்று மணிக்கொரு தடவை நீரில் கொடுக்க வாந்தி, பேதி நிற்கும்.

கட்டு

1. பிரளயகால ருத்ரன் கட்டு என்று பெயர்:

செய்முறை:-

1. செம்பு, 2. பூரம், 3. தாளகம், 4. கற்பூரம் கூட்டிக் களங்காகச் செய்த ஊழிக் கட்டைத் தேனிலுரைத்து மூன்று மணிக்கொரு முறை கொடுக்கலாமெனச் சித்த மருத்துவம் கூறுகிறது. இது சரியான முறையல்ல. ஊழி நோய்க்குரிய கட்டு மல்ல.

சித்த வைத்திய திரட்டில் கூறியிருப்பதையும் இங்கு கவனிப்போம். செம்புப் பொடி, தாளகம் வகைக்கு ஒரு பங்கு, இரசக் கற்பூரம், வெங்காரம் வகைக்கு ¼ பங்கு, இவற்றைப் பொடித்து சீமை மூசையிலிட்டு சில்லிட்டு

சீலை செய்து கருமான் உலையிலிட்டு முசைப் பழுக்கும் படி ஊத செம்பு உருகியிருக்கும். இதைச் செங்கல்லில் பள்ளம் செய்து அதில் வார்க்க, ஆறவிட்டு எடுக்க செம்பு களங்காகியிருக்கும் என்கிறார். களங்கு என்றால் அது எளிதில் உடையக் கூடியதாக இருக்க வேணுமே? அது தான் இல்லை. நல்ல கெட்டியான செம்புக் கட்டியாக அமைகிறது. இது ஆபத்தான ஊழி நோய்க்கு ஏற்ற மருந்தாக உபயோகிக்க இயலாது. நான் இதனைச் செய்து பார்த்து ஏமாந்தவன், அதன் பின் கீழ்க்கண்ட முறைப்படி செய்யலாமென்பது என் அபிப்பிராயம். அது பற்றி கீழே காணவும்.

According to the Pharma copoeia of Siddha medicines that is being sold by Adyar Co-operative Pharmacy and Stores Ltd., This process consists of 5 ingredients such as 1. Copper filings, 2. Thalagam, 3. Rasakarpuram, 4. Venkaram and 5. Karpuram. where as Siddha Maruthuvam says 4 ingredients 1. Copper filings 2. Thalagam 3. Rasakarpuram, 4. karpuram. Siddha Vaidya Thirattu says 4 ingredients lightly different from the other two receipies namely 1. Copper filings, 2.Thalagam, 3. Rasakarpuram and Venkaram. Final outcome of the above process is only a metallic bonus.

My experience is as follows according to our research: The original stanzas run as follows according to Siddha Vaidaya Thirattu.

"செம்புடனே தாளகமுஞ் சேர்க்குமெடை வொவ்வொன்றாம்
வெம்பு மிருபூரம் வெங்காரம்- செம்பெடைக்கு
காலாகக் கொண்டு கருமா னுலை யிட்டு
மேலாக வூதி யெடுமே"

"செய்த களங்கதனைத் தேனிலிழைத் தூட்ட
வெய்த விசூஷி விஷ சுரமும்-பய்யவதி
சாரச் சுரமுடனே தாவ சீர்ணச் சுரமும்
பாறுமே பேருரைக்கிற் பார்."

இருபூரம் என்பது இரசக்கற்பூரமும் சவ்வீரமும். சாதாரண கற்பூரம். இதில் பயன்படுவதில்லை.

திரிபூரம் என்பது இரச கற்பூரம், வீரம், இரசசெந்தூரம் ஆகிய மூன்றும் சேர்ந்ததாகும்.

The very selection of ingredients in the above three processes is wrong. It is not four ingredients but it is five ingredients such as 1. Copper filings 2. Thalagam of each one part 3. Rasakarpuram, 4. Shavviram and 5. Vengaram of each ¼ part.

These five ingredients are rubbed well into a nice powder as per rules, put in a mud crucible, the mouth covered with a lid and sealed. The crucible is placed in a furnace and blown well till the crucible becomes red hot. It is then taken out, allowed to cool, the resultant is now in a kalangu condition partly brittle. Next this resultant is weighed and powdered; ¼th part of Silver leaves and Vengkaram are added to it, All are rubbed together in the Kalvam into a fine powder, put in the crucible, covered, sealed and blown up in a furnace into red hot as before. When it is melted it is poured in a brick hollowed for the purpose. Now it becomes a suitable Kalangu which is preserved.

N.B:1. It is advisable to add for the second time Thalagam equal to the copper bonus and ¼th part of Rasakarpuram, Veeram, Silver leaves and Vengkaram before rubbing for the second time in the Kalvam. This is a matter for further research.

2. The addition of Silver leaves and Vengkaram which are added for the second burning and which are not mentioned in the above stanzas have been discovered from ancient manuscripts.

செந்தூரம்.

1. சண்ட மாருதச் செந்தூரம்:

½ குன்றியுடன் சிறிது கற்பூரமிட்டுக் கொளுத்தியவுடன் அதனைத் தேன் விட்டுக் குழைத்து மூன்று மணிக்கொரு தடவை கொடுத்து வர ஊழி நோய் குணமாம்.

குறிப்பு: சமனெடை கற்பூரம் சேர்த்து தேனில் குழைத்துக் கொடுத்தாலே போதுமானது.

ஒற்றடம்.

கை கால் சில்லிட்டால் கொள்ளு மாவுடன் மணல் கலந்து வறுத்து ஒற்றடமிட உடனே சூடுண்டாகும். குறக்கு வலி தீரும்; நாடிகள் சீர்ப்படும்.

மேற்பூச்சு

1. மெழுகுத் தைலத்தை உடல் முழுமையும் பூசி சூடு வரும் வரை தேய்க்கலாம். 2. அல்லது கொள்ளுமாவுடன் கற்பூரத்தைப் பொடித்துக் கூட்டி சூடுண்டாகும்படித் தேய்க்கவும்.

தனிமருந்துகள்

1. நீர்வேட்கைக்கு:

மண்புழு கொண்டுவந்து பாலில் போட்டு நன்றாய்க் கழுவி, அதைச் சட்டியிலிட்டு கருக்கி சிறிது நீர் விட்டுக் காய்ச்சி வடித்து அடிக்கடி கொடுக்கவும், 2. மணலைச் சட்டியிலிட்டு சிவக்க வறுத்து மணலைக் கொட்டி விட்டு அச்சட்டியில் நீர் விட்டுக் காய்ச்சி வடித்துக் கொடுக்கப் போம்

2. வெள்ளோக்காளத்திற்கு:

வால் மிளகு, எலுமிச்சம்பழத் தோல், வில்வ வேர்க்கட்டை இவை வகைக்குப் பலம் 2, நெல்லி ஈர்க்கு ஒரு பலம் கூட்டி, நீர் படி ஒன்று விட்டு நான்கிலொன்றாய் வற்றக்காய்ச்சி வடிகட்டி சிறிது சிறிதாய் அடிக்கடி கொடுத்து வர ஒக்காளம் போம்.

3. நீர்க்கட்டுக்கு:-

துடைப்பத்தின் ஊவாமுள் பலம் 2 சட்டியிலிட்டு இளம் வறுப்பாக வறுத்து அரைப்படி நீரிட்டு ஆழாக்காகக் காய்ச்சி வடித்து 1/2 ஆழாக்கு வீதம் காலை, மாலை இரு முறை கொடுக்க நீர்க்கட்டு போம்.

4. பற்று:

1.நீலிமருந்தை இழைத்து அதில் ஒரு சிட்டிகை வெடியுப்பு இட்டுக் குழைத்து அடிவயிற்றைச் சுற்றிலும் பூச நீரிழியும்.

2. பொறுக்கக் கூடியதாக சுடு நீர் ஒற்றடமிட்டு ஆண்குறியின் மீது ஊற்றியும் வர நீரிறங்கும்.

உணவு

நீர்வகையாகவும் எளிதில் செரிக்கச் கூடியதாகவும், நீர்க் கட்டைப் போக்கக் கூடியதாகவுமுள்ள உணவைக் கொள்ளல் வேண்டும். 1. சுக்கைக் கூட்டிய முடிக்கஞ்சி, பொரிக்கஞ்சி, பார்லிக்கஞ்சி, கூவைக்கிழங்கு மாக்கஞ்சி இவற்றைக் கொடுக்கலாம். நோய் மிகுதியாயுள்ள சமயம் அன்னசாரத் தெளிவு நீர் சிறிது சிறிதாகக் கொடுப்பதே மிகவும் நல்லது. வாந்தியும் கழிச்சலும் நின்ற பின் இருமுறை வடித்த சோறு கொடுக்கலாம். மெதுவாக உணவின் அளவையும் காய்கறி வகைகளையும் உடல் வன்மைக் கேற்றவாறு உயர்த்திக் கொண்டே போகலாம்.

இது வரைக்கும் சித்த மருத்துவத்தில் கூறியுள்ளதைச் சொல்லி வந்தோம். இதற்கு மேல் சில குறிப்பிட்ட பரிகார முறைகளைக் கீழே காணலாம்.

1. ஆரம்ப ஊழி நோய்:

முன்கூறியபடி தாளிசாதி வடகம், தயிர்சுண்டிச் சூரணம், கிரகணி கபாடச் சூரணம், கபாட மாத்திரை, மிளகாய்க் குடிநீர் ("ஊழியின் பேதிக்கு உண் மிளகாய் கறுக்கி நீர் நாழி விட்டெட்டொன்றாக்கி" என்பதினாலறிக) மிளகாய் மெழுகு (இயல் 27), ஊழி மாத்திரை, ஊழிகாலன் மெழுகு, சூடன் மெழுகு, சண்டமாருதச் செந்தூரம், அயவீரச் செந்தூரம் (கீழே காண்க.) இவற்றை ஒன்றன் பின் ஒன்றாக அவசரமும் அவசியத்திற்கும் ஏற்றாற்போலும், நோயின் தன்மை, நோயினனின் நிலைமையையும் அறிந்து தக்க அனுபானங்களில் கொடுத்து வரல் வேண்டும்.

இவற்றால் குணமில்லையானால் வாந்தி பேதி அதிகமாக உடம்பு

சில்லிட்டு கண் குழி விழுந்து, நாவறண்டு தொனி குறைந்து வியர்த்து நாடி தளர்ந்து குறக்கு வலி ஆகிய இக்குறி குணங்கள் ஏற்படுமானால்.

2. காடிகாரச்சொந்தூரம்:-

அரை குன்றி எடை, இதனுடன் சமன்சூடன் சேர்த்து தேனில் குழைத்து மூன்று மணிக்கொரு முறை கொடுக்க இரண்டு வேளை மருந்தில் மேற்கூறிய முப்பிணி குறிகுணங்கள் யாவும் குணமாகி நோயினன் தெளிவடைவான். சக்தியும் தைரியமும் உண்டாகும்.

3. கஸ்தூரி மெழுகு:

ஒரு குன்றி எடை, தேனில் 2 மணிக்கொரு தடவை கொடுக்க இரண்டே வேளையில் நாடிகள் வலுப்பெற்று நாவறட்சி, தாகம், விக்கல், வாந்தியாவும் குணமாகும்.

4. வாந்தி தாகம்:

இவை அதிகமிருப்பின் சாதிசம்பீரக்குழம்பு ஒரு குன்றி எடை அடிக்கடி நாவில் தடவி சப்பிச்சாப்பிட செய்யலாம். அல்லது வாலுகாஷ்டிகக் கஷாயம், பிரசண்டமாருதக் கறுக்கு, நாயுருவிக்குடி நீர் இவற்றிலேதேனும் ஒன்றைத் தக்க அளவில் 2 மணிக்கொரு தடவை கொடுத்து வரலாம். உடனே கஸ்தூரி மெழுகு தேனில் கொடுத்தல் நலம்.

உடம்பில் சூடு உண்டாக வேண்டுமானால்:

1. தைவேளை எண்ணெயை உடம்பெங்கும் தடவிப்போடலாம்.

2. செந்தவுடும் கோழிக்காரமும் பொடித்துச் சேர்த்து மோர் தெளித்து வறுத்து ஒற்றடமிடலாம்.

3. ஆகாரம்:

பொரி அரிசிக் கஞ்சித் தெளிவு அடிக்கடி கொடுக்கலாம். தண்ணீர் சிறுகச் சிறுக மிகுதியாகக் குடிக்கச் செய்வது மிகவும் நல்லது.

5. அசாத்திய நிலையில்:

இலிங்கக்கட்டு, பிரளயகாலருத்திரன் கட்டு, தாளகக்கட்டு, இரசக்கட்டு இவைகளிலொன்றைத் தேன் அல்லது முலைப்பாலில் உரைத்து இரண்டு மணிக்கொரு தடவை நாவில் தடவக் குணமாகும். கட்டுகள் சரியாகத் தயாரித்திருந்தால் நவீன மருத்துவ ஊசி மருந்துகளுக்கு மேல் நல்ல பயனளிக்கும், மேற்படி கட்டு மருந்துகளால் நாடிகள் முறுக்கடைந்து, பேதி நின்று, வாந்தி தாகம், சலவை, இவைகளெல்லாம் நீங்கி நோயாளி வன்மையுடன் குணமடைவான்.

6. சிறுநீர்:-

பேதி நிற்குமானால் தண்ணீர், பொரிக்கஞ்சித் தெளிவு இவை அருந்துவதால் சிறு நீர்தானே இறங்கும். பேதி நின்று, சிறு நீர் பிரியுமானால் நோய் குணமென்பது நிச்சயம். ஒருக்கால் நீர் இறங்கவில்லையானால் இளநீர் மட்டையைச் சீவிப் போட்டு வரகு வைக்கோலால் வாட்டி அந்நீரில் வெடியுப்புச்சுண்ணம், வெங்காரச்சுண்ணம் ஏதேனுமொன்று ஒரு குன்றி எடையும், கற்பூர சிலாசத்து பற்பம் எண் 2, 3 குன்றி எடையும், படிகார பற்பம் ஒரு குன்றியும் சேர்த்துக் கொடுக்க நீர் தாராளமாய் இறங்கும்.

குறிப்பு:- ஊழி நோயினின்றும் நோயினன் குணமாகிய பின்உணவாதிச் செயல்களில் மிகவும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்(See under உணவு)

2. "வாந்தியை நிறுத்த

வாலு காஷ்டிகக் குடிநீர்" (ஏட்டுப் பிரதி)

செய்முறை:-

மணல் ஒரு சிரங்கை, பனை ஓலை, மயிலிறகு, நாக்குப்பூச்சி (மண்புழு) ஆலம் கொழுந்து, அத்திக் கொழுந்து, இத்திக் கொழுந்து,

எலுமிச்சம்பழத்தோல் இவை ஒவ்வொன்றும் நிதானமாக எடுத்து ஒன்றன் பின் ஒன்றாய்ச் சட்டியிலிட்டுக் கறுக வறுத்து நீர் படி ஒன்று விட்டு அதிமதுரம், கோட்டம், அக்கராகாரம் வகைக்கு ஒரு துண்டு தட்டிப்போட்டு நான்கிலொன்றாய் வற்றவைத்து வடிகட்டி 2 முதல் 4 அவுன்சு வீதம் அடிக்கடி கொடுக்க வாந்தி, குமட்டல், விக்கல், நாவறட்சி, தாகம் இவை குணமாகும்.

1. நாயுருவிக் குடிநீர்: (ஏட்டுப் பிரதி)

செய்முறை:-

நாயுருவி, புளி ஈர்க்கு. முருங்கை ஈர்க்கு, மாவிலங்கம் பட்டை, சித்திர மூல வேர்ப்பட்டை , சிவனார் வேம்பு, எருக்கம்பூ, தென்னங் குரும்பை இவை வகைக்கு ஒரு பலம், நீர் படி நான்கு விட்டு எட்டிலொன்றாய் வற்றக் சாய்ச்சி வடிகட்டி 2 முதல் 4 அவுன்சு வீதம் மூன்று மணிக்கொரு தடவை கொடுக்கும் போது ஒரு குன்றி எடை கஸ்தூரி மெழுகு அல்லது அரிசி எடை நயம் கஸ்தூரி ஏதேனும் ஒன்று அத்துடன் கலந்து கொடுக்கலாம். தாகம், வாந்தி, விக்கல், நாவறட்சி, குமட்டல், வெள்ளோக்காளம், மயக்கம், தயக்கம், நாடி நடை தளரல் யாவும் குணமாகும்.

3. குறிப்பு: மேலே கூறியிருக்கும் "தும்பைக் கறுக்குக்குடி நீரே" "பிரசண்ட மாருதக் கறுக்கு" என்பர்.

இதனைக் கொடுக்கும்போது கஸ்தூரி மெழுகு அல்லது நயம் கஸ்தூரி சேர்த்துக் கொடுப்பது நலம். இதனால் முன் கூறிய குறிகுணங்கள் போம்.

4. சூடன் மெழுகு:-

செய்முறை:-

சூடன், மிளகு, சுக்கு, காயம், வெள்ளைப்பூண்டு இவை வகைக்குச் சமஎடை எடுத்து முறைப்படி பொடித்து ஒன்றாய்க் கலந்து தேன் விட்டரைத்து சிறு சுண்டைக்காயளவு மெழுகு காலை, மாலை தேனில் கலந்து சாப்பிட விஷபேதி, அதிசாரம், அசீரணம், சூதக வாயு இவை தீரும்.

5. விஷபேதிக்கு "அய வீரச் செந்தூரம்" (ஏட்டுப் பிரதி)

செய்முறை:-

சுத்தி செய்த அயப்பொடி ஒரு பங்கு, சுத்தி செய்த வீரம் கால் பங்கு, இவற்றைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சேர்த்தரைத்து எலுமிச்சம் பழச்சாறு அல்லது புளியாரைச் சாறு விட்டு இரண்டு நாள் நன்றாயரைத்து எரிப்புச் சட்டி ஒன்றில் அகலமான வில்லையாகத் தட்டி உலர்த்தி மேற்சட்டி மூடி ஏழு சீலை மண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்து மூன்று நாட்கள் காலை 8 மணி முதல் இரவு 8 வரைக்கும் எரித்து இரவில் எரிப்பதை நிறுத்தித் தணலின் மேல் இருக்கச் செய்யவும். முதல் நாள் தீபாக்கினி, கமலாக்கினியாகவும் மறு நாள் கமலாக்கினி காடாக்கினியாகவும். மூன்றாம் நாள் காடாக்கினியாகவும் எரியிடல் வேண்டும். அப்பால் ஆறிய பின் கவசம் பிரித்து அடிச்சட்டியிலுள்ள செந்தூரத்தையும் மேற்சட்டியிலுள்ள இரசபதங்கத்தையும் வழித்துச் சேர்த்துப் பொடித்து "திரிபலா" க் குடிநீர் விட்டு இரண்டு நாட்கள் அரைத்து வில்லைதட்டி அகலிலிட்டு மேல் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி முழுப்புடம் போட்டு ஆறி எடுக்க நயமான செந்தூரமாகும்.

அளவு:- அரிசி எடை, தேனில் 4 மணிக்கொரு தடவை விஷபேதிக்குக் கொடுக்கக் குணமாகும். அன்றியும், குன்மம், வாத நோய்களுக்கும் அரிசி எடை, காலை, மாலை தேன் அல்லது வேறு அனுபானங்களில் கொடுக்கக் குணமாகும்.

6. கஸ்தூரி மெழுகு:(Please refer to under Chapter 15)

7. I am also reproducing an article written on "oozhinoi and its treatment" for the journal of Indian medicine in October 1951 - just for the information of the readers. Much advance has been made after that on this subject:

ஊழிக்காற்று.

Aetiology, signs and symptoms, diagnosis and prognosis of cholera based on ancient Siddha literature as found in cudgeon leaves, together with my own experience of treatment.

1. கேளப்பா ஊழியுட காற்றைச் சொல்வேன்
   கெடியான சாமளா தேவியாம்
   காளப்பா மைப்போல கறுத்து நிற்குங்
   கண்ணுக்குத் தோற்றாது கடின வேகம்
   வாளப்பா காற்றினுட விவர மெல்லாம்
   மைந்தனே சொல்லுகிறேன் வகையாய்க் கேளு
   பாழப்பா பண்ணிவிடு முலகந் தன்னைப்
   பரிசுத்த மாயிருந்தால் பறக்கும் பாரே.

2. பறக்குமென்று சொல்வதுதா னாருக் கென்றால்
   பாராளு மன்னவர்க்குஞ் சிவயோ கிக்கும்
   இரக்கமொன்று மில்லையப்பா இதராள் பேரில்
   என்ன சொல்வேன் ஊழியுட வேகம்
   சிறக்குமென்று நினையாதே தேகந் தன்னை
   க்ஷணத்திலே ஒழித்துவிடுந் தெளிவாய் நீ
   உறக்கவிதி யுள்ளவர்க்குத் தேகம் போகும்
   உத்தமனே இதையறிந்து பாரு பாரே

3. பாரப்பா புலத்தியனே அய்யா கேளு
   பதிவாக வேயிருந்து இறங்குமப்பா
   ஊரிலே ஜனங்களுட சிரசில் பட்டால்
   உற்றதொரு ரத்தமெல்லா முறிந்து நீராம்
   காருநீ கக்கலுடன் பேதி காணும்
   கண்மூடி முழிக்குமுன்னே களைத்துப் போகும்
   யாருநீ யானாலுந் தேக மெல்லாம்
   அப்பனே வியர்வையது பிசின்போ லாமே

4. பிசின்போல வியர்வையது பெருகி நிற்கும்
   பேரான கண்டமது வறட்சி காணும்
   கசிந்துருகி தேகமெல்லாம் கடின வேதை
   கக்கல்கண்ட நாழிகைக்குக் கடுப்புக் காணும்

விசிதமாய் வயிற்றுவலி தானே காணும்
வெகுசுறுக்காய் சன்னியது பிரவே சிக்கும்
நிசிதமா யிருந்தாக்கால் தேகம் போகும்
நிமிஷத்தில் அவுழ்தமதை நினைவாய்ப் போடே.

Explanation:-

The above *Tamil verses* reproduced from ancient cudgeon leaves record represent that cholera is the result of a peculiar wind known as "*oozhi kattru*" and is named as "Shamaladevi" The wind is said to be black like black ink, very strong and powerful and is invisible to our eyes. It is very rapid in velocity and is said to be capable of destroying the world in no time, but not the people who are *pure* and absolutely clean. It is also said definitely that this oozhikattru docs not affect those absolutely clean people such as the "Kings" and "Siva yogis" and that it has no sympathy for the rest of the people (i.e. who are dirty and unclean). The attack is momentary and kills individuals in no time. so you are warned that you should be cautious and vigilant not only to treat cases but also to prevent its attack what is prevention here as far as we could know?

Avoid dirt. Lead a pure, simple and clean life as far as possible for us or to the required extent, if not like kings and yogis.

It is also mentioned that this oozhi kattru will not be there always in a place but it would descend from some higher plane. When this particular wind strikes against anyone's head it is said that it would cause the blood of that affected individual thorougly changed into watery condition losing all its potential energies. Immediately vomiting and diarrhoea ensue leading to exhaustion very quickly. Perspiration of a sticky nature and in abundance is also produced (i.e. profuse cold, clammy sweat). Dryness of the throat (including mouth) pain all over the body with muscular cramps and stomach ache of a severe, nature also follow and finally leads to delirium. If you are careless, death is sure to occur and hence you are advised to administer suitable specifics at the very onset cautiously and promptly.

Treatment - My Experience:-

1.At the initial stage. you try "Thalisathi vadagam 2" well powdered and mixed with honey every 4 hours for one or 2 days to control motions. Jathi

jambcera kuzhambu about a kundri size or two to be licked up every 2 hours, if there is vomiting

II. If however motion becomes excessive and patient getting exhausted with cold clammy sweat, muscular cramps and pulse sinking, etc., you administer **"Kadikkara chenduram"** reprepared as follows about 2 to 4 grains well mixed with honey or liquid glucose. You will certainly find wonderful and favourable result out of this administration.

III. "ஊழியின் பேதிக் குண்மிளகாய் கருக்கிநீர்
நாழிவிட் டெட்டொன்றாய் நாட்டு"

This is also very useful in cholera and may be administered from the very onset every 3 to 4 hours.

Milakai vatral about one palam. To be fried well until it becomes utterly dark coloured. Add one measure of water to it to be reduced to ½ decoction. Decant and give about 2 ounces with little jaggery added to it. This decoction alone cures cholera, found by experience in many cases.

IV. My prescription of a decoction to prevent vomiting, thirst, hiccup and exhaustion is as follows:-

R/ மணல் (Sand near tank water)	
Nerpori (நெற்பொரி) handful	
Myl eragu (மயிலிறகுத் தட்டை)	½ tola.
Poonagam (Earthworm) about	10 tolas.
அரசங்கொழுந்து	1 tola
ஆலங்கொழுந்து	1 tola.
இத்திக்கொழுந்து	1 tola.

All these are to be fried well in a mud chatty one by one in the above order until each of them becomes charred or utterly blackened and then one measure of water is to be added. Next add to it.

Athimathuram, Jathi Koshtam, Akkarakaram of each a small piece broken in bits. Then boil it to be reduced to ¼ th part Decant. administer about 2

to 3 ounces with a little jaggery to this decoction every 2 to 3 hours according to the severity of the case.

N.B. During all the time from the beginning to the end you go on giving plenty of water to drink in small quantities at shorter intervals preferably rice conjee water.

அரிசியை உடைத்துக் காய்ச்சி கரையவிட்டு, அதிலுள்ள தெளிவு தண்ணீர் கொடுத்து வரவும். புளிப்பு இல்லாத பசுவின் மோர் சிறிது கஞ்சித் தண்ணீருடன் கலந்து கொள்ளவும்.

Just enough to flavour the rice conjee water, cows butter-milk may be added of course very little without its being of sour taste.

"KADIKARA CHENDURAM" NO. 1 used by me in cholera cases:

R/ Velli kadikkaram	1 part
Purified Rasa chenduram	4 parts.
Jathilingam	8 parts.

Rubbed well in a kalvam adding breast milk for a day and allowed to dry with the kalvam in the shade. It is prohibited from exposure to the Sun. To be then powdered and bottled up. The colour is bright red or thicked.

N.B. You may also double the weight of velli kadikkaram alone i.e 2 parts while the other two drugs are of the same weight and made into chenduram as above. This is also very effective and you have only to reduce the dose of the chenduram while administering. The nature and the dose of the chenduram should be judged on the severity of the case and on the tolerance of the patient. Once you handle this chenduram in either of the above methods you will then feel convinced.

"Kasthuri Mezhugu"

Please refer to Page 107, Visha Vaidya Chinthamani. This is excellent specific which every physician should be in possession of, to treat cases of serious nature in general practice.

1. Thaivelai thuthuvalai ennai for external Application only (Special) (S.R. Pharma)

1. Thaivelaiverpattai ½ viss
2. Vellaipoondu ¼ viss (Kernel alone)
3. Vembu ennai -lbs 6
4. Omam 3 teaspoonful

Boiled into thailapakam, filtered and bottled up.

Uses:- When applied all over the body in cases for high fever with body pain and jannipatham much relief is ensured. Further this oil may be applied all over the body in the cold stage of cholera to ensure heat of body.

2. KADIKARA CHENDURAM NO. II (Special) (S.R. Pharma)

1. Velli kadikaram -1 part or 1 dram
2. Jathilinga kattu chenduram -8 parts or 8 drams.
3. Rasa chenduram
   No. 1 (or Rasa ghendi Thalaka chenduram)- 16 parts.

These three ingredients are rubbed together in a kalvam for one day and bottled up.

Dose: - 1 to 2 grains may be given with Thirikaduchurnam and honey or inji juice or thulasi juice and honey or other suitable anupanams.

Uses: - Janni, Vathanoi, Hemiplegia, Facial Paralysis, Cerebral thrombosis, Chorea and cholera, etc, are cured. For cholera this is very effective during cold stage. Warmth is ensured, cramps are relieved. motions, vanthi and thirst are controlled.

3. KADIKARA CHENDURAM NO.III (Special) (S.R. Pharma)

1. Velli kadikaram - Of each equal parts or

2. Jathilinga kattu chenduram about 2 drams each.

3. Rasa chenduram No. 1
(or Rasa ghendi Thalaka chenduram)

These 3 ingredients are rubbed together in a kalvam for one day and bottled up.

Dose: Anupanam and uses are the same as that of No.1 Kadikara chenduram. This is a bit stronger than No.1 Kadikara chenduram. This is very useful in cholera, paralysis, Hemiplegia, Cerebral Haemorrhage and thrombosis, etc.

31. எருவாய் முளை நோய் (மூலநோய்)

பரிகாரம்

இந்நோயில், கீழ்வாய்க் கனல் (மூலச்சூடு) தன்னளவில் மிகுந்து வளிக்குற்றத்தைத் தூண்டி அதன் காரணமாகக் கீழ் நோக்குகாலைக் கேடடையச் செய்யும். இவ்விரண்டின் காரணமாக அழல் குற்றம் தூண்டப்படும். கீழ்வாய்க்கனல் மிகுந்தெழுதலால் அக்கனல் எருவினைத் தீயவைத்து, வறண்டு உருண்டு, கெட்டியாகக் கட்டுப்பட்டு, அங்ஙனே வளர்ந்து எளிதில் வெளியாக்காது முளை நோய் உற்பத்திக்குக் காரணமாகும். இதனால் பசித்தீ கெடும். உடல்மெலியும், இரசம், இரத்தம் இரண்டும் தத்தம் வன்மை இழக்கும், மனநிலை குன்றும். இதனால் மருத்துவன் கவனிக்க வேண்டியது யாதெனில், தன்னளவில் மிகுந்த மூலக் கனலால் எழுந்த வளிக் குற்றத்தைத் தன்னிலைப்படுத்த சாந்தமான கழிச்சல் மருந்துகளைச் கொடுத்தல் வேண்டும். பிறகு மேற்படி கனலைக் குறைப்பதற்கான துணை மருந்துகளோடு குளிர்ச்சியான (காரசாரமற்ற) உணவாதிகளையும் கொடுத்து வர வேண்டும்.

அன்றியும், கீழ்கனலாலுண்டாகும் வலி, எரிச்சல், கடுப்பு இவற்றைப் போக்குவதற்கு ஒற்றடம், புகை, பூச்சு, பற்று முதலிய புற மருத்துவங்களையும் செய்தல் வேண்டும் எனக் கூறப்படுகிறது.

சித்த மருத்துவத்தில் இந்நோய்க்குக்கூறியிருக்கும் பரிகாரங்களாவன:-

குடிநீர்

1. தோன்றி வேர் (காந்தட்கிழங்கு), பெருங்காயம், சுக்கு இவை வகைக்கு 3/8 பலம் வீதம் சட்டியிலிட்டு மூன்று ஆழாக்கு நீர் விட்டு நான்கிலொன்றாய் வற்றக் காய்ச்சி வடிகட்டி காலை, மாலை கொடுத்து வர சகல மூல நோயும் போம்.

2. காறாக்கருணையிலை, கண்டு பாரங்கி, உப்பு இவைகளைச் சட்டியிலிட்டு எரித்து சாம்பலான பின் மோரின் தெளிவுகூட்டி அடுப்பேற்றிக் காய்ச்சி இளஞ்சூட்டில் வெண்ணெயும் கற்கண்டும் கூட்டி உண்ணப் பலவகைப்பட்ட மூலநோய்களும் நீங்கும்.

3. காறுகின்ற கருணைக்கிழங்கும், கறுப்புக் கற்றாழைச் சோறும், கறியுப்பும், சுக்குப் பொடியும் கூட்டிப் பிசைந்து வைக்கில் நீறிப் போம். இந்நீரில் சிறிது நெய் கூட்டிக் கொள்ளின் முளையின் வேர் அற்றுப்போம் எனக் கூறப்பட்டுள்ளது.

4. சூரத்துக்கடுக்காய் பலம் ஒன்று, சித்திரமூல வேர்ப்பட்டை பலம் ½ சிவதை வேர், கடுகுரோகணி இவை வகைக்குப் பலம் ¼, தயிர்த் தெளிவு படி ½ கூட்டிக் காய்ச்சி எட்டொன்றாய் வற்ற வைத்து வடிகட்டி ஒரு எலுமிச்சங்காயளவு வெண்ணெய் கூட்டிப் பருகக் கழிச்சலுண்டாகும். எருவாய் எரிச்சல், நமைச்சல் இவை தீரும்.

5. விளாம்பழச் சதை, வில்வப் பழச் சதை இவை வகைக்கு ஒரு எலுமிச்சங்காயளவும், கடுக்காய், நெல்லி, தான்றி, சுக்கு, வாய்விடங்கம், காட்டாத்திப்பூ, கள்ளி வேர்ப்பட்டை, கொட்டைக் கரந்தை இவை வகைக்குப் பலம் ¼ கூட்டியதில் நீர் படி ஒன்று விட்டுக் காய்ச்சி எட்டொன்றாய் வடித்து பனை வெல்லம் கூட்டிக் கொடுக்க கழியச் செய்யும் குருதியுமடங்கும்.

6. காட்டுச்சீரகம், யானைத் திப்பிலி, கொத்துமல்லி, சுக்கு, வால் மிளகு, மாசிக்காய், சாதிக்காய், ஆயில்பட்டை, ஊழலாத்திப்பட்டை இவை வகைக்குப் பலம் ½ இவைகளை ஒன்றிரண்டாக இடித்து புளிப்பு மாதுளைச் சாற்றில் 12 மணி நேரம் ஊறவைத்து அதனைக் காலையில் வடித்துக் கொடுக்கக் கழியச் செய்யும். குருதிப் போக்கை நிறுத்தும்.

பொடி வகை.

1. தூதுவளை வேர், மருட்கிழங்கு, கருணைக்கிழங்கு, பிரண்டை வேர், ஆரை வேர், காட்டுக் கருணை, மிளகரணை வேர், அறுகன் வேர், நீர்முள்ளி வேர் இவைகளை உலர்த்தி ஓரிடையாய்க் கூட்டிப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து மூவிரல் அளவு காலை, மாலை சாப்பிட நோய் போம்.

2. உருட்டுப் பிரண்டை, வெண்சாரணை வேர், கௌதும்பை வேர் இவை வகைக்குப் பலம் 6 கல்லுப்பு பலம் 20, கடுக்காய் எண் 20 (இதன் தோல்) இவற்றைப் பொடித்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கடுக்காய்த்தோல், சத்திச்சாரணை வேர், சிலாசத்து பற்பம், அதிமதுரம், ரோகணி, யானைத் திப்பிலி, சீரகம், மரமஞ்சள், சதகுப்பை, ஓமம், திப்பிலி மூலம், கோட்டம், மூங்கிலுப்பு, கடுகு, நிலாவாரை நெல்லி, தான்றி, அரத்தை, மிளகுக் கொடி, கொடிவேலி வேர்ப்பட்டை, கடுக்காய்ப்பூ, சிவதைவேர், கருஞ்சீரகம், கரிசாலை, சிறுலவங்கப்பட்டை இவை வகைக்கு 6 வராகனெடை சூரணமாக எடுத்து எல்லாவற்றையும் கலந்து வைத்துக்கொண்டு வேளைக்கு ¼ முதல் ஒரு வராகனெடை வீதம் சூரணம், இஞ்சிச் சாறு அல்லது சுக்குக் குடிநீர், சர்க்கரை, வெல்லம், சிற்றாமணக் கெண்ணெய், வெந்நீர் இவைகளில் ஏதேனுமொன்றில் அனுபானித்துக் கொடுக்க நோய் போம். மூலம், ஆசனச் சுருக்கு, தடிப்பு, தினவு, இரணம் யாவும் தீரும்.

3. கருணைக்கிழங்கை நன்றாயுலர்த்திப் புளித்த காடியில் வேகவைத்து மேல் தோல் நீக்கி, அரிந்து, நிழலுலர்த்திப் பின் ரவியில் உலர்த்திப் பொடித்து 8 பலம் பொடியை எடுத்து அத்துடன் கொடிவேலி வேர்ப்பட்டை, கடுக்காய், சுக்கு, மிளகு, இவை வகைக்கு ஒரு பலம் வீதம் பொடித்துக் கூட்டி வைத்துக் கொண்டு வேளைக்கு மூவிரல் கொண்ட அளவு எடுத்து எண்ணெய் கூட்டிக் குழைத்து காலை, மாலை கொடுக்க நோய் போம்.

4. நாயுருவி அரிசியைக் குற்றி உமி, தவிடு நீக்கியது படி இரண்டு எடுத்து நெய் விட்டு வறுத்துப் பொடியாக்கி அதில், பெருங்காயம், சீரகம், வெள்ளுள்ளி , கடுக்காய், நெல்லி, தான்றி, சுக்கு, மிளகு, திப்பிலி, எருக்கன்வேர், கொம்புக்கள்ளிப் பழுப்பு ஆகிய இவைகளை உலர்த்திப் பொடித்து வகைக்கு ஒரு பலம் கூட்டி அதில் துளசி, பிரண்டை, புளியாரை, கற்றாழை இவை வகைக்குச் சாறு படி ஒன்று கூட்டி வெயிலில் வைத்து உலர்த்தியபின் பொடித்து வேளைக்கு 1 முதல் 2 வராகனெடையளவு நெய் அல்லது வெண்ணெயில், காலை, மாலை கொடுத்துவர எல்லா வகை முளை நோய்கள் நீங்கும்.

5. பருத்ததோர் காராக்கருணைக்கிழங்கினைத் தோல் சீவிப் பொடியாகத் தறித்து உலர்த்திப் பொடியாக்கி அதனைப் பிட்டவியல் செய்து எடுத்ததில் வேண்டிய அளவு கொண்டு, நெய்யும் சர்க்கரையும் கூட்டிக் கற்பமாக விடாமல் சாப்பிட்டு வர மூல நோய் எல்லாம் நீங்கும்.

நெய்வகை

1.கொப்பரைத் தேங்காயைத் திருகிக் கசக்கிப் பிழிந்த பாலில் சிறிது கற்கண்டுப் பொடியும், நெய்யில் வறுத்துப் பொடி செய்த பெருங்காயம் சிறிது கூட்டியுண்ண எருவாய் வலியும், எரிச்சலும் நீங்கும்.

2. கொப்பரைத் தேங்காய்ப் பாலுடன் வெள்ளறுகு, கொட்டிக் கிழங்கு கூட்டி நாலுபங்கு நீர்கூட்டிக் காய்ச்சி வடித்து சிறிது நெய்கூட்டிக் கொடுக்க எருவாய் முளைநோய் போம்.

3. செந்நாயுருவிவேர் ஒரு வீசையைப்பொடியாகத் தரித்து 16 படி நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடிகட்டியதில் அதிமதுரம், கடுகு ரோகணி, செங்கழுநீர்க் கிழங்கு, இலுப்பைப்பூ, கோட்டம், சதகுப்பை, பச்சிலை, சிறுதேக்கு, வாய்விடங்கம், சுக்கு, திப்பிலி ஆகிய இவை வகைக்கு ஒரு பலம், பொடித்து சிறிது பால் விட்டரைத்துக் கலக்கி பசு நெய் ஒரு படி கூட்டிக் காய்ச்சிக் கடுகுத்திரள் பதத்தில் வடிக்கவும். இதனை உச்சிக்கரண்டி வீதம் காலையில் மட்டும் கொடுத்து இளவெந்நீர் உட்கொள்ள முளை நோய்போம். மலம் விடாத மூல மலம் விடும்.

4. வல்லாரைக் கீரையின்சாறு, காராக்கருணை தண்டின் சாறு, புளியாரை, புளிச்சக்கீரை, நெல்லிச்சாறு. இவை வகைக்குச் சாறு ஒரு படி, பசுநெய் ½ படி, பன்றி நெய் (கொழுப்பு) ½ படி, கூட்டியதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், சிறு நாகப்பூ, கோரைக்கிழங்கு, சீந்தில்தண்டு, சந்தனம், அதிமதுரம் இவை வகைக்கு ஒரு பலம் இடித்துப் பால் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து வேளைக்கு ஒரு உச்சிக் கரண்டியளவு காலை, மாலை கொடுக்க எருவாய் முளைநோயில் காணும் எரிச்சல், குருதிக் கழிச்சல் முதலியன நீங்கும்.

5. புளிவஞ்சிச் சாறு, சிறுகளாப்பழத்தின் சாறு, அருநெல்லிப் பழத்தின் சாறு இவை வகைக்கு ஒரு படி. கொடிவேலி வேர்ப்பட்டை, கடுக்காய், நெல்லி, தான்றி, இலவங்கப்பட்டை சிறு நாகப்பூ, பேரீச்சங்காய், கொட்டை முந்திரிப்பழம், ஏலம், எருக்கன்வேர்ப்பட்டை, கள்ளிவேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு இவை வகைக்கு ஒரு பலம் சூரணம், பனங்கற்கண்டு ஒரு வீசை, பசு நெய் பலம் 20 இவைகளைக் கொண்டு சாறு வகைகளில் கற்கண்டு கூட்டிப் பாகு செய்வதில் பொடிகளைத் தூவிக்கிளறி நெய் சேர்த்து

லேகியம் போல் கிண்டி இறக்கவும். இதனைப் புன்னைக்காயளவு காலை, மாலை கொள்ளவும்.

இலேகிய வகை

1.நத்தை இலேகியம்:-

நன்றாய்க் கொழுத்த நத்தைகளைக் கழுவி சிறிது உப்பு கூட்டி வேக வைத்து ஓடு நீக்கி எடுத்த சதையை அம்மியிலிட்டுப் பால் விட்டரைத்தெடுத்த மொத்தை ஒரு வீசைக்குப் பசும்பால் ஒரு படியும், பனங்கற்கண்டு ½ வீசையும் கூட்டி அடுப்பேற்றி சிறு தீயாக எரித்துப் பக்குவமாக வரும்போது அதில் கோரைக்கிழங்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சிறு தேக்கு, மாசிக்காய் இவை வகைக்கு ஒரு பலம் சூரணம் கூட்டிக்கிண்டி, பசுநெய் படி ¼ விட்டுக் கிண்டி எடுத்துக் கொள்ளலாம். இதில் புன்னைக்காயளவு காலை, மாலை சாப்பிட்டு வர முளைகள் அழிவதன்றிக் குருதிப் போக்கும் நீங்கும். இதில் குங்குமப்பூ 2 வராகனெடை சேர்ப்பது மிகவும் நல்லது.

2. கருணை இலேகியம்:-

பால் ஒரு பங்கும், கருணைச்சாறு ½ பங்கும் கூட்டிக்காய்ச்சிச் சுண்டி வருகையில் இறக்கி வைத்து நான்கு நாழிகை வரை ஆறிய பின் ஆறிலொரு பங்கு வெல்லம் கூட்டி எடுத்த இலேகியத்தை காசெடை காலை, மாலை கொள்ள முளைநோய் போம்.

சுண்டைக்காயளவு கொள்ளவும்.

3. ஆமை இலேகியம்:-

கிணற்று ஆமையைக் கொண்டுவந்து அவித்துத் தோல், குடல் முதலியவற்றை நீக்கி சதையை மட்டும் எடுத்துப் பதினைந்து பலம் கொண்டு பால் விட்டு அம்மியிலரைத்து வழித்து ஒரு படி பசும்பாலில் கலக்கியதில் வெள்ளை வெங்காயம், வெள்ளைப்பூண்டு வகைக்கு இரண்டு பலம் எடுத்து பாலில் அவித்து அம்மியிலரைத்து வழித்தெடுத்து, இலவங்கப்பட்டை,

சோம்பு, கொத்துமல்லி, மஞ்சள், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு ஒரு பலம், பொடித்து அம்மியிலிட்டுப் பால் விட்டரைத்துக் கலக்கிப் பனங்கற்கண்டு பலம் பத்து கூட்டி இலேகியமாகக் கிண்டி எடுத்து வேளைக்கு ஒரு புன்னைக் காயளவு காலை, மாலை கொள்ள எருவாய் முளை நோய் நீங்கும். இதில் சிறிது நெய் சேர்த்தல் நல்லது. இதில் குங்குமப்பூ வராகனெடை 2 சேர்ப்பது மிகவும் நல்லது.

மாத்திரை வகை

1. கோரைக்கிழங்கு, கடுக்காய், ஓமம், வால்மிளகு, சுக்கு, திப்பிலி இவற்றின் சூரணம் வகைக்கு ¼ பலம் எடுத்து இவைகள் சேர்ந்த எடை சர்க்கரையும் நெய்யும் கூட்டிக் கலந்து இரண்டு நாட்கள் அரைத்துப் பயறளவு மாத்திரையாக்கி நிழலிலுலர்த்தி காலை, மாலை கொள்ள பத்து வகை முளை நோய்களும் போம்.

பற்பச் செந்தூரங்கள்

1.துத்தநாகபற்பம், 2. வெள்ளீய பற்பம் 3. காரீயபற்பம் அல்லது இவற்றின் செந்தூரம் இம்மூன்றும் இந்நோய்க்கான மருந்துகளாம். இவை ஒவ்வொன்றும் தக்கஅளவில் தக்க அனுபானத்தில் காலை, மாலை கொடுத்து வர முளைநோய் நீங்கும்.

வெளி மருந்துகள்

1. கழுவுநீர்

ஆல், அரசு, அத்தி, இத்தி இவைகளின் பட்டை வகைக்குப் பலம் பத்து எடுத்து இடித்து ஆறு படி நீர்விட்டு ஒரு படியாகக் காய்ச்சி வடித்து அந்நீரைக் கொண்டு முளையைக் கழுவிவரின் முளை வீழும்.

உள் மருந்து: இதனோடே விட்டுணுகரந்தை, சிவகரந்தை வகைக்குச் சமஎடை எடுத்தரைத்துச் சுண்டைக்காயளவு காலை, மாலை கொள்ளக் குணமாகும்.

பற்று

கம்பு அரிசியைக் கோவைச் சாறு விட்டுப் பொங்கி சோறாக்கி அதை உருட்டி மண்பாண்டத்திலிட்டு நீரிட்டு வைக்கவும். மறு நாள் மேற்படி நீரை நீக்கிப் புதிதாக நீர் விட்டுக் கொண்டே வந்து, எட்டாம் நாளில் உருண்டையை எடுத்து அதனெடைக்கு கோவையிலை கூட்டியரைத்து அடை போல் செய்து முளையின் மேல் வைத்துக் கட்டி வர முளை அழுகி இற்று விடும், (புலிப்பாணி, 500)

2. காட்டாமணக்கு இலையை விளக்கெண்ணெய் விட்டு வதக்கியாகிலும், காடி நீர்விட்டு அவித்தாகிலும் முளை மீது வைத்துக் கட்ட முளை பெயர்ந்து விழும்.

புகை

1. குடசப்பாலை விதையைப் பொடித்து வருடையாட்டின் குருதியை விட்டு உலர்த்தி தாளியில் ஆட்டின் புழுக்கையை இட்டுத் தணலாக்கி மேற்படி பொடியைத் தூவி எழும் புகையை எருவாயிற்படும்படி காட்ட நோய் போம்.

வியர்வை

